THE LAW OFFICE OF
GaryAnandasangaree
PROFESSIONAL CORPORATION
• Real Estate (Buying, Selling & Re-Financing)
• Corporate • Commercial
• Wills & Estates • Immigration
416 321 1100
gary@galaw.ca

தாய் வீடு
THAIVEEDU AUGUST 2011 ஓகஸ்ட் HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன்
சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®



பேராசான் சிறப்பிதழ்

# பேராசிரியர் கா. சிவத்தம்பி:

# முடிவற்ற ஆய்வுத் தேடல்

## தமிழ்த் திறனாய்வியல் வரலாற்றில் பேராசிரியர்

படம் : டிராட்ஸ்கி மருது

RAMAN APPLIANCES
Quality Products, Certified Technicians Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஜப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum • Air Cleaners
• Gas Fireplaces • Garage Door Openers• Security Alarm
Tel: 905-459-0902
Fax: 905-459-7352
Raman Chelliah
President
647-893-4414
158 Kennedy Rd. S., Unit # 11,
Brampton, Ontario L6W 3G7

உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
FORMULA HONDA
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL: 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH,
ONTARIO M1B 2W4.
TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI MORTGAGE CANADA

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440, E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

PMCI PROPERTY MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of
Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

Ahilan
Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

• வீடு • வாழ்வியல் • சமூகம் • இலக்கியம்

# The shortest distance between paradise and the place you call home




## 24/7 Realtors






**Raj Ariyanayagam**
Broker
**Cell:416-930-4663**
**Buss:416-298-3200**
**Fax:416-298-3440**
**rajhomes@hotmail.com**
**pariyanayagam@trebnet.com**

**Vasanthy Niranjan**
Broker
**Cell:416-845-8272**
**Buss:416-298-3200**
**Fax:416-298-3440**
**vasanthyne@gmail.com**
**vniranjan@trebnet.com**




**$28 Sq Ft Net**
Excellent Opportunity To Start Your Own Business Or Office. Nice Layout, Lots Of Parking In Front Of The Unit, Any Commercial Activity Except Restaurant Is Permitted, Lots Of Potential, Approximate Area 600 Sq




**$479,000**
Rooms-7 Bedrooms-3 Washrooms-3 A1 Stunning Home 1700 Sq Ft, Original Owner Some Newer Windows, Newer Roof, Newer Kit Sink & Faucet Walk To Park, Schools, Transit & More




**$359,900**
Rooms-6+4 Bedrooms-3+1 Washrooms-2 A1 Kitchen W/Hrdwd Suite With Eat-In Kit+Large Living Rm,Fantastic Finished Den With Stone Wall,Frplce+Wet Bar!Great Locale Steps To Transit, Schools,Shopping+More!! From The Oversized Hall Closet.




**$374,900**
Rooms-6+1 Bedrooms-3 Washrooms-3 Close To School, Shopping, Steps To Ttc, Featuring Double Door Entry, New Hardwood Floor In Living Room, Newly Painted, New Finished Basement.





**$389,900**
Rooms-11+2 Bedrooms-3 Washrooms-4 Very Impressive Family Home Backs Onto Forest/Ravine/Pond. Lots Of Privacy, Serenity And Enjoyment Associated With It. Well Ventilated, Very Bright, Excellent Lay-Out, Top Notch Condition, Well Maintained , Steps To T.T.C., (One Fare), Schools, Shopping Next To No Frills, Rec And Other Facilities.




**$394,900**
Rooms-5+3 Bedrooms-3 Washrooms-3 he Mayfair 1633 Sq Feet, Hardwood And Ceramics On The Main Floor Neutral Broadloom On Upper Floor.Fully Fenced Yard Close To All Amenities. Computer Nook On 2nd Floor.



**$399,000**
Rooms-9 Bedrooms-3 Washrooms-3 3 Storey Home On Quiet Court' 'Beautiful Landscaping 'Shopping Mall, Community Centre, Schools, Bus Stop' 'No Houses Behind - Quiet Cul-De-Sa 'Room Can Be Converted To One Bedroom Apt' 'Entrance To Garage' 'Walk-Out To Deck'



**$399,000**
Rooms-5 Bedrooms-2+1 Washrooms-2 Beautiful Freehold Townhouse In Desirable South Unionville. Easy Access To 407, Walking Distance To Future South Unionville Square, T & T Supermarket.




**$399,000**
Rooms-7 Bedrooms-3 Washrooms-2 Clean Spotless Home Nice And Eat In Kitchen,




**$399,880**
Rooms-7 Bedrooms-3 Washrooms-3 Meticulously Kept Upper Cornell Beauty W/ 9 Ft Ceilings, Inviting And Functional L ayout With Entertainer's Delight Open Concept Kitchen Over looking Spacious Family Room. Formal Dining Room W/Pass Through To Kitchen From Butler's




**$413,900**
Rooms-6 Bedrooms-3 Washrooms-3 This 3 Bedroom Semi Has Upgraded Laminate On The Main Floor As Well As An Ensuite In The Masterbedroom. A Double Car Garage Allows Lots Of Room For Extra Storage. Situated Across From The Park. This Home Has It All For Your Family.




**$418,000**
Rooms-7+1 Bedrooms-3+1 Washrooms-4rdwood Floor On Main Floor And In 2nd Br.Prof.Finished Basement With 4Pc.Ensuite Bedroom ,Rec Room And 12 Pot Lights.




**$419,900**
Rooms-6 Bedrooms-3 Washrooms-3 Year New Mattamy Built Semi! Lovingly Taken Care Of Home! Features Hardwood Floors, Breakfast Bar, Mosaic Backsplash, Sakura Kitchen Hood, Deep Soaker Tub In Master's Bedroom, California Shutters In Great Room And Kitchen, No Sidewalk Etc.




**$419,900**
Rooms-6+1Bedrooms-3 Washrooms-3 Room/Workshop* Long Driveway No Sidewalk Park 4 Cars*Steps To Park /Yrt*Walk To Top Ranking Pierre Elliott Trudeau H .S/Castlemore P.S/All Saints Ces*Must See!




**$459,000**
Rooms-76Bedrooms-3 Washrooms-3 Detached Home With 3 Bedrooms, Close To All Amenities, Recently Renovated, Ready To Move In. Just Under 2000 Sq. Ft, Hardwood Floor In The Main Flr




**$469,000**
Rooms- 6+1 Bedrooms-3 Washrooms-2 Close To Park, School, Mall.New Kitchen Cabinet, New Laminate In All Bedrooms And Rec Room, New Hardwood Staircases, New Bathroom, New Garage Opener,Newer Driveway, Newer Furnace Newer Roof(06),Newer Large Deck, Move In Condition!

## எதிர்காலச் சந்ததிக்கான உலகு: நாம் என்ன செய்யப்போகிறோம்?

சுற்றுச்சூழல் மாசு அதிகரிப்பு, தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களால் வெளியேற்றப்படும் ஏராளமான வெப்ப வாயுக்கள், காடுகள் அழித்தல், விளை நிலங்கள் குடியேற்றப் பகுதிகளாக மாற்றப்படுகின்றமை, இயற்கைக் காடுகளை அழித்து கட்டடக் காடுகளை உருவாக்குதல் போன்றவற்றால் பூமி வெப்பமடைதல் அதிகரித்து வருகிறது.

துருவப்பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகுவது அதிகரித்து இருப்பதால், பல நாடுகளின் கடலோரப் பகுதிகள் எதிர்காலத்தில் மூழ்கும் ஆபத்து இருப்பதாக அஞ்சப்படுகிறது. பருவம் தவறிய மழைப் பொழிவும் கடும் வறட்சியும் பூமி வெப்பமாதலின் விளைவுகளே.

இந்நிலையில் தட்ப வெட்பச் சீர்குலைவைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியம், பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதனாலும் உணரப்படவேண்டும்.

முதலில், பூமி எதிர்நோக்கும் அழிவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.

மரங்கள், இயற்கையின் சமநிலையை பேணுவதிலும் பூமி வெப்பமாவதைத் தடுப்பதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. நமது பூமிக்கு இன்று பல நூறு கோடிக்கணக்கான மரங்கள் தேவை. அதில் ஒரு நூறு மரத்தையாவது நமது வாழ்க்கைக் காலத்தில் நாம் நட்டு பராமரித்து வளர்த்து விடுவோம்.

புலம்பெயர் தேசத்தில் ஒவ்வோர் ஊருக்கும் ஒன்றிரண்டு சங்கங்கள் என்று இருக்கின்றன. ஒவ்வொரு கோடைக்கும் கூடிக் கூழ் குடித்துக் கொண்டாடி மகிழ்கின்றோம். அந்தப் பொழுதுகளில் ஆகக் குறைந்தது ஆளுக்கு ஒரு மரமேனும் நடுவோமேயானால் பெருந்தொகையான மரங்களைப் புலம்பெயர்வாழ் தேசங்களில் தமிழர்களால் நட முடியும்.

பல்வேறு கலாச்சாரங்களிலும் நீத்தோர் நினைவாக மரங்களை நாட்டிப் பராமரிக்கும் மரபுளது. புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழரும், தாயகத்தில் நீத்தோர் நினைவாக இங்கு மரங்களை நடமுடியும். உள்ளூராட்சி மன்றங்கள் இத்தகைய மரம் நாட்டலை ஊக்கப்படுத்துகின்றன.

எங்களுடைய காலத்தில், நாம் நமது எதிர்கால சந்ததியினருக்காகச் செய்ய வேண்டிய கடமையை இப்போதே செய்தேயாகவேண்டும்.

'''

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரி, பிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

முகப்பில்:
பேராசிரியர் கா. சிவத்தம்பி
படம்: ட்ராட்ஸ்கி மருது


| | | |
|---|---|---|
| **Publisher & Editor** | : | **P.J. Dilipkumar** |
| பதிப்பாளர், ஆசிரியர் | : | பி.ஜே. டிலிப்குமார் |
| ஆலோசகர் குழு | : | ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன். |
| ஓவியங்கள் | : | ரமணி (இலங்கை)<br>K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து)<br>ட்ராட்ஸ்கி மருது (இந்தியா)<br>கருணா (கனடா)<br>V. ஜீவா (இந்தியா)<br>சிவ. மாமுனி |
| புகைப்படங்கள் | : | ட்ராட்ஸ்கி மருது (இந்தியா), கணா ஆறுமுகம், கருணா, சாந்தன் (இங்கிலாந்து) |
| தட்டச்சு | : | கௌரி, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல். |
| ஒப்புநோக்கல் | : | கௌரி, மஞ்சுளா ராஜலிங்கம். |
| வரைகலை ஆலோசனை | : | கருணா (டிஜி வரைகலை அமையம்) |
| அஞ்சல் முகவரி | : | **Editor<br>P.O.Box #63581<br>Woodside Square<br>1571 Sandhurst Cir.<br>Toronto, ON. M1V 1V0** |
| றொறன்ரோ விநியோகம் | : | இராமநாதன் ரூபன் |
| மொன்றியால் தொடர்புகள் | : | சுகுமாரன் சின்னையா<br>**1-514-299-3186** |
| ஒட்டாவா தொடர்புகள் | : | அலெக்ஸ் சிவசம்பு<br>**1-613 -276-7253** |
| **Tel** | : | **416-646-3422, 416-857-6406** |
| **Fax** | : | **416-849-0594** |
| **Web** | : | **www.thaiveedu.com** |
| **E-mail** | : | **info@thaiveedu.com** |


# பேராசான் சிறப்பிதழ்

## 83 - 91




பேராசிரியர் கா. சிவத்தம்பி
(1932 - 2011)


83 பேராசிரியர் கா. சிவத்தம்பி: முடிவற்ற ஆய்வுத் தேடல் - சேரன்


85 பேராசிரியர் கா. சிவத்தம்பியின் அழகியல் நோக்கு - செல்வா கனகநாயகம்

86 நாடகர் - பேராசிரியர் கா. சிவத்தம்பி - ஞானம் லெம்பட்

87 தமிழ்த் திறனாய்வியல் வரலாற்றில் பேராசிரியர் கா. சிவத்தம்பி: - நா. சுப்ரமணியம்

89 பேராசிரியரின் நேர்காணலிலிருந்து - மூலம்: ஞானம் இதழ்

90 பேராசிரியர் கா. சிவத்தம்பி: அஞ்சலியாய் ஒரு நினைவுப் பகிர்வு - தேவகாந்தன்



அக்குபஞ்சர் வைத்தியமும் தொழிற்பாடும்
- கந்தையா செந்தில்நாதன்

நோய்க்குரிய சரியான புள்ளிகளைக் கண்டுபிடித்து அங்கே துளையிடுவதன் மூலம் நோய்களை இலகுவில் குணப்படுத்த முடியும். 09




நீரும் சுகாதாரமும்
- சிவாஜினி பாலராஜன்

தினமும் போதியளவு நீரினை நீங்கள் உட்கொள்ளாவிடின் உங்களுக்கு வயதாகும்போது சிறுநீரகத்தின் தொழிற்பாடு குறைந்து போகின்றது. 17



அட்லாண்டிஸ் விண்கலத்தின் இறுதிப் பயணம்
- குரு அரவிந்தன்

அட்லாண்டிஸ் விண்கலத்தின் கடைசிப் பயணத்தோடு அமெரிக்காவின் 30 வருட விண்வெளிப் இடைவேளை. 51



நீடிக்கப்பட்டுள்ள **Energy Audit**
- பிரபா சின்னா

கனடிய மத்திய அரசு ECO-Energy எனப்படும் வீடு திருத்தியமைக்கும் (சக்தி மீதப்படுத்தும்) நிகழ்ச்சித் திட்டத்துக்கான நிதியை ஒதுக்கீடு செய்து இத்திட்டத்தைத் தொடருவதற்கான உறுதியை செய்திருந்தது. 55

மூடப்பட்ட வன்னிப்பாதை
அ. கணபதிப்பிள்ளை 4

நாடுகடந்து துரத்தும் வழக்கு
கந்தசாமி கங்காதரன் 5

கணினி உலகப் புல்லுருவிகள்
ஜிப்றி உதுமாலெப்பை 7


மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

# மூடப்பட்ட வன்னிப்பாதை

- அ. கணபதிப்பிள்ளை -

ஆடிமாதம் 23ந்திகதி கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடந்துமுடிந்த உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்திருக்கும் வெற்றியானது உலகமே ஒருகணம் தமிழினத்தைத் திரும்பிப் பார்க்கும்படி செய்து விட்டது.

கடந்த மார்ச் மாதம் 17ந்திகதி மன்னார் வவுனியா முல்லைத்தீவு (மாந்தை) மாவட்டங்களில் நடந்து முடிந்த 10 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்குக் கிடைத்திருந்த தேர்தல் வெற்றி ஏற்படுத்தியிருந்த தாக்கம் ‘ஏசியா ரிபி யூன்’ இதழில் கே.ரி.இராசசிங்கம் மார்ச் 21ந்திகதி எழுதிய கட்டுரையில் வெளிக் கொணரப்பட்டிருந்தது.

இந்த வெற்றி மிகைப்படுத்தப்பட்டதாகக் காட்டப்பட்டிருந்தாலும் முசலி வவுனியா தெற்குப் பகுதிகளில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றிருந்த வெற்றியானது வன்னிக்குப் போடப்பட்ட சனநாயகப்பாதையாக எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. மரபுவழித் தாயக உணர்வை உடைத்தெறிந்த மாற்றமாகத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

தமிழர்களின் பாரம்பரிய வாழிடப் பகுதிகளுக்குள் ஆட்சியாளர்களின் அதிகாரமும் செல்வாக்கும் அதிகரித்துச் செல்வதும் ஒரு கட்சியினுள் ஒன்றுபடும் தமிழர்களும் சிங்களவர்களும் வடக்கு வசந்தத்தை நோக்கி நடைபோடுவதும் போன்றதொரு தோற்றத்தை ஏற்படுத்தியிருந்ததுமான அந்த வெற்றி அன்று பேசப்பட்டபொழுது உள்ளூராட்சிச் சபைகளினது தேர்தல் முக்கியத்துவம் எல்லாத் தமிழர்களையும் சென்றடைந்தது. இதுவே தமிழர் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்குப் பெரியதொரு உந்துதலாக அமைந்திருந்தது.

தமிழர்களில் ஒரு பிரிவினர் எவ்வாறாயினும் அரசின் பின்னால் ஒட்டிநின்று அதிகாரத்தைப் பெற்றுவிட முடியும் என்ற கொள்கையுடனிருந்தாலும் அது ஒரு சந்தர்ப்பவாத அரசியல் என்பதும் அது மாறுபடத்தக்கதும் என்பதனால் அவர்கள் பட்டுத்தான் தெளிவடைய வேண்டிய நிலைக்குத்தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

இன்று அரசுடன் இணைந்து செயற்படுகின்றவர்கள் சொல்லிவருகின்ற உரிமை பெறும் மாதிரிவடிவமானது இலங்கைக்குப் புதியதொன்றல்ல. தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், மலையகக் கட்சிகள் ஆகியன ஒட்டியுறவாடி ஒன்றுமேயில்லாது வெளிவந்ததாற் தோற்றுப்போன உத்திகள்தான்.

நடந்து முடிந்த தேர்தலில் வேலணையில் வைத்து இலங்கை அதிபர் இராஜபச்ச குறிப்பிடும் பொழுது சொன்னதையே செய்வேன் செய்வதையே சொல்வேன் என்ற தத்துவமானது மகிந்த சிந்தனையினை மறுபடியும் மக்களிடையே கொண்டு செல்லுவது போன்ற உணர்வைக் கொடுத்திருந்தது.

**“அவர்களைக் கொண்டே அவர்கள்**
**கண்களைக் குத்தவைக்கும் முயற்சியில்**
**மீண்டும் ஒரு தோல்விதான்**
**இந்த பிரதேச சபைகளின் தேர்தல்களில்**
**அரசுக்குக் கிடைத்த தோல்வி.”**

தமிழர் உரிமை பறிபோய் விட்டது என்று கூறுபவர்களுக்குப் பதிலளித்த ஜனாதிபதி உரிமைகள் உங்களுடனேயே இருக்கின்றன. அதனையாரும் பறித்துவிடமுடியாது எனக் குறிப்பிட்டிருந்தார். அந்தஉரிமை வாக்களிக்கும் உரிமை மாத்திரந்தான். கடந்த 63 வருடங்களாகச் சுதந்திர இலங்கையின் சுதந்திரப் பிரசைகள் காலத்துக்குக் காலம் அரசியல் வாதிகளின் அரவணைப்புக்குட்பட்டு வருகிறார்கள். வாழும் நாட்டிலே அரசியல் அகதிகளாக இருந்து வாக்களித்துக் கொண்டேயிருக்கும் ஒரே இனம் இலங்கைத் தமிழினம் என்ற பெருமை அந்த உரிமைக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழர்களுக்கு வாக்களிக்கும் தகுதி பற்றிப் பேசப்பட்டபொழுது கிளிநொச்சியில் 61,217 பேருக்கு மாத்திரம் தான் வாக்களிக்கும் தகுதியிருக்கு 60 சதவீதம் பேருக்கு அத்தகுதி இல்லை என்று யாழ்பாணத்தில் 2009ல் 816,005 பேருக்கிருந்த தகுதி இன்று 481,791 ஆகி 41சதவீதத்தினருக்கு அந்த உரிமை எங்கே என்று வினா எழுப்பப்பட்டிருந்தது. அதில் எப்படியோ 46 சதவீதத்தினர் யாழ்ப்பாணத்திலும் 65சதவீதத்தினர் கிளிநொச்சியிலும் வாக்களித்திருந்தனர்

இந்நிலைமைகளின் பின்னணியில் சுதந்திரமில்லாத தேர்தல், தீவுப்பகுதிகளில் கடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் அவதானித்திருந்தது போன்று தீவுப்பகுதிகளின் பலவிடங்களில் சுதந்திரத் தேர்தற்பிரசாரத்துக்குத் தடை, படையினரால் கூட்டங்கள் குழப்பப்பட்டமை, தேர்தற் பிரசாரத்தில் படையினரின் பங்கு, நெடுந்தீவுக்கு முன்னாள் கடற்படை அதிகாரியான கிழக்குமாகாண ஆளுனரின் நியமனம் போன்றன தமிழர் தேசியக் கூட்டமைப்பின் குற்றச்சாட்டுக்களாக இருந்தன.

தமிழ் மக்கள் தேசிய சுதந்திரத்தையும் சனநாயக சுதந்திரத்தையும் இழந்துள்ளனர் என்றும் அதிகாரப்பகிர்வுக்கு அரசாங்கம் தடையாக உள்ளது, வடபகுதியில் இராணுவ ஆட்சி நடை பெறுகிறது, வடபகுதி மக்கள் திறந்த வெளிச்சிறைச்சாலையில் வாழ்ந்து வருகின்றனர் என்று ஐக்கிய சோசலிசக் கட்சி சிறிதுங்க ஜயசூரிய குற்றஞ்சாட்டிருந்தார். வடக்கின் வன்முறைகளில் அரசாங்கத்தின் சார்புடையவர்கள் ஈடுபட்டிருந்தால் ஜேவிபி, ஐக்கிய தேசியக்கட்சி, தமிழர் தேசியக் கூட்டமைப்பினர்களும் தாக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக்கட்சியும் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுகளுக்குமத்தியில், விருப்புவாக்கு அடிப்படையிலான தேர்தல் முறையினால் கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் தாக்குதல்கள் இடம் பெறுவது சர்வசாதாரணம் என்று அரசதரப்பினரும் தங்களுக்குரிய நியாயத்தினை எடுத்துக் காட்டியிருந்தனர்.

பொதுவாகத் தமிழர் தரப்புக்களிலிருந்து வடக்குக்கிழக்கு பௌத்த சிங்கள மயமாக்கப்படுதல், படித்த தமிழ் இளைஞர்களுக்கு உயர்நிர்வாகத்தரத்திலான பதவிகள் மறுக்கப்படுதல், தமிழ்ப்பண்பாட்டை அவமதித்தல், சிங்கள மொழித்திணிப்பு, அடிப்படைமனிதத் தேவைகளான உணவு உடை உறையுள் போன்றனகூட தொடர்ந்து மறுக்கப்படுதல், பாதுகாப்பு வலயங்களும் காப்புக் கூடாரங்களும் அகற்றப்படாமை போன்ற குற்றங்கள் பலகாலமாக முன்வைக்கப்பட்டன போல் இம்முறையும் இடம் பெற்றிருந்தன.

சிறிலங்காவின் கொலைக்களம் தொடர்பான ஆவணப்படம் சனல் 4 மூலம் ஜனரஞ்சகப் படுத்தப் பட்டமையும், ஏப்பிரல் 2ன் பின்னர் அரசாங்கத்துக்கு எதிரான ஐ.நாவின் தருஷ்மன் குழுவின் போர்க்குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுக்களும், ஆல்போல் விழுதுவிட்டுத் தளைத்துவரும் தென்னிந்தியா கொடுக்கும் ‘ஈழத்தமிழர் ஆதரவும்’ வெற்றிலைச் சின்னப் போட்டியாளர்களின் பலத்த பிரச்சார நடவடிக்கைகளையும், இளைஞரைக் கட்டாயப் படுத்தல், இராணுவத்தினரை தேர்தற் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தியமை போன்ற சின்னத்தனமான ஜனநாயகத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளைத் தகர்த்துவிட்டன.

திரு. ரட்ணசிங்கம் குமரேஸ் குறிப்பிட்டிருந்தது போல் தமிழ்மக்களுக்கும் சிங்கள இனவாதிகளுக்கும் இடையிலான சனநாயகப் போர் நடந்திருந்தது. அதன் தளமாக இருந்த கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இரண்டு முழுத்தமிழ்ப்பகுதிகளும் ஜனநாயகத்தின் மீது தமிழர் கொண்டிருக்கும் நம்பிக்கையையும், ஒன்றுபட்டு வாழத் தமிழ்மக்கள் துடிக்கிறார்கள் என்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் சிங்கள மக்கள் கொடுத்திருந்த ஆதரவுபோல் தமிழர்களும் அங்கீகாரம் வழங்கினர் என்றும், தமிழர்கள் புலிகளையும் தமிழர் தேசியக் கூட்டமைப்பினரையும் புறக்கணித்துவிட்டார்கள் என்பதனையும், தமிழர் பிரச்சினையினைப் பேசித்தீர்க்க வெளியார் தேவையில்லை நாங்களே தீர்த்துக் கொள்ளுவோம் என்பதனையும் வெளியுலகுக்குத் காட்ட இலங்கை அரசாங்கம் என்னவிலை கொடுக்கவும் தயாராக இருந்ததுடன் இந்த வெற்றியின் முலம் அவற்றைச் சாதிக்கலாம் என்று அரசு நினைத்திருந்தது.

மேலும் நாட்டைக் கூறுபோடத் தமிழர்கள் ஒரு போதும் விரும்பியதில்லை எம்மிடையே எந்த வெளிச்சத்தியினையும் அனுமதிக்கமாட்டோம் இலங்கையில் போர்க்குற்றங்கள் என்ற சொல்லுக்கு இடமேயில்லை என்பவற்றைத் தமிழர்கள் அங்கீகரித்திருப்பதாக வெளியுலகினரை நம்பவைக்க எடுத்த சனநாயக ரீதியிலான யுத்த முஸ்தீப்பு மக்களால் உடைத் தெறியப்பட்டுவிட்டது.

இவற்றுக்கு மேலாக அடிமட்ட நிலையிலுள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்ற கருத்துக்கணிப்பீடு இராணுவத்தின் உதவியுடன் முன்வைக்கப்பட்டிருந்தது. அரசுசார்பான ஊர்வலங்களும் கூட்டங்களும் அதில் ஒலிக்க வைக்கப்பட்ட கோசங்களுக்கும் தமிழர்கள் கருவிகளே, பயத்தின் வழியே வெளிவந்த பரிதாபப்பட்டவர்களின் ஈனக்குரல் என்பதும் வெளியுலகுக்குத் தெரிந்துவிட்டது. இன்னமும் இரகசிய வாக்கெடுப்புக்கு மக்கள் முழுமையாக நன்றி சொல்ல முடியாதவர்களாயிருக்கிறார்களே அதுதான் அரசியலில் கேவலம்.

துப்பாக்கி முனையில் தேர்தல்கள், தமிழர் பாதுகாப்புக்கு உத்தரவாதம் எங்கே என்ற வினாக்களைச் சர்வதேசமும் தொடுத்துக் கொண்டிருந்தமை தான் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் பிறந்த உறுதியுடன் கூடிய முக்கியத்துவம். 2008ல் தெரிவு செய்யப்பட்ட 22 தமிழ்ப்பராளுமன்ற உறுப்பினர்களால் போர்

தொடர்தல் 6ம் பக்கம்



“அங்கேயும் இங்கேயும்... ஓட்டுக்கு அரோகரா”

## 50 ஆண்டுகளுக்குப் பின்பும்

# நாடுகடந்து துரத்தும் வழக்கு

கந்தசாமி
கங்காதரன்



70, 80 வயதைக் கடந்த 4 கென்யா நாட்டவர்கள் 50 ஆண்டுகளுக்கு முன் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கெதிராக பிரித்தானிய வெளியுறவு அமைச்சின் மீது வழக்குத் தொடர பிரித்தானிய மேல் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. “வழக்குத் தொடர இவர்களிடம் வலுவான காரணங்கள் உள்ளன; மறுப்பது கண்ணியமற்ற செயலாகலாம்” என்று நீதிபதி சொல்கின்றார்.

50 ஆண்டுகளுக்கு முன் என்ன நடந்தது? யார் இந்த 4 பேர்? இவர்களுக்கும் பிரித்தானிய வெளியுறவு அமைச்சுக்கும் என்ன தொடர்பு?

1950களுக்குச் செல்வோம்.

பிரித்தானிய ஆளுகைக்குட்பட்டிருந்த கென்யாவில் பிரித்தானியக் குடியேறிகள் விளை நிலங்களைத் தம் ஆசைப்படி கையகப்படுத்திக்கொண்டனர். விளை நிலங்களில் வேலையாட்கள் உள்ளூர் மக்கள். பிரித்தானிய சாம்ராஜ்யம் தான் ஆண்டுகொண்டிருந்த எல்லாத் தேசங்களிலும் இதனைத்தான் செய்து கொண்டிருந்தது. பல தேசத்தவர் தமக்கு விதிக்கப்பட்ட அடிமைத்தளையை அறுத்தெறிய முடியாத நிலையில் அடங்கிப்போகக் கற்றுக் கொண்டனர். ஆங்காங்கே சிலர் கிளர்ச்சி, புரட்சி என்று புறப்பட்டனர். ஈவிரக்கமின்றி பிரித்தானிய சாம்ராஜ்யம் கிளர்ச்சிகளையும் புரட்சிகளையும் ஒழித்துக்கட்டியது. அதிலும் பிரித்தானியர் பயன்படுத்திய சித்திரவதை முறைகள் பேரதிர்ச்சி தருவதாயுள்ளன. நாகரிகமடைந்த சமூகம் எனத் தம்மைத்தாமே பீற்றிக்கொண்ட, பீற்றிக்கொள்ளும் ஒரு சமூகம் இவ்வாறான கொடூரங்களைச் செய்தது... அதுவும் ஆட்சிக்கட்டிலில் சுகித்திருந்தோருக்கும் தெரிந்தே இவற்றைச் செய்தது என்பதை நம்பித்தான் ஆகவேண்டும். அதிகாரமும் இனவெறியும், மனித மனம் இந்தச் சித்திரவதைகளைச் செய்து சக மாந்தர் துன்பத்தில் துடிதுடிப்பதைக் கண்டு குரூர மகிழ்ச்சி கொள்ளச்செய்திருக்கின்றன.



ஜனாதிபதி பராக் ஒபாமாவின் தந்தை வழிப்பாட்டனாரும் பிரித்தானியப் படையினரின் பிடியில் அகப்பட்டு 6 மாதங்கள் சிறையில் கடும் சித்திரவதையை அனுபவித்தவராம். இதை பராக் ஒபாமாவுக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறார் பாட்டி. வெள்ளை மாளிகையில் பிரித்தானிய அரசிடமிருந்து முந்தைய ஜனாதிபதி ஜோர்ஜ் W.புஷ் அவர்களால் இரவலாகப் பெறப்பட்ட பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் மார்பளவுச் சிலையொன்று வைக்கப்பட்டிருந்தது. அதனைத் திரும்பிக் கொடுத்துவிட்டார் பராக் ஒபாமா. தாத்தாவுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் காரணமாகத்தான் பராக் ஒபாமா சிலையைத் திருப்பியனுப்பினார் என்று சில ஊடகங்கள் கருதுகின்றன.

பிரித்தானிய நில ஆதிக்கத்துக்கெதிராக கென்யாவிலும் கிளர்ச்சி கருக்கொண்டது. மௌ மௌ என்ற கிளர்ச்சிக் குழு, நிலங்களை தமதாக்கிக் கொள்ளும் வெள்ளையரைக் குறிவைத்துத் தாக்குதல்களை நடத்தியது. வெள்ளையரைப் பாதுகாக்க பிரித்தானியாவுக்குத் தலையாட்டும் கென்யா அரசு 10,000 ஆபிரிக்க, பிரித்தானியரைக் கொண்ட படையோடு 21,000 காவல் துறையினர், 25,000 ஊர்காவல் படையினரைக் களத்தில் இறக்கியது. பிரித்தானியாவுக்குத் தலையாட்டும் கென்யா அரசு என்பதும் வெள்ளையராலேயே நிர்வகிக்கப்பட்டது. ஆளுநர், படைத்தளபதி, தலைமை நீதிபதி அனைவருமே வெள்ளையர்கள்.

ஒக்டோபர் 20, 1952.

அடக்குமுறையின் தலையாய ஆயுதமான அவசர காலச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மறுநாளே கென்யா – ஆபிரிக்கக் கூட்டமைப்பு (Kenya Africa Union – KAU) இன் தலைவர் Jome Kenyattaவும் மௌ மௌ இன் முக்கிய உறுப்பினர்கள் 180 பேரும் தலைநகர் நைரோபியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். KAU தடை செய்யப்பட்டது. இந்நடவடிக்கைக்காக எகிப்திலிருந்து ஒரு தொகுதி பிரித்தானியப்படையினரும் வான் வழியாகக் கொண்டு வந்து நைரோபியில் இறக்கப்பட்டிருந்தனர். ஆயினும் முக்கியமான இருவரைக் கோட்டைவிட்டனர். இந்தக் கைது நடவடிக்கை பற்றிய தகவல் எப்படியோ கசிந்து, மௌ மௌ இன் உறுப்பினர்கள் - பின்னாளில் மௌ மௌ இன் கானகப்படையின் முக்கிய தளபதிகள் Dedan Kimathiயும் Stanley Methangeயும் தப்பிச்சென்று காடுகளுக்குள் மறைந்துகொண்டனர்.

Jomo Kenyattaவுக்கு எதிரான வழக்கில் அரசதரப்பு முதன்மைச் சாட்சி பொய்ச் சாட்சியமளித்தார். நீதிபதி இலஞ்சம் வாங்கிக் கொண்டு நீதி வழங்கினார்.

Jomo Kenyatta, மௌ மௌ இயக்கத்தினரை இயக்குபவர்களில் முக்கியமானவர் எனவும் இயக்கத்தின் உறுப்பினர் எனவும் குற்றம் சாட்டப்பட்டு ஏழாண்டு கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றார். இந்தக் கைது நடவடிக்கையின் பின், பழிவாங்கும் படலமாக வெள்ளையினக் குடியேறிகள் மீது மௌ மௌ இயக்கதினரால் சில தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பலர் கொடூரமாகக் கொல்லப் பட்டனர்.

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத கென்யக் குடியேற்ற அரசு இன்னொரு படை நடவடிக்கையை 1954 ஏப்ரல் 24இல் மேற் கொண்டது. தொடர்ந்து கொண்டிருந்த மௌ மௌ இயக்கத்தினரின் நடவடிக்கைகளுக்கு மையமாக இருந்தது நைரோபி நகரமே. ஒரேயடியாக நைரோபியிலிருந்து மௌ மௌ இயக்கத்தினரை ஒழித்துக் கட்டுவதே இந்த Operation Anvil என்ற நடவடிக்கையின் தலையாய நோக்கம்.

25,000 பிரித்தானியப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்ட நைரோபி சல்லடையிடப்பட்டது. தற்காலிக முட்கம்பி வேலிகளுக்குள் அனைத்து ஆபிரிக்கர்களுமே கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்பட்டனர். மேள மௌ இயக்கம் செல்வாக்குப் பெற்றிருந்த கிகியு, எம்பு, மெரு ஆகிய இனக் குழுமங்களைச் சேர்ந்தோர் தவிர்த்து ஏனையோர் விடுவிக்கப் பட்டனர். வெள்ளையரால் இக்கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும் உள்ளூர்க் காட்டிக்கொடுப்பவர் ஒருவர் மௌ மௌ இயக்கத்தினரைக் காட்டிக் கொடுத்துத் தம் விசுவாசத்தைக் உறுதிப்படுத்தினார்.

20,000 பேர் சந்தேகத்தின் பேரில் ஓரிடத்துக்கும் 30,000 பேர் இன்னோரிடத்துக்கும் வலுக்கட்டாயமாகக் கொண்டுசெல்லப்பட்டனர். கொண்டு

தொடர்தல் 32ம் பக்கம்

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

**உணவு நஞ்சாதல்**
போல் யோசேப் 11

**தனியாள் கல்வித் திட்டம்**
ஜீவா திசைராஜா 13

**உள ஆரோக்கியத்தில் வீடு**
புஷ்பா கனகரட்ணம் 14

**ஐறிஸ்**
செல்லையா சந்திரசேகரி 18

**மின்சாரச் செலவும் கட்டுப்பாடும்**
வேலா சுப்ரமணியம் 23

**உங்களுக்கான வீட்டை வாங்குவது எப்படி?**
எஸ்.கே. பாலேஸ் 28

**வீடு வாங்கப் போகிறீர்களா? இதோ உங்களுக்கான ஒரு வழிகாட்டி**
வள்ளிக்கண்ணன் மருதப்பன் 35

**சமூக நலன்சார்ந்த கொடுப்பனவுகள்: பாதகமான முடிவும் மீளாய்வும்**
ஆ.க. ஆனந்தநாதன் 36

**விடுமுறைக் காலமும் Credit Card பாதுகாப்பும்**
சுரேன் சொர்ணலிங்கம் 38

**அதிகரித்துச் செல்லும் குடும்ப வன்முறைகள்**
த. சிவபாலு 43

**உயில்கள்**
செந்தூரன் புனிதவேல் 44

**செல்லம்மா எல்லாருக்கும் உதவிசெய்தவள்**
கதிர் துரைசிங்கம் 46

**எம்மையும் எம் உடைமைகளையும் பாதுகாப்பது எப்படி?**
லதன் வரதராஜா 49

**வதிவிடத்திற்குச் சிறந்தது வாடகை வீடா?**
மாறன் செல்லையா 52

**கனடாவில் கதிகால்வேலி**
லலிதா புருடி 56

**மன்னிச்சுக் கொள்ளுங்கோ தம்பி...**
குமார் புனிதவேல் 58

**காட்டுயானையின் தாய் பிள்ளைப் பாசம்**
பூர்வீகன் 63

**யாழ் குடா நாடும் கேரளாவும்**
பொன் குலேந்திரன் 64

**உலக மொழிகளின் எழுத்து வடிவங்கள் தோன்றிய வரலாறு**
முருகேசு பாக்கியநாதன் 66

**தீப்பெட்டியும் தீக்குச்சியும்**
நாகமுத்து சுப்பிரமணியம் 68

**பயங்கரவாதியா?**
மனுவல் ஜேசுதாசன் 71

**தற்கொலைச் சுதந்திரம்**
ச.வே. பஞ்சாட்சரம் 72

**The Cageஐ முன்வைத்து ஈழப் போர் எனது வாசிப்புகளூடான ஒரு பார்வை**
அருண்மொழிவர்மன் 76

**தமிழ் முதியோரின் நல்வாழ்வு: குடும்ப சமூக விடயங்கள்**
சுல்பிகா இஸ்மாயில் 93

**ஏமாத்திப் போட்டான்**
சேகர் தம்பிராஜா 94

**பழுப்பு இனிப்பு**
அ.முத்துலிங்கம் 96

**பெயராபத்தும் பேராபத்தும்**
கே.எஸ். பாலச்சந்திரன் 98

**கடவுளர் கரந்துறையும் காலம்**
நிமால் நாகராஜா 103

**மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்**
வி. கந்தவனம் 106

**ஒரு நாள்**
என்.கே. மகாலிங்கம் 109

**இன்றைய நோக்கில் பண்டைய தமிழிலக்கியங்கள்**
நா. சுப்பிரமணியன் 113

**கலைஞன் ந. கிருஷ்ணசிங்கம்**
ப. ஸ்ரீஸ்கந்தன் 115

**மூத்த ஒலிபரப்பாளர் விவியன் நமசிவாயம்**
அ. கனகசூரியர் 116

**காப்புறுதி! அத்தியாவசிய தேவையா? பணவிரயமா?**
சிறீதரன் துரைராஜா 118

அவலத்தை நிறுத்த முடிந்தா என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டதும், கருணா, டக்ளஸ் போன்றவர்கள் அரசாங்கத்தின் சேவ கர்கள் என்று மற்றவர்களின் குற்றச் சாட்டு களும் தேர்தற்காலப்பரப்புரைப் பரிமாற்றங் களாக மட்டுமில்லாமல் தமிழர்களைப் பிரதி நிதித்துவப்படுத்துபவர் யார் என்ற இழுபறிப் போராட்டத்தின் இறுதி இலக்காக இருந்து.

இலங்கையின் அதிகாரமட்டத்தில் சர்வவல் லமை பொருந்திய ஜனாதிபதி, பிரதமர், மந்திரிகள், மக்களவை, மாகாணசபை, மாவட்ட அபிவிருத்திச்சபைகள் மாநகரசபை கள், பட்டினசபைகள், பிரதேசசபைகள், கிராமிய நிலதாரிக்கள் என்ற அதிகாரப்படிமுறையில் பிரதேச சபைகள் மூலமான அதிகாரப் பரவ லாக்கம் என்பது ஒரு அடிமட்டபரவலாக்கம். அது இலங்கைக்கும் போதுமானது என்ற தத்துவத்தை முன்வைத்து பரீட்சித்துப்பாத்த தேர்தல் முறைபோன்று இதனைக் கொள்ள முடிகிறது.

கிழக்குமாகாணத்தில் நடந்த மாகாணசபைத் தேர்தலில் அரசு தனது முழுப்பலத்தையும் பிரயோகித்ததுடன் தமிழர்மக்கள்விடுதலைப் புலிகளுடன் (கருணா, பிள்ளையான் குழு) கூட்டுச்சேரந்தது தேர்தலை நடாத்திமுடித்தது. இலங்கையில் அதிகாரப்பரவலாக்கம் அர்த்தமற்றது என்பதனை அதிகாரபூர்வமாக வெளி யிட முயன்று அரசு வெற்றி கண்டதாகக் சொல்லப்பட்டது. இதன் மூலம் 13வது திருத் தச்சட்டமும் அதன் மூலமான வடக்குக் கிழக்கு இணைப்பும் சனநாயகப்படியும் இராணுவ அடிப்படையிலும் நீதிமன்ற நிலையிலும் தோற்றுப் போய்விட்டதாக ஒரு கருத்து முன் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. முள்ளிவாய்க்கால் கொடுமைகளின் பின்னர் கிழக்கு விளித்துக்கொண்டது என்பதற்கு கிழக்கிலங்கைப் பிரதேசசபைகளில் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் வெற்றி சான்றா கிறது. தமிழர்கள் தப்பிப்பிழைக்கவன்றித் தன்மானத்துடன் வாழவே விரும்புகிறார்கள் என்பதை மீண்டும் உலகுக்குக் காட்டியிருக் கிறார்கள்.

தனிநாடு, சுயநிர்ணய உரிமை, சமஸ்டி, மாகாணசபை, மாவட்டசபை, ஆகிய அதிகா ரப்பரவல்த் திட்டங்களை அரசுகளுக்கு அறிவித்துத் தோற்றுப் போனவர்கள் இலங்கைத் தமிழர்கள். தமிழர்கள் எந்த எந்த வழிகளால் தோல்வியடையச் செய்யப்பட்டார்களோ அந்த வழிகளை அரசுகளே முன்னின்று நடாத்தியிருந்தன. இறுதியாகப் 13வது திருத்தச் சட்டமும் பாராளுமன்றத்தில் வைத்து தூக்கி யெறியப்படும். இதற்கும் காரணம் "தீர்வுத் திட்டம் திணிப்பதன் மூலம் கொடுக்கப்படமுடியாதது" என்ற கூற்றுடன் எல்லாச் சிங்கள அரசியல் வாதிகளும் ஊறிப்போய் விட்டார்கள். இது பரந்து கல்விமான்கள், மதபீடத்தினர், மக்கள் என்பேரிடையேயும் பலம்பெற்றுவிட்டது. இந்த உணர்வு இந்தியக்கட்டாய அழுத்தத்தாற் பிறந்த 13வது திருத்தத்தாற் கூடத் தாக்கிப்பிடிக்க முடியவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது இது வரையான நிகழ்ந்த பேச்சுவார்த்தைகளிலும் தீர்வுத் திட்டங்களிலுமிருந்து வேறுபட்டிராத பொழுதிலும் சர்வகட்சிக்குழு என்பது கூறப் பட்ட இராசபச்சவின் தீர்வுத்திட்டத்திலிருந்து வேறுபட்டது. எல்லாப்பகுதியினரையும் ஒன்றி ணைத்து நோக்கப்படும் தீர்வுத்திட்டம் என்ப தால் இதனை இன்றைய அரசு எதிர்க்கட்சிகள் மீது திணிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டுகின்றன. தமிழர்கள் அரசுடனும் அதன் மகிந்த சிந்தனையுடன் ஒன்றிவிட்டார்கள் என்ற கருத்து இத்தேர்தல் அரசு வெற்றிபெற்றிருந்தால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். தீர்வுத் திட்டமின்றியே மகாவம்ச வரலாற்றில் தொடர்ந்தும் சிங்களபௌத்த காலவனாக வலம்வர இராசபக்சவுக்கும் கிடைத்த உடனடியான மருந்து இந்தத் தேர்தல் வெற்றியாகத்தான் இருந்திருக்கமுடியும்.

1983ன் இனக் கலவரத்தால் தீர்வுத்திட்டம் ஒன்று தமிழருக்குக் கொடுக்கவேண்டிய கட்டா யத்திலிருந்தது இலங்கை. பிரிந்து போய்விடக் கூடிய நிலையிலிருந்த வடக்குக்கிழக்கு தமிழர் வாழிடப்பிரதேசத்தை ஆடி 29, 1987ல் செய்யப் பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் பாதுகாத்த பெருமை ஜே. ஆரைச்சார்ந்தது. 13வது திருத்தச் சட்ட மூலம் அவசரகாலச் சட்டத்தின் பின்னணியில் நிறைவேற்றப்பட்டி ருந்ததுடன் இலங்கையின் பாதுகாப்பில் இந்தியாவுக்கு உரிமை உண்டென்ற மாயை யினை அந்த ஒப்பந்தம் ஏற்படுத்தியது.

இலங்கையின் அரசியற் திட்டத்தில் 13வது திருத்தத்தை இந்தியாவின் பேரரசுவாதம் என்றும் அகண்ட இந்தியக் கொள்கையென்றும் அப்பட்டமான இந்தியாவின் இராசதந்திரப்படை எடுப்பு என்று (சரத் குணசேகரா) புத்தி ஜீவி கள் குறைசொல்லிக் கொண்ட பொழுதிலும் ஜே ஆரின் உள்நோக்கம் வேறாயிருந்தது.

வடக்குக்கிழக்கு இணைவு சர்வசன வாக்கெடுப்பு மூலம்தான் என்ற போர்வையில் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்ட பொழுது 13வது திருத்தத்தின் மூலாதாரமான இணைப்புத் திட்டத்தை நீக்கிவிடக்கூடிய அதிகாரத்தை யும் மக்களுக்கு வழங்கி விட்டு மறுபுறமாக அத்தமிழர்களை விலைக்கு வாங்கிவிட முடியும் என்றும் தப்பான கணக்குப் போடப் பட்டிருந்தது. அதனை அம்பாறை மாவட் டத்தில் தமிழ்பகுதிப் பிரதேசசபைத்தேர்தல் முடிவுகள் பொய்யாக்கியிருந்தன.

இலங்கை இந்திய ஒப்பந்தம் இன்னமும் செத்துப்போய்விடவில்லை என்று சொல்லிக் கொள்ளும் இந்தியாவுக்கு 13வது திருத்தத் தைவிடப் பெரிய திருத்தத்தை அரசியற்திட்டத்தில் கொண்டுவர ஆயத்தமான இலங்கை அரசுக்குக் கிடைத்ததொரு பற்றுக்கோடு தமிழ் வாக்காளர்கள்தான். அவர்களைக் கொண்டே அவர்கள் கண்களைக் குத்தவைக்கும் முயற்சி யில் மீண்டும் ஒரு தோல்விதான் இந்த பிரதேச சபைகளின் தேர்தல்களில் அரசுக்குக் கிடைத்த தோல்வி.

தமிழர்களின் இத்தகைய சிறுசிறு வெற்றிகள் மூலம் பெரும்பான்மை அரசின் போலிவாக்குறுதிகளைச் சுமக்கக் கூடிய அரசியற்திட்டத்தைக்கொண்ட இலங்கைக்கு எந்த அழுத்தத்தைக் கொடுக்கவேண்டுமோ அதற்குப் பொறுப்பாயிருந்து பின்வாங்க நினைக்கும் இந்தியாவுக்கு மீண்டும் ஒருதடவை இலங் கையின் அரசியலைத் திசை மாற்றுவதற்கும் வெளிப்படையாக முன்வந்து செயற்படவும் ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்திய மக்களின் சக்தி மகத்தானது என்பதனையும் இலங்கைத்தமிழரின் விருப்பத்தினையும் இந்திய மத்திய அரசு செயற்படுத்திக்காட்ட வேண்டும்.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■


## HOUSE FOR SALE

**(16th Ave & 9th Line)**




Elegant 4 Bedroom Detached w/detach dbl Car garage in Charming Cornell.
Many superb upgrades.
Open Concept w/9f Ceiling,
Taller Windows, Shutters, FR w/gas FP.
Oak staircase.
Kitchen w/granite countertop
maple taller uppers, Backsplash
K.Aid SS appl, C AC, C HF

Cell: 416-570-2623 H.Tel:905-554-5160

For more info, visit at: http://comfree.com/2-storey-for-sale-markham-ontario-265098



# YOUR HOME DOESN'T COME WITH MORTGAGE ADVICE. I DO.



- Purchase Refinance Preapprovals
- Builder rate hold up to 24 months
- Special program for Self employed and New immigrants
- Unlock your equity in your home with RBC Home Line Plan
- Available 7 days a week

## Call now before rate goes up!

As your RBC Mortgage Specialist and a trusted member of our community I can advise you on your options and give you the confidence you need to make the right decisions. I can meet with you at a **place** and **time** that is **convenient** for you.

# Ram Krish

**RBC Royal Bank**

Mobile Mortgage Specialist

Direct: **416-849.5363**

Email: ram.krish@rbc.com

* Some conditions apply.

RBC



- digi Media -

# கணினி உலகப் புல்லுருவிகள்



ஜிப்றி
உதுமாலெப்பை
- கணினி வல்லுனர் -

இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம், இன்றைய தவிர்க்க முடியாத தொடர்பு ஊடகமாக இருக்கும் இன்றைய வலைய அமைப்பில் நடந்து கொண்டிருக்கும் Hacking (கணினி ஊடறுப்பு) போர்க்கள செய்திகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமாக உங்கள் கணினிகளில் இருக்கும் தனிப்பட்ட/வியாபார தகவல்கள் எவ்வளவு தூரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வைக் கொண்டு வருவதே.

"The President is dead. A sad 4th of July indeed. President Barack Obama is dead." என்ற செய்தி FoxNews நிறுவனத்தின் Twitter குறும் செய்தியில் வெளியானபோது செய்தி ஊடகங்கள் அதிர்ந்து போயின. 2011 ஜுலை 4ம் திகதி (அமெரிக்க சுதந்திர தினம்) அன்று இது நடந்தது. நடந்தது என்ன? ஜுன் முப்பதாம் திகதிக்கும் ஜுலை நான்காம் திகதிக்கும் இடையில் 'Script Kiddies' என்ற hacckers குழுவை சேர்ந்தவர்கள் Twitter குறும் செய்தி அனுப்பும் நிறுவனத்தின் கணினி மையத்துள் உட்புகுந்து FoxNews நிறுவனத்தின் அரசியல் செய்திகளை உடனுக்கு உடன் வெளியிடும் Twitter Account '@foxnewspolitics'ஐ ஊடறுத்து தன்வயப் படுத்தினார்கள். (FoxNews நிறுவனம் கூறி வரும் கோமாளித்தனமான அரசியல் கருத்துக்கள் போன்றே அவர்களுடைய Twitter அங்கத்துவ Password உம் சிரிக்கும்படியாக இருந்தது என்று நக்கலாக 'Script Kiddies' என்ற hacckers குழு தங்கள் குறும் செய்தியில் கூறி இருக்கிறார்கள்.) 2011, ஜுலை நான்காம் திகதி அதிர்ச்சி தரும் அந்த செய்தியை தாங்கள் கையகப்படுத்திய Fox news Twitter மூலமாக வெளியிட்டார்கள். அத்துடன் தாங்கள் பல செய்தி நிறுவனங்களின் தங்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றங்களை அவர்களுக்குத் தெரியாமலேயே அவதானித்து வருவதாகவும் மறைக்கப்பட்ட உண்மையான செய்திகளை எடுத்து வருவதே எமது நோக்கம் என்றும் கூறி இருக்கிறார்கள். அதாவது இந்த ஊடறுப்புகளில் பாதிக்கப்படும் (Twitter , Email ) Accountகளை அதன் உரிமையாளரினால் தொடர்ந்து பாவிக்கப்பட்டுக்கொண்டு இருக்கும்போதே அந்த தொடர்பாடல்களின் ஒரு பிரதி hackerகளையும் சென்றடையும். உரிமையாளர்களுக்கு தெரியாமலேயே. இந்த கணினி ஊடறுப்பு பற்றி அமெரிக்காவின் முக்கியமான ரகசிய புலனாய்வு பகுதியினர்

## பகுதி - 2

அதனையும் 'தேடுதல்' வேட்டையை நடத்தி வருகிறார்கள்.

4th July 2011; அப்பிள் நிறுவனத்தின் கணினி பாவனையாளர்களுக்கு உதவி செய்யும் (Technical Support Team) கணினி விற்பன்னர்கள் பாவிக்கும் முதன்மையான கணினிகளின் 26 Administratorகளின் Password களை களவாடி தங்கள் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தி இருந்தார்கள் AntiSec (Anti Security என்பதன் குறும் சொல்) என்ற Hackers குழுவினர். அத்துடன் "அப்பிள் நிறுவனம் எங்களைப்பற்றி கவலைப்படத்தேவை இல்லை, நாங்கள் வேறு நிறுவனங்களின் கணினிகளில் 'பிசி'யாக இருக்கிறோம்" என்று செய்தியை வேறு அந்த கணினிகளில் விட்டு விட்டு சென்று இருக்கிறார்கள்.

George Hotz தனது 17 ஆம் வயதினிலேயே உலகில் முதன் முதலாக அப்பிள் நிறுவனத்தின் IPhoneஐ (24th August 2007.) Hacking (Cracking / Unlocking / Jailbreaking என்றும் இந்த முறையை அழைப்பார்கள்) செய்து எந்த Cellular தொலைத்தொடர்பு சேவையையும் பாவித்து IPhone மூலம் உரையாடலாம் என்ற உத்தியை உலகுக்கு



வெளிப்படுத்தினர். (IPhone அறிமுகப்படுத்தப்பட்ட போது AT&T நிறுவனத்தின் தொலைத்தொடர்பு மூலமாக மட்டுமே பாவிக்க முடியும் என்ற கடுமையான செயலாக்கத்துடன் வெளியிடப்பட்டது). ஆப்பிள் நிறுவனம் மட்டுமல்ல SONY நிறுவனம் தங்களுடைய PlayStation 3 என்ற Video Gaming Console களை Jailbreaking செய்ததற்காக அமெரிக்க நீதி மன்றத்தில் நஷ்ட ஈட்டு வழக்குகளும் இவருக்கு எதிராக தொடுத்தார்கள். இவரை இப்பொழுது (27 June 2011) Facebook நிறுவனம் தன்னுடைய முக்கியமான கணினி பாதுகாப்பு பகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளது. இதற்கு முன் Facebook.com இணைய புரட்சியை செய்த அதன் ஸ்தாபகர் Mark Zuckerberg உடைய அங்கத்துவ கணக்கு ஊடறுக்கப்பட்டு அவருடைய Facebook Fan Pageஇல் (26 January 2011 ) "Let the hacking begin: If facebook needs money, instead of going to the banks, why doesn't Face book let its users invest in Facebook in a social way? Why not transform Facebook into a 'social business' the way Nobel Prize winner Muhammad Yunus described it? [LINK] What do you think? #hackercup 2011" என்ற வாசகங்கள் எழுதப்படிருந்தன. Mark Zuckerberg ஹவார்ட் பல்கலைகழகத்தில் முதுமாணிப்பட்டம் பெற படித்த போது அந்த பல்கலைகழகத்தின் முக்கியமான கணினிகளை ஊடறுத்து மாணவர்களின் புகைப்படங்களையும், தரவுகளையும் பிரதி பண்ணி அதற்காக பல்கலைகழகத்தின் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டவர் என்பதனையும் ஞாபக படுத்திக்கொள்ள விரும்புகின்றோம்.

(திருப்பதிக்கே 'லட்டு' கொடுத்த கதை!)

இந்த நூற்றாண்டின் முக்கிய பொருளாதார வல்லரசாக மட்டுமல்லாமல் கணினி உலகின் அதிகூடிய, பலம்வாய்ந்த Hackerகளை கொண்ட நாடாகவும் சீன தேசம் வளர்ந்து வருகிறது, சீனாவில் இருக்கும் கணினி ஊடறுப்பாளர்களை நான்கு வகையாக நிறம் கொடுத்து ரகம் பிரித்து பார்க்கிறார்கள். முதலாவது 'Balck hackers'. இவர்கள் கணினிகளில் இருக்கும் தகவல்களை திருடவோ அல்லது கணினி வலையமைப்புக்கு பாதகத்தையோ ஏற்படுத்த மாடார்கள். மாறாக கணினிகளிலும், நிறுவனங்களின் வலையமைப்பிலும் இருக்கும் பாதுகாப்பு இன்மைகளைக் கண்டறிந்து அந்த குறைகளை நிவர்த்தி செய்து வலையமைப்பை உறுதியானதாக மாற்ற தங்கள் கணினி அறிவை பயன்படுத்தி உழைப்பவர்கள். இரண்டாவது 'Gray hackers'. இவர்கள்தான் ஆபத்தானவர்கள். தகவல்களைக் களவாடுவது, மற்றைய அரசுகளின் இணையதளங்களைத் தாக்குவது என்று அடாவடித்தனங்களின் ஒட்டு மொத்த கூட்டம். மூன்றாவது 'Red hackers' (Honkers என்றும் அழைக்கப்படுகிறார்கள்). இவர்கள் தேசப்பற்று மிக்கவர்கள். சீனாவின் இணைய வலைய அமைப்பின் பாதுகாப்பை தலையாய கடமையாகக் கொண்டு செயற்படுபவர்கள். சீனாவின் கணினிகள் மீது தாக்குதல் நடத்துபவர்களை எதிரிகள் என்று எதிர் தாக்குதல் நடத்துபவர்கள். 1999ஆம் ஆண்டு போஸ்னியா போரின் போது NATO படைகள் தவறுதலாக Belgrade நகரத்தில் இருந்த சீன தூதரகம் மீது குண்டுமழை பொழிந்ததை எதிர்த்து அமெரிக்க அரசின் பல இணையத்தளங்கள் மீது தாக்குதலை மேற்கொண்டார்கள். அத்துடன் அந்த யுத்தத்தில் உதவியாக இருந்த செயற்கைக் கோளையும் (Satalite) தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்தார்கள். நான்காவதானவர்களை 'White hackers' என்ற நிற குறியீட்டுடன் அழைக்கிறார்கள். இவர்கள் முன்னர் செய்த 'விளையாட்டுக்களை' தொடர்ந்து செய்யாமல் தாங்கள் வேலை செய்யும் பெரிய நிறுவனங்களுக்கு ஆலோசகர்களாக அந்த நிறுவனங்களின் கணினி உலகை பாதுகாக்க ஆலோசகர்களாக இருப்பவர்கள்.

அப்ப நீங்கள் எந்த ரகம் என்று கேட்காதீர்கள். ஒரு ரௌடியாக இருந்தவரினால் நல்ல போலீஸ் அதிகாரியாக செயலாற்ற முடியும் என்று நம்புகிறேன்.

ஒரு வீட்டில் நடக்கும் உண்மையான நிலைமைகளை அறிய வேண்டுமானால், அவர்களுடன் கதைவிட்டு கதை எடுக்கவேண்டும் என்பது பழைய 'டெக்னிக்கு'. தொலைத் தொடர்பு தொழில்நுட்பங்கள் வளர்ந்த காலத்தில் அந்த வீட்டுக்கு வரும் தொலைபேசி சம்பாசணைகளை அவர்களுக்குத் தெரியாமல் கேட்கும் பல வழிமுறைகள் இப்போது வளர்ந்து கிடக்கின்றன. தொலைபேசி தொடர்புகள் கணினி மயப்படுத்தப்படும் வரை ஒருவருடைய தொலை தொடர்பு சம்பாசனைகளை ஒட்டுக் கேட்பதற்கு அவருடைய தொலைபேசி சாதனத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கம்பில் Tapping முறை மூலம் இன்னொரு கம்பியை இணைத்து ஒலிப்பதிவு செய்து கொள்வார்கள். கணினி மயப்படுத்தப்பட்ட இன்றைய காலத்தில் உலகின் இன்னும் ஒரு மூலையில் இருந்து கொண்டே இந்த வேலையை செய்து விடக்கூடிய அளவுக்கு தொழில் நுட்ப வசதிகள் வளர்ந்து விட்டன.

பொதுவாக தொலைபேசிகளில் சேமிக்கப்பட்டு இருக்கும் Voice Mailகளை கேட்டுக் கொள்ள நான்கு இலக்கம் (கனடாவில்) உள்ள Password தெரிந்திருக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரியும். அனால் உங்கள் Voice Mail Boxஇன் அந்த Password இலக்கங்களும் உங்கள் எதிரிகளுக்கு தெரிந்திருந்தால்..? Voice Mailகளில் பதியப்படும் உங்களுக்கு மட்டுமான செய்திகளை உலகில் எந்த பகுதியில் இருந்தும் நீங்கள் Dial செய்து அறிந்து கொள்ளலாம் என்பதுவும் உங்களுக்கு தெரியும். ஆகவே இந்த இலக்கங்கள்

தொடர்தல் 30ம் பக்கம்

Royal Shades inc.
Interior Windows Design Solutions
ROYAL SHADES
Draperies | Blinds | Shutters | Door & Lock Systems | Crown Molding
Over 17 Years Experience
Visit Our Showroom For Variety of selection
3031 Markham Road, Unit# 23 | Scarborough M1X 1L9
Tel: 416.562.0340 | 647 347 4474
info@royalshades.com | www.royalshades.com
Satisfaction Guaranteed
Thaas Sivathason
416.562.0340



ஞானேந்திரன் நரசிங்கம்
416.937.8090
ஜூடி ஞானேந்திரன்
416.629.9797
Sales Representatives
HOMELIFE
HIGHER STANDARDS
Toronto
$549,900
Detached 4 Br Home
2 Full Wr / Fin. Bsmt
Great Location
Markham
$538,800
Detached 3 Br
2 Storey 2 Full Wr
Great Location....
Toronto
$409,900
Detached 3Br Home
2 Full Wr / Fin. Bsmt
Sep Ent.Great Location
Toronto
$285,000
Detached 3Br Home
2 Full Wr / Fin. Bsmt
Great Location8
Markham
$479,000
Link 3 Br 2 Storey
2 Full Wr. Great Layout
Close to Great Schools.
Toronto
$549,900
Detached 4Br 2 Storey.
3 Full Wr well maintained
Great Location.........
Markham
$459,000
Detached 3 Br 2 Storey
2 Full Wr. Great Loc...
Great Layout
Markham
$689,000
Detached 4 Br W/O Bsmt
2 Storey 2 Full Wr
Great Location...
Ajax
$369,500
Detached 4Br 2 Storey.
2 Full Wr Shows 10++++
Great Layout....
Ajax
$344,900
Detached 3Br 2 Storey.
2 Full Wr Shows well..
Great Layout....
Ajax
$554,900
Detached 4Br 2 Storey.
2 Full Wr well maintained
Great Location Fin. Bsmt..
Brampton
$399,900
Detached 4Br 2 Storey.
2 Full Wr well maintained
Great Location Fin. Bsmt.
1
Toronto
$249,900
Det.Condo 3Br 2 Storey....
Fin. Bsmt and 3 Full Wr
Great Location
Markham
$499,000
Detached 3 Br 2 Storey
2 Full Wr...Great Layout
Close to All amenities
Markham
$409,000
Freehold Town Home..
3 Br Fin 2 Storey....
Great Loc...
Toronto
$235,000
2Br Condo Apartment..
2 Full Wr & Parking..
Close to All Amenities..
Markham
$649,800
Detached 3 Br 2 Storey
4 Full Wr. Great Loc...
Close to Great Schools.
Toronto
$269,900
2 Storey Condo Town...
3 Br Finished Bsmt...
Great Location..........
Brampton
$519,000
Detached 5 Br 2 Storey
Power Of Sale...
No Representation..
Toronto
$529,900
Detached 4 Br 2 Storey
Power Of Sale...
No Representation...
Toronto
$294,900
Detached 3 Br 2 Storey
Power Of Sale..
No Representation...
Toronto
$365,000
Detached 4 Br 2 Storey
Power Of Sale...
No Representation...
Toronto
$168,900
1+1 Condo Brand New
Tridel Built...
Convenient Location..
Assignment available..
Toronto
$489,000
Detached 4 Br 2 Storey
2 Full Wr Great Location..
7 Yrs Old..
HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE #206, TORONTO, ON. M1S 3YS. OFFICE : 416-321-6969
* EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED

# அக்குபஞ்சர் வைத்தியமும் தொழிற்பாடும்

## அக்குபஞ்சர் வைத்தியம் எப்படித் தொழிற்படுகின்றது?

இலத்தீன் (Latin) மொழியில் 'Acus' என்றால் ஊசி என்று பொருள்படும். 'Pungue' என்றால் குற்றுதல் அல்லது ஏற்றுதல் என்று பொருள் படும். இரண்டு சொற்களும் இணைந்து ஆங்கிலத்தில் 'Acupuncture' என்று ஆகிற்று.

உடலில் இருசக்திகள் சமநிலையில் உள்ளன. அவற்றைச் சீனர்கள் 'YIN' என்றும் 'YANG' என்றும் அழைப்பார்கள். இவ்விரு சக்திகளும் சமநிலையில் இருந்தால் எமது உடலில் ஒரு வித 'உயிரூட்டும் அமிர்தம்' என்ற பாயி உருவாகி உடலில் சக்திக் கால்வாய்களினூடே பாய்ந்து செல்லும் பொழுது மனமும், உடலும் இசைந்து இயங்கி நாம் மகிழ்வாகவும், சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் வாழலாம். இவ்விரு சக்திகளும் ஒன்றுக்கொன்று சமநிலையில் இல்லாதபொழுது உடலில் நோய்கள் ஏற்படும்.

உடலில் பற்பல சக்திக்கால்வாய்கள் உள்ளன. உட்சூழல், புறச்சூழல் போன்ற காரணங்களால் சக்திக்கால் வாய்களில் பாதிப்புகள் ஏற்பட்டு நோய்கள் பாதிக்கப்பட்ட கால்வாயிற்கு ஏற்ப குணங்குறிகளை வெளிக்காட்டும். வைத்தியர் இக்குணங்குறிகளின் ஊடே உடற் பரிசோதனைகள் சில செய்தபின்பு பாதிக்கப் பட்ட கால்வாய்களையும் அதன் புள்ளிகளையும் நிர்ணயிப்பார். மெல்லிய ஊசிகள் மூலம் அப்புள்ளிகள் துளையிடப்பட்டு அச்சக்திகள் சமநிலைப்படுத்தப்படும். இச்சிகிச்சை முறை மிகவும் இலகுவானதும், பாதுகாப்பானதும், பக்கவிளைவுகள் அற்றதும் திறம்படத் தொழிற்படுவதுமாகும். நோய்க்குரிய சரியான புள்ளிகளைக் கண்டுபிடித்து அங்கே துளையிடுவது தான் பிரதானமாகும், மிகவும் கை தேர்ந்த வைத்தியர் ஒருவர் சிறிதும் கூட வேதனை உணரப்படாத அளவிற்கு அந்த ஊசிகளை மிகவும் விரைவாகவும், அதற்குரிய இடங்களிலும் ஏற்றிவிடுவார்.

ஆணின் விந்தும், பெண்ணின் முட்டையும் சந்தித்துக் கருவாகி அதுபின்பு முளையமாகி வளரும் பொழுது பல முளையவியல் மாற்றங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு உறுப்புகளும் உதயமாகும் பொழுது அதற்குரிய சக்திக்கால்வாய்களும் உருவாகின்றன. இவ்உயிரோட்டமுள்ள சக்திக் கால்வாய்களில் புள்ளிகள் காணப்படும். இங்கே ஊசியை ஏற்றுவதன் மூலம் சக்திகள் சமநிலைப்படுத் தப்படுகின்றன.

**இதயம் மலர்கிறது - 34**



எமது உடலில் 12 சோடி உயிரோட்டக் கால் வாய்களுடன் 8 பிரத்தியேகக் கால்வாய்களும் உண்டு. மேற்கூறிய 12 சோடிகளில் 6 கால்வாய்களில் 'YIN' சக்தியும், மறு 6 கால்வாய்களில் 'YANG' சக்தியும் ஓடுகின்றன. ஒவ்வொரு கால்வாயும் உடலினுள் உள்ள 12 உள்ளுறுப்புகளில் ஒவ்வொன்றைக் குறிக்கும்.

இதில் 6 கால்வாய்கள் திண்ம உறுப்புகளையும், மறு 6 கால்வாய்கள் குழிவான உடலுறுப்புக்களையும் குறிக்கும். இவ்வுறுப்புக்கள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகி உட்புற வெளிப்புற உறவுகளைத் தொடர்ந்து பேணிவரும்.

வலைப்பின்னல் போன்ற இக்கால்வாய்கள் உள்ளுறுப்புகளுடன் தொடர்பு பட்டிருப்பதுடன் வெளிப்புறத்தில் உள்ள உடலுடனும் அண்டத்துடனும் தொடர்பை ஏற்படுத்தி ஓர் பிரபஞ்ச சமநிலையை மனிதனுள் ஏற்படுத்துகின்றது. தற்கால விஞ்ஞானிகள் இந்த மர்மப்புள்ளிகளை அண்ட சாகரத்தின் சக்திகளுடன் தொடர்புகொள்ளும் யன்னல்களாக இருக்கலாம் என்று வர்ணிக்கிறார்கள்.

### பன்னிருகால் வாய்களின் பெயர்கள் பின்வருமாறு:

- சுவாசப்பைக் கால்வாய்
- பெருங்குடற் கால்வாய்
- இரைப்பைக் கால்வாய்
- மண்ணீரற் கால்வாய்
- இருதயக் கால்வாய்
- சிறுகுடற் கால்வாய்
- சிறுநீர்ப்பைக் கால்வாய்
- சிறுநீரகக் கால்வாய்
- இருதயச் சுற்று விரிக்கால்வாய்
- உடற்குழிக் கால்வாய்
- பித்தப்பைக் கால்வாய்
- கல்லீரற் கால்வாய்

பன்னிரண்டாவது கால்வாய் முதலாவது கால்வாயுடன் தொடர்புடையதாக இருப்பதனால் உயிரியல் சக்தியின் ஓட்டம் அக்கால் வாய்களினூடாகத் தொடர்ந்து ஓடிய வண்ணம் இருக்கும். மேற்கூறிய ஒவ்வொரு உறுப்புகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாக இருக்கும்.

எமது உடலினுள் அமுதம் போன்ற வீரிய சக்தியை ஊட்டிய வண்ணம் இருக்கும் உறுப் புக்கள் ஐந்து ஆகும். அவையாவன இருதயச் சுற்று விரியும் இருதயமும், சுவாசப்பை, மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகம் என்பனவாகும். உட்கொள்ளும் உணவை சமிபாடடையச் செய்து அவற்றை உறிஞ்சுவதுடன் கழிவுகளை அகற்றுவதற்கு உதவும் உறுப்புக்கள் ஆறு ஆகும். அவை இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், பித்தப்பை, சிறுநீர்ப்பை, உடற்குழி என்பனவாகும்.

மூளை, கர்ப்பப்பை, ஆணுறுப்பு, எலும்பு மச்சை, எலும்புகள், மூளையின் போர்வைகள், பித்தப்பை என்பன மேலதிக உறுப்புகளாகக் கொள்ளப்படும். பித்தப்பை முன்னைய உறுப்புகளுடன் குறிக்கப்பட்டிருந்தாலும் இங்கே பிரத்தியேக உறுப்பாகவும் கொள்ளப்படுகின்றது.



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள் உண்டு. ஒரே நாளில் 12 கால்வாய்களிலும் சக்திகள் மாறி மாறி ஓடிக்கொண்டிருக்கும். ஒரு கால் வாயில் சக்தியானது 2 மணித்தியாலங்கள் வரை செறிந்திருக்கும். இப்படியாக ஒரே நாளில் (12 x 2) 12 கால்வாய்களையும் தாண்டி மறுபடியும் முதற்கால்வாயிற்கு வந்துவிடும்.

உதாரணமாக கல்லீரற் கால்வாயில் 2 மணி நேரம் தேங்கியிருந்த சக்தி 2 மணித்தியாலங்கள் முடிந்தவுடன் சுவாசப்பைக் கால்வா யில் செறிந்து தேங்கி நிற்கும். அதன் பின்பு பெருங்குடற் கால்வாயை நோக்கிச் செல்லும்.

என்னென்ன நேரத்தில் எத்தகைய ஓட்டங்கள் செறிந்து நடைபெறுகின்றன என்பதை அறிந்து அந்த நேரத்தில் அப்புள்ளிகளில் ஊசி ஏற்றும்பொழுது பலன் அதிகமாகும்.

உலக சுகாதார ஸ்தாபனமும், அமெரிக்க மருத்துவ அக்குபஞ்சர் நிறுவனமும் தமது அறிக்கைகளில் அக்குபஞ்சர் முறையால் பலனளிக்கக் கூடிய பல நோய்களைக் குறிப் பிட்டுள்ளன.

அக்குப்பஞ்சர் வைத்தியத்தால் பல நோய்களைக் குணமாக்கலாம். உலக சுகாதார ஸ்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை யில் தரப்பட்டுள்ள நோய்கள் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

- உடலில் ஏற்படும் ஒவ்வாமைத் தன்மைகள்
- பித்தப்பை அழற்சி
- மன அழுத்தம்
- வயிற்றோட்டம்
- மாதவிடாயின் போது ஏற்படும் வேதனை
- முகவாதம், தாடை, மண்டையோட்டு வாதம்
- தோள் மூட்டு வாதம்
- தலையிடி – விசேடமாக Migraine Head Ache
- கீழ் முதுகு வேதனை
- கழுத்து நோவு
- வயிற்றுப் பொருமல், வயிற்றுப் புண்
- தோல் வியாதிகள்
- சிறுநீரகத்தில் ஏற்படும் வேதனை
- சுமுக்கு முழங்கை வாதம்
- பாரிச வாதம்

அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் ஒற்றைப்பக்கத் தலையிடியை (Migraine Head Ache) மிகவும் இலகுவாக மாற்றலாம். அதேபோல் ஒவ்வாமை என்று கூறப்படும் (Allergy) பலவித குணங் குறிகளுக்கும் சிறப்பான முறையில் சிகிச்சை கள் உண்டு.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

HOLISTIC HEALING & WELLNESS CLINIC

Dr. K. Senthi

RMO (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR INSTRUCTOR (Certified in Ontario)

CALL: 647-801-9252

ARGENTUM LENDING DIRECT CORPORATION

Reg # 10466

3621 Hwy 7 East, Suite # 211 Markham, ON, L3R 0G6
1193 A Brimley Rd, Unit 7,Scarborough, ON M1P 3G9



வீட்டு அடமானக் கடன் பெற்றிட உங்களுக்குத் தேவை நம்பிக்கையான ஒரு முகவர்...

OUR SERVICES:
- 1st & 2nd Mortgage
- Refinancing
- Commercial Loan
- Home Equity Mortgage
- Much more...

Are you a Temporary resident? Self Employed? Bankrupt? New Immigrant? Is Your SIN begining with 9? Not to worry
We will help you



Theven Kankesu, AMP
(Mortgage Agent)
FSCO LIC # M08008759
Direct: 416.939.8786
Fax: 647.343.0135
Email: theven.kankesu@migroup.ca



**Full-time Real Estate Agent**

# Nada G. Nadarajah B.V.Sc

**Call Me @ 416 616 8751** Sales Representative


"An award-winning realtor with 14 years experiance".




McCowan & McNicoll
2-Storey Detached
3 Bedrooms - 3 Washrooms
Finished Basement




McCowan & Sheppard
2-Storey Semi-Detached
4+2 Bedrooms - 4 Washrooms
Basemnt Apartment





Morningside & 401
Condo. Townhouse
2+1 Bedroom - 2 Washroom
Close to Major Amenities




Taunton & Townline
2-Storey Detached
4 Bedrooms -3 Washroom
Close to Major Amenities




Midland & Finch
2-Storey Semi-Detached
3+2 Bedrooms - 3 Washrooms
Basement Apartment




Brandongate & Morningstar
Detached Backsplit
3+1 Bedrooms - 2 Washrooms
Finished Basement

## HomeLife
Landmark Realty Inc., brokerage
*7240 Woodbine Ave, Suite 103*
*Markham, ON L3R 1A4*
*Bus: 905 305 1600*
*nanadarajah@trebnet.com*

HOMELIFE HIGHER STANDARDS



Please call for

**EXPERIENCED & TRUSTED SERVICES**
**to Buy, Sell or Rent Real Estate Properties**
## Homes, Condos or Businesses

Free Market Evaluation



வீடு வாங்க, விற்க அல்லது வாடகைக்கு,
நம்பிக்கையான சேவைகளுக்கு அழையுங்கள்
**தமயந்தி சுரேந்திரன்**

## Tammy Surendran (Broker)
tammy.surendran@gmail.com

**Direct Line 416-410-9301**

HOMELIFE HIGHER STANDARDS

Home Life GTA Realty Inc.,
Brokerage
208 - 1711 McCowan Road
Toronto, On. M1S 3Y3
**Bus: 416-321-6969**
**Fax: 416-321-6963**

### உடலும் உள்ளமும் நலந்தானா?

# உணவு நஞ்சாதல்

**உணவு நஞ்சாதல்**
**Food Poisoning:**

அவசர உலகம், அவசர உணவு இப்படியெல்லாம் அவசரமாயுள்ள இந்த யுகத்தில் எதை உண்கிறோம் எதைக் குடிக்கிறோம் என்று தெரியாமல், வாழ்வதற்காக உண்கிறோமா அல்லது உண்பதற்காக வாழ்கிறோமா என்று கொள்கையின்றி வாழ்வதாலும். சுவையுணர்வு மேலோங்கியதால், சுத்தம், சரிவிகித சத்து என்று பார்க்காமல் உணவின் தராதரம் குறைந்துகொண்டே போகிறது என்பதுதான் உண்மை.

விளம்பர மோகம், மலிவு விற்பனை (Sale), ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம், போன்ற விளம்பர உத்திகளால் ஏமாற்றப்பட்டு வண்ணவண்ண சோடினைகளால் அலங்காரம் செய்யப்பட்ட உணவுகள் மீது கொண்ட கவர்ச்சியால் கடையுணவுகளே கதியென்றிருந்தால் விரைவில் விடைபெற்றுச் செல்லலாம் என்றும், Fast Food களால் Fast ஆக செல்லத்துடிக்கும் பலரையும், சிறிய டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவுகளை அடிக்கடியுண்டால் விரைவில் பெரிய டப்பாக்களில் அடைக்கப்பட நேரிடலாம் என்பதை அறிந்தும் நம்மில்பலர் உண்ணும் உணவில் கொஞ்சமும் கவனம் செலுத்துவதில்லை. உணவினைப் பற்றி, உணர்வு பூர்வமான இந்த அறிமுகத்தோடு இனிவிடயத்திற்கு வருவோமா!

உணவு நஞ்சாதல் என்கிற விடயம் எப்போதும் மருத்துவ அறிவியல் உலகில் பரபரப்பாக அலசி ஆய்வு செய்படுகிற விடயமாகும். உயிரினங்களின் நச்சுத்தன்மை, நுண்ணுயிரினங்களின் தொற்று, பல்வேறு வகையான இரசாயணப் பொருட்கள், போன்றவற்றால் உணவானது எந்த வகையிலும் பாதிக்கப்பட்டு அதன் விளைவாக மனிதர்கள் பாதிக்கப்படுவதுதான் உணவு நஞ்சாதல் என்பதாகும்.

இதனால் முதலில் அவசர நிலைப்பாதிப்புள்ளாவது உணவுக்கால் வாய் தொகுதி தான். நஞ்சுத்தன்மையின் வீரியம், நுண்ணுயிரிகளின் தாக்கம் போன்றவற்றைப் பொறுத்து குணங்குறிகள் வேறுபட்டாலும் பல நேரங்களில் உயிராபத்தையும் தோற்றுவிக்கும் பிரச்சினையாகும். உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளி விபரங்களைப் பார்த்தால் பின் தங்கிய நாடுகளில்தான் காணப்படும் பிரச்சினையல்ல. வளர்ச்சியடைந்த நாடுகளிலும் இது ஒரு பெரும் பாதிப்பை உண்டாக்கவல்லது. ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவில் மட்டும் 50 மில்லியன் முதல் 75 மில்லியன் மக்கள் இந்த உணவு நஞ்சாதலால் பாதிக்கப்படுவதும் அதில் 3000 முதல் 5000 வரையான பேர் இறப்பதும் மிகுந்த ஆச்சரியத்தை தருகிறது. நமது கனடாவிலும் ஒரு ஆண்டுக்கு 11 முதல் 13 மில்லியன் வரையான மக்கள் இதனால், பாதிக்கப்படுகிறார்கள். 1999இல் அமெரிக்காவில் 5000 பேருக்கு மேல் இத்தகைய உணவு நஞ்சாதல் பாதிப்பினால் இறந்திருக்கிறார்கள். லண்டனில் ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 2 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவுஸ்திரேலியாவில் 5.4 மில்லியன் பேர் பாதிக்கப்படுகிறார்கள். இன்னொரு விடயத்தைச் சொன்னால் மேலும் ஆச்சரியப்படுவீர்கள்

**தொடர் - 07**

2000 ஆண்டில் மட்டும் உலகம் முழுவதும் உள்ள கணக்கின் படி அதாவது ஓராண்டில் 2.1 மில்லியன் பேர் உணவு நஞ்சாதல் மற்றும் வயிற்றுப் போக்கு நோயினால் இறந்திருக்கிறார்கள்.

இத்தகைய உணவு நஞ்சாதல் நோய் எதனால் எப்படி ஏற்படுகிறது. பொதுவாக மருத்துவ அடிப்படையில் பக்றீரியாவினால் உண்டாகும் நஞ்சாதல் மற்றும் பக்றீரியா அல்லாதவற்றாலுண்டாகும் நஞ்சாதல் என்று இருபெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். பக்றீரியாக்கள் என்று பார்த்தால் பலவகையான



கிருமிகள் இதில் சம்பந்தப்படுகின்றன. பெரும்பாலும் Salmonella வகையை சார்ந்த பக்றீரியாக்கள் தான் உணவுப் பொருட்கள் மூலம் பரவுகிறது. இதிலுள்ள Salmonella Typhymurium, Salmonell Cholera, Salmonell Enteritis போன்றவை பொதுவாக இறைச்சி, பால், முட்டை, போன்றவற்றால் பரவுகிறது. மேலும் Staphylococcus Aureus என்ற பக்றீரியா தோல், மற்றும் சுவாசத் தொகுதி மூலமும், உணவின் மூலமும் மனிதர்களுக்கு பரவி பாதிப்புகளை உண்டாக்க வல்லன.

மற்றும் உணவு நஞ்சாதலில் Botulism என்பது மிகவும் முக்கியமானதாகும். Clostridium Botulinum என்ற பக்றீரியாக் கிருமியானது மண்ணிலிருந்து உணவுகள், காய்கறிகள், போன்றவற்றில் தொற்றியும் பதப்படுத்தப்பட்ட உணவுகள், போத்தல்களில் அடைக்கப்பட்ட அல்லது தகர டப்பாக்களின் அடைக்கப்பட்ட உணவுகளில் தொற்றி மனிதனுக்கு பாரிய பாதிப்புகளையும் ஏன் உயிரிழப்புகளையும் உண்டாக்கலாம். இதனால் இந்த நோய்க்கு போத்தலிசம் (Botulism) என்று பெயரும் உள்ளது. இந்த வகையில் இன்னொரு வகையுண்டு அதன் பெயர் விசித்திரமானது ஆம் Cafeteria Germs என்றழைக்கப்படும் Clostridium Perfringens என்பதாகும். இது அநேகமாக கடையுணவுகள் மூலம் பரவுவதாகும்.

அடுத்தது அண்மையில் ஐரோப்பிய நாடுகளில் பிரபலமான E.Coli என்ற பக்றீரியாவின் மூலம் பரவும் நோயாகும். இது கால் நடைகளின் குடலில் வாழுகின்றது அவற்றின் கழிவுகளை உரமாகப் போடுவதால் அதிலிருந்து காய்கறிகள் மூலம் தொற்றி அவற்றை சரியாக கழுவாமல், சமைக்காமல் உண்ணும் போது மனிதனுக்கு தொற்றிக்கொண்டு அவனின் குடலில் இருந்து வயிற்றுப் போக்கையும் இன்னும் பல விளைவுகளையும் உண்டாக்கவல்லது. மேலும் Shigella, Vibrio Cholerae, Bacillus Cereus போன்றவை கொலரா போன்ற வயிற்றுக் போக்கினை உண்டாக்கி உயிராபத்தை விளைவிப்பனவாகும்.

பக்றீரியாக்கள் மட்டுமல்ல வைரஸ் கிருமிகளும் குறிப்பாக 'ஹெப்பற்றைற்றிஸ்-ஏ' என்ற வைரஸ் உணவுகளால் பரவி உணவை நஞ்சாக்கி உடலைப் பாதிக்கிறது. இதனால் செங்கமாரி அல்லது காமாலை என்ற ஈரல் அழற்ச்சி நோய் உண்டாகிறது. அதுமட்டுமல்ல பலவிதமான பூஞ்சணம் அல்லது காளான் வகைகிருமிகளாலும் இந்த உணவு நஞ்சாதல் உண்டாகிறது. Mycotoxins என்ற ஒரு பூஞ்சணத்தைால் இரண்டாம் உலகப் போரின்போது சோவியத் ரஷ்யாவில் 5000 பேர் இறந்துபோன வரலாறுகளும் உள்ளன. இது பைகளில் அடைக்கப்பட்ட Nuts என்ற கடலை வகைகள் மூலம் பரவியதாம். இன்னும் Toxoplasmosis என்ற நஞ்சாதல் Toxoplasm Gondie என்ற ஒருவகை கிருமிகளால் இறைச்சி மூலம் மனிதனுக்கு தொற்றி பரவுகிறது. இவற்றினால் உணவு நஞ்சாதல் மட்டுமல்ல புற்றுநோயும் வரலாம். உணவு நஞ்சாதல் என்ற நோயினால் தனிநபர் மட்டுமல்ல பலர் பாதிக்கப்படுகின்றனர். ஒரே நேரத்தில் பலருக்கும் உடனடியாகத் தொற்றிக்கொள்ளும். இதனால் 12 முதல் 36 மணித்தியாலத்திற்குள் உடலில் பாதிப்புகளை உண்டாக்கும்.

பொதுவான குணங்குறிகள் என்று பார்க்கும்



போல் யோசேப்
ஹோமியோ மருத்துவ நிபுணர்

போது கடுமையான வயிற்றுவலி, வாந்தி, வயிற்றோட்டம், சில நேரங்களில் இரத்தம் கலந்தவயிற்றுப் போக்கு, காய்ச்சல், தலையிடி, ஒவ்வாமை, அலர்ஜி, தோல்நோய்கள், போன்றவையும் முக்கியமாக வாந்தி, வயிற்றோட்டம் இருப்பதால் உடலில் நீரிழப்பு ஏற்பட்டு மயக்கம், மரணம் என்பனவும் ஏற்படலாம். எனவே உணவு நஞ்சாதல் என்பதை ஏதோ சாதாரணமானது என எண்ணாமல் உடனடி அவசர சிகிச்சைமுறைகள் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது.

உணவுப்பொருட்கள் இன்று பலநாடுகளுக்கும் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுவதால் அதிகமாக மற்ற நாடுகளுக்கு விரைவில் பரவிவிடுகிறது. மேலும் உணவுப்பொருட்கள் பெரும்பாலும் பெரிய பண்ணைகளில் தயார் செய்யப்படுகிறது. இப்படி தயார் செய்யப்படுவதால் விலங்கினங்களிலிருந்து இலகுவில் உணவில் நோய் தொற்றிக்கொள்கிறது. மற்றும் உணவு தயார்ப்படுத்தும், பதப்படுத்தும் முறைகளாலும், கடையுணவுகள் மூலமும் இலகுவில் பலருக்குப் பரவிக்கொள்கிறது. மேற்குறிப்பிட்ட இடங்களில் பணிபுரிவர்களில் ஒருவருக்கு இருந்தாலும் அது உணவு மூலம் இலகுவாக மற்றவர்களுக்கும் தொற்றிக் கொள்ளும் அபாயம் உண்டு.

ஏதாவது ஒரு இடத்தில் அல்லது நபருக்கு உணவு நஞ்சாதல் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக அவர் சாப்பிட்ட உணவு, அது எங்கிருந்து பெறப்பட்டது, போன்ற விபரங்களுடன் அந்த உணவின் மாதிரியும் வைத்தியரிடம் காண்பிக்க வேண்டும்.

நோயாளியின் வாந்தி, மலம் போன்றவற்றின் மாதிரிகளை எடுத்து நுண்கிருமிகள் அல்லது எத்தகைய Toxins அதிலுள்ளது என்பதற்கான பரிசோதனைகள் செய்து கண்டுபிடிக்கப்படுகிறது. அதிமட்டுமல்ல, அங்கு பண்புரி வோரிடமும் இதுபோன்ற பரிசோதனை செய்யப்படுகிறது.

உணவு நஞ்சாதலுக்கு காரணமான கிருமிகள் சிலரிடம் ஏற்கனவே இருக்கும் அவர்களிடம் எந்தவிதமான குணங்குறிகள் ஏதும் காணப்படாது. நோயின் தாக்கம் என்பது அவர்களிடம் இல்லை என்றே சொல்லலாம். அவர்கள் தான் மிகவும் முக்கியமாக கருதப்பட வேண்டியவர்கள். இவர்களைத்தான் Carriers அல்லது 'காவிகள்' என்று மருத்துவத்தில் அழைப்பது வழக்கம்.

ஒருமுறை லண்டனில் ஒரு குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், உறவினர்கள் என்று நூற்றுக்கணக்கானவர்களுக்கு தைபொயிற் என்ற நெருப்புக்காய்ச்சல் நோய் பரவியதாம். இது எப்படி இவ்வளவு விரைவாக பரவியது, யாரிடமிருந்து முதலில் மற்றவர்களுக்கு

*தொடர்தல் 30ம் பக்கம்*

கரவெட்டி ஒன்றியம், கனடா

**கோடைகால ஒன்றுகூடல்**

ஒகஸ்ட் 13
சனிக்கிழமை காலை 10:00 மணி முதல்
**Morningside Park Area # 2 இல் நடைபெறுகின்றது.**
கரவெட்டி மக்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் அழைக்கப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு: 416 297 9681

**தமிழ், ஆங்கில தட்டச்சு**

தமிழ், ஆங்கில தட்டச்சுத் தேவைகளுக்கு அழையுங்கள்
**Tamil / English Typing**

**Mrs. S.Yaso - 647 8592181**

# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்
# Mortgage Life Insurance

### வங்கிக் கடன் காப்புறுதி

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

### லண்டன் லைஃப் காப்புறுதி

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம்** B. Eng
சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்
**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
**300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3**

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**





SENIOR HOME WITH 7 ROOMS
WITH ZONING 5,50000.00



Plaza in Toronto 1.5 million



BUILD YOU DREAM RESTAURANT
WITH THE BUILDING PERMIT
$699,900



DONUT SHOP IN MARKHAM
$249,000

சிறப்புத்தேவையுள்ள பிள்ளைகளை இனங்காணல் (Identifying Special Needs children)

# தனியாள் கல்வித் திட்டம்

## (Individual Education Plan)

**தொடர் - 16**

ஜீவா திசைராஜா



தனியாள் கல்வித் திட்டம் என்பது ஓர் எழுத்து வடிவிலான திட்டமாகும். ஓர் தனியான அசாதாரண மாணவனின் பலங்களையும் (Strengths) தேவைகளையும் (Needs) இனங்காணுவதுடன், அப்பிள்ளையின் தேவைகளைச் சந்திப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் சிறப்புக் கல்வி நிகழ்ச்சித் திட்ட (Special Education Program) சேவைகளை விவரிப்பதும் எவ்வாறு இந்த நிகழ்ச்சித் திட்டங்களும் சேவைகளும் வழங்கப்படுகின்றன என்பதையும் விளக்கும் ஆவணமாகும். இது மாணவரின் முன்னேற்றத்தையும் விவரிக்கும்.

திறன்கள் தாமதித்த (Delayed skills) அல்லது ஏனைய இயலாத் தன்மைகளுள்ள பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் அரசாங்கப் பாடசாலைகளில் இலவசமாக வழங்கப்படும் தனிப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை (Individualized Education Program) சிறப்பான சேவைகளின் கீழ் பெறுவதற்கு தகுதி பெற்றவர்களாக இருப்பர். பெற்றோர் இச் சேவைகளை எவ்வாறு பெறுவது என்பதை விளங்கிக் கொண்டிருத்தலானது, அவர்கள் தமது பிள்ளைகட்கு ஆதரவாக இருப்பதற்கு உதவியாக இருக்கும். கல்வியாளர்களுடன் பெற்றோர் இணைந்து தனியாக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை (IEP) - பிள்ளைகள் பாடசாலையில் வெற்றிகரமாக செயல்படுவதற்காக உருவாக்கலாம்.

ஒரு பாடசாலை வருடத்தின்போது பிள்ளைக்காக எத்தகைய இலக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்பதுடன் பிள்ளைக்கு ஏதாவது சிறப்பான ஆதரவு தேவையா என்பதையும் இத்திட்டம் விளக்கும்.

கற்றலிலும் செயற்படுவதிலும் (Learning and functioning) கஷ்டத்தை எதிர்நோக்குவதுடன் ஓர் சிறப்பு தேவையுடனான மாணவர் இனங்காணப்படும்போது இம்மாணவன் IEP இற்கு பொருத்தமான மாணவனாகிறார். பாடசாலையில் கற்பதற்கு கஷ்டப்படும் மாணவர்கள் ஆதரவு சேவைகட்கு (Support Services) தகுதி பெற்றவர்கள் ஆவர். இவர்கள் ஓர் சிறப்பான வழியில் கற்பதற்கு அனுமதிக்கப்படுவர். சிறப்புத் தேவையுடனான மாணவர்கள் எனும் போது, இவர்கள் பின்வரும் வகைகளுள் அடங்குவர்:

- கற்றல் இயலாத் தன்மைகள் (Learning disabilities)
- கவனப்பற்றாக்குறை உயர் செயற்பாட்டு ஒழுங்கீனம் (Attention deficit hyperactivity disorder – ADHD)
- உணர்வு சார்ந்த ஒழுங்கீனங்கள் (Emotional disorder)
- அறிதல் சார்ந்த சவால்கள் (Cognitive challenges)
- மருட்சி நிலை (Autism)
- செவிப்புலன் குறைபாடு (Hearing impairment)
- கட்புலக் குறைபாடு (Visual impairment)
- பேச்சு அல்லது மொழியில் இயலாத் தன்மைகள் (Speech or language impairment)
- அபிவிருத்தி தாமதங்கள் (Developmental delay)

ஒரு தனியாள் கல்வித் திட்டமானது மாணவரின் பலங்கள், ஆர்வங்கள், தேவைகளை முழுமையாக மதிப்பீடு செய்ததன் அடிப்படையில் அமைய வேண்டும். இது மாணவரின் சிறப்பான இலக்குகளையும் எதிர்பார்ப்புகளையும் இனங்காண வேண்டும். அத்துடன் மாணவருக்கான திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளையும் எதிர்பார்ப்புக்களையும் அடைவதற்கு சிறப்பு கல்வித் திட்டம் எவ்வாறு உதவுகின்றது என விளக்க வேண்டும். தொடர்ந்தேர்ச்சியான மதிப்பீடுகளின் (Assessment and evaluations) முடிவுகள் மூலம் இது தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.

> “ தமது பிள்ளை கல்வியில் பின்தங்கியிருக்கின்றது என்பதை பெற்றோர் ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. IEP ஆனது மாணவரின் முன்னேற்றத்தையே நோக்கமாகக்கொண்டது. தனியார் tuition வகுப்புகளிலும் விட மேலான பலன்களைத் தருவதே IEP ஆகும். ”

ஒரு மாணவரின் IEP ஆனது ஓர் ஒருங்கிணைந்த முறையில் (Collaborative manner) உருவாக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு, அமுல்படுத்தப்பட வேண்டும். ஒரு மாணவனின் கல்வி சார் வளர்ச்சியானது, பரஸ்பர முயற்சிகள், ஆசிரிய - மாணவ - பெற்றோருக்கிடையிலான நெருக்கமான தொடர்பாடலில், மாணவர், மாணவரின் பெற்றோர், பாடசாலை, சமூகம், மாணவருடன் ஈடுபட்டிருக்கும் ஏனைய நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் ஆகியோரின் பரஸ்பர முயற்சியின் ஊடாக நன்கு நிறைவேற்றப்பட முடியும். IEPஆனது மாணவருடன் ஈடுபட்டுள்ள அனைவரும் ஒருங்கிணைந்து சேவை செய்யவும் மாணவரின் முன்னேற்றம், பெறுபேறுகளை விருத்தி செய்வதற்குமான ஓர் செயற்திட்டத்தை உருவாக்குவதற்காக அனைவரும் ஒருங்கிணைந்து வேலை செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. சுருக்கமாகக் கூறின்:

- இது மாணவரின் வளர்ச்சியை கண்காணித்து அது தொடர்பாக உரையாடுவதற்கு உதவும் ஓர் கருவியாக அமைகின்றது.
- பாடசாலை ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படும் ஓர் செயற்திட்டமாகும்.
- தேவைக்கேற்றவாறு மாற்றியமைக்கக் கூடிய ஓர் செயற்திட்டமாகும்.
- மாணவரின் பொறுப்புத் தன்மையை மதிப்பிடும் ஓர் கருவி, மாணவரை அவனது இலக்குகளை - எதிர்பார்ப்புக்களை சந்திக்கச் செய்வதற்கு மாணவருக்கு உதவுவதன் ஓர் திட்டத்தின் கீழ் மாணவர், அவரது பெற்றோர், மற்றும் பொறுப்புக்கள் உள்ள அனைவரும் தமது பொறுப்புக்களை உணர்ந்து நடப்பதற்கு உதவும் ஓர் கருவியாகும்.
- இச்செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதிப்படுத்தும் ஓர் ஆவணமாகும்.
- இந்த ஆவணமானது மாணவரது தேர்ச்சி அறிக்கையுடன் இணைந்து பயன்படுத்தப்பட வேண்டும்.
- பிள்ளைக்கு கற்பிக்கப்படும் அனைத்தையும் இந்த ஆவணம் விவரிக்கும்
- எல்லா மணவருக்குமான ஓர் கல்வித் திட்டம் அல்லது எதிர்பார்ப்புகளின் ஓர் தொகுதி
- ஆசிரியர்களின் வினைத்திறனை (effectiveness) கண்காணிக்கும் ஓர் வழி
- ஓர் நாளாந்த திட்டம்

ஓர் IEP என்பது மாணவரின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டது. பல்வேறு காரணங்களுக்காக கல்வியில் பின்தங்கிய மாணவரின் கல்விநிலையை முன்னேற்றும் நோக்கமாகக் கொண்டதே இத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவரின் தேவைக்கும் ஏற்ப கற்பித்தல், பரீட்சிக்கும் முறைகள், வகுப்பறைச் சூழலில் மாற்றங்கள் என்பன செய்யப்படும்.

பொதுவாக தனியாள் கல்வித்திட்டத்தின் கீழ் (IEP) பிள்ளைகளை சேர்க்க வேண்டும் என பாடசாலையில் கூறப்படும்போது பெற்றோர் அதனை விரும்புவதில்லை. தமது பிள்ளை கல்வியில் பின்தங்கியிருக்கின்றது என்பதை பெரும்பாலான பெற்றோர் ஏற்றுக் கொள்ள முன்வருவதில்லை. IEP ஆனது மாணவரின் முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்டது. எவ்வாறு நீங்கள் உங்கள் பிள்ளைக்கு காசை செலவழித்து தனியார் வகுப்புகளில் (Private tuition) சேர்க்கிறீர்களோ கிட்டத்தட்ட அதை விட மேலான பலன் களைத் தருவதே IEP ஆகும். இங்கு மாணவரின் தேவைக்கேற்ப வகுப்பறைச் சூழல், கற்பிக்கும் முறைகள், பரீட்சை முறைகள் என்பன மாற்றியமைக்கப்படுகின்றன. மாணவரில் சிறப்புத் தேவை உள்ளவர்கள் இனங்காணப்பட்டு மாணவரின் தேவைக்கேற்ப வகுப்பில் பின்வரும் வசதிகள் (Accommodation) செய்யப்படும்.


### கற்பித்தல் முறைகளில் வசதி செய்தல் (Instructional Accommodations):

- சமவயது மாணவர்கள்/ நண்பர்கள் கற்பதற்கு உதவுதல் (Buddy/Peer tutoring)
- தனியாக (One on one) அல்லது குழுக்களாக கற்பித்தல்
- குறிப்பு எடுப்பதில் உதவுதல்
- குறிப்பு எடுக்கின்றபோது இன்னுமோர் பிரதியையும் எடுத்து உதவுதல்
- ஊக்குவிப்புக்களை வழங்குதல்
- குழுக்களாக இயங்கச் செய்தல்
- முன்னேற்றமடைந்த தொழில் நுட்பங்களை பயன்படுத்த அனுமதித்தல். உதாரணமாக கணினியின் முன்னால் அமர்ந்து பேசும்போது அதனை தன்னியக்கமாக எழுத்து வடிவாக்கல் (Assistive technology – text to speech software)
- வரைபடங்கள் மூலம் கற்றலை இலகுவாக்கல்
- வாய்மொழி மூலமல்லாத சைகைகளை தேவைக்கேற்ப பயன்படுத்தல்
- அடிக்கடி சிறிய இடைவேளைகளை வழங்கல்
- கற்பித்தல் உபகரணங்கள் பயன்படுத்தல்
- அறிவுறுத்தல்களை மீண்டும் மீண்டும் கூறல்
- கூறப்படும் அறிவுறுத்தல்கள் மாணவருக்கு விளங்காவிடில் அதனை வேறு வழியில் விளக்குதல்
- புத்தகங்களை ஒலிநாடாக்களில் பதிவு செய்து கேட்பதற்கு உதவுதல்

### சூழலில் மாற்றங்களை ஏற்படுத்தல் (Environmental accommodations)

மாணவருக்கு ஏற்ற விதமாக அவர்களது

தொடர்தல் 30ம் பக்கம்

நிதானம், நம்பகத்தன்மை, அனுபவத்துடன் கூடிய சேவை

Das Narayanasamy
Mortgage Broker
416-543-6614
Fax: 1-888-511-8960, E-mail: dasn@rmabroker.ca
Lic# M08007147

RMA
REAL MORTGAGE ASSOCIATES
Real Mortgage Associates
Licence No: 10464

# உள ஆரோக்கியத்தில் வீடு



புஷ்பா
**கனகரட்ணம்**
- உளவியல் நிபுணர் -

புலம் பெயர்ந்ததோடு நம்மில் பலர் வீடு, வாசல், காணி என்று; எமது என்று நினைத்த பலவற்றையும் விட்டு அந்தநாள் ஞாபகங்களை மாத்திரமே சுமந்து கொண்டு இருக்கிறோம். இன்று அடுக்குக் கட்டிடங்களிலும் apartmentsஇலும் எங்கள் வாழ்க்கை அடக்கப்பட்டு விட்டது.

இன்றைய புலம் பெயர்ந்த சூழலில் எம் வீட்டைச்சூழ கட்டமைக்கப்பட்டுள்ள சுற்றாடல் எமக்கு எந்த அளவுக்கு ஆரோக்கியத்தையும் அமைதியையும் பாதுகாப்பையும் தருகிறது? வீடு ஒரு அடிப்படைத் தேவை. அத்தோடு, அண்மையில் இருக்கும் மற்றைய வீடுகளுடன் சேர்த்து ஒரு சமூக, கூட்டு வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகிறது. உளவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் எம் வீட்டை மையப்படுத்தித்தான் நாம் திசை, வெளி (space) சார்ந்து யோசிக்கிறோம்.

வீடும் வீடு சார்ந்த சூழலும் எம் உடல் சார்ந்த ஆரோக்கியத்திற்கு முக்கியம் என்று எம்மில் பலருக்கு தெரிந்திருக்கலாம். உதாரணமாக அரசாங்க வீடுகளில் (government housing) வசிப்பவர்களில் 21.8% பேருக்கு Asthma வரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. இதுவே தனி வீடுகளில் 0.5% சாத்தியக்கூறு தான். கரப்பான் பூச்சிகள், எலிகள், மற்றும் ஒழுக்கு அரசாங்க வீடுகளில் பிரச்சினையாக இருக்கும். இதேபோல் உடல் பருமனிற்கும் (Obesity) வீடு சார்ந்த சுற்றாடலுக்கும் தொடர்பிருக்கலாம். வீட்டின் அருகாமையில் super markets (பலசரக்குக் கடைகள்) இருப்பது, convenience stores (மூலைக்கடைகள்) இருப்பதைவிட ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களுக்கு ஏதுவாகிறது. அதுபோல் வீட்டைச் சூழ நடக்கும் வசதிகள் இருப்பதும் உதவுகிறது. வீட்டின் உட்புற, வெளிப்புற கட்டமைப்புகளில் உடைபாடுகள், சேதங்கள் இருப்பதுகூட உடற் பருமன் சார்ந்த பிரச்சினையை கொண்டு வரும். ஏனெனில் வீட்டினுள்ளே சேதம் இருக்கையில் ஒழுங்கான முறையில் உணவை சமைக்கவோ எடுத்து வைக்கவோ தடைகள் இருக்கும். நடை பழகும் வயதில் உள்ள குழந்தைகளின் நடமாட்டத்தையும் இது குறைக்கும். சுற்றுப்புற கட்டடிடங்களில் சேதாரம் இருக்கும் போது ஒரு பாதுகாப்பின்மையை அது ஏற்படுத்தும். வெளி நடமாட்டத்தை கட்டுப்படுத்தும். உணவுக் கொள்வனவையும் பாதிக்கும். உளவியல் ரீதியாக வெளி உலகப் பிணைப்பு குறையும் போது மனஅழுத்தமும் ஏற்படலாம். ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கங்கள் மற்றும் உடற்பயிற்சி சந்தர்ப்பங்கள் குறையும் போது உடற்பருமன் விளைவாகலாம்.

## வாழும் சூழலுக்கும் உளநலத்திற்குமான தொடர்பு:

நாம் வாழும் கட்டிட அமைப்புகளை பார்த்தோமானால் உயர் மாடிக் கட்டிடங்கள் (high-rise housing) பெண்கள் மற்றும் குழந்தைகளின் உளநலத்தில் ஒரு எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் கருதுகின்றன. வீட்டினுள் போதிய பகல் வெளிச்சமின்மை மன அழுத்தத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. வெளிச்சப்தங்கள் (போக்குவரத்து, விமானநிலையங்கள்), மற்றும் வீட்டினுள் அதிகம் பேர் வசிப்பது போன்ற காரணிகள் சற்றே மன சஞ்சலத்தை ஏற்படுத்தலாம். ஆனால் உளநோய்களோடு தொடர்பு படுத்தப்படவில்லை. காற்றை மாசுபடுத்தும், நச்சுப்படுத்தும் சில காரணிகள், எம் நடைமுறைக் குழப்பங்கள், கோபம் போன்றவற்றுக்கு தூண்டுகோலாக இருக்கலாம். உளநோய் வைத்தியசாலைகளில்கூட நோயாளிகளின் நலம் அங்குள்ள தளபாட அமைப்புகள் மற்றும் தனிமைக்கான (Privacy) வசதி சார்ந்து மாறுபடலாம். வேறு சில ஆய்வுகள் எப்படி வீடுகளில் வெளிப்புறத்தில் இருக்கும் அமர்வதற்கான கட்டிட அமைப்புகள் (Porches) மற்றும் யன்னல்கள், முதியோர்களின் சமூக ஆதரவு பெறும் உணர்வை அதிகரிக்கின்றது என்பதை காட்டுகின்றன. வீட்டின் உட்புறத்தில் இருந்து பார்க்கக்கூடிய யன்னல்கள் இத்தகைய ஒரு தொடர்பை காட்டவில்லை. வாழும் இடத்தோடும் சூழலோடும் ஒரு இணைப்பு இருக்கும் உணர்வு (sense of community) உங்கள் வீட்டைச் சூழ நடக்கும் வசதிகள் இருக்கும் போது அதிகரிக்கிறது. நடப்பது எனும்போது தேவை நோக்கி நடப்பது அல்ல. அதவாது பேருந்து நிலையம் அருகில் இருந்தால் வேலைக்கு செல்ல பலரும் நடப்பார்கள். ஆனால் பொழுது போக்காக நடக்கும் சந்தர்ப்பம் இருக்கும் சுற்றாடல்களிலேயே சமூக இணைப்பையும், தொடர்பாடலையும் கூடுதலாக பார்க்கக்கூடியதாக இருக்கிறது. வீட்டைச் சுற்றிய நிலப்பரப்பு பல்வேறு காரணங்களுக்காக பாவனைக்கு விடப்படும்போது நடப்பதற்கான சந்தர்ப்பங்களும் அதிகரிக்கிறது. பழமையான சுற்றாடல்களில் வீதிகளுக்கான தொடர்பு அதிகமாக இருக்கிறது. சில இடங்கள் நெருக்கமாகவும் சில இடங்கள் பரவலாகவும் இருக்கும். இதனால் நடப்பதற்கான வசதிகள் அதிகரிக்கவும், மக்களிடையே தொடர்பாடல் அதிகமாக இருக்கவும் ஏதுவாகின்றது.

ஒரு மூலைக்கடை ஒன்று இருக்கும் போது அது அங்கு வாழும் மக்களை இணைக்கும் இடமாக, தொடர்புகளை ஏற்படுத்தி சமூகப் பிணைப்பை அதிகரிக்கும் இடமாக அமையலாம். அதுவே வணிகத்தலங்கள் என்று அதிகரிக்கும் போது வேற்று மனிதர்கள் (அந்த இடத்தை சாராத மனிதர்கள்) நடமாட்டம் அதிகரிக்கும். ‘எங்கள் இடம்’ என்ற உணர்வையும், சமூகப்பிணைப்பையும் அது பாதிக்கக்கூடும். அத்தோடு, வணிகத்தலங்கள் அதிகரிக்க, போக்குவரத்தும் அதிகரிக்கும். அதிக நடமாட்டம் கூடிய சாலைகளில் வாழ்பவர்கள் பொதுவாகவே தம் அயலவர்களை தெரியாதவர்களாக இருக்கிறார்கள். போக்குவரத்தும், அதிக நடமாட்டமும், வேற்று மனிதர்களும், எங்களை அயலவர்களிடம் இருந்தும், வெளியில் நாம் செலவழிக்கும் நேரத்தை குறைப்பதினால் சமூக பிணைப்புகளில் இருந்தும், ஓரளவு துண்டிக்கத்தான் செய்கிறது என்பதை அனுமானிக்கலாம்.

பரந்த அளவிலான வாகனத்தரிப்பிடங்கள் (surface parking) இருப்பது மனித முக்கியத்துவத்தையும் அயலவர்கள் இடையான தொடர்பையும் குறைக்கிறது. அதுவே வணிக நிலையங்கள் அல்லது கடைத் தெருக்கள் நடப்பதற்கு உரிய வசதி உடையனவாகவும் குறைந்த வாகனத் தரிப்புகள் கொண்டனவாகவும் இருக்கும் போது, அது எமது இடம் என்ற உணர்வை அங்கு வாழ்பவர்களுக்கு உருவாக்க முடியும். கடைகளையும் வேறு சேவைகளையும் பெறக் கூடியதாக, அதே சமயம் இவை தெருவிற்கு அண்மையாக, வாகனத்தரிப்பிடங்கள் குறைவாக இருக்கும் வகையில் வடிவமைக்கும் போது சுற்றாடல் சமூகத் தொடர்பையும், பிணைப்பையும் அதிகரிக்க உதவலாம். சமூகப் பிணைப்பும், தொடர்பும் ஆரோக்கியமான உடலுக்கும் மனதுக்கும் உதவுகிறது. சொந்தவீடு வைத்திருப்பது சமூகப்பிணைப்புடன் தொடர்புபட்டு இருப்பதாக ஆய்வுகள் அனுமானித்தாலும் ஒரு இடத்தில் வாழும் காலம் இந்த தொடர்பினை விளக்கவில்லை.

## பாதுகாப்பான வாழ்க்கைக் சூழல்:

உண்மையான ஆபத்து நடைபெறும் தன்மையைவிட ஆபத்து (crime) நடைபெறுமோ என்ற பயம்தான் எம்மத்தியில் அதிகம். பயத்திற்கும் எங்கள் உளநலனுக்கும் நிறைய தொடர்பு இருக்கிறது. அத்தோடு பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கிறோம் என்ற எண்ணம் எங்கள் சமூகத் தொடர்புகளை, மற்றும் அண்டை, அயலுடனான எங்கள் பிணைப்பை குறைக்கும். இது எங்கள் சமூகப் பங்களிப்பையும் நடமாட்டத்தையும் குறைக்கும். ஆபத்து நடைபெறுமோ என்ற பயத்திற்கும் எங்கள் உடல் ஆரோக்கியத்திற்குமே நிறைய தொடர்பு இருக்கிறது. மன உளைச்சல் (stress) சார்ந்த தொழிற்பாடுகள் உடலில் அதிகமாக தூண்டப்படுவது நோய்களை உருவாக்கலாம். உதாரணமாக, சுற்றாடலில் பாவிக்கப்படாத கட்டிடங்கள், குப்பை, உடைபாடுகள், மற்றும் சுவர் சித்திரங்கள் (graffiti) பாதுகாப்பற்ற

*தொடர்தல் 55ம் பக்கம்*

> **“ புல்வெளிகளும் மரங்களும், மனக்களைப்பை குறைக்க உதவுகின்றன. மனக்களைப்பு வன்முறையை துண்டும் ஒரு உளவியல் காரணியாக கருதப்படுகிறது. பச்சையான சூழல் பாதுகாப்பான உணர்வை தூண்டுகிறது. ”**

RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE
Monte Carlo Corporate Centre
7045 Edwards Blvd., Suite 201 Mississauga, ON L5S 1X2

**For sellers,**
• 1% rebate on listing commission
• Feature sheet • Staging • Open houses
**For buyers,**
• free home warranty available for 1 year

•Mississauga, Oakville, Burlington, Hamilton & surrounding areas

•Affordability, consistency and growth are just some of the terms that describe the **HAMILTON**

•For your Real Estate needs call **WEST SIDE ALAN**




**ALAN SIVASAMBU**
BROKER

**OFFICE: 905 565 9200, CELL: 416 998 2829**
FAX: 905 565 6677
alansivasambu@gmail.com • www.rightathomerealty.com
Facebook S T ALAN HOMES




Famous LIGHTINGS
Home Decor
- CHANDELIERS
- CRYSTAL CHANDELIERS
- FLUSHMOUNTS
- TRACK LIGHTS
- ISLAND LIGHTS
- PENDANT LIGHTS
- BATHROOM VANITIES
- WALL SCONES
- TABLE LAMPS
- FLOOR LAMPS
- SHADES
- LED STRIPS
- CEILING FANS
- OUTDOOR LIGHTS
- OUTDOOR POSTS
- SPOT LIGHTS
- NUMBER SIGNS
- MAILBOXES
- MIRRORS
HWY 48
16th Ave
Markham Rd
9th Line
HWY 7
மிகப் பெரிய காட்சி அறையுடன் தமிழர் நிர்வாகத்தில்
SALE! UP TO 50% OFF
9291 HIGHWAY 48, (HWY 48 & 16TH) MARKHAM, ON L6E 1A3
TEL: (905) 471-7070


NEED MORE HOUSES FOR SALE
Markham & Sheppard
$339,900
3 Bedroom + 1 Bedroom Bsmt.
Middilfield & Finch
$249,900
GTA Sq. In Door Mall
534 Sq.Ft Completed
99 Balck Well
$114,900
Fully Renovated
2 Bed Rooms, 2 Wash Rooms
10 Tapscott
$129,900
Fully Renovated
2 Bedroom, 2 Wash Rooms
Sheppard & Neilson
$204,900
Condo Town House
3 Bed Rooms, 2 Wash Rooms
Steeles & 9th Line
$799,900
New House
5 Bed Rooms, 4 Wash Rooms
Meadowvale & Sheppard
SOLD
4 Bedroom, Bsmt. Apt.
$399,900
Neilson & Finch
SOLD
3 Bedroom, Finished Bsmt.
$264,900
Sheppard & Neilson
$369,900
Brick Detached Home
4 Bed Rooms, 4 Wash Rooms
Century 21
Affiliate Realty Inc. Brokerage*
PUNCH SOCKALINGAM
Broker
416-786-2463


INSURANCE SERVICE
Best Insurance for Low Rates
விதியை மதியால் வெல்ல முடியாது!
இன்றே ஒரு ஆயுட் காப்புறுதி செய்யுங்கள்
உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்
Thana Manickavasagar
Broker
Cell: 416-728-5772
Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
Home Equity Line of Credit
RRSP - Start from $25
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)
Business: 416-519-3896
thana7@gmail.com
www.thana.ca


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...
வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்
Ravi. Paramu
Broker
Direct: 416-262-4176
"The best compliment you can give me is the referral of your family and friends"
Thank you for your trust
$599,900
9th Line & Hoover Park
4 Bedrooms 4 WashRoom
HomeLife Today Realty Ltd., Brokerage*
Bus: 416-298-3200
31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor

# நீரும் சுகாதாரமும்

சிவாஜினி பாலராஜன்



இயற்கை தரும் பெரும் செல்வமான நீரினை நாம் பேணிப் பாதுகாக்கத் தவறுவதும் அதனால் ஏற்படும் பாரதுரமான விளைவுகளும் இந்தப் பூமிப் பந்தில் வாழும் மனித சமுதாயத்திற்கு மட்டுமன்றி அனைத்து ஜீவராசிகளுக்கும் அவற்றின் வாழ்வியலில் மாற்றத்தினையும் அழிவினையும் ஏற்படுத்துகின்றது. மாசுபட்ட நீரினை அருந்துவதால் மனிதருக்கு ஏற்படும் நோய்களும் பிணிகளும் பல வீடுகளிலும் அதைத் தொடர்ந்து பல நாடுகளிலும் போர் ஏற்படுத்தும் அழிவினை விடப் பாரதூரமான அழிவினை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இக்கட்டான நிலையில், சுத்தமான சுகாதாரமிக்க நீர் கிடைக்கப் பெற்றும் அதனை உடலின் தேவை அறிந்து அருந்தாது நோய்வாய்ப் படும் சிலரும் இருக்கத் தான் செய்கின்றார்கள். நீர் ஒரு நோய் காவியாக அல்லது நோய்க் காரணியாக பலவிதத்தில் இருக்கின்றது. மாசுபட்ட நீரினை அருந்துவதால் நீரானது நோய்காரணியாக அமைந்து விடுகின்றது. 'மாசுபட்ட' என்று சொல்லும் போது வேதியியல் (இரசாயனப்) பொருட் சேர்க்கையினால் மாசுபட்டிருக்கலாம் அல்லது மிருகங்களினாலோ வேறு நுண்ணுயிரிகளாலோ மாசுபடுத்தப்பட்டு இருக்கலாம். இதைவிட சுத்தமான நீர் இருந்தும் உடலின் தேவைக் கேற்ற நீரினை உடலுக்குத் தேவையான அளவு உட்கொள்ளாதவர்கள் என்னும் பட்டியலில் முக்கியமான அங்கம் வகிப்பவர்கள் வேலைக்குப் போகாது வீட்டில் இருக்கும் பெண்களும் முதியோரும் என்கிறது ஒரு ஆய்வு.

## தண்ணீர் தட்டுப்பாட்டினால் பெண்கள் அவதியுறுவது ஏன்?

வேலைக்குப் போகும் பெண்கள் தான் சாப்பாடு ஒழுங்காகச் சாப்பிடுவதில்லை நீர் குடிப்பதில்லை என்று எம்மில் பலர் நினைக்கின்றார்கள். வேலைக்குப் போகும் பெண்கள் பெரும்பாலும் நேரத்திற்கு சாப்பிட்டுவிடுவார்கள். சாப்பிடும் அளவு என்பதனைக் கருத்திற் கொண்டால் சில வேளைகளில் அது குறைவாக இருக்கலாம். ஆனால் எதையாவது 'கொறித்தாவது' வைப்பார்கள். காலையில் அவசரமாக வேலைக்குப் போகும் போது கிடைப்பதை வாயில் போட்டுக் கொண்டு ஓடுபவர்களும் உண்டு, ரயிலில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொள்பவர்களும் உண்டு. ஆக மிஞ்சி மிஞ்சிப் போனால் எதுவுமே முடியாதவர்கள் பழச்சாறு அருந்திவிட்டாவது தங்கள் வேலைக்குள் புகுந்துகொள்வார்கள். மேலும், ரயிலில் பயணம் செய்பவர்கள் ரயில் நிலையத்தில் இருக்கும் தேநீர் கடைகளில் கோப்பியும் சாண்ட்விச்சும் வாங்கிக் கொண்டு ரயிலில் வைத்துச் சாப்பிடுவார்கள். மதிய வேளையில் எல்லோரும் சாப்பிடப் போகும் போது தாங்களும் சாப்பிடுவார்கள். இரவு நிச்சயமாக ஏதாவது ஒன்றை சமைத்து குடும்பத்துடன் சாப்பிட்டுவிடுவார்கள்.

வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருக்கும் பெண்களில் (குடுப்பத் தலைவி) பெரும்பாலானோர் காலை உணவு உட்கொள்வதே இல்லை. ஒரு சிலர் மதிய உணவினைக் கூட உட்கொள்ளாது அடிக்கடி கோப்பி குடித்துக் கொண்டு காலத்தினை ஓட்டி விடுவார்கள். சாப்பிட்டால் வீட்டு வேலைகளைச் செய்ய முடியாது என்று தட்டிக் கழிப்பவர் ஏராளம். சாப்பாடே இந்த அளவிற்கு என்னும் போது தண்ணீர் பற்றிச் சொல்லவே வேண்டாம். சாப்பிடும் போதுதான் ஒரு கப் தண்ணீரோ என்னவோ குடிக்கின்றார்கள். வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருப்போரில் சில பெண்கள் மாத்திரமே கட்டாயமாகச் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கலாம். மேலும் நோய்வாய்ப்பட்டவர்களும் தங்கள் மருந்துகளை எடுக்க வேண்டும் என்னும் காரணத்தினாலேயே உணவு உட்கொள்வார்கள். ஆக மொத்தத்தில் பார்த்தால் இந்த வேலைக்குச் செல்லாமல் இருக்கும் பெண்களில் தான் நாம் கவனம் செலுத்த வேண்டும். (இதில் சிலர் விதிவிலக்காக இருக்கிறார்கள். வேலை முடிய வேண்டும் என்பதை விட இடைவிடாது தமிழ் தொலைக்காட்சி நிலையங்களால் அதிலும் முக்கியமாக இந்திய தொலைக்காட்சி நிலையங்களின் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக ஒளிபரப்பப்படும் நாடகம் பார்ப்பதால் சாப்பாட்டையும் நீரையும் தவற விடுபவர்களும் உண்டு) இவர்கள் சாப்பிடும் போதுதான் ஒரு கப் நீரே குடிக்கின்றார்கள். மற்றைய சமயங்களில் அவர்களாக நீர் குடிப்பது அரிதாகின்றது. வேலைக்குச் செல்பவர்களை விட வீட்டில் இருப்பவர்களுக்கு ஓய்வாக இருப்பதற்கு நேரமே கிடைப்பதில்லை.

அடுத்து முதியோரைப் பார்ப்போமானால் அவர்கள் நீர் அருந்துதல் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. சில சமயங்களில் வெளியில் எங்காவது செல்ல வேண்டிய தேவை இருக்கும் நாட்களில் நாங்கள் தண்ணீர் குடிப்பதை தவிர்த்துக் கொள்வதுண்டு. அதற்கு முக்கிய காரணமாக அமைவது கழிவறைப் பிரச்சினையே. இவ்வாறு நாங்களே தவிர்த்துக் கொள்ளும் போது முதியோரைக் கேட்கவா வேண்டும். வயது வந்தபின் அடிக்கடி கழிவறைப் பிரச்சனை இருக்கும். இத்துடன் அதிகம் நீரை அருந்தினால் அடிக்கடி கழிவறைக்குப் போகவேண்டி வந்துவிடும் என்று நீர் உள்ளெடுப்பதைக் குறைத்துக் கொள்கின்றார்கள். இதனால் இவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி இருக்கின்றது.

> “ போதியளவு நீரினை நீங்கள் உட்கொள்ளாவிடின் உங்களுக்கு வயதாகும்போது சிறுநீரகத்தின் தொழிற்பாடு குறைந்து போகின்றது. ”

கிட்டத்தட்ட எங்கள் உடம்பின் 60% நீரால் ஆக்கப்பட்டது. மனித மூளையானது 95% நீரையும், குருதி 82% நீரையும், நுரையீரல் 90% நீரையும் கொண்டது. ஒரு 2% நீர்க் குறைவு ஒரு மனிதரில் dehydration எனப் படும் உடல் வரட்சித் தன்மையினை உண்டாக்கி விடும். உடலின் நீர்த் தேவை நீர் அருந்துவதால் மாத்திரம் நிவர்த்திக்கப் படுவதில்லை. இதனால் எங்கள் உடலுக்குத் தேவையான நீரினை பழவகைகள், மரக்கறி வகைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். தோடம் பழம் கிட்டத்தட்ட 87% நீரைக் கொண்டுள்ளது. நீர் உடலின் தொழிற்பாட்டிற்கு மிகவும் தேவையானது. ஒரு வாகனம் எவ்வாறு பெற்றோல் இல்லாது இயங்க மாட்டாதோ அதே போல உடலானது நீரின்றி இயங்கமாட்டாது.

நீர் உடலின் பல பாகங்களில் உராய்வு நீக்கியாகத் தொழிற்படுவதோடு உமிழ் நீரின் அடிப்படைப் பொருளாக இருக்கின்றது. மூட்டுக்களைச் சுற்றி இருக்கும் பாயங்கள் உருவாகுவதற்கும் உடலின் வெப்பநிலையினை சமநிலைப்படுத்தி உடலை குளிர்விக்கவும் metabolism எனப்படும் ஜீவ தத்துவப் பரிணாமத்திற்கும் உடலிலிருந்து கழிவகற்றுவதற்கும் உதவுவதுடன் உடலின் பல பாகங்களுக்கும் ஒட்சிசனையும் ஓமோன்களையும் கடத்தவும் உதவுகின்றது. இவ்வாறு பலவிதமான இயக்கங்களுக்கு மாத்திரமன்றி நீர் பல்வேறு நோய்களிலிருந்து உடலைப் பாதுகாக்கவும் உதவுகின்றது.

## வயதுக்கும் உடம்பின் நீர் இருப்பிற்கும் இடையிலான தொடர்பு:

| வயது | நீர் |
|---|---|
| 4 மாத முளையம் (fetus) | 93% |
| 7 மாத முளையம் | 85% |
| பிறந்த குழந்தை | 80% |
| குழந்தை | 75% |
| வயது வந்தோர் | 70% |
| முதியோர் | 60% |

## எமது உடலிலிருந்து எவ்வாறு நீர் இழக்கப் படுகின்றது:

சுவாசத்தின் போதும், உடல் வியர்த்து வியர்வை ஆவியாகும் போதும், மல சலம் கழிக்கும் போதும் எமது உடலிலிருந்து நீர் இழக்கப் படுகின்றது. இவை சாதாரணமாக உடலிலிருந்து நீர் இழக்கப்படும் வழிகளேயன்றி இவற்றின் மூலம் பாரதூரமான அளவு நீர் இழக்கப்பட மாட்டாது. வயிற்றோட்டம், வாந்தி பேதி நோய் போன்றவற்றால் உடலிலிருந்து அளவுக்கதிகமான நீர் இழக்கப்படும்.

## ஒருவர் ஒரு நாளைக்கு எவ்வளவு நீரை உள்ளெடுக்க வேண்டும்?

ஒருவர் ஒருநாளைக்கு எவ்வளவு நீரை உட்ளெடுக்க வேண்டும் என்பதனைக் கணிப்பது தற்போது மிகவும் சுலபமானது. எத்தனையோ இணையத் தளங்களில் online water consumption calculators உண்டு. மேலும் இணையத்தளத்தில் இதனைப் பார்க்க முடியாதவர்கள் இரண்டு வழிகளில் தாங்கள் அருந்த வேண்டிய நீரின் அளவினைக் அறிந்து கொள்ளலாம்.


- ஒருவரின் உடல் நிறையினைக் கொண்டு அவர் அருந்த வேண்டிய நீரின் அளவினைக் கணிப்பிடலாம். ஒருவருடைய உடலின் நிறையானது 160 இறாத்தல்களாயின் அவர் 80 அவுன்சு நீரை உட்கொள்ள வேண்டும். இது எத்தனை கப் எனப் பார்ப்பதற்கு அவர் அருந்த வேண்டிய அவுன்சினை எட்டினால் வகுத்தால் எத்தனை கப் என்பது தெரியும். அதாவது 160 இறாத்தல் நிறை உடையவர் 80/8 = 10 கப் நீரினை ஒரு நாளைக்கு உள்ளெடுக்க வேண்டும். இவ்வாறு 10 கப் என்னும் போது நாம் அருந்தும் பழவகை, பால் போன்றவற்றினால் எமது உடலுக்குக் கிடைக்கும் நீரைத் தவிர்த்து கிட்டத்தட்ட ஆறு அல்லது ஏழு கப் வரையில் நாம் அருந்த வேண்டும்.
- இந்த இரண்டாவது முறையானது மிகவும் சிறந்த முறையாகக் கொள்ளப் படுகின்றது. ஆனால் இதில் ஒரு நடை முறைச் சிக்கல் காணப்படுகின்றது. அதாவது எத்தனை கலோரி எங்களால் உள்ளெடுக்கப் படுகின்றது என்பது தெரிந்தால் அதற்கேற்ப நீரினளவைக் கணித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு கலோரி உள்ளெடுப்பிற்கும் 0.034 அவுன்சு நீர் அருந்தப் பட வேண்டும்.

*தொடர்தல் 26ம் பக்கம்*

### பெருங்குடி மக்கள்:

பிரியாவிடைக்கும் மதுவோடு விருந்து, புதிதாக வருவோரை வரவேற்கவும் மதுவோடு விருந்து. பரவலான பழக்கம் இது. ஆனால், எப்போதாவது ஒரு தடவை வந்து போகும் படை அதிகாரிகள், இராஜதந்திரிகள், ஊடகர்கள், அரசியல்வாதிகளுக்கும் 2007 நடுப்பகுதியிலிருந்து 2010 நவம்பர் வரையில் Gordon's Gin, Bacardi Rum, விலையுயர்ந்த சிவப்பு, வெள்ளை வைன் வகைகள். Corona, Heineken, Beck's பியர் என்று குறைந்தது $20,000க்கும் அதிகமான பெறுமதியான பானங்களை ஊற்றிக்கொடுத்துச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. அது சரி – யார், எங்கே இப்படிச் செய்தார்கள்? ஆப்கானிஸ்தானின் காபூல் நகரத்துக் கனடியத் தூதரகத்தினரே இவ்வளவு தாராள மனம் படைத்தோர். தகவல் அறியும் சட்டத்தின் மூலம் The Canadian Press செய்தி நிறுவனம் காபூலிலுள்ள கனடியத் தூதரகத்திலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் இது.

திருப்தியான இல்லம்; முழுமையான சந்தோஷம்




Thavaraj Logasundaram
Sales Representative
thavarajl@yahoo.ca
Cell: 416 277 1453

HomeLife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated, REALTOR ®
HOMELIFE HIGHER STANDARDS
205 - 7 Eastvale Dirve,
Markham, ON L3S 4N8
Office: 905 201 9977

# அழகிய பூஞ்செடிகள்

# ஐறிஸ் / Iris

வீட்டுத் தோட்டம் - 42



செல்லையா சந்திரசேகரி

## அறிமுகம்:

ஐறிஸ் (Iris), குடும்பம் ஐறிடேசியேயியைச் (Family Iridaceae) சேர்ந்தது. ஏறக்குறைய 260 இனங்களையுடைய அழகிய பூக்கும் தாவரங்களாக விளங்குகின்றன. வானவில் எனப்படும் சொல்லின் கிரேக்க மொழிக் கருத்தின் அடிப்படையில் இதன் பெயர் அறி முகப்படுத்தப்படுகின்றது. அநேக இனங்களில் பலதரப்பட்ட நிறங்கள் காணப்படுவது முக்கிய இயல்பாகின்றது. இதனை விரும்பி விருத்தி செய்யும் தோட்டப்பிரியர் 'அதிஷ்டசாலிகள்' எனக் கருதப்படுவர். எல்லா ஐறிஸ் இனங்க ளையும் பொதுவான பெயராகிய 'ஐறிஸ்' என்றே அழைப்பார்கள். பரவலாக வடகோளப் பகுதிகளான ஐரோப்பிய புற்றரை பள்ளங்களிலும் ஆற்றோரங்களிலும் வடஆபிரிக்க, ஆசிய, வடஅமெரிக்க நாடுகளிலும் பரவியிருக்கின்றன. இதன் விளிப்பான நிறங்களை யுடைய பெரிய பூக்களினால் இன்று அதிக மான வீட்டுத்தோட்டங்களிலும் கரையோரச் செடிகளாகவும் கொத்துக் கொத்தாக பரந்த இடங்களிலும் வளர்க்கப்படுகின்றன.

## செடியைப்பற்றிய விபரம்:

செடிகள் எத்தகைய மண் வளத்திலும் வளர்க்கக் கூடியவை. நீர் ஓட்டம் உள்ள இடங்கள் சிறந்தவை. பூரணமான சூரியஒளி செடிவளர்ச்சிக்கு சாதகமாக இருக்கும். சதுப்பான நிலங்கள் வளர்ச்சிக்கு உகந்ததல்ல. செடிகள் ஆண்டுதோறும் திரும்பத் திரும்ப நிலைகொண்டு வளரக்கூடியவை. இவை குறித்த காலத்தில் இலைகள் உதிர்க்கும், பெரிய புதற் செடிகள் அல்லது சிறிய மரங்களாகும். இலையுதிர் காலத்தில் நிலக்கீழ்த் தண்டுகள் பிரிந்து பரவுகின்றன. இவற்றை அவ்வப்போது அல்லது பின்னர், இளவேனிற் கால முற்பகுதிகளில் வேறாக்கி பிரியமான இடங்களில் நட்டுவிடலாம். இரண்டு வகையான தொகுதிகளில் கிளங்குகள் உண்டு. ஒருவகை நிலக்கீழ்த்தண்டுகள். மற்றது சாதாரண கிளங்குகள். நிலக்கீழ்த்தண்டுகள் தடித்த தண்டுகளை உடையவை. நிலத்திற்கு மட்டமாக வளர்ந்து செல்லும். சாதாரண கிளங்குகள் சிறிதுகால இடைவேளைக்குப் பின்னர் தான் வளரக்கூடியவையாக இருககின்றன. செடிகள் கவர்ச்சியான அரிவாள்போன்ற தட்டையிலைகளைக் கொண்டிருப்பதும் பல தரப்பட்ட உயரங்களில் காணப்படுவதும் பூப்பதற்கு முன்னர் அழகாக இருப்பது குறிப்பிடத்தக்கது. செடிகள் கரையோரங்களை அலங்கரிப்பதால் தோட்டப்பிரியர்கள் அதனை வளர்க்கின்றனர். செடிகள் 3-10 அருவாள் போன்ற அமைப்பில் அடித்தள இலைகளைக் கொண்டிருக்கும். அடியானது திரட்சியான வடிவில் காணப்படும். தண்டானது கிளைகள் உள்ளதாகவும் சிலவேளைகளில் காணப்பட லாம். தண்டு கெட்டியாக, அல்லது துவார முள்ளதாக, அல்லது தட்டையாக இருக் கும். இளவேனிற்கால பிற்பகுதிகளிலிருந்து வெப்பகால முற்பகுதிவரை அழகான பூக்கள்





கிடைக்கின்றன. 2-3 கிழமைகள் பூக்கள் விரிவாகக் காணப்படும். சுலபமாக வளரக் கூடிய செடியாகும். ஐறிஸ், சாடிகளில் வைக்கப்பட்டு வீட்டின் உட்புறமாகவோ அல்லது வெளிப்புறமாகவோ வளர்க்கலாம்.

## பூக்கள்:

ஐறிஸ் பூ, அன்பின் பாத்திரமான கிறீக் தெய்வம் 'ஐறிஸ்' இன் காணிக்கையாக அமைகின்றது. பல நிறங்களான நீலம், செம்மஞ்சள், ஊதா, சிவப்பு, மஞ்சள், வெள்ளை நிறங்களில் செடிகள் பூக்களைத் தருகின்றன. பூக்கள் பூந்துணராக, நீளமான நேர்த்தண்டில் காணப்படுகின்றன. பூந்துணரில் 6 சோணைகளான பூக்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேலாக காணப்படும். இப்பூக்கள் சிறிய புன்னடிகளில் அல்லது அடியில்லாத-வாறு தோன்றுகின்றன. மூன்று சோணைகள் பரவலாக அல்லது (falls)தலை குனிந்தவாறு அதாவது விழுவதுபோல தொங்கியிருக்கும். இவை புல்லிகள் எனப்படும். எஞ்சிய மூன்று சோணைகள் குறுகியதாக மேல்நோக்கிய-வாறு காணப்படும். இவை அல்லிகள் எனப் படும். சோணைகள் எல்லாம் ஒரே மாதிரி-யான நிறங்களில் காணப்படலாம்.

சூலகம் அல்லிகளுக்கு மத்தியில் அமைந்-துள்ளது. சூலகத்தைச் சூழ்ந்து நீளமான கேசரங்கள் ஆறு காணப்படும். தம்பமானது நுனியில் பிரிந்து காணப்படும். பூக்கும் தாவ ரங்களும் பூச்சிகளின் மகரந்தச்சேர்க்கை-யையும் தொடர்புபடுத்தும் வகையில் ஐறிஸ் பூவானது ஒரு முக்கிய கவனமாகக் கருதப் படுகின்றது.

## பயன்கள்:

ஆரோக்கியமுள்ள வேர்களிலிருந்து தயா-ரித்து எடுத்த பானம், மதுபானமாகிய (wine) வைன் உடன் சேர்த்துத் தயாரித்த திரவம் உடலிலுள்ள வீக்கத்தை திறமையாகப் போக்-குகின்றது. வேறுபட்ட தோல் வியாதிகளை-யும் மாற்றவல்லது. நுரையீரல் தொடர்பான இருமல் சளி போன்றவற்றிற்கு வேரிலிருந்து தயாரித்த திரவம் பயன்படும். கிளங்குகள் அரைத்து வாசனைத் திரவமாக பயன்படுத்-துவார்கள். பூக்களும் நுரையீரல் வியாதி-களுக்கு பயன்படுகின்றன.

sekari.s@thaiveedu.com

■ ■ ■



**Family: Magnolaceae**

# மக்னொலியா மரம்

**(Botanical name: Magnolia soulangiana: Eng.name:Magnolia)**

**மக்னொலியா / Magnolia:** மக்னொலியேசியே குடும்பத்தில் ஒரு பெரிய வர்க்கமாக விளங்குகின்றது. இது, 210 பூக்கும் தாவர இனங்களைக் கொண்டிருக்கும். ஏறக்குறைய 1703 ஆண்டளவில் Charles Plumer என்பவர் Martinique Islandஇல் உள்ள பூக்குந் தாவரமரங்களோடு ஒன்றாகச் சேர்த்தார். பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த Pierre Magnol என்ற பிரபல தாவரவியாளருக்கு பின்னதாக அவரது பெயர் சார்பாக இம்மரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஒரு பழமையான மரமாகும். தேனீக்கள் தோன்றுவதற்கு முன்னரே அறிமுகமானது. இதனது பூக்கள் வண்டுகளால் மகரந்தச்சேர்க்கை நடை பெறும் வகையில் விருத்தி அடைந்துள்ளன. 20 மில்லியன் வருடங்களுக்கு முன்னதான மக்னோலியா அக்குமினேற்றா (Magnolia aquminata) என்ற இனத்தின் புதைந்து கிடக்கும் பதிந்தபடிமங்கள் ஆதார-மாக அமைகின்றது. வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, மேற்கிந்திய தீவுகள், ஆசியா போன்ற தேசங்களில் வளர்க்கப்படுகின்றன.

கனடாவைப் பொறுத்தமட்டில் எனது பார்வையில் நெடுஞ்சாலை வீதிகளோரங்களிலும் வீட்டு முகப்பு-களிலும் பூங்காவிலும் தென்படுகின்றன. மரமானது நெருங்கிய கிளைகளை விட்டு அடர்த்தியான ஒழுங்கில் காட்சியளிக்கும். தரப்பட்டுள்ள மரத்தின் படம் எனது வீட்டு முன் முகப்பில் இருப்பதுதான். இளவேனிற்கால முற்பகுதியிலேயே பூக்கள் தோன்றிவிடும். பூக்கள் குடைபோலப் பரவி மரத்தை மூடியிருக்கும். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். இரண்டு கிழமைகளில் பூக்கள் உதிர்ந்து விடும். பின்னரே இலைகள் தோன்றுகின்றன. எப்பொழுதும் பச்சை நிறமான அடர்த்தியாக இலைகள் பரந்திருக்கும். பூக்கள் கிண்ணம் போன்றவையாக வெள்ளை நிறத்தில் காணப்படும். சிலவேளைகளில் இளஞ்சிவப்பு நிறப்பூக்களும் காணப்படலாம். இளவேனிற்காலத்தில் சிலவேளைகளில் உறைபனி இருக்குமாகில் பூக்கள் உதிர்ந்துவிடும். கடுங்காற்று வீசும்வேளைகளில் இதழ்கள் உதிர்ந்துவிடும். வீடுகளில் இரு வகையான அழகிய பூக்களைத்தரும் இனங்கள் வளர்க்கப்படுகின்றன. சாதாரண உயரமுடையவை. இவையாவன: நட்சத்திர வடிவத்தில் பூக்களையுடையவை, கோப்பை வடிவில் பூக்களையுடையவை.

சீனாவில் Magnolia officianalis ஆயுள்வேத வைத்தியத்திற்கு உபயோகமாகும். மரப்பட்டை பயன்-படுத்தப்படும். சில இனங்கள்: M.stellata, M.soulangiana, M.denudata, M.kobus, M.hepapeta.

■ ■ ■

The Scarborough Hospital

# "IT'S TIME TO Talk"

***It's Time to Talk*** is a community service offered by The Scarborough Hospital, where our physicians, staff and allied healthcare workers offer expert advice on how to have difficult conversations with your loved ones. You are invited to attend our **free** health fair and forum. Parking, refreshments and a package of resource guides are included.

## Breaking Barriers: Stigma, Families and Mental Health

**WHEN**

**September 15, 2011**

**WHERE**

The Scarborough Hospital, General campus, Auditorium, 3050 Lawrence Avenue East

**HEALTH FAIR**

6:00 p.m. – 7:00 p.m.

**FORUM AND Q&A**

7:00 p.m. – 9:30 p.m.

**PLEASE RSVP**

Elaine, 416.431.8200 ext. 6661 or epolgar@tsh.to

**TOPICS AND SPEAKERS**

*Having the Conversation: Understanding Depression and Anxiety*
– Dr. Karen Shin, TSH Psychiatrist

*Who Should I Call for Help? Navigating the Mental Health System*
– Faiza Khalid-Khan and Jeanine Tuitt, TSH Social Workers

*Myths and Facts: Psychosis and Substance Abuse*
– Dr. Thomas Choy, TSH Psychiatrist and Roberto Mazzei, TSH Social Worker

*Dementia: A Few Key Points to Remember*
– Dr. Stephen Barsky, TSH Chief of Psychiatry and Shefali Raja, TSH Occupational Therapist

*Town Hall Update*
– Stephen Smith, Vice Chair, The Scarborough Hospital Board of Directors

**MODERATOR**

Dr. John Wright, President & CEO, The Scarborough Hospital

**SPACE IS LIMITED, SO PLEASE RESERVE YOUR SEAT TODAY.**

WWW.TSH.TO

# Nanthini Singarajah, AMP

**VERICO** THE MORTGAGE PRACTICE INC.

MORTGAGE AGENT
License #: M08005294

Brokerage #: 11156

TMP
THE MORTGAGE PRACTICE

*"Quick and easy answer to your lending needs"*

Tel: (905) 787-2027
Fax: (866) 903-4664

Cell: (416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca

30 Via Renzo Drive,
Suite 200, Richmond Hill,
ON L4S 0B8
**(Leslie/Elgin Mills)**

**HO:** 2425 Matheson Blvd E.,
8th Floor,
Mississauga,
ON L4W 5K4.

**Other Services**

- Income Tax
  - Personal
  - Business
  - Corporate
- Life Insurance
- RRSP
- RESP

**Specialize In**

- Residential Mortgage
- 1st Mortgage
- 2nd Mortgage
- Refinancing
- HELO (home equity line of credit)

Services available all over Canada

Alphaweb 416-2387222

# RAPID SECURITY

WE PROTECT YOU

"We'll Beat any Quote"

Indoor & Outdoor Guard for
Commercial
Residential
Retail
Healthcare
Finance Institution



S101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 **Office:** (416) 321-6777 **Tel:** (416) 841-1415

# New Midwest auto collision

**"Quality & service First"**

- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

**(416) 751-9280**
**260 Midwest Rd, Unit 8,**
**Scarborough, ON, M1P 3B4**
**newmidwestauto@gmail.com**

**Contact Person:**
**Ruban or Shan**






Alphaweb 416-238 7222

# Law Offices of Yaso Sinnadurai

# யசோ சின்னத்துரை சட்ட அலுவலகம்

**Barrister & Solicitor, Notary Public**



- Real Estate Law (Residential and Commercial)
- Business Law
- Wills & Powers of Attorney

2100 Ellesmere Road, Unit 202
Scarborough ON M1H 3B7
@ Markham & Ellesmere

3024 Hurontario Street, Unit 216
Mississauga ON L5B 4M4
@ Dundas & Hurontario St.

For Appointment, Please call:

**416 265 3456**



# Sesan Flooring Centre

WWW.SESANFLOORING.COM INFO@SESANFLOORING.COM


**Hardwood. Laminate. Stairs. Tiles. Natural Stone**

- Friendly & Professional Advice
- Quality Workmanship
- Quality & Designer Series Product

WE ARE AUTHORIZED DEALER FOR:

| HARDWOOD | TILES & MOSAIC |
|---|---|
| Satin Finish, Muskoka, Sunca | CERATEC Ceramic Tiles, terra verre |

SPECIAL SALE
Sale Price: $4.99
Reg: $6.25
Satin Finish Maple & Red Oak




Call Us For Your Free Estimate
Tel: 905.554.9199
9909 Highway 48, Unit:10, Markham ON. L6E 0B7
(Located South of Markham & Major Mackenzie)



First Choice Opportunity In
**Vaughan**
New condo Project
**Vaughan Metropolitan Centre**
**HWY 7 East of HWY 400**
**Pre Register with Us for the**
**First Choice.**





Condos At Wellinton West
**DownTown**
A New Concept For the Intelligent Urbanite
It's Not Just A Place.It's A State Of Mind.
Starting
from $302,900

**Kunasegar Nagalingam**
Sales Representative
Direct: **416-402-4545**

**Sujatha Kunasegar**
Sales Representative
Direct: **647-401-9644**





**HomeLife Today Realty Ltd.,** Brokerage**
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6,
Bus: 416-298-3200 , Fax: 416-298-3440
E-mail: sujatha.homelife@gmail.com
**Independently Owned and Operated.

HOMELIFE
HIGHER STANDARDS

We do not intent to solicit currently listed properties.

# RENU MOTORS Ltd.

AWARD WINNING USED CAR DEALERS

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**34 வருட அனுபவம்**



- We Sell Bank Repossed Cars
- Accident Vehicle Repair
- Computerized Painting
- Motor Vehicle Accident
- Traffic Tickets

HONDA
TOYOTA
GM-MINI VANS

தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
**Radha**

3030 Markham Road,
Markham and Passmore

**416.412.3838**



# மின்சாரச் செலவும் கட்டுப்பாடும்

## வீடும் விடியலும் - 64



**வேலா சுப்ரமணியம்**
- Certified Home Inspector -

### மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகள்:

பொதுப்படையாகக் கூறுவதானால் பாவனையில் இல்லாத உபகரணங்களை நிறுத்தி விடுங்கள். ("If You Aren't Using It - Shut It Off") இங்கு வானொலி, கம்பியூட்டர், குளிரூட்டிகள், தொலைக்காட்சி, உட்பட மின் விளக்குகளும் உள்ளடக்கப்படுகின்றது.

காலத்தின் மாற்றத்திற்கேற்ப எங்கள் பழக்க வழக்கங்களையும் நாங்கள் மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. அதாவது எதிர் காலத்தில் மின்சாரப் பாவனைக்கான கட்டணம் எவ்வளவு பாவிக்கின்றோம் என்ற அடிப்படையில் இல்லாது எப்போது? பாவிக்கின்றோம் என்ற அடிப்படையில் அறவிடப்பட இருக்கின்றது. அதாவது அதிகரித்த தேவையின் காரணமாக இரவில் பாவிக்கும் மின்சாரத்தை விட பகலில் பாவிக்கும் மின்சாரத்திற்கு இரட்டிப்பு கட்டணம் அறவிடப்பட இருக்கிறது. உதாரணமாக காலை 11 மணிக்கு 9.16 சதமாக / KWH இருக்கும் கட்டணம் மாலை 5 மணிக்கு 7.6 சதமாக / KWH இருக்கும் இரவு 10 மணிக்கு 4.2 சதமாக /KWH இருக்கும். சூரியன் மேலே உயர உயர கட்டணமும் கூடிப் பின்னர் மாலையில் குறைவடையத் தொடங்கும். சனி, ஞாயிறு தினங்களில் கட்டணம் மேலும் குறைவாக இருக்கும். இத்தகைய சூழலுக் கேற்றவாறு நாமும் எமது பழக்கவழக்கங்களை முடிந்தளவு மாற்றுவதன் மூலம் மிகுந்த பலனை அடையமுடியும்.

சில செயற்பாடுகளை கட்டணம் குறைந்த நேரங்களில் மேற் கொள்ளுவதன் மூலம் அதிக பலன் பெறமுடியும். உதாரணமாக உடுப்பு துவைத்தல், பாத்திரம் கழுவும் இயந்திரங்களைப் பாவித்தல், அதிக மின்சாரத்தை நுகரக் கூடிய பாண் தயாரிக்கும் இயந்திரங்களைப் பாவித்தல் அல்லது Baking செய்தல் போன்றவற்றை இரவு நேரத்திற்கு மாற்றி விடுதல் பலன் தரக்கூடியது. மேலும் கூறுவதானால் தானாக இயங்கும் TIMERஐ பொருத்துவதன் மூலம் நாம் நித்திரையாக இருக்கும் போது இவை விழித்திருந்து செயற்பட்டு எமது செலவினைக் கட்டுப்படுத்த துணை புரியும். குறைந்த விலையில் TIMER களை வாங்க முடியும் என்பதனை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. $10 டொலருக்கு குறைவாக இவற்றை வாங்க முடியும். சிறிய முதலீடு காலப் போக்கில் பாரிய சேமிப்புக்கு வழிவகுக்கும்.



கோடைகாலத்தில் குறிப்பாக கனடாவில் வெப்ப அலைகளின் (HEAT WAVE) தாக்கத்திற்கு முகங்கொடுக்கத் தயாராக வேண்டும். இதற்குப் பலவிதமான ஆலோசனைகள் கூறப்படுகின்றன. ஒரு சில மாதங்கள் ஆனாலும் வீட்டில் இருக்கும். வெப்பத்தின் தாக்கத்தால் பலரும் அவதிப்படுவது உண்டு.

வீடுகளில் பல தேவைகளுக்காக மின்சாரம் பாவிக்கப் படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் எத்தகைய வழியில் மின்சாரத்தைச் சேமிப்பதன் மூலம் செலவைக் குறைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி ஆராய்வது சிறந்தது.

### குளிர் ஊட்டிகள் (Air conditioning)

பலரும் கோடைகாலத்தில் AIR CONDITIONஐப் பாவிப்பது வழக்கம். வீட்டில் நாம் பாவிக்கும் மின்சார உபகரணங்களில் மிக அதிக அளவு மின்சாரத்தை நுகரக் கூடியதும் அதிக செலவை ஏற்படுத்தக் கூடியதும் குளிரூட்டிகள் என்றால் அது மிகையல்ல. எனவே இதனை மிகத் தேவையான நேரங்களில் மட்டும் பாவித்து அதற்கான பதிலீட்டு வழி களில் ஈடுபடுதல் நல்லது.

மிக அதிகளவு மின்சாரத்தை நுகர்வதனால் மிக அதிகளவு செலவை ஏற்படுத்தக் கூடிய வை குளிரூட்டிகள். எனவே அவற்றை மிக அவசியமான போது மட்டும் பாவிப்பது நல்லது. THEMOST CONTROLERஐ $26^{C}$ பாகைக்கு மேல் இயங்கும் விதத்தில் பாவித்தல் சிறந்ததும் லாபகரமானதும் ஆகும். தவிர இயற்கையான முறைகளில் வெப்பத்தை தணிக்க வழி காண்பது மேலும் பலன் தரவல்லது.

### மேலும் சில ஆலோசனைகள்:

- வீடு சூடேறதவாறு பார்த்துக் கொள்ளல். அதாவது மாலை தொடக்கம் இரவு நேரங்களில் சாளரங்கள் ஊடாக குளிர்காற்றை

தொடர்தல் 24ம் பக்கம்



# மின்சாரச் செலவும்...

23ம் பக்கத் தொடர்ச்சி...

உள்வாங்கி, பகல் வேளைகளில் உள் வாங்கப்பட்ட குளிர் காற்றை தப்பித்து விடாதபடி பார்த்துக் கொள்ளல்.("Keep the heat out & invite the cool air in")

- உஸ்ணம் கூடிய வேளைகளில் சூடான காற்றை காற்றாடி மூலம் வெளியேற்றல்.
- திரைச் சீலைகளை பகலில் மூடி இரவில் திறந்து விடல்.
- ATTIC பகுதியில் கோடை காலத்தில் வெப்பம் மிக அதிகமாக இருக்கும். அந்த வெப்பத்தை தணிக்க பல மணி நேரம் குளிரூட்டிகள் இயங்க வேண்டி இருக்கும். ATTICல் தலைக்கு மேலே அடைபட்டி ருக்கும் வெப்பமான காற்றை வெளியேற்ற காற்றாடிகள் (FAN) போடப்பட்டால் உங்களது மின்சாரச் செலவில் பாரிய வித்தியாசத்தைக் கண்டு கொள்ள முடியும். அத்துடன் இத்தகைய காற்றாடிகள் கூரையின் ஆயுட் காலத்தைக் கூட்டவும் உதவும். ஒரு கல்லில் இரு மாங்காய் என்பது இங்கு சாலவும் பொருந்தும்.
- நிலக்கீழ் அறை உள்ளவர்கள் கோடை காலத்தில் அங்கு அடை பட்டிருக்கும் குளிர்காற்றை மேற் பகுதிக்குப் பரப்புவதன் மூலம் வீடு வெப்பமாவதைக் குறைக்க முடியும்.
- FURNACE உடன் பொருத்தப்பட்டிருக்கும் காற்றாடியைத் தனியாகப் பாவிப்பதில் எந்தவித தப்பும் கிடையாது. குளிரூட்டி யுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மின்சாரத்தை மட்டுமே காற்றாடிகள் நுகர் கின்றன.

### சமைத்தல்:

எம்மவர் மத்தியில் சமையற்கலை மிகப் பிரபல்யமானது. நீண்ட நேரம் சமைப்பதில் பலருக்கு இன்பம். ஆனால் மாதாந்த கட்ட ணங்கள் செலுத்தப்படும் போது அதன் தாற்பரியம் பலருக்கும் புரிவதில்லை. தொடர் மாடிக் கட்டிடத்தில் இருப்பவர்களுக்கு இதனைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசி யம் கிடையாது. பிறரது செலவில் சமையல் செய்து சம்பாதிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் சில தொடர் மாடிக் கட்டிட குடியிருப்பாளர்கள். எது எப்படியாயினும் சமையல் துறையில் மின்சாரத்தைக் கட்டுப் படுத்த சில ஆலோசனைகள்:

- மின்சாரத்தில் இயங்கும் அடுப்புகளை விட GAZல் இயங்கும் அடுப்புகள் சிக்கனம் வாய்ந்தவை. அத்துடன் பழைய அடுப்பு களை விட புதிய அடுப்புகள் (ENERGY EFFICIENT) குறைந்த அளவு மின்சா ரத்தை உள் வாங்கி அதிகளவு வெப்பத் தைத் தரக்கூடியவை. எனவே பழைய அடுப்புகளைத் திருத்துவதை விட புதிய சிறந்த அடுப்புகளை பிரதியீடு செய்வது பற்றியும் சிந்திக்கலாம்.
- அடுப்புச் சூடாக இருக்கும் போதே மேல திக உணவுகளை தயார் செய்யலாம். அடிக்கடி போடுவதைத் தவிர்ப்பது நல்லது.
- சூடாக இருக்கும் போதே OVENஐ சுத்தம் செய்வது நல்லது. இங்கு குறிப்பிடப் படுவது தானே சுத்தமாக்கும் அடுப்புகள். (SELF CLEANING OVEN)
- சமைக்கும் போது மூடிச் சமைத்தல் விரயத்தைத் தவிர்க்கக் கூடியது. அத்துடன் சூழலையும் பாதுகாக்கும்.
- அமுக்க முறையில் இயங்கும் சமையல் பாத்திரங்கள் (PRESSER COOKER) மிக இலாபகரமானது. நேரத்தையும், பணத் தையும் சேமிக்கக் கூடியவை.
- MICROWAVEன் பாவனையைக் கூட்டுவது இலாபகரமானது. சாதாரண MICROWAVE, 1.6 KW மின்சாரத்தை நுகர்ந்து 600W சக்தியை உருவாக்குகிறது. நேரத்தை மீதப்படுத்தும் அதேவேளை சாதாரண அடுப்புகளுடன் ஒப்பிடும் போது 50% - 75% வரை செலவைக் குறைக்கவல்லது என சில ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
- அடுப்பில் பாத்திரங்களை வைக்கும் போது பாத்திரத்தின் அளவுக்குத் தகுந்த மாதிரி யான அளவான அடுப்பைப் பாவிப்பதும், அவை பொருந்தக்கூடிய விதத்தில் நடுவில் வைப்பதும் வீணான வெப்ப விரயத்தைத் தவிர்க்க வழிவகுக்கும். உதாரணமாக அப்பச் சட்டியை சாதாரண அடுப்பில் வைத்தால் நுகரப்படும் வெப்பத்தை விட விரயமாகும் வெப்பம் தான் அதிகமாக இருக்கும். புத்திசாலியான சிலர் அதற்கென சில உலோக வளையங்களைப் பாவிக் கிறார்கள்.







### வெளிப்புற விளக்குகள். (Exterior Lights)

**SOLAR LIGHTS:**
**(சூரியக்கதிரில் இயங்குபவை)**

வீட்டிற்கு வெளியே பாவிக்கக்கூடிய சூரிய ஒளியில் இயங்கக் கூடிய பூந்தோட்ட விளக் குகள் பிரபல்யம் அடைந்து வருகின்றன. பகலில் உள்வாங்கும் சூரிய ஒளியை சேமித்து இரவில் வெளிச்சம் தரும் இத்தகைய விளக்குகள் மிக இலாபகரமானவை. மிக அழகான பல்வேறு வடிவங்களில் இவை சந்தைப்படுத்தப் படுகின்றன. இவற்றைப் பொருத்துவதும் மிக இலகு.

**SENSOR LIGHTS / MORTION LIGHTS:**

அசைவுகளைக் கண்டதும் குறிப்பிட்ட நேரத் திற்கு தானே இயங்கி தானாக நிற்கும் மின் விளக்குகளும் பயன் உள்ளவை. வீட்டிற்கு வெளியிலும் வாசல் போன்ற பகுதிகளிலும் இவற்றைப் பயன் படுத்தலாம். இவை மின் சாரத்தைச் சேமிக்க உதவும்.

அதேவேளை பாதுகாப்பையும் (Security) தரவல்லவை. பொருத்தமான இடங்களில் வீட்டிற்கு உள்ளும் இவற்றைப் பயன் படுத் தலாம். குறிப்பாக நிலக்கீழ் அறைக்குச் செல்லும் படியில் உள்ள விளக்குகள் பல வீடுகளில் நீண்ட நேரம் எரிவதை அவதானிக்க முடியும். படியை அண்மிக்கும் சந்தர்ப்பத்தில் தானே on ஆகி சில நிமிடத்தில் தானே நிறுத்தப்படுமானால் அது காலப் போக்கில் குறிப்பிட்ட சேமிப்பிற்கு வழி வகுக்கும் என்ப தில் சந்தேகமில்லை.

இரவு நேரத்தில் தானே on ஆகி சூரிய ஒளி யைக் கண்டதும் நிறுத்தப்படும் விளக்குகளும் பாவனையில் உள்ளன. தானே இயங்கி, தானாக நிறுத்தப்படும் தன்மை வாய்ந்தவை. ஆனாலும் இரவு முழுவதும் தொடர்ந்து எரிவது அவசியமா என்பதையும் சிந்திக்க வேண்டும். சில பூந்தோட்ட விளக்குகள் இரவில் தானே on ஆகிய போதிலும் குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் நிறுத்தப்படக்கூடிய கட்டுப்பாட்டைக் கொண்டவை. (1, 2, 3மணி என) இவற்றை உரிய முறையில் பாவித்தால் அதன் மூலம் பயன் பெறமுடியும்.

### Seasonal Leds

கிறிஸ்மஸ், புதுவருடம் போன்ற காலங்களில் வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் அலங்கா ரங்களுக்குப் பாவிக்கக் கூடிய Energy saver lights பாவனைக்கு வந்துள்ளன. சாதாரண விளக்குகளோடு ஒப்பிடுகையில் இவை 95% குறைந்தளவு மின்சாரத்தை நுகரக்கூடியவை என்பதோடு 100 மடங்கு காலம் நிலைக்கக் கூடியவை. இவை கடந்தவருட இறுதியில் (November & December) Mississauga, Streetville பகுதிகளில் Energy conservation bureauவினால் இலவசமாக மாற்றீடு செய்யப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சில வீடுகளின் அமைப்பை உற்று நோக்கி னால் மின் விளக்குகளை பாவிக்க வேண்டிய அவசியமே இல்லாத அளவு இயற்கையான வெளிச்சம் உள்ளவையாக இருக்கும். வீடுகள் அவ்வாறு அமைவது அவரவர் அதிஸ்டத்தைப் பொறுத்தது. மாறாக இருண்ட வீடுகளில் அதிகளவு நேரம் பாவிக்கப்படும் மின் விளக்குகளுக்கு, CLF, Blub,Timer, Tube light போன்றவற்றைப் பாவிப்பது காலப் போக்கில் அதிக பலனைத் தரவல்லது. புதிய தொழில் நுட்பத்தில் சிறிது தொகைப்பணம் முதலீடு செய்வது எவ்வளவு இலாபகரமானது என்பது எமது பழக்க வழக்கத்தில் தங்கியுள்ளது. சிலர் வீட்டில் விழிப்பாக இருக்கும் போது கூட இருட்டில் தான் இருப்பார்கள். சிலரது வீடுகளில் சிறியவர் தொடக்கம் முதியவர் வரை தேவையற்ற விளக்குகளை நிறுத்துவதில் மிகக் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். மாறாக வேறு சிலர் வீடுகளில் எப்போதும் ஏதோ கொண்டாட்டம் நடப்பது போல் ஒரே வெளிச்சமாக இருக்கும். சிலர் படுக்கைக்குச் செல்ல இரவு 1மணிக்கு மேலாகும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் மேற் கூறப்பட்ட தொழில் நுட்பங்களைப் பாவிக்கும் போது ஏற்படக் கூடிய பலாபலன்களின் அளவுகள் எம்மவரின் பழக்க வழக்கத்திற்கு ஏற்றவாறு மாறுபடக் கூடியது.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■


**Home Inspection**

• Purchase & sale Inspection, • Problem solving Inspection, • New home – Warranty inspection

Optimal Home Inspection Services

**Vela Subramaniam**

Certified Home Inspector



**416-786-0760**
**416-299-0700**

**E-Mail: homeinspectorvela@gmail.com**

**வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்**




Century 21
**Service Plus**
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

**Office : (514) 299-3186**
**(450) 926-1881**



**Sugumaran Sinnaiah**
Chartered Real Estate Broker



# உங்கள் மனைகள் மாளிகைகளாகிட...

**$1,800,000 Plus Stock**





**Peterborough, Ontario**
Prime Corner Location Comme Plaza W/Olco Gas Station,8 Apts&2 Comme Units:Zoning Permits Wide Ranges Of Uses,Office,Restaurants Etc

**$212,500**




**Markham / Mcnicoll**
Industrial/Warehouse Unit In Demand Area. Face To Markham Rd, Great Income Producing Investement. Close To Hwy Access.,Close To Wal-mart, Lowes And Ttc.

**$249,900**




**Mccowan / Steeles**
Condo Apt, 2+1 Bedrooms, 2 Washrooms, Unobstructed View, Corner Bright & Quit, Well Maintained & Designer Upgraded Executive Unit

**$389,000**




**Ellesmere / Meadowvale**
Detached Bungalow, 3 Bed-rooms, 1 Washrooms, Prime Lo-cation Close To U Of T, Cent.College,401,Ttc Etc.

**$399,000**




**Ellesmere / Meadowvale**
Detached Bungalow, 2+2 Bedrooms, 2 Washrooms, Size,Properies Are Located In A Prime Location Close To U Of T

**$411,900**




**Warden / Kingston**
Detached Bungalow, 2+2 Bed-rooms, 2 Washrooms, Detached Brick Bungalow At Beautiful Birchliff, Private Driveway,Huge Two(2) Tiers Deck

**$479,900**




**Jane / Major Mac**
Detached 2-Storey, 3+1 Bed-rooms, 4 Washrooms, Loca-tion!Location!Location,One Bedroom Finished Basement With Seprate Entrance

**$549,900**



**Westney Rd / Williamson Dr.**
Detached 2-Storey, 5 Bed-rooms, 5 Washrooms, One Of The Largest Cottingham Model.'A Unique Elavation D'3198 Sq. Ft.In Nottingham Private Enclave Community

**$599,000**



**Markham/Highglen**
Detached 2-Storey, 3 Bed-rooms, 3 Washrooms, Very Well Maintained Home In Demand Area.Bright & Spacious Bed-rooms, 9'Ceiling On Main Floor

**$142,900**


**Kipling / Steels**
Condo Apt, 2+1 Bedrooms, 2 Washrooms, Spacious 2 Br Corner Unit Very Clean And Nice .One Bus To Subway.Close To Everything

**$499,000**




**Weston Rd & Rutherford**
Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms, Stunning And Spotless Detached Home With 9Ft Ceiling On Main Floor. Thousands In Renova-tions And Upgrade

- digi Media -



முழுநேர வீடுவிற்பனை முகவர். Emerald Award Winner

## சத்தி மருதப்பா

Sales Representative

**416.816.1500**

Not intended to solicit properties currently listed for sale.

மேலும் பல Gas Stationகளும்
வியாபாரநிலையங்களும்
விற்பனைக்குண்டு

Century 21

**Affiliate Realty Inc.,** Brokerage
208-80 Corporate Drive,Toronto, ON M1H 3G5
Bus: **416-290-1200,** Fax: **416-290-1900**



# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice

Tax Problems?
Penalties?
Haven't Filed?
We can help you...

# Acficana

ACCOUNTING - FINANCE - TAX - AUDIT

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
Tel : 416-873-5780 / 416-847-9800
Email : kethes@acficana.com



# MORTGAGE

- *1st & 2nd Mortgages*
- *New Immigrants / Self Employed*
- *Refinance*
- *Equity Line of Credit*
- *Renewal*
- *All other Financial Arrangement*

Apex Creations - 416-297-0707



**Kethes Sivasubramaniyam**
Mortgage Agent - (Lic # M08006105)

**Cell : 416.873.5780**

Via Financial
(Lic # 10669) Services Inc.
5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5
Fax : 416-548-8006
Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7

# நீரும் சுகாதாரமும்...

17ம் பக்கத் தொடர்ச்சி...

அதாவது நான் 2000 கலோரி சக்தியுள்ள உணவினை ஒருநாளைக்கு உள்ளெடுப்பவராயின் எனக்கு 68 அவுன்சு நீர் தேவை. அதாவது 68 /8 = 8.5 கப்.

முக்கியமான ஒரு விடயத்தினை நாம் மறந்து விடலாகாது. ஆரோக்கியம், நிறைக் குறைப்பு போன்ற காரணங்களுக்காக தற்போது பலரும் நடப்பது, உடற்பயிற்சி செய்வது போன்றவற்றில் அதிகமாக கவனம் செலுத்துகின்றார்கள். இவ்வாறு இவற்றினைச் செய்யும் போது இச் சந்தர்ப்பத்தில் நாம் போதியளவு நீரினை உள்ளெடுக்க வேண்டும். உடற்பயிற்சி செய்யுமுன்னராக ஒரு கப் நீரும் உடற்பயிற்சி முடிந்தவுடன் இரண்டு கப் நீரும் கட்டாயமாக அருந்திக் கொள்ள வேண்டும்.

## கர்ப்ப காலமும் நீரும்:

கர்ப்ப காலமும் நீரும் மிகவும் நெருங்கிய தொடர்புடையவை. ஒரு பெண்ணின் உடல் கர்ப்ப காலத்தில் பல மாற்றங்களுக்கு உட்பட்டு சாதாரண காலங்களில் இயங்கும் முறையிலும் பார்க்க வித்தியாசமான முறையில் இயங்கத் தொடங்கும். இவ்வாறு மாற்றங்கள் ஏற்படுகையில் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு எட்டிலிருந்து பத்து கப் தண்ணீரை அவர்கள் கட்டாயமாக அருந்த வேண்டும். கர்ப்ப காலங்களில் பெரும்பான்மையான பெண்களுக்கு சிறுநீரகத் தொற்று ஏற்படுவதுண்டு. அதிகமாக நீரை உட்கொள்ளும் போது அதிகமாக சிறுநீர் கழிப்பதற்கு நீர் உதவும். இவ்வாறு அதிக சிறுநீர் கழியும் போது சிறுநீரகத் தொற்றுக்குரிய நுண்ணங்கிகள் சிறிதளவேனும் வெளியகற்றப்படும். இதனுடன் மாத்திரமல்லாது கர்ப்ப காலங்களில் மலம் வெளியகற்றலிலும் பிர்ச்சினைகள் ஏற்படும். பொதுவாக அனைவருக்கும் மலச் சிக்கல் ஏற்படுவதுண்டு. அதிகமான நீரை உள்ளெடுக்கும் போது மலமானது இறுக்கம் குறைந்து தளர்வாக வருவதால் மலம் கழிப்பது சுலபமாக இருக்கும். (கர்ப்ப காலங்களில் மிகவும் வெதுவெதுப்பான இளஞ் சூட்டு நீரை அதிகாலையில் அருந்தி வந்தால் ‘மூலம்’ போன்ற பிரச்சினைகளில் இருந்து தப்பிக் கொள்ளலாம்). கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் முக்கிய கோளாறுகளில் ஒன்று வயிற்றில் அமிலம் அல்லது புளிப்புத் தன்மை ஏற்பட்டு நெஞ்செரிவு உண்டாதல். அதிக நீர் உட்கொள்ளல் இவ்வாறு அமிலம் அல்லது நெஞ்செரிவு ஏற்படும் போது அதனைக் குறைக்க உதவி செய்யும். உடலுக்கும் குழந்தைக்கும் செல்லும் குருதி ஓட்டத்தினை சீராக வைத்திருப்பதற்கும் நீர் உதவுகின்றது. இதனால் கர்ப்ப காலங்களில் இரத்த அழுத்தம், இருதய வருத்தம் போன்றவற்றிலிருந்து காக்க நீர் உதவும். இந்த இடத்தில் ஒரு சிறிய ஆனால் மிகவும் முக்கிய மான விடயத்தினைக் குறிப்பிட வேண்டும். கர்ப்ப காலத்தில் சில பெண்கள் tonic water அருந்துவதுண்டு. இந்த tonic water quinineஐக் கொண்டிருப்பதால் இது குழந்தைக்கு கெடுதலாக அமைந்துவிடும். குயினைன் அளவு அதிகரிப்பின் அது கருச்சிதைவினை ஏற்படுத்த வல்லது.

## முதியோரும் நீரும்:

முதுமை என்பது எம்மால் தவிர்க்க முடியாத ஒன்று. நாம் ஒவ்வொருவரும் நாளாக ஆக வருடம் கழியக் கழிய முதியவராகி வருகின்றோம். வயதாக ஆக எமது உடலின் நீர்த் தேவைக்கும் தாகத்திற்குமான சமநிலையானது மாறுபடுகின்றது. அதாவது தாகமும் குறை கின்றது அதேசமயம் அருந்தும் நீரின் அளவு குறைந்து கொள்கின்றது. தாகம் இருந்தால் கட்டாயமாக நாம் நீரினை அருந்துவோம். தாகம் இல்லாதவிடத்து அதைப் பற்றி அக்கறை கொள்ளாது விட்டு விடுவோம். ஆனால் தாகம் உண்டோ இல்லையோ நீர் அருந்த வேண்டும் என்பதனை மனதிற் கொள்ள வேண்டும். ஏனெனில் வயதாகும் போது அதாவது 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு Dehydration எனப்படும் உடலின் நீர்த்தன்மை குறைதல் ஏற்பட்டு இதன் காரணமாக அதிகமானோர் வைத்திய சாலையில் அனுமதிக்கப் படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. போதியளவு நீரினை உட்கொள்ளாவிடின் வயதாகும் போது சிறுநீரகத்தின் தொழிற்பாடு குறைந்து போகின்றது. இதனால் பாரிய விளைவுகள் உருவாகும். சிறுநீரகம் ஒழுங்காகத் தொழிற்படாவிடின் உடலின் கழிவகற்றலில் குழப்பங்கள் ஏற்பட்டு குருதித் தொகுதியினை இது மிகவும் பாரதூரமாக தாக்கி விடும். மேலும் Dehydration எனப்படும் உடலின் நீர்த்தன்மை குறைபாடு இவர்களை மரணத்தின் வாயிலில் விடுவது மட்டுமன்றி மயக்கமான தன்மை, சிந்தனையிலும் நினைவுகளிலும் குழப்பம், பேச்சுத் தடுமாற்றம் போன்றவற்றை உருவாக்கும். சாதாரணமாக குறுகிய கால வரட்சித் தன்மை உடல் வலியினைத் தோற்றுவிப்பதுடன் நாட்செல்லச் செல்ல மூட்டுக்கள் பழுதடைதல், தசைநார்கள் கிழிதலும் வலுவிழத்தலும் சாப்பாட்டிற்கு விருப்பமின்மை, arthritis எனப்படும் வாத நோய், தலைவலி, இரத்த அழுத்தம், சமிபாட்டு குறைபாடு, மலச்சிக்கல் போன்று பலவிதமான வலிகளையும் வருத்தங்களையும் உருவாக்கும். வயது செல்லும் போது சாதாரணமாக தண்ணீருக்குரிய வேட்கை குறைந்தாலும் தண்ணீர் அருந்தும் வழக்கத்தைக் கைவிடாது அடிக்கடி தண்ணீர் அருந்திக் கொள்ள வேண்டும்.

உடலில் நீர்த்தன்மை குறைந்து உடல் வரட்சி அல்லது Dehydration என்பது முதியோருக்கு மட்டும் உண்டு என்பது கருத்தல்ல. முதியோருக்கு சாதாரணமாக நீருக்குரிய வேட்கை அதாவது தாகம் எடுப்பது குறைவதால் அவர்கள் தாகத்தினை அதிகம் உணர்வதில்லை. ஆனால் இந்த Dehydration பிரச்சினையானது மிகப் பாரதூரமாக அனைவரையும் பாதிக்கக் கூடியது. அதுவும் இந்தக் கோடைகாலமானது மிகவும் கொடூரமாக இருப்பதால் அனைத்து வயதினரும் அனைத்துப் பாலாரும் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். நீரிழிவு நோய், சிறுநீரக நோய், மது அருந்துபவர்கள், புகை பிடிப்போர், தைரொயிட் பிரச்சினை இருப்பவர்கள், பெண்களில் கருப்பையில் cystic fibrosis ஆகியோர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் சாதாரணமாக எமது உடம்பானது ஒரு மணிநேரத்தில் ஒருகலன் நீரை உறிஞ்சக் கூடியது ஆனால் இரண்டு கலன் நீரினை இழக்கக் கூடியது. ஆகவே இழப்பானது ஏற்றலைவிட அதிகமாக இருக்கும் பட்சத்தில் நாம் இந்த இழப்பினை ஈடு செய்யக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.

*தொடரும்.*

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

Computek College
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Est. 1991
www.computek.edu

Get Job Ready in 6 - 12 Months

Interested in FREE training?

If you are :
- Currently receiving E.I. benefits
- Received E.I. within 5 yrs
- Received maternity benefits within 5 yrs
You may be eligible for HRDC funding

Are you not qualified for HRDC Funding Assistance ?
Is your HRDC funding REJECTED?

You may still qualify for other Financial Assistance
Please call us for details



Early Childcare Assistant(ECA)
Graduates of this program may find employment as
- Child Care Assistant
- Child Care Worker
- Early Childhood Educator Asst.
- Day Care Worker
- Day Care Teacher
- Preschool Worker

Computerized Accounting
Graduates of this program may find employment as
- Accounting Assistant
- Accounts Administrator
- Accounts Manager
- Accounts Payable Clerk
- Accounts Receivable Clerk
- Payroll Clerk





Personal Support Worker (PSW)
Graduates of this program may find employment as
- Personal Support Worker
- Home Support Worker
- Personal Care Attendant
- Resident Care Aid
- Nursing Assistant

Network Engineering
Graduates of this program may find employment as
- Network Administrator
- Network Specialist
- Systems Administrator
- Tech Support
- Help Desk Technician



Business Administration
Graduates of this program may find employment as
- Administrative Assistant
- Office Assistant
- Office Administrator
- Management Trainee
- Executive Assistant




Medical Office Admin (MOA)
Graduates of this program may find employment as
- Medical Office Assistant
- Medical Admin. Asst.
- Medical Receptionist
- Medical Secretary
- Medical Records Clerk

Cerificate Courses
A+ (O/S, Computer Assembly & Troubleshooting), VB, Java, C++, Visual C#, .Net,
QA , AccPac, Quick books, Simply Accounting, MS Office, MCP, MCSE, CCNA, Photoshop & Dreamweaver

Financial assistance may be available to those who qualify

Markham 905.471.3344
Scarborough 416.321.9911
Toronto 416.285.9941
NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416•291•3997


Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative
Direct: 416-276-1225
Sell your home faster
and more money
When you list your home with Mike, you receive
these Guarantees
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full colour prints ads every week until it is sold
Our Team of Specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it *
RE/MAX
N Of Coldstream & W Of Wilson
$299,900
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Brimley Dr/Orton Park
$349,000
3+2 Bed Rooms, 2 W Rooms
Ceramic/Hard floors
Morningside / Finch
$365,000
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Brimley/Steeles
$389,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
10th Line/ Hoover Park Drive
$429,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Nightstar & Morningside
$439,900
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
E.9th/S.Hwy 7
$459,000
3+2 Bed Rooms, 2 W Rooms
Ceramic/Hard floors
Mccowan /Denison
$479,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Middlefield /Denison
$485,000
4_+2 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
Hoover Park/10th Line
$489,000
3+1 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
10th Line/Mantle
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Markham/Bur Oak
$549,000
3 Bed Rooms, 2 W Rooms
Ceramic/Hard floors
Riza/Bernbridge
$569,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Riverwalk/9th Line
$599,000
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
9th Line/14th Ave
$649,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
9th Line/14th Ave
$679,900
4+2 Bed Rooms 4 W Rooms
Ceramic/Hard floors
9th Line/ 14th Ave
$690,000
5 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
Brimley Dr/Orton Park
$349,000
3+2 Bed Rooms, 2 W Rooms
Ceramic/Hard floors
14th / 9th Line
$639,000
4 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
Hwy 50/Nashville Rd
$349,000
Gas Station
வாழ்க்கை சுவர்க்கமானது
இனிய இல்லமென்றில்
PH1-7800Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800 Fax: 905-470-7770
Email: esrinathan@trebnet.com
RE/MAX
Realtron Realty Inc, Brokerage
Each office independently owned and operated
I can also assist you Mortgage Financing,
Home Inspection, Real Estate Lawyer
KZ Graffic- 647-200-5833

# உங்களுக்கான வீட்டை வாங்குவது எப்படி?

**'How to buy your Home' என்னும் 'OREA'வினால் வெளியிடப்பட்ட நூலினை மூலமாகக்கெண்டு வாசகர்களின் நன்மை கருதித் தொகுக்கப்பட்ட தொடர் இது.**

**அலகு - 8**

எஸ்.கே. பாலேஸ்
- வீடு பெறுமதி மதிப்பீட்டாளர் -



## உங்கள் வீடு வாங்கும் குழுவில் ஒரு வழக்கறிஞரையும் சேர்த்துக் கொள்ளங்கள்.

நீங்கள் ஒரு வீடு வாங்கும் போது பல பத்திரங்களில் கையொப்பம் இடவேண்டியி-ருக்கும். இவற்றில் மிக முக்கியமானவை.

## வாங்குதல் விற்றல் ஒப்பந்தம், வீட்டுக்கடன் பத்திரம்:

இவையிரண்டும் நீங்கள் ஒப்பமிட்டவுடன் தனித்து செயல்படும் ஒப்பந்தங்களாக மாறும். அத்துடன் சட்ட நுணுக்கங்கள் தெரிந்த ஒரு வரால் தான் அதைப் புரிந்து கொள்ள முடியும். உங்களுடைய முகவர் இந்த விடயத்தில் அனுபவமும், பயிற்சியும் பெற்றவராவர். எனவே உங்களுக்கு இந்த சட்ட நுணுக்கங் களை விளங்கப்படுத்த முடியும். ஆனாலும் ஒரு வழக்கறிஞரை இந்த விடயத்தில் நாம் நாடுவது நன்று. அவர் உங்களுடைய உரி-மைகளையும் சொத்தையும் பாதுகாக்க ஆவன செய்வார். உங்களிற்கு கிடைக்கும் ஒவ்வொரு பத்திரத்தையும் நீங்கள் ஒப்பமிடமுன் அவர்-களிடம் காண்பித்து அவர்களுடைய சம்ம-தத்தைப் பெறலாம்.

## சரியான வழக்கறிஞரை தேர்ந்தெடுத்தல்:

உங்களிற்கு இது தான் நீங்கள் வாங்கும் முதல் வீடானால் உங்களால் ஒரு பொருத் தமான வழக்கறிஞரை கண்டுபிடிப்பது கடின மாக இருக்கலாம். அப்படியானால் வீடு வாங்கிய உங்கள் நண்பர்களையோ, வியா பார பங்குதாரர்களையோ, அல்லது நம்பிக் கையான உங்கள் குடும்ப அங்கத்தவர்களை-யோ கலந்து ஆலோசித்து ஒரு வழக்கறி-ஞரை நீங்கள் நியமிக்கலாம்.

உங்கள் முகவரே உங்களுக்கும் பல வழக்கறிஞர்களை தரக்கூடும். அல்லது நீங் கள் வசிக்கும் பிரதேசத்திலுள்ள வழக்கறி ஞர்களை உங்கள் சமூகம் மூலமாக பெயர்களை பெற்று, அவர்களில் ஒருவரை நீங்கள் தெரிவு செய்யலாம். அதுவும் முடி-யாது போனால் விளம்பரங்களின் தொலை பேசி கைநூலின் உதவியுடன் தேர்ந்தெடுக்-கலாம்.

## முடிவிற்கு வரமுன் கேட்க வேண்டிய கேள்விகள்:

நீங்கள் தேர்ந்தெடுத்த இரண்டு, மூன்று வழக்கறிஞர்களை நீங்கள் நேரிலோ, அல்லது தொலைபேசியிலோ பின்வரும் கேள்விக-ளைக் கேட்டு முடிவில் நீங்கள் ஒருவரைத் தேர்ந்து எடுக்கலாம். நீங்கள் கேட்க வேண் டிய கேள்விகள் அவருக்கு வீடு வாங்கும், விற்கும் துறையில் எத்தனை அனுபவம் உண்டு. அவருடைய கட்டணம் என்ன? சேவைகள் என்ன? வேறு ஏதாவது மேலதிக கட்டணம் உண்டா? என்பவையே.

சில வீடுகளின் விற்பனையில் சில குழறு-படிகள் இருக்கலாம். அல்லது ஈட்டுக்கடன் பெறுவதில் மேலதிக சேவை தேவைப்படலாம்.

## உங்களுடைய வழக்கறிஞர் உங்களிற்கு எப்படி உதவலாம்:

வழக்கறிஞர் உங்களிற்கு வேலை செய்யும் போது பல மணிநேரம் ஆராய்ந்து, வீடு வாங்குவதில் உள்ள சிக்கல்களைத் தீர்த்து, எந்த வித சட்டப்பிரச்சினையுமில்லாமல் உங்கள் வீட்டை உங்களிற்குப் பெற்றுத் தருகிறார். வீடு வாங்குவதற்கான ஒப்பந்தம் தயாரானவுடன் உங்களுடைய வழக்கறிஞர் உங்களிற்கு பின்வரும் சேவைகளை செய் வார்.

- உங்களுடைய வீட்டின் உறுதியைப் பெற்றுத்தருவதுடன் அந்தச் சொத்தைப் பற்றிய முழுவிபரமும் வீட்டுப் பத்திரத் தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
- நீங்கள் வாங்கும் வீட்டிற்கு வேறு யாரும் உரிமை கோரவில்லையென உறுதிப் படுத்துவார்.
- சொத்துக் காப்புறுதி வீட்டு உரிமைப் பத்திரத்திலுள்ள பிரச்சினைகளையோ, அல்லது ஏமாற்று வேலைகளையோ உங்களைப் பாதிக்காதவாறு காப்பாற்றும்.
- சொத்து மாற்று வரி கணக்கிட்டு வீட்டு விற்பனை முடியும் போது செலுத்தப்பட வேண்டும்.
- உங்களுடைய வீட்டு ஈட்டுப் பத்திரம் (Mortgage Documents) தயாரித்தல். (உங்களிற்கு கடன் கொடுப்பவர் இந்தப் பத்திரத்தை தயார் செய்யாவிடின்).

உங்களுடைய வழக்கறிஞர் நீங்கள் வீடு வாங்கும் படலத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறார். உங்கள் வழக்கறிஞரின் சேவை யையும், வழிகாட்டலையும் பின்பற்றுங்கள். மேலும் உங்கள் வழக்கறிஞர் இந்த வீட்டு விற்பனையில் எதிர்காலத்தில் எந்தப் பிரச்-சினையும் வராது பார்த்துக்கொள்வார்.

## உங்கள் வீட்டை வாங்குவது எப்படி?

வீடு தேடும் படலம் முடிவிற்கு வரவேண்டு-மானால் உங்கள் தேவைக்கேற்ற வசதிகள் கொண்டதும், உங்கள் நிதிநிலைக்கும் ஏற்-றதுமான ஒரு வீட்டைப் பார்த்து விட்டீர்கள் என்பது தான் அர்த்தம். நீங்கள் இப்போது ஒரு விலையைக் கொடுக்க வேண்டும். நீங் கள் வீட்டிற்கு கொடுக்க விரும்பும் விலை Offer என ஆங்கிலத்தில் கூறுவர். இதன் அடிப்படையில் வீட்டை வாங்குபவரும், விற் பவரும் அவரவர் செய்யவேண்டியவற்றை எழுத்தில் கொடுக்கும் ஒரு பத்திரம் Purchase and sale Agreement எனப்படும். இந்த ஒப்பந்-தத்தின் படி வீட்டை உங்களிற்கு விற்பவ-ரும், நீங்களும் செய்ய வேண்டியவற்றைச் சட்டப்படி நிறைவேற்ற வேண்டும். உங்கள் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். அதை உறுதிப் படுத்துவதற்கு நீங்கள் இரு வரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும். ஒப்பந்தத்தில் கூறப்படும் விடயங்கள் தெளி வாகவும் விளக்கமாகவும் இருக்க வேண்டும். நீங்கள் வீட்டைப் பார்க்கப் போன போது வீட்டில் என்னென்ன பொருட்களைப் பார்த்-தீர்களோ, அவை வீட்டுடன் தருவதாக கூறி யிருந்தால், உதாரணமாக Washer, Deyer, Satelite Dish போன்றவை. இந்தப் பொருட்-களின் Serial no. குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். அந்த விபரங்கள் நீங்கள் கைச்-சாத்திட இருக்கும். ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது. இதனால் உங்களிற்கு பின்பு வர வேண்டிய ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள் ளலாம்.



நீங்கள் கொடுக்கும் நிர்ணயவிலை (Offer) யும், வீட்டைப்பற்றிய மற்ற விபரங்களும் வீடு வாங்கும் விற்கும் ஒப்பந்தத்தில் விளக்கமாக உங்களுடைய முகவர் குறிப்பிட்டிருப்பார். வீடு வாங்கும் விற்கும் விண்ணப்ப படிவங்கள் அச்சடித்து விற்கப்படுகின்றன. இது ஒன்ராறி யோ அரசினால் பரீட்சிக்கப்பட்டு நடைமுறை-யில் உள்ளது. ஒவ்வொரு விற்பனையும் வெவ்வேறு ஆனவை.

நாங்கள் இப்போது நடைமுறையிலுள்ள வாங்கும் விற்கும் ஒப்பந்தப் பத்திரங்களை ஆய்வு செய்வோம்.

## வாங்குபவர் விற்பவர்:

நீங்கள் வாங்கும் வீடு உங்களுடையதும் உங்கள் வாழ்க்கைத் துணையினுடையதும் பெயரில் இருக்கவேண்டும்.

## விற்பவர்:

நீங்கள் வாங்கும் வீட்டிற்கு அஞ்சல் முகவரி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

## உண்மைச் சொத்து (Real Property):

இந்தச் சொத்தின் பரப்பளவு, அஞ்சல் முகவரி, Plan நம்பர் என்பன குறிப்பிடப்பட்டிருக்கும்.

## வாங்கும் விலை:

நீங்கள் அந்த சொத்திற்கு கொடுக்கும் விலை.

## முற்பணம் (Deposit):


நீங்கள் வீட்டிற்கு Offerயை கொடுக்கும் போது ஒரு சிறு தொகை முற்பணமாகச் செலுத்தப்பட வேண்டும். இந்த முற்பணம் வழக்கமாக காசோலையாகக் கொடுக்கப்படும். இதைப் பெற்றுக்கொள்ளும் முகவர், இதனை ஒரு நம்பிக்கை கணக்கில் இடுவார். நீங்கள் செலுத்தும் முற்பணம் (Deposit) ஒரு Down Payment அல்ல. நீங்கள் வாங்கிய விலைக்கு எதிராக நீங்கள் செலுத்திய முற்பணம் குறித்து வைக்கப்படும். அத்துடன் இது நீங்கள் வீடு வாங்குவோர் என்பதையும் காண்பிக்கும்.

skbales@thaiveedu.com

■ ■ ■

Canadian Home Appraisals Inc.
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

MY PROFESSIONAL DESIGNATIONS:
CRA (Canadian Residential Appraiser)
Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
Car: ( Certified Appraisal Reviewer)
Designation with Canadian National Association of Real Estate Appraisers.
MVA( Market Value Appraiser-Residential
Designation with The Canadian Real Estate Association
FRI (Fellow of the Real Estate Institute)
Designation with Real Estate Institute of Canada
CRES ( Certified Real Estate Specialist)
Designation with Real Estate Institute of Canada
RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21.
Affiliate Realty Inc.

S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member


People don't plan to fail, but they do fail to plan
You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!
நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்
Estate Planning
Disability Income Insurance
Critical illness Insurance
Mortgage Insurance
No medical exam Life Insurance
Permanent Life Insurances
Term Life Insurance
Travel & Visitor Insurance
RRSP Loan / Investment
RESP
As an Independent Insurance Broker,
I will shop around for you and get you the best rate...
Guna Thuraisingham M.A.Sc (Eng.)
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@elite-associates.ca
www. elite-associates.ca
Auto & Home Insurance
குறைந்த கட்டணத்தில் பெற்றுத் தரப்படும்
INDUSTRIAL ALLIANCE
RBC Royal Bank
Assumption Life
Desjardins
Manulife
Foresters


-Making Your Dream Home A Reality-
Visit
www.lokanhomes.com
Interested in Doubling your Monetary Investment in Less Than... 2 Years?
Contact Us Regarding New Condominium Development in Downtown Toronto!!
FREE HOME EVALUATION!
Do You Want to Know the Value of Your Home?
CALL US NOW!
Lic #: M08000182
416-450-3984
lsundaram@trebnet.com
Lic #: M08009958
416-230-6462
kkathir@trebnet.com
HomeLife Future Realty
7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8
Office: 905-201-9977
Fax: 905-201-9229
Lokan Sundaram
Real Estate/Mortgage Broker
Kathir Kandiah
Real Estate/Mortgage Broker

# உணவு நஞ்சாதல்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

தொற்றிக் கொண்டிருக்கலாம் என்று பரிசோதனைகள் செய்து பார்த்தபோது கடைசியில் ஒரு வீட்டிலுள்ள சமையல்காரப் பெண்ணிடமிருந்துதான் இது பரவியது என்று கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால் அவளுக்கு இந்த நோய் முன் எப்போதும் வந்ததுமில்லை. ஆம், அவள் அந்த நோய்க் கிருமியான Salmonella Typhi என்ற பக்ரீறியா அவளிடம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. என்றாலும் அவளிடம் அந்த வருத்தம் இல்லை. அதனால் தான் அவள் நோய்க்காவியாக இருந்திருக்கிறாள். இத்தகைய காவி அல்லது Carrier முதன் முறை கண்டு பிடிக்கப்பட்டது அவளிடம் தான். அதானல் அவளின் பெயர் Typhoid Mary என்று அழைக்கப்பட்டது. இப்படி பலநோய்களுக்கு பலர் காவியாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் நோய்க்குறிகள் ஏதும் இருக்காது. இவர்களிடமிருந்தும் நேரடியாகவும் மற்றும் இவர்களிடமிருந்து வெளியேறும் கழிவுகளிடமிருந்தும் இவர்கள் பயன்படுத்தும் பொருட்களிடமிருந்தும் நோய்க்கிருமிகள் பரவலாம். எப்போதும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள இலகுவாக சில ‘F’களை தருகிறேன் விளங்கிக் கொள்ளுங்கள்.

Food – உணவின் மூலம் நோய்கள் பரவுதல்
Fluid – நீர் மற்றும் திரவங்கள் மூலம் பரவுதல்
Feces – மலத்தின் மூலம் பரவுதல்
Fingers – விரல்கள் மூலம் பரவுதல்
Formites – பயன்படுத்தும் பொருட்கள் மூலம் பரவுதல்

நீண்ட நாட்களுக்கு உணவுப் பொருட்களை, குறிப்பாக சமைத்த உணவுப் பொருட்களை குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைப்பதால் உணவுப் பொருட்கள் விரைவில் நஞ்சாகலாம். குளிர்சாதனப் பெட்டிகளை கிழமைக்கு ஒரு தடவையாவது எல்லாவற்றையும் வெளியில் எடுத்துவிட்டு சுத்தம் செய்வது மிகவும் அவசியம். மேலும் போத்தல்கள், ரின்களில் அடைக்கப்பட்டு விற்கப்படுகின்ற உணவுப் பொருட்கள் குளிர்பானங்கள் தொடர்பில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். தயாரிப்புத் திகதி, முடிவுத்திகதி போன்றவற்றினைப் பார்த்து வாங்குவது அவசியம்.

அடுத்து பச்சையாக சாப்பிடும் காய்கறி பழங்கள் போன்றவற்றை நன்றாக தண்ணீரில் கழுவுதல் அவசியம். எக்காரணம் கொண்டும் இறைச்சிவகைகள் எதனையும் பச்சையாக அல்லது அரைகுறைச் சமையல் செய்து சாப்பிடவேண்டாம். நன்றாக வேகவைத்து உண்ணலாம். மற்றது கடைகளில் விற்கப் படும் சோசேஜ் போன்ற புகையூட்டப்பட்ட உணவுகள் மூலம் தான் பெரும்பாலும் உணவு நஞ்சாதல் வருவதும் உண்மை.

தனிநபர் சுத்தம், குடும்ப சுகாதாரம், உணவு தயாரிப்போரின் உடல்நலம், சுற்றுலாக்கள் செல்லும் போது கொண்டு செல்லப்படும் உணவின் தராதரம், அங்கு விற்பனை செய்யப்படும் உணவுகள் போன்றவற்றில் மிகவும் கவனம் தேவை. வீடுகளிலுள்ள கழிப்பறைகளை, நாளாந்தம் சுத்தம் செய்வது அவசியம். மேலும் பொதுக்கழிவறைகளைப் பயன்படுத்தும் போது பலராலும் பயன்படுத்தப்படும் பொருட்களை நாமும் பயன்படுத்தும் போது மிக அவதானமாக இருக்கவேண்டும்.

உணவு நஞ்சாதல் என்பது வெறும் நோய்க் கிருமிகளால் மட்டுமேதான் வருவதில்லை. பல விதமான இரசாயணப் பொருட்கள் உதாரணமாக ஆர்சனிக், மெர்குறி, போன்ற உலோகங்கள் உணவில் கலப்பதாலும் நஞ்சாதல் ஏற்படுகிறது. இவற்றை தடுப்பதற்கு ஏன், எப்படி, எதனால் உண்டாகிறது என்ற விளக்கமும் அதன் தடுப்பு முறைகளையும் தெரிந்தாலே உணவு நஞ்சாதலின்றி விழிப்புணர்வுடன் நலமாக வாழலாம்.

paul.joseph@thaiveedu.com

■ ■ ■

# தனியாள் கல்வித்...

13ம் பக்கத் தொடர்ச்சி...

இருக்கை நிலைகளை மாற்றியமைத்தல் (Strategic seating) உதாரணம்:

- கட்புல, செவிப்புல திறனுக்கேற்ற விதமாக மாணவரை முன்வரிசைகளில் அமர்த்துதல்
- கற்பிப்பவருக்கு அண்மித்ததாக மாணவரை அமர்த்தல்
- சுற்றுப்புற சூழல் சத்தத்தை குறைத்தல்
- வெளிச்ச நிலையை ஏற்றவாறு மாற்றியமைத்தல்
- Head phoneகளை தேவைக்கேற்ப அணியச் செய்தல்

## மதிப்பீட்டு முறைகளில் மாற்றங்களைச் செய்தல் (Assessment Accommodation):

- மேலதிகமாக நேரம் வழங்கல்
- எழுதுவதில் கஷ்டத்தை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு, வாய்மொழி மூலமாக கேட்டு புள்ளி வழங்கல்.
- அடிக்கடி சிறிய இடைவேளைகளை வழங்கல்
- முன்னேற்றமடைந்த உதவும் தொழில் நுட்பங்களை பயன்படுத்தல்
- பெரிய அளவிலான எழுத்துக்களை பயன் படுத்தல்
- ஓர் கல்விசார் தொழிற்பாட்டில் சாதாரண மான மாணவர் செய்ய வேண்டிய பகுதி களை விட குறைவான வேலைகளை/ மதிப்பீட்டு பகுதிகளை இந்த மாணவர் களுக்கு கொடுத்தல்

இந்த IEP ஆனது மாணவரின் நலனைக் கருத்தில் கொண்டிருப்பதால், இந்த திட்டத்தின் கீழ் உங்கள் பிள்ளைகளை சேர்க்க வேண்டும் என பாடசாலையில் கூறப்படும் போது அதற்கு தடை விதிக்காதீர்கள். அத்துடன் உங்கள் பிள்ளையின் கல்வியில் நீங்களும் வீட்டில் கவனம் எடுக்க வேண்டியது அவசியம்.

**உசாத்துணை:**


- Individual Education Plan: Standards for Development, Program Planning, and Implementation., (2000). Ministry of Education, Ontario
- http://www.edu.gov.on.ca/eng/general/elemsec/speced/iep/iep.html
- http://kidshealth.org/parent/growth/learning/iep.html


jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

# கணினி உலகப்...

7ம் பக்கத் தொடர்ச்சி...

மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கப்படவேண்டியவை. பல வானொலி நிலையங்கள், முக்கியமான வழக்கறிஞர்கள், வீடு விற்பனயாளர்களின் அலுவலக Voice Mailகள் மட்டுமல்ல அவர்களின் உரையாடல்கள், அந்த குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துக்கு வந்த அல்லது Dial செய்யப்பட்ட இலக்கங்களும் கூட ‘தேவையானவர்களினால்’ தேவைப்படும் பொழுது எடுத்துக் கொள்ளப்பட முடியும் என்பது தவிர்க்கமுடியாத உண்மை.

நாங்கள் பல்துலக்கும் ‘ப்பிரஷை’ தனிப்பட முறையில் பாதுகாப்பாக வைப்பது மட்டுமல்லாமல் அடிக்கடி புதிய ஒன்றை மாற்றிக்கொள்வது போல் நாம் பாவிக்கும் பல Password களையும் மாற்றிக்கொண்டு அவற்றை பாதுகாக்க வேண்டியதும் மிக அவசியமானது.

நான் மேல குறிப்பிட்ட தொலைபேசி சேவைகளை ஊடறுக்கும் முறை Phone Hacking என்று அழைக்கப்படும்.

ஜுலை 2011 இங்கிலாந்து அரசியலிலும், உலகளாவிய ஊடகங்களிலும் News Of the World என்ற பத்திரிகையின் செய்தியாளர்கள் Phone Hacking மூலம் பல ரகசியங்களை கொண்டுவந்த செய்தி அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. இந்த முறை மூலமாக முன்னைநாள் பிரித்தானிய பிரதமர் Gordon Brown அவர்களின் தொலைபேசி தொடர்பாடல்கள், அவருடைய சுகவீனமான மகனின் மருத்துவ தகவல்கள், அரச குடும்ப அங்கத்தவர்களின் Voice Mailகள் களவாடப்பட்டன. இதில் இன்னமும் சுவாரசியமான விடயம் இந்த Phone Hacking நடப்பதற்கு பிரித்தானிய போலீசாரும் (ஸ்காட்லான்ட்) லஞ்சம் வாங்கி உதவியது தான். அரச குடும்பத்தின் தொலைபேசி இலக்கங்கள், Voice Mail Passwordகள் என்பன அரண்மைனையில் இருக்கும் அதிகாரிகளிடம் லஞ்சம் கொடுத்து பெறப்பட்டது. அரச குடும்பமும் ஆடிப்போய் இருக்கிறது.

பல வழிகளில் ஒருவருடைய செல்லிடத் தொலைபேசி Hack பண்ணப்படுகிறது. குறிப்பிட்ட Spyware மென்பொருட்கள் ஒரு செல்லிட தொலைபேசியில் பதிவிறக்கம் செய்வதன் மூலமாக ஒரு செல்லிடத் தொலைபேசில் இருக்கும் அத்தனை தகவல்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம். இப்போது பல Remote Control மென்பொருட்கள் வந்திருக்கின்றன. ஆகவே ஒருவர் தனிப்பட்ட முறையில் அனுப்பும் SMS குறும் செய்திகளும் / செல்லிடத்தொலைபெசியில் இருக்கும் புகைப் படங்களும் கணினி யுக்தி தெரிந்தவர்களினால் இன்னும் ஒரு கணினியில் இருந்து பிரதி பண்ணி எடுத்துக்கொள்ளலாம்.

இதுவரை நாங்கள் படித்தது பெரிய இடத்து விடயங்கள் என்று நினைத்தால் மூச்சை இழுத்து வைத்துக்கொண்டு தொடர்ந்து உள் வீட்டு சம்பவம் ஒன்றை வாசிக்க தொடங்குங்கள்.

சிலமாதங்களுக்கு முன் புதிதாக வியாபார நிலையம் ஒன்றை சொந்தமாக திறந்த நண்பர் ஒருவர் அவசரமாக எங்கள் நிறுவனத்துக்கு அழைத்தார். “என்னுடைய நிறுவனத்திக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களில் குறிப்பிட்ட அழைப்புக்கள் மட்டும் தனது நிறுவனத்திக்கு வருகிறது. மிகுதி அழைப்புகள், தான் முன்னர் வேலை செய்து பின்னாளில் பிரிந்து வந்த நிறுவனத்துக்கு தானாக போகின்றது. இது சாத்தியமா?” என்று கேட்டார். சில கேள்விகளின் பின் அவருடைய நிறுவனத்துக்கு நேரடியாக வருவதாக ஒப்புக் கொண்டோம். புத்தம் புதிய நிறுவனம். சில தொலைபேசி அழைப்புக்களை வேறுவேறு இலகங்களில் இருந்து அழைத்து பரீட்சித்துப் பார்த்தோம். அழைக்கும் போதே நண்பரின் PBX (ஒரு நிறுவனத்தின் தொலைபேசி அழைப்புக்களை ஒன்றுபடுத்தும் சாதனம்) செயல்படும் முறையும் அதனுடன் இருக்கக் கூடிய உதிரி அமைப்புகளையும் பதிவு செய்து கொண்டிருந்தோம். அப்போதுதான் அந்த PBX உடன் இணைக்கப்படிருந்த ‘BUG’ கண்ணில் பட்டது. இந்த சிறிய உபகரணம் உள்ளே தனக்கு கொடுத்த ‘வேலையை’ செய்து கொண்டிருந்தது.

அந்த நிறுவனத்தின் உரிமையாளர் செய்த சிறு தவறுகளை இங்கு கூறுகிறோம்.

தான் முன்னர் வேலை செய்த நிறுவனம் பாவித்த அதேமுறையான தொலைபேசி கட்டமைப்பை ஏற்படுத்தியது மட்டுமிலாமல், அந்த PBX சாதனத்தை ஒழுங்கு அமைக்க முன்னர் வேலை செய்த நிறுவனம் பாவித்த நிறுவன வேலையாட்களையே பாவித்தார். அத்துடன் PBX சாதனம் பொருத்தப்பட்ட இடம் பாதுகாக்கப்படவில்லை. சரி இதோடு விஷயம் முடிந்தது என்று எண்ணாதீர்கள். ‘கிளைமாக்ஸ்’ இனித்தான் இருக்கிறது.

சரி தொலைபேசி பிரச்சினை முடிந்தாலும் எங்களுக்கு சந்தேகம் அடங்கவில்லை. உரிமையாளரின் அனுமதியுடன் அவருடைய / வேலையாட்கள் பாவிக்கும் கணினிகளை நோக்கி கவனத்தைத் திருப்பினோம். அவருடைய நிறுவனத்தில் இருந்த இரண்டு கணினிகளில் வெளியில் இருந்து இணைய வலை தொடர்பு மூலமாக கட்டுப்படுத்தும் (Remote Access) மென்பொருட்கள் பதிவிறக்கம் செய்யப்படிருந்தது. வியாபாரப் போட்டிகளில் இவை நடப்பது ஒன்றும் புதிய விடயமில்லை தான். அடுத்த இரண்டு வாரத்துக்கு அவரின் அலுவலக கணினி வலை அமைப்பை முழுமையாக கண்காணிக்க அனுமதி கேட்டோம். அதிர்ச்சியில் இருந்தவரின் மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொண்டோம். ஒரு வாரத்தில் அவருக்கு சொன்ன விடயம் அவரை மேலும் பேசாமடந்தையாக்கியது. அவரின் அலுவலகத்தில் வேலை செய்த ஒருவர், இந்த நிறுவன உரிமையாளர் முன்பு வேலை செய்த நிறுவனத்தால் இவரின் நிறுவனத்தில் வேலை செய்ய அனுப்பிவைக்கப்பட்டவர். அந்த வேலைக்கு அமர்த்தப்பட்டவரின் உதவியுடன்தான் இந்த ‘வேலைகளும்’ வழிநடத்தப் பட்டன. கணினி உலகில் Data Theft (தரவுகள் திருடுதல்) அனேகமாக உள்வீட்டு வேலையில் தான் ஆரம்பிக்கிறது.

“எந்த சுவருக்கும் கேட்கின்ற காதிருக்கும்”

*ஊடறுப்புகள் தொடரும்...*

jiffry.u@thaiveedu.com

■ ■ ■



உலகம் எங்களைத் திரும்பிப் பார்க்கவில்லை என்ற ஆதங்கம் எங்கள் எல்லோருக்குமே உள்ளதுதான். அதேசமயம் எங்கள் ஆதங்கங்களை உலகிற்குச் சொல்லவேண்டியதும் எங்கள் கடமையாக இருக்கிறது.

மொழி, இனம், கலாச்சாரம் எல்லாவற்றையும் கடந்து உலகை உன்னிப்பாய் கவனிக்கவைக்க பெரிதும் உதவுவது கலை வடிவமே. இன்றிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியின் துணையால் எவரும் கையாளக் கூடியதாகவும், எவரையும் சென்றடையக்கூடியதுமாக இருக்கும் சினிமாக் கலையே எமது ஆதங்கங்களை உலகிற்குச் சொல்ல எமக்கு இலகுவான வழியாக இருக்கிறது. ஆயினும், அதைநோக்கிய எமது முயற்சிகள் மிக மிக அரிதானதாகவே இருக்கின்றன. இலங்கைத் தமிழர்களாகிய எம்மிடம் பல கதைகள் இருக்கின்றன. பல அனுபவங்கள் இருக்கின்றன. பல நியாயப்படுத்தல்கள் இருக்கின்றன. எம்மிடம் இருக்கும் ஊக்கமின்மையும், ஒருங்கிணைப்பின்மையும், நிதியின்மையுமே எமக்கு பெருந் தடைகளாக இருக்கின்றன.

இவற்றை நீக்குவது யார்? பூனைக்கு மணி கட்டுவது யார் என்று காத்திராமல் நாங்களே மணி கட்டினால் என்ன என்ற முயற்சிதான் “ஓவம் அமைப்பு” / Our Visual Art Media. எங்கள் ஆதங்கங்களை, கருத்துகளை, ஆக்கங்களை எங்கள் திரை மொழியில் குறும்படங்களாக ஆக்கி பாராமுகமுள்ள உலகின் மனசாட்சியைத் தொடும் முயற்சியை இதன் வழியே நாங்கள் தொடங்குகிறோம்.

### ‘ஓவம்’ (Our Visual Art Media) அமைப்பு நடத்தும்

# திரைக்கதைப் போட்டி

(இது குறும்படங்களுக்கான கதை தேடும் போட்டி)

திரைப்படம் என்பது கூரிய அறிவாயுதம்! அதை நோக்கியதொரு முயற்சி இது!!

- ஒன்று முதல் இருபது நிமிடங்களுக்கு உட்பட்ட குறும்படங்களுக்கான கதைகளை அனுப்புங்கள்.
- ஒருவர் எத்தனை கதைகளையும் அனுப்பலாம்.
- நீங்கள் சொந்தமாக எழுதிய கதையாக இருக்கவேண்டும்.
- திரைக்கதை வடிவில் அனுப்பினால் வரவேற்கத்தக்கது.
- முன்பே படமாக்கப்பட்ட கதைகளை அனுப்பவேண்டாம்.
- திரைப்படமாக்கும் வசதியும், உதவியும் ஏற்படுத்தித் தருகிறோம்.
- பரிசுகள் உண்டு.

கதைகள் வந்து சேரவேண்டிய இறுதித் தேதி 30-09-2011

| | |
|---|---|
| முதலாம் பரிசுத் தொகை- | 200 டொலர்கள் |
| இரண்டாம் பரிசு | 150 டொலர்கள் |
| மூன்றாம் பரிசு | 100 டொலர்கள் |

முக்கிய குறிப்பு: அனுப்பும் உங்கள் பிரதியில் திரைக்கதை என எழுதிடுங்கள்.

சொல்லப்படாத எங்கள் கதைகள் எம் ஒவ்வொருவரிடமும் ஆயிரம் இருக்கும். அவற்றை உலகிற்குச் சொல்வோம் இவற்றைத் திரைமொழியில் சொல்ல நாங்கள் வழிசெய்து தருகிறோம்.

அனுப்பவேண்டிய முகவரி

**Thaiveedu**
**Our Visual Art Media**
**P.O. Box 63581, Woodside Square,**
**1571 Sandhurst Circle,**
**Toronto, ON**
**M1V 1V0**

**E-mail: ovam@thaiveedu.com Tel: 905-201-2631, 416 857 6406. Fax: 416 849 0594**

# நாடுகடந்து துரத்தும்..

5ம் பக்கத் தொடர்ச்சி...

செல்லப்பட்டோர் வேறிடங்களுக்குப் போவது தடைசெய்யப்பட்ட நிலையில் முகாம்களிலும் சிறைகளிலும் தம்வாழ்வைத் தொடர்ந்தனர். கிகியு குழுமத்தினரில் வெள்ளையருக்கு விசுவாசமானோர் மட்டுமே நைரோபியில் எஞ்சியிருந்தனர். 2 கிழமைகள் தொடர்ந்த நடவடிக்கை இது. அப்புறப்படுத்தப்பட்டோர் தொடர்ந்தும் பல்வேறு அடக்குமுறைகளை எதிர்கொண்டனர். சோவியத் யூனியனில் ஜோசப் ஸ்டாலின் காலத்து கடுழிய முகாம்கள் போன்று (Labour Camp) இங்கும் மிகக்கடு-மையாக விளை நிலங்களில் வேலை வாங் கப்பட்டனர். திட்டமிட்ட முறையில் சித்திர வதைகளும் தொடர்ந்தன.

முகாம்களிலிருந்தோரில் பெரும்பாலானோர் ஆபிரிக்க மதங்களைப் பின்பற்றுவோர். ஆபிரிக்க, ஐரோப்பியக் கிறிஸ்தவத் திருச்ச பைகள் பலவும் அடிக்கடி இம்முகாம்களுக்குச் சென்று மதமாற்றத்தில் மும்முரமாக ஈடுபட்டன. முகாம்களிலிருந்தோரை அரசாங்கத்தோடு ஒத்துப்போகுமாறு அறிவுரை வழங்கினர் இந்தத் திருச்சபையினர். அரசாங்கத்துக்கு முகாமிலிருந்தோர் தொடர்பான உளவுத் தகவல்களையும் கடவுளின் பெயரால் வழங் கினர். இதனால் வேண்டத்தகாதோராகவே முகாம்களிலிருந்தோரால் இவர்கள் கருதப் பட்டனர். இன்னொரு புறம் நோய்கள். கசம் போன்ற நோய்கள் முகாம்களிலும் சிறைக ளிலும் பரவியிருந்தன.

1956இல் மௌ மௌ இன் தளபதி Dedan Kimathi கைது செய்யப்பட்டு 1957 பெப்ரவரி 18ம் நாள் தூக்கிலிடப்பட்டு இரகசியக் கல்-லறையில் அடக்கம் செய்யப்பட்டார். இன்று வரையிலும் அவருடைய கல்லறை அடை-யாளம் காணப்படவில்லை. Dedan Kimathi யின் மறைவோடு மௌ மௌ சகாப்தம் முடிவுக்கு வந்தது.

1963இல் பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து கென்யா விடுபட்டது. சிறையிலிருந்து விடுத லையாயிருந்த Jomo Kenyatta ஜனாதிபதி யானார். "மௌ மௌ ஒரு வியாதி. அது ஒழிக்கப்பட்டுவிட்டது. அது ஒருபோதுமே நினைவுகூரப்படக்கூடாது" என்று திருவாய் மலர்ந்தருளினார் புதிய ஜனாதிபதி. இப்போ-தைய கென்யா அரசாங்கம்தான் மௌ மௌ இயக்கத்தினர் சுதந்திரப்போராளிகள் என்று பிரகடனம் செய்தது. Dedan Kimathiயின் சிலையொன்றும் நைரோபியில் நிறுவப்பட்-டுள்ளது. இதுவரை காலமும் இருந்த அர-சாங்கங்கள் மௌ மௌ இயக்கத்தினர் பயங்கரவாதிகள் என்றே சாதித்துவந்தன.

மீண்டும் பிரித்தானிய நீதிமன்றத் தீர்ப்புக்கு வருவோம். பிரித்தானியரின் கைகளில் அகப் பட்டு சிறைகளில் சித்திரவதைகளை அனுப பித்த ஐவர் - 4 ஆண்கள், ஒரு பெண் வெளியுறவு அமைச்சின் மீது தமக்கிழைக்-கப்பட்ட அநீதிக்கெதிராக வழக்குத் தொடுக்க வேண்டுமென்று கோரிய மனுமீதுதான் மேல்நீதிமன்றம் அனுமதியளித்துக் தீர்ப்புச் சொல்லியுள்ளது. ஐவரில் ஒருவர் தீர்ப்பு வரும்போது காலமாகிவிட்டார். ஏனைய நால்வரில் ஓர் ஆண் தன்னோடு சேர்ந்து வேறு சிலரை படையினர் அடித்துச் சித்திரவதை செய்ததாகவும் தான் இறந்தவர் போன்று கிடந்ததால் தப்பித்துக்கொண்டதாகவும் வேறு 11 பேர் இந்தச் சம்பவத்தில் அடித்தே கொல் லப்பட்டதாகவும் சொல்கின்றார். பலரால் கொடூரமான பாலியல் வல்லுறவுக்குள்ளாக் கப்பட்டதாக அந்தப் பெண் சொல்கின்றார். ஏனைய இரு ஆண்களுக்கு நிகழ்த்தப்பட்டது கொடுமையிலும் கொடுமை.

அவர்களில் ஒருவரின் வார்த்தைகளில்...

"நான் வெள்ளையினத்து எஜமானின் பண் ணையில் வேலை செய்துகொண்டிருந்தேன். என் எஜமான் காவல்துறை அதிகாரி. மௌ மௌ போராளிகளுடன் முதலில் எனக்குத் தொடர்பேதுமிருக்கவில்லை. பின்னாளில் தொடர்பு ஏற்பட்டது. அவ்வப்போது அவர்க ளுக்கு எஜமானின் வீட்டிலிருந்து உணவு எடுத்துச் சென்று கொடுப்பதுண்டு. சந்தேகத் தின் பேரில் என்னை கைது செய்து ஓரிடத்-துக்குக் கொண்டு சென்றனர். கண்களும் கைகளும் கால்களும் கட்டப்பட்டிருந்தன. ஒருவர் குறட்டோடு வந்தார். குறட்டினால் என்னுடைய விதைகளை நசுக்கிவிட்டார்(He castrated me). என் எஜமான்தான் இந்தக் கொடூரத்தைச் செய்தாரென நம்புகிறேன். இந்தச் சம்பவத்திற்கு முன்னர் நான் அடித்து உதைக்கப்பட்டிருந்தாலும் இச்சம்பத்தின்போது நான் சுயநினைவுடனையே இருந்தேன். அதைப்பற்றி இப்போது பேசும்போதும் எனக்கு வலிக்கின்றது. என்னால் திருமணம் செய்ய முடியவில்லை எனக்கென்று குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. என் வாழ்க் கையைப் பறித்துவிட்டார்கள்".

மௌ மௌ கிளர்ச்சி நடந்த காலப்பகுதியில் மௌ மௌ இயக்கத்தினரும் தம்மினத்தவர் கள் பலரை கொடூரமாகக் கொன்றதாகவும் குற்றச்சாட்டுக்கள் உண்டு. இரு தரப்பினராலும் 90,000 பேர் கொல்லப்பட்டதாக கென்யா மனித உரிமைகள் ஆணைக்குழு சொல்-கின்றது. 1961ம் ஆண்டு வெளியான ஓர் அதிகாரபூர்வ அறிக்கை 11,000 ஆபிரிக்கர்கள் கொல்லப்பட்டதாகச் சொன்னது. பெரும்பா-லானோர் பொதுமக்களே. வெள்ளையினக் குடியேறிகள் 32 பேர் இந்தக் கிளர்ச்சியின் போது கொல்லப்பட்டனர். 160,000 பேர் மிக மோசமான நிலைமைகளில் சிறைகளிலும் முகாம்களிளும் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இப்போது, கென்யாவில் நிகழ்த்தப்பட்ட கொடுமைகளுக்கு அப்போதைய கென்யா அரசு தான் பொறுப்பேற்க வேண்டும் என்கிறது பிரித்தானிய வெளியுறவு அமைச்சு. அப்போ தைய அரசை நிர்வகித்தவர்கள் பிரித்தானி யரே என்பதை மறந்துவிட்டார்கள். யார் யாருக்கு எவ்வாறான சித்திரவதைகள் செய் யப்பட்டனவென இலண்டனிலிருந்த தம் எஜமானர்களுக்கு கென்யாவின் வெள்ளை யின அதிகாரிகள் விலாவாரியாக எழுதிய-னுப்பிய ஆவணங்கள் காணாமற்போய் அண் மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அப்போ-திருந்த பிரித்தானிய அரசின் அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு இவை தெரியாதென்று சொல்ல முடியாது. எல்லோருக்கும் தெரிந்தே எல்லாக் கொடுமைகளும் அரங்கேறியிருக்கின்றன ஏன்? மகாராணியாருக்குக் கூடத் தெரிந்திருக்கலாம்.

பாதிக்கப்பட்டு, வழக்குத்தொடர முனையும் நால்வருக்கும் அவர்களின் கடைசிக் காலத் தில் தேவைப்படுவது பொன்னும் பொருளு மல்ல. கொஞ்சம் ஆறுதல், கொஞ்சம் அனு தாபம். கிடைக்குமென நம்புவோம்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

ஆங்கிலத்தில் Castration என்ற சொல்லுக்கு, பாலியல் அல்லது இனப்பெருக்க ஆற்றல் அழிப்பு எனப் பொருள் கொள்ளலாம். பொதுவாக ஆண்களுக்கு விதைகளையும் பெண்களுக்கு சினைப்பையையும் (Ovary) அகற்றிவிடுதலே Castration.

இலகுவில் விளங்கும்படி சொன்னால் நலமெடுத்தல்.

Sex எனும் சொல் பழந்தமிழில் நலம் என்றே அறியப்பட்டது. எனவே ஒருவரிட மிருந்து நலத்தை எடுத்தல் நலமெடுத்தல்.

தொன்று தொட்டு மத, சமூகக் காரணங்க ளுக்காக இது நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது.

போரில் தோற்றுப்போனோர், அரச அந்தப் புரங்களிலும் மாளிகைகளிலும் பணி புரிந்த அடிமைகள், பாலியல் குற்றங்களிலும் பாலியல் முறைகேடுகளும் ஈடுபட்டோர் என்று பலதரப்பட்டோர் இத்தண்டனையை அனுபவித்தோர். மனைவியோடு ஆசன வாயில் உறவு கொள்வோருக்கும் இதே தண்டனை.





விவாகரத்து வழக்கினால்
குழம்பிப்போனது நான் மட்டுமல்ல
எனது கிறடிட்டும் தான்
எப்படி இதனை மீள
கட்டியெழுப்புவது ?



வீட்டு விலை ஏற்றத்தினை
பயன்படுத்தி அதிகளவு
வட்டி செலுத்தும்
அனைத்து கடன்களையும்
ஒன்றாக்கலாமா?



நீங்கள் சுயதொழில்
புரிபவராக இருந்தாலென்ன
கைக்காசுக்கு உழைப்பவராக
இருந்தாலென்ன, வருமான
முறைக்கேற்ப மோட்கேச் ஒழுங்கு
செய்து தரப்படும்



உறவுகளுக்கிடையில்
வீட்டினை பெயர்மாற்றி
புதிய மோட்கேச்சுக்கு
செல்வதனால்
நன்மையுண்டா ?

rapid realty inc.

THAYA PK KANDIAH BAS, ABR®, AMP
BROKER OF RECORD / PRINCIPAL MORTGAGE BROKER

DIR: (416) 716-8707

Toronto Real Estate Board · REALTOR · MLS MULTIPLE LISTING SERVICE · ABR · OREA



CENTUM
Rapid Mortgages Inc.
LIC# 10156

துயா PK கந்தையா
BROKER OF RECORD / PRINCIPAL MORTGAGE BROKER

www.rapidrealty.ca
www.centumrapid.ca

Real Estate Off:416-259-2002 Mortgage Off:416-644-3555
211-80 Nashdene RD. Toronto ON M1V 5E4 FSCO Broker Lic#M08001083




"உங்கள் எண்ணங்களை அடைகாக்க"



"வீடு வாங்குவதும் விற்பதும் ஒரு வியாபாரமே, என்னிடம்
கிடைப்பது நட்பான சேவை, அதிகமனத்திருப்தி" *P.K*



# வீடு வாங்க... விற்க... உங்கள் முகவராக... இதோ...






என்னிடம் நீங்கள் வீடு வாங்கினால் உங்களுடைய "Lawyer Fees" மற்றும் "Moving Charges"

**இலவசம்!****

** Conditions Apply.

www.mvkhome.ca

**HomeLife Today Realty Ltd., Brokerage***

* Independently Owned and Operated
- Not intend to solicit buyers or sellers currently under contract

**Business: 416-298-3200**

HOMELIFE HIGHER STANDARDS

**VALLIKKANNAN MARUTHAPPAN,**
**Sales Representative.**
**Direct: 416-880-6051 / 416-623-4989**

HomeLife Today Realty நிறுவனத்தின் 2010ஆம் ஆண்டின் விழா கடந்த டிசம்பர் 4, 2010ஆம் தேதியன்று நடைபெற்றது. அன்று நிறுவனத்தின் முகவர்களுக்கு வழங்கப்படும் உயர் விருதான "Gold Member Award" மற்றும் "Rookie of the Year" ஆகிய இரண்டு விருதுகளையும் HomeLife நிறுவனத்தின் நிறுவனர் **திரு.ஆண்ரு சிம்மேர்மன்** அவர்கள் **திரு.வள்ளிக்கண்ணன் மருதப்பன்** அவர்களுக்கு வழங்கி கௌரவித்தார்.





# வீடு வாங்கப் போகிறீர்களா? இதோ உங்களுக்கான ஒரு வழிகாட்டி

சென்றமாதத் தொடர்...



வள்ளிக்கண்ணன் மருதப்பன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

### விதிகள்

### ஈட்டு (அடமானக் கடன்) விதி:

உங்கள் தவணைக்காலத்தின் அடிப்படையில் நீங்கள் பல்வேறு ஈட்டு வசதிகளைப் பெற முடியும். தவணை என்பது, உங்கள் நிதி வழங்குனரின் எதிர்பார்ப்பிற்கிணங்க, கால அளவின் பேரில், வட்டி வீதத்தின் அடிப்படையில் நீங்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை நிரல் படுத்துதல் என்பதாகும். தவணை முடிவுறும் சந்தர்ப்பத்தில், நீங்கள் விரும்பினால் அந்த ஈட்டை அதே நிதி வழங்குனரிடம் சந்தை நிலைவரத்திற்கு அமைய புதுப்பித்துக்கொள்ள முடியும். அதே வேளை, எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி முதல் தொகையில் ஒரு கணிசமான தொகையையோ அல்லது தண்டப்பணம் ஏதுமின்றி மொத்தக் கட்டணத்தையும் செலுத்தலாம். தவணைக்காலத்தின் போது கொடுப்பனவு முறையை மாற்ற விரும்பினால் அதற்கான

**தொடர் - 05**

ஒரு சிறிய கட்டணத்தை நிதி வழங்குனரிடம் செலுத்தி மாற்றிக்கொள்ளலாம்.

### பாதுகாப்பு அல்லது நெகிழ்வுத் தன்மையைத் தெரிவுசெய்தல்:

ஈடுகளானது திறந்த, மூடிய, மாற்றக்கூடிய விதத்திலும், நிலையான அல்லது மாறக் கூடிய வட்டிவீதங்களுடனும் கிடைக்கின்றன. அவற்றுள் உங்கள் தெரிவு, சந்தை நிலைவரம் பற்றிய கருத்துக்களையும், நீங்கள் கடனைத் திரும்பச் செலுத்த விரும்பும் காலப் பகுதியையும், கடன் தொல்லை இல்லாது நீங்கள் வாழவிரும்பும் காலத்தையும் பிரதிபலிக்கும்.

### மீளச் செலுத்தும் காலம்:

இது, உங்கள் மொத்தக் கடனையும் திருப்பிச் செலுத்த நீங்கள் எடுத்துக்கொள்ளும் காலப் பகுதியாகும். பெரும்பாலான நிதி வழங்குனர்கள் 15, 20, 25 ஆண்டுகாலப் பகுதிகளை உங்கள் தெரிவுக்காக வழங்குவார்கள். இதில் நீண்ட காலத்தை நீங்கள் தெரிவு செய்வீர்களேயானால், உங்கள் தவணைக் கட்டணம் குறைவாக இருக்கும். என்றாலும் அதிகமான வட்டியையும் செலுத்த நேரிடும். தவணைக் காலத்தைப் பொறுத்து உங்கள் தவணைக் கொடுப்பனவும் வேறுபடும்.

### கொடுப்பனவு நிரல்

### நீங்கள் செலுத்த வேண்டிய வட்டியைக் குறைப்பதற்குச் சில வழிகள் உண்டு:

குறைந்த காலக் கடனைப் பெற்றுக்கொள்ளுங்கள். (இது உங்கள் மொத்தக் கொடுப்பனவையும் செலுத்தி முடிக்க நீங்கள் எடுத்துக்கொள்ளும் வருடங்களின் எண்ணிக்கையே. இதை, உங்கள் தவணைக் கட்டணத்துடன் குழப்பிக்கொள்ளாதீர்கள்). இந்தத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகை அதிகமாக இருந்தாலும் கடன் பெறுமதியில் கூடிய தொகையையும் குறைந்த வட்டியையுமே கட்ட நேரிடும்.

உதாரணமாக, நீங்கள் பத்து வீத வட்டிக்கு ஒரு லட்சம் டொலர்களைக் கடனாகப் பெறுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். (இலகுவாகக் கணிக்கவே இந்தப் பெறுமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதைவிடக் குறைந்த வட்டி வீதத்தில் நீங்கள் தற்போது கடன் பெறலாம்).

| தவணைக் காலம் (வருடம்) | செலுத்திய மொத்த வட்டி | மாதாந்தக் கட்டணம் | மொத்தக் கட்டணம் |
|---|---|---|---|
| 25 | $168,500 | $895 | $268,500 |
| 20 | $128,480 | $952 | $228,480 |
| 15 | $91,340 | $1,063 | $191,340 |
| 10 | $57,320 | $1,311 | $157,320 |
| 5 | $28,880 | $2,148 | $128,880 |

உங்கள் கொடுப்பனவைத் துரிதப்படுத்துதல், வாராந்த அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை என்ற தவணைக் காலத்தைத் தெரிவு செய்யுங்கள். ஒரு மாதத்தில் அனேக தவணைகளைக் கொண்டிருந்தால், மொத்தத்தில் குறைந்த வட்டியையே செலுத்துவீர்கள்.

மேலே தரப்பட்ட அதே தரவுக்கு, 25 ஆண்டுகள், ஒரு லட்சம் டொலர், 10 சதவீத வட்டி உதாரணத்துக்கே போவோம்.

| கொடுப்பனவு திட்டம் முதிர்வு | தொகை | மொத்த வட்டி | ஈட்டு |
|---|---|---|---|
| மாதாந்த கொடுப்பனவு (12) ஆண்டுகள் | 895.00 | 168,500 | 25 |
| இரு வாரங்களுக்கு ஒரு முறை (26) ஆண்டுகள், 10 மாதங்கள் | 447,50 | 118,927 | 18 |
| வாராந்தக் கொடுப்பனவு (52) ஆண்டுகள், 9 மாதங்கள் | 223,75 | 118,111 | 18 |

### கடன் மூலத்தொகையில் பெருந்தொகையைச் செலுத்துதல்:

நிதி வழங்குனருடனான பேச்சின்போது, மூலக்கடன் தொகையினை இடையிடையே செலுத்துவது பற்றிப் பேசுங்கள். அனேக நிதி வழங்குனர்கள், உங்களது ஒவ்வொரு ஆண்டுத் தவணை முடியும் போதும் இது போன்ற கொடுப்பனவுகளை அனுமதிக்கின்றார்கள். நீங்கள் தெரிவு செய்யும் கொடுப்பனவுத் திட்டத்தின் அடிப்படையில் இந்தத் தொகையை மாதந்தோறுமோ அல்லது வாரந்தோறுமோ செலுத்த அனுமதிக்கப்படுவீர்கள். இந்த முறையானது, நீங்கள் மிக விரைவில் கடனில் இருந்து விடுதலை பெற உதவும்.

உதாரணமாக, 8 சதவீத வட்டிக்கு 80 ஆயிரம் டொலர்களை 25 ஆண்டுகாலத் தவணைக்கு கடனாகப் பெறுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளலாம். அதேசமயம் ஆண்டுதோறும் 2 ஆயிரம் டொலர்களை மூலக்கடன் தொகையை அடைப்பதற்காக வழங்க முடியும் என்று வைத்துக்கொள்வோம்.

| கொடுப்பனவு | மூலக்கடன் | மூலக்கடன் |
|---|---|---|
| ஆண்டுதோறும் $2000 | கொடுப்பனவு இல்லை | கொடுப்பனவு இல்லை |
| தவணை முடிவு ஆண்டுகள் | 25 ஆண்டுகள் | 14.8 |
| செலுத்திய மொத்த வட்டி | $103,165 | $55,549 |

### திறந்த ஈடு:

இது உண்மையிலேயே மிகச் சிறந்த ஈட்டு வகையாகும். இதில் மூலக் கடன் தொகையை பகுதி பகுதியாகவோ, மொத்தமாகவோ எப்போதும், எந்தவித தண்டப்பணமும் இல்லாமல் செலுத்த முடியும். வட்டி வீதம் குறைவாகவோ அல்லது உங்கள் தவணைக்காலத்தை விரைவாகவோ முடித்துவிடலாம் என்றோ நீங்கள் எண்ணுவீர்களானால், உங்களுக்கு மிக உகந்த ஈட்டு வகை இது. இதில், தவணையானது ஆறுமாதமாகவோ, ஒரு வருடமாகவோ அமையலாம்.

### மூடிய ஈடு:

இதில், முழுத் தவணைக்குமான வட்டி வீதம் நிலையானதாக இருக்கும். அத்துடன், ஒப்பந்தத்தில் ஏதும் மாற்றங்களைச் செய்ய விரும்பினால் தண்டப்பணம் ஒன்றைச் செலுத்த வேண்டியிருக்கும். வட்டி வீதம் எதிர்காலத்தில் உயரலாம் என்று நினைப்பவர்களுக்கும், விரைவாக கடனைச் செலுத்தி முடிக்க முடியாது என்று நினைப்பவர்களுக்கும் ஏற்றது. இதுபோன்ற கொடுப்பனவு முறையே பரந்து காணப்படுகிறது.

### மாற்றக்கூடிய ஈடு:

இதுவும் மூடிய ஈட்டுத் திட்டத்தைப் போன்றதே. ஆனால் அதேவேளை நீங்கள் விரும்பினால், எந்தவித தண்டப்பணமும் செலுத்தாமல், தவணைக் காலத்தை நீட்டித்துக் கொள்ளலாம். அதாவது எதிர்காலத்தில் வட்டி வீதம் குறையும் என்று நீங்கள் நினைத்தால், முதலில் ஒரு தவணையைத் தெரிவு செய்து பின்னர் நீங்கள் விரும்பிய நேரத்தில் தவணையை நீட்டிக்கலாம். அல்லது அதே தவணையை வைத்துக்கொள்ளலாம்.

### மேலதிகச் செலவு:

நீங்கள் செலுத்தவிருக்கும் முதல் தொகையையும் அதற்குப் பின்னான தவணைக் கட்டணத்தையும் கணக்கிடுவதற்கு முன் சில ஆயிரம் டொலர்களைத் தனியாக எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில், சில வேளைகளில் எதிர்பாராத விதமாக சில செலவுகள் உண்டாகலாம். அதை எதிர்கொள்ளத்தான் இந்தப் பண ஒதுக்கீடு. ஆனால் ஒதுக்கப்பட்ட பணம் முழுவதுமாகச் செலவிடப்படமாட்டாது என்பது மகிழ்ச்சி தரும் விடயம்தானே?

### சொத்து வரி:

நீங்கள் வாங்கும் சொத்துக்கான வரியின் ஒரு பகுதியை ஏற்கனவே சொத்தை விற்பவர் கட்டியிருந்தால், மிகுதி வரியை நீங்களே செலுத்த வேண்டி வருவதோடு கடன் தவணை முடிவுறும் தறுவாயில், அவர் செலுத்திய வரிப்பணத்தை நீங்கள் செலுத்தவேண்டியும் வரும் கூடவே, அதிக வட்டிவீதத்திலான ஈட்டைப் பெற்றிருந்தால், உங்கள் சொத்துக்கான வரிப்பணத்தை ஈட்டுக்கான தவணைப் பணத்துடன் சேர்த்திருப்பதை உறுதிசெய்து கொள்வார்.

### பயன்படு செலவு:

இது, ஒரு அளவீட்டு மானியின் மூலம் கணிக்கப்படும். நீங்கள் பயன்படுத்துவதற்குத் தகுந்தாற்போல் இந்த மானி காட்டும் கட்டணத்தை மட்டும் நீங்கள் செலுத்தினால் போதும்.

### நில உரிமை மாற்று வரி:

அனேக மாகாணங்களில், இந்த வரி 1 முதல் 4 வீதம் வரை விதிக்கப்படுகிறது. உதாரணமாக, ஒன்றாரியோவில் 55,000 முதல் 250,000 டொலர் வரை பெறுமதியான நில உரிமை மாற்றுக்கு 1 சதவீதமும், 4 லட்சம் டொலருக்கு மேற்பட்ட பெறுமதி உடைய உரிமை மாற்றத்துக்கு 2 சதவீதமும் வரியாக அறவிடப்படுகிறது.

*தொடரும்...*

vallikkannan@thaiveedu.com

■ ■ ■

### ஒரு கேக் - மூன்று பிறந்த நாள்:

நியூயோர்க்கில் ஓர் அப்பா, அம்மா, மகன் மூவருக்கும் மிக அரிதான ஒற்றுமை. 2011 ஜுலை 19ம் நாள் பிறந்த மகன் ஏற்கனவே அம்மா, அப்பாவுக்கிடையே இருந்த ஒற்றுமையில் இன்னொரு பங்காளியாயுள்ளார். மூவரது பிறந்த நாளும் ஜுலை 19 என்பதே அவ்வொற்றுமை. ஜுலை 19 இரவு 11:30க்குப் பிறந்த மகன் அரை மணிநேரம் தாமதித்திருந்தால் 48 மில்லியனுக்கு ஒன்று என்ற விகிதத்தில் நிகழக்கூடிய அதிசயம் நிகழ்ந்திராது.

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா ஊழியர்)
Security Camera Systems
Telephone and Voice Mail Systems
Voip Phone Systems - Wireless Networks
Surveillance Cameras
Voice and Data Structured Cabling
Professional Cable Fishing for
Residential and Commercial Buildings
416.203.0344


## சமூக நலன்சார்ந்த கொடுப்பனவுகள்:

# பாதகமான முடிவும் மீளாய்வும்

**கனடிய மாகாண அரசின் OW, மாநில அரசின் ODSP விண்ணப்பத்தின் பாதகமான முடிவை எவ்வாறு மீளாய்வு/ மேன்முறையீடு செய்யும்படி கேட்கும் முறை (OW, ODSP Decision Internal Reviews/Appeals Process):**

கடந்த சில மாதங்களாக தாய்வீட்டிதழில் கனடிய மாகாண, மாநில மத்திய அரசுகளால் வருமானம் குறைந்தோருக்கும், வலுவளரிஎர்களுக்கும் நல்ல முறையில் திட்டமிட்டு அமுல்படுத்துகின்ற பல்வேறுபட்ட பொது நலக் கொடுப்பனவுகளான Social Security System பற்றியும் அவற்றினை எவ்வாறு விரைவாகப் பெறலாமென்பதைப் பற்றியும் விபரமாகப் பார்த்தோம்.

இப்போது, சமூக நலக் கொடுப்பனவுகளுக்கு நீங்கள் உங்களுடைய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது, நீங்கள் அந்நன்மைகளுக்கான அவர்களது தகுதி காண் தகமைகளைப் பூர்த்தி செய்யாதவிடத்து, உங்களது விண்ணப்பங்கள் அவர்களால் நிராகரிக்கப்பட்டால் அல்லது அவர்கள் உங்கள் விண்ணப்பங்களின் முடிவுகளைத் தீர்மானிப்பதற்கு மேலதிக தகவல்களை சமர்ப்பிக்கும்படியான முடிவுகளை எடுத்தால், அம்முடிவுகளை புதிய மருத்துவத் தகவல்கள் மூலம் உங்களது வலுவளர் மற்றும் நிலைமைகளை எடுத்துக் கூறி அவர்களது முடிவுகளை மீளாய்வு செய்யும் அல்லது மேன்முறையீடு செய்யும் முறையை பற்றி இவ்வாக்கத்தில் பார்ப்போம்.

முதலில், கனடிய மாகாண மாநில அரசுகளின் மீளாய்வு / மேன்முறையீடு செய்யும் முறையை (Appeals and Internal Reviews) பார்ப்போம்.

### மீளாய்வு / மேன்முறையீடு செய்யும் முறை:

OW, ODSP விண்ணப்பங்களில் அவர்கள் எடுத்த பாதகமான தீர்மானத்தை மீளாய்வு செய்யும்படி மேன்முறையீடு செய்தல்: How to ask to Reconsider their Decision on your OW, ODSP Application:

இம்மேன்முறையீடு / மீளாய்வு படிமுறையை மிகச் சுருக்கமாவே பின்வரும் பந்திகளில் பார்ப்போம். மூன்று மட்டங்களிலுள்ள கனடிய அரசுகளும் அதாவது கனடிய மாகாண, மாநில, மத்திய அரசுகளும் வாசகர்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய முக்கிய விடயமென்னவென்றால் மேலே கூறிய மூன்று மட்ட அரசுகளும் ஒன்றோடு ஒன்று சமூக நலக் கொடுப்பனவுகள் விடயத்தில் உங்களது தகவல்களை பரிமாறுவதில் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு செயற்பட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளவார்கள். ஆகவே, இக் கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தங்களது சொந்தவிடயங்கள் தொடர்பாகத் தகவல்களைக் அவர்களோடு பரிமாறும் போது ஒளிவு மறைவின்றி நேர்மையாகவும் கவனமாகவும் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

நான் ஏற்கனவே, பலமுறை எனது கட்டுரைகளில் குறிப்பிட்டது போல ஒரு கனடிய குடிமகன் தான் வேலையற்றுத் தனது வாழ்வை மீளமைக்க பொருளாதாரீதியில் கஸ்டப் படும்போதோ அல்லது உள/உடல் ரீதியில் வலுவளரானாலோ அவர்கள் தமக்கு அண்மையிலுள்ள மாகாண சமூக நலசேவையை அணுகி தன்னுடைய நிலைமையை விளக்கி அரசின் உதவிக்கு விண்ணப்பிப்பது அவரது அடிப்படை உரிமையாகும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது அவர்கள் உங்களைப் பற்றிச் சில அடிப்படைத் தகவல்களை கேட்பார்கள். உங்களது OW விண்ணப்பமாயின் பத்து நாட்களுக்குள் தங்களது முடிவை (Notice of Decision) தெரிவிப்பார்கள். நீங்கள் ODSPக்குப் விண்ணப்பித்திருந்தால் 90 நாட்களுக்குள் உங்களது விண்ணப்பத்தின் சாதக/பாதக முடிவை (Notice of Decision) எழுத்து மூலம் அறிப்பார்கள். அதே வேளையில் அவர்களது முடிவோடு நீங்கள் உடன்படாவிட்டால் OWவிற்கு விண்ணப்பித்திருந்தீர்களேயாயின் பத்து நாட்களுக்குள்ளும் ODSPயிற்கு விண்ணப்பித்திருந்தீர்களேயாயின் 30 நாட்களுக்குள்ளும் உங்களை Internal Review/Appeal செய்யும் படி அதே பதிற்கடிதத்தில் கேட்பார்கள்.

இவ்விடயத்தில் அவர்கள் மிகவும் நேர்மையாக நடந்துகொள்வதற்காக, முன்பே பாதக மான முடிவை எடுத்த Case Workerஇடம் உங்களது Appealஐ அனுப்பாது அதே அமைச்சில் உள்ள இன்னொரு Case Worker இடம் உங்களது மேன்முறையீட்டு/மீளாய்வு விண்ணப்பத்தை சமர்பித்து தங்களது நடு நிலையைப் பேணுவார்கள். ஆகவே நீங்கள் முதலில் அவர்களது Appeal/Internal Review Committeeக்கு உங்களது மேன்முறையீட்டை /மீளாய்வு விண்ணப்பத்தைச் சமர்க்கும்படி ஆலோசனை கூறுவார்கள். Internal Review Committeeயின் முடிவிலும் நீங்கள் திருப்தி யடையாவிட்டால் அவர்களது அக்கடிதத்தோடு நீங்கள் அவர்களது Social Benefits Tribunal (SBT) உங்களது மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்கலாம். இந்த இடத்தில், என்னுடைய அனுபவத்தில் அதாவது நான் 10 வருடங்களாக Hamilton Mountain Legal and Community Services Clinicஇல் அவர்களது Board of Director ஆக வேலை செய்த அனுபவத்தின் படி நீங்கள் உங்களுக்கு அண்மையிலுள்ள Community Legal Clinic சட்டத்தரணியை அணுகி அவரது இலவச சட்ட ஆலோசனையின்படி நடப்பதே உங்களது Appealஐ, மேன்முறையீட்டை சரியாக விண்ணப்பித்து அவர்களது பாதகமான முடிவை மாற்றியமைக்கச் செய்வதற்கான சரியான வழியென நான் நம்புகிறேன்.

ODSP/OW ஐ பொறுத்தமட்டில் உங்களது Assistance Refused, Reduced, or complately cut off நீங்கள் முதலில் Internal Reviewக்கும் அம்முடிவில் நீங்கள் திருப்திப்படாவிட்டால் அவர்களது Social Benefits Tribunal (SBT) உங்களுக்கு அண்மையிலுள்ள Community Legal Clinicஇன் சட்டத்தரணிகளின் இலவச ஆலோசனையின்படி உங்களது மீளாய்வு/ மேன்முறையீடு விண்ணப்பத்தை சமர்ப்பித்து உங்களுக்கான நீதியான தீர்வைப் பெறலாம். Social Benefits Tribunal இந்நீதிமன்று பக்க சார்பற்ற சுதந்திரமான நீதிமன்றமாகும் (The (SBT) Social Benefits Tribunal is Independent and it has the power to make a different decision on your OW/ODSP Application). அவர்களது முடிவு எப்போதும் எழுத்து மூலமே உங்களுக்கு அறியத்தரப்படும்.

### மீளாய்வு / மேன்முறையீடு விண்ணப்பத்தில் முக்கியமாக கவனிக்க வேண்டியவை:

கனடிய மாகாண/மாநில அரசுகளால் உங்களது OW / ODSP Application விண்ணப் பத்தில் அவர்கள் ஏன் நிராகரித்தார்கள் என்பதை 10 நாட்களுக்குள்ளோ 90 நாட்களுக்குள்ளோ எழுத்து மூலம் தருவார்கள். I am requesting an Internal Review என்று குறிப்பிட்டு உடனடியாக காலம் தாமதிக்காது எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும். குறித்த அக்காலக்கெடுவுக்குள் நீங்கள் உங்களது முடிவைக் கூறவிட்டால் அதற்கான காரணத்தை பின்பு விளக்கவேண்டி வரும். முடியுமாயின் Explain Why you do not agree with their decision that was made on your application (Optional) இக்காரணத்தைக் கூறுவது உங்களது விருப்பத்திற்குரியது.



ஆ.க. ஆனந்தநாதன்

ஏதாவது மருத்துவ மற்றும் புதிய தகவல்கள் இருந்தால் அவற்றின் பிரதிகளையும் சேர்த்து உங்களது மேன்முறையீடு/மீளாய்வு விண்ணப்பத்தோடு அனுப்பலாம். (Attach any additional medical/other related information you think may help in their review.

மிகமுக்கியமாக உங்களது OW/ODSP விண்ணப்ப reference Numberஐயும் உங்களது முழுப்பெயர் ID Number உங்களது கையொப்பம் என்பவற்றுடன் விண்ணப்பித்த திகதியும் குறிப்பிடுதல் வேண்டும் (Include your full name OW/ODSP ID number, Signature and date on your Request for Internal Review/Appeal)

### Things to keep in Mind:

உங்களால் உங்களது மேன்முறையீட்டை/ மீளாய்வு மனுவை அவர்கள் தரும் காலக் கெடுவுக்குள் சமர்ப்பிக்காவிட்டால் ஏன் அவ் வாறு முடியவில்லை என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும்.

அவர்களுக்கு அனுப்பும் தகவல்கள்/ ஆவணங்களின் பிரதிகளை எப்போதும் நீங்கள் வைத்திருத்தல் வேண்டும். இவை, பின்பு நீங்கள் அவர்களது முடிவை அதாவது உங்களது Appeal/Reviews இல் மேற்கொண்ட முடிவை எதிர்த்து Social Benefits Tribunal (SBT) Appeal செய்யும் போது அவை உங்க ளது பக்கத்தை நிரூபிப்பதற்கு உதவியாக இருக்கும்

இறுதியாக நீங்கள் உங்களது OW/ODSP Appeal/Review Requestஐ வாபஸ் வாங்கினால், நீங்கள் உங்களது OW/ODSP மேன் முறையீட்டை / மீளாய்வு விண்ணப்பத்தின் அவர்களது முடிவை இறுதியானதாக ஏற்றுக் கொள்கின்றீர்கள். (If you withdraw your OW/ODSP Appeal/Review request you will not be able to appeal their decision to the Social Benefits Tri banal.

மேற்கூறிய வகையில் திருப்திப்படாதவிடத்து இறுதியாக SOCIAL BENEFITS TRIBUNAL இல் மனுச்செய்யலாம். இதற்கான விண்ணப்பத்தினை http://www.sbt.gov.on.ca இணையத்தளத்திலோ அல்லது 1 800 753 3895 என்னும் தொலைபேசி இலக்கத்திலோ அல்லது கீழ்காணும் முகவரியிலோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

SOCIAL BENEFITS TRIBUNAL<br>7th Floor, 1075 Bay Street<br>Toronto, Ontario M5S 2B1

ananthanathan@thaiveedu.com

■ ■ ■

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்த கோடைகால ஒன்றுகூடல் - 2011**

**ஆகஸ்ட் 06**

காலை 10.00 மணி

Middlefield & Steeles) சந்திப்பில் அமைந்துள்ள

மிலிக்கென் பூங்காவில் (Milliken Park) "A" பகுதியில்

நடா G. நடராஜா: 416 616 8751, K. மகேந்திரலிங்கம்: 647 287 4611,

R.ரவிவர்மன்: 647 220 2657

cammtac Business Services Inc.

MORTGAGE | MUTUAL FUND | TAX | ACCOUNTING | CONSULTING

Krish Tharmarajah
Management Consultant

1200 Markham Road, Unit 428
Scarborough, ON.
M1H 3C3

Tel: 416.431.0202
Fax: 416.431.3943
kananthan2003@hotmail.com

A.K. Ananthanathan, M.A., M.S.W., R.S.W.
Registered Social Worker With OCSWSSW
MVA SOCIAL WORKER/ASSESSOR
CPP and OAS Application Process.

• CPP Disability Pension
• Provincial ODSP & OW
• RDSP Tax Credit Certificate

வலுவளருக்கான உடல், உளநலப்பாதிப்பு மதிப்பீடு
சமூகநலக் கொடுப்பனவுகள்
சகல விண்ணப்பப் படிவங்களும் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.


வாழ்வின் ஓர் அடையாளம் வீடு...
$449,000
16th Ave / 9 Th Line
3 Bedrooms, 3 Washrooms
Must See To Beleive 6 Years Old
$349,900
Kennedy/Denison
2+1 Bedrooms, 2 Washrooms
Walking Distance To Pacific Mall
$115,000
Neilson / Sheppard
2+1 Bedrooms, 2 Washrooms
Close To 401,Cent.College
சகல விதமான படிவங்களும் நிரப்பிக் கொடுக்கப்படும்
இரஞ்சன் or செல்வா
416.816.1220
$426,000
Birchmount/ Lawrence
3+2 Bedrooms, 3 Washrooms
Main Floor Totaly Renovated
$239,900
Morningside/Sheppard
3 Bedrooms, 2 Washrooms
Close To Shopping Mall
$169,900
Neilson/Mclevin
2+1 Bedrooms, 2 Washrooms
Minutes To Hospital & Hwy 401
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
Office: 416.284.5555
RANJAN FRANCIS XAVIER
Sales Representative
Cell: 416.816.1220
"List your Home with a Professional & Save Money"


Starting From 193,903
Starting From 279,900
Starting From 211,990
Starting From 202,900
Call Krish For More Deatils....
New Condos with VIP Price
www.newcondoingta.com
HOMELIFE
HIGHER STANDARDS
Krish Sivapatham
Sales Representative
Direct : 416-895-4457
Indepently Owned and Operated, REALTOR
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
This is not intended to solicit properties Currently under contract/ some conditions may apply

# விடுமுறைக் காலமும் Credit Card பாதுகாப்பும்



சுரேன் சொர்ணலிங்கம்

## விடுமுறை காலத்தில் உங்கள் Credit cardஐப் பாதுகாக்கச் சில வழிமுறைகள்:

உங்கள் விடுமுறை காலத்தின் போது உங்கள் credit card எங்கோ தொலைந்து போயிருந்தாலோ அல்லது அது புதிய இடத்தின் நிதிநிறுவனங்களால் அது நிராகரிக்கப்பட்டாலோ, உங்கள் விடுமுறையின் நோக்கம் முற்றிலும் வீணாகிவிடும். உங்கள் இருப்புக் கணக்கு சம்பந்தமான சரியான தகவலைப் பெறவும் மற்றும் உங்கள் cardஐ வேறு யாராவது தவறாக பயன்படுத்தாமல் இருக்கவும் இங்கு சில வழிமுறைகள் தரப்பட்டுள்ளன.

நீங்கள் ஊரைவிட்டு செல்வதற்கு முன் உங்கள் நிதி ஆலோசகரை சந்தியுங்கள். இப்போது நிதிநிறுவனங்கள் credit cardகள் சம்பந்தமான software வைத்துள்ளன. அதன் மூலம் பணம் கையாடல் போன்ற அசம்பாவித சம்பவங்களை தடுத்து விடலாம்.

கனடாவை விட்டு நான் வெளியே பயணித்துக் கொண்டிருந்த போது இந்த காரணத்திற்காக என்னுடைய card பல நேரங்களிலும் நிராகரிக்கப்பட்டது. அதனால் இப்பொழுது என்னுடைய credit card நிறுவனத்திடம் நான் எங்கு செல்கிறேன் மற்றும் ஒவ்வொரு நகரத்திலும் எவ்வளவு நாட்கள் தங்கி இருப்போன் போன்ற விவரங்களை தவறாமல் கூறிவிடுவேன்.

உங்கள் credit cardன் எல்லை வரம்புகளை சோதனை செய்து கொள்ளுங்கள். உங்கள் credit மற்றும் debit cardகளின் முடிவுறும் தேதிகளை நன்கு தெரிந்து வைத்திருங்கள். நீங்கள் ஒரு பெரிய பயணம் மேற்கொள்வதாக இருந்தால், உங்களுடைய cardகளுக்கு நீங்கள் கட்டவேண்டிய கட்டணங்களையெல்லாம் செலுத்தி விட்டுச் செல்லுங்கள்.

உங்கள் credit மற்றும் debit card எண்கள், அவற்றை வழங்கிய நிதிநிறுவனத்தின்



தொலைபேசி எண்களை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் card தொலைந்து போகவோ அல்லது திருடப்படவோ நேரிட்டால் இவை உங்களுக்கு மிகவும் உதவும்.

உங்களுக்கு தேவையானதை மட்டுமே எடுத்துச்செல்லுங்கள். நாட்டை விட்டு வெளியே பயணிக்கும் போது, என்னுடைய rewards cards, hospital cards மற்றும் இது போன்ற பிற வகையறாக்களை நான் வீட்டிலேயே விட்டுச் செல்வேன். சமீபத்தில் Russiaவிற்கு சென்றிருந்த என்னுடைய ஒரு நண்பனின் debit cardஐ அங்குள்ள ஒரு A.T.M. விழுங்கி விட்டது. அதிருஷ்டவசமாக அவரின் வேறு ஒரு debit card இருந்தது. அதை பயன் படுத்தி அவர்களுக்கு தேவையான பணத்தை எடுத்து, மீதியுள்ள பயணத்தை மேற்கொண் டார்கள்.


ரசீது போன்ற ஆவணங்களை சரியாக வைத்திருங்கள். உங்கள் கணக்கு அறிக்கையில் நீங்கள் கையெழுத்து போடுவதற்கு முன் credi card, வங்கி இருப்புக் கணக்கு விபரங்கள் மற்றும் பிற ஆவணங்களை சரியாக உங்கள் கைவசம் வைத்திருங்கள். ஒரு முறை நான் caribbeanஇற்குச் சென்றிருந்தேன். நான் அங்கு தங்கி இருந்த இடத்தில் உள்ள ஒரு பொதுவான ATM இயந்திரத்தில் என்னுடைய cardஐ பயன்படுத்தி ஒரு பணம்பெற முயற்சித்தேன். ஆனால் பணம் என்கைக்கு கிடைக்கவில்லை. அது என்னுடைய செலவில் எழுதப்பட்டுவிட்டது. இதை கண்டுபிடிக்க CIBC பலமாதங்கள் முயன்ற பின், கடைசியாக நான் பணத்தை திரும்ப பெற முடிந்தது.

நமக்கு நன்கு அறிமுகம் இல்லாத இன்னொரு நாட்டின் currency (நோட்டு)ஐ பயன்படுத்தும் போது செலவு மிக அதிகமாக நேரிடலாம். phone மூலம் அவ்வப்போது currency நோட்டுகளின் மதிப்பை அறிந்து கொள்ளலாம். உங்கள் credit cardஐ நீங்கள் பயன் படுத்தும்போது அதிலிருந்து நீங்கள் எவ்வளவு பணம் செலுத்துகிறீர்கள் என்பதை VISAவின் currency calculator மூலம் நீங்கள் கணக்கிட முடியும். ஆயினும் இரண்டு நாட்டு currencyகளின் ஒரு நாளுக்குரிய மதிப்பைதான் இந்த VISA தெரியப்படுத்தும். நீங்கள் உண்மையில் currencyஐ வாங்கிய தேதியில் இருந்த அதன் மதிப்பு இப்போது மாறுபாடு உடையதாக இருக்கலாம்.

Contactless credit cardகள் பற்றி உஷாராக இருங்கள். புதிய நிறுவனங்கள் வழங்கும் creditcardகளும் மற்றும் பிற ஆவணங்களும் பல மோசடிகளுக்கும் மற்றும் ஏமாற்று தந்திரகங்களுக்கும் காரணமாய் அமைந்துள்ளன. contactless cardகளில் ஒரு radio frequency identification என்றழைக்கப்படும். ஒரு computer chip பதிக்கப்பட்டிருக்கும் அல்லது RFID tag கட்டப்பட்டிருக்கும். ஒரு payment terminal முன் (இது ஒரு store ஆகவோ அல்லது ஒரு யோக்கியமற்ற மனிதர் பயன் படுத்தும் ஒரு manual unit ஆகவோ இருக்கலாம்). இதை அசைத்தால் cardன் எண் மற்றும் அது முடிவுறும் தேதி முதலியவைகளை radio waves மூலம் chip தெரிவிக்கும். இந்த முறையில் cardஐ நீங்கள் சொருக வேண்டியதில்லை. RFID bolcking wallets அல்லது passport holdersஐ online மூலம் order செய்யலாம்.

surendran.sornalingam@thaiveedu.com

■ ■ ■



from the firm foundations of creative photos

la photographie est un art

digimedia Creations

Karuna Photography

416.467.4952

- Wedding Photography
- Complete Online Workflow
- Online Slideshows
- DVD Slideshows
- Custom Designed Digital Albums
- Parent Albums/ iPhone Galleries
- Online Digital/Album Proofs
- E-Com Site
- Canvas and Metal Printing

www.facebook.com/digimediaphoto

www.digimediaphoto.com


THE
YARDS
Bathurst & Fort York
28 Storeys high
6 Storey podium
Price are from the Low $190'S
That's right it's BELOW $460/sf
Closing Date: June 2014
3% Discount on all the VIP Clients
FREE ASSIGNMENT
HST INCLUDED
CAPPED LEVIES at $3,500
Extended Deposit with only $25,000 for Parking
Less than 5 Minutes distance from any direction from the Canada's famous
CN Tower
ROGERS Centre
Air Canada Centre
CNE (Exhibition Place)
Toronto City Airport
and Much more....
SUJANSHAN.com
Real Estate Broker
416.402.1040
www.NewReleaseCondo.com


Buying Or Selling
Residential, Commercial, Land & Investment Properties
Rossland/Westney $329,900
Rooms 7+2, Bedrooms 3+1, Washrooms 3
Markham/Eglinton $369,999
Rooms 7, Bedrooms 3, Washrooms 3
Morningside/Finch $449,900
Rooms 8+3, Bedrooms 4+1, Washrooms 4
Brimley/Denison $479,900
Rooms 6+1, Bedrooms 3+1, Washrooms 3
Ninth Lane/ Hoover Park $499,900
Rooms 9, Bedrooms 3, Washrooms 3
Mccowan/14th Ave $649,000
Rooms 8, Bedrooms 4, Washrooms 4
Mccowan / Steels $234,900
Rooms 6, Bedrooms 2+1, Washrooms 2
Mccowan/Sheppard $237,500
Rooms 6, Bedrooms 3, Washrooms 2
Mccowan/Hwy $279,900
Rooms 6, Bedrooms 3, Washrooms 2
Jarvis/Wellesley $299,000
Rooms 4, Bedrooms 1, Washrooms 1
Mccowan/Ellesmere $344,900
Rooms 5, Bedrooms 2, Washrooms 2
Warden/Finch $355,000
Rooms 7+2, Bedrooms 4+1, Washrooms 2
HOMELIFE
HIGHER STANDARDS
Sathy Sivasubramaniam Sales Representative
2004/2005 Silver Award
2006/2009 Platinum Club Award
2010 Chairman Club Award
Top 5% Sales Representative in Canada 2010
For Sellers:
Free Market Evaluation Available
Competitive commission Packages available
Will pay for Staging & Consultation
Will pay for the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold.
Will market your home with social medias
For Buyers
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off
HomeLife/Future Realty
205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8
Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044 E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com


வீடோ, வியாபாரமோ?
விசயம் தெரிந்தவர்களை நாடுங்கள்
HOMELIFE
Homelife/Future
Realty inc. Brokerage
Higher Standard Agents... Higher Results!
Vivek Subramaniam
Sales Representative
Direct: 416 898 4846
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated


MARCH GREEN MARKETING
Heating, Cooling & Solar Power
It's RIGHT TIME to install a High Efficiency Air Conditioner
Experienced Installation Teams! Good Services!! Lowest Prize!!!
OVER 130 YEARS OF HIGH QUALITY BRANDS!ALL YOUR BEST CHOICE!!
YORK
It's time to get comfortable.
KeepRite
Rheem
relax It's Rheem
ARMSTRONG AIR
Honeywell
FROM ONLY $1599
Stop Renting Old Water Tank
You own your Tankless & You pay nothing extra
Rinnai
Now Only $29.95/Mon
1. You will save 40% of Gas consumption
2. Enjoy endless stream of clean hot water
3. Benefit of longevity & space saving design
Solar Power Energy: Use your Roof to Generate Power & Money
Grid Connected Solar System
Solar Panels
Inverter
Utility Service
Meter
Home Power/ Appliances
Consumer - ON
Ontario Power Authority (OPA) will pay you 80.2 cents per KWH for power delivered back to the grid
You spent 0 at the front and Make money every month, Just join the Government renewable Energy Microfit Program
Call for Detail:
தமிழில் தொடர்புகளுக்கு:
416 792-0704
English: Benson Hu:
647 888 9596
Address: 8- 3520 Mcnicoll Ave.Toronto On
TSSA
HRAC Member Company

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# அதிகரித்துச் செல்லும் குடும்ப வன்முறைகள்

- த. சிவபாலு -

**சென்றமாதத் தொடர்...**

பாலியல் வன்முறைகள் நாட்டுக்கு நாடு, கலாச்சாரத்திற்குக் கலாச்சாரம் வேறுபடுவதனைக் காணலாம். சில நாடுகளில் பாலியல் வன்முறை பாரதூரமான குற்றமாகக் கணிக்கப்பட சில நாடுகளில் அவை சாதாரணமா-

## பகுதி - 02

னவையாகக் கருதப்படுகின்றன. சில கலாச்சார இனக்கு ழுமங்களிடையே பாலியல் தொந்தரவினை பாரதூரமான ஒன்றாகக் கொள்வதில்லை. மாறாக அவை மூடிமறைக்கப்படுகின்றன அல்லது உதாசீனம் செய்யப்படுகின்றன. குழந்தைப்பருவத்தில் மேற்கொள்ளப்படும் குழந்தைகள் மீதான பாலியல் தகாத நடத்தைகள் கண்டுகொள்ளப்படாமலே தவிர்க்கப் படுகின்றன. தந்தை தாயரோ குடும்பத்தின் நெருங்கிய உறவினர்களோ குழந்தைகளின் பாலுறுப்புக்களைத் தீண்டி விளையாடுவது அல்லது விளையாட வைப்பது அவர்களைப் பாதிக்கின்றது என்பதனைச் சிலர் உணர்ந்துகொள்வதில்லை. அதுமட்டுமன்றி பல ஆண்கள் பிள்ளைகளை தங்கள் கால்களுக்கு இடையே நெருக்கமாக வைத்திருந்து முத்தமழை பொழிவது அவர்களைக் கூச்சம் காட்டுவது போன்றன பாலியல் சார்ந்த நடைமுறைகள் என்பதனை உணர்வதில்லை. உணர்ந்தும் தங்கள் இச்சைகளைத்தீர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்கின்றார்கள். இவற்றைப் பெரும்பாலான நாடுகளில் குற்றமாகக் கண்டுகொள்வது மிகக் குறைவே.

இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் மிகக்குறைந்த வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்படும் நிலை இன்றும் காணப்படுகின்றது. மகாத்மா காந்திக்கும் அவரது மனைவி கஸ்த்தூரிபாய்க்கும் அகவை ஐந்திலேயே திருமணம் நடத்திவைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவ்வித நடைமுறைகள் இன்றும் சில சமூகத்தினரிடையே நடைமுறையில் உள்ளது. சில பெண்பிள்ளைகள் 13 அல்லது 14 வயதை அடையமுன்னரே திருமணம் செய்து கொடுக்கப்படுகின்றார்கள். அத்தோடு மட்டுமன்றி பொருளுக்காக மிகவும் வயது கூடியவர்களுக்கு மணம் முடித்துக் கொடுக்கும் நிலை காணப்படுவது பெண்களுக்குத் தீமை இளைக்கப்படுவதாகவே அமைகின்றது. பாலியல் வன்முறை என்பது பெண்பிள்ளைகளுக்கு அல்லது பெண்களுக்கு எதிரானதாகவே கருதப்பட்டுவந்துள்ளது. ஆனால் இன்று அந்த எண்ணக்கரு தவறு என்பதனை பல ஆய்வுகளும் முறையீடுகளும் எமக்குத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. ஸ்கார்பரோ, பாலியல் வன்முறைக்குப் பாதிக்கப்பட்டவர்களைக் கவனிக்கும் நிலையத்தின் கருத்தின்படி "பெண்கள் மீதான பாலியல் வன்முறை அல்லது தாக்குதல் கூடியளவு இடம்பெறுகின்றது, எனினும் இது ஆண்களுக்கும் இடம்பெறுகின்றது. 18 வயதினை அடைவதற்கு முன்னர் ஏறக்குறைய நான்கு பெண்களில் ஒருவரும் ஆறு ஆண்களில் ஒருவரும் தாக்கப்படுகின்றார்கள். பாலியல் தாக்குதல் அல்லது வன்முறை யாருக்கும் ஏற்படலாம்" என அதன் தகவல் தெரிவிக்கின்றது. அத்தோடு இவ்விதம் பாதிக்கப்பட்ட எவரும் இங்கு உதவியினைப் பெறலாம் எனவும் தெரிகின்றது.

கணவனுடன் அல்லது காதலனுடன் உடலுறவு கொண்ட பெண் பின்னர் அதே கணவனால் அல்லது காதலனால் கற்பழிக்கப்பட முடியாது என்னும் எண்ணக்கரு நிலைபெற்றிருந்தது. எனினும் 1983க்குப்பின்னர் இந்த எண்ணக்கருவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒரு கணவனே தனது மனைவியைக் கற்பழிக்கலாம் என்ற நிலை சட்டப்படி தோன்றியுள்ளது. ஒன்ராறியோ அரசாங்கம் 32 வைத்திய நிலையங்களில் பாலியல் வல்லுறவுக்குப்பாதிக்கப்பட்டவர்களைப் பாராமரிக்கும் நிலையங்ளுக்கு நிதியளிக்கின்றது. அதாவது ஒரு மனைவி விரும்பாதவிடத்து உடலுறவு கொள்ளுதல் சட்டப்படி குற்றமாகும்.

பாலியல் வன்முறை இன்று ஒரு மிகமுக்கியமான உடல்நலம் சார்ந்த ஒரு பிரச்சினையாக இப்போதுள்ளவர்களுக்கு மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினருக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இத்தகைய பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல் அல்லது இல்லாதொழித்தல் முக்கியமான தொன்றாகும். முன்வளப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவுள்ள பெண்களுக்கெதிரான வன்முறைகள் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்பதில் உலக சுகாதார அமையமும், வேறும் பல அமைப்புக்களும் பாடுபட்டுவருகின்றன. .

குடும்பத்தில் கவின்நிலை நிலவவேண்டுமாயின் அங்கு அமைதி நிலவவேண்டும். அமைதி நிலவ பெண்ணின் சுக நலன்கள் பேணப்படவேண்டும். சமத்துவமாக நடந்துகொள்ள அனுமதிக்கப்படவேண்டும். அடிமைத்தழையோ, அதிகாரத்திற்கு உட்பட்ட இரண்டாந்தரமான

> “ தந்தை தாயரோ, குடும்பத்தின் நெருங்கிய உறவினர்களோ குழந்தைகளின் பாலுறுப்புக்களைத் தீண்டி விளையாடுவது அல்லது விளையாடவைப்பது அவர்களைப் பாதிக்கின்றது என்பதனைச் சிலர் உணர்ந்துகொள்வதில்லை. ”

வளாகப் பெண்ணை மதிப்பதோ தவிர்க்கப் படவேண்டும்.

பெண்களுக்கான உரிமைகள் சமத்துவம் எனச்சட்டப்படி வரையறுக்கப்பட்டுள்ள பொழுதிலும், பெண்கள் இன்றும் இருட்டறையில் இருப்பதாகவே கருதப்படுகின்றனர். பின்வரும் தகவல்கள் பெண்கள் இன்றும் இருட்டறையில்த்தான் உள்ளார்கள் என்பதனையும் இது மனித உரிமைகள் அட்டவணையில் முன்னுரிமை நிலையில் இடம்பெறுகின்றது எனலாம்.

பின்வரும் தகவல்கள் ஐ.நா.அறிக்கையில் காணப்படுகின்றது

- அண்ணளவாக 60 மில்லியன் பெண்கள் பாலியல் இனஒதுக்கல் காரணமாக முக்கியமாக தென்ஆசியா, மேற்கு ஆசியா, சீனா, வட ஆபிரிக்கா ஆகிய நாடுகள் உட்பட இன்று 'காணாமல்' போயுள்ளனர்.
- ஐக்கிய அமெரிக்காவில் ஒவ்வொரு ஒன்பது செக்கண்டுகளுக்கும் ஒரு பெண் தனது துணைவரின் வன்முறைக்கு ஆளாகின்றார். இந்த நிலை கடந்த இரு தசாப்தங்களாக அதிகரித்து வந்துள்ளது.
- இந்தியாவில் ஆண்டுதோறும் 5,000 பெண்கள் அவர்களது மைத்துன, மைத்துனிமரின் சீதணம் சம்பந்தமான கருத்தின் காரணமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர். மிகக்குறைந்தளவான கொலைகளே நீதிவிசாரணைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.
- மத்திய கிழக்கு, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் சிலவற்றில் நம்பகத்திற்கற்றவர்கள், பணிவற்றவர்கள் அல்லது எதிர்க்கின்றவர்கள் என்பதற்காக மனைவியரைக் கொலைசெய்த கணவன்மார் கொலைக் குற்றத்திலிருந்து 'மேன்மையானவர்கள்" என்ற கருத்தினடிப்படையில் விடுதலையாகின்றார்கள்.
- அண்மை ஆண்டுகளில் ஏழு நாடுகளில் போருக்கான ஆயதமாகக் கற்பழிப்புப் பயன்படுத்தப்பட்டமை பதிவாகியுள்ளது. இது பல நூற்றாண்டுகளாக வியாபித்திருந்துள்ளது.
- வங்காளதேசத்தில் பெண்களின் உருச்சிதைவு செய்ய அசிற் வீசப்படுவது பொதுவானதாகக் காணப்படுகின்றது. அது அந்நாட்டின் குற்றவியல் சட்டக்கோப்பின் துணைவிதிக்கு எச்சரிக்கையாக அமைந்துள்ளது.
- ஏறத்தாழ 2 மில்லியன் பெண்பிள்ளைகள் ஆண்டுதோறும் (6000 நாள்தோறும்) பெண் யோனியின் உறுப்புக்குறைப்பு அல்லது சிதைப்புச்செய்யப்படுகின்றனர். இது ஆண் குறியின் பகுதியினை வெட்டி நீக்குவதை ஒத்ததாக அமைகின்றது.
- ஆண்டுதோறும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகள் (பெருமளவில் ஆசியாவில்) மேலெழுந்தவாரியாக விலை மாதர்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். எயிட்ஸ் யோயின் தாக்கத்தினால் சிறியவர்கள் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள் என்ற காரணத்தினால் இளம் பிள்ளைகள் இத்தொழிலுக்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறார்கள்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பொறுத்துக்கொள்ள முடியாதனவாக உள்ளன. பாலியல் வன்முறைகள் போன்ற பாரிய குற்றங்கள் முறையீடு செய்யப்பட்டு சட்டத்தின் முன் கொண்டுவரப்படாது தண்டனை தவிர்க்கப்படுகின்றது. அல்லது மௌனமாக பொறுத்துக்கொள்ளப் படுகின்றது.

பெண்கள் வன்முறை, பாலியல் தொல்லைகள், தாக்குதல்கள் தொடர்பான போதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதோடு, இவை சமூகவியல் வல்லுனர்களினால் மேற்கொள்ளப்படுவதனால் உண்மைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும் என்னும் கருத்து முன்வைக்கப்படுகின்றது.

பெண்களுக்கான சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு இவ்வித அத்துமீறல்கள், வன்முறைகள், தாக்குதல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எல்லா நாடுகளினாலும் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஏற்படுத்தலாம் என்பது ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கருத்தாகும். மேலைநாடுகள் பலவற்றில் குடும்ப வன்முறைகள் சட்டத்தின் மூலமும் பொதுசன ஊடகங்கள் மூலமும் குறிவைக்கப்படுகின்றன. எனினும் புகைத்தல், அல்லது போதைதருவனவற்றிற்கு எதிரான பொது மக்களின் இயக்கம் போன்று காணப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

போர்க்காலங்கள், அல்லது நாட்டின் அமைதியற்ற காலங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க முடியாத நிலையில் பல பெண்கள் துன்புறுத்துப்படுவதோடு அவர்கள் பாலியல் வல்லுறவுகளுக்கும் ஆளாக்கப் படுகின்றார்கள். அது மட்டுமன்றி அவர்கள் கொலைக்கும் ஆளாகின்றார்கள் என்பதற்கு இலங்கை உட்பட பல நாடுகளில் உதாரணங்களைக் காணமுடிகின்றது.

இன்று பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள், தீங்கிழைப்பு, தாக்குதல், அதிகாரம், தொல்லைகள் என்பன பல்வேறு பின்விளைவுகளுக்குக் காலாக அமைகின்றன. குடும்ப வன்முறைகள் குழந்தைகளின் எதிர்கால வாழ்வைப் பாழடிப்பதோடு, அவர்களுக்கு எதிராகத் தீங்கிழைக்கவும் தூண்டுவதாக அமைகின்றது.

'குடும்ப வன்முறை' குற்றச் செயல்என உலகநாடுகளில் 44 நாடுகள் சட்டமூலமாக வகுத்துக்கொண்டன. திருமணம்சார்ந்த கற்பழிப்பு குற்றவியலில் 17 நாடுகள் சேர்த்துக் கொண்டுள்ளன. 27 நாடுகள் பாலியல் துன்புறுத்தல் சட்டத்தினை ஏற்படுத்தியுள்ளன. இன்னும் 12 நாடுகள் பெண்களின் பாலுறுப்பு குறைப்பு குற்றம் எனச் சட்டமாக்கியுள்ளது.

எவ்வித சட்டங்கள் ஆக்கப்பட்ட போதிலும் இவை பெண்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதமாக அமையவில்லை என்பதனை பல நாடுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் பாலியல் வன்முறைகள், தொல்லைகள், அடிமைகளாக வைத்திருத்தல், சுயாதீனமாக இயங்கவிடாது தடைசெய்தல், குடும்ப அங்கத்தவர்களால் குறிப்பாக கணவன், தாய், தந்தை, சகோதரர்களால் பெண்பிள்ளைகள் தாக்கப்படுதல், அடித்தல், ஏசுதல் என்பன எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக இன்றும் பல நாடுகளில் இவை தடை செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கு எதிரான எல்லாவகையான பேதங்களையும் நீக்குகின்ற ஜெனீவா ஒப்பந்த நடைமுறைகளை 160 நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. உடன்படிக்கைகள் சில பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் பெரும்பாலான நாடுகள் நடைமுறைப்படுத்துவதில் பின்நிற்பதாகவே காணப்படுகின்றன. இதில் ஒப்பமிட்டுள்ள மூன்று நாடுகள் நடைமுறைப் படுத்தவில்லை என்பதோடு 40 நாடுகள் ஒப்பமிடவே மறுத்துள்ளன என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது. எனவே இன்றும் பல நாடுகளில் பெண்களின் சமத்துவ உரிமைகள் நடைமுறையில் இல்லை என்பதனை இது வெளிக்காட்டுகின்றது.

இன்று பல பெண்கள் பயம், அபாயம், அச்சுறுத்தல், மனக்குளப்பம், மனநோய், மன வழுத்தம், போன்ற நோய்களுக்கு உள்ளாகி தமது இயல்புத் தன்மையையும் இயல்பு வாழ்க்கையையும் தவிர்த்து வருகின்றார்கள். அவர்களை இவ்வித நிலைகளில் நின்று பாதுகாப்பாக இருப்பதற்கு அல்லது தம்மை மீளவைப்பதற்கு அல்லது சுயவாழ்வை ஏற்படுத்துவதற்கு பல செயல்களை மேற்கொள்ளலாம் என வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர்கள்.

ஒரு விடயம் சம்பந்தமாகவே பலவிடயங்கள் பற்றியோ எழுதுதல்

- உதவி வளங்கக்கூடிய குழுவில் இணைவதன் மூலம் தங்கள் துன்பங்களுக்குப் பரிகாரம் தேடுதல்.
- கற்பனை உலகில் சஞ்சரித்தல் அல்லது கனவு காணுதல் இதனால் உளத்தின் அழுத்தத்தைக் குறைத்துக்கொள்ளலாம். 'கனவு நனவாகும்' என்பதனை கருத்திற் கொள்ளுதல் நலன்தரும்.
- உடைகளை அணிந்து பார்த்தல் மூலம் உள நலனைப் பேணலாம்.
- ஆன்மீகம் சார்ந்த மன அமைதியினை அடைய முயற்சித்தல்

ஆக்கச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் தங்கள் சிந்தனைகளை திசைதிருப்புதல், கலை, ஓவியம், போன்ற கைவினைகளில் ஈடுபடுவதால் மன அழுத்தத்தை, துயரத்தை தவிர்த்தல்.

sivapalu.t@thaiveedu.com

■ ■ ■

# உயில்கள்

நீங்கள் 18 வயதுக்கு கூடிய கனேடியர் களில் உயில் எழுதாத 50% மானோரில் ஒருவரா? அப்படியானால் நீங்கள் இதை தொடர்ந்து படிப்பது நல்லம். ஒரு அடிப்படை உயில் எழுத வழக்கறிஞருக்கு கொடுக்கும் $100, உங்களுக்குப்பின் உங்கள் குடும்பத் துக்கு ஏற்படும் செலவு, மன உலைச்சல் என்பதை கவணிக்கும்போது கட்டாயமாக $100, டொலருக்கு கஞ்சப்பட்டு உயிலை தயாரிக்காமல் இருந்திருக்கமாட்டீர்கள், ஆனால் அப்படி செய்வதன் தீமை அறியா-திருப்பது தான் காரணம் எனவே தொடர்ந்து வாசியுங்கள்.

பலர் உயில்கள் எழுதாமைக்கு முக்கிய காரணி தம்மிடம் அப்படி என்ன செல்வம் இருக்கிறது என்ற எண்ணமே. உண்மை யாதெனில் எல்லாரும் எவ்வளவு செல்வம் உண்டு என்பதல்லாமல் ஒரு உயில் தயாா-ித்து வைப்பதவசியம்.

உங்கள் சொந்த உயில் இல்லாத வேளை-யில் உங்கள் சொத்து யாவும் மாகாண சட்டத்துக்கமைய பிரித்துக் கொடுக்கப்படு வதுடன் அந்தச் சேவைக்காக பணமும் அறவிடுவார்கள். சுருக்கமாக சொல்வதானால் அரசு உங்கள் உயிலை எழுதும் என்று கூறலாம். உங்கள் விருப்பத்துக்கமைய உங்கள் செல்வம் செல்ல சிக்கல் இல்லாத வழிமுறைதான் உயில்.

உயில் இல்லாத வேளையில் உங்கள் வாரிசுகள் நீங்கள் விரும்பிய பங்கு செல்வத்-தைப் பெறாமல் அரசு முன்கூட்டியே அமைத்துள்ள சட்டப்படி பெற்றுக்கொள்வர். மேலும் இக்காரியத்தை செய்ய நியமிக்கப்-படுபவருக்கும் பணம் கொடுக்கப்படும். ஏன் உயில் எழுதிவைத்திருப்பது அவசியம் என்று தெளிவுபடுத்த நான் உங்களுக்கு ஒன்பது காரணங்களைத் தருவேன்.

> “ *இங்கு வரும்போது*
> *கொண்டுவந்தது ஒன்றுமில்லை.*
> *கொண்டு செல்வதும் ஒன்றுமில்லை.*
> *இடையில் வந்த செல்வத்தை இடையில் வந்த*
> *உறவுகளுக்கு*
> *கொடுத்துச் செல்ல உதவுவதே “உயில்கள்”.* ”

### காரணம் 1

உங்கள் பொருள் உயில் இருப்பதன் மூலம் நீங்கள் விரும்பியவருக்கு சென்றடை வதை உறுதிப்படுத்தும்.

### காரணம் 2

**குழந்தைகள் / பேரக்குழந்தைகள்.**

ஒரு உயில் குழந்தைகள் சிறியவர்களாக இருக்கும் பட்சத்தில் அவருக்கு நீங்கள் விட்டுச்செல்லும் செல்வத்தை பராமரிப்பா ளரை தெரிவு செய்யும் உரிமையை நீங்கள் உடையவராவீர்கள். உயில் இல்லாத வேளையில் குழந்தைகள் நீதித்துறையின் பகடைக்காய்களாக வந்துவிடுவார்கள்.



செந்தூரன் புனிதவேல்

- காப்புறுதி முகவர் -

### காரணம் 3

விவகாரங்கள் விரைவாக தீர்த்துவைக்கப்-படும். உயில் இல்லாதவேளைகளில் செல் வத்தை எப்படி பகிர்வது என்பதில் வாதப்-பிரதிவாதங்கள் ஏற்பட்டு செல்வத்தை வாரி சுகளுக்கிடையில் பங்கிடுவது நீண்ட நாட் கள் எடுக்கும். இதனால் உங்கள் குடும்பத்-தவர்களுக்கு பெரும் சிரமம் ஏற்படும்.

### காரணம் 4

உயில்கள் திட்டமிட்டு எழுதப்படும் வேளை களில் எத்தனையோ வீனான வரிகளைத் தடுத்து அப்பணத்தையும் உங்கள் வாரிசு களே பெறச் செய்யலாம். இதனால் உங்கள் வாரிசுகளுக்கு கூடிய செல்வம் சென்றடை-யும்.

### காரணம் 5

நீங்கள் உங்கள் உயில்களை எழுதிவைப்-பதினால் உங்கள் குடும்பத்தவர்கள் உங்கள் நோக்கம் என்னவாயிருக்கும் என்ற வாதப் பிரதிவாதங்கள் இல்லாமல் எளிதாக உங்கள் ஆசையை நிறைவேற்றக் கூடியதாயிருக்கும்.

senrhuran@thaiveedu.com

### காரணம் 6

நீங்கள் உயில் எழுதிவைப்பதால் உங்கள் மனதுக்கு ஆறுதல் ஏற்படும். இல்லாவிட்-டால் என்ன செய்வார்களோ என்று யோசித் துக் கொண்டு இருப்பீர்கள்.

### காரணம் 7

தேவையற்ற முரண்பாட்டுச் சண்டைகளை தவிர்ப்பவராவீர்கள். வீனாக உங்கள் வாரிசு கள் தமக்குள் சண்டையிடவேண்டியிராது.

### காரணம் 8

நீங்கள் ஆறுதலாய் சிந்தித்து உண்மையில் கூடிய பயன்தக்க விதத்தில் மட்டுமல்லா-மல், யார் யாருக்கு அதிகம் தேவையோ, அல்லது எப்போ தேவையோ அப்போ அச்செல்வம் சென்றடைய செய்யலாம்.

### காரணம் 9

நன்கொடைகள் அதாவது, அறக்கட்டளை கள் போன்றவற்றை ஏற்படுத்தி நீங்கள் சென்ற பின்பும் பல ஆண்டுகள் பயன் உடையதாக உங்கள் செல்வத்தைச் செய்யலாம்.

இங்கு வரும்போது கொண்டுவந்தது ஒன்று-மில்லை. கொண்டு செல்வதும் ஒன்றுமில்லை. இடையில் வந்த செல்வத்தை இடையில் வந்த உறவுகளுக்கு கொடுத்துச் செல்ல உதவுவது உயில்கள். எனவே தவறாமல் அவற்றைச் செய்து வையுங்கள்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■




தாய்வீட்டிற்காக கருத்தோவியம் சிவ.மாருனி - 2011

இணையத்தளத்திலும் ‘தாய்வீடு’

www.thaiveedu.com

# சக்தி என்றால் காப்புறுதி



**காப்புறுதி துறையில்
“28” வருட முழுநேர
உன்னதமான, நெறியான சேவை**

“சகல காப்புறுதி நிறுவன பிரதிநிதி”

- இதுவரை 11,000 இற்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- 190 துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- ஏறத்தாழ 46 நிரந்தர, பகுதி ஊன இழப்பீடுகள்.
- பாரபட்சமின்றி எந்த நிறுவனத் திட்டமாக இருப்பினும் தெளிவான, துல்லியமான, இலகுவில் கிரகிக்கும் வண்ணம், பொறுமையான விளக்கம்.
- பல்வேறு நிறுவனங்கள் மூலம் சிறப்பு விருதுகள் பெற்ற பெருமை.
- எவ்வித வருத்தங்கள் இருப்பினும் அதற்கேற்ப தகுந்த காப்புறுதி திட்டங்கள் அளிக்கும் திறமை.
- உங்கள் காப்புறுதி மனுப்பத்திரம் ஏதாவது நிறுவனம் மூலம் நிராகரிக்கப் பட்டாலும் தகுந்த காப்புறுதி திட்டம், நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய நிச்சயமாக, உறுதியாகக் கொடுக்கப்படும்.
- உடனே அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி ஆயுள்காப்புறுதி.

## - சக்திவேல் -

**416.706.3530, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

# மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$375,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியதான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.**

**சக்திவேல்: 416 706 3530**

# I WILL WORK DILIGENTLY UNTIL YOU’RE SATISFIED.

**W.Hwy 48 & S.Bur Oak**



3 Bedroom, 3 Washrooms
**$479,900**

**Hwy 7 & Cornell Center**



4 Bedroom, 3 Washrooms
**$489,980**

**9th Line & Reeves Way**



3 Bedroom, 3 Washrooms
**$339,900**

**Main Street & 10th Line**



2+1 Bedroom, 3 Washrooms
**$344,900**

**Stouffville Rd & Hwy 48**




3 Bedroom, 3 Washrooms
**$345,000**

**Tenth Line & Stouffville Road**



3 Bedroom, 3 Washrooms
**$349,000**

**9th Line & Hoover Park Dr**



3 Bedroom, 3 Washrooms
**$359,900**

**9th Line & Hoover Park**



3 Bedroom, 3 Washrooms
**$369,900**

- **One Commission Two Listing Call for Details**
- முதல் தடவையாக வீடு வாங்குபவர்களுக்கான ஆலோசனைகளும், உதவிகளும் வழங்கப்படும்.
- மாதாந்தம் வெளிவரும் இப்பத்திரிகையில் என் விளம்பரத்தைப் பார்ப்பதன் மூலம் உங்கள் இல்லத்தை உங்கள் பட்ஜட்டில் நீங்கள் தெரிவு செய்யலாம்

News Paper Listing Until Your House Sold

Professional & Friendly Service



**Thila Thiagarajah**
Sales Representative
**416.566.3224**
thila_t@hotmail.com

**HomeLife/Future Realty Inc., Brokerage***
205-7 Eastvale Dr. Markham, ON L3S 4N8
**Bus.: 905-201-9977 Fax: 905.201.9229**
*Independently Owned and Operated, REALTOR
Not intended to solicit properties that are currently listed or buyers under contract.

# செல்லம்மா எல்லாருக்கும் உதவிசெய்தவள்

பணம் இல்லாதபோது றோட்டில் சைக்கிள் ஓடினோம்.
பணம் இருக்கும்போது வீட்டில் சைக்கிள் ஓடுகிறோம்.

பணம் இல்லாதபோது விவாகம் செய்ய விரும்பினோம்.
பணம் இருக்கும்போது விவாகரத்து செய்ய விரும்புகிறோம்.

பணம் இல்லாதபோது செல்வந்தனாக நடித்தோம்.
பணம் இருக்கும்போது வறியவனாக நடிக்கிறோம்.

•

எல்லோரும் புத்தர்பெருமானை மதிப்பதைக் கண்டு ஆத்திரம் அடைந்த இளைஞன், அவரிடம் சென்று; ‘‘மற்றவர்களுக்குப் புத்தி மதியும் போதனையும் கூற உனக்கு என்ன அருகதை இருக்கிறது, நீயும் என்னைப்போல ஒருவன்தானே? நீ ஒரு போலி’’ என்று கோப மாகக் குறை கூறித் தூற்றினான்.

தூற்றுதலையும் கோபத்தையும் பொருட்படுத்-தாத புத்தர்பெருமான்; “நீ, பரிசுப்பொருள் ஒன்றை வாங்கி ஒருவருக்குக் கொடுப்பதற் காக எடுத்துச் செல்கிறாய், அந்தப் பொருளை அவர் ஏற்காவிட்டால் அப்பரிசுப் பொருள் யாருக்குச் சொந்தமாகிறது’’ என்று கேட்டார்.

இளைஞனோ, “இது என்ன கேள்வி? நான் வாங்கிய பொருளை அவர் ஏற்காவிட்டால் அது எனக்குத்தானே சொந்தம்” என்றான்.

புத்தர் சிரித்தபடி “சரியாகச் சொன்னாய். கோபத்தில் நீ தூற்றியது என்னை இழிவு-படுத்தவும் இல்லை பதட்டப்படுத்தவும் இல்லை. ஆகையால் உனது கோபமும் செயலும் உனக்கே சொந்தமாகிறது. தாழ்வு உணர்-வால் உன்னை நீயே காயப்படுத்திவிட்டாய்” என்றார்.

•

கணவன் மனைவியைப் பார்த்து “நீ நல்ல அழகாக இருக்கிறாய், அதே போல் நல்ல மடைச்சி (Stupid) ஆகவும் இருக்கிறாய் ஏன் அப்படி” என்றான்.

“இது இறைவனின் சதி. நீ என்னைக் கண்டு விரும்புவதற்கு ஆண்டவன் என்னை அழகா கப் படைத்தான். நான் உன்னைக் கண்டு விரும்புவதற்கு ஆண்டவன் என்னை மடைச்சி (Stupid) ஆகப் படைத்தான்” என்றாள் மனைவி.

•

பாலா:- குமார்! நீ சிவாவின்னர நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பேசப்போறன் எண்-டாய். என்னால் வரமுடியவில்லை. ஆனால் பேப்பரிலை ‘குமாரின் புதுக் கவிதையில் வாசிச்சும்விட்டன்.

பாலா:- ? ? ?

•

*மாமன்(அமெரிக்காவால் வந்தவர்):* “வீடு வாங்க Down Payment போடுங்கோ, உங்கட மகளை கண்கலங்காமல் கடைசிவரையும் வைச்சி-ருப்பன் எண்டு சொன்னீர்களே! இப்ப அவ-ளையும் அழவைத்து நீங்களும் கண்கலங்கி நிற்கிறியள். என்ன நடந்தது மாப்பிள்ளை?”

*மாப்பிள்ளை:* மாமா ஏன் நிக்கிறியள், இருங் கோவன். இருந்து கேட்டால்தானே விளங்கும் ‘செல்லம்மா எல்லாருக்கும் உதவிசெய்தவள், இப்ப தனது புருஷன்ர அவசர ஒப்பரேசனுக்கு



சொந்தம் பந்தம் சந்தம் எல்லாமே அற்புதம்’ எண்டு விமர்சனம் வாசிச்சன், இப்ப கவிதை-யிலும் கை வைச்சிட்டாய் போல.

குமார்:- கவிதையும் கத்தரிக்காயும்! நடந்-தது இதுதான். நான் கண்ணாடியை வீட்டிலை விட்டுட்டுப் போட்டன். எழுதிக் கொண்டு போன பேச்சிலை பல சொற்களையும் சில வரிகளையும் நான் தவற விட்டுவிட்டன். அதோடை தெரிஞ்ச வரிகளை இரண்டு தரம்

அவள் பணம் கேட்க எலாலோரும் கையை விரிக்கினம், என்ன அனியாயம் இது.

*மாமன்:* எந்தச் செல்லம்மாவைச் சொல்லுறியள்.

*மகள்:* TVயிலை ‘செல்லமே’ நடக்குது. பாருங்-கோவன் செல்லம்மாவின்னரை கோலத்தை.

*மாமன்:* பிளேனுக்கு காசு செலவழிச்சு நான் இவயளப் பாக்கவெண்டு வந்து நிக்கிறன்.

- கதிர் துரைசிங்கம் -

நிஜத்தைக் (என்னை) கண்டு சந்தோஷப்-படாமல், நாடகத்தில காசு உழைக்கிற ராதிகாவின்னர நிழலைக் கண்டு இரண்டும் அழுது கஷ்டப்படுதுகள். (விளம்பர இடை-வேளை வரட்டும் வாங்கின வீட்டுக்கு வைக்-கிறன் விளையாட்டு)

•

*மனைவி:* அவர் Rajanikanth மாதிரி. வருடத் திலை ஒரு புத்தகம் தான் வெளியிடுவர். உங்களை மனிசரெண்டு மதிச்சு போணிலும் கூப்பிட்டுச் சொல்லி, நேரிலும் கண்டு சொன னவர். ஏனப்பா புத்தக வெளியீட்டுக்குப் போகவில்லை.

*கணவன்:* நான் போகஇல்லை எண்டு உமக்கு யார் சொன்னது.

*மனைவி:* இல்லை - போட்டுக்கொண்டு போன கோட் பொக்கற்றிலை எழுதின என்பலப்பும் ஐம்பது ரூபா நோட்டும் அப்பிடியே கிடக்கு அதுதான் கேட்டன்.


*கணவன்*: பெயர் சொல்லிக் கூப்பிடுகிறதோ, சிறப்புப் பிரதி எண்டோ ஒன்றும் இல்லையாம், வரிசையிலை வந்து புத்தகத்தை வாங்க வேணும் எண்டு விழா நடத்திறவர் சொன்-னார். அதுதான் நான் short eats எடுத்துக் கொண்டு வந்திட்டன்.

*மனைவி:* நீங்கள் செய்தது சரி. இருந்தா-லும், பத்து டொலருக்கு ஒரு புத்தகத்தை வெளிமேசையிலை வாங்கிக்கொண்டு வந்தி ருக்கலாம். பிறகு எங்கையாலும் கண்டு கேட்டால் அண்டைக்கே புத்தகம் வாங்கி-யிட்டன் என்டு சொல்லலாம்.

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■

**Great Investment Opportunity !**



Store and 4 Apartments
(with long term tenants)
rental income $3300 per month.

Century 21
Affiliate Realty Inc. Brokerage
Off: 416.290.1200
பகீரதன் சகாதேவன்
முழுநேர விற்பனை முகவர்



416.908.6003
www.pakeer.com

$10,000
Funeral Expense

| | Medical | | | Non Medical | | |
|---|---|---|---|---|---|---|
| Age | Female | Male | Male Smoker | Female | Male | Male Smoker |
| 60 | $23.69 | $27.85 | $40.89 | $36.00 | $44.13 | $61.00 |
| 65 | $30.58 | $36.67 | $52.04 | $47.00 | $60.04 | $71.00 |
| 70 | $40.64 | $50.25 | $66.53 | $62.00 | $82.92 | $89.00 |
| 75 | $57.85 | $73.64 | $87.55 | $83.00 | $116.25 | $117.00 |

Some conditions may apply

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC
RBC Insurance
Assumption Life
Canada Life
Unity Life of Canada
Manulife Financial

Life Insurance is Death Insurance, Critical Illness Insurance is Life Insurance



SELLING-BUYING-INVESTING
Mccowan & Steeles
Scarborough
$ 226,900
2+1 Bedrooms + 2 Washrooms
Birchmount & Finch
Scarborough
$ 204,900
2 Bedrooms + 2 Washrooms
Mccowan & Eglinton
Scarborough
$ 180,000
2+1 Bedrooms +2 Washrooms
Mccowan & Eglinton
Scarborough
$ 199,900
3+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & 401
Scarborough
$ 285,000
2+1 Bedrooms + 3 Washrooms
Warden & Finch
Scarborough
$ 209,900
3 Bedrooms + 2 Washrooms
Mccowan & Denison
Markham
$ 399,000
3 Bedrooms + 2 Washrooms
Mccowan & Denison
Markham
$ 479,000
3 Bedrooms + 3 Washrooms
Mccowan & Denison
Markham
$ 499,000
4 Bedrooms + 3 Washrooms
Mccowan & Steeles
Markham
$ 489,900
4+1 Bedrooms + 4 Washrooms
Markham & 16th ave.
Markham
$ 529,900
3 Bedrooms + 3 Washrooms
Markham & Bur Oak
Markham
$ 529,900
4 Bedrooms + 3 Washrooms
Salem & Bayley
Ajax
$ 379,000
3 Bedrooms + 3 Washrooms
Hardwood & Taunton
Ajax
$ 379,800
4 Bedrooms + 3 Washrooms
Markham & Steeles
Markham
$ 439,000
4 Bedrooms +3 Washrooms
Salem & Taunton
Ajax
$ 395,000
3 Bedrooms +3 Washrooms
Westney & Rossland
Ajax
$ 479,000
4 Bedrooms + 4 Washrooms
Salem & Bayley
Ajax
$ 299,000
3 Bedrooms + 3 Washrooms
Bellamy & Eglinton
Scarborough
$ 369,800
3+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & Denison
Markham
$ 479,900
4 Bedrooms + 3 Washrooms
Morningside & Sewells
Scarborough
$ 325,000
3+1 Bedrooms + 3 Washrooms
Salem & Taunton
Markham
$ 494,000
4 Bedrooms + 3 Washrooms
Bur Oak & Mingay
Markham
$ 719,000
4 Bedrooms + 4 Washrooms
Markham & Elson
Markham
$ 649,900
4 Bedrooms + 4 Washrooms
Sandlewood & Chingacousy
Brampton
$ 354,000
3 Bedrooms + 4 Washrooms
Airport & Braydon
Brampton
$ 379,900
4 Bedrooms + 3 Washrooms
Williamspkwy & Hwy 410
Brampton
$ 410,000
4 Bedrooms + 3 Washrooms
Airport Rd. & Castlemore
Brampton
$ 459,000
4 Bedrooms + 3 Washrooms
Maclaughlin & Wanless
Brampton
$ 475,000
4 Bedrooms + 4 Washrooms
Sandlewood & Maclaughlin
Brampton
$ 485,000
4 Bedrooms + 3 Washrooms
14th Ave. & 9th Line
Markham
$ 639,000
4 Bedrooms + 4 Washrooms
Markham & Steeles
Scarborough
$ 549,900
4+1 Bedrooms + 4 Washrooms
Morningside & Staines
Scarborough
$ 489,000
4 Bedrooms + 3 Washrooms
No Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc. Brokerage*
205-7 Eastvale Dr,Markham ON, L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
You Tube
www.realhouse.ca
*Independently Owned and Operated
Mugunthan Nadarajah
Sales Representative
Direct: 416-276-8025
Thamil Suberamaniam
Sales Representative
Direct: 416-358-6200
SELL YOUR HOME FASTER AND MORE MONEY


Say Goodbye to the Contract !
NOBLE REIGN
NR
Alarm Monitoring
$17.99/per month
One time programming & Activation $99.99
Existing Alarm Monitoring
$11.99/per month
One time programming & Activation $49.99
Line Cut Technology
GSM Cellular Backup
$7.99/Additional per month
One time programming & Activation $179.99
Video Door Phone with installation
$689.99
Don't be a victim of crime !
Let us protect you & your loved ones - Call us now !
4 Day & Night Sony CCD Color Camera
4 Channel Stand Alone DVR
with 500GB HDD 19" LCD Monitor,
Standard Installation
$1499.99
NOBLE REIGN
NR
NOBLE REIGN INC
SECURITY & COMMUNICATIONS
1.877.294.9669 | 416.826.5831
www.noblereign.com

# எம்மையும் எம் உடைமைகளையும் பாதுகாப்பது எப்படி?

### கொடியவர்கள், கொள்ளையர்களிடமிருந்து எம்மையும் எமதுடமைகளையும் பாதுகாப்பது எப்படி?

இன்றைய நாட்களில் திருடர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள நம்வீட்டை வழக்கமான முறைப்படி பூட்டிவைத்துக் கொண்டாலும் அது போதுமானதாக இருப்பதில்லை. கனடாவின் அனைத்து பாதுகாப்பு சங்கங்களின் பரிந்துரையின்படி வீடுகளில் ஒரு சிறந்த பாதுகாப்பு முறையை கடைப்பிடிக்க வேண்டும், இல்லை என்றால் பெரும் குற்றவாளிகள் வீட்டிற்குள் எளிதாக நுழைந்து விடுவார்கள். மின்னணு பாதுகாப்புமுறை (Electronic Security System) திருடர்கள் வீட்டிற்குள் புகுந்துவிடும் ஆபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறது.

இதற்கெல்லாம் நிறைய செலவாகும் என்று பெரும் பாலானோர் கூறலாம். அது உண்மையாக கூட இருக்கலாம். ஆனால் உங்கள் வீட்டை பாதுகாக்க நீங்கள் எடுக்கும் முயற்சியில் உங்களுக்கு நிறையவே பலன்கள் கிடைக்கும்.

உங்கள் முதலீடு பாதுகாக்கப்பட்டிருக்கின்றது என்ற சிறந்த சிறந்த மனஅமைதி உங்களுக்குக் கிடைகின்றது. கொடியவர்களிடமிருந்து உங்களை, உங்கள் குழந்தைகளை மற்றும் உங்கள் உடைமைகளை ஒழுங்காக பாதுகாத்திருக்கிறோம் என்ற நின்மதி கிடைக்கின்றது. எனவே இப்போதே நீங்கள் சரியான நேரம் ஒதுக்கி உங்களுக்கு பெருத்தமான சிறந்த வீட்டு பாதுகாப்பு முறையை அமைத்துக் கொள்வது மிக முக்கியம்.

இதற்கு நீங்கள் என்ன செய்யவேண்டும்? உங்களுக்கு நிச்சயமான பலன்களை தரும் சில வழிமுறைகள் இங்கு எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

### உங்களுக்கு பொருத்தமான பாதுகாப்பு முறைகளை தெரிந்து கொள்ளுங்கள்:

நீங்கள் உங்களுக்கு பொருத்தமான பாதுகாப்பு முறைகளை தேர்ந்தெடுக்க வேண்டியது மிக அவசியம். உங்கள் சொத்து மற்றும் வீட்டை முதலில் நீங்கள் நன்கு மேற்பார்வையிடவேண்டும். பாதுகாப்பு குறைவான இடங்களை கண்டறிந்து அவற்றை முடவோ அல்லது மறைக்கவோ செய்யவேண்டும். உங்கள் குடும்பத்தினரின் வாழ்க்கை முறையை நன்கு மனதில் கொண்டு. அதிலும் குறிப்பாக உங்கள் குழந்தைகள் Partyக்கு சென்றுவிட்டு தமதமாக வருவது போன்ற விடயங்களை ஆராய்ந்து, சரியாக திட்டமிட்டு பாதுகாப்பு விடயங்களை நீங்கள் வடிவமைக்க வேண்டும்.

### உங்கள் வீட்டை நன்கு ஆராய்ந்து பார்க்க பாதுகாப்பு நிறுவனங்களை நியமியுங்கள்:

உங்களுக்கு பாதுகாப்பு சம்பந்தமான சிறந்த தீர்வுகளை வழங்க நிறைய நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன. இதற்காக நீங்கள் ஒரு Insurance Agencyஐ அணுகவோ Yellow pages ஐ, பத்திரிகை விளம்பரங்களைப் பார்க்கவோ அல்லது உங்கள் பகுதியில் உள்ள online Serviceஐ தேடவோ முடியும். அவர்களை நீங்கள் தொடர்பு கொண்டு உங்கள் பாதுகாப்பு சூழலை ஆராய அழைப்புவிடுங்கள். Alarm System எல்லாம் நீங்கள் எப்படி set பண்ணவேண்டும் என்பது சம்மந்தமாக அவர்களுடைய பரிந்துரைகளை கவனமாக கேளுங்கள். இது சம்மந்தமாக பல நிறுவனங்கள் அளிக்கும் விபரங்கள் உங்கள் கைவசம் இருக்கும் போது அவற்றிலிருந்து உங்கள் விருப்ப தேர்வை நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும்.

### அனைத்து நேரங்களிலும்

நீங்கள் முழுமையாக பாதுகாத்துக் கொள்ள முடியும். பாதுகாப்பு ஊழியர்கள் முழுக்கண் ணோட்டத்துடன் உங்கள் வீட்டை கண்காணிக்கும் போது, யாராவது உங்கள் வீட்டை உடைத்துக் கொண்டு நுழைய முயற்சித்தால், உங்களை பாதுகாக்க மிக சரியான ஆட்களை நீங்கள் உடனே கூப்பிடமுடியும்.

### ஒரு Burglar alarm உபகரணத்தை எங்கு பெறமுடியும்?


இதற்கென ஒரு சில நிறுவனங்கள் உள்ளன. அவைகளை தொடர்பு கொண்டு நீங்கள் பேசமுடியும். அந்த நிறுவன ஊழியர்கள் உங்கள் இடங்களை ஆராய்ந்து பார்த்து வேண்டிய தீர்வுகளை பரிந்துரை செய்வார்கள். மூன்று நான்கு பாதுகாப்பு நிறுவனங்களிலிருந்து குறைந்த விலையில், தரமான



லதன் வரதராஜா
- Operations Analyst

தடத்திலும் பாய்ந்து செல்லும் போது அலாரம் (Alarm) ஒலிக்கும் இரண்டு வகை அலாரங்களிலும் அபாய அறிவிப்பு ஒலிக்கும் பாதுகாப்பு படையினருக்கு எச்சரிக்கை நிலை அல்லது திடுக்கிட்ட நிலை தெரிவிக்கப்படும்.

ஆகவே இப்படியான பாதுகாப்பு அலார மணிகள் உங்களையும் உங்கள் உடைமைகளையும் பாதுகாக்கும் என்பதில் ஐயமில்லை.





### உங்களுக்கு பயன்படக்கூடிய ஒரு சிறந்த பாதுகாப்பு முறையை தேர்ந்தெடுங்கள்:

மிக பரந்த அளவில் பாதுகாப்புமுறை சற்று அரிதாகவே கடைப்பிடிக்கப்பட்டுவரும் விடயம். திருடர்களிமிருந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளமுடியும். ஆனால் தீப்பிடித்தல் போன்ற விடயங்களிலிருந்து நீங்கள் தப்ப smoke sensorகள் இருந்தால் தான் முடியும். அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற ஒரு முழுமையான பாதுகாப்பு முறையை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். சில பாதுகாப்பு உபகரணங்கள் குளிர்காலத்தின்போது உறைபனியில் உறைந்துவிடும் அபாயம் உண்மையில் உள்ளது. மேலும் உங்கள் பாதுகாப்பு முறையில் back up power ஒரு Control panel மற்றும் பிற இன்றியமையாத உதிரிப்பாகங்கள் உள்ளனவா என்பதை கவனியுங்கள்.

### பாதுகாப்பு நிறுவனம் கண்காணிக்கும் சேவையை வழங்குகிறதா என்பதை பாருங்கள்:

24 மணி நேரமும் உங்கள் வீட்டை கண்காணிக்கும் ஒரு கூடுதல் சேவையை பாதுகாப்பு நிறுவனம் வழங்கினால் திருடர்கள் மற்றும் கொள்ளையர்களிடமிருந்து உங்கள் வீட்டை சேவையளிக்கும் நிறுவனத்தை தேர்ந்தெடுப்பது உங்களுக்கு மிக சுலபம்.

### நகர்தலை கண்டுபிடிக்கும் அலாரமணிகள்:

உங்கள் இருப்பிடத்தில் உங்களின் மிக முக்கியமான அறை அல்லது சமையலறை போன்ற விசாலமான இடங்களை பாதுகாப்பதற்கு இந்த நகர்தலைக் கண்டுபிடிக்கும் அலாரமணிகள் உபயோகமானவை. இவை பெரும்பாலான விற்பனை மையங்களில் பயன்படுத்தப்படுகின்றது. நாம் கவனமாகக் கவனிக்கவிரும்பும் இடத்தில் ஏதாவது சலனம் ஏற்பட்டால் இதன் suit detector ஒரு காற்றலையை வெளிப்படுத்தும் இதன் signal க்கு குறுக்கே யாராவது அல்லது ஏதாவது புகுந்துவிட்டால் உடனே அலாரமணியை ஒலிக்க வைத்துவிடும். மூடப்பட்ட நிலை அல்லது திறந்த நிலை ஆகிய இரண்டில் ஏதேனுமொரு வகையில் வீட்டு அலார உபகரணம் இயங்கும். கதவு பூட்டப்பட்டிருக்கும் நிலையில் இந்த அலார உபகரணத்தின் தடத்தில் மின்சாரம் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு பாய்ந்து கொண்டிருக்கும். கதவையாராவது திறக்கும்போது அந்த மின்சாரதடம் துண்டிக்கப்படும். மின்சாரம் பாய்வது நின்றவுடன் அலாரம் (Alarm) ஒலிக்க ஆரம்பித்துவிடும்.

திறந்த நிலை மின்தடை உபகரணம் இதற்கு நேர் எதிராக செயற்படும். மின்சாரம் முழுத் ...

ஆனால், நீங்கள் முதலில் ஒரு விடயத்தை புரிந்து கொள்ளவேண்டும். உங்களிடம் ஒரு Burglar Alarm இருக்கிறது என்பதற்காக உங்கள் உடைமைகளை யாரும் கொள்ளையடிக்க முடியாது என்று அர்தம் அல்ல. திருடர்களின் அபாயத்திலிருந்து உங்கள் உடைமைகளை ஓரளவு பாதுகாத்துகொள்ள முடியும் என்றுதான் அர்த்தம்.

ஒரு வீட்டினுள்ளே திருடன் நுழைகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவ்வீட்டின் அலாரமணி ஒலிக்கும் போது அயலவர்கள் பார்த்துவிடுவார்களோ என திருடன் பயந்து எதையும் எடுக்காமல் ஓடிவிடுவான். வீட்டிலுள்ள உடைமைகளுக்கு பெரிய இழப்பு ஏற்படாமல் வீட்டு அலாரமணி பாதுகாத்துவிடும். வீட்டிலுள்ள பணத்தையும் மற்றும் உடைமைகளையும் பாதுகாக்கும் ஒரு அரணாக அது விளங்கும்.

இதற்கு நிறைய பணம் செலவாகுமா? எந்த வகையான வீட்டு அலார மணி உங்களுக்கு தேவைப்படும்? எந்த ரகத்தை நீங்கள் வாங்க வேண்டும்? நன்கு சிந்திப்பதின் மூலமும் மற்றும் ஓரளவு ஆராய்ந்து பார்ப்பதன் மூலமும் உண்மையான விபரங்களை சேகரித்து இதுபோன்ற கேள்விகளுக்கு ஒரு சரியான விடையை நீங்கள் பெறமுடியும்.

lathan.varatharajah@thaiveedu.com

■ ■ ■

ENERGY AUDIT
Gerard Ratnarajah, P. Eng.
Tel: 647-206-4494
Green Innovations For Living

## செப்ரம்பர் 10ம் திகதி Canadian Cancer Societyக்கு நிதி சேகரிக்கும் நிகழ்வு

# 13,500 அடி உயரத்தில் வானத்தில் இருந்து குதிக்கவுள்ளார்

இதனை ஒரு மிகப் பெரிய சாதனை என்றே கூறவேண்டும். அதனை செப்ரம்பர் மாதம் 10ந்தேதி நம்மவர் ஒருவர் நடத்தவுள்ளார். அவர் பெயர் குமார் புனிதவேல். அவர் ஆற்றவுள்ள சாதனை தனக்கெனப் புகழ் தேடுதற்கான முயற்சி அல்ல. களிவிரக்கத்தில் காரணமான செயற்பாடே இந்த முயற்சி.

மனிதர்கள் என்றுமே ஏதாவது சாதனை நிகழ்த்த வேண்டும், அதன் விளைவாக புகழ் பெறவேண்டும் என்ற அவாவுடன் வாழ்வார்கள். அண்மையில் இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்திலே இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையான ரெஸ்ற் ஆட்டத் தொடர் ஆரம்பமாகி நடைபெறுகிறது. இது இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான 100 வது ரெஸ்ற் ஆட்டம் என்ற பெருமை பெறுகிறது. இந்த ஆட்டத்தில் சாதனை நிகழ்த்த இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் சச்சின் தெண்டுல்கர் முனைகின்றார். இதுவரை அவர் விளையாடிய அனைத்து நாடுகளுக்கிடையான கிறிக்கட் ஆட்டங்களில் 99 சதம் அடித்துள்ளார். இத் தொடரில் அவர் சதம் போட்டார் என்றால் அது நூறாவது சதமாகுவதுடன் மிகப் பெரிய ஒரு சாதனையாகக் கணிக்கப்படும். இது நாள்வரை ஒருவருமே இப்படிச் சாதித்தில்லை. ஆகவே பொதுவாகவே சாதனை என்றால் ஒருவர் அதன் மூலம் தனது புகழினை ஓங்கச் செய்வதற்கான ஒரு முயற்சி என்றே கூறலாம். ஆனால் நண்பர் குமார் புனிதவேல் நிகழ்த்தவுள்ள சாதனை அந்த வகையினதல்ல.

இன்றைய மருத்துவத் துறையினரின் வாயினில் என்நேரமும் புழங்கும் ஒரு கொடிய வார்த்தை புற்று நோய். ஆய்வாளர்களின் கணிப்பின் படி இன்னும் மூன்று வருடங்களில் நாம் தடுக்கி விழுந்தால் ஒரு புற்று நோயாளியின் மீதுதான் விழுவோம். ஆம் நாம் சந்திக்கும் மூவரில் ஒருவர் புற்று நோயளியாக இருப்பார் என்கிறார்கள் புற்று நோய் ஆய்வாளர்கள். இவ்வருடத்தில் ஏறக்குறைய 177,800 கனடிய பிரஜைகளுக்கு புற்று நோய் வரக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் அவர்களில் குறைந்தது 75.000 நோயாளிகள் மரணத்தைத் தழுவுவார்கள் என்றும் கூறுகிறார்கள்.

புற்று நோய்க்கான நோயரும்பு காலம் மிகவும் நீண்டதாக இருப்பதனால் பொதுவாக அந் நோய் நடுத்தர வயதானோர்களையே பாதிக்கும் என்று கருத்தினை முன் ஒரு காலத்தில் தெரிவித்தனர். ஆனால் அதை எல்லாம் முறியடித்து இப்போ புற்று நோய் பச்சிளம் பாலகர்களையே காவு கொள்வதைக் காண, அதன் கொடுமையை உணர முடிகிறது. எந்த வயதிலும் இந்நோய் ஏற்படலாம், எந்த உடற் கூறினையும் அது ஆக்கிரமிக்கலாம், எந்த வித அறிகுறியுமில்லாமல் நோய் திடீரெனப் புலப்படலாம். இக் காரணங்களால் தான் இந்நோய் உலகிலேயே இறப்பினுக்கு இரண்டாவது முக்கிய காரணியாகிறது.

நண்பர் குமார் புனிதவேல் இக்கொடிய நோயினால் தனது அன்பு மனைவியை இழந்து தவித்தவர். இந்த நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளி படும் அவஸ்தையைக் கண்டு மனம்வெதும்பியவர். அவரது மனைவியின் நோயினை மாற்றுதற்கு வைத்தியர்கள் பட்ட பாட்டினை அவதானித்து அதிசயித்தவர். அரசாங்கம் புற்று நோயாளி ஒருவரது மருத்துவத்திற்கு செலவு செய்யும் பணத்தின் தொகையினைக் கண்டு இதற்குப் பிரதியுபகாரமாக நாம் என்ன செய்லாம் என தீவிரமாகச் சிந்தித்தவர்.

அதன் விளைவு? இந்த முயற்சி. ஆம் வேதனையின் விளைவாகத் தோன்றியதுதான் இநதச் சாதனை முயற்சி. இராமன் கட்டிய அணையினுக்குத் தன்னால் ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணிய அணில் மண்ணில் புரண்டு புரண்டு அதனை நீரில் கழுவியதாம். அதனால் அதற்கு ஒரு ஆத்மதிருப்தி. அதே போன்றுதான் இந்த நாட்டு அரசாங்கம் இந்தக் கொடிய நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற கோடி கோடியாக செலவு செய்கின்றதே. நாமும் எம்மால் ஆன ஒரு சிறுதொகையினை ஈந்தால் என்ன என்ற அவாவின் விளைவாகவே இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் நண்பர் குமார் புனிதவேல். ஆவர் பற்றி அறியாதோர் இருக்க முடியாது. நல்லதோர் ஆன்மீகவாதி. எமது இளைய தலைமுறையினர்கள் எமது மதம் பற்றிய தெளிவான அறிவுடையவர்களாக வளரவேண்டும் என்ற நோக்கம் கொண்டு ஆழ்வார்கள், நாயன்மார்கள் பற்றி எளிமையான ஆங்கிலத்தில் நூல்களை ஆக்கியுள்ளார்.

**எந்த முயற்சி?**

செப்ரம்பர் 10ந் திகதி ரொறன்ரோவின் பால்ட்வின் விமான கூடத்தில் இருந்து உலங்கு வானூர்தி ஒன்றினில் விண்நோக்கி 13,500 அடி உயரம் சென்று அங்கிருந்து வான்குடை ஒன்றுடன் குதிக்கவுள்ளார். Sky diving எனும் இந்தச் சாதனையை நண்பர் குமார் புனிதவேல் நிதிதிரட்டலுக்காகச் செய்வுள்ளார். சிறு துளி பெரு வெள்ளம் என்பார்கள். இந்தச் சாதனை மூலமாக எமது மக்கள் மனதிலே புற்றுநோய் பற்றிய ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். கனடிய அரசினது புற்று நோய் ஒழிப்பு இயக்கமாகிய Canadian Cancer Society யினுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தை எல்லோருக்கும் ஏற்படுத்த வேண்டும் என்பதே அவரது அபிலாசை.

## எப்படி உதவலாம்?

நண்பர் புனிதவேலின் நண்பர்கள் Cancer Fund Pledge பத்திரங்களுடன் உங்களைக் காண்பார்கள். அதில் நீங்கள் கொடுக்கும் தொகையினைக் குறிக்கலாம் உங்களுக்கு வசதியான தொகையினைத் கொடுத்து உதவலாம். $20.00இற்கு மேலாக இருந்தால் Canadian Cancer Society யினுடைய ரசீது உங்களுக்குக் கிடைக்கும்

நேரடியாகவே நண்பர் குமார் புனிதவேல் அவர்களுடன் தொடர்பு கொண்டு உங்களால் இயன்ற தொகையினை வழங்கலாம்

அவரது தொலைபேசி எண்: 416 797 1517.
மின் அஞ்சல் முகவரி: kumarpunithavel@yahoo.com



# இறுதிப் பயணம்



குரு அரவிந்தன்

அட்லாண்டிஸ் விண்கலத்தின் இறுதிப் பயணம் மிகவும் வெற்றிகரமாக நிறைவேறியதில் உலகமே மகிழ்ச்சி அடைந்தது. சென்ற வியாழக்கிழமை 2011 யூலை மாதம் 21ம் திகதி புளோறிடாவில் உள்ள கென்னடி விண்வெளி நிலையத்தை அட்லாண்டிஸ் விண்கலம் வந்தடைந்ததன் மூலம் தனது கடைசிப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டது. ஏன் இந்தப் பயணம் மிகவும் முக்கியமாக அமைந்ததென்றால், அமெரிக்காவிற்குச் சொந்தமான ஐந்து விண்கலங்களில் பயணத்திற்கு ஏற்றமாதிரி அமைந்திருந்த கடைசி விண்கலம் இதுதான். ஏற்கனவே இரண்டு விண் கலங்கள் விபத்தில் சிக்கி அழிந்து போயிருந்தன. ஏனைய இரண்டும் விண்வெளிப் பயணத்திற்குத் தகுதியற்றவை என்ற காரணத்தால் விண்கலக் காட்சிச் சாலையில் இடம் பெற்றுவிட்டன. 33 தடவைகள் விண் வெளிக்குச் சென்றுவந்த 26 வயதேயான அட்லாண்டிஸ் விண்கலமும் இப்போது விண் கல காட்சிச் சாலைக்குச் செல்லத் தயாராகி விட்டது. இந்த விண்கலம் 1985ம் ஆண்டு அக்டோபர் மாதம் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது. கடைசிப் பயணத்தில் பயணம் செய்த கிறிஸ் பெர்க்குசன், டக் ஹேளி, சன்டி மக்னஸ், றெக்ஸ் வல்கீம் ஆகிய நால்வரும் 13 நாட்கள் வரையில் விண்வெளியில் தங்கியிருந்து பல தொழில் நுட்ப உதவிகளைச் செய்து முடித்தது மட்டு மல்ல, இந்த விண்கலம் தனது கடைசிப் பயணத்தின்போது 3.5 தொன் நிறையுள்ள பொருட்களை விண்வெளி நிலையத்திற்குக் கொண்டு சென்றதும் குறிப்பிடத்தக்கது. இந்த விண்கலம் பல பறப்புக்கள் மூலம் மொத்தமாக 306 நாட்கள் வரை விண்வெளியில் தங்கியிருந்திருக்கிறது.

முதன் முதலாகப் பரீட்சார்த்த விண்வெளி விமானங்கள் 1977ம் ஆண்டளவில்தான் பறக்க விட்ப்பட்டன. 1981ம் ஆண்டு கொலம்பியா என்ற விண்கலம் முதன் முதலாக அமெரிக்காவால் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. இதில் ஜோன் ஜங், பொப் கிறிப்பன் ஆகிய இருவரும் பயணம் செய்தனர். 1983ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ம் திகதி சலெஞ்சர் விண்கலம் அனுப்பப்பட்டது. இதில் சென்ற விண்வெளி வீரர்கள்தான் விண்வெளியில் முதன்முதலாக நடந்து காட்டினார்கள். 1983 யூன் மாதம் 18ம் திகதிதான் முதல் அமெரிக்கப் பெண்மணியான சாளி றைட் விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டார். சலெஞ்சர் விண்கலம் 1986ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் திகதி விண்வெளி விபத்தில் சிக்கிக் கொண்டதால் அதில் பயணம் செய்த 7 விண்வெளி வீரர்களும் மரணமானது மிகவும் துக்கரமான சம்பவமாக அமைந்து விட்டது. 1990ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஹபிள் தொலைநோக்கி விண் வெளிக்கு அனுப்பப்பட்டது. 1993ம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஹபில் தொலை நோக்கி பழுதடைந்ததால், என்டோவோர் விண்கலத் தில் சென்றவர்களால் அந்தத் தொலை நோக்கி விண்வெளியில் வைத்தே திருத்தப் பட்டது. 1995ம் ஆண்டு மிர் என்று அழைக் கப்படும் ரஸ்யாவின் விண்வெளி நிலையத் தோடு அமெரிக்க விண்கலம் பரீட்சார்த்த மாக இணைக்கப்பட்டது. 2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் கொலம்பியா விண் கலம் தனது பயணத்தின்போது விபத்துக்குள்ளானது. இரண்டாவது விண்கலமும் விபத்துக்கு உள்ளானதைத் தொடர்ந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட விண்வெளிப் பயணம் 2005ம் ஆண்டு யூலை மாதம் மீண்டும் டிஸ்கவரி விண்கலத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. 2011ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி 27 வயதான டிஸ்கவரி தனது கடைசிப் பயணத்தை 12 நாட்கள் விண் வெளியில் தங்கியிருந்த பின் திரும்பி வந்து வெற்றிகரமாக முடித்துக் கொண்டது. இந்த விண்கலம் 39 தடவைகள் விண்வெளிக்குச் சென்று வந்த சாதனையைப் படைத்திருந்தது. சர்வதேச விண்நிலையத்திற்கும், ரஸ்யாவின்



மிர் விண்நிலையத்திற்கும் ஒரே பறப்பில் சென்று வந்த பெருமை டிஸ்கவரி விண் கலத்திற்கே உரியது. பல பறப்புக்களை மேற்கொண்டதன் மூலம் 365 நாட்கள் வரை விண்வெளியில் தங்கியிருந்த இந்த விண்கலம் 238 மில்லியன் கிலோ மீற்றர் தூரம்வரை பறந்திருந்தது. 2011ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி மற்றுமொரு விண்கலமான என்டோவோர் தனது கடைசிப் பயணத்தை முடித்துக் கொண்டது. எஞ்சியிருந்த மூன்று விண்வெளி விமானங்களும் காட்சிச் சாலைக்குச் சென்று விட்டதால் அமெரிக்கா தனது நாசா விண் வெளித் திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டது. இந்த 30 வருடகாலத்தில் மொத்தமாக எல்லா விண்வெளி விமானங்களும் சேர்ந்து 135 தடவைகள் பறப்பில் ஈடுபட்டிருக்கின்றன. சுமார் 542 மில்லியன் மைல்கள் தூரத்தை இவை கடந்திருக்கின்றன. மேக்கூரி, ஜெமினி, அப்பலோ என்று இதுவரை அமெரிக்கா சுமார் 180 விண்கலங்கள்வரை பறக்க விட்டிருக்கின்றது. இந்த விண்வெளி விமானங்கள் இப்போ ஓய்வு பெறுவதால் சுமார் 4000 ஊழியர்கள் தங்கள் வேலையை இழக்கவேண்டி வருகின்றது.

1985ம் ஆண்டு தனது முதற் பறப்பை மேற் கொண்ட அட்லாண்டிஸ் விண்கலம் 176,413 இறாத்தல் நிறை கொண்டது. 78 அடி அகலமான சிறகுகளைக் கொண்ட இதன் நீளம் சுமார் 122 அடியாகும். 56 அடி உயரம் கொண்டது. கொலம்பியா விண்கலத்தைவிட 3.5 தொன் எடை குறைந்தது. அட்லாண்டிஸ் விண்கலம் தனது கடைசிப் பயணத்தின் போது 5,284,862 மைல்கள் தூரம் பறந்து, மொத்தமாக 125,935,769 மைல்கள் தூரம் பறந்திருக்கிறது.

அட்லாண்டிஸ் விண்கலத்தின் கடைசிப் பயணத்தோடு அமெரிக்காவின் 30 வருட விண்வெளிப் பயணம் முடிவுக்கு வந்திருக்கிறது. வரும்காலத்தில் கென்னடி விண்வெளி நிலைய பார்வையாளர் மண்டபத்தில் இந்த விண்கலம் காட்சிக்காக வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 33 தடவைகள் பறப்பில் ஈடுபட்ட அட்லாண்டிஸ் விண்கலத்தில் இதுவரை காலமும் 156 விண்வெளி வீரர்கள் பயணம் செய்திருக்கிறார்கள். அட்லாண்டிஸ் விண்கலத்தில் ஐந்து தடவைகள் பறந்த பெருமை ஜெரிறோஸ் என்ற விண்வெளி வீரரைச் சாரும்.

2012ம் ஆண்டுவரை தேவையான முக்கியமான பொருட்களை அட்லாண்டிஸ் விண் கலத்தின் மூலம் விண்வெளி நிலையத்திற்கு அமெரிக்கா அனுப்பி வைத்தாலும், இனிவரும் காலங்களில் விண்வெளி நிலையத்தில் தங்கியிருப்பவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ரஸ்யாவின் விண் கலங்களையே அமெரிக்கா நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, அட்லாண்டிஸ் விண்வெளி வீரர்கள் கடைசியாக விடை பெற்றபோது விண்வெளி நிலையத்தில் தங்கியிருப்பவர்களின் முகத்தில் ஒரு வித சலனத்தை அவதானிக்க முடிந்தது. அது அட்லாண்டிஸ் விண்கலத்தின் இறுதிப் பயணம் என்பது மட்டுமல்ல, அமெரிக்காவின் விண்வெளிக் கடைசிப் பயணம் என்பதையும் அவர்கள் அறிந்தே வைத்திருந்தனர். பொருளாதார நிலை காரணமாக புதிய விண்வெளித் திட்டங்கள் தடைப்படுமானால், விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கும் அவர்களை யார் மீட்பார்கள் என்பது கேள்விக்குறியே!

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A

Broker

Ottawa: 613.276.SALE (7253)

Toronto: 416.659.SELL (7355)

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# வதிவிடத்திற்குச் சிறந்தது வாடகை வீடா?

### தற்போது ஓய்வு பெறுவோருக்கு வாடகை வீட்டில் வதிவது எப்படிச் சிறந்தது ?

வாடகை வீடு ஆதாயமா சொந்த வீடு ஆதாயமா என்ற கேள்வியைக் கேட்டால் மறுமொழி சொல்பவரைப் பொறுத்து எது சிறந்தது என்பது மாறும். ஒரு தொடர்மாடிக் கட்டட உரிமையாளர் வாடகை வீடு என்றும் ஒரு வீடு விற்பனை முகவர் சொந்த வீடுதான் என்றும் வாதிடக்கூடும். ஆனால் சந்தை நிலவரங்களைப் பொறுத்து வாழ்வில் எந்தக் காலகட்டத்தில் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து எது உங்களுக்கு ஆதாயம் என்பது மாறுபடும்.

தற்போது ஒய்வு பெறும் வயதில் நீங்கள் இருந்தால் வீட்டை விற்றுவிட்டு வாடகை வீட்டில் வதிவது சிறந்தது என்பதற்கான சில முக்கிய வாதங்கள் முன் வைக்கப்படுகின்றன. இதற்கான முதன்மையான வாதம் கடந்த பல ஆண்டுகளாக காணப்பட்ட விலை அதிகரிப்பால். வாங்கிய விலையைவிட நியாயமான அளவு சந்தை பெறுமானத்தில் அதிகரிப்புக் காணப்படுகிறது. சந்தை பெறுமதி அதிகரித்துள்ளது என்பதால், சந்தைப் பெறுமதி இறங்கினால் தற்போது வீட்டை விற்றுப் பெறும் இலாபத்தை இன்னொரு வீட்டை வாங்கி இழக்க வேண்டி வரலாம் என்பது.

இது கனடிய வீட்டுச் சந்தை முடிவுக்கு வரப்போகிறது எனக்கூறுவது அல்ல. கடந்த பல ஆண்டுகளாக பாரிய விலை அதிகரிப்பைச் சந்தித்த கனடிய வீட்டுச்சந்தை இனிவரும் சில ஆண்டுகளுக்கு மிகச் சிறிய அளவினாலான அதிகரிப்பு அல்லது சிறிய வீழ்ச்சியைக்கூடச் சந்திக்கலாம் என்பதே. தற்போது விற்பது உங்களின் எதிர்கால நிதி நிலவரத்தில் காணப்படக்கூடிய சிறிய இடரை குறைப்பதே. நீங்கள் ஒரு வீட்டு உரிமையாளராக இருந்தால் உங்களின் கணிசமான




பங்கு செல்வம் வீட்டில் கட்டுண்டிருக்கும். கட்டுண்டு இருக்கும் செல்வத்தை விடுவிப்பதற்கு ஒரே வழி விற்பதே ஆகும்.

நிச்சயமாக வாழ்விடத்தை 'தரக்குறைவு' செய்து கொண்டு ஒரு Condo அல்லது Townhouse வாங்கலாம். ஆப்படிச் செய்யப் போனால் மிகக் கவர்ச்சிகரமான பல வழிகள் இருக்கலாம். உளரீதியாகப் பலரும் வாடகை வீட்டுக்கு எதிரான கருத்தைக் கொண்டுள்ளார்கள். வீட்டு உரிமையுடன் வீட்டுடனான சொந்தத்தைப் பேணுவோர் பலர் இருக்கிறார்கள். வாடகை கொடுப்பது ஒரு நிபுணத்துமான நிதி நிர்வாகம் அல்ல என நினைப்போர் பலர் இருக்கிறார்கள். ஆனாலும் வயது போகப்போக இந்த விதமான வாதங்களைவிட வித்தியாசமான வாதங்களைப் பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. வீட்டு விலைகளைச் சாதகமாகப் பார்க்கும் ஆய்வாளர்கள் கூட ஒரு 4 வீத சராசரி அதிகரிப்பைத்தான் பார்க்கிறார்கள். ஆனால் ஒரு பதிவு செய்யாத முதலீட்டு நிதியம் ஒன்று 6.5 வீதத்தை சரா சரியாகத் தரக்கூடியதாக இருக்கும். இது வரியைக் கணக்கில் எடுக்காத கணக்காகும். வீடு விற்று வரும் இலாபத்திற்கு வரியிறுக்க வேண்டியதில்லை. ஆனால் மற்றைய முதலீடுகளையும் மிகவும் வரிகளைக் குறைத்து நிர்வகிப்பதற்கு வழிகள் இருக்கின்றன.

அடுத்தாக வாழ்க்கைச் செலவுகள் புதிய 'சின்ன' வீட்டை நீங்கள் அடைமானக் கடன் இல்லாமல் வாங்கி விடக்கூடும். ஆனால் சோலை வரியும் வீட்டை நல்லநிலையில் பேணுவதற்கான செலவுகளும் இல்லாமல் போகாது. மாதம் 1500 வாடகை தருபவர்களுக்கும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஓய்வு காலத்தில் செலவீனங்களுக்கு வீட்டின் பெறுமானத்தில் பணத்தைப் பெறுவோருக்கு வீட்டை விற்றுவிட்டு பணத்தை பாதுகாப்பான வேறு முதலீடுகளில் வைப்பிலிடுவது பாது காப்புடன் நிம்மதியைத் தரும். ஆனால் காசு கையில் இருக்கும் போது கணக்கு வழக்கில்லாமல் செலவழிக்கும் நிலை இதில் ஒரு


மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

எதிர்மறையான நிலையாகும். அதனால் மிகவும் கட்டுப்பாடும் ஒழுங்கும் செலவுகளைக் கட்டுப்படுத்துவதில் இருக்க வேண்டும்.

ஒரு சிறிய Condo அல்லது Townhouse வாங்குவது என்பதை ஒப்பிட்டு பார்த்தால் பலரும் அதையே செய்வதானாலேயே இவற்றின் விலை உயர்வாக உள்ளது. ஒரு Condo வாங்க யோசித்தால் நாளொரு மேனியும் பொழுதொரு வர்ணமுமாக உயரும் நிர்வாக நிலுவைகளுக்கு முகம் கொர்டுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். வாடகைகளைக் கட்டுப்படுத்த இருக்கும் சட்டங்கள் போல நிர்வாக நிலுவைகளைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் இல்லை.

வீட்டில் இருந்து செல்வதில் உங்கள் வயது முக்கியமான காரணியாக இருக்கும். ஒரு இடத்தில் இருந்து சென்று இன்னெரு இடத்தில் வாழ்வதானால் தொடர்ந்து ஒரு 7, 8 வருடங்கள் இருக்காவிட்டால் பிரயோசனம் இல்லை. வாடகையோ இல்லையோ, இது ஒரு தனிப்பட்ட தெரிவு. ஆனால் அதைப்பற்றி தெரிந்து கொண்டு சிந்திப்பதால் ஒரு நட்டமும் இல்லை.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■




HomeLife/Future Realty Inc., Brokerage*
Scarborough
•2 Bed Rooms
•2 Wash Rooms
$239,900
Scarborough
•3 Bed Rooms
•1 Wash Room
$219,000
Mississauga
•2+1 Bed Rooms
•2 Wash Rooms
$179,000
SCARBOROUGH
CALL NOW For VIP Price
MISSISSAUGA
CALL NOW For VIP Price
DOWNTOWN
CALL NOW For VIP Price
MARKHAM
CALL NOW For VIP Price
Full Time Real Estate Agent!
RAJ (NAGENDRARAJAH) NADARAJAH
Sales Representative
Direct: 416-333-6115
E-mail: nanohomes@gmail.com
Office: (905)-201-9977
FAX: (905)-201-9229
7 Eastvale Dr., Unit 205, Markham, ON, L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®
Buying/Selling Your Home ?
Call Now!
Lets Talk!
NEW
MARKHAM, DOWNTOWN & SCARBOROUGH CONDOS
With VIP Pricing
CALL NOW ! FOR MORE INFO

# ஐக்கிய நாணய சங்கம்

## - உருத்திரபுரம் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச்சங்கம் -

கூட்டுறவு என்று கூறும்பொழுது ''சமூக பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தற் பொருட்டு அவைகுறித்த இலக்கினை அடைவதற்காகத் தனிமனிதர்கள் சனநாயக வழியில் ஒன்றுபட்டு செயலாற்றும் கூட்டுமுயற்சி என்பது எல்லேரது மனதிலும் தோற்றம்பெறும்.

'கூடிவாழ்ந்தாற் கோடி நன்மை', 'கூட்டுறவே நாட்டுயர்வு', கூட்டுக்குடும்பம், 'ஒற்றுமையே பலம்', ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்ற தத்துவங்களின் மூலம் தமிழர்வாழ்வில் கூட்டுறவு முக்கிய இடத்தினைப் பெற்றுவருகிறது.

இலங்கையில் 14 வகையான கூட்டுறவுச் சங்கங்கள் நடைமுறையிலிருந்து வருகின்றன இவற்றுள் 305க்கு மேற்பட்ட பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் 40 இலட்சத்துக்க மேற்பட்ட உறுப்பினரைக்கொண்டிருக்கிறது இதனுடன் ஒப்பிடுகையில் ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறியவையாகவும் உள்ளூர் சார்ந்தவையாகவும் காணப்படுகின்றன.

1972ம் ஆண்டு 5ம் இலக்கச் சட்டத்தினாற் கட்டுப்படுத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் சுயதொழில் கடன்வழங்கல் போக்குவரத்து கிராமியவங்கி இயற்கைவளம் பாடசாலை விவசாயம் வீடமைப்பு கைத்தொழில் இளைஞர் ஆகிய இன்னேரன்ன பலதுறைகளை உள்ளடக்கிச் செயற்பட்டு வருகின்றன.

ஏனைய கூட்டுறவுச்சங்க வரிசையில் ஐக்கிய நாணய சங்கங்கள் முக்கியம் பெறுகின்றன. 1960களில் வீடமைப்பு அதிகாரசபை கொடுத்தபெருந்தொகைப் பணம் அறவிடமுடியாத நிலையில் வீடமைப்புக் கடன்களைக் கொடுக்கவும் அறவிடவும் வகை செய்ய ஐக்கிய நாணய சங்கங்கள் அனைத்தும் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கமெனப் பெயர் மாறறஞ் செய்யப்பட்டது.

உருத்திரபுரம் விவசாயக்கிராமம் தொடக்கப்பட்ட காலத்திலிருந்து குடியானவர் வாழ்க்கையிற் கூட்டுறவுச்சங்கங்களின் பங்களிப்பு முக்கிய இடம் பெற்று வருகிறது. இவற்றுள் ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் ஐக்கிய நாணய சங்கம் உருத்திரபுரம்வாழ் விவசாயிகளுக்குப் பல வழிகளில் உதவி செய்துவருகிறது. இந்தச் சங்கம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு இயங்குகின்ற ஒன்றாகும். ஒருகிராமத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைப் போன்று இச்சங்கத்திற்கும் சிலவரையறைகளும் விதிமுறைகளும் உள்ளன. இதன் செய்றபாட்டில் அரசாங்கத்தின் கூட்டுறவுத் திணைக்களத்தின் வரையறைகளும் காணப்படுகின்றன. இதன் இயக்கத்தைக் கட்டுப்படுத்தவோ இரத்துச் செய்யவோ கூட்டுறவு ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இச்சங்கமானது தனது அதிகார எல்லையினுள் மாத்திரம் அங்கத்தவரைச் சேர்க்கவோ கடன் வழங்கவோ வியாபாரம் செய்யவோ கடன் மீளப் பெறவோ புதிய தொழில் ஆரம்பிக்கவோ அவை தொடர்பான கருத்தரங்குகளை நடாத்தவோ கூட்டுறவு ஆணையாளரினால் அனுமதி வழங்கப்பட்டிருகின்றது.

இச்சங்கம் உருத்திரபுரத்தில் திரு கா.நாகலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் முக்கிய பங்களிப்புடன் 1955ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் உருத்திரபுரத்தின் குடியானவர்களும் 18 வயதிற்கு மேற்பட்ட குடியானவர்களின் வாரிசுக்களும் அங்கத்தினராக இணைந்து கொண்டதுடன் கூட்டுறவுச் சட்டத்தின் உபவிதிகளுக்கு அமைவாக நிர்வாக சபையின் தெரிவும் செய்யப்பட்டது. முதன்முதலில் திரு கா. நாகலிங்கம் ஆசிரியர் செயலாளராகவும் திரு வே. கதிரவேலு குருகுலம் அப்பு அவர்கள் தலைவாராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அன்றைய பல இளைஞர்களையும் இச்சங்கம் உள்ளடக்கியிருந்தது.

ஐக்கிய நாணய சங்கத்தில் சந்தாப்பணம் செலுத்தி அங்கத்தவராகியவர்கள் அந்தச்சங்கத்தின் வாக்குரிமையினைப் பெற்றிருந்ததுடன் நிர்வாகத்தினரைத் தெரிவதற்கும் சங்க நடைமுறைகளில் பங்கேற்பதற்கும் உரித்துடையவராகிறார். ஆத்துடன் தனியார் ஆலோசனைகள் பிரேரணைகள் போன்றவற்றினை நிர்வாகத்துக்கு வழங்கவும் நிர்வாகத்துடன் இணைந்து கிராம அபிவிருத்திப் பணிகளில் பங்குபற்றவும் அச்சங்கத்துக்கு முழு உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

ஐக்கிய நாணய சங்கம் அதன் பெயரில் குறிப்பிட்டது போல் மூன்று விடயங்களில் கவனம் செலுத்தியிருந்தது.

விவசாயக்குடியானவர் குடும்பங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதன் மூலம் கருத்து இணைக்கப்பாட்டினை ஏற்படுத்த முடிந்தது. ஓற்றுமைப்பட்ட சிந்தனையும் செயலும் உருத்திரபுரத்தின் அபிவிருத்திக்கு அடிப்படையானது என்ற உண்மை அன்றைய குடியானவர்களிடையேயும் அவர்களது குழந்தைகளிடமும் எடுத்துரைக்கப்பட்டது. குடியேற்றத் திட்டம் ஆரம்பித்த வருடமுதல் அதனடிப்படையில் கூட்டு விவசாயம் என்பது இலகுவாக இருந்தது. உதாரணமாக நாலு ஏக்கர் வயல் நிலத்தில் ஒரு குடியானவருக்கு அரை ஏக்கர் என்ற முறையில் எட்டு விவசாயிகள் ஒன்றிணைந்து சிறுபோக நெற்செய்கை செய்வதில் ஐக்கியம் பேணப்பட இந்தச் சங்கம் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

ஒருவருடைய நாணயம் என்பது அவருடைய பெறுமானம், நம்பிக்கை, தனிமனித மதிப்பு என்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியிருக்கும். விவசாயி மீது கொள்ளப்படும் நம்பிக்கையின் அடிப்படையில் அவருக்குக் கடன் வழங்குதல், கடனை மீளப்பெறுதல் ஆகியன அமைந்திருக்கும். இந்த நம்பிக்கை என்பது கூட்டுறவு, ஐக்கியம் என்பதன் பின்னணியில் இயங்குகிறது. குறிப்பாகக் குறித்த சில அங்கத்தினரின் நம்பிக்கையுடனான பிணையின் அடிப்படையிற் தனிமனிதனுக்கு நம்பிக்கை அல்லது மதிப்பு இச்சங்கத்தினால் வழங்கப்படுகிறது. இதனடிப்படையில் தனிப் பொறுப்பு என்பதனை விடக் கூட்டுப் பொறுப்பு என்ற தத்துவம் குடியானவர்களிடையே முக்கியம் பெறத் தொடங்கியது. ஒருவரைக் கனம் பண்ணுவது அதாவது அவருக்கு மதிப்பளிப்பது அல்லது நிறையளிப்பதென்பது அவரின் உண்மையும் சத்தியமும் கலந்த செயற்பாடுகளிற் தங்கியிருக்கிறது. திருவள்ளுவர் கூறிய நிறைமொழி-மாந்தர்களாக அவர்களைப்பார்க்க இந்த நாணயம் என்ற சொற்கூற்று அங்கு அடிப்படையாக அமைந்திருந்தது.

சங்கம் என்ற சொல் பலா் கூடுவதனைக் குறித்துநின்றாலும் ஒத்தகருத்துடையதும் ஒரே நோக்கின் கீழ் செயற்படுபவர்களின் ஒன்றுபட்ட செயற்பாட்டினை வலியுறுத்துவதாக அமைகிறது. கருத்தும், நோக்கும் மாறுபடுமிடத்து சங்கம் அல்லது கழகம் அல்லது ஒன்றியம் என்ற சொற்தொடர்கள் கருத்தற்றவைகளாக மாறிவிடுகின்றன.

இம்மூன்று ஆதாரப்பதங்களுடன் உருவாக்கப்பட்ட இச்சங்கமானது பலதலைமுறைகளைக் கடந்தும் உருத்திரபுரத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்துவருகிறது என்ற பெருமையினை ஒருங்கே பெற்றுள்ளது. இச்சங்கம் பலஅங்கத்தவர்களை இழந்திருப்பினும் புதிய பழைய தலைமுறையினரின் ஒன்றுபட்ட நோக்கத்தின் கீழான இணைவின்மூலம் இன்று பழைய புதிய தலைமுறையினரை இணைத்த நிர்வாகசபையின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கிறது என்ற பெருமை உருத்திரபுரம் ஐக்கிய நாணய சபைக்குக் கிடைத்திருக்கிறது.

இன்றைய அதன் செயற்பாடுகளில் மீள் கட்டுமானம், புதிய பழைய தலைமுறையினரின் ஐக்கியம் பேணப்படுதல் என்பன முக்கியமானவை. இதில் புதிய தொழில் தொடங்கப் படுதல் ஏற்கனவே உள்ள தொழில் வாய்ப்பக்களை விருத்தி செய்தல், கல்வி முதலீடு, விவாக அத்திம கால காப்புறுதி வழங்குதல், போக்குவரத்து சாதனங்களை அதிகரித்தல், விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை நிர்ணயம் கொள்வானவு, குறுங்காலக்கடன், பெண்களதும் குழந்தைகளினதும் நலம் பேணுதல், விவசாயக்காப்புறுதி கடனைமீளச் செலுத்தும் வசதியை ஏற்படுத்துதல், விவசாயிகளுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையினை ஏற்படுத்துதல் ஆகியவற்றைக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்து அவற்றுக்குப் புறம்பாகவும் செய்து கொடுக்க வேண்டிய தேவை இச்சங்கத்திற்கு ஒரு சவாலாக அமைந்திருக்கிறது.

இச்சங்கம் ஒரு வங்கி போன்று இயங்கினாலும் அதில் உள்ள அரசு சார்ந்த இயக்கத்தின் விளைவாகக் கடன் மானியம் போன்றதென்றும் அதனை மீளச்செலுத்தத்தேவையில்லை என்றும் நினைக்கும் இலங்கைக் குடியானவரின் அடிப்படை மனோபாவத்தினாலும் மற்றைய சங்கங்களிற் காலாவதியாகும் கடன்கள் தவிர்க்கமுடியாததாகின்றன. இக்கருத்தினைப் பொய்யாக்கிய பெருமை இந்த ஐக்கிய சங்கத்துக்குண்டு.

விவசாய உற்பத்தியில் வரட்சி, வெள்ளம், காற்று, பயிர்நோய், சந்தைப்படுத்தலும், விலையும் கொடுக்கும் எதிர்மறை விளைவுகளினால் இவை மேலும் கூர்மையடைகின்றன. இவற்றின் ஒரு பகுதியினையேனும் அரசாங்க மானியத்தினூடாக அடைத்துவிடலாமா என்பதிற் கூட்டுறவுச் சட்டதிட்டங்கள் சாதகமான முடிவினைத் தரவில்லை. இதனால் விவசாயிகளின் கடன் மீளளிப்புத் திறனை ஊக்கிவிற்பதன் மூலம் விவசாயிகளைக் கூட்டுறவுக் கடனிலிருந்து மீட்டு நிறைமாந்தர்களாக உலவும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

கனடாவின் உருத்திரபுரம் அபிவிருத்திக்கழகம் ஐக்கிய நாணய சங்கத்தின் செயற்பாடுகளுக்கு உதவ முன்வந்திருப்பதுடன் அதன் நிர்வாகம் 'சாதகமான அறிக்கையினைத்' தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறது. இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட உபகுழுவானது அதிபர் கா. நாகலிங்கம் அவர்களின் ஆலோசனையுடனும் அவரது மேற்பார்வையின் கீழும் செயற்பட்டு அங்கத்தவர்களதும் அபிமானிகளதும் பணத்தினைச் சிறப்பானதும் பிரயோசனமானதுமான முறையிலும் செலவு செய்து உருத்திரபுரம் என்ற கிளிநொச்சி நகர உப கிராமத்தின் வளர்ச்சியில் தம்மாலான உதவியினைச் செய்ய உறுதிபூண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.

'உருத்திரபுரம் அபிவிருத்தியில் நீங்களும் பங்காளிகளாக மாற வேண்டும் என்பதுடன் உருத்திரபுரத்தின் புதிய விவசாயத் தலைமுறையினரின் மனதில் நீங்களும் இருக்க வேண்டும் என்பதனைச் இச்சங்கச் செயற்பாடு உறுதிசெய்யும்.

விபரங்களுக்கு: க.சந்திரகுமார் (ஆலோசகர்) இ.கேதீஸ் (தலைவர் உருத்திரபுரம் அபிவி-ருத்திக்கழகம்) அவர்களுடன் தொடர்புகொள்ளவும்

*- ராஜினி தார்சிசீயெஸ்*


# உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகத்தின் கோடைகால ஒன்று கூடல்

**இடம் : Downsview Dells Park இல் Area 1.**

**(North Yorkஇல் Keele / Shepard Ave West இற்கு அருகில் - கீல், செப்பேர்ட் சந்திக்கு 500 யார் மேற்கே, செப்பேர்ட் வீதிக்குத் தெற்கே)**

# August 06, 2011 - சனிக்கிழமை

காலை 10:00 மணி

**தொடர்புகளுக்கு: கேதீஸ்: 647 504 5566, ராஜினி: 416 704 9278, குணா: 416 402 4545**

**இவ் ஒன்று கூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உறவுகளையும் நண்பர்களையும் சந்தித்து மகிழவும் நல்லதொரு வாய்ப்பு. கிராமத்தின் அபிவிருத்தியிலும் மீள்கட்டமைப்பிலும் எங்களுடன் கைகோர்த்துச் செல்லவும் வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

# நீடிக்கப்பட்டுள்ள Energy Audit



பிரபா
சின்னா

2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ECO-Energy எனப்படும். மத்திய அரசினுடைய வீடு திருத்தியமைக்கும் நிகழ்ச்சித்திட்டமானது மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டாலும் பல்வேறு அரசியல் பணப்பற்றாக்குறை காரணங்களுக்காக ஆங்காங்கே இடைநிறுத்தப்பட்டது. மத்திய அரசினால் நடைமுறைப் படுத்தி செயல்படுத்தப்படும் இத்திட்டமானது கடந்த மார்ச் 31, 2010ம் ஆண்டு பணப்பற்றாக் குறை காரணமாக அரசினால் இடைநிறுத்தப்பட்டது. அவ்வேளையிலும் கூட இத்திட்டத்தின் நன்மை மற்றும் பயன் கருதி மாகாண அரசுகள் தொடர்ச்சியாக இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியிருந்தது. அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டமும் கூட அதன் காலாவதித் தேதியான மார்ச் 31, 2011 உடன் முடிவுற்றது.

இவ்வருடத்திற்கான Budgetஇல் மத்திய அரசு இத்திட்டத்திற்கான நிதியை ஒதுக்கீடு செய்து இத்திட்டத்தைத் தொடருவதற்கான உறுதியை செய்திருந்தது. NRCAN (Natural Resources Canada) வினால் மேற்பார்வை செய்யப்படும் இத்திட்டத்தை அவ்வமைப்பு கடந்து யூலை 13ம் தேதி மீளப் புதுப்பித்திருப்பதாக அறிவித்திருந்தது. அதாவது, இத்திட்டம் June 6, 2011 முதல் மார்ச் 31, 2012 வரை நடைமுறையில் இருப்பதாக அறியத்தந்திருக்கிறது. நீங்கள் 2007ஆம் ஆண்டிற்குப் பின் எப்போதாவது Energy Audit செய்திருந்தால், யூன் 6, 2011க்குப் பின்னராக அதற்கான திருத்த வேலையைச் செய்த்திருப்பீர்களேயானால் நீங்களும் அரசு வழங்கும் சலுகையை பெற்றுக்கொள்ள முடியும்.

### கட்டுப்பாடுகள் மற்றும் வழிமுறைகள்:

இத்திட்டத்தில் பங்கெடுக்க ஒரு சில விதி முறைகளை உண்டு.

வீட்டு உரிமையாளர்கள் முதலில் NRCAN http://oee.nrcan.gc.ca/residential/personal/retrofit-register/register.cfm?attr=4 என்னும் இணையத்தளத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்படி பதிவு செய்யும் பட்சத்தில் அவ் இணையத்தளம் உங்களுக்கான ஒரு இலக்கத்தைத் தரும். அவ் இலக்கமானது உங்கள் வீட்டிற்குரிய சுட்டிலக்கமாகும். இவ்விலக்கம் வீட்டு உரிமையாளர்களே தங்களை பதிவு செய்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் Government Certified Energy Auditorஐ அல்லது Energy Audit Service organizationஐ அணுகி உங்கள் வீட்டின் Energy Evaluationஐ மேற்கொள்ளலாம். அவர் வீட்டை பரிசோதனை செய்த பின் உங்கள் வீட்டின் சக்தி சேமிப்புக்கான வழிமுறைகளைத் தெரிவிப்பார் அதன் பின்னரே உங்கள் வீட்டின் திருத்தவேலைகளைச் செய்யமுடியும். அவ்வாறு உங்கள் திருத்த வேலைகள் நிறைவடைந்ததும் அதே Engergy auditorஐ அல்லது வேறு ஒரு Government certified energy advisorஐ அமர்த்தி நீங்கள் உங்கள் இரண்டாவது பரிசோதனையை செய்து கொள்ளலாம். இரண்டாவது பரிசோதனையின் போது அவர் உங்களுக்கான அரசாங்கத்தினுடைய Rebateஐ பெறுவதற்காக விண்ணப்பிப்பார்.

நீங்கள் 2007ஆம் ஆண்டிற்குப் பின் எப்போதாவது ஒரு தடவை உங்கள் வீட்டின் முதல் பரிசோதனையை (Energy Auditor) செய்திருந்தால் நீங்கள் அதே Auditorஐ திரும்பவும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதே சமயம் உங்கள் திருத்த வேலைகளை June 6, 2011க்கு பின்னர் செய்திருந்தால் மட்டுமே தற்போது நடைமுறையிலுள்ள Rebateஐ பெற முடியும். நீங்கள் அத்தேதிக்குப் பின்னரே திருத்த வேலையைச் செய்திருந்தீர்கள் என்பதற்கான அத்தாட்சியை Energy Auditor இடம் உறிதிப்படுத்த வேண்டும்.

இத்திட்டம் March 31, 2012 உடன் முடிவடைவதினால் அத்தேதிக்கு முன்னர் உங்கள் திருத்தவேலைகளை செய்து முடித்து உங்கள் இரண்டாவது (Post-Audit) Auditஐயும் செய்ய வேண்டும். எனவே சரியாக திட்டமிட்டு செயற்பட்டால் மாத்திரமே இக்குறுகிய காலத்தில் நீங்கள் உங்கள் வேலைகளை நிறைவு செய்ய முடியும். அதேசமயம் நீங்கள் இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் முதலாவது பரிசோதனை (Pre-Audit) எந்நேரத்திலும் முடிவடையலாம். ஆகவே March 31, 2012 வரை காத்திருப்பது உசிதமல்ல. நீங்கள் உங்களை பதிவு செய்து கொள்வதன் முலமாக உங்களுக்கான சந்தற்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

பரிசோதகர் (Energy Auditor) உங்கள் வீட்டை பரிசோதனை செய்யும்போது நீங்கள் அவருடனிருத்தல் நல்லது, அப்போது தான் அவர் உங்கள் வீட்டின் சக்தி விரயங்களை உங்களுக்குத் தெரியப்படுத்த வசதியாக இருக்கும். அவருடைய வருகை உங்களுக்கு உங்கள் வீட்டைப் பற்றிய விபரங்களை அறிவுறுத்துவதற்காகவே. உங்கள் கேள்விகளையும் அதற்கான அவருடைய அறிவுறத்தல்களையும் பெற்றுக் கொள்வதே பெறுமதிமிக்கதாகும். அவர் உங்கள் வீட்டை காற்றமுக்கம் செய்து (Air pressure Test) செய்து உங்களுக்கு வீட்டிலுள்ள சக்தி விரயமாகும் இடங்களை காட்டுவார். அவ்வாறு அவர் காட்டும் அத்துவாரங்களை அடைத்தால் உங்கள் வீட்டின் சக்தி விரயங்களை கணிசமாகக் கட்டுப்படுத்த முடியும். எனவே வீட்டின் பரிசோதனையின் போது அவர் உங்கள் வீட்டைச் சுற்றியுள்ள துவாரங்களைக் காட்டுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

குளிக்காலம் அண்டி வருவதாலும் இத்திட்டம் மார்ச் 31, 2012 உடன் முடிவடைவதனாலும் காலம் தாழ்த்தாமல் செயல்படுவதே நன்மை தரும்.

இத்திட்டத்தின் கீழ் நீங்கள் அதிகளவாக பெறக்கூடிய தொகையைத் தருகின்றேன்.

| | |
|---|---|
| Doors/Windows/Skylights - each | $40 |
| Heating System | $790 |
| Cooling System | $250 |
| Ventilation System | $375 |
| Tankless Water Heater | $375 |
| Attic Insulation upto | $750 |
| Exterior Wall Insulation upto | $1,875 |
| Basement Insulation upto | $1,250 |
| Toilet Replacement each | $65 |

இது ஒரு சுருக்கப்பட்ட தொகுப்பே இதன் முழு விபரங்கள் அடங்கிய தொகுப்பை http://www.energyan.com என்னும் இணையத்தளத்தில் பார்க்கலாம்.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■

# உள ஆரோக்கிய...

14ம் பக்கத் தொடர்ச்சி...

தன்மையை துண்டி அயலில் எங்கள் நடமாட்டத்தை குறைக்கலாம். வாழும் இடத்துடன் சம்பந்தமற்ற நிலப்பரப்பு பாவனை ஆபத்தை அதிகரிக்க செய்யலாம். அதே நேரம், சில கட்டிடங்கள், உதாரணமாக சமூக நிலையங்கள், உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கு நிலையங்கள், வசதி குறைந்த அயலில் குற்றங்களை குறைப்பதையும் அவதானிக்கலாம். ஆலயங்கள், சிறுகடைகள் இருப்பதும் ஏற்கத்தக்க பாவனையாளர்களின் இருப்பால் (legitimate Users) குற்றங்களை குறைக்கலாம்.

மரங்கள், மற்றும் green space இருப்பது சில வேளைகளில் குற்றம் புரிபவர்கள் மறையவும் தப்பித்துச் செல்லவும் இலகுவாக வழிவகுக்கிறது. ஆனாலும் நன்கு பராமரிக்கப்பட்ட புல்வெளிகளும், ஐதான உயர்ந்த மரங்களும் அந்த சூழலில் வாழ்பவர்களுக்கு பாதுகாப்பான உணர்வை கொடுப்பது உண்மை. எங்கள் வாழும் சூழலில் நிலத்தின் பாவனையை பார்க்கும் போது, சமூக மேற்பார்வை (surveillance) ஒரு முக்கிய அம்சம். அதாவது எவ்வளவு தூரத்திற்கு மக்களால் அங்கு வந்து போகிறவர்களை, வேற்று மனிதர்களை, பிரித்துப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது, எவ்வளவுக்கு சுற்றாடலில் சம்பந்தமற்ற கட்டிடங்கள் (பாவனையில் இல்லாத காணி, கட்டிடம், பாடசாலை) இருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அங்கு வாழ்பவர்களால் சந்தேகமான நடமாட்டங்களையோ, வேற்று மனிதர்களையோ அடையாளம் காண முடியாமல் இருக்கும். கடை, கண்ணிகளும் வேற்று மனிதர்கள் நடமாட்டமும் அதிகரிக்கும்போது, மக்கள் கூடுதலாக தங்கள் வீட்டுக்குள் ஒதுங்கிவிடுவதை அவதானிக்கலாம். வாகனப் போக்குவரத்தும் இப்படித்தான். குறைந்த வேகத்தடை உள்ள தெருக்களில் வாழ்பவர்கள் (20 km/h) அதிக வேகத்தடை உள்ள அயலில் வாழ்பவர்களை விட தங்கள் தெரு, மற்றும் அயலவர்களை கூடுதலாக அறிந்தவர்களாக இருக்கிறார்கள். வேற்று மனிதர்கள் நடமாட்டம் ஆபத்தின் அடிப்படை என்று எண்ணினாலும், தெருக்களையும் அயலையும் உயிரோட்டமானதாகவும் இரசிக்கத் தக்கதாகவும் மாற்றும் தன்மை வெளியில் இருந்து வருபவர்களால் ஏற்படுகிறது என்றும் வேறு ஒரு கருத்து இருக்கிறது. சூழலை, அங்கு வாழ்பவர்கள் மேற்பார்வை இடக்கூடியதாக இருப்பது தான் முக்கியம். கட்டிடங்களை பொறுத்து அவற்றின் பிரசன்னம், அயலில் 'ஒரு கண்' வைக்க உதவும். புல்வெளிகள், மைதானம் என்று இருக்கும் போது, அதன் பாவனையாளர்களின் நடமாட்டத்தால் இயல்பாகவே இங்கு ஒரு மேற்பார்வை (surveillance) இருக்கும். அத்தோடு புல்வெளிகளும் மரங்களும், மனக்களைப்பை குறைக்க உதவுகின்றன. மனக்களைப்பு வன்முறையை துண்டும் ஒரு உளவியல் காரணியாக கருதப்படுகிறது. ஆகவே பச்சையான சூழல் பாதுகாப்பான உணர்வை தூண்டுகிறது.

இன்னோரு பயத்தை தூண்டும் காரணி தெருவிற்கும் வீட்டிற்கும் உள்ள இடைவெளியாகும். இந்த இடைவெளி குறையக்குறைய வாழும் சூழல் சார்ந்த பாதுகாப்பின்மை, பயம் கூடுகிறது. பொதுவாக town houses, apartments இல் வாழ்பவர்கள் தனி வீடுகளில் வாழ்பவர்களைவிட ஒரு பாதுகாப்பின்மையை உணரலாம். அத்தோடு எங்கள் அயலில் நடைபெறும் தீடீர் வேகமான மாற்றங்கள், உதாரணமாக புதிய கட்டுமான பணிகள், வீடு கட்டும் திட்டங்களும் அங்கு ஏற்கனவே வாழும் மனிதர்களுக்கு சற்றே ஒரு பாதுகாப்பின்மைக்கான பயத்தை உருவாக்கலாம்.

பொதுவாகவே, பாதசாரிகள் நடமாட்டம், மற்றும் சுற்றாடலில் அங்கு வாழ்பவர்களின் நடமாட்டம், சமூக மேற்பார்வையை அதிகரிக்கும் நிலப்பாவனை, இவை கூடும்போது, நம் வீட்டுச்சூழல் கூடிய பாதுகாப்புணர்வை தருகிறது. நெருக்கம் குறைந்த, வளைந்து வளைந்து செல்லும் (curvilinear) வீட்டுக் கட்டுமான திட்டங்களைவிட, பாதசாரிகள் நடமாட்டத்தை தூண்டும், அத்தோடு தேவையான அளவு கடைகள், பச்சையான நிலம், மற்றும் போக்குவரத்து வசதி உள்ள வீடமைக்கும் திட்டங்கள், அங்கு வாழ்பவர்களிடையே தொடர்பையும் நடமாட்டத்தையும் அதிகரித்து பாதுகாப்பு உணர்வையும் கூட்டுகிறது. ஒரு ஊரிலோ நகரத்திலோ மகிழ்வுடனும் நிம்மதியுடனும் வாழ எத்தனையோ காரணிகள் இருக்கும். அதுபோல் தான் இங்குள்ள எம் வாழ்க்கைச் சூழலும். அந்த எல்லாக் காரணிகளுடனும், மேற்குறிப்பிட்ட வீடு அமைப்புத்திட்டங்களும் எங்கள் உடல், உள ஆரோக்கியத்தில் ஒரு பங்கை வகிக்கிறது என்றே கூறலாம்.

pushpa.kanagaratnam@thaiveedu.com

■ ■ ■

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

# கனடாவில் கதிகால்வேலி

லலிதா புருடி



ஆயிரத்துத் தொழாயிரத்து நாற்பதுகளில், யாழ்நகர் நுழைவாயிலாம் ரயில்வேலைன் அரியாலையில், ஆனந்தன்வடலி வீதி ரயில் வேலைன் ஒழுங்கையிலிருந்த எனது அம்மம்மா ‘சின்னம்மா’வின் பனையோலை வேய்ந்த மண்வீட்டில், கூட்டுக் குடும்பத்துடன் நான் வளர்ந்த பசுமையான நினைவுகள் மனதில் விரிகின்றன.

கரிப்புகைவண்டியிலிருந்து பறந்த தீப்பொறி, நான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அயல் வீடு ஒன்றை முற்றாக எரித்தது மறக்க முடியாத அனுபவம். அந்தச் சிறிய ஒழுங்கையின் இரு பக்கமும் வீடுகளை மறைத்தது, கிடுகுவேலி. வெறும் காணிகளுக்கு மட்டும் கதிகால்வேலி.

ஆரவாரமற்ற அந்த நாட்களில், தோட்டப் பசளைக்காக பூவரசங்குழை வெட்டி வண்டில் நிறைய ஏற்றிச் செல்பவர்கள் வருவது பரபரப்பான அட்டகாசமாக இருக்கும். பாடசாலையிலிருந்து தங்கை சந்திராவும் நானும் வீடு வந்ததும் வரவேற்கும் நாய்க்குட்டியுடன், இரு ஆட்டுக்குட்டிகளும் துள்ளித் துள்ளி இடைவிடாது எம்மைப் பின்தொடரும். வேலியிலிருந்து கிளுவை குழைகளை நாம் ஒடித்துக் கொடுக்க, ஆட்டுக்குட்டிகள் சப்புக் கொட்டி அவற்றை உண்ணும். யுத்தகாலத்தில் தான் சீமைக்கிளுவை புதிதாக வந்தது என்பது நினைவு. எமது வேலியில் பின்னிப் படர்ந்திருக்கும் கொடிகளிலிருந்து நாம் ஆய்ந்து கொடுக்கும் முசுட்டை இலைகள், அம்மம்மாவின் கைவண்ணத்தில், அருமையான வத்தல் குழம்பு, கூழ், வறையாக உரு மாறிய சுவை இன்னும் என் நாவில். அத்துடன், வேலியிலிருந்து பிடுங்கிப் பிளந்த பிரண்டை தண்டில் உப்பு வைத்து, அதை குட்டிமாமாவின் வீங்கி நொந்த உள்நாக்கில் பூசியதும், உள்நாக்கு கரைந்து, அவர் குனிந்து வாயைத் திறக்க வீணியாக வெளிவந்தது இன்னும் என் கண் முன்னில். இந்த பிரண்டை தண்டின் குணப்படுத்தும் சக்தியை நாம் நிச்சயம் மேற்கத்தைய வைத்திய மாற்று வழி சிகிச்சை முறைக்கு அறிமுகப்படுத்த வேண்டும். அப்போதெல்லாம் பிரபலமாயிருந்த, கூண்டில் வளரும் கிளிக்கு கொவ்வைப் பழம், தீப்பெட்டியில் வளர்த்த பொன்வண்டுக்கு கொவ்வை இலை…

1943இல் கண்டிவீதி கச்சேரி ரயில்கடவையருகில் அப்பா கட்டிய மாடி வீட்டிற்கு மாறிய போது. அங்கும் தெரு ஓரம் மட்டுமே மதில் சுவர். வீட்டைச் சுற்றி கதிகால் வேலிதான். பின், கண்டிவீதி புங்கன்குளம் சந்தியில் நாம் கட்டிய வீட்டிற்கும் வீதி ஓர மதிலுடன் மற்ற மூன்று பக்கமும் பூவரசு கதிகாலுடன் கிடுகு அடைத்த வேலி இருந்தது.



பண்டிகை கொண்டாட்டங்களின் போது காசிப்பிள்ளை திறந்தவெளி அரங்கின்முன் பாய் விரித்து ஒலிபெருக்கி அலறலுடன் விடிய விடிய நாடகம் பார்ப்போம். அப்போது மேடை ஏறியது வேலிச்சண்டை, என்ற நகைச்சுவை நாடகம். திரை விலகியதும் அரங்கின் குறுக்கே, தத்ரூபமான கதிகால்களுடன் கிடுகு வேலி ஒன்று முளைத்திருந்தது! இரு அயல் குடும்பங்களின் முசுப்பாத்தி கதை - இளசுகளின் காதல், பெரிசுகளின் கதிகால் தள்ளி நட்டு நிலம் பிடிக்கும் யுக்தி என்று ஒரே களேபரத்தைப் பார்த்துச் சிரித்து சிரித்து வயிறு புண்ணாகியது நினைவு.

இவ்வாறு தாயகத்து கதிகால் வேலி மகாத்மியத்தைப் பற்றி உங்களிடமும் பல கதைகள் இருக்கலாம். ஆனால் நீங்கள் எவராவது கனடா ரொறொன்ரோ பெரும்பகுதி வீதி ஓரங்களில் கதிகால் வேலியைக் கண்டிருக்கிறீர்களா? 2010 கோடை, மிஸிஸாகாவில் அமைந்த எனது மகன் வீட்டின் பிற்புறத்து Rathburn வீதி ஓரமாக, கிளுவந்தடி போன்ற willow (வில்லோ) மரக் கதிகால்களை நகர சிப்பந்திகள் நாட்டினர். செழித்து வளர்ந்து, இலை உதிர்த்து நிர்வாணமாகி மீண்டும் 2011இல் துளிர்த்துச் சடைத்த இக்கதிகால்களை ‘கப்பாத்து’ செய்து - மட்டம் செய்தபின், அழகிய உயிர்வேலி உருவாகி இப்போ கண்ணுக்கு விருந்தளிக்கின்றது. இந்தக் கதிகால்வேலி பற்றி கனடிய நண்பர்களுக்கு ஒன்றும் தெரிந்திருக்கவில்லை The Mississauga News துணை ஆசிரியர் John Stewart கீழ் வரும் விவரங்களைக் தந்து உதவினார்.

T.D. Friends of the Environment Foundation and Tree Canada, கிடைத்த விண்ணப்பங்களிலிருந்து 20 நகராட்சிகளைத் தேர்ந்தெடுத்து அரசு மானியம் வழங்கியது. ஒன்ராரியோவின் மிஸிஸாகா நகராட்சியே முதன்முதலாக இந்த உயிர்வேலி 100 மீட்டர் நீளத்திற்கு ரத்போர்ன் வீதி ஓரத்தில் உருவாக்கியுள்ளது. செயற்கை மதில்களைப் போலன்றி இந்த உயிர்வேலி, வாகன இரைச்சலைக் கிரகித்து குறைப்பதுடன் இயற்கை ஒலித்தடையாகி, கரியமல வாயுவை உபயோகிப்பதால் பூமி வெப்பமாவதைத் தடுத்து சூழல் பாதுகாப்புக்குச் சிநேகமாகச் செயல்படுகின்றது. சுவரொட்டிகளையும் கிறுக்குதலையும் தடுக்கின்றது. ஐம்பது வருடத்திற்கு சுலபமாக வளரும் இம்மரங்களை இடைக்கிடை மட்டப்படுத்தி வெட்டுவதைத் தவிர பெரிதாக வேறொன்றும் செய்யத்தேவையில்லை.

பார்த்தீர்களா வாசகர்களே! உலகின் முன்னணி நாடாகிய கனடாவிற்கு இப்போதுதான் கதிகால்வேலியின் முக்கியத்வம் பிடிபட்டிருக்கிறது. இனிமேல் கொஞ்சங்கொஞ்சமாக கனடா வீதி ஓரங்களில் இத்தகைய கதிகால் வேலிகள் உருவாகலாம். இப்போ தாயகத்திற்குப் படையெடுக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள், தங்கள் வீடுகளைத் திருத்துவதுடன் பாதுகாப்பிற்கு மதில்களையும் கட்டி விட்டு வருகிறார்கள் அல்லவா? இந்த நிலை மாறி, மீண்டும் உயிர்க்கதிகால் வேலிகள் எமது தாயகத்திலும், ஏன் உலக நாடுகளெங்கும் மீண்டும் உருவாகுவதால் கூடிக் கொண்டே போகும். உலக வெப்ப நிலை குறைய, கட்டாயம் செய்யவேண்டிய நடவடிக்கையாக இது மாறுமோ தெரியாது. காத்திருந்து பார்ப்போம்.

lalitha.brodie@thaiveedu.com

■ ■ ■





# ATTIC INSULATION



**WELL INSULATED ATTIC WILL**

- REDUCE HEAT LOSS
- SAVE ON HEATING & COOLING COSTS
- PREVENT MOLD & ROT




## வீட்டின் நன்கு உள்ளீடு செய்யப்பட்ட பரண் (Attic)

- பரண் (Attic) ஊடான வெப்ப இழப்பைக் குறைக்கும்
- வெப்பமாக்கும் அல்லது குளிராக்கும் செலவீனத்தைக் குறைக்கும்
- கூரை உக்குதலிலிருந்தும் பூஞ்சணம் பிடிப்பதிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும்






சுப. இரவீந்திரன்

SuPa. Raventhiran

Cell: (416) 939-9353

**ENERecon Insulation**

Find us on Facebook

T: (416) 847-7171 F: (416) 847-7181 E: info@enerecon.com

**Stay Warm in Winter - Be Cool in Summer**

# மன்னிச்சுக் கொள்ளுங்கோ தம்பி...

## குமார் புனிதவேல் பக்கம்

டொரன்டோவில் முதல் தமிழ்த் தலைமுறையினர் முதுமைப்பருவதை அடைந்து வருவதை யாவரும் அறிவீர்கள். இவர்களில் பலர் முதியோர் இல்லத்தில் வசிப்பதும் தெரிந்த விடயமே. இவர்களில் ஒருவர் தான் திரு, சுந்தரம். இவர் இலங்கையில் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இங்கு சில காலம் பிள்ளைகளுடன் வசித்து விட்டு, இப்போ ஸ்காபரோவில் உள்ள ஒரு முதியோர் இல்லத்திற்கு மாறிவிட்டார்.

மனிதனை சிந்திக்கும் விலங்கு என்று கூறுவார்கள். இந்தமனிதருக்கு இரு சிறப்பு உண்டு. முதலாவது எல்லாருக்கும் தெரிந்த விடயமே. அதாவது மனம் என்று ஒன்று உள்ளமை. மனம் உள்ளதால்தான் மனிதன் என்ற பெயரே அவனுக்கு வந்தது. இன்னும் ஒரு சிறப்பு என்னவென்றால் மனிதன் உதயத்தில் நடைபயிலும் வேளையில் ஒரு தள்ளு வண்டியை பிடித்துக்கொண்டு நடைபயில ஆரம்பிப்பான். வாழ்வின் அஸ்தமனம் நெருங்கும் வேளையிலும் ஒரு நடைவண்டியை (Walker) பிடித்துக் கொண்டு நடந்து நடையிலிருந்து ஓய்வு பெறுவான். சுந்தரம் இரண்டாவது முறையாக நடைவண்டியை பிடித்து நடக்கும் பருவத்தில் இருந்தார்.

இன்றைய காலகட்டத்தில் சுற்றாடல் பாதிப்பு பற்றிபேசுவது நாகரீகமாக கருதப்படுவது யாவரும் அறிந்ததே. அதுபற்றி எவ்வளவுக்கு அதிகம் சத்தம் போடுகிறார்களோ அந்தளவுக்கு அவர்கள் முக்கியமானவர்களாகிறார்கள். உதாரணத்திற்கு முன்னைய அமெரிக்க உப ஜனாதிபதி திரு அல்கோர் அவர்களையும் மற்றும் கனடாவின் திரு. சுசுக்கி அவர்களையும் குறிப்பிடலாம். அவர்கள் தனியார் ஜெட் விமாணத்தில் பல்லாயிரம் கலன் பெற்றோல் செலவுசெய்து சுற்றாடலை மாசு படுத்தி கூட்டத்திற்கு வருவது மற்றும் பல்லாயிரம் மிருகங்களை அழித்து விருந்து வைப்பதையும் யாரும் பேசக்கூடாத ஒரு தெய்வீக விடயம்.

இப்படியாக சுற்றாடல் மாசுபடுத்துதல் பற்றி சுந்தரம் வசித்து வந்த முதியோர் இல்லத்தில் பேசுவதற்கு ஒரு இளைஞர் வரவழைக்கப் பட்டிருந்தார். 'சுற்றாடல் விழிப்பு' பற்றி அரை மணித்தியாலம் பேசியபின் இறுதியாக அங்கு பேச்சினை கேட்பதற்கு வந்திருந்த முதியவர்களை பார்த்து "முதியவர்களாகிய உங்கள் தலைமுறையினர் கவலையீனமாக, சுற்றாடல் பற்றிய விழிப்புனர்வு இல்லாமல் இருந்தபடியால் தான் இன்று நாங்கள் இந்த இக்கட்டான நிலையில் இருக்கிறோம். இன்றைய இளைஞர்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள். இனியாவது நீங்கள் உங்கள் பங்களிப்பை செய்வீர்கள் என்று நம்புகிறோம்" என்று கூறி நிறுத்தினர்.

சபையில் இருந்த அனைவருக்குமே 'வேலியில் போன ஓனானை சட்டையில் விட்டு குடைகிறது' என்பதுபோல் தேவை இல்லாமல் இந்த ஆளை ஏன் அழைத்தோம் என்று இருந்தது. அனால் ஒன்றும் சொல்லாமல் எப்போ தப்பி வெளியேறலாம் என்று பார்த்த வண்ணாம் இருந்தார்கள். ஆனால் சுந்தரத்திற்கு பொறுக்கவில்லை. தனது கையை உயர்திக்காட்டி தனது எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்கு விழைந்தார். அப்போ அந்த சொற்பொழிவிற்கு தலைமை தாங்கியவர் "சொல்ல விரும்புவதை மேடைக்கு வந்து சொன்னால் நல்லாது" என்று சொன்னார். சுந்தரமும் தனது நடைவண்டியை (Walker) தள்ளிக்கொண்டு முன்னால் வந்தார். மேடைப் படிகளில் ஏறுவது கடினமாகையினால் அவரை சபைக்கு முன்னால் கீழே நின்றே பேசலாம் என்று சொன்னார் தலைவர்.

சுந்தரம் தனது பேச்சை துவங்கினார்.

"வணக்கம் தம்பி, நீர் சொன்னபடி பார்த்தால் எங்களுடைய தலைமுறைதான் உங்கள் கஷ்டங்கள் எல்லவற்றிக்கும் காரணம் என்றால், எங்கள் தலைமுறையின் சார்பில் நான்



மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் எங்கள் இளம் காலத்தில் நீங்கள் இருக்கவில்லை என்பதால் அப்போ நாங்கள் இருந்த விதம், வாழ்ந்தவிதம் பற்றி சில விடயங்களை குற்றம் சுமத்தப்பட்ட எங்கள் வாயால் நீங்கள் கேக்கவேண்டும் தானே.

நீங்கள் மீண்டும் மீண்டும் நாங்கள் எறிந்த பொலிதீன் பைகள் இன்னும் பழுதடையாமல் அப்படியே குப்பையாய் இருக்கிறது என்கிறீர்கள். அந்தக் காலத்தில் பிளாஸ்டிக் பைகள் கிடையாது தம்பி. சீனி, பருப்பு சீரகம் எல்லாம் சாக்கில் இருக்கும் கடைக்காரர் பழைய பேப்பரை சுருள் செய்து (கையில் இருந்த பேப்பரால் செய்து காட்டி) அதில் போட்டு சனல் கயிற்றினால் கட்டித்தருவார். அவற்றை நாங்கள் சாக்குப்பையில் எடுத்துச் செல்வோம்.

தம்பிக்கு இன்னும் ஒரு விடயம் சொல்ல வேண்டும். நீர் கேள்விப்பட்டிருக்கமாட்டீர் அடுக்குப் பொட்டி பற்றி. அதை அடுக்குக் கடகம் என்றும் கூறுவார்கள். ஒன்றுக்குள் ஒன்றாக பனை ஓலையால் செய்து ஐந்து கடகங்கள் இருக்கும் பெரியதற்குள் அரிசி போன்றவற்றையும் அடுத்ததில் பருப்பு என்றும் ஒவ்வொன்றுக்குள்ளும் ஒவ்வொரு வகை பொருளைப் போட்டு அடுக்கிக் கொண்டு தூக்கிச் செல்வோம். அக்காலத்தில் 'பிலாஸ்டிக்' கிடையாது. ஆனாலும் எங்களால் தான் உங்களுக்கு கஷ்டம் என்றால் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

தம்பி, நீர் அந்த நாட்களில் இல்லாதபடியால் இன்னுமொரு விடயம் சொல்லவேண்டும். எங்கட இளமைப்பருவத்தில் recycle கிடையாது. ஆனால் பழைய பேப்பர்கள் போத்தல்கள் போன்றவற்றை சேகரித்து 'விற்று' வாழ்க்கை நடத்தியவர்களும் இருக்கிறார்கள். இப்படி ஆரம்பித்தவர் தான் ஞானம் என்று அழைக்கப்படும் "Anthony Hand Ware"இன் உரிமையாளரான கோடீஸ்வரர். அதோடு அக்காலத்தில் பால் போத்தல், பியர்போத்தல், சோடாப்போத்தல் என்று எல்லாமே கழுவி மீளவும் பாவித்தார்கள். இன்று போல் பியர்கான் கோக்கான், பால்பக்கட் எல்லாம் கிடையாது. கண்ணாடிப் போத்தல்கள் மீண்டும் மீண்டும் பாவிக்கப்பட்டது. பழைய சிமேந்து "பாக்" பொருட்கள் போடும் பைகளாக மாறி உயித்தெழுந்தது உமக்கு தெரியாதிருக்கலாம் என்று தான் சொன்னேன். ஆனால் தம்பி நீர் இதுவிடயம் பற்றி நல்லாக படித்துச் சொல்வதனால் எங்களால் தான் கஷ்டம் என்றால் எங்கள் தலைமுறைக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொரு சுவையான விடயம் என்னவென்றால் நாலு ஐந்து மாடிக் கட்டிடங்கள் என்றாலும் படிகளில் ஏறித்தான் சென்றோம். இப்போ உள்ளதுபோல் இரண்டு மாடிக் கட்டிடத்திற்கு liftஉம் கிடையாது, Escalator உம் கிடையாது. அருகில் உள்ள கடைக்குப் போவதற்கு கார் கிடையாது, நடந்து தான் சென்றோம். சற்று தொலைவில் உள்ள இடத்திற்கு சைக்கிளில் சென்றோம். இதனால் எரிபொருள் வாயு சுற்றடலை அசுத்தப்படுத்துவதுமில்லை உடலுக்கும் ஆரோக்கியமாயிருந்தது.

இன்னுமொரு விடயம் நான் இங்கு சொல்ல வேண்டும் மறந்து போவதற்கு முன் என்று சுந்தரம் தொடர்ந்தார்.

"அந்தக் காலத்தில் Disposable Diapers கிடையாது. குழந்தைகளுக்கு துணியினால் தான் பாவித்து, அவற்றை மீண்டும் மீண்டும் பாவித்தோம். உடுப்பு கொஞ்சம் காவி படிந்தால் நீலம் போட்டு துவைப்போம். அதுமட்டுமல்ல அவற்றை கையால் தான் துவைப்போம். இன்று உள்ளது போல் Washing Mechine, Drying Mechine எல்லாம் கிடையாது. எனவே மின்சக்தி தேவை குறைவாய் இருந்ததனால் நீங்கள் கூறியதுபோல் சூரிய சக்தி, காற்றுச்சக்தி என்று எல்லாம் சிந்திக்கவில்லை உடுப்பைக் காயவைப்பதற்கு சூரிய வெளிச் சத்தில் காயவைக்காமல் சூரிய ஒளியை மின் சக்தியாக மாற்றுவது அர்த்தமற்றது தானே? சுற்றாடலைப் பற்றிய சிந்தனையில்லாமல் எப்படியோ வாழ்ந்து விட்டோம் தேவை இல்லா மையினால்!

இன்று போல் பெரிய வீட்டை கட்டி சிறிய குடும்பங்கள் வாழாமல் பெரிய குடும்பங்கள் சிறிய வீட்டில் மகிழ்ச்சியாக வாழ்ந்த காலம் அது. இதனால் வீட்டை குளிர்காலத்தில் சூடு காட்டுவதற்கு தேவையான சக்தியும் சொற்பமே. இது மட்டுமல்ல, அண்ணனுடைய பழைய ஆடையை தம்பியும், தமக்கையின் பழைய பாவாடையை தங்கச்சியும் பெருமையாக அணிந்து மீள்பாவனை (Recycle) செய்தகாலம் அது. ஆனால் சுற்றாடலைப் பற்றி கவலைப்படாமல் வாழ்ந்தது தவறுதான். அதற்கு எங்கள் தலைமுறை சார்பில் மன்னிப்பு கேட்கத்தான் வேண்டும்.

அந்தக்காலத்தில் வீட்டில் பல அறைகள் இல்லாதிருப்பதுடன், அறைக்கு ஒரு தொலைக் காட்சிப்பெட்டி இருக்காது. வீட்டிற்கு ஒரு Phillip அல்லது Gurundic வானொலி இருக்கும் அதனை கொண்டு அனைவரும் செய்திகளை அறிந்து பொழுதைக் கழித்தோம். இப்போ உள்ளது போல் தோசைக்கு உழுந்து அரைப்பதற்கு ஒரு இயந்திரம் இடியப்பம் பிழிவதற்கு ஒரு இயந்திரம் என்றெல்லம் இருக்கவில்லை. இதனால் சுற்றடலைப் பற்றி கவலை இல்லாமல் வாழ்ந்து விட்டோம். இவ்வளவு இயந்திரங்களையும் பாவித்து போதிய தேகப்பியாசமில்லை என்று நடப்பதற்கு ஒரு இயந்திரம், எடை இழப்பதற்கு ஒரு இயந்திரம் என்று வீட்டில் தேகப்பியாச கருவிகளை வாங்கி குவிக்கவில்லை.

தண்ணீர் வேண்டுமானால் கிணற்று நீரை துலாவினால் அள்ளி எடுத்து கண்ணாடி கிளாசில் உற்றி குடித்தோம் அல்லது பித்தளை, வெள்ளி டம்லரில் ஊற்றிக் குடித்தோம். வாய் பாத்திரத்தில் பட்டுவிடாது குடிப்பதற்கு மூக்குப்பேணி வைத்திதோம். இன்றுபோல் பேப்பர் கப், பிளாஸ்டிக்கப் என்று எல்லாம் கிடையாது. என்றாலும் தம்பி நீர் சொன்ன மாதிரி சுற்றாடலை பற்றி விழிப்பில் லாதிருந்தது தவறுதானே. அதற்கு மன்னிப்பு கேட்பதற்கு வந்தேன்.

நான் விடைபெறும் முன்பு இன்னும் ஒரு சிறு விடயத்தை கூறவேண்டும். எங்களுடைய காலத்தில் அமோனியா, யூறியா உரம் என்று எல்லாம் கிடையாது. மாட்டுச் சாணியையும் ஆட்டு புளுக்கையையும் சேர்த்து வயலுக்குப் போட்டோம். அது மட்டுமல்ல, மரத்தின் இலை சேகரித்து வயலில் இட்டு பசளை செய்தோம். இதனால் வயல் உவர் தன்மை அதிகமாகி உவர் நிலம் என்று வீணாவன தவிர்க்கக் கூடியதாயிருந்தது.

ஏதோ தம்பி நான் மனதில் பட்டதை பட் என்று சொல்லிவிட்டேன். அந்தக் காலத்தில் நடத்ததைத்தான் சொன்னேன். தவறு என்றால் மன்னித்துக் கொள்ளுங்கோ என்று கூறிவிட்டு தள்ளுவண்டியை (walker) தள்ளிக்கொண்டு தன் இருக்கைக்கு திரும்பினால்

பேசவந்த இளைஞர் முகத்தைப்பற்றி நான் ஏதும் சொல்லவில்லை நீங்களே கற்பனை செய்யுங்கள். நீங்கள் கம்பரின் வாரிசல்லவா?

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■



# FOR ALL YOUR REAL ESTATE NEEDS

RK
The Driving Force Behind Your Real Estate Decision

EXPRERIECE THAT WILL MOVE YOU

## RAJEEF KONESWARAN

BROKER



416.568.1078

RE/MAX

**Re/Max Vision Realty Brokerage**

2210 Markhan Road, Toronto, Ontario M1B 5V6,
Tel:416 321-2228

digi Media

## First step to receiving government rebates of up to $ 5,000 is an

# ENERGY AUDIT

## Prabha Sinna 416.655.9464

ENERGY AUDIT செய்தபின் உங்கள் வீட்டை Energy Efficient ஆக்குவதனால் அரசாங்கத்தின் Rebate பெறுவதோடு மட்டுமல்லாமல் உங்கள் மாதாந்தக்கட்டணத்தையும் குறைத்துக்கொள்ளலாம்.

Energy Audit செய்வதன் மூலம் மட்டுமே இச்சலுகையைப் பெறமுடியும்.

| Eligible Improvements/Retrofits | Federal |
|---|---|
| Doors/Windows/Skylights(rough opening) | each $ 40 |
| Heating System | $790 |
| Cooling System | $250 |
| Ventilation System | $375 |
| Tankless Water Heater | $375 |
| Attic Insulation | upto $750 |
| Exterior Wall Insulation | upto $ 1,875 |
| Basement Insulation | upto $ 1,250 |
| Toilet Replacement | each $ 65 |

**Do the pre-audit > Do the retrofit > Do the post-audit > Get the cheque in the mail**

Receive $150 rebate from the Ontario government after the completion of the pre-audit

**Tel: 416.655.9464** **www.energyan.com** **Prabha@energyan.com**



Atticare CARE AS IF IT'S OUR OWN
atticare.com

## Attic Insulation க்கான Energy Audit Rebate

சக்திவலு கட்டணங்களில் 40% வரை மிச்சப்படுத்துங்கள்

ஒரு வீட்டில் அதிகளவான வெப்ப இழப்பு அட்டிக் ஊடாகவே இடம்பெறுகின்றது. வெப்பக் காற்று எப்போதும் குளிரான இடத்திற்கு வர முயற்சிக்கும். அதனால் அட்டிக்கில் அடைபட்டுள்ள உள்ள வெப்பக் காற்று வீட்டினுள்ளே வர முயற்சிக்கும். இதனால் உங்கள் வீடு வெப்பமடைவதுடன் குளிரூட்டியையும்(A/C) அதிக நேரம் இயங்க வைக்கின்றது. இந்த நீடித்த பாவனையினால் உங்களின் மின்கட்டணம் அதிகரிக்கின்றது.




We can arrange energy audit to get you the rebate from the Government

atticare.com

## Attic Insulation

416.556.6115
உடனே அழையுங்கள் 1.800.556.6006

உங்கள் சக்திவலு செலவை கட்டுபடுத்துவதற்கு உடனே தொடர்பு கொள்ளுங்கள்

உங்கள் வீடு சக்தி சிக்கனம் மிக்கதாக இருப்பதற்கு அட்டிக் இன்சுலேஷனே சிறந்தது


சிறந்த அட்டிக் - சொகுசான வாழ்க்கை

Hot in winter. Cool in summer


RE/MAX
CALL YATHAVANN TO SELL YOUR HOME FAST AND MAX $$$
YS
BUY/SELL & ENJOY A SIGHT OF TORONTO FROM AIR.
Finch & Birchmount
1+1 Bedrooms, 1 Washrooms
$ 178,800
Warden & Finch
3 Bedrooms, 2 Washrooms
$ 185,000
1 Km South Of Lawrence
2+1 Bedrooms, 1 Washrooms
$ 209,800
Eglinton & Sloane
1+1 Bedrooms, 1 Washrooms
$ 239,900
Mccowen & Steeles
2+1 Bedrooms, 2 Washrooms
$ 249,500
Kennedy & Ellesmere
3 Bedrooms, 3 Washrooms
$ 278,900
Bellamy & Eglinton
3+1 Bedrooms, 2 Washrooms
$ 389,000
Yonge & Finch
2 Bedrooms, 2 Washrooms
$ 399,900
Audley & Taunton
4 Bedrooms, 3 Washrooms
$ 414,900
Mccowan & Bur Oak
3+1 Bedrooms, 3 Washrooms
$ 469,900
Keele & Lawrence
3 Bedrooms, 1 Washrooms
$ 599,900
9th Line & 16th Ave
3 Bedrooms, 3 Washrooms
$ 409,000
Attention Buyers
* No down payment 100% financing
* Financing available for first buyers, self employed & new immigrants
* Up to 5% cash back & lowest interest rates guaranteed.
* I can help you with bad credit or any credit issues
* Renters: Why pay rent when you can Own!
RE/MAX®
Crossroads Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Not intended to solicit buyers/ sellers under representation agreement
* some conditions apply
Yathavann Selvarajah
Sales Representative
Dir : 416-992-4474
Office : 416-491-4002
www.buzzmetoronto.com


AROUND THE WORLD WITH SERANDIB
Flight To Sri Lanka
Gulf Airways 825 + Taxes
Etihad Airways 980 + Taxes
Qatar Air Ways 825 + Taxes
Emirates 1230 + Taxes
Kuwait Airways 975 + Taxes
Sri Lankan Airlines 1060 + Taxes
Jet Airways 830 + Taxes
Flights To India
Gulf Airways 825 + Taxes
Etihad AirWays 715 + Taxes
Qatar AirWays 825 + Taxes
Emirates 1180 + Taxes
Kuwait Airways 975 + Taxes
Sri Lankan Airlines 1210 + Taxes
Jet Airlines 630 + Taxes
Serandib Travel
Your satisfaction is our success
2075 LAWRANCE AVE E, SUITE 202 TORONTO, ON M1R 2Z4
Tel: 416-750-0009 / Fax: 416-750-9880 Canada Toll Free: 1-800-207-0902
7 EAST VALE DRIVE #207, (MARKHAM & STEELS) MARKHAM, ONT 905-201-6660
Montreal : 514-448-1389, Calgary: 403-770-9647, Ottawa: 613-482-6590
Vancouver: 604-625-0495, Mississauga: 905-564-7564
Email: serandibtravel1@bellnet.ca Web: www.serandibtravel.com
Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to avalibility of the seats. Taxes from $65 to 470.
SriLankan
Emirates
ETIHAD
FLY KINGFISHER
QATAR
JET AIRWAYS
IATA
tico.ca

# காட்டுயானையின் தாய் பிள்ளைப் பாசம்



**பூர்வீகன்**

ஆண்டுகள் மாறி, சகாப்தங்கள் பலவானாலும் இன்றும் மனதில் படிந்து நிலைத்துப் பசுமையோடு உள்ள காட்சி இது.

இலங்கைத் தீவின் தென்கிழக்குப் பகுதி இது. இன்று, பல ஊர்களின் பெயரால் அழைக்கப்பட்டாலும், அன்று அது கல்லோயாப் பள்ளத்தாக்கு என்று தான் பெயர். காடுகளை அழித்துக் களனிநிலமாக்கும் பணியானது தான் 'ஆற்றுத்திசை திருப்பும் திட்டம்'. அலை புரண்டோடிக் கடலில் சங்கமிக்கும் கல்லோயா ஆற்று நீரைத் திசை திருப்பிப் பயிர்வளம் செய்யும் காரியங்கள் தொடங்கிய காலம். வெளிநாட்டு உதவிகொண்டு காடுகளை அழித்துத் தண்ணீர்ப் பெருவாய்க்கால்கள் அமைக்கும் பணியில் பாரிய இயந்திரங்களின் உதவியுடன் தொழில் வல்லுனர்கள் ஈடுபட்டிருந்தகாலம்.

நாங்கள் வேலை செய்யத் தொடங்கியது ஒரு பெருங்காட்டுப்பிரதேசம். சூரிய ஒளியைத் தடுத்துத் திரையிட்ட வானுயர்ந்த செழிப்பான காடுகள். அங்கே யாளைகளின் பிளிறல் கேட்கும். தூரத்தே நெஞ்சை உறையவைக்கும் சிறுத்தைகளின் உறுமல்கேட்கும். இதனிடையே எதிரொலிக்கும் பட்சி ஜாலங்களின் இனியகானம் ஒருபுறம். ''மரம் பழுந்தால் வெளவாலை வா என்று கூவிப்படை எடுத்துச்செல்லும் வெளவால்களின் பவனி மாலை வேளைகளில் அரங்கேறும் இந்த நிலையில், பாரிய இயந்திரங்களின் இரைச்சலில் அந்தச் சூழல் சிக்கியிருந்தது. அங்கு வாழ்ந்த மிருக சீவராசிகள் எல்லாம் அல்லாடி ஓடும் நிலை. மழைக்காகவும், தண்ணீர் தேக்கத்திற்காகவும் அழிக்கப்படாது பாதுகாக்கப்பட்ட சுமார் மூன்று அல்லது நான்கு ஏக்கர் காட்டுவளம் ஒரு முக்கோணவடிவில் நிலைத்திருந்தது. இங்கே மற்ற மிருகங்களுடன் சேர்ந்து ஓடமுடியாத சிறுமான் கூட்டம் தங்கிவிட்டது. ஆழமாக வெட்டப்பட்ட கால்வாய் அப்பிரதேசத்தை இருகூறாக்கியது. இதில் ஒரு புறத்தில் தான் வேலையாட்களாகிய நாங்கள், வெளிக்கள வேலைபார்க்கும் ஊழியர்கள் தங்கும் ஒரு வசதியான இடம் 'வாடி' அமைத்துத்தங்கியிருந்தோம். இந்தப் பகுதியில் தான் அல்லோலகல்லோப்பட்ட நிலையில் ஒரு குழந்தைப்பருவமான யானைக்குட்டி, தாயைப் பிரிந்து சிக்கிவிட்டது. சிறிய பருவமானபடியால் மற்றைய பெரிய மிருகாங்களுடன் ஓடித்தப்பும், திறமை இல்லாது தவித்தது. எதிர்க்கரையில் தாய் யானையின் பாச அலறல். மறுபுறத்தில் ஆழமான கால்வாயைக் கடக்க முடியாது தனிமைப்படுத்தப்பட்ட சிறு குழந்தையின் சோகமான வெதும்பல். பார்ப்பதற்கு நெஞ்சை நெருடும் காட்சி, கால்வாய் அமைக்கும் வேலையில் உள்ளவர்கள் பகல் முழுவதும், காட்டு விலங்குகள் கிட்ட நெருங்காது வெடிகள் கொழுத்தியும் பெருநெருப்பு உண்டாக்கியும் தங்களைப் பாதுகாக்கும் நிலை.

இந்த நிலையில் தான் ஆண்டவன், முன்பு தாயை இழந்தபன்றிக்குட்டிகளுக்குத் தானே தாயாகி வந்தது போல், அந்தத் தாயைப் பிரிந்து நின்ற யானைக்குட்டிக்கு மனித உருவில் தாயாக வந்து நின்றார். இந்த வேலைத்திட்டத்தின் பொறுப்பதிகாரி மூலம் தான் இறைவனின் கருணை வெளிப்பட்டது. தனது உதவியாட்களின் துணையுடன் இந்தக் குட்டியை அரவணைத்து இதற்கு வேண்டிய பால் பழங்களைத் தூரத்தே இருந்த புராதன தமிழ் கிராமத்தில் இருந்து பெற்றுப் போஷித்து வந்தார். குட்டிக்கான ஒரு பலமான கூடும் அமைத்து பாதுகாக்கப்பட்டது எனினும், தாய்ப்பாசம், பிள்ளைப்பாசம் எல்லாச்சீவராசிகளுக்கும் பொதுவான ஓர் உணர்வு தானே! எல்லா இயந்திரங்களின் ஓசைகளும் அடங்கிய இரவு வேளையில் இந்தக் குட்டி யானையின் தாயும் அதன் பரிவாரங்களுடன் வந்து வாய்க்காலின் மறுகரையில் நின்று துதிக்கைகளைத் தூக்கிக் கதறும் ஓசை எங்கள் மனங்களை உருக்கும். அந்த யானைகளின் அலறல் தோற்றம் முன்பு முதலைவாய்ப்பட்டயானை ஆண்டவனை நோக்கி ''ஆதி மூலமே'' என்று அழைத்த காட்சியைப் பாடங்களில் படித்த நினைப்பு வரும். இக்கரையில்



குட்டியானையும் தன் பங்கிற்குத் தாயின் அழைப்பிற்கு தன் பாஷையில் பதில் சொல்லி அழும். எங்கள் மனதில் இக்காட்சி தினமும் பதிவாகி மனதை உருக்கும். அவ்விடம் வேலை செய்தோரில் பலர், ''அம்மா என்குது வெள்ளைப்பசு அதன் அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி'' என்ற பாடலோடு யதார்த்தமாகப் பின்னிப்பிணைந்த விவசாயக் குடும்பங்களில் இருந்து வந்தவர்கள் என்ற படியால் இந்த மனதை நெகிழவைக்கும் தினசரிக் காட்சிக்கு அடிமையாய் இருந்தோம்.

இப்படியாக் கால்வாய் வேலையும் நாட்கள் நகர நகர நகர்ந்து நீண்ட தூரம் சென்றுவிட்டது. இனிமேல் நாங்கள் தங்கி வாடியமைந்திருந்த இக்கரைக்கும், மறுகரைக்குமான தொடர்பாலம் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாயின இப்பாலம் மகிப்பலம் வாய்ந்ததாயும், மறுகரையின் நிலங்களைச்சீர் செய்யும் வகையில் வாகனப் போக்குவரத்துத் தொடர்பாகவும் அமையப் பெறுவதாயிற்று சுமார் ஒரு மாத காலத்திற்குள் கால்வாயின் ஆழமான அடிப்பாகத்தில் பாரிய இரும்புத்தூண்கள் 'கொங்கிறீட்' வேலையுடன் நிறுவப்பட்டுபாலம் அமைக்கப்பட்டது. பாலத்தின் தாங்கும் சக்தியை அறியும் பொருட்டு தொழில் நுட்ப அதிகாரிகள் சகிதம், பாரிய 'கற்றப்பில்லர்' போன்ற இயந்திரங்கள், வெள்ளோட்டமாக இக்கரைக்கும் அக்கரைக்குமாக ஓட்டிச்சென்ற திருப்தியாகிவிட்டது.

இந்த நிலையில் வளமை போல் குட்டி யானைக்கு ஆறுதல் கூறும் வைபவம் அரங்கேறுவதைத் தினமும் மாலையில் நிலா ஒளியில் பார்க்கக் கூடியதாய் இருந்தது. பாலம் பூர்த்தியான அன்றும் மாலையில் தாய் யானையுடன் பரிவாரங்களும் வந்து ஆறுதல் கூறிநின்றன. அந்த வேளையில் ஒரு கொம்பன்யானை (ஆண்யானை) தன் முன்னங்காலால் பாலத்தின் ஸ்திரத்தன்மையைச் சோதிப்பது போல், மிதித்து மிதித்து நடந்து பார்த்தது. பின் எல்லாம் கலைந்து போயின இப்படி அடுத்து இரண்டு நாட்களும் வந்து ஆறுதல் கூறியும் பாலத்தை மிதித்துப் பார்த்தும் போயின.

மூன்றாம் நாள் அது பூரணைத்தினம் மாலையில், எங்கள் அதிகாரி, எல்லாரையும் அழைத்து ஒரு செய்தி சொன்னார் ''தம்பிமாரே இன்று கண்டிப்பாக யானைகள் இக்கரைக்கு வந்து குட்டியைக் கூட்டிப்போகும் நிலைமை தெரிகிறது. சென்ற இரு தினங்களில் பாலம் கெட்டியாக இருக்கிறதா என்பதைச் சோதித்துச் சென்றதையும் பார்த்தீர்கள் தானே! ஆகவே இன்று மாலையில் குட்டியின் கூட்டை பூட்டாது திறந்து வைத்து விடுகள். நாங்கள் எல்லாரும் அந்த மேட்டுப்பகுதியில் அமைக்கப்பட்ட குடியேற்ற வீட்டில் சென்று தங்குவோம். இன்று பூரணை நிலா என்பதால் அங்கிருந்து யாவற்றையும் பார்க்கலாம் தானே! இன்றும் காட்டு யாளைகளைப் பற்றி மகிவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று அறிவுறுத்தினார். வெளிக்கா வேலையில் பல வருட அனுபவமும் பொறுப்பும் தான் அவருடைய அன்பான அறிவுறுத்தல்.

மாலையில் நாங்கள் எல்லாரும் மேற்குறிப்பிட்ட வீட்டின் முன் நின்று குட்டியானையை அழைத்துப் போகும் வைபவத்தைக் காணத் தயாரானோம், பூரணை நிலாவின் ஒளி அந்தக் காட்டுப்பிரதேசத்தைப் பகலாக்கி வேடிக்கை பார்த்தது. இரவு சுமார் ஒன்பது மணியளவில் தாய் யானையுடன் அதன் துணைப்பரிவாரங்களும் அணிவகுத்து வந்தன. முன்னால் வந்த கொம்பன் யானையின் பிளிறல் ஓசையுடன் மற்ற யானைகளும் ஒவ்வொரு அடியாகப்பாலத்தில் நடந்து வந்து இக்கரைக்கு வந்தன. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல. குட்டி யானையும் தாயும் மற்ற யானைகளும் செய்த சந்தோஷ ஆரவாரம் அந்தப்பகுதில் எல்லாம் எதிரொலித்தது எனலாம். குட்டியை அரவணைத்தபடி மற்ற யானைகளும் வரிசை கிரமத்தில் பெரும் பிளிறலுடன் பாலத்தைக் கடந்து அக்கரைக்குச் சென்று மறைந்தன. அவை போய் மறையும்வரை நாங்கள் மூச்சுக் கூடவிடாதிருந்தோம். கண்கள் இமைக்கமறந்தோம். பேச்சுக்கூட இல்லை. சிலைகளாய் தான் இருந்தோம். இந்தக் காட்சி முடிவுற்று, நாங்கள் சுயநிலைக்குத் திரும்பிய சில வினாடிகளுக்குள் அடுத்த வியப்பூட்டும் காட்சி தென்பட்டது அழிக்கப்படாது ஒதுக்கிய சிறுகாட்டுப் பகுதியில் தஞ்சமடைந்த சிறுமான் கூட்டம் ஒன்றன் பின் ஒன்றாய் 'வாயுவேகம் மனோவேகம்' என்று சொல்லும் வகையில் அந்தப் பாலத்தின் வழியே ஓடிச் சென்றன. எங்களுக்கு வியப்பின் மேல் வியப்புத்தான். ஒரு கடுகதிப் புகையிரதம், பெட்டிகளுடன் கண் இமைக்கும் நேரத்தில் ஓடி மறையும் காட்சி தான் நினைவுக்கு வந்தது. அந்த நேரத்தில் ''ஆயிரம் கண்போதாது வண்ணக்கிளியே இந்த இயற்கையின் விந்தைகளைக்காண்பதற்கு வண்ணக்கிளியே'' என்று பாடவேண்டும் போல் இருந்தது. இத்தனை விந்தையான இயற்கை காட்சிகளை எண்ணும் போது தற்போதுள்ள நவீன விஞ்ஞான முறையில் படமாக்கும் கலையும் கருவிகளும் அன்று எங்களிடம் இருக்கவில்லையே! என்று இன்றும் மனம் ஆதங்கப்படும்.

தாய், பிள்ளைப்பாசம் எத்தனை பெரியது, வலியது என்பதைப் பார்க்கும் நாம் அவை எல்லாம் கூடி வாழும் சீவன்கள் என்பதையும் நேரில் கண்டு வியந்தோம். தாய்பாசத்தை எவ்வளவு உயர் நிலையில் வைத்த இறைவனின் படைப்பின் விந்தையை எண்ணி எண்ணி வியக்கிறோம்.

இதைப்படிப்பவர்கள், குறிப்பாக இக்காட்சியின் முக்கியஸ்தரான அந்த கருணையுள்ளம் கொண்ட அதிகாரி யார் என்று அறியும் ஆவல் கொள்வார்கள். சுமார் ஐந்து சகாப்தங்களுக்கு மேற்பட்ட செய்தியாயினும் இன்றும் மனதில் பசமையாய் நிலைத்துவிட்ட அந்தக் காட்சியும், அதன் காரண கர்த்தாவான அந்த அதிகாரியும் தான். அவர்தான், திரு. கலியுகவரதன் என்பவர். யாழ் காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதும் அன்று அறிந்த செய்தி. அவர் எங்கிருந்தாலும் வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

poorveekan@thaiveedu.com

■ ■ ■




- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Pre-plan funeral arrangements

MARANAM.COM
HEAVEN CARES
ONE STOP PEACEFUL FINAL ARRANGEMENTS
416-431-3600
Fax: 416-292-5139
www.maranam.com, E-Mail: info@maranam.com

# யாழ் குடா நாடும் கேரளாவும்

- பொன் குலேந்திரன் -

கேரளம் என்றவுடன் நம் மனதில் வருவது தென்ன மரச் சோலைகளும் கதகளி நடனமும் போர்க்கலையும், மாந்திரீகமும், கண்ணகி வழிபாடும், சேரன் செங்குட்டுவ மன்னனுமே. கேரளம் அமைந்துள்ள இயற்கையின் சூழ்நிலைக்கும் இலங்கைக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. அவ்வொற்றுமை பழக்க வழக்கங்களிலும், பேசும் வார்த்தைகளிலும், உண்ணும் உணவிலும், அணியும் ஆடையிலும் இருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

கேரளம் ஈழநாட்டிலிருந்து வெகு தூரத்தில் இல்லை என்பது பலர் அறிந்ததே. ஒரு காலத்தில் ராமநாதபுரம், கேரளம், திருநெல்வேலி பகுதியில் வாழ்ந்த மக்களுக்கும் தமிழ் ஈழ மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. கட்டுப்பாடுகள் இல்லாது கடல் கடந்து, மக்கள் போக்குவரத்து இருந்தது. யாழ் குடா நாட்டில் உள்ள பரியோவான் கல்லூரி, மத்திய கல்லூரி போன்ற மிசெனரி கல்லூரிகளில் கேரள நாட்டைச் பல சேர்ந்த ஆசிரியர்கள் கடமையாற்றினர். பரியோவான் கல்லூரியில் உப தலைமை ஆசிரியராக கடமையாற்றிய P.T. Mathai என்பவர் கூட கேரளாவைச் சேர்ந்தவர். அது மட்டுமல்ல மத்தாய் என்ற பெயரில் மூன்று கேரள ஆசிரியர்கள் பரியோவான் கல்லூரியில் ஆசிரியர்களாக இருந்தனர். கேரளத்திலிருந்து ஆசிரியர்கள் பலர் யாழ்குடாநாட்டில் உள்ள கிறிஸ்தவ கல்லூரிகளில் கடமையாற்றியதை பலர் அறிவர்.

முதலியார் இராசநாயகம் யாழ்ப்பாண சரித்திரம் என்ற தனது நூலில் கேரளத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் சோழர் படையெடுப்பின் போது பல வீரர்கள் கேரளப் பகுதியில் இருந்து படையெடுப்பில் கலந்து கொண்டனர் எனக் குறிப்பிட்டுள்ளார். கேரளத் தேசத்தில் வீரர்களுக்கு குறைவிருக்கவில்லை. தென்பகுதி சிங்கள மன்னர்கள் கூட கேரள வீரர்களை தமது எதிரிகளுடன் யுத்தம் செய்ய கூலிப் படையாகப் பாவித்ததாக வரலாறு கூறுகிறது. சப்புமல் குமாரயா என்பவன் தென்பகுதியில் இருந்து வந்து நல்லூர் இராஜதானியைக் கைப்பற்றியது யாவரும் அறிந்ததே. இவனது பூர்வீகம் கேரளாவாகும். இவனது உண்மைப் பெயர் செண்பகப் பெருமாள். இவனது தந்தை பணிக்கர் பரம்பரையைச் சேர்ந்த கேரள தேசத்து வீரனாவான். இவன் பின்னர் புவனேகபாகு என அழைக்கப்பட்டான். நல்லூரில் கட்டியம் சொல்லும் பொது இவன் பெயர் குறிப்பிடப் படுகிறது.

கேரளத்தை ஒரு காலத்தில் ஆண்ட சேரன் செங்குட்டுவன் காலத்தில் பத்தினி வழிபாடு என அழைக்கபபடும் கண்ணகி அம்மன் வழிபாடு பிரசித்தமாக இருந்தது. பின்னர் கேரளாவிலிருந்து கி.பி. 2ம் நூற்றாண்டில் கஜபாகு மன்னனால், யாழ் குடாநாட்டில் உள்ள மாதகல் ஊடாக கண்ணகி அம்மன் வழிபாடு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. கண்ணகி அம்மன் சிலை கல்லினால் உருவாக்கப்பட்டதினால் மாதாகல் நாளடைவில் மாதகலாக மருவியது. பின்னர் வடக்கு, கிழக்கு, தென்பகுதிகளில் இத் தெய்வழிபாடு தமிழ் சிங்கள மக்களால் கடைப்பிடிக்கப்பட்டது. இன்றும் கண்டிப் பெரெஹராவில் கண்ணகிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படு கிறது. பல கண்ணகி அம்மன் கோயில்களை ஈழத்தில் காணலாம். கிழக்கு பகுதியில் இக்கோயில்களின் எண்ணிக்கை அதிகம். முல்லைத்தீவில் பத்தாவது கண்ணகி கோயிலை கஜபாகு கண்ணகிச் சிலையை எடுத்து செல்லும் வழியில் நிறுவியதாகவும் அதுவே காலப்போக்கில் வற்றாப்பளை அம்மன் கோயிலாக மருவியதாகவும் பலர் கருதுகிறார்கள்.

திருவனந்தபுரம் என்ற கேரளத்தின் தலை நகரம் யாழ்குடாநாட்டு மக்களின் கலாச்சாரத்திலும் வாழ்க்கை நடை முறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. யாழ்ப்பாண மக்களுக்கும் கேரள மக்களுக்கும் மொழி, வாழ்க்கை முறை, காலச்சாரம், நடை, உடைகளில் என்ன ஒற்றுமைகள் உண்டு என்பதைப் பற்றி பிரபல ஆராய்ச்சியாளர் எம்.டி.இராகவன் என்பவர் (India in Ceylon History, Society & Culture) என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். ''தேசவழமை'' என்ற பதம் யாழ்குடாநாட்டில் பலர் அறிந்த வார்த்தையாகும். இந்த சட்டம் இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. யாழ் குடா நாட்டு மக்களிடையே நிலவிய பூர்வ வழக்க முறைகள், சட்டங்கள் அனைத்தையும் 1707ம் ஆண்டு ஒல்லாந்தர் காலத்தில் ஒன்று திரட்டி, பன்னிரண்டு முதலியார்களின் மேற்பார்வைக்கு வைக்கப்பட்ட பின்னர், சில திருத்தங்கள் செய்யப்பட்டு, அவர்களின் அனுமதியுடன் தேசவழமை என்ற பெயருடன் மக்களிடையே நடைமுறைப் படுத்தப்பட்டது. இதற்கும் மலபார் பகுதி மக்களிடையே நிலவிய ''மருமக்கட்தாயம்'' என்ற வழக்கு முறைக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன. இங்குவாழும் தமிழ் மக்கள் மருமக்கட்தாயம் வளர்ந்த கேரளம் எனப்படும் சேர நாட்டின் தொடர்புள்ளவர்களாக இருக்கக் கூடும் என்பது பலர் கருத்து. இதே நிலை மட்டக்களப்பு மாவட்டத்திலுமுண்டு. தந்தை வழி செல்லும் மரபுடைய பாண்டிநாட்டு மதுரையினின்று வந்த மரபு. அறிஞர்கள் தேசவழமைக்கும் மருமக்கட்தாயத்துக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை அலசி ஆராய்ந்துள்ளனர்.



'முதுசம்' என்ற பரம்பரை பரம்பரையாக வந்த சொத்துக்கும், தாமாகவே சேர்த்த சொத்துக்கும் உள்ள வேறுபாட்டினை கேரள ''மருமக்கட்தாயம்'' என்ற வழக்க முறையும், யாழ்குடாநாட்டு தேசவழமையில் பிரதிபலித் துள்ளது. முதுசத்தைப் போன்று கேரளவில் தவசி தர்வாட் என்று பாரம்பரிய சொத்தை அழைப்பர். சீதனம் என்ற பெயரில் இந்த பாரம் பரிய வழி வந்த முதிசம் என்ற சொத்து ஆண்களுக்கே சென்றடையும் முறை கேரளாவிலும் இருந்து வருகிறது.

யாழ்குடாநாட்டில் நகை அடைவு வைப்பது போல் காணி, வீடு போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அடைவு வைப்பது வழக்கமாக இருந்து வந்தது. ஒரு அவசர காரியத்திற்கு பணம் தேவைப்படும் போது இந்த முறை கையாளப்படுகிறது. மாதாந்த வட்டி கொடுக்கப்பட வேண்டும் என்பது கடன் வாங்கியவருக்கும் கடன் கொடுத்தவருக்கும் இடையே உள்ள ஒப்பந்தமாகும். சில சமயங்களில் வட்டி கொடுபடாவிடில் வட்டி குட்டி போட்டு முதலுடன் பணம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் போது அடைவு வைத்த சொத்தினை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். வட்டிக்குப் பதிலாக அடைவு வைத்த காணியில் இருந்து கிடைக்கும் வரும்படி கடன் கொடுத்தவரைப் போயடையும். கேரளாவிலும் இந்த முறை 'ஒத்தி' என்ற பெயரில் மக்களால் கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. ஒரு காணியின் சொந்தக் காரர் தனது காணியை விற்கும்பொழுது அதன் பங்குதாரருக்கு முன் அறிவித்தல் கொடுத்தாக வேண்டும். அதோடு பக்கத்துக் காணிக்காரர் அக்காணியை வாங்க விருப்பமா என்பதை அறிவதும் தேசவழமையாகும். இந்த வழக்கமுறையும் கேரளாவில் இருந்து யாழ் குடாநாட்டுக்கு வந்தது என்கிறார் எம்.டி. இராகவன் தனது நூலில்.

சிங்களவர்களிடையே குருப்பு என்ற பெயர் பிரபல்யமானது. பாணந்துறையில் குருப்புமுல்ல என்ற பெயருடன் ஒரு கிராமம் உண்டு. போர்த்துக்கேயர் காலத்தில் இருந்து குருப்பு என்ற பெயர் கொண்ட மக்களுக்கு சமூகத்தில் ஒரு தனியிடம் இருந்தது. சீத்தவக்க மன்னன் காலத்தில் கேரளத்தைச் சேர்ந்த குருப்பு இன வீரர்களை தனது படையில் வேலைக்கு அமர்த்தியிருந்தான். கேரளாவில், நாயர், குருப்பு இனத்திடையே மல்யுத்தம், போர்க்கலை தெரிந்த பல வீரர்கள் இருந்தனர். இவர்கள், தொழில் தேடி கடல் கடந்து சென்று இலங்கையின் தென்பகுதிகளை ஆண்ட மன்னர்களிடம் வேலைக்கு அமர்ந்ததாக வரலாறு சொல்கிறது. இதனால்தானோ என்னவோ கேரளத்தில் உள்ள கொச்சின் என்ற ஊர் ஞாபகமாக கொச்சிக் கடை என்ற ஊர்ப் பெயருண்டு. கட்டான, ஜாஎல போன்ற பகுதிகளில் தென்னைமரங்களில் கள் எடுத்து வியாபாரம் செய்வதை தொழிலாகக் கொண்ட பல கேரளத்தேச வியாபாரிகள் வாழ்ந்தனர். காலப் போக்கில் அவர்கள் சிங்களப் பெண்களைத் திருமணம் செய்து குடும்பம் நடத்தினர்.

தென்பகுதியில் வாழும் சிங்கள இனத்தின் பெண்கள் அணியும் ஆடைகளின் தோற்றத்திலும், முறையிலும் கேரளப் பெண்கள் அணியும் விதத்திற்கும் பல ஒற்றுமைகளுண்டு. இதுபோன்றே தமிழ்ப் பகுதியிலும் தமிழ் பெண்கள் சில தசாப்தங்களுக்கு முன்னர் அணிந்த ஆடைகளுக்கும் ஆபரணங்களுக்கும் கேரள பெண்களின் ஆடை ஆபாரணங்களுக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன. யாழ் குடா நாட்டு பெண்கள் காதில் அணியும் தோடு கேரளாவில் பெண்கள் அணியும் தோட்டைப் போன்றது. இது போன்று ஒரு காலத்தில் ஆண் குழந்தைகள் வளரும் போது ஒரு குறிப்பிட்ட வயதில் காது குத்தி கடுக்கன் போடுவது கேரளமுறைகளில் ஒன்று. பாண்டி கடுக்கன் காதில் போடும் முறை யாழ்குடாநாட்டில் உள்ள நாகர்கோயில் பகுதியில் வாழும் மக்களிடையே ஒரு காலத்தில் இருந்து வந்த வழக்கமாகும். இன்று இந்த வழக்கம் நடைமுறையில் இல்லாது போய்விட்டது.

காதுக்கு மேல் தலை முடியை கொண்டை போட்டு வைப்பது ஆண்களிடையே கேரளாவில் இருந்து வரும் முறையாகும். இதனை நாயர் குல மக்களிடம் காணலாம். இது போன்று தலைமுடியை வளர்த்து தலைக்கு பின்னால் குடுமி வைக்கும் முறை நமது ஆண்களிடையேயும் இருந்து வந்த முறையாகும்.

கேரளாவில் கடைப்பிடிக்கப்பட்ட திருமண முறைகளுக்கும் யாழ்குடாநாட்டில் இருந்து வந்த திருமண முறைகளுக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன. மலபார் மருமக்கட்தாய வழக்க முறைப்படி ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை ஒரு ஆண் திருமணம் செய்யமுடியும். ஆனால் முதல் மனைவி மட்டும் அவனுடன் வாழலாம். அவளின் கணவன், மற்றைய மனைவிமார்களுக்கென தனி வீடு அமைத்து அவர்களிடம் அடிக்கடி சென்று உறவாடி வருவது வழக்கத்தில் இருந்தது. யாழ்குடா நாட்டில் இந்த வழக்கம் நடைமுறையில் இருந்துவந்தது. அதனைச் சின்னவீடு அல்லது வைப்பு என்பர். தமிழ்நாட்டில் 1932ம் ஆண்டு மருமகட்தாய சட்டத்தின் படி ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை திருமணம் செய்வது சட்டவிரோதமான செயலெனக் கருதப்பட்டது. தேசவழமை முறைப்படி ஐயர் திருமணச் சடங்கில் ஓமம் வளாத்து தாலி கட்டுவது அவசியமானதொன்றல்ல. ஓமம் வளர்க்காது பிள்ளையார் பூசைசெய்து இனத்தவர்கள், குடிமக்கள் ஆகியோரின் பிரசன்னத்தோடு திருமணம் நடத்தும் வழமையுண்டு. ஆண் ஆண் சகோதரங்களின் அல்லது பெண் பெண் சகோதரங்களின் பிள்ளைகளுக்கிடையே திருமணம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அதாவது சகோதரனை, சகோதரியை திருமணம் செய்வது முறையல்ல. ஆனால் மச்சானை, மச்சாளை திருமணம் செய்வது தடைசெய்யப்படாவிடிலும் காலப்போக்கில் இம்முறை மறைந்து வருகிறது. தாய்மாமன் மருமகளை திருமணம் செய்யும் முறையும் இன்றும் தமிழ் நாட்டில் இருந்து வருகிறது. அதனால் தான் ஒரு பெண் ருதுவாகும் போது சடங்கில் தாய் மாமனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வழக்கம்.

தென்னை மரங்கள் நிறைந்த நாடு கேரளம் என்பதை யாவரும் அறிவர். அங்கு எல்லா சமையலிலும் தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணை தாராளமாகப் பாவிக்கப்படும். அத்தோடு தேங்காயைத் துருவி அம்மியில் வைத்து அரைத்து சரக்குடன் சேர்த்து கூட்டாக்கி கறிக்குப் பாவிப்பர். இதே முறை நம்நாட்டிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. அப்பம், இடியப்பம், குழல் பிட்டு போன்ற காலை உணவு வகைகள் கேரளாவிலும் நம் நாட்டைப்போன்று பிரசித்தமான உணவுகளாகும்.

ஒரு காலத்தில் நம்நாட்டில் நாற்சார வீடுகள் ஏராளமாக இருந்தன. காலப்போக்கில் இவை அழிந்துவிட்டன. இந்தக்கட்டடக் கலை கேரளாவிலிருந்து யாழ்குடாநாட்டுக்கு வந்ததாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

கேரளக் கலாச்சாரம் யாழ்குடாநாட்டில் மட்டுமன்றி கிழக்கிழங்கையிலும் மேற்கு இலங்கையின் கரையோரப் பகுதிகளிலும் கண்டிப் பகுதியிலும் வேருன்றியிருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாகயிருக்கிறது. நடை, உடை, ஆபரணம், பேசும் வார்த்தைகளை, வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் முறைகள், பெயர்கள் ஆகியவன அதற்கு எடுத்துக்காட்டாகும்.

மோள் (மகள்), மோன் (மகன்), கடகம் போன்ற சொற்கள் கேரளத்துக்கும் யாழ்ப் பாணத்துக்கும் பொதுவானது. வரலாற்றில் ஈழவர் என்று மரம் ஏறிக் கள் எடுப்போரை கேரளாவில் அழைப்பர். தற்காலத்தில் யாழ் குடாநாட்டுவாசிகளை பெருமையாக ஈழவர்கள் என அழைப்பதுண்டு. ஒருகாலத்தில் யாழ்வாசிகளை மலபாரி என ஒல்லாந்தர் அழைத்தனர். மலபார் என்பது கேரளத்தை குறிக்கும்.

உணவு, பேச்சுமொழி, உடை, குடும்ப வாழ்க்கை போன்றவற்றில் கேரளத்துக்கும் யாழ்குடாநாட்டுக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதை நாம் காணலாம். கேரளத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அங்கு படித்தவர்கள் தொகை யாழ்குடா நாட்டை போன்று அதிகம். இதற்கு கிறிஸ்தவ கல்லூரிகளே முக்கிய காரணமாகும்.

ஆய்வு நூல்கள்:
India in Ceylon History, Society & Culture – M.D. Raghavan
மட்டக்களப்புத் தமிழகம் - வி.சி கந்தையா

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

RB

எங்கள் அனுபவம்

உங்கள் லாபம்

GUARANTEED
LOW PRICES FOR:

Non-Medical
Whole Life
Term Insurance

Now Hiring!
FREE CLASSES FOR NEW INSURANCE & RESP AGENTS

RB ROYAL BROKERS
CORPORATION

Siva Kandiah
CEO & Managing General Agent
416.315.8100



RBC Insurance · Industrial Alliance · Desjardins · Assumption Life · Equitable Life of Canada · Manulife Financial · Canada Life

sivakandiah@royalbrokers.com
TEL: 416.298.4722 FAX: 416.298.4664

80 Nashdene Rd., Unit B 25-26
Toronto ON M1V 5E4

# உலக மொழிகளின் எழுத்து வடிவங்கள் தோன்றிய வரலாறு



முருகேசு பாக்கியநாதன்

### தொல்காப்பிய வரிவடிவம்:

தமிழின் தொன்மையினை அறிய அதன் மொழி வரிவடிவம் தொல்காப்பியர் காலத்தேயிருந்த வடிவத்தினை நோக்கும் போது இலகுவாக

## பகுதி - 07

அறியமுடியும். தொல்காப்பியத்தில் தமிழ் வரிவடிவம் பற்றிய முழுமையான தகவல்கள் கூறப்படாவிடினும் இருக்கக்கூடிய தகவல்க-ளும் கி.மு 7ஆம் நூற்றாண்டளவில் தோற்றம் பெற்ற தமிழ்ப் பிராமி எனப்படும் தமிழி எழுத்து வரிவடிவங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது அதன் மொழிச் சிறப்பும் அதன் வரி வடிவச் சிறப்பும் ஏனைய உலக மொழிக-ளுக்கு மிக முந்தியதாகவும் வழிகாட்டியா கவும் அமைந்திருந்தது என்பதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடம் இல்லை.

*எழுத் தெனப் படுப*
*அகர முதல்*
*னகர இறுவாய் முப்ப.:.தென்ப*
*சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே*

- தொல் சூத் 1

*அவைதாம்*
*குற்றியலிகரம் குற்றியலுகரம்*
*ஆய்த மென்ற*
*முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன*

- தொல் சூத் 2

தமிழ் எழுத்து என்பது உயிர் எழுத்து 12, மெய்யெழுத்து 18, சார்பெழுத்தாகிய குற்றி-யலுகரம், குற்றிலிகரம், முப்பாற்புள்ளி பெற்ற ஆய்தம் ஆகிய மூன்று எழுத்துக்களோடு சேர்த்து 33 என்று தொல்காப்பியர் மேற் குறித்த சூத்திரத்தில் உரைக்கின்றார்.

தொல்காப்பியம் எழுத்திகாரத்தில் தமிழ் ஒலி வடிவங்களுக்கே முதலில் இலக்கணம் கூறு கின்றது. எழுத்துக்களின் எண்ணிக்கை, எழுத்-துக்களின் பெயர், எழுத்துக்களின் ஒலிப்பிறப்பு, எழுத்துக்களின் ஒலியளவு, எழுத்துக்களின் வடிவம், எழுத்துக்களின் மயக்கம், எழுத்துக்-களின் புணர்ச்சி என்றவாறாக கூறுகின்றார். இதில் கூறப்படும் சில மாற்றமுடைய எழுத்து வரிவடிவங்களுக்கே இலக்கணம் அங்கே வகுக்கப்பட்டுள்ளது. ஏனைய எழுத்துக்கள் மாறுபாடில்லாமல் இருந்த படியால் அவர் அந்த வரிவடிவம்பற்றிக் குறிப்பிடவில்லைப் போலும்.

*எகர ஒகரத் தியற்கையு மற்றே*

- தொல் 16

எ, ஒ என்ற எகரம், ஒகரம் ஆகிய இரண்டு எழுத்துகள் புள்ளிபெற்று எ. ஒ. என்றவாறாக அமைந்து குறில் எழுத்தாக அமையும் என்றும் புள்ளி பெறாமல் இருப்பதே நெடில் என்றும் உரையாசிரியர் விளக்குகின்றார். தற்போது நாம் வழங்கும் ஏ ஓ ஆகிய ஏகாரம் ஓகாரம் ஆகிய இரண்டிற்குமான மாற்றத்தினைச் செய்து எ எழுத்திற்கு முன்பிருந்த புள்ளியை நீக்கி கீழே ஒரு கால் வைத்து ஏ என்றும், ஒ என்பதில் அமைந்த புள்ளியை நீக்கி கீழே ஒரு சுளியிட்டு அதனை ஓ என்றும் மாற்றி யமைத்தவர் வீரமாமுனிவராகும். அதனையும் முன்பு புள்ளி பெற்றது குறில் என்றும் புள்ளி பெறாதது நெடில் என்றும் வந்திருந்ததனை கீழ் கோடு போட்ட ஏ யையும் கீழ் சுளியிட்ட ஓ என்பதனையும் நெடிலாகவும் எ ஒ ஆகிய-னவற்றைக் குறிலாகவும் அவரே அமைத்தார்.

*மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்*


- தொல் 15

அதாவது மெய்யெழுத்தானது புள்ளி பெற்று வழங்கப்பெறும் என்று குறிப்பிடுகின்றார். அதன் பிரகாரம் சென்ற இதழிலில் காட்டியிருந்த தொல்காப்பியர் காலத்தே பாவிக்கப்பட்ட தமிழி எழுத்துகளில் மெய்மெழுத்துக்கள் புள்ளி பெறு வதனை நோக்க முடியும். தற்காலத்தைய எழுத்துக்கள் வட்டெழுத்துக்களாக மாற்றம் பெற்ற பின்பே தற்கால வடிவம் எடுத்தன. அதன்படியே க், ங், ச், ஞ் ட் என்றவாறாக 18 மெய்களும் புள்ளி பெற்று வருகின்றன. அப்படியாக புள்ளியில்லாமல் வரும் மெய்-கள் உயிர் மெய் எனப்படும்.

*புள்ளியில்லா எல்லா மெய்யும்*
*உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்*
*ஏனைய உயிரோடு உருவந்திரிந் துயிர்த்தலும்*
*ஆயீரியல் உயிர்த்த வாறே*

- தொல் 17


உயிர் எழுத்துக்களோடு மெய் எழுத்துகள் சேரும்போது பிறப்பதே உயிர் மெய்யாகும் அது புள்ளி பெறுவதில்லலை. உதாரணமாக க, கா, கி, கீ கூ கெ கே கை கொ, கோ என்றவாறாக 18 உயிர்மெய் எழுத்துக்கள் வரும். இதன் தமிழி வடிவத்தினைச் சென்ற மாத கட்டுரையின் படம் 5இல் பார்த்து அறியமுடியும்.




1 - எ ஏ ஒ ஓ ம வரிவடிவம்
2 - கிமு.7ஆம் நூற்றாண்டில் நிலைபெற்ற தமிழி அல்லது தமிழ் பிராமி வடிவம்
3 - தமிழி எவ்வாறாக தற்கால எழுத்தாக மாற்றம் பெறுவது
4 - 19ஆம் நூற்றாண்டில் அச்சு யந்திரம் வந்தபின்பு நிலைபெற்ற எழுத்துக்கள்

இவ்வாறாகவே தொல்காப்பியர் காலத்தேயிருந்த தமிழி வரிவடிவம் இருந்தது எனபதனை மேலேயுள்ள படத்தில் அறிக.

படம் 2




படம் 3



கிமு 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் பிராமிக்கல் வெட்டுகள். இவை முறையே திருப்பரங்குன்றம், முத்துப்பட்டி, ஆனைமலை ஆகிய பிரதேசங்களில் கண்டுபிடிக்கப் பட்டவையாகும்.


படம் 4



கருங்காலக்குடி, திருநாதன்குன்றத்துக் கல்வெட்டுக்கள் எவ்வாறாக ஆரம்பகால பிராமியில் இருந்து வட்டெழுத்தாக மாற்றம் பெற்றது என்பதை இதில் நோக்கலாம்.

சிந்துவெளி சித்திர வரிவடிவதடதிலிருந்து அகரம் எவ்வாறாக பிராமியுடாக வளர்ச்சி பெற்று வட்டெழுத்தாக மாறியது என்பதற்கான சாத்தியப்பாடதான அகரத்தின் பரிணாம வளர்ச்சியினைக் படம் 5 இல் காண்க.

படம் 5



68ம் பக்கம் பார்க்க...

www.noolaham.org
noolahamfoundation@gmail.com
நூலகம்

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!

## FIREMAN STEINMETZ
PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

**MOTOR VEHICLE ACCIDENT**

FRACTURES - SPINAL CORD INJURY - BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT - INTERNAL INJURIES OR DEATH



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer"catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**Harry F. Steinmetz**
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

## உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

***OVER 50 YEARS COMBINED EXPERIENCE***
**even if you are:**
unemployed - employed - passenger - pedestrian
cyclist - traveling in public transit - student - housewife

You may be eligible for benefits to THOUSANDS of dollars

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S-per week
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்!

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

# தீபன்

24 Hours Direct Line
**(416) 505 - 9804**
**(416) 624 - 4751**

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)
www.thipaninjuryclaim.com
thiparanjan@gmail.com

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

TORONTO | SCARBOROUGH | MISSISSAUGA



# JRS College
Business - Health Care
"Committed to provide Quality Training"

சிறந்த வேலைவாய்ப்புக்களுக்கான பயிற்சிநெறிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?

## Health Care Courses



**PSW (Personal Support Worker) Diploma**
**(Morning, Evening and Weekend classes are starting soon)**

**Health Office Administrator Diploma**
*Starts on July.20th, 2011 @ 9.00Am (Wednesday)*



**Food Service Worker Certificate**



**Basic Food Handling Certificate**
*On Sep. 10th, 2011 @ 10.00am-4.00pm (Saturday)*



**Advanced Food Handling Certificate**



(Registered and Approved as a Private Career College under the Private Career Colleges Act 2005.)
Some Courses are not available in Etobicoke Campus

| SCARBOROUGH CAMPUS | ETOBICOKE CAMPUS |
|---|---|
| (Midland & Finch) | (Kipling & Dundas) |
| 330-4168 Finch Ave East | 300-5359 Dundas St West |
| Scarborough,ON M1S 5H6 | Etobicoke, ON M9B 1B1 |
| 416-292-2455 | 416-207-9975 |

# தீப்பெட்டியும் தீக்குச்சியும்

நாகமுத்து சுப்பிரமணியம்



கிழக்கும் மேற்கும் சந்திக்கின்ற லெபனான் நாட்டைச் சேர்ந்த பிரபல கவிஞராகவும் நாவலாசிரியாரகவும் ஓவியாரகவும் திகழ்ந்தவர் கலீல் கிப்ரான். வயல்வெளியில் ஒரு காவல் பொம்மையைக் கண்டதும் அவருக்கு ஒரு சிந்தனை உதித்தது.

ஏய் பொம்மையே! நீயோ ஒருவித சக்தியும் அற்ற வெறும் பொம்மை தான். இவ்வளவு நாளாகக் குளிரிலும், பனியிலும், வெய்யிலிலும் துன்பப்பட்டுக் கொண்டு நிற்கிறாய், இதில் உனக்கென்ன பயன்?

அதுவோ,

எனக்கு எதுவித சக்தியும் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் என்னைக் கண்டவுடன் இங்குள்ள மிருங்கங்கள், பட்சிகள் எல்லாம் பயந்து ஒடுகின்றதே, அதுவே எனக்குப் பெருமிதமாக இருக்கிறது. எனவே பனி, குளிர், வெயில் பாதிப்பு எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை.

இந்தத் துன்பங்களுக்கிடையேயும் வயலில் பயிர்களைக் காப்பாற்றிக் கொடுக்க உதவுகிறேன் என அந்தப் பொம்மை சொல்லவில்லை என கிப்ரான் ஆதங்கப்பட்டதாக அவர் எழுதிய கதை ஒன்றில் படித்திருந்தேன்.

அவரின் துளியின் சிதறலாக எனக்குள் எழுந்த சிந்தனையை உங்களுக்குத் தர விழைகிறேன்.

ஒவ்வொரு நாளும் காலையில் எமது வீட்டில் சுவாமி அறையில் தீபம் ஏற்றும் போது பயன்படுகின்ற தீப்பெட்டியில் ஒரு பார்வை எழுந்தது.

தீப்பெட்டி, பல நாடுகளிலும் பலவித அளவுகளில் உண்டு. நான் கண்ட நாடுகளில், ஒல்லாந்து (நெதர்லாந்து) நாட்டிலுள்ள தீப்பெட்டி பெரிய அளவிலானது. ஏறக்குறைய 3'' உயிரம் 3'' அகலமுமானதாக இருக்கின்றது. இலங்கையில் உள்ள தீப்பெட்டி முன்னைய விட இப்போ வலு சிறுத்துவிட்டது. ஏதோ அளவில், உருவத்தில், நிறத்தில் வேறுபாடு இருக்கலாம் தரத்தில் நிறைவாக இருந்தால் சரிதானே!

ஆனால், தீப்பெட்டியும் அதனுள் இருக்கும் தீக்குச்சியும் எவ்விதம் சம்பாசனை செய்யும் என ஒரு கற்பனை உதித்தது.

தீக்குச்சி சொன்னது: எங்களைக் காற்று, மழை, பனி இவற்றிலிருந்து பாதுகாத்து வைத்திருக்கிறீர்களே உங்களுக்கு எப்படி நன்றிக் கடன் செலுத்துவதென்றே தெரியவில்லை. ஒரு தாய் தன் பிள்ளைகளைப் பார்ப்பது போல், ஒரு பறவை தம் குஞ்சுகளைப் பார்ப்பது போல் காப்பாற்றி வருகிறீர்கள். நீங்கள் ஒரு தாய் தான். கடவுள் உங்களைக் காப்பாற்றுவார்.

இது பெரிய விஷயம் அல்ல. தொழிற்சாலையிலும் சரி, விற்பனை நிலையங்களிலும் சரி நாம் இருக்கையில் பாதுகாப்பாக இருந்தோம். விற்பனைக்கு விடப்பட்டதும் மனிதர் கையில் சிக்கிக் கொண்டோம். நீங்களோ, சுதந்திரம் வேண்டும் எவ்வளவு காலம் உங்களிடம் அடைபட்டுக்கிடப்பது என ஆதங்கப் பட்டீர்கள் இப்போ மனிதர்கள் கையில் அகப்பட்டீர்கள்... உணர்வீர்கள், என்றது தீப்பெட்டி.

> **“ தலைக்கனம் என்றால் ‘நான்’ என்ற அகங்காரம், கர்வம், தற்பெருமை, தன்முனைப்பு, ஆணவம் எனப் பல சொற்கள் தமிழில் உண்டு. தனி மனிதன் தொடக்கம் சாம்ராச்சியங்கள் வரை அழிந்து வருவதற்கு இந்தத் தலைக்கனம் தான் காரணம். ”**

அதற்குக் குச்சியோ, இருந்தாலும் நாம் மக்களுக்கு சேவை செய்கிறோம் தானே! “சேவை செய்வது தான் மனிதப் பிறவியின் உயர்ந்த நோக்கம்'' என மானிடர் கூறுகிறார்கள். “மக்கள் சேவையே மகேசன் சேவையல்லவா'' என மானிடர் பெருமைப்படுகின்றார்கள்.

எம்மை அவர்கள் கையில் எடுக்கும் போது எவ்வளவு பக்குவமாக, இரு கைகளாலும் பொத்திக் கொண்டு தீபம் ஏற்றுகிறார்கள். புகைத்தல்காரர்கள்... அதைவிடப் பக்குவமாய் பார்க்கிறார்கள். உங்களுக்கோ அத்தனை அக்கறை காட்டுவதில்லை.

உங்களுக்குக் கூடிய கவனம் தருவது உண்மை தான். சிலவேளை நீங்கள் நிர்வாணமாக இருப்பதால் அவர்களுக்குக் கவர்ச்சியாக இருக்கலாம். நல்லவேளை அவர்கள் உங்களை முத்தமிடுவதில்லை. அப்போ தான் உங்கள் கற்புநிலை தெரியவந்திருக்கும் என்றது தீப்பெட்டி.

இருந்தாலும் இன்றைய விஞ்ஞான உலகில் மின்சாரம், பலவித லையிட்டர்கள் (Lighters) எல்லாம் இருந்தும் எம்மை மறக்கவில்லைத் தான். இன்றும் பூஜை அறையில், கோவில்களில், மங்களகரமான வைபவங்களில் நம்மைத் தானே தேடிக் கொண்டிருக்கிறார்கள். என்று சொன்ன குச்சி திடீரென யோசித்துவிட்டு,

அதுசரி நாங்களும் நீங்களும் சேர்ந்து தானே அவர்களுக்கு உதவுகிறோம். நீங்கள் அசையாமல் ஞானியைப் போல் அமைதியாக இருக்கிறீர்கள் நாங்கள் ஏன் கருகிப் போகிறோம் எனத் தம் மனக் குமுறலைக் கொட்டியது.

சற்றுப் புன்முறுவலுடன் அங்குதான் விஷயம் இருக்கின்றது, என்று தொடங்கியது தீப்பெட்டி. அது உங்கள் ‘தலைக்கனத்தால்’ வந்த விபரீதம், தலைக்கனம் என்றால் ‘நான்’ என்ற அகங்காரம், கர்வம், தற்பெருமை, தன்முனைப்பு, ஆணவம் எனப் பல சொற்கள் தமிழில் உண்டு. ஆங்கிலத்தில் pride, ego, vanity எனக் கூறுவார்கள். தனி மனிதன் தொடக்கம் சாம்ராச்சியங்கள் வரை அழிந்து வருவதற்கு இந்தத் தலைக்கனம் (கர்வம்) தான் காரணம். நீங்கள் பார்த்தீர்களா? உங்கள் தலைப் பகுதி எரிந்து மீதிப் பகுதி பாதுகாக்கப்படுவதை. அகங்காரம் அழிவை உருவாக்கும். எளிமை பாதுகாக்கப்படும். அகங்காரமோ ஒரு கால கட்டத்தில் அழியும்.

தீக்குஞ்சியோ வியப்புடன், நம்மை இப்படி வடிவமைத்தவர்கள் மனிதர்கள் தானே! மனித மூளை எப்படியும் மேம்பட்டது தான் என்றது.

ஆம்! அவர்கள் மிகவும் புத்திசாலிகள். அவர்களுடைய மனம் இருக்குதல்லவா? மனித மனத்துக்கு இணையான ஒரு கம்யூட்டரை வைப்பதற்கு சுமார் ஒரு சதுரமைல் பரப்பளவான இடம் தேவைப்படும் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு என்கிறார்கள். மனித மனதில் உலகத்திலுள்ள எல்லா நூலகங்களையும் அடக்கி விடமுடியுமாம். அவ்வளவு ஆற்றல் படைத்த மனத்தைச் சரியாகப் பயன்படுத்த முடியாத நிலையில் மனிதகுலம் இருப்பதுதான் பரிதாபத்துக்குரிய விடயம். என்றது தீப்பெட்டி.

நாம் சூரியனின் பரம்பரை. இனியில்லா உதவியை உலகிற்கு அளிக்கிறோம். அந்தச் சந்ததி அல்லவா நாம் என தீக்குச்சி பெருமை அடித்தது. அதற்கு தீப்பெட்டியோ, இது தான் நான் முன் சொன்னேனே ‘தலைக் கனம்’ என்று எதற்கும் பெருமை அடிக்காதீர்கள் மரத்தை உங்களுக்குத் தெரியுமா? இலை தரும், காய் - கனிதரும், நிழல் தரும், பிசின்கூடத்தரும். தான் இறந்த பின்பும் விறகாக உதவும் இவற்றுக்கும் நமக்கும் தொடர்பு உண்டு. அந்த மரம் பெருமை அடிப்பதில்லை. மானிடகுலம் கூட அதை விளங்குவதில்லை. ஏனென்றால், சில பெற்றோர் பிள்ளையைப் பார்த்து “மரம் போல வளந்தது தான் மிச்சம் வேறொன்றும் இல்லை'' எனக் கூறுவதுண்டு

அப்போ நாம் சூரியன், மரம் என்ற இரு பரம்பரையின் கலப்போ?

ஆம்! நம்மைப் பார்த்துத்தான் மனிதகுலமும் கலப்புத் திருமணங்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

நீங்கள் இதையெல்லாம் எப்படித் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்? ஆச்சரியமாக இருக்கிறதே! என்றது தீக்குச்சி.

எடி பிள்ளை! ஞானி தொடக்கம் (தீபம் ஏற்றுகையில்) விஞ்ஞானி வரை நாம் பரவலாகி வருகிறோம் அவர்கள் கையில் தவழ்கிறோம். அஞ்ஞானிகளின் பைகளிலும் உறங்குகின்றோம். நீங்கள் இதைக் கவனிப்பதில்லை. கவனிப்புத் தான் விழிப்புணர்வு. முதலில் உங்களை நீங்கள் கவனித்துப் பாருங்கள். அதன்பின்பு யாவற்றையும் அறிய முடியும்.

nagamuththu.s@thaiveedu.com

■ ■ ■

# உலக மொழிக...

66ம் பக்கத் தொடர்ச்சி...

“ஏனைய உயிரோடு உருவந்திரிந்து உயிர்த்தலும்'' என்பதனை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பின்வரும் எழுத்துக்கள் கி, கீ என்பன மேல்விலங்கு பெறும் என்றார் அவர் விலங்கு என்பது அதன் ி, ீ என்ற விசிறிகளையாகும். கு, கூ ஆகிய இரண்டும் கீழ்விலங்கு பெறும் என்றார். கெ, கே என்பது கோடு பெற்று வரும் என்றார். இதனை நாம் ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு என்போம். க என்பது கா என்று ஆகின்ற போது க. என்றவாறாக அருகே புள்ளி பெற்று வரும். க. என்பது புள்ளி நீக்கி ா என்ற அரவு பெற்றது கொ, கோ என்று வரும்போது புள்ளியும் கோடும் பெற்றுவந்தன. அதாவது ஒற்றைக் கொம்பும் இரட்டைக் கொம்பும் அத்தோடு அரவும் பெற்று வந்தன என்பர்.

*உட்பெறு புள்ளி உருவாகும்மே*

- தொல் 14

ம என்ற எழுத்து தொல்காப்பியர் காலத்தே தற்போது உள்ள ம என்ற வடிவில் இருக்கவில்லை. ப. என்பது மகரம் ஆகும்போது ப். என்றவாறாக மகரம் வழங்கிவந்தது. உட்பெறுபுள்ளி பெற்று வரும் என்பர் தொல்காப்பியர். இதனை ப. என்பது உள்ளே ஒரு புள்ளிபெறுவதனாலே அது மகரமாகின்றது.

தமிழில் ரு, லு என்பது உயிரெழுத்தல்ல. அது தமிழில் மெய்யெழுத்தாகும். ஆனால் தேவநகரியில் ரு, லு என்பது உயிர் எழுத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதோபோல் ழ, ற, ன ஆகிய எழுத்துக்கள் தேவநகரியில் இல்லை. இவை தமிழுக்கேயுரிய சிறப்பு எழுத்துக்களாகும். இந்த வித்தியாசத்தினை தமிழியில் காணமுடியும். ஆனால் அசோகன் பிராமியிலும் தமிழில் உள்ள விசேட அம்சங்கள் இல்லை.

சங்க நூலாகிய பரிபாடலில் எழுத்து என்பது ஓவிய என்று பொருள்பட கூறுகின்றது. மேலும் அதுபற்றிக் குறிப்பிடுகையில் “இன்ன பல பல எழுத்து நிலைமண்டபம்'' பரிபாடல் 19, யாப்பருங்கலக் காரிகை நூற்பாவொன்று ஓவிய எழுத்தை உருவ எழுத்து என்று கூறுகின்றது. *(தமிழ் வரலாறு – அண்ணாமலை பல்கலைக்கழகம் பக் - 85.)* இதே மொழி வரலாற்று நூல் 1200 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் வட்டெழுத்தாகவேயிருந்தது என்று கூறுகின்றது. இத்தகைய வரிவடிவம் உள்ள கல்வெட்டினை முதலாம் இராஜராஜசோழன் காலத்தைய கட்வெட்டினை ‘படம் 2இல்’ பார்வையிட முடியும். சென்ற கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது போல் சிந்துவெளி வரி வடிவம் கோடுகளாலும் வளைவுகளாலும் அமைந்த சித்திர எழுத்தேயாகும். இதுவே பிராமியின் தோற்றத்திற்கு வழிசமைத்தது என்பதனை நோக்கினோம். பின்பு அதே பிராமியில் இருந்தே தமிழ் வட்டெழுத்தாக கி.பி 5ஆம் நூற்றாண்டளவில் மாற்றமடைந்தது. இந்த வட்டெழுத்தைப் பின்பற்றியே சென்ற மாதக்கட்டுரையில் பிராமியில் இருந்து மேலே கூறிய ஏழுத்துக்கள் எவ்வாறாக மாற்றம் பெற்றன என்பதனை நோக்கினோம். 5 - 13ஆம் நூற்றாண்டு வரை படிப்படியாக வட்டெழுத்து மாற்றம் பெற்றன என்பதனை படம் 2 இலும், படம் 4இலும் பார்வையிட முடியும். உலக எழுத்துகள் யாவும் கோட்டு வரிவத்திலேயே தோற்றம் பெற்றன என்பது பற்றி முந்திய கட்டுரைகளில் நோக்கினோம். இதற்கு தமிழ் விதிவிலக்கல்ல. ஆரம்ப சிந்து சித்திரவெழுத்தும் அதனைத் தொடந்து உருவான பிராமி எழுத்தும் கோட்டு வடிவத்திலேயே அமைந்தன.

இந்த வட்டெழுத்தனைப் பின்பற்றியே தமிழ் நாட்டில் வடமொழியினைப் புகுத்த அதே விதமான ஒரு எழுத்து வரிவடிவம் தேவைப் பட்டதனால் கிரந்த வரிவடிவம் தோற்றுவிக்கப்பட்டன. இதே விதமாகவே கிமு 7ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட வரிவடிவமாகிய தமிழ் பிராமியிலிருந்தே கிமு. 3ஆம் நூற்றாண்டளவில் அசோகன் பிராமி என்ற வரி வடிவம் தோற்றம் பெற்று அதுவே பல வட இந்திய மொழிகளுக்கு அடிப்படை வரிவடிவமாயிற்று. அசோகன் பிராமிகூட தமிழ் பிராமியினை அடியொற்றியே பிறந்துள்ளது. (கிமு 3ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் சிலவற்றை படம் 3ல் காண்க)

***உசாத்துணை:***

*மொழி வரலாறு – டாக்டர் மு.வரதராஜன்*
*தமிழ் எழுத்தின் வரிவடிவம் - பேராசிரியர் சி.கோவிந்தராசனார்*
*பண்டைத் தமிழ்ச் சமூகம்*
*தமிழ் வரலாறு – அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
*தமிழ் மொழி வரலாறு – பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்*
*தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை*

தொடரும்......

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■


REAL TEAM
வீடு,வியாபார நிலையம் வாங்க,விற்க
வாடகைக்கு பெற அல்லது கொடுக்க
REAL TEAM
Thinking of selling? Think SOLD!
" Put our experience to work for you, and see the difference! "
Toronto
$ 144,900
Nice Condominium
2 Bedrooms
Close To Subway
Scarborough
$ 514,900
Detached
4 Bedrooms
Finished Basement
Scarborough
$ 749,900
Custom Built
4 Bedrooms
Updated
Sasi Chelvaratnam
Sales Representative
416.725.1125
Ajax
$360,000
Detached
4 Bedrooms
4 Washrooms
Scarborough
$239,000
Beautiful Condo,
2 Bedrooms
2 Washrooms
Scarborough
$ 156,000
Spacious Condo
2 Bedrooms
Corner Unit
Ajax
$264,600
Detached
3 Bedrooms
Power Of Sale
Oshawa
$389,900
Great Investment
Good Return.
Anchored Tenants
Markham
$ 1.98 Million
Custom Built Home
5 Bedrooms
Upgraded Home
Brampton
$ 329,900
Semi Detached
3 Bedrooms
3 Washrooms
Ravi Raveendran
Real Estate Broker
416.817.8479
Markham
$ 399,000
Freehold Town House
3 Bedrooms
2 Washrooms
Scarborough
$ 189,900
Condominium
2 Bedrooms
Well kept Unit
Markham
$619,900
Detached
4 Bedrooms
5 Washrooms
Kethees Seevaratnam
Sales Representative
416.275.5788
Brampton
$379,900
Detached
4 Bedrooms
Few years Old
North York
$ 429,900
New Luxury Condo
Walk To Subway
Close to all Amenities
Vaughan
$ 629,900
Detached
4 Bedrooms
Finished Basement
Scarborough
$279,900
Condo Town House
4 Bedrooms
Prime Location
Scarborough
$269,900
Condo Town House
3 Bedrooms
End Unit.
Scarborough
$ 214,900
Luxury Condominium
2 Bedrooms
1 Washroom
Markham
$494,900
4+2 Bedrooms
4 Washrooms
Finished Basement
Justin William
Real Estate Broker
416.803.7344
Scarborough
$129,900
Condominium
1 Bedroom
1 Washroom
Woodbridge7
$389,900
Condo T/House
3 Bedrooms
3 Washrooms
Scarborough
$425,000
Detached Bungalow
3+2 Bedrooms
Basement Apartment
Wilton Gnanapragasam
Sales Representative
416.554.4747
Markham
$509,000
Detached House
4 Bedrooms
3 Washrooms
Scarborough
$218,800
Condominium
2 Bedroom
Luxury Building
Scarborough
$299,900
Semi Detached
4+2 Bedrooms
4 Washrooms
Mississauga
$549,900
Detached
4 Bedrooms
3 Washrooms
Markham
$418,000
Freehold Town House
3+1 Bedrooms
4 Washrooms
Scarborough
$154,900
Family Business
Good Sales
Lotto Commission
Scarborough
$269,900
Condo Town House
3 Bedrooms
End Unit
Balan Kanesapillai
Sales Representative
416.844.5401
HOMELIFE
HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave, East, Toronto, ON. Tel: 416-321-6969 & 145 Traders Blvd. E, Mississauga,ON Tel: 905-712-2666
*Each office Independently owned and operated

# CTR தகவல் பலகை

**BRIMLEY & MCNICOLL**
Painting
3 bdrm basement
Prabaharan: 416-804-5686/416-321-5686

**BRIMLEY & EGLINTON**
2 bdrm basement/Separate Entrance
Sothi: 416-269-6970/416-892-7762

**MARKHAM & BRIMORTON**
2 bdrm basement/Separate Entrance
Vicky: 416-509-0937

**MCCOWAN & 14TH**
2 bdrm basement
Close to all amenities
Raj: 647-302-6930

**MORNINGSIDE & NIGHTSTAR**
2 bdrm basement
Uruthiran: 647-831-3242

**NEILSON & MCLEVIN**
2 bdrm /2 washroom
Condo for sale
Nagula: 416-284-0154

**WESTON & EGLINTON**
Condo for sale
2 bdrm /1 washroom
Suresh: 416-321-5697

**BRIMLEY & ELLESMERE**
1 bdrm basement/ car park
Raj: 416-430-0035/647-456-3144

**BRIMLEY & LAWRENCE**
1 bdrm basement
Nathan: 416-264-6113

**MORNINGSIDE & SHEPPARD**
2 bdrm for rent
Seelan: 416-300-7595

**DENISON & MIDDLEFIELD**
2 bdrm for rent
Selvam: 905-201-9901/416-648-1987

**MARKHAM & STEELES**
1 bdrm basement
Piremaa: 416-939-7032

**NEILSON & FINCH**
1 bdrm basement for rent
Sumathi: 416-292-9169/416-358-9467

**KENNEDY & FINCH**
1 bdrm basement for rent
Ranjan: 647-208-9305/416-291-9305

**JANE & FINCH**
1 bdrm for rent in a condo
Dinithini: 416-514-1661

**MIDDLEFIELD & ELSON**
Basement for rent/2 bdrm
Nirojan: 647-505-7951

**BRIMLEY & FINCH**
Basement/2 bdrm for rent
Joseph: 647-271-3934

**MCCOWAN & DENISON**
2 bdrm/walkout basement
Raji: 416-490-1019/416-409-1507

**WARDEN & ST CLAIR**
New house for sale
Ratnam: 416-208-9104

**MARKHAM & STEELES**
4 bdrm/main floor
1 room for rent
Jenny: 905-209-8999

**MARKHAM & DENISON**
4 bdrm house/1 room for rent
Rani: 905-201-9901/416-648-1987

**98 TOYOTA COROLLA**
Thava: 416-526-3434

**VAN SERVICE**
Pickup-drop off
Toyota Sienna/Honda Odyssey
Fish tank for sale
Kumar: 416-430-0999/647-287-0731

**2000 TOYOTA CAMRY**
186km/$4000
Selvan: 647-998-2870

**2002 TOYOTA COROLLA**
Ravi: 647-920-6734

**1995 TOYOTA COROLLA**
Raji: 905-927-9730

**1997 NISSAN QUEST**
1 window A/C
1 portable A/C
Aswin: 647-996-6977

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**HONDA CIVIC**
Car radio also for sale
Yoges: 416-297-7542

**96 ACURA INTEGRA**
**99 TOYOTA SIENNA**
Ratha: 647-338-7316

**2008 HONDA CIVIC**
54km/$11,900
Yogarajah: 416-451-6895

**2007 HONDA CIVIC**
72km dealer Maintenance/$12,000
Jeyamohan: 416-335-1477

**2000 DODGE CARAVAN**
van for sale
Mokan : 416-499-1659

**TRANSMISSIONS**
Depot available
Ananthan: 905-420-6171

**இலவச திருமண சேவை**
905-239-9326/647-987-9326

**SWIMMING**
English classes
Tharma: 647-893-5584/647-709-8779




# பயங்கரவாதியா?

பயணத்தால் படித்தவை - 07



மனுவல் ஜேசுதாசன்

டோகா இஸ்லாமிய தொல்கலைப் பொருள் நிலையம் நாங்கள் தங்கியிருந்த விடுதியின் அண்மையில் அமைந்திருந்தது. கால்நடையில் செல்லலாம் என கூறினார்கள். மாரி காலத்திலும் சூரியனின் அட்டகாசம் மத்திய கிழக்கில் அடங்குவதில்லை என்பது வீதியை அடைந்ததும் புரிந்தது. டாக்சியின் துணையுடன் தொல்கலைப் பொருள் நிலையத்தை அடைந்தோம். காலை 10 மணிக்கு வாசல் திறக்கும் என்பதை அறிந்திராத காரணத்தால் காலை 9 மணிக்கே அங்கு சென்றடைந்து விட்டோம். பொழுதைப்போக்குவதற்கு நிலையம் அமைந்திருந்த சூழல் ரம்மியமாகவிருந்தது. பாசிய கடலின் தொடர்ச்சி அராபிக்கடல் (டோகாகுடா). அதன் ஒரு பகுதியில் இயந்திரங்கள் கடலை நிரப்பி மண்குவிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்தன. இஸ்லாமிய தொல்கலைப்பொருள் நிலையம் நிறுவுவதற்கு இக்கடலின் ஒரு பகுதி திருடப்பட்டதற்கு ஆதாரங்கள் தோன்றின. குதிரை லாடத்தின் அமைப்பு போன்ற வடிவில் அராபிக்கடலை திருடி மேவப்பட்ட நிலத்தில் இந்நிலையம் அரண் கொண்டிருக்கிறது. இது அராபிக்கடலின் மேல் மிதப்பதைப் போன்று காட்சியளிக்கிறது. இதன் வெளித்தோற்ற அழகையும் அதன் சூழலையும் நேரம் போவது தெரியாது ரசித்தோம். பிரதான வீதியிலிருந்து இஸ்லாமிய தொல்கலைப்பொருள் நிலையத்தை அடையும்வரை வழி நடுவே நடப்பட்டுள்ள பேரிச்சம் மரங்கள் தனி அழகு. அந்த மரங்களில் கொவ்வை நிறத்தில் பழங்கள். ஒரு மரத்தில் பல நிறங்கொண்ட ஒரு குருவி தன்னை மறந்து பழங்களைக் கொத்தி தின்று கொண்டிருந்தது. மரத்தின் மேல் பருவ மங்கைபோன்று தளதளவென தோன்றிய பேரிச்சம் பழங்கள் பளிச்சென்றிருந்தன. சில நிலத்தில் வயதான மூதாதையைப்போல் தோல் சுருங்கிக் கிடந்தன. அழகு தோல் ஆழம் வரைதான் என்பது ஞாபகம் வந்தது. நிலையத்தின் அண்மையில் குளிர்மையை ஏற்படுத்துவதற்காக ஒரு நீர் தடாகம். அதிலிருந்து நீர் எண்ணற்ற துவாரங்களூடாக சீறி அடித்துக் கொண்டிருந்தது. வெக்கையைத் தனிப்பதற்காக சற்று நேரம் அவ்விடத்தில் தங்கி வேகத்தில் பறக்கும் நீரின் அணைப்பில் ஆறினோம்.

பிரவேசம் இலவசம். இருப்பினும் மக்கள் அருகிக் காணப்பட்டார்கள். அந்நிலையத்தில் எத்தகைய தொன்மை வாய்ந்த சரித்திர முக்கியத்துவம் பெற்ற கலைப்பொருட்கள் இருக்கின்றன என்பதை அறிவதைவிட அவற்றை தன்னுள் வைத்துள்ள கட்டிடத்தின் கலைத்துவத்தை ரசிப்பதற்கே ஞானக்கண் வேண்டும். வெறும் கட்டிடமன்றி அதுவே ஒரு கலைப்பொருளாக காட்சியளித்தது. இக்கட்டிடம் இஸ்லாமிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் அடையாளமாக அமைந்தபொழுதும் இதை வடிவமைத்தவர் ஒரு அமெரிக்க சீனர். லேயோ மின்பெய் (Leoh Min Pei). இந்த கட்டிடத்தை வடிவமைப்பதற்காக 90 வயது நிரம்பிய பெய் அவர்கள் அவரது ஓய்வு வாழ்விலிருந்து மெல்ல இழுத்துவரப்பட்டார். உலகிலே மிகவும் புகழ்பெற்ற கட்டிட வடிவமைப்பு கலைஞர் இவர்.

இஸ்லாமிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்ற தொன்மையான சரித்திர முக்கியத்துவம் பெற்ற பொருட்கள் உலகின் பல பாகங்களிலிருந்தும் பெறப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பொழுதும் கத்தார் நாட்டின் வரலாறையும் அதன் சிறப்பையும் காட்டுகின்ற எப்பொருளையும் நான் பார்த்ததாக ஞாபகம் இல்லை. காட்சிக்கு வைக்கப்பட்ட பொருட்களைப் பார்ப்பதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

இன்னும் சில மணி நேரங்களை டோகாவில் நாங்கள் பயனுள்ளதாகக் கழிக்க வேண்டியிருந்தது. இஸ்லாமிய தொல்கலைப் பொருள் நிலையத்திலிருந்து 'சுக் வாகிவ்' சந்தையை பகல் நேரத்தில் பார்க்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. சுட்டெரிக்கும் வெய்யில் சிறிது தூரம் நடந்தால் கூட கருகிவிடுவோமா என்ற நிலை. பிரதான சாலைக்கு நிலையத்திலிருந்து 5 நிமிடங்கள் பிடிக்கும். நடந்து களைத்துவிட்டோம். பிரதான சாலையில் நிழலாறுவதற்கு ஒரு மரமில்லை. கிளைகள் இல்லாத தோப்பு மரங்கள் ஆங்காங்கே. அவை நிழல்தரவில்லை. விடுமுறை நாளும் கூட. 'டக்சி' அந்தப்பக்கம் வருவதாகத் தோன்றவில்லை. வரும் ஓர் இரு டக்சிகளும் ஆட்களை ஏற்றி வந்தன. பல நிமிடங்கள் காத்திருந்து காய்ந்துபோனோம். சுக் வகிவ் அண்மையில் உள்ளதாகக் கூறினார்கள். நடந்துபோகலாம் எனத்தீர்மானித்தோம். சிறிது தூரம் நடந்தோம். முடியவில்லை. ஒரு தோப்பு மரத்தின் கீழ் நிழலாற முயன்றோம். ஒரு மரத்தின் கீழ் இருவரும் நிழல் பெறமுடியவில்லை. காத்துப்போகாமல் கட்டிப்பிடித்தால் தவிர. அது, அந்த நாட்டில் மகாகுற்றம். அப்பொழுது ஒரு டக்சி அண்மித்தது. சுக் வாகிவ் செல்வதற்கு கேட்டோம். முடியாது எனக் கூறிவிட்டார். கையை நீட்டி 'இதோ பக்கத்தில் இருக்கிறது' எனக் காட்டினார். "எங்களால் நடக்க முடியாது. நீர் கேட்கும் பணம் தருகிறோம். எங்களை கொண்டுபோய் விடும்" என்று பணிவுடன் கேட்டோம். அப்பொழுது ஒரு பாலைவனக் கதை ஞாபகம் வந்தது.



எண்ணை வளம் கிட்டும் முன்னதாக மத்திய கிழக்கு நாடுகள் முழுவதும் வரண்ட பாலை வனங்களாக இருந்தன. அப்பொழுது மக்கள் வியாபாரத்துக்காக ஓர் இடத்திலிருந்து மறு இடத்திற்கு ஒட்டகங்களிலும் கால் நடையாகவும் செல்வார்கள். சிலர் விலை உயர்ந்த வைர வைடூரிய மாணிக்க கற்களை பைகளில் கொண்டு செல்வார்கள். இவ்வாறாக பாலைவனத்தினூடாக செல்பவர்கள் எல்லோரின் கால்களும் "விரும்பிய ஊர் சென்று சேர்வதில்லை". பிற்காலத்தில் ஆராட்சியாளர்கள் இவர்களின் பிரயாண முயற்சியின் அடையாளமாக இவர்களது எலும்புக் கூடுகளையும், நீட்டிய கைகளின் எலும்புகளின் அண்மையில் பையில் அவர்கள் கொண்டு சென்ற விலை உயர்ந்த கற்களையும் கண்டு பிடித்தார்கள். இந்த வியாபாரிகள் பாலைவனத்திலே ஒரு பொத்தல் குடி தண்ணீருக்காக அத்தனை விலை உயர்ந்த கற்களையும் வெகுமதியாக கொடுத்திருப்பார்கள் எனக் கூறப்பட்டது.

எங்களில் பரிதாபப்பட்டோ என்னவோ அந்த 'டக்சி' சாரதி எங்கள் வேண்டுகோளை ஏற்று எங்களை 'சுக் வக்கிவ்'க்கு கொண்டு சென்றார். மதியம் 12 மணி. சந்தை வெறிச்சோடிக்கிடந்தது. மயிரிடை வெளியில்லாமல் கார்கள் நிறுத்தப்பட்ட அந்த வாகன தரிப்பிடம் பென்னம்பெரிய தார் போட்ட, சில பகுதி கற்கள் பதித்த, அனல் பறக்கும் பாலைவனம் போல் தெரிந்தது. ஒரு சிலரின் நடமாட்டங்கள் மட்டும். பழமைவாய்ந்த அராபிய கட்டிட கலைவடிவில் ஓடை ஓரக் கடைகள். கனடாவில் உள்ள 'Flea market' இந்த ஒடக்கரைக் கடைகளின் 'மாதிரி' (Models) என எண்ணத் தோன்றுகிறது. விடுமுறை நாள் என்ற காரணத்தால் பெரும்பான்மையான கடைகள் மூடப்பட்டிருந்தன. திறந்திருந்த சில கடைகளில் வீடுகளை அலங்கரிக்கின்ற காட்சிப் பொருட்கள், கனடாவில் அரிதாய் கிடைக்கின்ற பொருட்கள், வேறு பல அராபிய ஆசிய நாடுகளின் கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கின்ற பொருட்கள் எங்களைக் கவர்ந்தன. இத்துடன் கத்தாரை விட்டு வெளியேறும் நேரம் வந்தது.

குறித்த நேரத்தில் விமான நிலையத்தை வந்தடைந்தோம்.

டோகா விமான நிலையத்தின் வெளியேறும் பகுதி தரை இறங்கும் பகுதியைவிட முற்றாக மாறுபட்டதாகவிருந்தது. வளர்ச்சி அடைந்த ஒரு நாட்டின் தோற்றம். மதுபானங்கள் பல விதங்களில் விற்பனைக்கு காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. ஆச்சரியமாகவிருந்தது. உள்கொண்டு செல்வதற்கு தடை. ஆனால் அங்கிருந்து வேறு நாடுகளுக்கு கொண்டு செல்வதற்கு தூண்டுதல். என்ன நியாயம், தனக்கொரு சட்டம் பிறருக்கொரு சட்டம்.

வளமையான பாதுகாப்பு சோதனைகளின் பின் விமானத்தை அடைந்தோம். உள்நாட்டில் நகரங்களிடையே பறங்கின்ற சிறிய விமானம். ஆசனங்கள் 19A, 19B யன்னல் ஓரமாயும் நடுவிலும். ஒரு வாலிபன் 19A ஆசனத்தில் அமர்ந்திருந்தான். நாங்கள் அவனிடம் 19A ஆசனம் எங்களுக்குரியது என அமைதியாகக் கூறினோம். அவன் எங்களை ஏளனமாகப் பார்த்தான். நானும் ஏளனமாக 19A எமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம் எனக்கூறினேன். அவன் என்னைக் கோவமாகப் பார்த்தான். செல்பேசியில் பேசிக் கொண்டிருந்தவன் நான் தன்னை தொந்தரவு செய்து விட்டேன் என்ற தோரணையில் செல்பேசியை என்னிடம் காட்டி புரியாத மொழில் திட்டினான். எனக்கும் மூக்கு முட்ட கோவம் வந்துவிட்டது. இது ஒரு வகையில் எனது பலவீனம். கோவம் வந்தால் எனது பார்வை நான் கோவிப்பவரை வெறுப்பூட்டும் பயமூட்டும் என்று உறவுகள் சொல்வார்கள். இவன் பயமடைந்ததாகவோ வெறுப்படைந்ததாகவோ தெரியவில்லை. "சரி நாம் மற்ற இரண்டு சீற்றிலும் இருப்பம்" என மனைவி சொன்னார். எனக்கு அது சரியெனத் தோன்றவில்லை. விமானப் பணிப் பெண்ணை அழைத்தேன். அவள் வந்தாள். எங்கள் "போடிங் பாஸ்"ஐ பார்த்தாள். அந்த வாலிபனை எழுந்து அவனது 19C ஆசனத்திற்கு மாறும்படி பணித்தாள். அவளையும் அவன் ஒரு ஏளனப் பார்வை பார்த்தான். தொலைபேசியைக் காட்டி புரியாத மொழியில் பேசினான். அவளும் விட்டுக்கொடுக்கவில்லை. வாக்குவாதத்தின் பின் சினத்துடன் எழுந்து எங்களுக்கு ஆசனத்தை தந்தான்.

இம்முறை எனது மனைவி யன்னலோரம். இந்த வம்பனையும் மனைவியையும் பிரிப்பதற்கு நான் நடுவில். அவன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டேயிருந்தான். "விமானம் இன்னும் சில வினாடிகளில் பறக்க விருக்கிறது தயவு செய்து உங்கள் கை தொலைபேசிகளையும் வேறு ஏதாவது எலெக்ரோனிக் கருவிகளையும் 'சுவிச் ஒவ்' பண்ணி விடுங்கள் என்ற அறிவித்தல் வந்தது. அவனை நான் பார்த்தேன். அந்த அறிவித்தல் அவனுக்கு புரிந்தது போல் தென்படவில்லை. வேறு உலகத்தில் இருப்பதைப்போல் தொடர்ந்து தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தான். விமானம் ஓடு தரையில் ஓடத் தொடங்கியது. இவன் பேசிக்கொண்டே இருந்தான். அக்கம் பக்க ஆசனங்களில் இருந்தவர்களும் அவனின் உரையாடல் கேட்டு இவனை விழித்துப் பார்த்தார்கள். மற்றவர்களும் விமானத்தில் உள்ளார்கள் என இவன் கணக்கெடுக்கவில்லை. பணிப்பெண் ஆசனங்களை நோக்கி பயணிகள் 'சீற்பெல்ற்' அணிந்துள்ளார்களா என உறுதிப்படுத்திய வண்ணம் எங்கள் ஆசனங்களை அணுகினாள். அதே பணிப்பெண். நான் கண்களால் இவனையும் இவனது தொலைபேசி உரையாடலையும் காண்பித்தேன். 'சுவிச் ஒவ்' பண்ணும் எனக் கூறிவிட்டு அவள் நகர்ந்துவிட்டாள். அது இவனது காதுகளில் கேட்டதோ தெரியவில்லை. அவள் திரும்பிவந்தாள். இவன் பேசிக்கொண்டிருந்தான். இப்பொழுது நின்று தொலைபேசித் தொடர்பை துண்டித்துவிடும்படி உறுதியாக கூறி தொடர்பு துண்டிக்கும்வரை நின்றாள். இவன் தொடர்பை துண்டித்தான். அவள் நகர்ந்தாள். இவன் மீண்டும் தொலைபேசியில் யாரையோ அழைத்தான். பேசத்தொடங்கினான். விமானம் மேலெழுத் தொடங்கியது. இவன் பேசிக்கொண்டே இருந்தான். எனக்கு கோவம் ஏற்பட்டது. இவனது கையைத் மெதுவாக தட்டி நீ சட்ட ஒழுங்குகளுக்கு அமைய மாட்டாயா? எத்தனை தடவை தொலைபேசியை 'சுவிச் ஒவ்' பண்ணச் சொல்லி உன்னிடம் பணிக்கப்பட்டது. உனது செயலால் இங்குள்ள எல்லோரின் உயிர்களுக்கும் ஆபத்தல்லவா ஏற்படுத்துகிறாய் என கூறினேன். நான் கூறியது விளங்கியதாக அவன் காட்டிக் கொள்ளவில்லை. நான் கோவப்படுகிறேன் என்பது மட்டும் தெரிந்ததாக உணர்த்தினான். புரியாத மொழியில் அவனும் என்னை ஏசினான், "உனக்கு என்ன வேணும், பேசாமல் வாயைப் பொத்திக் கொண்டிரு" என்று கூறியதுபோல் இருந்தது. நானும் விட்டபாடாய் இல்லை". நீ தொலைபேசியில் பேசிக்கொண்டிருப்பது ஒரு பக்கம் விமான விபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற பயம், மறு பக்கத்தில் உனது உரையாடலின் சத்தம் எனக்கு சினத்தை ஏற்படுத்துகின்றது" என எனது சினத்தை வெளிப்படுத்தினேன். என்னை முறைத்துப்பார்த்தான். 'பொத்தடா வாயை' என்று கூறுவதைப் போல் ஏதோ சொன்னான். மீண்டும் தொடர்ந்து தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தான். இதுவரையில் இவனுடனான சச்சரவைப் பார்த்தும் கேட்டுக் கொண்டுமிருந்த மனைவி எனக்கு ஒரு எச்சரிக்கையை விடுத்தார். அதுவரை நான் சிந்திக்காத விடயம். "இவன் பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவன் போலிருக்கு. வேண்டாம் இவனோட பிரச்சினை. நடக்கிறது நடக்கட்டும். நீங்க பேசாமலிருங்க." கடைக்கண்ணால் இவனைப்பார்த்தேன். 25-30 வயது இருக்கும். மெலிந்த 5'8' உயரம். கூர்முகம். பொதுநிற மேனி. குழி விழுந்த சொக்கை. தலைநிறைய கருமுடி. வரிசையான பற்கள். இஸ்லாமிய தாடி வளர்த்திருந்தான். பரிட்சயமில்லாத வாசனைத்திரவியம் அணிந்திருந்தான். இவனைப்போன்ற தோற்றமுடைய இளைஞர்களை தொலைக்காட்சிகளில் பயங்கரவாதிகளாக அறிமுகம் செய்யப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன்.

இவனது தோற்றமும் நடைமுறையும் மனைவியின் கூற்றில் உண்மை இருக்கலாம் என்ற அச்சத்தை தோற்றுவித்தது. எனது சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டது. இன்னும் ஒரு மணிநேரம் அதன்பின் இவனை நான் எங்கே சந்திக்கப்போகிறேன். இவன் செய்கிறதைச்

தொடர்தல் 72ம் பக்கம்

# பயங்கரவாதியா?...

71ம் பக்கத் தொடர்ச்சி...

செய்யட்டும் என என்னை அமைதிப்படுத்திக் கொண்டு தொலைக்காட்சியில் எனது கவனத்தை செலுத்தினேன். சற்று நேரத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. இவனுடன் ஒரு நட்புறவை ஏற்படுத்தினால் என்ன! அந்த நேரத்தில் அவனுடை தொலைபேசி உரை- யாடல் முடிவடைந்தது. இவனது செல்பேசி யைப் பார்த்தேன். நீண்ட தாடி வளர்த்த ஒரு நடுத்தரவயதான ஒருவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இவன் நிற்கும் படம் தெரிந்தது. அவன்தான் இவனின் தலைவனோ! என எண்ணத்தோன்றியது. சீ...சீ... பயங்கர வாதத் தலைவனுடன் எடுத்த படத்தைப் பகிரங்கமாக செல்பேசியில் வைத்திருக்க மாட்டான். இவனின் அப்பாவாக இருக்கலாம். கேட்டுத்தான் பார்ப்போமே. இதுவரையில் நான் ஆங்கிலத்தில் பேசியதற்கு ஒரு பதிலும் கூறாதவனிடம் மீண்டும் ஆங்கிலத்தில், “இது உனது அப்பாவா?” எனக்கேட்டேன். இம்முறை நட்பை ஏற்படுத்துவதற்கா பற்களைக் காட்டி சிரித்தவண்ணம் கேட்டேன். அவனோ ஒரு வார்த்தை கூட பதிலாகப் பேசவில்லை. அதே ஏளனப்பார்வை. அந்த பார்வை கூறியது, “ஏனய்யா, உன் வேலையை பார்த்துக் கொண்டு பேசாமல் இரன்... பிளேனில பக்கத்தில் இருக்கிறன்.. கொஞ்ச நேரத்தில் இறங்கப்போறன். நீயாரோ நான் யாரே... இதுக்குள்ள என்ன கேள்வி வேண்டிக்கிடக்கு. அது என்ர அப்பாவா இருந்தா என்ன எனது தலைவனாய் இருந்தாலென்ன. உமக்கேன் காணும் வீண் சோலியை!” எனது கண்கள் தொலைக்காட்சியை தேடின. ஆனால் மனம் நிலை கொள்ளவில்லை. இவன் என்ன செய் கிறான் என்ற தேடலில் மும்முரமாய் செயற் பட்டது. சிறிது நேரம் ஓய்வு கொடுத்தான். பின் மீண்டும் செல்பேசியில் யாரையோ அழைத்தான். இவனது மொழி தெரிந்தவர்கள் வேறு எவரும் விமானத்தில் இருக்கமாட்டார் கள் என்ற எண்ணம் போல, சத்தமாகப் பேசி னான். ஆகவே இவன் தீவிரவாத விடயங் கள் பேசமாட்டான் என்ற நம்பிக்கை.

சத்தமாகப் பேசியவன் திடீரென் ‘குசுகுசுக்கத்’ தொடங்கினார். அட இப்ப என்ன பேசுகிறான். பயங்கரவாத விசயமோ! பேசி முடித்துவிட்டான். இப்பொழுது தொலைபேசியின் பின்மூடியைக் காற்றினான். வேறு ஒரு தொலைபேசியை ‘பொக்கட்டில்’ இருந்து எடுத்தான். அதை ஆசனத்தின் முன் இருந்த பைக்குள் வெளியே முன்பக்கம் தெரியக் கூடிய விதமாக வைத் தான். முதலில் அவன் பாவித்த தொலை பேசியிலிருந்த “சிம்” (Sim) காட்டை கழற்- றினார். பின் ஆசனப் பைக்குள் வைத்த தொலைபேசியை எடுத்தவன் அதன் பற்ற- றியை காற்றினான். பின் அதிலிருந்த ‘சிம்’ காட்டையும் களற்றினான். ‘சிம்’ காட்டுகளை தொலைபேசிகளில் மாற்றிவைத்தான். இரு செல்பேசிகளையும் ஒரே நேரத்தில் செயல் படச் செய்தான்.

‘செல்பேசி’ மனிதனின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் கருவியாக மாறிவருகிறது. இப்பொழுது தொலைபேசி மட்டுமல்லாமல் பொழுதுபோக்கு சாதனைக் கருவியாகவும், நிழல்பட, ‘விடியோ’ பட கருவியாகவும் மாறி யுள்ள செல்பேசியை இன்று வங்கியில் பணம் கட்டுவதற்கும், கடைகளில் பொருட்கள் வாங்குவதற்கும் பாவிக்கிறார்கள். “Near Field Communications” என்ற தொகுதியினூடாக (System) இதை சாதிக்கிறார்கள். ஒருவர் செய்ய வேண்டியது ‘செல்பேசியை’ அதன் தகவலை வாசிக்கும் கருவி முன்னால் அசைக்க வேண்டியதுதான். பாவனையாளர் களின் வசதி, சௌகரியம் ஆகியவைதான் இந்த தொழில் நுட்பத்தை அறிமுகம் செய் வதற்கு காரணிகளாக அமையும் எனவும் கூறுகிறார்கள். வினாடிகளில் தொழில்நுட்பம் வளர்ச்சியடையும் வேளையில் அவ்வளர்ச்சி களை அழிவுப் பாதையில் இட்டுச் செல்வ- தற்கும் சிலர் முயன்று வருகிறார்கள்.

இவன் செயலும் அந்த தீயசக்தியின் அங்க மோ என எண்ணினேன். இவனது செயல்க ளை அவதானிக்கும் பொழுது இவன் ஒரு பயங்கரவதிதான் என எண்ணாமல் இருக்க முடியவில்லை.

நான் கண்களை மூடினேன். இந்த தொலை பேசிகளில் விமானத்தை தகர்த்தெறியக் கூடிய வெடி மருந்துகளை வைத்துள்ளான். அந்த வெடிகுண்டு எந்த நேரம் வெடிக்கவேண்டும் என் பதற்கான நேரத்தை இப்பொழுது பதிவு செய்கிறான். விமானம் தரை இறங்கு முன் வெடித்து சிதறப்போகிறது. இது முடிவான விடயம். கடந்த கால வாழ்க்கை மனக் கண்முன் தோன்றியது. மீண்டும் ஒரு பிறவி இருந்தால் இதே வாழ்வு கிடைத்தால் போதும். ஒரு சில திருத்தங்களைச் செய்யலாம். பெரிதாக மாற்றம் தேவையில்லை. பிள்ளை களின் வளர்ச்சிகளைக் கண்டு களிப்புறும் வாய்ப்புத்தான் கிட்டவில்லை. எதிர்காலத்தில் செய்ய நினைத்தவற்றை நிறைவேற்றும் வாய்ப்பும் கிட்டவில்லை. நினைப்பதெல்லாம் நடப்பதில்லை என்பதும் உண்மைதான். ஆனால் நினைத்து ஆசைப்பட்டு விரும்புபவைதான் வாழ்க்கையில் நடைபெறும் என்பது பொய்யா? மனம் புலம்பத் தொடங்கியது. விமானப் வெடிக்கப்போகும் விடயம் எனக்கு மட்டும் தானே தெரியும். பயங்கரவாதிகள் விமானங் களைக் கடத்தும்போது அது பிரயாணிக ளுக்கு தெரியவருகையில் அம்மக்கள்படும் அல்லல் கற்பனையில் தோன்றி, 9.11ல் உயிரிழந்த அப்பாவி மக்களின் கூக்குரல் காதுகளில் கேட்டது. மனைவியோ தூங்கு- கிறாரா அல்லது தூங்குவதைப் போல நடிக் கிறாரா? ஒன்றும் தெரியாத அப்பாவிபோல். ‘Knowledge is power’ அறிவு சக்தி வாய்ந் தது என்பது எல்லா விடயத்திற்கும் பொருந் தாது. இவனுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்து இவன் செயல்களைக் காண்பதாலும் ஒரு ‘தொலைபேசி’ தொழில் நுட்ப வளர்ச்சியை அறிந்திருந்தபடியாலும் தானே இந்தப்பயம். இவன் செயல்களை அறியாத மற்ற பயணி களுக்கு ஒரு வித பயமும் இல்லையே. பயந்தவனுக்கு பலசாவு. நான் துணிந்து விட்டேன். தொலைக்காட்சியில் மீண்டும் கவனத்தைச் செலுத்தினேன் இம்முறை ஹாசிய நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்து கொண்டிருந்தது. அந்த தொலைக் காட்சி நிகழ்ச்சியின் பெயர் ‘Punk’d. இந்த நிகழ்வு மிகவும் பிரபல்யமா- னது. இதை தயாரித்தவர் Master Prankster Ashton Kutcher. இன்று மிகவும் உச்சத்தி- லுள்ள நட்சத்திர நடிகர் நடிகைகளை ஏமாற்றி அவர்களை தரைதட்டச் செய்து கேலி செய் வது இந்த தொலைக்காட்சி நிகழ்வின் நோக் கம். 2003ம் ஆண்டிலிருந்து எந்த பெரிய நட்சத்திரமாயிருந்தாலும் இந்த கேலியிலிருந்து தப்ப முடியாது என்ற ஒரு நிலை. ‘டேவிட் பெக்கம்’ தொடக்கம் பலர் இந்த கேலிக்கு ஆளாகியுள்ளார்கள். இதைத் தொடர்ந்து ‘Candid Camera’ (மறைத்துவைக்கப்பட்டுள்ள கமரா நிகழ்வு) நடைபெற்றது. இந்த காட்சி களைப் பார்த்து குலுங்க குலுங்க சிரிக்க வேண்டும். நானும் இதுதான் தருரணம் என இவனது கவனத்தை ஈர்ப்பதற்காக விழுந்து விழுந்து சிரித்தேன். சத்தமாக சிரித்தேன். அவன் வியப்புடன் என்னைப் பார்த்தான். நான் தொலைக்காட்சிப் பொட்டியை காட்டினேன். அவனும் தன்னை மறந்து காட்சிகளைப் பார்த்தான். குலூங்கி குலிங்கி சிரித்தான். இந்த கல்நெஞ்சனுக்கும் ஹாசிய உணர்வு இருக்கிறது. ஒன்றுக்கும் மசியாதவன் ஹாசி- யத்திற்கு மயங்கிவிட்டான். நாங்கள் சிரித்துக் கொண்டிருக்கும் பொழுது பணிப்பெண் எங்கள் ஆசனங்களை நேர் செய்தாள். ‘பெல்ற்’ அணிந்திருப்பதை உறுதி செய்தாள். விமானம் தரை இறங்கப் போகிறது. சிரித்தவன் திடீ- ரென நிறுத்தி விட்டு தன் கவனத்தை தொலைபேசியில் செலுத்தினான். தொலைக் காட்சி நிகழ்வுகளும் முடிவடைந்தன. விமானம் தரைதட்டும் பொழுதும் இவன் யாருடனோ செல்பேசியில் உரையாடிக் கொண்டிருந்தான்.

விமானம் தரை இறங்கியதும் ஒரு பெருமூச்சு விட்டேன். ஆகாயத்தில் விமானம் வெடிக்க வில்லை. தரையில் வெடிக்கு முன் விமானத் தை விட்டு இறங்கி பாதுகாப்பான இடத்திற்கு ஓடி தப்பிவிடவேண்டும் என்பது மட்டும் மனதி லிருந்தது. ஆசனத்திலிருந்து முதலில் அவன் எழுந்தான். தலைமேலிருந்த Compartment ஐ திறந்தான். எங்களது பைகள் அவனது பைக்கு முன்னால் இருந்தன. முதலில் எங்கள் பைகளை எடுத்தான். அவற்றை பேசாமல் எங்களிடம் கொடுத்திருக்கலாம். அல்லது அவன் என்னுடன் கோவித்து பேசிய கரடுமுரடான மொழியில் பேசியிருக்கலாம். ஆனால் அவன், Are these your bags? என சுத்த ஆங்கிலத்தில் கேட்டான். பதில் கூறுவதற்கு எனக்கு ஆங்- கிலம் மறந்துபோனது. ‘Have a nice trip’ என்று கூறிவிட்டு எனது பதிவை எதிர்பார்க் காமல் நடந்து சென்றுவிட்டான்.

manuel.jesudasan@thaiveedu.com


■ ■ ■

# தற்கொலைச் சுதந்திரம்



ச.வே. பஞ்சாட்சரம்

அந்தப் பசும்புல் வளவினுள் சினைத்த மறி களும், குட்டிபோட்ட மறிகளும் ஒரு கூட்ட மாக மேய்ந்து கொண்டு நின்றன. வளவின் மறுமுனையில் கடாக்களும், மலட்டு மறிக- ளுமாகப் பத்து ஆடுகளின் குழு ஒன்று தாழ்ந்த குரலில் எசமானனைத் திட்டியவண் ணம் மேய்ந்து நின்றன. வளவின் வேலியோர நிழலில் காவலுக்குக் குந்தியிருந்த எசமா னன் சொந்தமாக ஆட்டுப் பட்டி அடைப் பதன் மூலம், தன் வயலுக்கு எருவிட்டு வருபவன். தன் பட்டி மறிகள் ஈன்ற ஆறு கடாக் குட்டிகளை, அவை இறைசிக்காகக் கொல்லப் பட்டுவிடும் என்றஞ்சி, விற்காமல் வைத்திருப்பவன். அவை போன்று, கொலை தடுக்கவே, மலடாகிவிட்ட தனது நான்கு மறி



களையும் வைத்துப் பராமரிப்பவன். ஆனால் அந்தக் கடாக்களும், மறிகளும் தங்கள் சுதந்திரத்தைப் பறித்த பாவியாகவே அவ- னைத் திட்டுகின்றன. “பிண்ணாக்கை, தவிட் டை, கஞ்சியை ஒரு நாளேனும் தந்தானா?” என்று கடாக்கள் குமுறும். “வயல்களில் செழிக்கும் பயிர்களை வயிறார மேய்ந்து மகிழ விடவில்லை.” என்று ஆடுகள் அவனைத் திட்டும்.

இவற்றையெல்லாம் புரிந்துகொள்ளாத அந்த ஈரநெஞ்சு எசமானனைத் தேடி, அவனது மூதாட்டித் தாய் ஓடிவந்து, அவனது மனைவி பிரசவ வேதனை தீவிரமாகக் கிளம்பித் துடிப்பதாகவும், அவளை மருத்துவமனைக்கு உடனே கொண்டு செல்லும்படியும் கூறக் கேட்டு, அவன் எழுந்து பதைத்தோடினான். அந்த எசமானனின் இரக்க நெஞ்சைப் புரிந்து நடக்கும் சினைத்த மறிகளும், குட்டிபோட்ட மறிகளும் அடங்கிய குழு, அந்த எசமான- னைப் பின்தொடர்ந்து அவன் வீடு போய்ச் சேர்ந்தது. கட்டுக் காவலற்ற இந்தச் சுதந் திரத்தைப் பயன்படுத் தத் துடித்தன, கடாக் களும் மலடுகளும். மலடுகள் அயலில் இருந்த வயலுக்குள் இறங்கிச் சாமை இளம் பயிரைச் சிலவும், பய ற்றம் பயிரை, மிள- காய்ச்செடிகளைச் சிலவுமாக மேயத் தொடங்கின. சற்று நேரத்தில் வயற்காரர் களால் கலைத்தெறி ந்து கால்கள் முறிக் கப்பட்டுக் குற்றுயி ராய்ப் போடப்பட்டன. இரண்டு கடாக்கள் வேலிப்பொட்டு ஊ டாக அடுத்த வளவில் புகுந்து, வீட்டுக்கா- ரர்களால் எங்கோ கடத்தப்பட்டு, இறைச்சிக் குடலைகள் ஆயின. மிகுதி நான்கு கடாக் களும் எசமானனின் பிடியிலிருந்து நிரந்தர மாகத் தப்பிக் கொள்வதற்காக, நெடுஞ்சா- லை ஓரமாக அவன் வீட்டுக்கு எதிர்த்திசை யில் ஓடலாயின. தற்செயலாக அந்த வீதியில் வெள்ளை வாகனத்தில் வந்த இளைஞர்கள் அவற்றைக் கலைத்துச் சுட்டுவீழ்த்தி, எடுத்து வாகனத்தில் போட்டு, ஓடி மறைந்தனர்.

manuel.jesudasan@thaiveedu.com

■ ■ ■



## கடந்த மாதத்தில்... நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...




ஜூலை 23, 2011 - **Queens Park**இல் கறுபபு ஜூலை நினைவு நிகழ்வு





ஜூலை 09, 2011 - **Neilson** பூங்கா - முரசுமோட்டை - கண்டாவளை மக்கள் ஒன்றியத்தின் கோடைகால ஒன்றுகூடல்
படம்: கண்ணன்



ஜூலை 01, 2011 - கலைமகள் குறுநாவல் போட்டியில் விருது பெற்ற குரு அரவிந்தனுக்கு பாராட்டு விழா.




**Toronto Real Estate Board**இல் நடைபெற்ற 'தொழில் தர்ம கௌரவ விருது' விழா




ஜூலை 2, 2011 - **Roselord Park** இல் நடைபெற்ற பருத்தித்துறை மக்கள் ஒன்றியத்தின் ஒன்றுகூடல் - படம்: கணா ஆறுமுகம்

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள், புகைப்படம் எடுத்தவரின் பெயர் மற்றும் உங்கள் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.



ஜூலை 16, 2011 - **Tha Rose Theatre**இல் நடைபெற்ற, நடன ஆசிரியை நிரஞ்சனா சந்ருவின் மாணவி நிருஷிகா யசோகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம்



ஒன்ராறியோ மாகாணச் சட்டமன்றத் தேர்தலில் கன்சவேட்டிவ் கட்சி சார்பில் போட்டியிடும் சான் தயாபரனின் தேர்தலுக்கான நிதி சேகரிப்பு நிகழ்வு



ஜூலை 15, 2011 - **Scarborough Civic center**இல் நடைபெற்ற
'சில்லு' கனடியத் தமிழ்த் திரைப்பட அறிமுக நிகழ்வு - படம்: கங்கா



ஜூலை 10, 2011இல் நடைபெற்ற **Seelan Rangers** உதைபந்தாட்ட
போட்டியில் **Cheetahs Soccer Club** விளையாட்டு வீரர்கள்



ஜூலை **17, 2011 Agincourt Community RC**இல் நடைபெற்ற அரியாலையூர் உருத்திரேஸ்வரன் அவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்வு

உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் முற்கூட்டியே பதிவதற்கும் பார்ப்பதற்கும்

**www.inayam.net**



ஜூலை 09,10, 2011 - **Markham Fair Grounds**இல் சீ.ரீ.ஆர் (கனேடிய தமிழ் வானொலி) நட்சத்திர விழா - படம்: கணா ஆறுமுகம்



ஜூலை 23, 2011 - **Yorkwood Library Theatre**இல் சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் நடத்திய சுவாமி விபுலாநந்த அடிகளின் நினைவு விழா



ஜூலை 22, 2011 - **Scarborough Civic center**இல் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், கரவை மக்கள் ஒன்றியம், வல்வெட்டித்துறை மக்கள் நலன்புரிச்சங்கம் நடத்திய பேராசிரியர் சிவத்தம்பியின் நினைவஞ்சலிக்கூட்டம்.



கனடிய தமிழர் பேரவை நடத்திய குருதிக்கொடை
படம்: கணா ஆறுமுகம்



ஜூலை 30, 2011 **Morningside Park**இல் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம்-கனடா நடத்திய கோடைகால ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்.

## The Cageஐ முன்வைத்து

# ஈழப் போர்
# எனது வாசிப்புகளூடான ஒரு பார்வை

ஈழத்தில் நடந்தேறிய போரின் இறுதிக் கட்டத்தில் பாரிய அளவில் போர்க் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதற்கான ஆதாரங்கள் பரவலாக வெளிவந்துகொண்டிருக்கின்ற காலப்பகுதியில் வந்திருக்கின்ற மிக முக்கிய ஆவணங்களில் ஒன்று கோடன் வைஸ் (Gordon Weiss) எழுதி வெளிவந்திருக்கின்ற The Cage: The Fight For Srilanka and The Last Days of Tamil Tigers என்கிற நூலாகும். அவுஸ்திரேலியாவில் பிறந்த கோடன் வைஸ் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஊடகவியலாளராகச் செயலாற்றுவதுடன் கடந்த பன்னிரண்டு வருடங்களாக ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றுவதுடன் 2007 முதல் 2009ன் இறுதிவரை ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இலங்கையில் பணியாற்றியவர். இறுதிப் போர் கருக்கொண்டு பாரிய அழிவுகளுடன் நடந்தேறிய இந்தக் காலப் பகுதியில் இலங்கையில் பணியாற்றிவர் என்பதுடன், செய்மதிகளின் துணையுடன் பெறப் பட்ட புகைப்படங்கள் மற்றும் இதர தரப்புகளில் இருந்து பெறப்பட்ட ஆதாரங்களைத் திரட்டி மிகப் பெரிய மனிதப் படுகொலைகள் போரின் இறுதிக்கட்டங்களில் நடந்தேறின என்பதற்கு வலுச் சேர்த்தவர். சனல் 4 தொலைக்காட்சிக்கு இவர் வழங்கியிருந்த நேர்காணல் ஒன்றும் முக்கியமானது. இந்த நேர்காணலில் Srilanka war crime is Srebrenica moment என்று அந்த நேர்காணலில் குறிப்பிடுகிறார். (இணைப்பிற்கு http://goo.gl/qDBEP)

இவ்வாறான செயற்பாடுகளூடாக இலங்கை அரசாலும், அரசதரப்பு ஆதரவாளர்களாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்தவர். இலங்கையில் பணியாற்றிய காலத்தில் தான் தொகுத்த தரவுகளுடன் தனது தொடர்ச்சியான உழைப்பினூடாக இலங்கையில் முரண்பாடுகள் எழுந்த வரலாற்றையும் அதன் ஆரம்ப காலம்தொட்டு தொகுத்து இந்த நூலில் ஆவணப்படுத்தி உள்ளார். தமிழ்த் தேசியத்தை ஓயாது பேசிக் கொண்டிருந்தவர்கள் செய்திருக்கவேண்டிய ஆனால் பலர் செய்யத் தவறிய இந்தக் காரியத்தைச் செய்திருக்கும் கோடன் வைஸின் இந்தப் புத்தகம் நிச்சயமாகப் படிக்கவேண்டிய ஒன்று.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் போர்முனையில் சடலமாகக் கைப்பற்றப்பட்டதாக புத்தகத்தின் முதலாம் அத்தியாயம் The Lions Victory ஆரம்பமாகின்றது. (அண்மையில் றொரன்ரோவில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடல் ஒன்றில் சேரன் கிடைக்கின்ற தரவுகளின் அடிப்படையில், பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொன்னதற்கே அதற்கு என்ன ஆதாரம் என்று அவருடன் வாதிட்டவர்கள் இருக்கின்றார்கள். மிகத் தீவிரமான ஆதரவாளர்களாக இருந்தவர்கள் பலர் இன்னமும் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்பதை நம்பிக் கொண்டே இருக்கின்றனர். அவர்களால் பிரபாகரன் இறந்துவிட்டார் என்று தொடங்கும் இந்த நூலை ஏற்றுக் கொள்வது கூட சிரமமாக இருக்கலாம். ஆனால் குறைந்த பட்சம் அவர் இன்னமும் இருக்கின்றார் விரைவில் மீண்டும் வருவார் என்றே நம்பிக்கொண்டிருக்கும்போது அப்படி நடவாது போகும் இடத்து விடுதலைப் போராட்டம் மிக முக்கிய கால கட்டம் ஒன்றில் தேக்கமடைந்தே போய்விடும் என்றாவது புரிந்துகொள்ளவேண்டும்.)

'சிறீலங்காவில் தனது சொந்த மொழியைப் பயன்படுத்துவது உட்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழர்கள் புலிகள் கட்டுப்பாட்டின் கீழ் சுதந்திரத்தை மெல்ல நுகர ஆரம்பித்தார்கள். இலங்கையின் மூன்றில் ஒரு பங்கு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழே பத்தாண்டுகளாக இருந்தது. ஒரு நிழல் அரசாங்கத்தையே தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடத்திய புலிகள் இக்காலப்பகுதியில் நீதிமன்றங்கள், ஊராட்சி மன்ற நிர்வாகம், சுங்கம், வரி வசூலிப்பு, காவல்துறை, வங்கிகள், தொலைக்காட்சி, வானொலி போன்ற சேவைகளைக் கொண்டு நடத்தினார்கள். கிழக்கு திமோர், கொசாவா போல தாமும் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்படுவோம் என்ற நம்பிக்கை அங்கே மலிந்திருந்தது' என்று கூறும் கோடன் வைஸ் போரின் முடிவு பெரும்பான்மையான இலங்கையருக்கு அமைதியைக் கொண்டுவந்தாலும் அரசால் ஒடுக்குமுறைக்குள்ளாகி, அடையாளம் மறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட லட்சக்கணக்கானவர்கள் புலிகளையே தமக்காகப் போராடும் சக்தியாகவே பார்த்தனர் என்று குறிப்பிடுகிறார். இதை வாசித்தபோது 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்' என்ற புத்தகத்தில் சி.அ. யோதிலிங்கம் குறிப்பிட்டிருந்த கருத்தொன்று ஞாபகம் வந்தது. 'குறிப்பாக யுத்தத்தில் ஈடுபட்ட இரு சமூகங்களையும் பொறுத்தவரை சிங்கள சமூகத்திற்கு யுத்தமில்லா நிலை மட்டும் சமாதானமாக இருந்தது. ஆனால் தமிழ் சமூகத்திற்கோ யுத்தமில்லா நிலை, இயல்புநிலையைக் கொண்டுவருதல் நிரந்தரத் தீர்வு என்பவைதான் சமாதானமாக இருந்தது'. பக்கம் 18. http://noolaham.net/project/33/3219/3219.pdf"

அது போலவே அரசியல் தீர்வுக்கான எந்த சமிக்ஞையும் இன்றுவரைக் காட்டப்படவில்லை. அண்மைக்காலமாக ஈழப்போராட்டம் பற்றிய புத்தகங்களையும், வரலாற்றையும், இலங்கையின் இனமுரண்களின் வரலாறு பற்றியும் விரிவாகவும் முடிந்தவரை ஆழமாகவும் வாசிக்கவேண்டியதன் அவசியத்தைத் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றேன். ஈழப் போர் பற்றிய இந்தப் புத்தத்தில் கோடன் வைஸ்® அதன்படியே இரண்டாவது அத்தியாயத்தில் பிரம்மஞான சபையைச் சேர்ந்த ஹென்றி ஒல்கொட் (Henry Olcott) 1874ல் இலங்கைக்கு வருகைதருவதைத் தொடர்ந்து இலங்கையில் உருவாகும் பௌத்த மறு மலர்ச்சியில் இருந்து இனமுரணுக்கான விதை தூவப்படுவதைக் குறிப்பிடுகின்றார். தனது பதினாறாவது வயதில் ஹென்றி ஒல்கொட்டைச் சந்திக்கும் டொன் டேவிட் ஹெவவிதர்ன என்கிற சிறுவன் பௌத்த மதத்தைத் தழுவி அநாகரிக தர்மபாலா என்று தனது பெயரையும் மாற்றிக் கொள்கிறான். இங்கே முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது என்னவென்றால், ஹென்றி ஒல்கொட், ஹெலினா ப்ளாவட்ஸ்கி (Helena Blavatsky), வில்லியம் க்வான் ஜட்ஜ் (William Quan Judge) மூவரும் இணைந்து தாபித்த பிரம்மஞான சபை உலகளாவிய சகோதரத்துவத்தையும், மனிதநேயத்தையும் வளர்ப்பதையும், பல்வேறு மதங்களையும், தத்துவங்களையும் பற்றிய கற்கைகளைச் செய்வதையும் தன் நோக்காக கொண்டிருந்தபோதும், அவற்றால் உள்வாங்கப்பட்டு பௌத்தத்தைத் தழுவிக்கொண்ட அநாகரிக தர்மபாலா பின்னர் உலகளாவிய சகோதரத்துவத்தைப் போதித்த பிரம்மஞான சபைக்கு முரணாக இலங்கையில் வாழ்ந்த இன்னொரு இனத்தரான தமிழர்கள் மீதான வெறுப்பைக் கட்டியெழுப்பினார். சிங்களமும் பௌத்தமும் பிரிக்கமுடியாதவை என்றும் இலங்கை மண் சிங்களவர்களுடன் ரத்தத்தில் ஒன்றாகக் கலந்தது என்றும் தமிழர்கள் சிங்களவர்களின் நிலையான எதிரிகள் என்கிற வாதங்களை அநாகரிக தர்மபால முன்வைத்தார் என்று இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகின்றது. கிறிஸ்தவர்கள் மீதும் இந்துக்கள் மீதும் கடுமையான வெறுப்பைக் காட்டிய அநாகரிக தர்மபால, அதே நேரம் சிங்களவர்கள் மீது, அவர்கள் மத்தியில் இருந்த பழக்கவழக்கங்களை கடுமையாகச் சாடி அவர்களுக்கான சீர்திருத்தங்களையும் மேற்கொள்ளுகிறார். அநாகரிக தர்மபால காலத்தில் விதைக்கப்பட்ட விஷம் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், புத்தர் இறந்தும் விஜயன் இலங்கைக்கு வந்தும் 2500 ஆண்டுகள் நிறைவடைந்த 1956ல் தனிச்சிங்களச் சட்டம் வரை வளர்ச்சியடைந்தது. இந்த முரண்கள் எவ்வாறு உருவாகி எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்று கூறும் முக்கிய நூல் குமாரி ஜெயவர்த்தனாவின் 'இலங்கையின் இன வர்க்க முரண்பாடுகள்'. (நூலகத்தில் வாசிப்பதற்கு ttp://noolaham.net/project/14/1306/1306.pdf)

இன முரண்களில் முக்கியபுள்ளிகளில் ஒன்றாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பண்டார நாயக்க பிரிந்துசென்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியை 1951ல் அமைப்பது இடம்பெறுகின்றது. இதன் பின்னர் இலங்கையில் முதல் இரண்டு பிரதான கட்சிகளுமே சிங்களக் கட்சிகளாக மாறுகின்றன. இலங்கை சுதந்திரமடைந்த போது ஆசியாவில் பொருளாதார ரீதியிலும், மத்திய வங்கியில் இருந்த நிதிக் கையிருப்பின் அடிப்படையிலும் ஆசியாவிலேயே முக்கிய நாடுகளில் ஒன்றாக இருந்த இலங்கை 70களில் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டது. தவிர, 1948ற்கும் 1970க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் சனத்தொகை ஏறக்குறைய இரட்டிப்பாகி இருந்தது. இதனால் இலங்கை சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் 35 வயதிற்குக் குறைந்தவர்களாக வேரு இருந்தனர். இலங்கையில் வழக்கத்தில் இருந்த இலவசக் கல்வி உட்பட்ட சமூக நலத் திட்டங்கள் காரணமாக இவர்களில் பெரும்பாலானோர் நன்கு படித்திருந்தனர். சனத்தொகை வளர்ந்த அதே வேகத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் இல்லை. இதனால் படித்த இளைஞர்கள் மத்தியில் வேலையில்லாப் பிரச்சினையும் விரக்தியும் உருவானது. 70களின் மத்தியில் 25% ஆனவர்கள் வேலையின்மையால் வாடினர். அதே நேரத்தில் 1965ல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற புதிய இடதுசாரிகளை உருவாக்கிய ரோஹன விஜேவீராவின் தலைமையில் 1971ல் சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியும் நடக்கின்றது. இலங்கை அரசால் கொடூரமான முறையில் அடக்கப்பட்ட இந்தக் கிளர்ச்சி 15,000 இளைஞர்கள் கொல்லப்படுவதுடன்




தோல்வியில் முடிகின்றது.

ஒரு மார்க்ஸிய லெனினிய இயக்கம் என்று ஜேவிபி அழைத்துக்கொண்டபோதும் மிகக் குறுகிய காலத்திலேயே அவர்களும் சிங்களப் பேரினவாத இயல்புகளுடனேயே செயற்பட ஆரம்பித்தனர். இந்த நிலையில் இன்று ஜேவிபியையும், ரோஹன விஜேவீராவையும் புரட்சிகர சக்திகளாக சிலர் முன்மொழிவதையும் அவதானிக்கவேண்டும். இவர்கள் புரட்சியாளர் என்று சொல்லும் ரோகண விஜேவீராவும், ஜேவிபியினரும் எவ்வளவு பிற்போக்குத்தனமாக, பிற இனத்தவர்கள் மீது வெறுப்பைத் தூண்டிக்கின்றது போல நடந்து கொண்டுள்ளனர் என்பதையும் கவனிக்க வேண்டியது அவசியமாகின்றது. இது பற்றி விரிவாக அறிய குமாரி ஜெய வர்த்தன எழுதிய இலங்கையின் இனவர்க்க முரண்கள் என்ற புத்தகத்தில் ஆகக் குறைந்தது 134 - 137 பக்கங்களையோ அல்லது 8வது அத்தியாயத்தையோ (மார்க்ஸிசத்திலிருந்து மேலாதிக்க வெறியை நோக்கி) வாசிக்கவும். http://noolaham.net/project/14/1306/1306.pdf

இதற்குப் பிறகு அதன் கிளர்ச்சியும் தோல்வியடைந்த பின்னர் சுயவிமர்சனம் என்ற பெயரில் ஜேவிபி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது. இக்கட்டத்தில் தமிழர் ஒரு தேசிய இனம், பெரும்பான்மையினரால் அவர்கள் ஒடுக்குதலுக்குள்ளாக்கப்படுகின்றனர், அவர்கள் பிரிந்துசெல்லும் எல்லை வரையிலான சுய நிர்ணய உரிமை உடையவர்கள் என்று ஜேவிபியினர் ஏற்றுக்கொண்டனர். இக்கட்சி பிரிவினையை ஆதரிக்கவில்லை. இலங்கை என்ற அமைப்புக்குள்ளேயே தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சனைகள் தீர்க்கப்படலாம் என்று நம்பியது. இந்த நிலைப்பாட்டில் பல தத்துவார்த்த, நடைமுறைக் குறைபாடுகள் இருந்தன. எனினும் இலங்கைத் தோட்டப்ப குதித் தமிழர் மத்தியில் ஜேவிபியினர் வேலை செய்ய இது வழிவகுத்தது. இதனால் ஜேவிபி இல் தமிழர்களும் இணைந்தனர். மாநகரச பைத் தேர்தல், மாவட்ட சபைத் தேர்தலில் ஜேவிபி சார்பில் தமிழர்களும் போட்டியிட்டனர். (இலங்கையின் இன வர்க்க முரண்கள் பக்:140)

இதே சமயம் ஜேவிபியினரின் இந்த தமிழர் மீதான ஆதரவு நிலைப்பாட்டுக்கு அதே இயக்கத்தின் பொதுச் செயலாளரான லயனல் போபகேயின் செல்வாக்கு அதிகம் தாக்கம் செலுத்தி இருக்கின்றது. 2010 மேயில் கோடன் வைஸ்®சனுடனான சந்திப்பொன்றில் லயனல் போபகே கூறுகின்றார்,"எனக்குப் பதினான்கு வயதாக இருக்கின்றபோது நடைபெற்ற 1956 கலவரத்தின்போது ஒரு தமிழ்ச்சிறுவன் பாதுகாப்பிற்காக எம்மிடம் ஓடிவந்தான். அந்தச்

> **" ஒரு மார்க்ஸிய லெனினிய இயக்கம் என்று ஜேவிபி அழைத்துக்கொண்டபோதும் மிகக் குறுகிய காலத்திலேயே அவர்களும் சிங்களப் பேரினவாத இயல்புகளுடனேயே செயற்பட ஆரம்பித்தனர். இந்நிலையில் இன்றும் ஜேவிபியையும், ரோஹன விஜேவீராவையும் புரட்சிகர சக்திகளாக சிலர் முன்மொழிவதையும் அவதானிக்கவேண்டும். "**

தொடர்தல் 78ம் பக்கம்

# All Your Insurance Needs.....

**UNIVERSAL LIFE INSURANCE**
ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட் காப்புறுதி.
10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்

**MORTGAGE INSURANCE**
அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது.

**CRITICAL ILLNESS INSURANCE**
25 விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

**RESP**
குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம் 20 - 40 வீதமான அரச மானியத்துடன் 15 வீத போனஸ்

**வயோதிபர்களுக்கான காப்புறுதி**
- மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை.
- உடனடியாக காப்புறுதித்திட்டம் அமுலாகும்.
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்.
- ஆயுட்காலம்வரை மாதாந்த கட்டணத்தில் மாற்றமில்லை.



**Protect your family with an affordable life insurance policy....**

**Vasanth Vinayagamoorthy**
Insurance Adviser
**Cell: 647-885-3012**
Office: 416-494-4777
Fax: 416-613-2739
www.vvinsurance.ca

Desjardins Financial Security · Assumption Life · IA Industrial Alliance Insurance and Financial Services Inc.

*"Excellent Rates with Quality Services"*

## Build The Life You've Always Dreamed Of... You Can Start By Choosing the Right BROKER

**LOW Interest Rates Starting at 2.20%**


- Bad/Good Credit
- Self Employed
- Unemployed

Win Up To $100,000* When you minimize your mortgage


MORTGAGE ALLIANCE

Refinances | Debt Consolidation | Home Renovations
Purchases | Renewals | Self-Employed | New Immigrants

* win the value of your mortgage up to $100,000. See complete contest rules for details at www.rightmortgage.ca/minimizeyourmortgage
Corporate Office: Suite 200, 2005 Sheppard Ave. E., Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487 License #10530



Lokan Sundaram
Mortgage Broker
Lic #: M08000182
416-450-3984
lsundaram@trebnet.com



Kathir Kandiah
Mortgage Broker
Lic #: M08009958
416-230-6462
kkathir@trebnet.com

சிறுவன்தான் எமது கடைக்கு வெற்றிலை விநியோகம் செய்பவன். அவனைக் கொலை வெறியுடன் துரத்தி வந்த கூட்டத்தினரிடம் இருந்து எனது தந்தை காப்பாற்றினார். அதன் பிறகு எனக்கு ராகுல கல்லூரியில் இரசாயணவியல் கற்பித்து வந்த தமிழாசிரியர் ஒருவர் 1958 கலவரத்தின்போது காணாமற் போனார். பின்னர் 60களின் தொடக்கத்தில் நான் றிச்மண்ட் கல்லூரியில் கல்வி கற்ற போது எனக்கு இரசாயணவியல் கற்பித்த ஆசிரியரும் இவ்வாறே காணாமற்போனார். பாடத்திட்டங்களில் எனக்குக் கற்பிக்கப்பட்ட துட்டகைமுனு எல்லாளன் கதைகள் எல்லாம் இன்றைய சமூகத்தின் தேவை பற்றி சிந்தியாதவையாகவே இருந்தன. இவற்றின் தொடர்ச்சியாக தமிழர்களுக்கு எதிரான ஒவ்வொரு வன்முறையும் சரியாகத் திட்டமிடப்பட்டு, அமைப்புமயமாக்கப்பட்ட தாக்குதல்களே"

ஆனால் 82ன் பின்னர் ஜேவிபியினரின் நிலை மீண்டும் மாறத் தொடங்கியது. இவ்வாண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ரோஹண விஜேவீராவுக்கு வெறும் 273,428 ஓட்டுக்களே (4.19%) கிடைக்கின்றன. இந்தத் தோல்விக்குக் காரணம் தான் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை ஆதரித்ததே என்ற முடிவுக்கு வந்த ரோஹண விஜேவீரா இலங்கை மக்களுக்கு ஒரு செய்தி என்ற பெயரில் அளித்த அறிக்கை ஒன்றில் குறிப்பிடுகிறார், "ஜேவிபியும் நானும் நாட்டைப் பிரிப்பதற்கான எந்த ஏகாதிபத்திய முயற்சிகளையும் முழுமையாக எதிர்க்கின்றோம். நான் உயிருடன் இருக்கும் வரை, ஜேவிபி இருக்கும் வரை நாட்டைப் பிரிக்க எந்த ஏகாதிபத்தியச் சக்தியையும் அனுமதியோம்." *(இலங்கையின் இன வர்க்க முரண்கள் பக்:141)*

இதுபோலவே இடதுசாரிகளாலும் இனமுரண்களில் நியாயபூர்வமாக நடந்துகொள்ள முடியவில்லை. ஏமாற்றங்களின் உச்சமாக 1972 யாப்பு அலுவல்கள் அமைச்சராக இருந்த லங்கா சம சமாஜக் கட்சித் தலைவர் கொல்வின் ஆர் டி சில்வா எழுதிய யாப்பு அமைந்தது. லங்கா சம சமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை பங்களித்த சிறிமா அரசால் 1972ன் அரசியல் யாப்பு சிறுபான்மையினரின் உரிமைகளை ஒழித்துக் கட்டியதுடன் அரச கரும மொழியாக சிங்களமே இருக்கும் என்பதுவும் அறுதியிடப்பட்டது. அது மாத்திரமல்லாமல் யாப்பின் 6ம் பிரிவு பௌத்தத்துக்கு இலங்கை முதன்மையான இடம் கொடுக்கவேண்டுமெனவும் ஏனைய மதங்களுக்கு உரிமைகளைத் தரும் அதே சமயம் பௌத்தத்தை போஷிப்பதும் பாதுகாப்பதும் அரசின் கடமை என்றும் கூறுகின்றது. இதற்குப் பிற்பட்ட காலங்களில் இடதுசாரிக் கட்சிகள் தமது நிலைப்பாட்டை மாற்றி இலங்கை மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என்று குரல் கொடுத்தாலும், 1972 யாப்பில் பௌத்தமதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவும், அதன் பின்னர் அதுவே 1978 யாப்பிலும் தொடரவும் வழி அமைத்தவர் கொல்வின் ஆர் டி சில்வாவே. சிறுபான்மையினருக்கு ஆதரவாக இருக்கவேண்டிய இடதுசாரிகள், சிறுபான்மையினருக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளைக் குழி தோண்டிப் புதைக்க துணைபோயினர். இது போன்ற காரணிகளால் தமிழர்களுக்கும், 70களின் பின்னர் சிங்கள இடதுசாரித் தலைவர்கள் மீதும் நம்பிக்கை இல்லாமல் போனது.

The Cageல் 19ம் நூற்றாண்டில் இருந்து இலங்கையில் இன முரண்கள் தோன்றி வளர்ந்ததைச் சொல்லத் தொடங்கும் கோடன் வைஸ் நூலின் இரண்டாம், மூன்றாம் அத்தியாயங்களுக்கு Paradise Found, Paradise Lost என்று பொருத்தமாகவே பெயரிடுகின்றார். Paradise Found என்கிற இந்த அத்தியாயத்தில் இனமுரண்களுக்கு தூபமிட்ட 72, 78 யாப்புகள், முதலில் மொழிரீதியாகவும் (1973), பின்னர் மாவட்ட ரீதியாகவும் (1974) கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல்கள் (இவற்றின் விளைவாக 1969ல் பொதுப் போட்டிப் பரீட்சை மூலமாக பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான தமிழ் மாணவர்கள் 27.5% ஆக இருந்து 1974ல் மாவட்டவாரி தரப்படுத்தலின் போது 7% ஆகக் குறைந்தது), 1983ல் நடைபெற்ற தமிழர்களுக்கு எதிரான கலவரம், அதன் பின்னர் தொடரும் இந்தியத் தலையீடுகள், 1987ல் ராஜீவ் ஜெயவர்த்தன இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டமை, தொடரும் இந்தியத் தலையீடுகளை முன்வைத்து மீண்டும் தீவிரமாகும் ஜேவிபி எழுச்சி என்பன விபரிக்கப்படுகின்றன.

கோடன் வைஸின் இந்தப் புத்தகத்தில் தொடர்ந்து இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக இந்தியா தொடர்ச்சியாகச் செய்த குளறுபடிகளையும், துரோகங்களையும் எந்த இடத்திலும் குறிப்பிடாமல் கடந்து செல்வது அவதானிக்கக் கூடிய குறையாகும். இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிடும்போது எந்த இடத்திலும் அந்த ஒப்பந்தம் எவ்வாறு புலிகள் மீது திணிக்கப்பட்டது என்பது பற்றிய எந்தக் குறிப்பும் இந்தப் புத்தகத்தில் இல்லை. அதே நேரம் வைஸர் குறிப்பிடுவதைப் போலவே பெரும்பான்மைத் தமிழர்கள் இந்தியாவின் வருகையை மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டதையும் அதே நேரம் சிங்களவர்கள் மத்தியில் அது வெறுப்பைத் தூண்டியதும் ஒப்புக்கொள்ளவேண்டியதே.

இந்த ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்து ரோகண விஜேவீரா பிரச்சாரம் செய்கிறார். நாடெங்கும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து ஜேவிபியினர் முன்னெடுத்த கலவரங்களில் நாற்பது பேர் வரை கொல்லப்படுகின்றனர். இதைத்தொடர்ந்து அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பிரதமர் பிரேமதாசவும் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் ஜேவிபியினர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து தான் தென் பகுதிகளில் ஜேவிபியின் மீதான கடுமையான ஒடுக்குதல் நடைபெறுகின்றது. ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் அரசாங்கத்தால் கொல்லப்படுகின்றனர். இவ்வாறு இறந்தவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்துக்கும் மேலானதாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகின்றது. இந்த மனித உரிமைமீறல்கள் பற்றி பெரிதாக பேசப்படவில்லை என்பதே உண்மை. இதே காலப்பகுதியில் சர்வதேச ஊடகங்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் ரஷ்யா வெளியேற்றம், சோவியத் ரஷ்யா மற்றும் வார்சா ஒப்பந்த நாடுகள் (Eastern Blocs) இடையே ஏற்பட்ட பிரிவுகள், இஸ்ரேலுக்கு எதிரான பாலஸ்தீனியர்களின் எழுச்சி, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் போன்றவற்றில் கவனம் குவிந்திருக்க இலங்கையில் இந்த அழித்தொழிப்புகள் நடந்தேறின. ஜேவிபியினருக்கு எதிரான இந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி, பலதடவைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையினரின் உடனடி தலையீட்டை வேண்டிக் குரல்கொடுத்தவர்தான் இன்று தமிழர்களுக்கு எதிராக பாரிய அளவில் போர்க் குற்றங்களை நிறைவேற்றியும், நிறைவேற்றத் தூண்டுதலாகவும் இருந்த மகிந்த ராஜபக்சே. அன்று மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த மகிந்த ராஜபக்சே, தமிழர்களுக்கெதிரான படுகொலைகளுக்கு கூட்டுச் சேர்ந்தது ஜேவிபிக்கு எதிரான ஒடுக்குதலில் நாட்டின் தென்பகுதியில் மிகத் தீவிரமாக ஈடுபட்ட கோதபாய ராஜபக்சேயுடனும், கம்பகாவில் பெருமளவில் ஜேவிபியினர் என்ற குற்றச்சாற்றில் கைதானவர்கள் கும்பம் கும்பலாகக் கொல்லப்பட்ட ராணுவ முகாமுக்குப் பொறுப்பாளராகவும் இருந்த சரத் பொன்சேகாவுடனும். இலங்கை இனப்பிரச்சனை தொடர்பான முக்கிய சம்பவங்கள் நடந்தேறிய காலப் பகுதி பற்றி விபரிக்கும் இந்த அத்தியாயம் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு மிகப்பெரும் முட்டுக் கட்டையாக அமைந்த ராஜீவ்காந்தி கொலையுடன் நிறைவேறுகின்றது. இந்தச் சம்பவத்திற்கு கோடன் வைஸர் நேரடியாகப் புலிகளையே குற்றஞ் சுமத்துகின்றார். ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வழக்கொன்றினை இத்தனை ஒளிவுமறைவுகளுடன் ஏன் இந்தியா நடத்துகின்றது, யார் யாரைக் காப்பாற்றவேண்டும் என்ற செயல் திட்டத்துடன் இதெல்லாம் நடைபெறுகின்றது என்பதையாவது அவர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திருச்சி வேல்சாமி எழுதிய ராஜீவ் காந்தி கொலைவழக்கு வெளிவராத மர்மங்கள் என்ற புத்தகத்தில் மிக மிக எளிய முறையில் ராஜீவ் கொலை பற்றிய நிறைய சந்தேகங்கள், வழக்கு விசாரணையில் இருந்த ஓட்டைகள் என்பன விபரிக்கப்படுகின்றன. (இங்கே நான் ராஜீவ் கொலை வழக்கிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்ற கூற முன்வரவில்லை. அதே நேரம், இந்த வழக்கு விசாரணை மிகுந்த ஒற்றைத்தன்மையுடனேயேயும், ஒளிவு மறைவுடனுமே நடத்தப்பட்டது என்பதைக் கவனிக்க வேண்டும் என்று கூறுகின்றேன்) தவிர்த்து எல்லா விடயங்களையும் ஆதி முதல் எழுதும் கோடன் வைஸ் இந்திய அமைதிப் படை இலங்கையில் தங்கியிருந்த காலங்களில் செய்த அத்துமீறல்கள், ஆயிரக் கணக்கான கொலைகள், பாலியல் வன்புணர்வுகள் பற்றிப் பேசவேயில்லை என்பதும் கவனிக்க வேண்டியது. இது போல புத்தகத்தின் இன்னுமொரு அத்தியாயத்தில் இலங்கை அரசு புலிகள் மீதான இறுதிப் போருக்கு இந்தியாவிடம் கேட்ட உதவிகளை, அவ்வாறு செய்வது தமிழ் நாட்டின் ஆதரவை இழக்கவைக்கும் என்று இந்திய அரசு அஞ்சியதால் மறுத்தது என்றும், இதனைப் பயன்படுத்தி சீனா இலங்கை அரசிற்கு மேற்படி உதவிகளை நிறைவேற்றி இலங்கையிலும், இந்து சமுத்திரத்திலும் தன் செல்வாக்கை நிலை நாட்டியது என்ற பொருள்படவும் கூறப்படுகின்றது. உண்மையில், எமக்குக் கிடைத்த தரவுகள், நாம் அறிந்த செய்திகள், தகவல்கள் போன்றவற்றின் அடிப்படையில் இறுதி யுத்தத்தில் இந்தியாவின் பங்கு கணிசமாக இருந்திருக்கின்றது என்பதை இலகுவாக அறியமுடியும். தவிர, போர் முடிந்த பின்னர் கோத்தபாய ராஜபக்சே வழங்கிய நேர்காணல்களிலும் இந்தியத் தேர்தல்களின்போது (2009) கனரக ஆயுதங்களைப் பாவிப்பதை தாம் நிறுத்துவதாகக் கூறி இந்திய அரசிற்கு உதவினோம் என்று கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இது போன்ற சார்புகள் இந்தப் புத்தகத்தின் முழுமைத்தன்மையை இல்லாமல் செய்கின்றன என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். அதே நேரம் இந்திய, அமெரிக்க தொலைதூர ராடர் மற்றும் புலனாய்வுத் துறையினரின் உதவியுடன் இலங்கை ராணுவத்தினரால் விடுதலைப் புலிகளின் 8 ஆயுதக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டதையும் அவற்றில் ஒன்று 1700 கடல்மைல்கள் தூரத்தில் தாக்கப்பட்டதையும் குறிப்பிட்டே இருக்கின்றார். இதே தகவலை DBS ஜெயராஜிற்கு வழங்கிய பேட்டி ஒன்றில் கேபியும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

arunmozhivarman@thaiveedu.com

■ ■ ■

> “ அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பிரதமர் பிரேமதாசவும் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் ஜேவிபியினர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து தென் பகுதிகளில் ஜேவிபியின் மீதான கடுமையான ஒடுக்குதல் நடைபெறுகின்றது. ”




ஜூலை 31, 2011 - **Morningside Park** - அச்சுவேலி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - ஒன்றுகூடலும் நிகழ்வு. *படம்: ஜெனன் பாலச்சந்திரன்*

# ROGERS™ இன் முக்கிய அறிவித்தல்

கேபிள் (Cable) இல்லாது அன்ரேனா (Antenna) மூலம் மட்டும்
தொலைக்காட்சி பார்ப்பவர்களுக்கு
ஓர் முக்கிய அறிவித்தல்

## அன்ரேனா மூலமான (CHANNELS) அலைவரிசைகள் சில நாட்களில் நிரந்தரமாக நிறுத்தப்படவுள்ளது




## ROGERS™ தரும் அரிய சந்தர்ப்பம்

## ஆகக் குறைந்த விலையில் DIGITAL BOX உடன் BASIC CABLE

ஒரு வருடத்துக்கு பெற்றுக் கொள்ளலாம்




- ஆகக் குறைந்த விலையுடன் BASIC CABLE ஐ எடுப்பதன் மூலம்
- 12 மாதத்திற்குப் பின்னர் DIGITAL BOX உங்களுக்கு உரிமையாகிறது

### [ இச்சலுகையை பெறத் தகுதியுள்ளவர் யார் ? ]

- அன்ரேனா மூலம் தொலைக்காட்சி பார்ப்பவர்கள்
- தொலைக்காட்சி CABLE இல்லாதவர்கள்
- ROGERS Internet/Telephone மட்டும் வைத்திருப்பவர்கள்

மேலதிக கட்டணத்துடன் தமிழ் (Channels) அலைவரிசைகளையும்
வேண்டுமானால் இணைத்துக் கொள்ளலாம்

தமிழில் தொடர்புகளுக்கு அழையுங்கள்:

*Your* ROGERS *Advisor*

**டானியல் ரவீந்திரன் - Daniel Ravindran**

daniel.ravindran@rci.rogers.com

**416-817-7977**
**1-866-360-7977**


$451.00 Per Month*
Markham/Kingston
Condo Apt, 1 Bedroom, 1 Washroom, Tridel Builder!! Prime Bluffs Area! Convenient Area For Ttc, Shopping, Schools And Commute To Downtown
$470.00 Per Month*
Neilson / Mclevin
Condo Apt, 1 Bedroom, 1 Washroom, Excellent Location! Immaculate! Mayfair Luxury Condo! Ideal For First Time Buyers. Beautiful Panoramic West Exposure
$570.00 Per Month*
Midland/Eglinton
Condo Apt, 3 Bedroom, 2 Washroom, Move In Condition! Very Spacious Condo With 3 Large Bedrooms! 2 Full Washrooms! Lots Of Living Space & Storage Space
$619.00 Per Month*
Warden / Finch
Condo Apt, 2+1 Bedroom, 2 Washroom, spacious unit, Close to shopping and transit
$674.00 Per Month*
Don Mills / Eglinton
Condo Apt, 2 Bedroom, 1 Washroom, 2-Bedroom Spacious Unit. Warm, Bright,Friendly And Improved. Walk-Out To Sunny Balcony. Show With Confidence.
$698.00 Per Month*
Keele / Finch
Condo Townhouse 2-Storey, 3+1 Bedroom, 3 Washroom, deally Located , Walking Distance To Soon To Be Built New Sub Way Station, Ideal For Investment As This Property Is Very Close To York University
$769.00 Per Month*
Dvp / Eglinton
Condo Apt, 3 Bedroom, 2 Washroom, Spacious End Unit! Overlooking Golf Course With Sunny West Exposure! Easy Access To Main Floor, No Need For Elevator! Easy Access To Downtown
$1032.00 Per Month*
Birchmount / Ellesmere
Condo Apt Multi-Level, 2+1 Bedroom, 2 Washroom, Luxurious Tridel Built Condo With Amazing Panoramic View.. Tons Of Natural Lights, Excellent Building Facilities Including Gym, Indoor Swimming Pool
$1068.00 Per Month*
Mckay/Williams Park Way
Detached 2-Storey, 3+1 Bedroom, 3 Washroom, Close To Middle School,High School,Parks,Recreation Centre,Swiming-pool,10 Minutes Drive To Bremlea City Centre, 5 Minutes Drive To Brampton Civic Hospital
$1175.00 Per Month*
Mccowan/Ellesmere
Condo Apt, 3 Bedroom, 2 Washroom, New Monarch Luxury Condo! Unobstructed View! Granite Kitchen Top! Steps To Scarborough Town Centre, Rt To Subway And Public Transit!
0% Downpayment available***
Kunasegar Nagalingam
Sales Representative
Direct: 416-402-4545
Sujatha Kunasegar
Sales Representative
Direct: 647-401-9644
HomeLife Today Realty Ltd., Brokerage**
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6,
Bus: 416-298-3200 , Fax: 416-298-3440
E-mail: sujatha.homelife@gmail.com
**Independently Owned and Operated.
* Monthly mortgage calculated at 2.1% interest and 30 year amortization
*** 0% Down payment with 5% cashback mortgage.
HOMELIFE HIGHER STANDARDS
We do not intent to solicit currently listed properties.


S.P. IMPORTERS FURNITURE INC.
Importers & Distributers of High Quality Furniture & Mattresses
மலிவு விற்பனை
CASH & CARRY
$149 Reg. $249
Futon Frame and Mattress
3 pc Leather Sofa Set
$1079 Reg. $1499
5 pc Glass Top Dining Set
CASH & CARRY
$199
3 pc Leather Sofa Set
$1599 Reg. $1999
8 pc Queen Bedroom Set
$1899 Reg. $2499
9 pc Dining Room Set
$1799 Reg. $2299
Single / Double Bedroom Set
$1599 Reg. $2499
3 pc Sofa Set with 5 Recliners
$1299 Reg. $1699
Black or Chocolate Leather
Over 15,000 sq. ft Showroom MORE than 2,000 items to choose...
Wooden Bunkbed with Mattress
$449 Reg. $599
CASH & CARRY
Sectional Sofa with ottaman
$899 Reg. $1199
Micro fabric / PU
9 pc High Pub Set
$599 Reg. $999
CASH & CARRY
Hwy. 401
Ellesmere Rd.
Lawrence Ave.
Midland
Brimely
We Are Here!
Authorized Sealy & Ashley Dealer
We sell ALL kinds & sizes of mattresses, including Orthopedic, Sealy Posturepedic and Memory Foam!
Sealy
ASHLEY FURNITURE HomeStore
2861 Lawrence Ave. East
@ Brimely, Scarborough
416-266-3077


Get behind a Honda today!
HONDA DAILY NEWS
HOT OFF THE PRESS! GREAT DEALS!
It's springtime and the deals are heating up on 2011 Civic and CR-V! That's right! Hurry to your local Ontario Honda Dealership to get the hottest deals of the season. It's the BIG SAVE EVENT!
AMAZING!
Honda BIG SAVE EVENT
2011 CR-V DEALS
0.9% APR
LEASE FOR 48 MONTHS OR FINANCING UP TO 60 MONTHS ON SELECT CR-V MODELS
REFINED SPORT UTILITY, THE PERFECT COMBINATION OF FORM AND FUNCTION
VERSATILITY:
OVER 2000 LITRES OF CONFIGURABLE CARGO SPACE
Isn't it great to have some PEACE OF MIND
2011 CIVIC CLEAROUT
0.9% APR
LEASE FOR 48 MONTHS OR FINANCING UP TO 60 MONTHS ON SELECT 2011 CIVICS
PLUS GET A $750 GAS CARD WITH EVERY 2011 CIVIC
#1 SELLING CAR IN CANADA, 13 YEARS IN A ROW
MADE IN CANADA
SPRING 2011
அதீசன்
ATHEESAN (SHAN) SARVANANTHAN
416 720 1184
HONDA
உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4.
TEL: 416-754-4555 EXT.2705, FAX: 416-754-9465

# Connect with Quality and Integrity for Your Real Estate Needs






வீடு வாங்க விற்க
இன்றே நாடுங்கள்...



**SUTHA**
**BALASUBRAMANIAM B.Sc.**
sales representative

**www.suthahomes.ca**

**HomeLife Future Realty Inc. Brokerage**
**7 Eastvale Drive, Suite: 205**
**Markham, Ontario L3S 4N8**

**Direct: 416-271-5420**
**Office: 905-201-9977**
**Fax: 905-201-9229**



**சேரன்** - கவிஞர். நாடக ஆசிரியர். இவரது ஏழு கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. கனடா, வின்சர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல், மானுடவியல் துறையில் பேராசிரியராகப் பணி புரிகிறார்.



நிழற்படங்கள் : ட்ராட்ஸ்கி மருது

# பேராசிரியர் கா. சிவத்தம்பி: முடிவற்ற ஆய்வுத் தேடல்

**"ஆய்வு என்பது நிரந்தரமான புலமைத் தேடல். நாம் செய்யும் வேலைகள் கூடக்கூட ஆய்வு செய்யும் அவாவும் கூடிக் கொண்டே போகும். ஒரு நூலுக்கோ அல்லது ஒரு கட்டுரைக்கோ தரவுகள் சேகரிக்கப்படுவதுடன் அது நின்று விடுவதில்லை"**

**- பேராசிரியர் கா.சிவத்தம்பி**

(இலங்கையிலிருந்து வெளியாகும் ஞானம் இதழுக்கு வழங்கிய பேட்டியில்)

**1.**

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களிடம் தமிழையோ அல்லது தமிழியலையோ முறையாகப் படிக்கிற வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. அவருடைய எழுத்துக்களை மிகுந்த ஆர்வத்துடனும் தீவிரமாகவும் நீண்ட காலமாக வாசித்து வந்திருக்கிறேன். யாழ்ப்பாணத்தில் இருந்த நாட்களில் பெரும்பாலும் அவருடைய எல்லா உரைகளையும் கேட்டிருக்கிறேன். பல்வேறு தரங்களிலுள்ள எழுத்தாளர்களுக்கும் அவர் பெருந்தன்மையுடனும் சில சமயங்களில் உவகையுடனும் வழங்கிய முன்னுரைகளையும் வாசித்திருக்கிறேன். பல சந்தர்ப்பங்களில் அவருடன் தீவிரமாக முரண்பட்டு வாதாடியுமிருக்கிறேன் (அவருடைய மறுமொழி: "சரியடாப்பா, அதை விடு தசை நிறைய இருக்கிறதால கனக்கக் கடிக்கலாம் எண்டு யோசிக்கிறாயாக்கும்!).


1984 - 1987 வரையான காலகட்டத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிய Saturday Review ஆங்கில வார இதழில் பணிபுரிந்த போது எங்கள் பணிமனைக்கு அருகில் இருந்த அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (The Refugees Rehabilitation Organization -TRRO) என்னும் அமைப்புக்குப் பொறுப்பாகச் சில காலம் அவர் பணியாற்றிய போதும் பிற்பாடு கொழும்பில் 1990 களில் சரிநிகரில் பணியாற்றியபோதும் சிவத்தம்பியவர்களிடம் ஆழமாகப் பழகவும் அடிக்கடி ஆய்வுத்துறை சார்ந்து நீண்ட நேரம் உரையாடல்களை நிகழ்த்தவும் எனக்குப் பெருவாய்ப்புக் கிடைத்தது. எனது புலமைத் திரட்சிக்கும் ஆய்வுத்தள அனுபவ விரிவுக்கும் பேராசிரியர் சிவத்தம்பியவர்களுடனாக இத்தகைய 'முறைசாரா' மாணவத்துவம் மிகவும் உறுதுணையாக இருந்தது. என்னைப் போல நூற்றுக்கணக்கானோர் ஈழத்திலும் தமிழகத்திலும் பிறநாடுகளிலும் அவரிடமிருந்து இவ்வாறு ஊட்டம் பெற்றனர்.

பொதுத் தளத்தில் இயங்குகிற புலமையாளர்கள் (Public Intellectuals) எல்லோருக்குமே இத்தகைய நற்பண்பு சாத்தியமாகியுள்ளதா என்று எண்ணத் தோன்றினாலும், சமூக நீதி, கோட்பாடு சார்ந்த கடப்பாடு, பொதுமக்கள் நலன் போன்றவற்றைத் தமது வாழ்வியலாகப் பேணுபவர்களுக்கு இப்பண்பு தவிர்க்க முடியாததாகும் என்று

நான் கருதுகிறேன். பொதுத் தளத்திலும் பொது மக்கள் தளத்திலும் இடையறாமல் இயங்கி வந்த புலமையாளர் அல்லது அறிவுஜீவி என்ற வகையில் சிவத்தம்பி அவர்களை அளவற்று நேசிப்பவர்களும் இருந்தனர் காழ்ப்புணர்வுடன் வெறுத்தவர்களும் இருந்தனர். பொதுமக்கள் தளத்தில் இயங்குகிற புலமையாளர்கள் அனைவருக்குமே இத்தகைய நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றுதான். எனினும், தமக்கான ஆதரவையும் எதிர்ப்பையும் தம் மீதான விருப்பையும் வெறுப்பையும் மட்டுமே கவனத்தில் எடுத்து எவரையும் அவர் வெறுத்தது கிடையாது. பெருங்காற்றை நிதானமாக எதிர் கொள்கிற நூற்றாண்டுப் பழமை வாய்ந்த பெருமரம் போல அளவற்ற பொறுமையும் நிதானமும் அவருக்குரிய இயல்பாக இருந்தது. சீற்றமும் சினமும் தனிப்பட்ட உரையாடல்களில் அவரிடமிருந்து வெளிப்படும் ஆயினும் அவை அந்தரங்கமானவை. அவை பொது மேடைக்குரியவை அல்ல.

யாழ்ப்பாணம் பிரஜைகள் குழு (1985), அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (1986 - 1989) போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு (1985-1986) ஆகியவற்றில் அவர் பணியாற்றிய காலங்கள் அவருக்கு மிகப் பெரும் சவாலாகவும் சங்கடங்களைத் தொடர்ந்து தருவதாகவும் அச்சுறுத்தல்கள் நிறைந்ததாகவும் இருந்தவையாகும். 85, 87 காலகட்டத்தில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஏராளமான வெளிநாட்டுப் பணம் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்கு வந்து குவிகிறது என்னும் பிழையான படிமமொன்று அப்போது கோலோச்சிய நமது எல்லாத் தமிழ் இயக்கங்களிடமும் தீவிரமாக இருந்தது. எவ்வகையிலாயினும் அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தை அல்லது அதன் வளங்களைச் சூறையாடிவிட வேண்டும் எனும் வேட்கையும் அவற்றில் பலவுக்கு இருந்தன. தமிழ் இயக்கங்களின் இத்தகைய நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பது கத்தியின் மீது நடப்பது போன்றதாகும். உண்மையில் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் நிதிவளம் மிகுந்ததாக எப்போதுமே இருந்ததில்லை அகதிகள் புனர் வாழ்வுக் கழகமும், Saturday Review நிறுவனமும் லண்டனில் வாழ்ந்து வந்த கந்தசாமி அவர்களின் மிகவும் அர்ப்பணிப்பும், தீவிர உழைப்பும் வாய்ந்த முயற்சியால் இயங்கி வந்தவை. லண்டனில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்த சில ஈழத்தமிழ்ப் புரவலர்களும், இங்கிலாந்து, ஒல்லாந்து நாடுகளின் சில சமூகநீதி நிறுவனங்களும் இந்த இரு நிறுவனங்களுக்கும் உதவிகளை வழங்கி வந்தனர். இலங்கை அரசின் நெருக்கடிகள் ஒரு புறமும் நமது இயக்கங்களின் பேராசை இன்னொரு புறமுமாகப் பொது நிறுவனங்களை வருத்திய காலங்கள் அவை. இந்த இரண்டு நிறுவனங்களோடும் நெருக்கமாக இருந்தவன் என்ற வகையில், சிவத்தம்பி அவர்களின் நுட்பமான பணி பற்றியும் அவர் எதிர் கொண்ட சிக்கல்கள், உயிராபத்து பற்றியும் விவரமாகவே எனக்குத் தெரிந்திருந்தது. வெளியே தெரியவராத அவருடைய முகம் இது. பிற்பாடு, சிவத்தம்பியவர்களால் கூடக் கந்தசாமி அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்குப் பிற்பாடு (ஜுலை 1987) யாழ்ப்பாணம் திரும்பிய அவரை ஈழப்புரட்சி அமைப்பினர் (EROS) கடத்திச் சென்று கொன்று விட்டனர். அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் களப்பணியாளர்களில் ஒருவராகப் பணியாற்றிய தருமலிங்கத்தை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்று கொன்றுவிட்டனர். புனர்வாழ்வுக் கழகம், Saturday Review, மனித உரிமைகள் இல்லம் (Home for Human Rights-HHR) ஆகியவற்றின் பணிகளுக்குத் தீவிரமாக உதவிசெய்து வந்த குகமூர்த்தி இலங்கை அரசபடைகளாலும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) யாலும் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார். இவர்கள் அனைவருமே சிவத்தம்பியவர்களுக்கு மிகவும் நெருங்கியவர்கள் எனினும் தனது கையறு நிலையை எண்ணிக் கண்ணீர் வடித்தமையையே அவரால் செய்யக் கூடியதாக இருந்தது (என்னாலும் அதுதான் முடிந்தது).

சிவத்தம்பியவர்களின் மனதுக்கு நெருக்கமான செல்வச் சந்நிதி கோவிலில் எறிகணை விழுந்தமை தொடர்பாக எழுந்த சிக்கலால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் உறுப்பினராக இருந்தபோது விடுதலைப் புலிகளின் கடுங்கோபத்துக்கு அவர் ஆளாகியிருந்தார். இருதரப்பினரதும் மீறல்களைப் பற்றிப் பேசுவதும் மீறல்களைப் பற்றி விசாரணை செய்து அறிக்கை இடுவதும் கண்காணிப்புக் குழுவின் பணியாக இருந்தது. குழுவில் இலங்கை அரசின் சட்ட மா அதிபரும் இருந்தார். அரசுக்கு சார்பான நிலைப்பாடுகளையே அவர் எடுத்து வந்தார். மறுபுறம், நியாயமாகவும், நடுநிலைமையாகவும் பணிபுரிந்தால் வருகிற சங்கடங்களை விடுதலைப் புலிகள் புரிந்து கொள்ளத் தயாராக இருக்கவில்லை. எவ்வகையான கண்டனங்களையோ அல்லது விமர்சனங்களையோ ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத விடுதலைப் புலிகள் அமைப்பு சிவத்தம்பி அவர்கள் மீது சீற்றம் கொண்டதில் வியப்பேதும் இல்லை. 1986இன் பிற்பகுதியில் அவர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இருந்து விலகி விட்டார். அவருடைய விலகல் கடிதம் ஒரு முக்கியமான ஆவணமாகும்.



நிழற்படம்: சாந்தன் (இங்கிலாந்து)

**பெருங்காற்றை நிதானமாக எதிர் கொள்கிற நூற்றாண்டுப் பழமை வாய்ந்த பெருமரம் போல அளவற்ற பொறுமையும் நிதானமும் அவருக்குரிய இயல்பாக இருந்தது.**

## 2

சிவத்தம்பி அவர்களின் சொற்களிலேயே சொல்வதானால் அவருடைய 'விசேட ஆய்வுத்துறைகள் நான்காகும். 1. தமிழரின் சமூக இலக்கிய வரலாறு. 2. தமிழரிடையே பண்பாடும் தொடர்பாடலும். 3. தமிழ் நாடகம். 4. இலக்கிய விமர்சனம்.'

தமிழிலும் தமிழ் இலக்கியத்திலும் அவருக்கிருந்த தீவிர ஈடுபாடும் வேட்கையும்தான் மெல்ல மெல்ல அவரை தமிழ்ச் சமூகம், பண்பாடு, சமூக வரலாறு, மரபும் மானுடமும் போன்ற துறைகளுக்கு இழுத்து வந்தது. தமிழ் இலக்கியத்தை மெல்ல மெல்ல விட்டுவிட்டுச் சமூகவியல், மானுடவியல், கருத்தியல் போன்ற பிற அறிவுத் துறைகளுக்கு அவர் சிறப்பிடம் வழங்கத் துவங்கிவிட்டார் என்ற குற்றச்சாட்டை அவரது நண்பர்கள் சிலர் முன் வைத்தது உண்மைதான். எனினும், இந்தக் குற்றச்சாட்டு அவருக்கு முற்று முழுதாகப் பொருந்தாது. தமிழ் அறிவுச் சூழலின் வறுமையும் நோய்க்கூறுகளும் தான் சிவத்தம்பி அவர்களை இத்தகைய பல்துறைப் புலமையாளராகவும் பின்னர் அறிஞராகவும் மாற்றியது என்பதை நாங்கள் புரிந்து கொள்வது பயன்தரும். அந்த வகையில்தான் தமிழ், தமிழ் இலக்கியம், இலக்கிய வரலாறு போன்றவற்றையும் உள்ளடக்கிய 'தமிழியல்' என்ற விரிவான ஆழமான, பல்துறைப் பரிமாணம் கொண்ட புலமை நெறிக்குச் செழுமையும் ஊட்டமும் வண்ணமும் வனப்பும் தந்த ஒருவராக அவர் பரிணாமம் பெறுகிறார்.

பிரித்தானியாவின் Centre for Contemporary Cultural Studies (CCS) நிறுவனத்தினதும் பண்பாட்டியல் கற்கைகள் (cultural studies) துறையினதும் மூலவராக விளங்கிய Stewart Hall ஆங்கிலப் பேராசிரியராக இருந்து சமூகவியல் பேராசிரியராக மாறியவர். இலக்கியத்தில் தொடங்கி சமூக விமர்சனம், ஊடகத் துறைக்கும் சமூகங்களுக்குமிடையேயான உறவுகள், ஊடாட்டங்கள் பற்றி ஆய்வு செய்தவர், பல்துறை சார்ந்த ஆய்வணுகுமுறைகளை (multidisciplinary approach) சிறப்பாகப் பயன்படுத்தியவர். Stewart Hallஇன் அணுகுமுறைகளும் ஆய்வு முறைமையும் சிவத்தம்பி அவர்களை வசீகரித்ததில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. இத்தகைய மரபோடு சிவத்தம்பி அவர்களை நாம் இனங்காண முடியும். மார்க்சியச் சிந்தனைத் தடத்தையும் ஆய்வுப் பள்ளியையும் தொடக்கத்தில் இறுக்கமாக வரித்திருந்தாலும். பிற்பாடு பல்வேறு தளங்களிலும் நெகிழ்வை வெளிப்படுத்தியவர் சிவத்தம்பி அவர்கள். அத்தகைய நெகிழ்வுகள் குறித்துத் தனது நேர்காணல்களிலும் பின்னரெழுதிய கட்டுரைகளிலும் குறிப்பிட்டிருக்கிறார். சமூக அக்கறையும் அதன் வழியாக மேலெழும் சமூக மாற்றத்துக்கான தேவையும், அத்தேவையை நிறைவேற்றுவதற்கான வழியாகப் போராட்டமும் தவிர்க்க முடியாதது என்பதும் அத்தகைய போராட்டத்தில் கலைகள், இலக்கியம், அறிவுத்துறைகள் போன்ற அனைத்தும் பங்கெடுக்க வேண்டும் என்கிற மார்க்சிய அடிப்படை விழுமியத்தை அவர் இறுதிவரை பேணினார். இத்தகை பல்வேறு துறைகளினதும் பங்களிப்பு எப்படி இருக்கவேண்டும்? இவற்றுக்கு இடையேயான முரண்பாடுகள் இல்லையா? அவற்றை எந்த நேரத்தில் முதன்மைப் படுத்துவது? இத்தகைய முதன்மைப் படுத்தல் சாத்தியமா? இனத்துவம், சாதியம், பாலினம் சார்ந்த ஒடுக்குமுறைகளுக்கும் வர்க்க ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக பொதுவான கூட்டு முன்னணி சாத்தியமா? போன்ற கேள்விகளைத் தீவிர விவாதத்துக்கு விட்டுவிட வேண்டும் என்பதும் அவரது நிலைப்பாடாக இருந்தது.



அவரது காலத்தில் வாழ்ந்து அவருக்கு முன்பே மறைந்துவிட்ட பல ஈழப்புலமையாளர்கள், இடது சாரிச் செயற்பாட்டாளர்களுக்குக் கிடைக்காத ஒரு வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. கடந்த கால அரசியல், சமூக வாழ்வை இன்றைய முதிர்ச்சி நிலையிலிருந்து காய்தல், உவத்தல் இன்றி மீள்பார்வை செய்ய முடிந்தமைதான் அது.

சிவத்தம்பி அவர்களின் பல கட்டுரைகளும், உரைகளும் 'பிராரம்ப உசாவல்' களாகவும் 'குறிப்புக்கள்' என்பதாகவும், 'கேள்விகள்', 'முன்னோட்டங்கள்' என்பதாகவும் இருப்பதை நாங்கள் அவதானிக்கலாம். இத்தகைய கட்டுரைகள் எமக்கு மிகவும் முக்கியமானவை. கோட்பாடு சார்ந்தும் பல்துறை ஆய்வுக் கோணம் சார்ந்தும் இத்தகைய கட்டுரைகளில் அவர் புதிய சிந்தனைகளையும் புதிய கேள்விகளையும் எழுப்புகிறார். ஆனால் அவை குறித்து விரிவாக ஆய்வு செய்ய அவருக்கு அவகாசம் இருந்ததில்லை. நமக்கும், நமது புதிய தலைமுறை ஆய்வாளர்களுக்கும் அவர் விட்டுச் சென்றுள்ள சீரிய ஆய்வுத் தடங்களாகவே நாம் இவற்றைப் பார்க்க வேண்டும். அவர் எழுப்பியுள்ள கேள்விகளையும், கோட்பாட்டுச் சவால்களையும் நாம் இன்னும் ஆழமாகவும் விரிவாகவும் தொடரவேண்டி இருக்கிறது. குறிப்பாக இலக்கிய விமர்சனத் தளத்தில் அழகியல், கவிதையியல் தொடர்பாக அவர் சுட்டிக் காட்டியுள்ள விடயங்கள் எல்லோரதும் கவனிப்புக்கு உரியதாக வேண்டும்.

## 3

வரலாற்றையும், பொருளியலையும் தமிழையும் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டப் படிப்புக்காகப் படித்த சிவத்தம்பி அவர்கள் மூன்றாம் வகுப்பில்தான் சித்தி அடைந்தவர். சிறப்புப் பட்டப்படிப்பும் (special degree) அப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பு அல்லது உயர் தர இரண்டாம் வகுப்பு (First or Upper Second class) சித்தி பெறாதவர்கள் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர் என்ற நிலையையே கனவிலும் எண்ண முடியாது என்னும் சூழல் நிலவிய இலங்கையில் சிவத்தம்பி அவர்களின் மேதைமைக்கு இலங்கைப் பல்கலைக் கழகங்கள் தான் முற்று முழுதான காரணம் என்றும் எவரும் வாதாட முடியாது. அப்பல்கலைக் கழகங்களின் சில துறைகளில் நிலவிய பேதைமை ஒரு வேளை, அவருடைய மேதைமைக்குப் பங்களித்திருக்க முடியும். பட்டங்களையும் பதவியையும், ஆடம்பரங்களையும் ஒப்பனைகளையும் அவர் ஒருபோதும் மதித்தது கிடையாது. 'கலாநிதி. சிவத்தம்பி' என்றோ அல்லது 'சிவத்தம்பி, பி.எச்டி.' என்றோ அவர் ஒருபோதும் கையெழுத்திட்டது கிடையாது. தன்னடக்கமும், பணிவும், மேதைமையும் ஒன்றாக இருப்பது விதி விலக்கு. சிவத்தம்பி அவர்கள் அத்தகைய விதி விலக்குகளில் ஒன்றாகத் திகழ்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அவர் பணியாற்றிய காலங்களில் அவரது ஆளுமைக்கும் மேதைமைக்கும் உரிய மதிப்பை அப்பல்கலைக் கழகம் வழங்கவில்லை. அதற்கான காரணம் பல்கலைக் கழக விரிவுரையாளர்களோ

தொடர்தல் 86ம் பக்கம்



**செல்வா கனகநாயகம்:** கனடாவின் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரிகிறார். அப்பல்கலைக் கழகத்தின் தென்னாசிய கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் இருக்கிறார் ஆங்கிலத்திலும் தமிழிலும் 10 நூல்கள் வெளியாகியுள்ளன.



# பேராசிரியர்
# கா. சிவத்தம்பியின் அழகியல் நோக்கு

**1975ம்** ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் நான் இறுதி வருட மாணவனாகவும் பேராசிரியர் சிவத்தம்பி துணைப் பேராசிரியராகவும் இயங்கிய பொழுது ‘ஈழத்து இலக்கியமும் திறனாய்வும்’ என்ற தலைப்பில் ஒரு நீண்ட ஆராய்ச்சிக் கட்டுரையை பேராசிரியர் சிவத்தம்பியின் மேற்பார்வையில் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் ஒரு புத்திஜீவி என்ற முறையிலும் ஓர் ஆசிரியர் என்ற முறையிலும் அவரோடு ஈடுபடும் சந்தர்ப்பம் இப்பொழுது எனக்கு முதற்றடவையாகக் கிடைத்தது. பேராசிரியர் சிவத்தம்பி இரண்டு அல்லது மூன்று மாதங்களில் எனக்கு எடுத்துக் கூறிய கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் புதியதொரு பரிமாணத்தையே என் முன் நிறுத்தியது. தமிழ் இலக்கியம், தமிழியல் ஆய்வு ஆகிய துறைகளின் வரலாறு மட்டுமல்ல, கேள்விகள், பிரச்சனைகள், வாதங்கள் போன்ற யாவற்றையுமே பேராசிரியர் சிவத்தம்பி அறிமுகப்படுத்தியபோது, அவருடைய சிந்தனையின் அழகும், நுட்பமும் தெளிவாகியது. தமிழை முறையாகக் கற்ற பண்டிதருடைய மகனாக அவர் வளர்ந்ததாலும், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம் ஆகியோரது ஆங்கிலம் சார்ந்த செல்வாக்கை உள்வாங்கியதாலும், இங்கிலாந்தில் தொம்சனின் மார்க்சிய, கிரேக்க அறிவியலைக் கற்றதாலும், அவருடைய சிந்தனையும், பார்வையும் புதிய திரைகளை நோக்கிச் சென்றன. பேராசிரியர் சிவத்தம்பியின் மறைவோடு ஒரு பாலைவனம் நம்மை எதிர்நோக்குகின்றது என்று நாம் கருதுவதற்குக் காரணமும் அதுதான். அவரைப் போன்று சிந்திக்கும் புத்திஜீவிகள் பலர் எங்கள் மத்தியில் இல்லை.

கடந்த 35 ஆண்டுகளாக பேராசிரியர் சிவத்தம்பியின் நிழலில் என்னுடைய தமிழியல் ஆர்வமும் வளர்ந்தது. இந்தக் காலப் பிரிவில் பேராசிரியர் சிவத்தம்பி எழுதிய நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும் பல்வேறு துறைகளை உள்ளடக்கின. சங்க இலக்கியம் முதல் பின் காலனித்துவம் வரையில் ஆய்வுக் கண்களோடு நோக்கிய பேராசிரியர் சிவத்தம்பி எந்த விடயத்தை மேற்கொண்டாலும், நாம் இதுவரை சிந்திக்காத பல வகைகளில் எம்மை சிந்திக்கத் தூண்டியுள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது பேராசிரியர் சிவத்தம்பியின் பன்முகப்பட்ட பங்களிப்பிற்கு மையப்புள்ளி எது? என்பது ஒரு முக்கியமான கேள்வி. மார்க்சியக் கோட்பாட்டின் செல்வாக்கோடு இவர் தமிழியல் ஆய்வில் காலடி வைத்தவர் என்பது யாவருக்கும் தெரிந்த விடயம். தமிழ் நாடகம் பற்றி அவர் ஆரம்ப காலத்தில் எழுதிய நூல் முதல் பல ஆய்வுக் கட்டுரைகள் அவருக்கு மார்க்சியத்தோடு இருந்த ஆழமான ஈடுபாட்டைப் பிரதிபலிக்கும். ஒருவகையில் பார்க்கும்போது மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், அதாவது இலக்கியத்தையும், பண்பாட்டையும், பொருளாதாரப் பின்னணி நிர்ணயிக்கும் என்ற நிலைப்பாடு தொடர்ந்து இவருடைய ஆய்வை ஊடுருவிச் செல்கின்றது. அதே நேரத்தில் மார்க்சிய வரையறைக்குள் மாத்திரம் அவருடைய ஆய்வு அமைந்தது என்று கூறுவது பொருத்தமானதல்ல.

ஏறத்தாழ மூன்று வருடங்களுக்கு முன்னர் நான் பேராசிரியர் சிவத்தம்பியைக் கொழும்பில் சந்தித்தபோது எங்களுடைய உரையாடல் சங்க இலக்கியம் பற்றி அமைந்தது. அந்த சந்தர்ப்பத்தில் நான் நெடுநல்வாடை என்னும் நெடுங் கவிதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவேண்டும் என்று கூறினார். இதுவரையில் ஒருசில மொழிபெயர்ப்புகள் வெளி வந்துள்ளபோதும், அக்கவிதையின் தனித்துவத்தை மனதில் வைத்து ஒரு மொழிபெயர்ப்பை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். அதற்கான காரணங்களை அவர் சுட்டிக்காட்டும் போது எந்த அளவிற்கு அழகியல் அவருடைய சிந்தனைக்கு முக்கியமானது என்பது தெளிவாகியது. சங்க இலக்கியத்தில் நெடுநல்வாடையின் பங்கு, தொல்காப்பியத்திற்கும் இந்தக் கவிதைக்கும் உள்ள தொடர்பு, நெடுநல்வாடை பற்றி உரையாசிரியரின் கருத்து போன்ற பல விடயங்களை ஆய்வு நோக்கோடு பேராசிரியர் சிவத்தம்பி பார்க்கும்போது அவரைப் பொறுத்த வரையில் மேலெழுந்து நின்ற கேள்வி அழகியல் பற்றியதாகும். ஒப்பியல் நோக்கில் பார்க்கும்போது சங்க இலக்கியத்தில் இந்தக் கவிதைக்குத் தனியிடம் உண்டு என்ற எண்ணத்தை ஆரம்பப் புள்ளியாக வைத்தே அவருடைய ஆராய்ச்சி ஆரம்பமாகியது. இலக்கியம் இலக்கியத்திற்காகவே என்ற கோட்பாட்டை அவர் ஆதரித்ததாகத் தெரியவில்லை. சமூகப் பொருளாதாரப் பின்னணியை புறக்கணித்து அவர் ஒருபொழுதும் இலக்கியத்தை எடை போட்டதில்லை. அதே நேரத்தில் அவர் அழகியலை முன்வைக்கத் தவறியதில்லை.

பேராசிரியர் சிவத்தம்பியின் நோக்கில் அழகியல் எவ்வாறு அணுகப்பட்டது என்பது ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். 1983ம் ஆண்டு இவர் எழுதிய தமிழ் இலக்கியத்தில் மதமும் மானிடமும் என்னும் நூலும் 1999ல் இவர் எழுதிய மதமும் கவிதையும் என்னும் நூலும் இவருடைய அழகியல் நோக்கை எடுத்துக் காட்டுகின்றன. இந்த இரண்டு நூல்களுமே பக்தி இலக்கியத்தைக் கருப்பொருளாகக் கொண்டவை. பல்லவர் காலத்தில் ஆரம்பித்து நவீன காலம் வரை செல்லும் இவ்விரண்டு நூல்களும் பல சிக்கலான, அடிப்படையான கேள்விகளை எழுப்புகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் இலக்கியத்திற்கும் மதத்திற்கும் இடையே உள்ள தொடர்பு என்ன? என்ற கேள்வியோடு ஆரம்பித்து நூலாசிரியர் எங்களுடைய கோட்பாடுகள் பலவற்றை திறனாய்வு ரீதியில் கட்டுடைக்க ஆரம்பிக்கின்றார். சுருக்கமாகக் கூறுவதனால் பேராசிரியர் சிவத்தம்பியின் வாதத்தைப் பின்வருமாறு விவரித்தல் பொருத்தமானதாகும். நாயன்மாரோ ஆழ்வாரோ பாடிய சில பாடல்கள் இன்றுவரை கிராமங்களில் கூட நிலைத்திருப்பது உண்மையானால், அவற்றின் அகநிலைத் தாக்கம் இன்றுவரை பலமாக இருப்பது உண்மையானால் அதற்குரிய காரணம் என்ன? மதம் நிலைக்கும்

> **பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்தபொழுது எவ்வாறு வேறுபட்ட கோட்பாடுகளின் மத்தியில் தனக்கென ஒரு தளத்தை அமைத்துக்கொண்டாரோ, அதே போன்று அவருடைய ஆய்வில் பல மரபுகளையும் உள்வாங்கி புதியதொரு ஸ்தானத்தை உருவாக்கிக்கொண்டார்.**

போது மத இலக்கியம் வாழவேண்டும் என்ற நியதி இல்லை. ஒரு சில தேவாரங்களை நாம் மீண்டும் மீண்டும் படிக்கும் போது அவற்றை கவிதை என்ற காரணத்தினாலேயே விரும்புகின்றோம். ஆனால் தமிழ் இலக்கிய வரலாற்றில் மதம் வேறு இலக்கியம் வேறு என்று பார்ப்பது சிக்கலான விடயம்.

இந்தக் கடினமான கேள்விக்குப் பதில் காணுவதற்காக பன்முகப்பட்ட திறனாய்வு நோக்கைப் பேராசிரியர் சிவத்தம்பி கையாள்கின்றார். முதலாவதாக நூலாசிரியர் பக்தி என்னும் கோட்பாட்டிற்கு வரைவிலக்கணம் கொடுத்து வரையறைகளை நிறுவுகின்றார். பரிபாடல் முதலாக மதம் சார்ந்த இலக்கியம் பக்தி இலக்கியம் அல்ல என்பதற்குப் போதிய ஆதாரம் காட்டி பக்தி இலக்கியத்தின் தனித்துவத்தைத் தெளிவாக விளக்குகின்றார்.

பக்தி இலக்கியத்தின் தனித்துவத்தை நுட்பமாக நிறுவிய பின்னர் முக்கியமான கேள்வி எழுகின்றது. பக்தி இலக்கியம் தெய்வீகத்தின் அடிப்படையில் உருவானது. பல சந்தர்ப்பங்களில் தெய்வத்தின் அருளால் உருவாக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. அத்தகைய பின்னணியில் பக்தி இலக்கியத்தைத் திறனாய்வுக் கண்களோடு பார்ப்பது ஏற்கக் கூடியதல்ல என்பது பொதுவான கருத்து. இதனால் தான் திருமுறைகளுக்கு உரை எழுதும் மரபே இருக்கவில்லை.

இதற்கு மாறாக மேற்கத்தைய, நவீனத்துவ வழக்க போன்ற இலக்கியத்தை இலக்கியமாகவே எடுக்கலாமா? என்ற வினா எழுகின்றது. தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் பக்தி இலக்கியம் அகநிலை சார்பு கொண்டது. சமூக வரலாற்றில் அதன் பங்கைப் புரிந்து கொள்வதற்கு அவ்விலக்கியம் எவ்வாறு பேணப்பட்டது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். பக்தி இலக்கியம் திறனாய்விற்கு அப்பாற்பட்டது என்று கூறுவது எந்த அளவிற்கு ஏற்க முடியாத கருத்தோ, அதே போன்று பக்தி இலக்கியத்திற்கும் அகநிலைக்கும் தொடர்பு இல்லை என்ற கோட்பாடும் தவறானதாகும்.

இந்த இரண்டு அபிப்பிராயங்களையும் உள்ளடக்கி பேராசிரியர் சிவத்தம்பி முன்செல்வ

*தொடர்தல் 91ம் பக்கம்*



**ஞானம் லெம்பட்:** பிரதியாக்கம், மொழிபெயர்ப்பு, நெறியாள்கை, கூத்து, நடிப்பு என எழுபதிற்கு மேற்பட்ட நாடகங்களில் பங்காற்றியுள்ளார். ‘பிச்சை வேண்டாம்’, ‘கருக்கல்வழியும் காத்திருப்பும்’, ‘கருஞ்சுழி’ ஆகியவை இவரது குறிப்பிடத்தக்க நாடகங்கள். ஈழத்து நாட்டார் பாடல் பற்றி ஆய்வு செய்துள்ளதுடன் ஈழத்துக் கூத்துக்கள் பற்றியும் தென்கிழக்காசிய நாடகங்கள் பற்றியும் ஆய்வுகள் செய்துகொண்டிருக்கின்றார்.



# நாடகர் பேராசிரியர் கா. சிவத்தம்பி

தமிழியலில் புலமை மிகுந்தவரும் விமர்சனத்தை ‘மார்க்சியப்’ பார்வையில் நோக்கி புதிய விமர்சகர்களை உருவாக்கியவரும், அரசியல் ஆய்வாளராகவும், மானுடவியலாளராகவும் தெரிந்த பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மறுபக்கம் ஒரு சிறந்த நாடகன் என்பதாகும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் வழி நடத்துதலில் நடிகனாக நாடக உலகில் கால் பதித்தவர், வானொலி நாடக நடிகனாக, நாடக ஆசிரியனாக, ஒப்பனையாளனாக, ஒளி அமைப்பாளனாக, நெறியாளனாக, நாடக ஆய்வாளனாகத் தன்னை மாற்றிக்கொண்டவர்.

இலங்கையில் தமிழ் மக்களிடையே நாடக ஆர்வத்தையும், மாணவரிடையே நாடக விழிப்பையும் ஏற்படுத்தி, இன்றைய தமிழ் நாடக வளர்ச்சிக்கு வித்திட்டோரில் இவர் முக்கியமானவர்.

தனது ஆளுமையினால் தமிழ் இலக்கிய உலகையே கட்டி ஆண்ட இவரை ஈடு செய்வதென்பது மிகச் சிரமமானதொன்றாகும்.

பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறையில் பெருங்கடலாக இருந்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் சமூகவியல், மானுடவியல், நுண்கலை, அரங்கவியல் ஆகிய பல்துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவராகத் திகழ்ந்தார்.

தற்கால நாடக, நாடக விமர்சனத்துறை கிளைவிட்டு சடைத்து நிற்கக் காரணமான

**எழுபதுகளில் மார்க்சிய தத்துவ அடிப்படையில் தமிழ் நாடகங்களை தமது மாணவருக்கூடாக உருவாக்கினார். கலையும் சமூகமும் பிரிக்கப்பட முடியாத ஒன்று என்பதை நாடகங்களுக்கூடாக, கட்டுரைகளுக்கூடாக நிறுவியிருந்தார்.**

வர்களில் பேராசிரியர் சிவத்தம்பியின் பங்கு மிகப் பெரியது. ஒரு காலத்தில் சிறப்பாக எழுபதுகளில் மார்க்சிய தத்துவ அடிப்படையில் தமிழ் நாடகங்களை தமது மாணவருக்கூடாக உருவாக்கினார். கலையும் சமூகமும் பிரிக்கப்பட முடியாத ஒன்று என்பதை நாடகங்களுக்கூடாக, கட்டுரைகளுக்கூடாக நிறுவியிருந்தார். அவர் பங்கு கொண்ட நாடகங்களின் பல்வேறு நிலைகளில் தான் சார்ந்த சமூகம் பற்றிய தேடல்கள், அங்கு தோன்றிய பிரச்சினைகள், அவற்றுக்கான பரிகாரங்கள் பற்றிய கருத்துகளையே நிலைப்படுத்தியிருந்தார்.

ஐம்பதுகளின் கடைப் பகுதியில் யதார்த்த நாடகங்களை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அறிமுகம் செய்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் நெறிப்படுத்தலில் நடிகனாக நாடக உலகில் அடியெடுத்து வைத்தவர் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள்.

சிறந்த மேடை நடிகனாக, நாடக ஆசிரியனாக, ஒப்பனையாளனாக, ஒளி அமைப்பாளனாக, நெறியாளனாகப் பின்னர் தன்னை வளர்த்துக் கொண்டவர்.

மேடை நடிகனாக மிளிர்ந்த காலை பேராசிரியர், தான் சிறந்த வானொலி நடிகன் என்பதையும் சமகாலத்தில் நிறுவியதோடு ‘விதானையர் வீடு’ என்ற நாடகத்தில் விதானையாராக வந்து தனது பெயரையும் நிலை நாட்டினார்.

அ.ந. கந்தசாமி என்பவரால் எழுதப்பட்டு, பேராசிரியர் சிவத்தம்பியால் நெறியாள்கை செய்யப்பட்ட ‘மதமாற்றம்’ என்ற நாடகத்தை ஆழ நோக்குகையில் மதமும் பண்பாடும் கொண்டுள்ள தொடர்பு எமக்கும் புலப்படும். மதம், சமூக பொருளாதாரம் மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்த முனையும் போது ஆன்மீக உணர்வு புறந்தள்ளப்படுவது இயல்பு என்றாகிது. இதுவே மதமாற்றம் என்ற நாடகத்தின் உட்கருவாகும்.

பேராசிரியர் சரச் சந்திர தயாரித்தளித்த சிங்கள கூத்துகளின் (மனமே, சிங்கபாகு) அருட்டலால் விழித்தெழுந்த பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இராவணேசன், கர்ணன் போர், வாலிவதை, நொண்டி நாடகம் என்பவற்றை மேடையேற்றலானார். இவற்றில் சில மட்டக்களப்பில் பாரம்பரியமாக ஆடப்பட்டு வந்த கூத்துகளாகும்.

இதில் இராவணேசன், கர்ணன் போர், வாலி வதை என்பன வடமோடியைச் சேர்ந்தவை. நொண்டி நாடகம் தென்மோடியைச் சேர்ந்தது. இவற்றை பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த அண்ணாவியார் செல்லையாவின் துணையுடன் அங்கு மேடையேற்றலானார். ஆனால் முழு நேர கூத்துகளை (இரவு முழுவதும் ஆடப்படுவது) சுருக்கி பிரதி செய்வதில் பேராசிரியர் சிவத்தம்பியின் பங்கு மிக முக்கியமாய் இருந்தது. அவற்றின் கட்டமைப்பு, பாத்திர உருவாக்கம் சிதையாமல் உருவாக்க வேண்டிய ஆலோசனைகளை அளித்து விறுவிறுப்பாக்கிய பெருமை பேராசிரியர் சிவத்தம்பிக்குரியது.

சிறப்பாக இன்னும் எம் கண்முன் வரும் - இராவணேசனாக வரும் பேராசிரியர் மௌன குருவின் பாத்திரப் படைப்புக்கு வித்திட்டவர் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களே. இராவணன் போருக்குப் புறப்படுவது முதல், போரிடுவது, போரில் தோல்வியின் பின்னரான அவனது உணர்வு வெளிப்பாடு என்பனவும் பேராசிரியர் சிவத்தம்பியின் உருவாக்கமே.

இவர் தமது கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக எழுதிய ‘DRAMA IN ANCIENT TAMIL SOCIETY’ என்ற ஆய்வு நூல் மிகப் பிரபல்யமானது. நாடக ஆய்வு செய்வோர் தவறாது படிக்க வேண்டிய இந்நூல் பின்னர் ‘பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்’ என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

gnanam.lambert@thaiveedu.com

■ ■ ■

# முடிவற்ற...

84ம் பக்கத் தொடர்ச்சி...

மாணவர்களோ அல்ல. அப்பல்கலைக் கழக ஆளுநர் அவை மிக நெடுங்காலமாகவே யாழ்ப்பாண மேலோங்கிகள், பழமைவாதிகள், ‘சிவாகம ஞானபானுக்கள்’, போன்றோரின் பிடியில் இருந்தது. பொன்னம்பலம் இராமநாதனைத் திருவுருவாகப் போற்றி வழிபடுகிற ஒரு மரபு அது. அந்த மரபுக்கு எதிரான கலகக் குரலான சிவத்தம்பி அவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எப்படித் தாங்கியிருக்க முடியும்?

4

1965 ஆம் ஆண்டு அவருடைய தந்தை காலமான போது வெளியிடப்பட்ட நினைவு மலரில் மகாகவியிடமிருந்து கவிதையொன்றை வாங்கிப் பிரசுரித்திருந்தார் சிவத்தம்பி அவர்கள்.

அன்று பிறந்து இன்று இறப்பதுள்
ஆயதன்று நம் மானிட வாழ்வுகாண்
அப்பனே மகனாகி வளர்ந்து
உயிர் ஓய்தல் அற்று
உயர்வு ஒன்றினை

நாடலே உண்மை என்பதுணர்க, கலங்கலீர்

என்று முடிகிறது அந்தக் கவிதை. அந்த வரிகள்தான் பிற்பாடு மகாகவியின் ‘ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்’ என்னும் புகழ் வாய்ந்த காவியத்துக்கு அடிக்கல்லாயிற்று. 1984இல் சிவத்தம்பி அவர்களின் சகலனும் சகலனின் புதல்வனும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்புகையில் வாகன விபத்தில் உயிரிழக்க நேரிட்டது. பயங்கரமான விபத்து அது. சிவத்தம்பி அவர்களின் குடும்பம், உற்றம், சுற்றம் எல்லாவற்றையுமே ஆழமாகப் பாதித்த விபத்து அது. இறந்தவர்களுடைய நினைவு மலரில் வெளியிடுவதற்காக சிவத்தம்பியவர்கள் கேட்டுக் கொண்டபடி நான் கொடுத்த கவிதைதான் யமன்.

மரணம்
காரணம் அற்றது, நியாயம் அற்றது
கோட்பாடுகளும் விழுமியங்களும்
அவ்வவ்விடத்தே உறைந்து போக

முடிவிலா அமைதி

என்ற வரிகள் அக்கவிதையில் வருகின்றன. இந்த வரிகளை விட இறப்பைப் பற்றிச் சொல்ல வேறென்ன சிறப்பு உள்ளது?

cheran@thaiveedu.com

■ ■ ■



**நா. சுப்ரமணியம்:** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இலக்கியத் திறனாய்வு, தமிழியல், இந்தியச் சிந்தனை மரபு ஆகியவை தொடர்பாக 100க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் 10 நூல்களும் வெளிவந்துள்ளன.



# தமிழ்த் திறனாய்வியல் வரலாற்றில் பேராசிரியர் கா. சிவத்தம்பி:

### தோற்றுவாய்:

அண்மையில் நம்மை விட்டுப்பிரிந்த பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்கள் பல்துறை ஆளுமைகொண்ட ஒரு பேரறிஞராவார். பல்கலைக்கழகத் தளத்தில் நின்று கல்விப்பணியாற்றிய அவர், அந்த எல்லைக்கப்பால் தமிழ் உலகில் பல்வேறு அறிவுத்துறையினராலும் இலக்கியவாதிகளாலும் நன்கறியப்பட்ட - அங்கீகரிக்கப் பட்ட - ஒரு சிந்தனையாளருமாவார். அவருடைய இத்தகு ஆளுமை விரிவின் அடிநாதமான அம்சமாக அமைந்தவை அவருடைய திறனாய்வியல் அறிவும் அத்தொடர்பிலான அணுகு முறைகளுமேயாகும். அவ்வகையில், ஒரு திறனாய்வாளராக அவர் இயங்கி நின்ற முறைமையும் தமிழ்த் திறனாய்வியல் வரலாற்றில் அவர் வகித்துள்ள பாத்திரமும் பற்றிய கணிப்புகள் மிக விரிவான தளத்தில் பெருநூலாக எழுதப்படவேண்டியவை. அவ்வாறான விரிநிலை ஆய்வுக்கு அடிப்படையாக அமையக்கூடிய முக்கிய அம்சங்களைப் பற்றிய ஒரு தொடக்க நிலைக் குறிப்பாகவே இக்கட்டுரை அமைகின்றது.

### மார்க்ஸியத் திறனாய்வாளர்:

சிவத்தம்பியவர்கள் மார்க்ஸியத் தத்துவத் தளம்சார்ந்த திறனாய்வாளர் என்பது பொது வாக அறியப்பட்ட செய்தியாகும். மார்க்ஸியம் என்ற தத்துவமானது சமூக - பொருளியல் நிலைகளில் அடக்கியொடுக்கப்பட்ட மக்கட் பரப்பின் விடுதலையை நோக்காகக் கொண்டு ‘இயங்கியற் பார்வை’யுடன் உருவானதாகும். அவ்வகையில் சிவத்தம்பியவர்கள், ‘கலை, இலக்கியம் என்பவற்றைச் சமூக உற்பத்தி அம்சங்களாகவும் சமுதாய வரலாற்றை இயக்கிநிற்கும் கருவி’களாகவும் தரிசிக்கும் திறனாய்வாளராக உருவாக்கம் பெற்றவர். இவ்வகையில், தமிழ்ச் சூழலின் திறனாய்வியல் வரலாற்றிலே அவர், 1950களின் நடுப்பகுதி யிலிருந்து ஏறத்தாழ அறுபதாண்டுக் காலம் தொடர்ந்து தனது ஆளுமையைப் பதிவு செய்து நின்றவராவார்.

இந்நீண்ட காலப்பகுதியில் அவர் செயற்பட்டு நின்ற முறைமையைக் காலகட்ட அடிப் படையில் இருவகைப்படுத்தலாம். இவற்றுள் முதலாவது காலகட்டம், ஆரம்பம் முதல் 1970களின் இறுதிப் பகுதி வரையானது. இக்காலப்பகுதியில் மார்க்ஸியத் திறனாய் வியல் அணுகுமுறையைத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற ஒன்றாக அறிமுகம் செய்வதில் முனைப் புடன் செயற்பட்டவர் அவர். இரண்டாவது காலகட்டமானது, 1970களின் இறுதிப்பகுதி முதல் 2011இல் இயற்கை எய்தும் வரையி லானது. இக்காலகட்டத்தில் அவரது இயங்கு நிலையானது, தமிழ்ச் சூழலில் மார்க்ஸியத் திறனாய்வியல் எதிர்கொண்ட ‘கோட்பாட்டுச் சிக்கல்’களுக்கும் புது வரவுகளான ‘அமைப் பியல் சார்பான சிந்தனை’களுக்கும் முகங் கொடுத்து, மார்க்ஸியப் பார்வையின் உள் ளார்ந்த ‘வீரிய’த்தைத் தமிழ்ச் சூழலில் நிலைநிறுத்தும் களப்பணியாக அமைந்தது.

### முதலாவது காலகட்டம் - அடிபதித்த சூழலும் ஆளுமை வெளிப்பாடும்:

சிவத்தம்பியவர்கள் திறனாய்வியலில் அடி பதித்த காலப்பகுதியானது மார்க்ஸியத் திறனாய்வியல் தமிழ்ச் சூழலுக்கு அறிமுக மாகிக் கொண்டிருந்த காலகட்டமாகும். தமிழிலே பண்டைக்காலம் முதலே திறனாய்வு சார் எண்ணக்கருக்களும் செயன்முறைகளும் நிலவிவந்துள்ளனவெனினும் ஏறத்தாழ கடந்த ஒரு நூற்றாண்டுக்காலப்பகுதியிலேயே அது ‘திறனாய்வியல்’ என்பதான திட்டப்பாங்கான ஒரு ஆய்வுமுறைமையாக உருவாக்கம் பெற் றது என்பது இங்கு நமது கவனத்துக்குரிய வரலாற்றம்சமாகும். திருமணம் செல்வக் கேசவராய முதலியார் (1864-1921) மற்றும் வ.வே.சு.ஐயர் (1881-1925) ஆகியோருடைய சில எழுத்துகளிலிருந்தே இவ்வாறான ஆய்வு முறைமை தமிழ்ச் சூழலில் உருவாகத் தொடங்கியது. இது தொடக்கத்தில் ஏறத் தாழ 40 ஆண்டுகள்வரை இலக்கியத்தை ஒரு கலையாக்கமாகக் கண்டு நயக்கும் நோக்கை மையப்படுத்தியதாகவே அமைந் ததாகும். நயப்புக்கான காரணிகளை கட்ட மைப்பு நிலையில் உள்ளடக்கம், உருவம், உணர்த்து முறை என்பனவாகப் பகுப்பாய்வு செய்து இனங்காட்டுவதே அக்காலப்பகுதியின் திறனாய்வியற் செயன்முறைகளாக அமைந் திருந்தன.

இவ்வாறான ஒரு வரலாற்றுக் கட்டத்திலே தான் 1940களில் மார்க்ஸியத் திறனாய்விய லானது தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமாகியது. அது உள்ளடக்கத்தின் சமூக அம்சத்துக்குத் தனி அழுத்தம் கொடுத்து, அதன் சமூகப் பெறுமானத்தையும் பயன்பாட்டு நிலையையும் வலியுறுத்தியது. இவ்வாறான இதனைத் தமிழ்ச் சூழலில் அறிமுகம்செய்து வேரூன்றவைத்த முதல் தலைமுறை மார்க்ஸியர் வரிசையி லேயே 1950களில் சிவத்தம்பியவர்கள் தமது உடன்கல்வித் தோழரான கைலாசபதியவர் களுடன் (1933-82) இணைந்து திறனாய்-வரங்கில் அடி பதிக்கிறார்.

இவ்வாறான முயற்சியில் அவர்களுக்கு முன்னோடிகளாக அமைந்தவர்கள் என்ற வகையிலும் ஏறத்தாழச் சமகாலத்திற் செயற் பட்டு நின்றவர்கள் என்றவகையிலும் பலர் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவர்கள். ப.ஜீவானந்தம், தொ.மு.சி. ரகுநாதன், ஆர்.கே. கண்ணன், எஸ்.இராமகிருஷ்ணன், நா.வான-மாமலை, தி.க. சிவசங்கரன், மு.கார்த்திகேயன், கே.கணேஷ், அ.ந.கந்தசாமி, கே. இராம-நாதன் மற்றும் இ.முருகையன் என இப் பெயர்ப்பட்டியல் தொடர்கிறது.

மார்க்ஸியத்திறனாய்வியலைத் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகம் செய்துநின்ற சமகாலத்தவர் பல ருள்ளும் சிவத்தம்பி மற்றும் கைலாசபதி ஆகிய இருவரும் ஒப்பீட்டு நிலையில் குறித்த சில அம்சங்களில் சிறப்பு ஆளுமைகளுடனும் வாய்ப்புகளுடனும் திகழ்ந்தவர்களாவர். மார்க்ஸிய இலக்கியநோக்கை ஆய்வுமுறை-யியலூடாக எடுத்துரைக்க வல்ல ஆய்வு - விமர்சகர்களாக (Scholar – Critics ஆக) திகழ்ந்தவர்கள் இவர்கள். உலகப் புகழ்பெற்ற மார்க்ஸியவியல் அறிஞரான ஜோர்ஜ் தொம்ஸன் என்பாரின் வழிகாட்டுதலில் தத்தம் கலாநிதிப் பட்டங்களுக்கான ஆய்வுப் புலமை யை வளர்த்துக் கொண்டவர்கள் இவர்கள் என்பது இத்தொடர்பில் நாம் மனங்கொள்ள வேண்டிய செய்தியாகும்.

**மார்க்ஸியத் திறனாய்வியல் அணுகுமுறையைத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற ஒன்றாக அறிமுகம் செய்வதில் முனைப்புடன் செயற்பட்டவர், அவர்.**

‘ஆளுமை’ என்றவகையில் குறிப்பிடத்தக்க இன்னொரு சிறப்பம்சம், பண்டைய சங்கப் பாடல்கள் முதல் அறஇலக்கியம், பக்தி இலக்கியம், காவியம், சிற்றிலக்கியம், நாவல், சிறுகதை, நவீன கவிதை, நாடகம் மற்றும் நாட்டார் வழக்கியல் என்பன வரையான அனைத்திலக்கியப் பரப்பயும் தழுவிச் சமகால இலக்கியம் வரையிலான தமிழிலக்கியப் பரப்பை முழுநிலையில் திரட்டிப்பார்த்துக் கருத்துக் கூறக்கூடிய அளவுக்கு இவர்கள் பெற்றிருந்த பார்வை விரிவு ஆகும்.

‘வாய்ப்பு’ என்றவகையில் குறிப்பிடத்தக்க அம்சம், இவர்கள் பல்கலைக்கழகம்சார் ஆய்வறிஞர்களாகத் திழ்ந்தமையாகும். இத னால் உயர்கல்விச் சூழலில், ஆய்வு மாணவர் கள் மத்தியில் - இவர்களால் தமது திறனாய் வியல் ஆளுமைகளைச் சிறப்பாகப் பதிவு செய்யமுடிந்தது. இவ்வாறான ஆளுமை அம்சங்கள் மற்றும் வாய்ப்புகள் என்பன மார்க்ஸியத் திறனாய்வியல் அணுகுமுறை யைத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற ஒன்றாக நிறுவுவதில் பெருந்துணை புரிந்தன. இத் தொடர்பில் பெருந்தொகையான கட்டுரைகளை இவர்கள் எழுதினர். அவற்றைத் தொகுத்து நூல்களாக வெளியிட்டனர். சமகாலத்தின் பல்வேறுவகை ஆக்க முயற்சிகளுக்கும் அணிந்துரை எழுதினர். தவிர, மார்க்ஸிய சார்பானதான சமகால ‘முற்போக்கு இலக் கிய இயக்க’த்தை வழிநடத்தும் முக்கிய தத்துவாசிரியர்களாகவும் இயங்கினர்.

இவற்றால் ஈழம், தமிழகம் உட்படத் தமிழ் கூறும் நல்லுலகு சார்ந்த பல்துறை இலக் கியவாதிகளின் கவனிப்பையும் கணிப்பையும் இவர்கள் எய்தினர். 1970களின் நடுப்பகுதி வரையான சிவத்தம்பியவர்களின் திறனாய்-வியல் இயங்குநிலையானது இவ்வாறு தான் நமது காட்சிக்கு வருகின்றது. இக்காலப்பகுதி சார்ந்த இவருடைய திறனாய்வியல்சார் முக்கிய எழுத்தாக்கங்கள் என்றவகையில் ‘தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சி யும்’ (1966), ‘நாவலும் வாழ்க்கையும்’ (1978) முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

### இரண்டாவது கட்டம் - கோட்பாட்டுச் சிக்கல்களையும் புதுவரவுகளையும் எதிர்கொண்டமை:

1970களின் இறுதிப்பகுதிக்குப் பிற்பட்ட கால கட்டத்தில் சிவத்தம்பியவர்களின் ஆய்வுசார் செயற்பாடுகள் ஈழம் என்ற புவியெல்லைக்கு அப்பால் குறிப்பாகத் தமிழகச் சூழலின் சமகால இலக்கியத் தினாய்வுச் சூழல்சார்

*தொடர்தல் 88ம் பக்கம்*

அநுபவங்களை மையப்படுத்தி விரிவடையலாயிற்று. தமிழக அரசு, தமிழகப் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயராய்வு நிறுவனங்கள் ஆகியவற்றின் அழைப்புக்கிணங்க அம்மண்ணுக்குப் பலமுறை பயணங்கள் மேற்கொள்ளவும் மாதக்கணக்கில் அங்கு தொடர்ந்து வாழ்ந்து ஆய்வுகளை மேற்கொள்ளவும் அவர் வாய்ப்புப் பெற்றார். அவ்வாறான சூழல்களில் அம்மண்ணின் படைப்பாளிகள், திறனாய்வாளர்கள் ஆகியோருடன் நெருக்கமான உறவுகளைத் திட்டப்பாங்குடன் பேணிய அவர், சமகாலத்தில் புலம்பெயர் சூழல்களின் இலக்கியவாதிகளுடனும் சீரிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். இவ்வாறான இலக்கியத் தொடர்புகளில், 'மார்க்ஸியத் திறனாய்வியற் பார்வை சார்ந்த கோட்பாட்டுச் சிக்கல்களையும் அமைப்பியல் சார்ந்த புதுவரவான சிந்தனைகளையும் அவர் எதிர்கொண்டார்.

இங்கு கோட்பாட்டுச் சிக்கல்கள் எனப்படுவன 'மார்க்ஸியத்துக்கான பொருத்தமான திறனாய்வுப் பார்வை எது?' என்பதை வரையறை செய்துகொள்வது தொடர்பானதாகும். மார்க்ஸியம் என்ற தத்துவம், தான் உருவான காலகட்டத்தில் தனக்கெனக் கலை, இலக்கியக் கோட்பாடுகளை உருவாக்கிக்கொண்டிருக்கவில்லை. அதன் மூலவர்களான கார்ல் மார்க்ஸ் (Karl Marx- 1818 - 1883) மற்றும் பிரடெரிக் ஏங்கல்ஸ் (Friedrich Engels 1820-1895) ஆகியோர் அவை தொடர்பான சில கருத்துகளை மட்டுமே அவ்வப்போது முன்வைத்து வந்துள்ளனர். ரஷ்யாவில் மார்க்ஸிய அரசியல் முன்னெடுக்கப்பட்ட சூழலில் ஸ்டாலினுடைய ஆட்சியிலே அவருடைய ஆசியுடன் 1934இல் சோஷலிஸ யதார்த்தவாதம் என்னும் பெயரில் ஒரு கோட்பாடு உருவாக்கப்பட்டது. சோஷலிஸ அரசியலுக்கு முதன்மையளித்துப் படைப்பாளியின் சுயதேர்வுச் சுதந்திரம், அழகியல்சார் அநுபவ நிலைகள் முதலானவற்றைப் பின்தள்ளுவதான தொனிப்பொருள்கொண்ட இதுவே தமிழ்ச் சூழலில் மார்க்ஸியத் திறனாய்வியல் அறிமுகமான 1940 - 60 காலப்பகுதியில் கோட்பாட்டு வடிவில் எடுத்துரைக்கப்பட்டது. 1970கள் வரை இதுவே தமிழ்ச் சூழலில் வலியுறுத்தப்பட்டுவந்தது.

இதற்கு மாற்றாக, படைப்பாளிகளின் அநுபவ அம்சங்களுக்கும், அவை படைப்பாகக் கட்டமைப்பெய்தும் நிலைகளுக்கும் உரிய மதிப்பளித்து விமர்சிப்பதான நோக்கிலான மார்க்ஸிய இலக்கியச் சிந்தனைகள் சில தமிழ்ச் சூழலில் 1970களில் அறிமுகமாயின. வாழ்வின் அநுபவ அம்சங்களிலிருந்தே இலக்கியம் பிறக்கின்றது என்ற அடிப்படையில் உருவான பார்வைகள் இவை. 'படைப்பாளி தனது அரசியற் சார்பை (வர்க்கச் சார்பை) எழுத்திலே வலிந்து புகுத்த முற்படும் நிலையில் படைப்பின் அநுபவ அம்சத்துக்கும் அது சார்ந்ததான கலைத் தன்மைக்கும் ஊறு நேர்ந்துவிடும்' என்பதான எச்சரிக்கையுணர்வினடியாக வெளிப்பட்ட சிந்தனைகளே இவை. மார்க்ஸிய மூலவர்களிலொருவரான ஏங்கல்ஸ் மற்றும் ரஷ்யாவில் மார்க்ஸிய அரசியலை முன்னெடுத்தவர்களில் முக்கியமான ஒருவரான லியோன் ராட்ஸ்கி (Leon Trotsky) ஆகியோரிடம் கருக்கொண்டிருந்த இவ்வாறான எண்ணக் கூறுகள் பின்னர் ஜேர்ஜ் லூகாக்ஸ்(Georg Lukacs, 1885-1971), அந்தோனியோ கிராம்சி (Antonio Gramsci, 1891-1937), ஹேபர்ட மார்க்யூஸ் (Herbert Marcuse, 1898-1979), பியர் மெஷரி (Pierre Meshery, 1938-) முதலிய (ரஷ்யாவுக்குஅப்பாலான) ஐரோப்பியநாடுகள் சார்ந்த மார்க்ஸியச் சிந்தனையாளர்களால் வளர்த்தெடுக்கப்பட்டன. இவ்வாறான பார்வைகள் பலவும் பொதுவாக விமரிசன யதார்த்த வாதம் என்ற 'படைப்பியற் கொள்கை'யாக இனங்காணப்படுவனவாகும்.

அழகியலுக்கு முதன்மையளிக்கும் இவ்வகைச் சிந்தனைகள் மார்க்ஸியத்தின் வர்க்கப் போராட்ட உணர்வெழுச்சியை மழுங்கடிக்கக் கூடியவை என்ற வகையிலான கருத்தோட்டம் மார்க்ஸிய இலக்கியவாதிகளுள் ஒருசாராரிடையே அக்காலப்பகுதியில் நிலவியது. இன்றுவரை அவர்களிடம் அச்சிந்தனை தொடர்கின்றது. இதற்கு நேரெதிரான நிலைப்பாட்டை மார்க்ஸியருள் இன்னொரு சாரார் மேற்கொண்டனர். இவர்கள், படைப்பாளுமைக்கு மதிப்பளிப்பதான இவ்வாறான புதிய சிந்தனைகள் மார்க்ஸியத்துக்குப் புதுவாழ்வளிக்கும் என்று கருதி வரவேற்றனர்.

இந்த முரண்பாட்டிலே இரண்டினதும் 'சாதக – பாதக' அம்சங்களை ஒரு 'கொள்கைத் தெளிவுள்ள' மார்க்ஸியவாதியாக நின்று நிதானித்து வரலாற்றுப் பார்வையுடன் விளக்கியுரைக்கும் பணியை சிவத்தம்பியவர்கள் மேற்கொண்டார். ரஷ்யாவுக்கு அப்பாலான ஐரோப்பிய மண்ணில் உருவான மார்க்ஸிய சிந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியன என்பதையே அவர் தமது எழுத்துகளிலும் கருத்தரங்க உரைகளிலும் பலமுறை வலியுறுத்தி வந்துள்ளார். இத்தொடர்பிலே, அவர் தமது இலக்கியமும் கருத்துநிலையும் என்ற நூலில் முன்வைத்துள்ளதான, "இலக்கியம் என்பது வெறும் கருத்துக் கோவையன்று. அது அழகுணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது. கருத்தாழமற்ற, ஆனால் கலையழகுள்ள ஓர் ஆக்கம் இலக்கியமாகக் கருதப்படலாம். ஆனால் கலையழகற்ற கருத்தாழமுற்ற ஆக்கம் இலக்கியமாகாது." என்ற குறிப்பு (1982. ப.19) முக்கியமானது.



நிழற்படம்: சாந்தன் (இங்கிலாந்து)

**இலக்கியம் என்பது வெறும் கருத்துக் கோவையன்று. அது அழகுணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது. கருத்தாழமற்ற, ஆனால் கலையழகுள்ள ஓர் ஆக்கம் இலக்கியமாகக் கருதப்படலாம். ஆனால் கலையழகற்ற கருத்தாழமுற்ற ஆக்கம் இலக்கியமாகாது.**

1980களில் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமான வையான அமைப்பியல் மற்றும் பின் அமைப்பியல் சிந்தனைகள் கலை, இலக்கியம் என்பவற்றுக்கு உளவியல், மொழியியல் சமூகவியல் முதலான அறிவியல் தளங்களில் விளக்கம் தர முற்பட்டவையாகும். இவற்றின் தொடர்ச்சியாகத் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமான பின் நவீனத்துவ சிந்தனைகள் அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் நலன்கருதிய - குறிப்பாகத் தலித்தியம், பெண்ணியம் மற்றும் விளிம்பு நிலை வாழ்வியல் என்பன சார்ந்த - நுட்பமான பார்வைகளையும் அணுகுமுறைகளையும் முன்னிறுத்தின. மார்க்ஸிய தத்துவத்தைப் பின் - மார்க்ஸியம் (Post - Marxism) என்பதான நிலைக்கு இட்டுவந்து விளக்கம் தரும் நிலையையும் பின் நவீனத்துவத்தில் நோக்கியறியலாம். இவையாவும் தமிழ்த் திறனாய்வியற் சூழலின் 1980க்குப் பிற்பட்டதான சமகால நிலைமைகளாகும்.

இவ்வாறான புதிய வரவுகளை, 'கொள்கைத் தெளிவுள்ள ஒரு மார்ஸியவாதி எவ்வாறு எதிர்கொள்ளவேண்டும்?' என்பதையும், 'இவை தொடர்பில் நாகரிகமான முறையில் விவாதங்களை எப்படி மேற்கொள்ளலாம்?' என்பதையும் சிவத்தம்பியவர்கள் தமது எழுத்துகளிலும் உரைகளிலும் நமக்கு உணர்த்தியுள்ளார். மேற்படி புதிய வரவுகளின் அம்சங்கள் சில, மார்க்ஸியத்தினுடைய 'சமூகப் பயன்பாடு' என்ற அடிப்படை நோக்கினை எவ்வாறு மறுதலிக்கின்றன என்பதையும்



'முதலாளித்துவ'த்தின் 'மறைமுகக்கரங்'களும் 'பகுத்தறிவுக்கொவ்வாத பார்வை'களும் எந்த அளவுக்கு இவற்றில் தொழிற்படுகின்றன என்பதையும் இவர் விரிவாகவே சிந்தித்து எடுத்துரைத்துள்ளார்.

அந்நிலைமைகளில் மார்க்ஸியத்தின் உள்ளார்ந்த 'வீரிய' அம்சங்களை நுட்பமாக எடுத்துரைத்து அதனை நிலை நிறுத்தும் ஒரு 'தளகர்த்தர்' ஆக அவர் பொறுப்புணர்வுடன் செயற்பட்டார். தமது உடன் தோழரான கைலாசபதியவர்கள் 1982இல் இயற்கை எய்தியதன் பின்னரான வரலாற்றுக்கட்டத்தில் சிவத்தம்பியவர்கள் தனிநிலையில் எதிர்கொள்ள நேர்ந்த பிரச்சினைகள் இவை என்பதும் இம்முயற்சியில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும் பெற்றுள்ளார் என்பதும் இங்கு மனங்கொள்ளவேண்டியன.

மேற்சுட்டியவாறான கோட்பாட்டுச்சிக்கல்கள் மற்றும் புதுவரவுகள் எனபவற்றை எதிர்கொள்வது தொடர்பாக சிவத்தம்பியவர்கள் வெளிப்படுத்திய சிந்தனைகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் எழுதிய கட்டுரைகள், நூல்கள் மற்றும் நேர்காணல் பதிவுகள் முதலியவற்றில் கண்டு தெளியலாம். இவ்வகையில் தனிக் கவனத்துக்குரிய முக்கிய ஆக்கங்களாக, இலக்கியமும் கருத்துநிலையும்(1982), ஈழத்துத் தமிழிலக்கியத் தடம் - பார்வையும் விமர்சனங்களும்(2000), நவீனத்துவம் - தமிழ் - பின் நவீனத்துவம்(2001), விமர்சனச் சிந்தனைகள் (2001), கார்த்திகேசு சிவத்தம்பியின் நேர் காணல்கள் (2003), கார்த்திகேசு சிவத்தம்பி - இலக்கியமும் வாழ்க்கையும் (2005) முதலிய நூல்களையும் கணையாழி 1999 ஆகஸ்ட், நவம்பர் இதழ்களிலிடம்பெற்றுள்ள அவரது இரு கட்டுரைகளையும் குறிப்பிடலாம்.

மேற்படி கோட்பாட்டம்சங்கள் தொடர்பாகவும் புதிய வரவுகள் தொடர்பாகவும் நமது சமகாலத்தில் இவ்வாறு ஆழமானதும் நாகரிகமானதுமான திறனாய்வியல் விவாதங்களுக்குள் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளக் கூடிய தனியொரு ஆளுமையாக சிவத்தம்பியவர்களே திகழ்ந்துள்ளார் என்பதும் இங்கு பதிவுசெய்யப்படவேண்டிய வரலாற்றுண்மையாகும். அவரது நாகரிகமான விவாத அணுகுமுறை தமிழகத்தினரை மிகவும் கவர்ந்த ஒன்றாகும். இதற்கு, அம்மண்ணின் நமது தலைமுறையின் முக்கிய திறனாய்வாளராகத் திகழ்பவரும் அமைப்பியலைத் தமிழுக்கு அறிமுகஞ்செய் தவருமான தமிழவன் அவர்களின்,

"...அவரது அந்த விளக்கத்தில் என்னைக் கவர்ந்த முதல் விஷயம் எவ்வளவு நாகரிகமாக விவாதம் செய்யவேண்டும் என்று அவர் கற்பிக்கிறார் என்பது. வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டவுடன், உணர்ச்சிவசப்பட்டு ஆக்ரோஷம் கொள்ளும் நம் சூழலில் பேரா. கா. சிவத்தம்பி சொல்லித்தரும் இந்தப்பாடம் விவாதத்தில் ஈடுபடுபவர்கள் கண்டிப்பாகக் கற்றுக்கொள்ளத்தக்கது." என்ற கூற்று (கணையாழி டிசம்பர்.1999.ப..3) சான்று பகர்வதாகும்.

நிறைவாக...


தோற்றுவாயிற் குறித்தது போல இது ஒரு தொடக்கநிலைக் குறிப்பாக மட்டுமே கொள்ளப்படவேண்டும். மேற்படி இரண்டாவது கட்டத்திலே 'தமிழ்க் கவிதையியல்' பற்றி ஆழமாகச் சிந்தித்தவர். அச்சிந்தனைகள் சார்ந்த எழுத்துகள், தொல்காப்பியமும் கவிதையும்(2007) மற்றும் தமிழின் கவிதையியல் (2007) ஆகிய தலைப்புகளிலான நூல்களிற் பதிவாகியுள்ளன. இவற்றையும் உள்ளடக்கி அவரது திறனாய்வியற் பங்களிப்புகள் தொடர்பான இப்பார்வை எதிர்காலத்தில் மேலும் விரிவுபெறும்.

subramanian.n@thaiveedu.com

■ ■ ■

கெழும்பிருந்து வெளியாகும் ஞானம் இதழுக்கு பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி வழங்கிய நேர்காணலிலிருந்து சில பகுதிகள். பேராசான் சிறப்பிதழின் முக்கியத்துவம் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.
நேர்கண்டவர் தி. ஞானசேகரன்.

# பேராசிரியரின் நேர்காணலிலிருந்து...



நிழற்படம்: சாந்தன் (இங்கிலாந்து)

**● தமிழ் இலக்கியம், சமூகம், பண்பாடு, தமிழ் இலக்கிய விமர்சனம் ஆகிய பல்வேறு துறைகளில் பணியாற்றியுள்ளீர்கள். இந்தப் பின்னணியில் நீங்கள் உங்களை எவ்வாறு இனங்காண்கிறீர்கள்?**

என்னுடைய விசேட ஆய்வுத்துறைகளென நீங்கள் சொன்னவற்றை உள்ளடக்கி நான் இவற்றை நான்காகப் பிரிப்பது வழக்கம். 1. தமிழரின் சமூக இலக்கிய வரலாறு. 2. தமிழரிடையே பண்பாடும் தொடர்பாடலும். 3. தமிழ் நாடகம் 4. இலக்கிய விமர்சனம்.

உண்மையில் இவை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கக்கூடிய ஒரு நிலைமை வந்ததற்குக் காரணம், எனக்குத் தமிழிலக்கியத்திலும் தமிழ்ச் சமூகத்திலும் தமிழ்ச் சமூக வரலாற்றிலும் அதனால் அதனுடைய பண்பாட்டிலும் உள்ள ஈடுபாடுதான். ஒரு சமூகத்தைப் பார்க்கும்போது அதனுடைய பண்பாட்டினை எவ்வாறு புரிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கினை ஒட்டுமொத்தமாக முற்றுமுழுதாகப் பார்க்கவேண்டுமென்பது என்னுடைய மார்க்ஸிய தாடனம் காரணமாக, மார்க்ஸியத்தில் இருந்த ஆர்வம் காரணமாக அவ்வாறு பார்க்கின்ற ஒரு தன்மையொன்று ஏற்பட்டது. சமூக நிலைகொண்டு அதனுடைய அடித்தள நிலையிலிருந்து பார்க்கிற தன்மை வளர்ந்தது என்று கருதுகிறேன். இதனால் உண்மையில் என்னுடைய ஆய்வு ஈடுபாடு என்று சொல்கிறவற்றில் இந்த நான்கையும் நான் உள்ளடக்குவேன்.

**● தொடர்பியல் பற்றிய ஈடுபாடு ஏற்படக் காரணமாக இருந்த பின்னணியைக் கூறுங்கள்?**

1973,74 இல் களனி வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தில் தொடர்பியல் (Communication) படிப்பிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. கைலாசபதியும் நானும் செய்தோம். அவர் யாழ்ப்பாணம் சென்றதும் முழுப் பொறுப்பையும் பொறுப்பேற்றுச் செய்யவேண்டிய கடமை எனக்கிருந்தது. ஏற்கனவே வானொலியுடனான தொடர்பு நிறைய இருந்தது. பத்திரிகை இயங்குவது பற்றிய ஒரு பரிமட்டமான அறிவும் இருந்தது. இதை வைத்துக்கொண்டு தொடர்பியல் எவ்வாறு உள்ளது? அது எமது சமூகத்துள்ளும் எங்கள் பண்பாட்டுள்ளும் எவ்வாறு தொழிற்படும் Culture and Communication எவ்வாறு இருக்கும் என்பது பற்றியும் நான் பல கட்டுரைகள் எழுதினேன். இதனால் தான் Tamil film as a medium of political communication என்பது பற்றி எழுதினேன். எம்.ஜி.ஆருடைய பாடல்கள் ஏன் முக்கியமானவை என்பது பற்றியெல்லாம் சொன்னேன். அதுமட்டுமல்ல நாடக நடிகர்கள் அரசியல் வாதிகளாகவும் இருக்கிறதுக்கான தொடர்பியல் காரணங்கள்பற்றி அமெரிக்க சஞ்சிகை ஒன்றிற்கு எழுதினேன். Politicians as players அது 1971ஆம் ஆண்டிலேயே எழுதியது. அதனை தி.மு.க. மொழிபெயர்த்துப் போட்டது. அந்தக் கட்டுரைகள் தொடர்பியல் துறையில் உள்ளவர்களால் இன்றுவரைக்கும் பேசப்படுகிறது. இக்கட்டுரைகள் எல்லாம் ஆங்கிலத்தில் வந்தவை. அதன்பின்பு ஏன் தமிழ் சினிமா நாடகத்திலும் பார்க்க முக்கியமானது? தமிழ் நாட்டில் சினிமா ஏன் முக்கியத்துவத்தைப் பெற்றது? என்பதற்கான விவாதங்கள் எல்லாம் அதில் இருந்து பிறந்தன. எப்படி எம்.ஜி.ஆர் தமிழ் நாட்டில் உள்ள சகலருக்கும் பொதுவான ஒரு தலைவனாக மாறினார்? தமிழ்ச் சமுதாயத்திற்கு இவரால் ஏதாவது பலன் உண்டா? என்.டி.ராமராவ் தலைவனாக வந்தார். இது தென் இந்திய சமுதாயம் முழுவதற்கும் ஏற்புடையதாக இருந்தாலும் வட இந்தியாவுக்கு வரவில்லை. இந்த விடயங்களையெல்லாம் விவாதித்தோம். இதில் ஆராய்வது படிப்பித்தலுக்கு உதவியாக இருந்தது. இப்படி ஒன்றுக்கொன்று ஆதரவாக அமைந்தது. இது பண்பாடும் தொடர்பியலும் பற்றி நான் செய்த வேலைகளில் சில.

**● உங்களது வளர்ச்சியில் யார் யார் முக்கியமானவர்களாக நீங்கள் கருதுகிறீர்கள்?**

என்னுடைய ஆளுமை வளர்ச்சியில் நான் நான்கு அம்சங்களை பிரதானப்படுத்தவேண்டி வரும்.

- நான் பிறந்துவளர்ந்த குடும்பச் சூழல். என்னுடைய பெற்றோர் உறவினர் சம்பந்தப்பட்ட நிலை.
- என்னுடைய ஆசிரியர்கள்.
- என்னுடைய நண்பர்கள்.
- என்னுடைய கருத்துக்களை எதிர்ப்பவர்கள்.

**● உங்களை எதிர்த்தவர்களும் உங்களை வளர்த்ததாகக் கூறினீர்களே...!?**

இதை நான் ஒரு வரட்டுத்தனமாகக் கூறவில்லை. அவர்களால் நான் சில விடயங்களைக் கூடுதலாகப் படிக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் என்னைப் பற்றி ஒன்றைக் கூறும்போது அதைப்பற்றி நான் கூட ஆராய வேண்டியிருக்கிறது. நான் யாருடன் வாதாடுகிறேனோ அவர்களும் என்னை வளர்த்தார்கள்.

மற்றவர்களுடன் எதிர்த்து சம்வாதம் செய்கிறபோது, அவர்களும் விஷயம் தெரிந்தவர்கள் தான். பண்டிதர் இளமுருகன், பண்டிதர் நடராஜா இவர்கள் எல்லோரும் சில்லறை ஆட்கள் அல்ல. இளமுருகன் எனது தந்தையாரின் ஆசிரியர் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன். எனது தந்தையாரின் வகுப்புச் சகபாடி. இளமுருகன் எனது ஐயாவுக்கு ஒருமுறை எழுதினார். 'முற்போக்குக்காரர்களுக்கு எதிராக நாங்கள் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஒரு கூட்டம் கூடுகிறோம்', அதற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். பண்டிதர்களை அழைத்திருந்தார். அழைப்பிதழில் இன்னார் இன்னார் பேசுகிறார்கள் என்று போடப்பட்டிருந்தது. எனது பெயரும் அதில் இருந்தது. ஐயா கூட்டத்துக்குப் போகவில்லை. 'நீங்கள் அழைப்பிதழில் குறிப்பிட்ட ஒருவர் எனது மகன்' என்று ஐயா இளமுருகனாருக்குப் பதில் அனுப்பியிருந்தாராம்.

> **ஒரு முறை, 'அசையாத குட்டை நீரல்ல மரபு' என்று நான் எழுதினேன். இளமுருகனார் சொன்னார், 'அசையாத குட்டை நீரன்று மரபு' என்றிருக்க வேண்டும். 'அல்ல' என்று இருக்கக்கூடாது. ஒருமைக்கு 'அன்று' தான் வரும். பன்மைக்குத்தான் 'அல்ல' வரும். அதை நான் இன்றுவரைக்கும் மறக்கவில்லை.**

ஒரு முறை, 'அசையாத குட்டை நீரல்ல மரபு' என்று நான் எழுதினேன். இளமுருகனார் சொன்னார், 'அசையாத குட்டை நீரன்று மரபு' என்றிருக்க வேண்டும். 'அல்ல' என்று இருக் கக்கூடாது. ஒருமைக்கு 'அன்று' தான் வரும். பன்மைக்குத்தான் 'அல்ல' வரும். அதை நான் இன்றுவரைக்கும் மறக்கவில்லை. அவர்களிடம் படித்ததை மறக்க முடியாது. இலக்கணப் பிழை பிழைதானே! நான் அதற்காக இலக் கணம் படித்தேன். அவர்களுக்கு வந்த பிரச் சினை என்னவென்றால், அவர்கள் தொல்காப்பியத்தை, நன்னூலை தங்களுடையது என்று நினைத்துக் கொண்டிருக்க, நாங்களும் தொல்காப்பியத்தை, நன்னூலை எடுத்துக் காட்டிக் கையாளும்பொழுது சிக்கல் ஏற்பட்டது. ஆங்கில மரபில் நாங்கள் எழுதவேண்டிய தேவைகள் ஏற்பட்டன. மற்றவர்களுடன் எதிர்த்து வாதாட வேண்டிய தேவையும் இருந்தது. தெளிவு இல்லாமல் வாதாட முடியாது. ஆகையால் எங்களுடைய எதிரிகளும் எங்களை வளர்த்தார்கள்; வளர்க்கிறார்கள். நான் இதனைக் கிண்டலாகச் சொல்லவில்லை.

**● உங்களது குடும்பப் பாரம்பரியத்தில் இருந்து ஆளுமையின் சிலகூறுகள் உங்களுக்கு வந்திருப்பதாகக் கூறினீர்களே. முற்போக்குப் பார்வையில், பாரம்பரியத்தில் இருந்து இவையெல்லாம் வந்தன என்பதை ஏற்க முடியுமா?**

அது ஒரு முக்கியமான கேள்வி. இந்தக்

தொடர்தல் 91ம் பக்கம்



**தேவகாந்தன்:** ஈழத்தில் 'ஈழநாடு' தமிழ்த் தேசிய நாளிதழின் ஆசிரிய குழுவில் கடமையாற்றியவர். 1968இல் படைப்பிலக்கியப் பிரவேசம். பெற்ற பரிசுகள்: லில்லி தேவசிகாமணி இலக்கியப் பரிசு, கல்கி நினைவு இலக்கியப் பரிசு, திருப்பூர் தமிழ்ச் சங்க இலக்கியப் பரிசு, தமிழ்நாடு நாவல் இலக்கியப் பரிசு போன்றன. 'கனவுச் சிறை' மகாநாவல், 'யுத்தத்தின் முதலாம் அதிகாரம்', 'கதாகாலம்', 'நெருப்பு' போன்ற பதின்மூன்று நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன.



## பேராசிரியர் கா. சிவத்தம்பி

# அஞ்சலியாய் ஒரு நினைவுப் பகிர்வு

**ஐயா,** 'பேராசிரியர் கா.சிவத்தம்பி மாரடைப்பால் காலமானார்' என என் நண்பரொருவர் கூறியபோது அதிர்ந்துதான் போனேன். அந்த அதிர்வு அடங்கி ஒரு மாய இருட் போர்வையாக செய்தி மட்டும் மனத்தின் ஒரு மூலையிலிருந்து மெல்ல மெல்ல வியாபகமாகி வந்தது. எந்த மதுவுக்கும்கூட கட்டுப்படாத ஆக்ரோஷம் கொண்டிருந்தது அந்தச் சோகம்.

ஈழத்துக் கல்விப் புலத்தின் பெருமைசால் ஆல விருட்சம் அடியோடு சாய்ந்ததான அறிஞர் கூட்டத்தின் பிரலாபிப்புகள் இணைய இதழ்களில், வார இதழ்களில் வந்தபடி இருந்தன. மனம் சலசலத்தது. உங்கள் மறைவு உண்மையில் ஈடுசெய்ய முடியாததுதான். ஆனால் இந்த அறிஞர் குழாம் எழுப்பும் கூறுகளினூடாக அல்ல, மாறாக அவரைப் புரிந்துகொண்ட கோணங்களினூடாக அந்த இழப்பினை நான் உள்வாங்குகிறேன்.

பேராசிரியர் சிவத்தம்பி இளகிய மனமும், சகஜமான குணபாவமும், சமூக அக்கறையும், சீரிய அறிவுத் திறனும் மிக்கவர் என கனடா எழுத்தாளர் இணையம் நடாத்திய அஞ்சலிக் கூட்டத்தில்கூட பலர் எடுத்துரைத்திருந்தார்கள். இத்தகைய உங்கள் குணநலன்களில் யாருக்குத்தான், என்ன மாறுபாடு இருந்துவிட முடியும்? நான் இலக்கியகாரன். அதனால் அது குறித்த விஷயங்களிலேயே என் அக்கறை பற்றுக் கம்பியெறிந்து படரமுடியும். உங்கள் அறிவுப் புலம் விரிந்த மற்றைய துறைகள், குறிப்பாக நாடக, இசை, அரசியல் துறைகள்பற்றி நான் இங்கே சொல்லப் போவதில்லை.

இலக்கிய விமர்சனத்தின் ஊடாக நீங்கள் கண்டடைந்த எழுத்துக்களில் நவீன இலக்கியத்தின் ஒரு தீவிர வாசகனோ படைப்பாளியோ வேறு கண்டடைதல்களைச் செய்து முரண்நிலையடைய நிறைய வாய்ப்பிருக்கிறது. அவை குறித்தும் பேசும் தருணமில்லை இது.

நான் உங்களிடம் நேரடியாய்ப் பயின்றவனில்லை. உங்களது ஊரைச் சேர்ந்தவனுமில்லை. ஆனாலும் உங்களது எழுத்துக்களையே பாடங்களாகக்கொண்டு நீண்டகாலம் பயின்ற மதிப்பு மட்டுமே கொண்டவன்.

பயணத் திசை ஒன்றாய் இருப்பவர்கள் வேறு வேறு வழிகளில் பயணிப்பது நடக்கக்கூடியதுதான். இந்த ஒருதிசை வழிப் பயணங்களில் இலக்குகளும் வேறாக இருக்கக்கூடும். ஆனாலும் அதை விளக்குவதற்கான சந்தர்ப்பமல்ல இது. பின்னாளில் ஒரு விளக்கத்துக்கான தேவை கருதி இந்த விஷயங்களை மேலோட்டமாகச் சொல்லிக்கொண்டு மேலே செல்கிறேன்.

ஐயா, உங்களை உங்கள் எழுத்துக்களினூடாகவும், செய்திகளினூடாகவும் மட்டுமே அறிந்திருந்த நான், எப்போது எப்படி நேர்முகமாக அறிய நேர்ந்தேன் என்பதை என்னால் நினைவுகொள்ள முடியவில்லை. ஆனாலும் அது அநேகமாக தமிழ்நாட்டில் நான் வாழ நேர்ந்த காலத்தில், நீங்கள் வருகைதரு பேராசிரியராக சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியபோது நிகழ்ந்திருக்கலாம் என ஒரு ஞாபக முடிச்சு அவிழ்ந்து சுடர்விரிக்கிறது.

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தரமணி வளாகத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் தமிழாய்வு விழாவில்தான் அந்த முதல் சந்திப்பு நடந்ததாக இருக்கவேண்டும். காலை முதல் மாலைவரை இரண்டு மூன்று நாட்களுக்கு அவ்விழா நடைபெறும். என்னை நானே எப்போதும் எவருக்கும் அறிமுகப்படுத்தியதில்லையென்பது என்னளவில் இன்றுமிருக்கும் என் கர்வம். என் அடங்கிய சுபாவத்துக்கு இது ஒத்துப்போகும் குணாம்சமாக நிச்சயமாக இருக்கமுடியும். ஒரு விழா நாளில் மதியபோசனத்துக்கான இடைவேளையில் ஈரோடு தமிழன்பனோ, தமிழவனோ யாரோ என்னை உங்களுக்கு ஒருசமயம் அறிமுகமாக்கிய பொழுதில், என் பெயரைக் கேள்விப்பட்டிருப்பதாகவும், எழுத்துக்கள் எதையும் வாசித்ததில்லையென்றும் நீங்கள் கூறினீர்கள். அதற்கு என்னை அறிமுகம் செய்துவைத்தவர், 'என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? உங்கள் நாட்டைச் சேர்ந்தவர், இங்கே நீண்ட காலமாய்த் தங்கியிருக்கிறார், இரண்டு மூன்று நூல்கள் வெளிவந்திருக்கின்றன, இங்கிருந்தே 'இலக்கு' என்கிற சிறுபத்திரிகையைக் கொண்டு வருகிறார்' என்று சொன்னார். அப்போதுதான் என்னை அருகே அமர வைத்து என்னைப் பற்றி விசாரித்தீர்கள். மதியபோசன இடைவேளை முடியும் நேரமாதலால், சென்னைப் பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் தங்கியிருப்பதாகவும், வசதியானவேளையில் வந்தால் நிறையப் பேசலாம் என்றும் கூறி என்னை அனுப்பினீர்கள்.

அதன் பின்னர் மெரினா கடற்கரைப் பக்கம் வரநேர்ந்த ஓரிரு சமயங்களில் நான் உங்களை வந்து சந்தித்திருக்கிறேன். நாளாக ஆக, நீங்கள் விடுமுறையில் இலங்கை சென்றுவிட்டு, திரும்பிவந்த பின்னர் கி. பார்த்திபராஜா போன்ற அப்போதைய எம்.ஏ. வகுப்பு பயிலும் மாணவர்களிடம் உங்களை வந்து பார்க்கும்படி செய்தி அனுப்புவீர்கள். என் வீடு தெரிந்திராவிட்டாலும், நடைபெறும் ஏதாவது ஓர் இலக்கியக் கூட்டத்தில் என்னைச் சந்திக்கும்போது அவர்கள் தகவலைத் தெரிவிப்பார்கள். நானும் முடிந்த விரைவில் ஒரு மாலைப் பொழுதாக வந்து உங்களைச் சந்திப்பேன்.

மெரினா கடலோரத்திலுள்ள அந்த விருந்தினர் விடுதியில் உங்கள் அறையிலிருந்து கடலலைபோல் ஓய்ந்துவிடாமல் எத்தனை நாவல்களை, எத்தனை சிறுகதைத் தொகுப்புகளைப்பற்றி நாம் பேசியிருக்கிறோம். இலக்கியப் போக்குகள் குறித்து எவ்வளவு தீவிரமாய் கலந்துரையாடியிருக்கிறோம்.

**படைப்பு, படிப்பிப்பு எந்த ஒரு துறையிலென்றாலும் உழைப்பு முக்கியம். இல்லாவிட்டால் இருக்குமிடத்தைத் தக்கவைக்கவே முடியாது'**

அவ்வாறு பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் வந்து நான் உங்களைச் சந்தித்த ஒருநாளில்தான் என் வாசிப்பின் தீவிரத்தைப் பற்றி நீங்கள் மெச்சிக் கூறினீர்கள். 'தேவகாந்தன், படைப்பு, படிப்பிப்பு எந்த ஒரு துறையிலென்றாலும் உழைப்பு முக்கியம். இல்லாவிட்டால் இருக்குமிடத்தைத் தக்கவைக்கவே முடியாது' என்று அன்று நீங்கள் கூறிய வார்த்தைகளை என்னால் இன்றும்கூட மறக்க முடியாமல்தான் இருக்கிறது, ஐயா.

எறும்பும் தன் கையால் எண் சாண் என்பார்கள். எனக்கும் உங்களோடான சங்காத்தம் அதுபோல்தான் இருந்திருக்கிறது. பேராசிரியர்கள், கல்விமான்கள்போல நானும் உங்களை அவ்வப்போது சந்தித்தும், பேசியும், பல விஷயங்களை அலசி ஆராய்ந்தும் உள்ளேன் என்பது எனக்குப் பெருமையாகவே இருக்கிறது. ஆனால் உங்கள் பதவி, புகழ் பற்றி நன்கறிந்த பலபேர் அறிந்திருக்க முடியாத சிலகூறுகளை நான் தொட்டுக்காட்டுவது அவசியமாகவே படுகிறது.

ஐயா, உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா, தொண்ணூற்றேழு அல்லது தொண்ணூற்றெட்டு என நினைக்கிறேன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பாரிமுனையில் ஒரு கூட்டத்தை ஒழுங்குசெய்திருக்கிறது ஒரு நாள் மாலையில். நீங்கள் வரவிருப்பதான தகவலில் நானும் கூட்டத்துக்கு வந்திருக்கிறேன். ஆறு மணிக்கு ஆரம்பமாகவேண்டிய கூட்டம் ஆறரை மணியாகியும் ஆரம்பிக்கவில்லை. பேராசிரியர் சிவத்தம்பி வந்ததும் ஆரம்பித்துவிடலாம் என்கிறார்கள் கூட்ட அமைப்பாள நண்பர்கள். நான் வெளியே வந்து வீதியில் பிராக்குப் பார்த்தபடி நேரத்தைப் போக்காட்டிக்கொண்டு நிற்கிறேன். அப்போது நீங்கள் ஒரு ஓட்டோவில் தனியே வந்து இறங்குகிறீர்கள். காலில் நீங்கள் சற்று சுகவீனமுற்றிருந்த காலம் அது. கூட்டம் நடைபெறவிருந்த முதலாம் மாடிக்கு நான் பின்தொடர நீங்கள் மேலே ஏறிச்செல்லுகிறீர்கள். அப்போதுதான் நீங்கள் வந்துவிட்டமை கூட்ட அமைப்பாளர்களுக்குத் தெரியவருகிறது. நீங்களோ உங்கள் பெரிய சரீரத்தை உடல் நலம் குறைந்திருந்த வேளையிலும் முதலாம் மாடிக்கு நகர்த்திய பிரயாசையில் மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்குகிறீர்கள். உங்கள் மேனியெங்கும் வியர்வை ஆறாக ஓடுகிறது. யாராவது சென்று அழைத்துவந்திருக்கலாம் அல்லது கார் வசதியேனும் செய்து கொடுத்திருக்கலாம் என நான் கூட்ட அமைப்பாளர்களைக் காய்ந்து வெடிக்கிறேன். அப்போது நீங்கள் மெல்ல என்னை அருகே அழைத்து, 'தேவகாந்தன், நான்தான் ஓட்டோவில் வருவதாகச் சொன்னேன். காரைவிட ஓட்டோவில் இந்தக் காலோடு எனக்கு ஏறி இறங்குவது சுலபமாக இருக்கிறது' எனக் கூறி சமாதானப் படுத்துகிறீர்கள்.

சிறிதுநேரத்தில் கூட்டம் ஆரம்பமாகிறது. முதன்மைப் பேச்சாளர் நீங்கள்தான். நீங்கள் அன்று பின்நவீனத்துவத்தைப்பற்றி பேசுகிறீர்

தொடர்தல் 91ம் பக்கம்

# அஞ்சலியாய் ஒரு...

90ம் பக்கத் தொடர்ச்சி...

கள். ஐயா, பல்வேறு நூல்களினூடாகவும் புரியச் சிரமப்பட்டுக்கொண்டிருந்த பின்நவீனத்துவம்பற்றி நான் தெளிவான ஆரம்பத்தை அடைந்தது அன்றுதான். பின்னர்கூட பல்வேறு சந்தர்ப்பங்களில் நீங்கள் பின்நவீனத்துவத்தைப்பற்றி எழுதவும், பேசவும் செய்திருக்கிறீர்கள். ஆனால் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க ஆதரவில் நடைபெற்ற அன்றைய கூட்டத்தில் நீங்கள் நிகழ்த்திய பேச்சுக்கு உறைபோடக் காணாது அவையெல்லாம்.

நீங்கள் எழுதிய நூல்களையெல்லாம் இன்று பட்டியலாகப் போட்டபடி இருக்கின்றன பத்திரிகைகள். இவையெல்லாம் ஆண்டு மலர்களுக்கும், பல்கலைக் கழக சஞ்சிகைளுக்கும், பத்திரிகைகளின் தேவைகளுக்காகவும் நீங்கள் எழுதிய கட்டுரைகள்தானே என்று ஒருகாலத்தில் சிலர் ஏளனம் செய்தது எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது, ஐயா. இவை கூட கனதியானவைதான். ஆனாலும் என்றும் என் ஞாபகத்தில் இருந்துவரும் நூல் 'பாரதி: காலமும் கருத்தும்' என்று நீங்கள் அ.மார்க்ஸுடன் இணைந்து எழுதிய நூல்தான். பாரதியின் வரலாற்றை எழுதியதில் தொ.மு.சி.ரகுநாதனுக்கு இருக்கும் சாதனைச் சிறப்பு, ஆய்வுரீதியில் மார்க்ஸீய நோக்கில் நீங்கள் எழுதிய அந்த நூலுக்கு உள்ளது. பல தடவைகள் அந்த நூலை நான் வாசித்திருக்கிறேன். ஒவ்வொரு தடவையிலும் அர்த்த வியாபகம் கூடி ஓர் படைப்பிலக்கியம்போல் என்னைக் கவர்ந்த ஆய்வுநூல் அது.

'முகத்துக்கு அஞ்சி வேசையாடக் கூடாது' என்று ஒரு சொலவடை எங்களூரில் இருக்கிறது. பல்வேறு நூல்களுக்கு நீங்கள் முன்னுரை எழுதியிருக்கிறீர்கள். எழுதியவரின் மனத்தைப் புண்படுத்திவிடாது, அவர்களைத் தட்டிக்கொடுக்கும் விதமாக அந்த முன்னுரைகள் அமைந்திருப்பதை நான் அவதானித்திருக்கிறேன். அப்படிச் செய்துவிடக்கூடாது என்பதுதான் மேலேயுள்ள அந்தச் சொலவடையை நான் இங்கே குறிப்பிட்டதன் அர்த்தம்.

சில ஆண்டுகளின் முன்னால் நான் 'ஆழிய வளை' என்ற ஒரு நூலை வாசிக்க நேர்ந்தது. தமிழில் பண்பாட்டு நிலவியல் சார்ந்த முன்னோடி நூல்களில் ஒன்று அது. அதற்கு நீங்கள் முன்னுரை எழுதியிருக்கிறீர்கள். ஒரு முறை வாசித்தேன். மீண்டும் வாசித்தேன். அப்படியே எண்ணம் வரும்போதெல்லாம் அந்த நூலின் முன்னுரையை பல தடவைகள் வாசித்தேன். அத்தனைக்கு தன் சொல்லாட்சியாலும், கட்டுரை வன்மையாலும் தனக்கு நிகரில்லாத ஒரு முன்னுரையாக எனக்கு அது தென்பட்டது, ஐயா.

அப்படியொரு நூலின் வன்மை கூடிய பேச்சை, அப்படியொரு சிகரம்தொடக்கூடிய ஆய்வு



நூலை, அப்படியொரு வளமான முன்னுரையை எழுதக்கூடிய ஒருவரை இனி நாம் எங்கே தேட முடியும்? வெறுமையென்பதற்கு இப்போதைக்குள்ள விளக்கம், நீங்கள் இல்லாத இலக்கிய உலகம் என்பதுதானோ?

பயணத் திசை ஒன்றெனினும் நாம் வெவ்வேறு பாதைகளில் பயணித்தவர்களே. இந்தப் பாதையில்கூட நீங்கள் இல்லாத சூன்யத்தை நான் உணர்கிறேனே, ஐயா.

உங்கள் நினைவுகளுக்கு என் மனதார்ந்த அஞ்சலிகள்!

devakanthan@thaiveedu.com

■ ■ ■

# நேர்காணலிலிருந்து...

89ம் பக்கத் தொடர்ச்சி...

கேள்வி கேட்டதற்கு மிக்க நன்றி.
நான் சிறுவனாகக் கரவெட்டியில் வளரும்போது அங்கேயுள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளைக் காண்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எங்களுடைய சமூகம் 'கரையார்' சமூகம். சிலர் 'மீனவர்கள்' என்று சொல்வார்கள். கரையார் என்று சொல்வது நல்லதுபோல எனக்குப்படுகிறது. கரையார் சமூகத்தைப்பற்றி கரவெட்டியில் உள்ள சிக்கல் என்னவென்றால், அது தாழ்த்தப்பட்ட சமூகம் அல்ல. ஆனால் உயர்ந்ததும் அல்ல. வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் அது உயர்ந்ததாகக் கருதப்படும். யாழ்ப்பாணத்தில் கொக்குவில், தெல்லிப்பளை போன்ற இடங்களில் அது தாழ்ந்ததாகக் கருதப்படுவதே இல்லை. கரவெட்டியில் அந்த சமூகத்திற்கு ஒரு பொருளாதாரப்பிடி – ஒரு Economic Hold இல்லை. அதனால் அவர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். உயர்ந்தவர்களாகக் கருதப்படவில்லை. ஆனால் எந்தவிதச் சமூகத் தடை நிலையும் இல்லாத ஒரு நிலைமை. வேளாளருடன் அவர்கள் ஒன்றாகக் கருதப்படுவதில்லை. இதனை அவதானிக்கின்ற தன்மை எனக்கு இருந்தது, அது முக்கியமானது.

மற்றது, நான் வளர்ந்து வந்தபோது சமூக ஏற்றத்தாழ்வுகள் காரணமாகக் காணப்படுகிற சமூக அநீதிகளைக் காண்கிற வாய்ப்பு இருந்தது. நான் மார்க்ஸியத்தில் ஈடுபடவேண்டி வந்ததற்கான ஒரு நிகழ்வினைச் சொல்கிறேன். அதை நான் என் சீவியத்தில் மறக்கவே மாட்டேன். எனக்குப் 14, 15 வயதில், நாங்கள் - நண்பர்கள் நெல்லியடிச் சந்திக்குச் சென்றுவருவோம். அங்கு பலரும் வருவார்கள். இப்படியிருக்கும்போது எங்களுடன் படித்து, படிப்பெல்லாவற்றையும் விட்டு சண்டித்தனமாகத்திரிந்த ஒருவர் இருந்தான். அவனுக்கு காங்கேயன் என்று பெயர். அவன் ஒருநாள் தெருவில் எதிர்ப்பட்டு "சிவத்தம்பி வா, நீ இண்டைக்கு என்னோட வாறாய்" என்று என்னை அழைத்தான். அவனுக்கு நல்ல வெறி. அவனை என்னால் தவிர்க்கவும் முடியவில்லை. என்னுடைய வீட்டைத் தாண்டித்தான் அவன் செல்லவும் வேண்டியிருந்தது. நாங்கள் நடந்து வரும்பொழுது எதிரே பனையேறுகின்ற நளச்சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். அப்பொழுதுதான் தொழில் முடித்துக் குளித்து விட்டு நின்றார் போலத் தெரிந்தது. அது பொழுதுபடும் மைம்மல் நேரம்.

"கள்ளிருக்கோ?" என்று காங்கேயன் அண்ணை கேட்டான்.

"தம்பி, இப்பதான் எல்லாம் வித்து முடிஞ்சுது, என்னட்டை இல்லை ராசா..." என்று அவர் பதில் சென்னார்.

"என்ன பகிடி விடுகிறியோ?" என்று கேட்டுக் கொண்டே, காங்கேயன் நேராக அந்தத் தொழிலாளியின் வீட்டினுள் சென்றான். வட மராட்சியில் ஒரு வழக்கம் உண்டு. இரவுச் சாப்பாட்டை முற்றத்தில் வைத்துச் சாப்பிடுவார்கள். இதில் சாதி குறைந்தது கூடியது என்றில்லை. நிலச்சுவாந்தர்கள் - உடையார் - மணியகாரர் போன்றவர்களைத் தவிர, இந்த வழக்கம் வேளாளரிலும் இருக்கிறது. கோவியரிலும் இருக்கிறது. கரையார் ஆட்களிலும் இருக்கிறது. அந்தத் தொழிலாளியின் மனைவி சாப்பிடுவதற்கு ஆயத்தமாக முற்றத்தில் சாப்பாட்டைக் கொணர்ந்து வைத்திருந்தாள். காங்கேயன் அவர்களது வீட்டினுள் சென்று எல்லா இடங்களிலும் ஆராய்ந்தான். நான் அவனது கையைப் பிடித்து "வா போவோம்" என்று இழுத்தேன். அவன் என்னை உதறிவிட்டு அங்கிருந்த சோற்றுப்பானையையும், கறிச்சட்டியையும் நிலத்திலே போட்டு உடைத்தான். அந்த பெண் பெரிதாகக் குழறி அழுதாள். நான் உண்மையாகச் சொல்லுகிறேன். அந்த ஏக்கத்திலிருந்து – அதனுடைய தாக்கத்திலிருந்து நான் இன்றைக்கும் விடுபடவில்லை. அந்தத் தொழிலாளி என்னைப்பார்த்து "வாத்தியாற்றை மேன், அவரைப் பிடியுங்கோ" என்று கெஞ்சியது எனது மனதைப் பிழிந்தது. நான் என்ன செய்யமுடியும்? That was the biggest shock of my life.

gnanasekaran.t@thaiveedu.com

■ ■ ■

# அழகியல் நோக்கு...

85ம் பக்கத் தொடர்ச்சி...

தற்குக் காரணம் அவருடைய அழகியல் சிந்தனையாகும். அழகியலை அடித்தளமாக வைத்து ஆராயும் போது நூலாசிரியரின் கண்




நிழற்படம்: சாந்தன் (இங்கிலாந்து)

ணோட்டம் பல திசைகளில் செல்வதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக மொழிப் பிரயோகம், யாப்பின் வளர்ச்சி, பொருளாதாரப் பின்னணியின் தாக்கம். ஆகிய யாவுமே ஒன்றின் பின் ஒன்றாக அவருடைய ஆய்வில் எழுகின்றன. முக்கியமாக வாய்மொழி இலக்கியத்தின் வரலாறு, வடமொழியின் தாக்கம் ஆகிய இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக எழுகின்றன. பொது மக்களின் இலக்கியம் என்று பக்தி இலக்கியத்தை நோக்க ஆரம்பிக்கும் பொழுது இப்பாடல்களின் தனித்துவம் தெளிவாகுவது மட்டுமல்ல, இப்பாடல் தொகுப்பின் வேறுபாடுகளும் புலனாகின்றன. பக்தி இலக்கியத்தின் சமூக முக்கியத்துவத்தையோ, அகநிலைத் தாக்கத்தையோ ஒதுக்கிவிடாது தரவுகளை நாம் பிரயோகிக்கக் கூடிய நிலையை அவருடைய ஆய்வு உருவாக்குகின்றது. பக்தி இலக்கியம் பற்றி இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பேராசிரியர் சிவத்தம்பியின் பங்களிப்பு முக்கிய ஸ்தானத்தை வகிப்பதற்குக் காரணம் அவருடைய அழகியல் ஈடுபாடு என்று கூறலாம். புத்திஜீவி என்ற முறையில் பேராசிரியர் சிவத்தம்பியின் மேன்மையைப் பறைசாற்றவேண்டிய தேவையில்லை. அவருடைய 30 நூல்களும் சுமார் 100 ஆய்வுக் கட்டுரைகளும் எங்களுடைய இலக்கிய, ஆய்வுப் பார்வையை மாற்றியமைத்துள்ளன என்பது யாவருக்கும் தெரியும். அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்தபொழுது எவ்வாறு வேறுபட்ட கோட்பாடுகளின் மத்தியில் தனக்கென ஒரு தளத்தை அமைத்துக் கொண்டாரோ, அதே போன்று அவருடைய ஆய்வில் பல மரபுகளையும் உள்வாங்கி புதியதொரு ஸ்தானத்தை உருவாக்கிக் கொண்டார். தமிழ் இலக்கியத்தையும், தமிழியலையும் முழுமையாக உள்வாங்கிய பேராசிரியர் சிவத்தம்பி புதிய பல கருத்துக்களை முன்வைத்தது மட்டுமல்லாமல் வருங்கால அறிஞருக்குப் பல முக்கியமான கேள்விகளையும் வைத்துச் சென்றுள்ளார். தமிழ்ப் பேராசிரியராய் வாழ்வது ஒரு தொழில் அல்ல என்று அவர் அடிக்கடி சொல்வார் தமிழியல் என்பது ஒரு நெறி அல்லது வாழ்க்கை முறை (Vocation) என்பது அவருடைய நம்பிக்கை. பேராசிரியர் சிவத்தம்பி பெரும் அறிஞர் மட்டுமல்ல, அற்புதமான மனிதரும் கூட.

chelva.kanaganayagam@thaiveedu.com

■ ■ ■

பயிலரங்கு

ஈழத்து நாடகர் உருத்திரேஸ்வரனின்
நெறிப்படுத்தலில் நாடக அரங்கப்பட்டறை

பட்டறை 2 மணிமுதல் 6 மணிவரை நான்கு மணித்தியாலங்கள் நடைபெறும். பங்குபற்றுபவர்கள் ஆரம்பமுதல் முடிவுவரை பங்கெடுக்கவேண்டும். மொத்தநேரமும் பங்கெடுக்க முடியாதவர்கள் பார்வையாளர்களாக மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

பங்குபெறவிரும்புபவர்கள் முற்பதிவு செய்வது அவசியம்.

இடம்: ஏஜின்கோட் சனசமூக நிலைய மண்டபம்

**Agincourt Community Centre**

31 Glen Watford Dr, Sheppard & Midland

TTC Information: Travel to Kennedy Station. Board the 57 Midland and travel to the farside of Rural. Walk east on Rural to 31 Glen Watford Drive.

காலம்: **07** ஒகஸ்ற் 2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 6 மணிவரை.

**416 995 2984, 647 449 1271, dushyg@gmail.com, naavai@hotmail.com**

## Law Office

# T. JEGATHEESAN

(Barrister, Solicitor and Notary Public (on)

உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

## தி. ஜெகதீசன்

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3



# N.K.S

Drapery & Blinds Fabric LTD



**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

## கேதா நடராஜா

**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420, 905.944.0218**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9



# Arajen Beauty Centre



- Make Up
- Hair Style & Hair Care
- Dying & Highlighting
- Bridal Make Up & Arangetram
- Skin Care (All Kind of Facial)
- Threading & Waxing
- Skin Treatment
- Nail Art
- Dress Making (Saree & Blouse)
- Permanent Hair Removal
- Pedicure, Manicure
- Mehindi
- Bouquet, Sadainagam
- Cryotherapy
- Micro Dermabrasion



**Beauty Classes**
அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்

**Certificate Courses & Seminars**

## அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

**Tel: 416.509.7978**

Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

# தமிழ் முதியோரின் நல்வாழ்வு: குடும்ப சமூக விடயங்கள்

சுல்பிகா இஸ்மாயில்



## தமிழ் முதியோரின் நல்வாழ்வும் குடும்ப சமூக விடயங்களும்:

சென்ற மாதக் கட்டுரையில் நல்வாழ்வு என்பதை எவ்வாறு வரையறை செய்து கொள்வது, உலகளாவிய (சர்வதேச) நல்வாழ்வுத் தேவைகள் (Universal wellbeing beeds), அதனை அடைவதற்கான சமூக முன்நிபந்தனைகள் (Socieal preconditions) ஆகியவற்றைப் பற்றிப் பார்த்தோம். இம்மாதம் கனடாவில் வாழும் இலங்கைத்தமிழ் முதியோர்களின் நல்வாழ்வுடன் இவ்விடயங்களை எவ்வாறு ஒருங்கிணைத்து எண்ணக்கருச்சட்டகம் (Conceptual framework) ஒன்றினை அமைத்துக் கொள்வது என்பது பற்றிப் பார்ப்போம்.

இவ்வாறான எண்ணக்கருக் சட்டகம் இவர்களின் நல்வாழ்வு தொடர்பான செயற்பாடுகளை உருவமைப்பதற்கும். அவற்றினைச் செயற்படுத்துவதற்கும் இன்றியமையாததாகும்.

மேலும் எவ்வாறான சமூகப்பின்னணியில் அவர்கள் கனடாவில் குடியமர்ந்தார்கள் என்பதையும் அவர்களுக்குள்ள குடியமர்வுச் சவால்கள் யாவை என்பது பற்றியும் இம்மாதக் கட்டுரையில் நாம் பார்க்கவுள்ளோம். இது அவர்களது நல்வாழ்வுத் தேவைகளை விரிவாக நோக்கவும் சமூக முன்நிபந்தனைகளான வளங்கள் - முதலீடுகள் பற்றிய விரிவாக வரையறை செய்து கொள்ளவும் எமக்கு உதவும்.

## தமிழ் முதியோர் நல்வாழ்வு பற்றிய எண்ணக்கருச்சட்டகம்:

தமிழ்முதியோர் நல்வாழ்வு எண்ணக்கருச் சட்டகம் (சுல்பிகா 2010) போடியுவின் (Bourdiew 1984) முதலீட்டுக் கோட்பாட்டையும், கிளாக், கோஷ் (Clark and Cough 2005) இன் விரிவாக்கப்பட்ட மானுடத் தேவைக் கொள்கையையும் தழுவி அமைக்கப்பட்டது. இச்சட்டகம் கனடாவில் தமிழ் முதியோர் நல்வாழ்வு தொடர்பான மூன்று பிரதான விடயங்களை முன்வைக்கின்றது. நல்வாழ்வின் அம்சங்கள், நல்வாழ்வுத் தேவைகள், சமூக முன்நிபந்தனைகள் ஆகியன. நல்வாழ்வு ஆரோக்கியம், நிறைவுசெய்தல், திருப்தி, மகிழ்ச்சி போன்ற விடயங்களை உள்ளடக்குகின்றது.

நல்வாழ்வுத் தேவைகள், உடல், உள, உடமை உரிமை, மற்றும் உணர்வுத் தேவைகளையும் உள்ளடக்கும். இத்தேவைகளை அடைந்து கொள்வதற்கான சமூக முன் நிபந்தனைகள் சமூக முதலீடுகள் (Social Capitals) கலாச்சார முதலீடுகள் (Cultural Capitals), பொருளாதார முதலீடுகள் (Economic Capitals) உளவியல் முதலீடுகள் (Psychological Capitals) போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

## நல்வாழ்வின் அம்சங்கள்:

- ஆரோக்கியம்
- நிறைசெய்தல்
- மகிழ்ச்சி
- திருப்தி

## சமூக முன் நிபந்தனைகள் அல்லது வளங்கள்

- சமூக முதலீடுகள்
- கலாச்சார முதலீடுகள்
- பொருளாதார முதலீடுகள்
- உள முதலீடுகள்

## நல்வாழ்வுத் தேவைகள்

- உடலத் தேவைகள்
- உளத் தேவைகள்
- உடமைத் தேவைகள்
- உரிமைத் தேவைகள்
- உணர்வுத் தேவைகள்

நல்வாழ்வுக்கான சமூக முன்நிபந்தனைகளை/முதலீடுகளை வளங்களாகவும் வாய்ப்புக்களாகவும் மற்றொரு வகையில் நாம் வகையீடு செய்து கொள்ள முடியும். சமூக முதலீட்டுக்குள் உள்ளடக்கப்படுகின்ற தொடர்பு வலையமைப்புக்கள் (Connection networks), குடும்பம், உறவினர், ஊர் நண்பர்கள், தொழிலிடம், சமுதாயம், நாடு என்ற வகையில் இவை கட்டமைக்கப்படுகின்றன. மேலும் நம்பிக்கை (Trust), பற்றுக்கள் / பற்றுதல்கள் (Attachments), சமூக ஈடுபாடு (Social engagement) போன்றவையும் சமூக முதலீட்டுக்குள் உள்ளடக்கப்படுகின்றது. புலம்பெயர்வுப் பின்னணியில் இம்முதலீடுகள் மீளக்கட்டமைக்கப்பட வேண்டியுள்ளது என்பது வெளிப்படையான விடயமாகும்.

கலாச்சார முதலீடுகள் கலைப் பொருட்கள் (Artifacts), அறிவுத் தொகுதியும் அதனோடு கூடிய குறியீட்டு சான்றுகளும், கலாச்சார நியமங்களும் விழுமியங்களும், குறியீட்டு சடங்குகள், சம்பிரதாயங்கள், நோக்கு நிலைகள் (Perceptions) போன்றவற்றை உள்ளடக்குகின்றன. இவை ஒரு சமுதாயக்குழுமத்தின் நாகரிக வளர்ச்சி நிலையை சுட்டி நிற்கின்ற முதலீடாகும். இவை ஒருவரது நல்வாழ்வின் கலாச்சார பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கின்றது. பண்பட்ட வாழ்வியல் அம்சங்களாகவும், சமுதாயத்திற்குரிய நுண்ணறிவுத் தொகுதி, அது தொடர்பான ஆற்றல்கள் (Skills), உள்நிலைத்திறன்கள் (Potentials) போன்றவற்றையும் இம்முதலீடுகள் பிரதிபலிக்கும். இவை ஒருவகையில் சுயஅடைவுத் தேவைகளினலும் கணிப்புத் தேவைகளினதும் பிரதிபலிப்பாகவும் அமைவதால் முழு சமுதாயத்திற்குரிய அம்சமாக மட்டுமல்லாது தனிமனித நல்வாழ்வு விடயமாகவும் இவை உள்ளன.

பொருளாதார நல்வாழ்வு முதலீடுகள், வருமானம், உற்பத்திகள், நுகர்வோர் பொருட்களும் தேவைகளும், போக்குவரத்து உள்ளகக் கட்டமைப்புக்கள், நிலம், வீடு, பாடசாலை போன்ற இன்னோரன்ன தனிப்பட்ட, பொது வாழ்க்கை வசதிகளையும், வாய்ப்புக்களையும் உள்ளடக்குகின்றது. இக்கட்டுரையின் நோக்கம் சமூக உளவியல் அம்சங்களை முன்னிலைப்படுத்துவதாக அமைவதால் பொருளாத முதலீடுகளின் விரிவான அம்சங்கள் தவிர்க்கப்படுகின்றன. எனினும் பொருளாதார முதலீட்டின் முக்கியத்துவம், நல்வாழ்வுத் தேவைகளை நிறைவு செய்வதில் கணிசமானது என்பதை மனிதற் கொள்ளுதல் வேண்டும்.

உளவியல் முதலீடுகள் தனிப்பட்டதும் குழுவினதும் உள, உள்நிலைத்திறன்களுடனும் ஆற்றல்களுடனும் தொடர்பானதாகும். ஒரு வகையில் இவை உயிரியல் பராம்பரியத்துடன் தொடர்பானது எனினும் அவற்றின் வளர்ச்சியும் விருத்தியும், வெளிப்படுத்துகையும் சூழல் ரீதியாக நிச்சயிக்கப்படுகின்றதாகவே அமைகின்றது.

தன்மனித நல்வாழ்வுத் தேவைகள் உடல், உள, உடமை, உரிமை, உணர்வு சார்ந்த தேவைகளாகக் காணப்படுகின்றன. சமூகத் தேவைகள், பொருளாதாரத் தேவைகள், கலாச்சாரத் தேவைகள். உணர்வுத் தேவைகளாகவும் இவை இனங்காணப்படலாம். முரண்பாடு, வன்முறை, போர்ச்சூழல் போன்ற ஆபத்துக்குட்பட்ட, ஆபத்துக்குரிய, பேரழிவுக்கு பின்னரான வாழ்வியல் சூழலில், இவை எல்லாமே மீளக்கட்டமைக்கப்பட வேண்டிய, நிறைவு செய்யப்படவேண்டிய நிலையுண்டு. புலம் பெயர்சூழலில் பொருளாதாரத் தேவைகளே முக்கிய விடயமாக ஆரம்பகாலங்களில் நோக்கப்பட வேண்டிய அவசியம் உண்டு. எனினும் புலம்பெயர்ந்த தனிமனிதர்களின் நல்வாழ்வுத் தேவைகள், புதிய புலம்பெயர் சூழலில் ஓரினத்திற்குரிய அல்லது குழாமுக்குரிய சமூகம் ஒன்றின் மீளக்கட்டமைப்புடனும் நிலைப்படுத்துதலுடனும் பின்னிப்பிணைந்த விடயமாகவுமுள்ளது.

“ புலம்பெயர்ந்த தனிமனிதர்களின் நல்வாழ்வுத் தேவைகள், புதிய புலம்பெயர் சூழலில், ஓரினத்திற்குரிய அல்லது குழாமுக்குரிய சமூகம் ஒன்றின் மீளக்கட்டமைப்புடனும் நிலைப்படுத்துதலுடனும் பின்னிப்பிணைந்த விடயமாகவுமுள்ளது. ”

இவ்வகையில் இலங்கைத் தமிழ்முதியோர்களின் புலம்பெயர்வுப்பின்னணியில், அவர்களது பின்வரும் சமூகஉளவியல் தேவைகள் (Psychosocial needs) முக்கியமாவையாக இனங்காணப்படுகின்றன.

- உறவுகள் (Relationships)
- பற்றுக்கள்/பற்றுதல்கள் (Attachments)
- உடமையுணர்வு (Sense of belonging)
- பயத்திலிருந்து விடுதலை (Freedon from fear)
- நுண்ணறித் தூண்டல்கள் (Interllectual stimulants)
- கட்டுப்பாட்டுணர்வு (Sense of control)
- கூட்டுணர்வு (Sense of collectivity)
- உடலத் தூண்டல்கள் (Physical stimulants)
- சுய-பெறுமதி (Self-worth)
- சுய-மரியாதை (Self-respect)
- உணர்வு ரீதியான நுண்ணறிவு (Emotional interligent)
- உள ஆற்றல்கள் (Aptittute - will power)
- வளைந்து கொடுக்கும் தன்மை (Resisliency)

போன்றன

மேற்கூறிய நல்வாழ்வுச் சட்டகத்தின் அடிப்படையில், தமிழ் முதியோர்களின் இன்றைய கனேடிய வாழ்வியலை நோக்குவோம்.

## ஆய்வு முடிவுகள்

### இலங்கைத் தமிழ் முதியோர்களின் புலம்பெயர்வுப் பின்னணி:

கனடாவுக்கான இலங்கைத் தமிழர்களின் குடிப்பெயர்வானது பல்வேறு காலப்பகுதியில் பெருமளவில் இடம்பெற்று வந்திருப்பதைப் பல்வேறு ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக 1983ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற இனத்துவ விரோத நடவடிக்கைகளும் அதனோடு கூடிய வன்முறைக்கலவரங்களும் உலகளாவிய ரீதியில் தமிழர்களின் புலம் பெயர்வுக்கு பெருமளவில் இட்டுச் சென்றுள்ளது. இலங்கை அரசின் குடிபெயர்வுத் திணைக்களத்தின் தகவல்களின் அடிப்படையில், 2009 வரை 1,120,000 இலங்கைத் தமிழர்கள் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இத்தகவல்களின்படி கனடாவில் 400,000திற்கு மேற்பட்டோர் இன்று வாழ்கின்றனர். ஐக்கிய ராச்சியம் (300,000) இந்தியா (150,000) பிரான்ஸ் (100,000) ஜேர்மனி (60,000) அவுஸ்திரேலியா (53,000) போன்றன தமிழர்களுக்கு புகலிடமளித்த நாடுகளில் மிக முக்கியமானவையாகும்.

தமிழ் முதியோர்கள் இக்குறிப்பிட்ட சனத்தொகையில் 20%த்தினராகும். இம்முதியோர்களை அவர்களது குடிபெயர்வுப் பிரமாணங்களின் அடிப்படையில் இருபகுதியினராகப் பிரிக்கலாம்.

பெரும்பகுதியினரான முதியோர்கள், பிள்ளைகள், துணைவர்கள், உறவினர்களால் செலவுக் காப்பு உத்தரவாதமளிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டவர்களாகும். பொருளாதார ரீதியாகவும் சமூகவியல் ரீதியாகவும் மிகக்கூடியளவு தங்கி வாழ்பவர்கள் - குறைந்த சுதந்திரமுள்ளவர்கள். செலவுக்கான உத்திரவாதம் அளிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டதன் காரணமாக கனேடிய அரசாங்கத்தின் சமூக சுகாதார, வாழ்வு ஆதாரங்களைப் பெறுவதற்கு அருகதையற்றவர்கள். இலங்கை சனத்தொகையில், 1983க்கு முற்பட்ட காலப்பகுதியில் கல்வி அடைவுச்சுட்டிகளின்படி தமிழ் சமூகத்தினர் மிகக்கூடியநிலையில் காணப்பட்ட ஒரு இனக்குழுவினராகும். எனிலும் இதன் பிற்பாடு இனமோதல், இனத்துவப்பராபட்சங்கள், போர், வன்முறை பல்வேறு உள்ளகக்கட்டமைப்பு, பொருளாதார அபிவிருத்தித் தேக்கநிலைகள், ஆயுதக்குழுக்களில் இணைத்தல், இணைய நிர்பந்திக்கப்படல், கல்வித்தாபனங்களின் அழிவு போன்றன கல்வி அடைவை பாதித்து வந்துள்ளது. இப்பின்னணியில், இக்காலத்திட்டத்தில் பாடசாலை வயதெல்லைக்குள் இருந்த இளைஞர்களும் யுவதிகளும், இடைநிலைக்கல்வியைக் முடித்துக் கொள்ளாது புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவ் விளைஞர்களும் யுவதிகளும் தமது குடியமர்வை நிலைப்படுத்துவதற்கும் இலங்கையில் வாழும் சகோதரர்கள், உறவினர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதற்கும் மிகக் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இவர்களது பெற்றோர்களும் அவர்களுடன் அல்லது அவர்களது அழைப்பின் போரில் பின்னர் குடிபெயர்ந்தனர். அதேவேளை அவர்கள் தமது குழந்தைப்பராமரிக்கும், வேறு குடும்பநல விடயங்களுக்கும் தமது பெற்றோரின் ஊதியமற்ற உழைப்பை எதிர்பார்த்தனர்.

சிறு தொகையினரான மற்றொரு தொகுதி முதியோர்கள், தமது 40வது வயதுகளில் கனடாவுக்கு குடியேறியவர்கள். தற்போது முதியோர்களின் வயதல்லையை அடைந்தவர்கள். இவர்கள் ஓரளவு பொருளாதார ரீதியாக சுதந்திரமுள்ள தமிழ் முதியோர்களாகும். எனிலும் இக்குழுவினரில் பெரும்பாலானோர் ஆரம்பகாலங்களில் கீழுழைப்பு தொழில்களிலும் 'கைக்காசு'க்கும் நீண்டகாலமாக உழைக்க வேண்டியிருந்ததால் இவர்களது இளைப்பாற்றுக் கொடுப்பனவு ஒப்பிட்டளவில் மிகமிகக் குறைவானதாகும். மிகச்சிறிய தொகையினரே குறிப்பிட்டத்தக்களவு பொருளாதார சுதந்திரத்தையும் சமூக முதலீடுகளையும் கட்டமைத்துக் கொண்டவர்களாகவுமுள்ளனர்.

(தொடரும்)

zulfika.ismail@thaiveedu.com

■ ■ ■

# ஏமாத்திப் போட்டான்

- சேகர் தம்பிராஜா -

"மிசினில தனியாளாய் நிண்டு வேலை நிண்டு வேலை செய்து கொண்டு நிக்கிறன். எனக்குக் கிட்ட ஒருத்தரும் இல்ல. நேற்று பேஸ் புக்கில அவன்ர படத்தை பார்த்ததில இருந்து அவனைப் பற்றியே யோசிச்சுக் கொண்டிருக்கிறன். அவன் என்ரை பழைய நண்பன்.

எனக்கு இப்பவும் அவனில கோபம் குறையேல்லை. என்னை ஏமாத்திப் போட்டான். நான் ஏமாந்தது பரவாயில்லை; என்ரை நாலு வயது மருமகனையும் ஏமாத்திப் போட்டான்."

முன்னரெல்லாம் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதென்றால் ஒரு யுகம் கடப்பது போல இருக்கும். போய்ச் சேருவதற்கு ஒரு கிழமை முதல் பத்து நாட்கள் வரை செல்லும். வவுனியா பிரவுன் கம்பனி சோதனைச் சாவடியில் நின்று பாஸ் எடுக்க வேண்டும். பின்னர் தாண்டிக்குளத்தில் போய் வரிசையில் நிக்க வேண்டும். முதலில் ஓமந்தையில் இருந்து வவுனியாவிற்குள் வரும் பயணிகளை அனுமதித்து விட்டுத்தான் எங்களைச் செல்ல அனுமதிப்பார்கள். இந்தப் பயணத்தில் சில பொருட்களை எடுத்து செல்வதற்கு இராணுவம் தடை விதித்திருந்தது. சில பொருட்களை மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே கொண்டு செல்லலாம். ஒரு சோடி மின்கலம், இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய், ஒரு டசின் தீப்பெட்டி, ஒரு படச் சுருள், இரண்டு மென்பானப் போத்தல் என பலவகையான கட்டுப்பாடுகள் இருந்தன. காவிச்செல்லும் வல்லமைக்கு ஏற்றாற்போல் இப்படியான பொருட்களை கொண்டு செல்வோம். விடுமுறைகள் வரும் பொழுதெல்லாம் நாங்கள் கிளம்பி விடுவோம். பத்துப் பேர் பதினைந்து பேர் சேர்ந்து போனால் போகும் களைப்பு தெரியாது. ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசையாக போகும் எங்கள் பயணம். நேரம் போவதே தெரியாமல் இருக்கும்.

"ஆனா இண்டைக்கு மிசினில நேரம் போகுதே இல்லை. முதலாவது பிரேக் முடிஞ்சு கன நேரம் போன மாதிரிக் கிடக்கு. கால் மணித்தியாலம் தான் போயிருக்கு."

அன்றும் நாங்கள் பன்னிரண்டு பேர் யாழ்ப்பாணம் செல்ல முடிவு செய்து. பிரவுன் கம்பெனியில் சென்று பாஸ் எடுப்பதற்கு நீண்ட நேரமாக வரிசையில் நின்றோம். நாங்கள் கொண்டு செல்லும் Bagகளை காவல் செய்வதற்கும், எம்மை வழியனுப்புவதற்காகவும் மூன்று நண்பர்கள் வந்திருந்தார்கள். அருகில் இருந்த தேநீர்க் கடையில் எங்கள் எல்லோருடைய Bag குகளுக்கும் காவலாய் நின்றார்கள். நாங்கள் கொண்டு செல்கிற பொருட்கள் யாழ்ப்பாணத்தில் அருமையானவை. எனது Bagக்குள் இரண்டு Ever Ready Battaryகள், ஒரு Lotus டயர், ஒரு டசின் Sooriya தீப்பெட்டிகள், ஒரு Kodak Film roll, ஒரு 7UP போத்தல், ஒரு Pepsi போத்தல், ஐந்து சவர்க்காரக் கட்டிகளும் வேறு பல பொருட்களும் இருந்தன.

நாங்கள் பாஸ் எடுத்து, சோதனைகள் எல்லாம் முடித்து ஓமந்தைக்கு போய் அங்கிருந்து பூநகரி - நல்லூருக்கு சென்று விட்டோம். இடையிடையில் ஓய்வுக்காக பெருந்து தரிக்கும் பொழுதெல்லாம் தண்ணீரை அங்குள்ள இடங்களில் எடுத்து அருந்திக் கொள்வோம். எம்முடன் எடுத்து செல்லும் மென்பானப் போத்தல்களில் கை வைக்க மாட்டோம். யாழ்ப்பாணத்தில் இவை மிக அருமையாகவே கிடைத்தன. அப்படிக்கிடைத்தாலும் அவை குதிரை விலை விற்றன.

பிரயாணத்தில் எங்களுக்கு ஒரு சிக்கல்




வந்தது. எங்களுடைய கெட்ட காலம், நாங்கள் போன பொழுது மிகப் பலமான காற்றினால் பூநகரி - கிளாலி படகுச் சேவை மூன்று நாட்களாக நடைபெறவில்லை. அது மே மாதம். சரியான வெயில். நாங்கள் தங்கி நிற்பதற்கு ஒரு பெரிய கொட்டில் இருந்தது. அங்கேயே தூங்க வேண்டி இருந்தது. எங்கள் Bag குகளை யாரும் களவெடுத்து விடுவார்கள் என்ற பயத்தில் எங்கள் தலையணையாக அவற்றைப் பாவித்தோம்.

"இண்டைக்கு இஞ்ச நான் இந்தப் பெரிய மிசினைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு தனிய நிக்கிறமாதிரி அண்டைக்கு தனிய ஓராளாய் என்ர பயணம் இருந்திருந்தால் எனக்கு விசர் தான் பிடிச்சிருக்கும். பத்து பன்ரெண்டு பேர் எண்டபடியா பம்பலாப் போச்சுது. இண்டைக்கு ஒரு பம்பலும் இல்லை. லஞ்ச் ரூமுக்கை போனாலும் தனிய இருந்து சாப்பிட வேண்டிக் கிடக்கு."

மூன்று நாட்களின் பின்னர் படகுகள் ஓடத் தொடங்கின. உயிரை கையில் பிடித்துக் கொண்டு கடலைக் கடந்து எங்கள் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்தோம். காவிச்சென்ற பொருட்களில் மண்ணெண்ணெய் விளக்கெரிக்கப் போய்விட்டது. அது மூன்று மாதத்துக்குப் போதுமானது. பட்டரி 'செய்தி கேட்பதற்கு மட்டுமே இருக்கிற' ரேடியோவுக்குள் போய் ஒளிந்து கொண்டது. அது வரைக்கும் பழைய பட்டரி யை தினமும் வெயிலில் வைத்து வைத்து பாவித்து வந்தனர். இப்படியாக எல்லாம் ஒவ்வொரு இடத்துக்கும் சென்றது. அந்த மென்பானப் போத்தல்கள் இரண்டில் ஒன்றை உடைத்து 'ஐயாப் பரியாரியார்' இருமலுக்கு தந்த பாணி மருந்து போல எல்லோரும் தங்கள் தொண்டைகளை நனைத்துக் கொண்டனர். மற்றையது ஒரு அலுமாரிக்குப் பின்னால் மறைந்து கொண்டது. மிகவும் தூரத்தில் இருந்து இடைக்கிடை எங்கள் வீட்டுக்கு வரும் எனது அக்காவின் நான்கு வயது மகனுக்கு மென்பானம் என்றால் உயிர். அது அவனுக்காக.

"மரியாதை அணிவகுப்பிக்கு நிக்கிற ஆமிக் காரரை பாத்துக் கொண்டுவாற பிரதம மந்திரி மாதிரி என்ரை சுப்பவைசன் ஒரு நடை வந்து நான் வேலை செய்கிறானா சும்மா நிக்கிறனா எண்டு பார்த்து கொண்டு போறான். நாங்கள் சோடா ஒளிச்சு வைச்சது அவருக்கு எங்க தெரியப் போகுது."

இரண்டு நாட்களில் மருமகன் வீட்டுக்கு வந்தான். அடுத்தநாள் மதிய வேளை அந்த மென்பானப் போத்தலை உடைத்துக் குடிக்கக் கொடுத்தேன். ஆவலுடன் வாங்கிக் குடித்த அதே வேகத்தில் திருப்பித்தந்து விட்டு "ஏன் மாமா இதை அங்க இருந்து இஞ்சை கொண்டு வந்தனீங்கள்" எனக் கேட்டான். எனக்கு விளங்கவில்லை. நான் வாங்கிக் குடித்துப் பார்த்தேன் அது மென்பானம் இல்லை தண்ணீர். யாரோ அதனுள் இருந்த மென் பானத்தைக் குடித்து விட்டு தண்ணீரை விட்டு வைத்திருந்திருக்கிறார்கள்.

"இன்னும் கொஞ்ச நேரத்தில lunch break. நான் இண்டைக்கு சாப்பாட்டோட saleஇல வாங்கின அரைப் போத்தல் Sprite உம் கொண்டு வந்து Fridgeக்க வச்சனான். முதல் பிரேக்குல போய் பாத்தனான் ஒருத்தரும் எடுத்து மாத்தி தண்ணி ஊத்தி வைக்கேல்லை. பிரேக்க்கு இன்னும் இருபது நிமிசம் கிடக்கு."

இது யாருடைய வேலையாக இருக்கும், எங்க இது நடந்திருக்கும், நான்தானே பூனை குட்டியைக் காவியது போல மிகப் பாக்குவமாக கொண்டு வந்து சேர்த்தேன். இது எப்படி சாத்தியமாய் ஆகியிருக்கும். ஒரு மாதமாய் எனக்கு இதே சிந்தனையாய் இருந்தது. என்னுடன் வந்தவர்கள் தான் இந்த வேலையை செய்திருக்க வேண்டும். சிவமும், நாகநாதனும் இப்படியான வேலைகளைச் செய்ய மாட்டார்கள். அவர்களை விட்டால் தவம், கலைச்செல்வன், முகுந்தன், ராகுலன், ஆட்டோ சுரேஷ். இவர்களில் யாராவது ஒருவர் தான் இந்த வேலையை செய்திருக்க வேணும். திரும்பி வவுனியாவுக்கு வருவார்கள் தானே அப்போது இவர்களைக் கவனித்து கொள்ளுகிறேன்.

நினைக்க நினைக்க கோபம் கோபமாகத் தான் வந்தது. இவ்வளவு தூரம் சிரமப்பட்டு தண்ணீரைக் காவிக் கொண்டு போய் விட்டேனே. ஒரு மாதம் யாழ்ப்பணத்தில் தங்கியிருந்தபின் வவுனியாவுக்கு திரும்பினேன். முதல் வேலையாக நண்பர்களைக் கேட்டேன். அவர்கள் 'உலகத்து சத்தியங்கள்' எல்லாத்தையும் அடித்து 'நாங்கள் செய்யேல்லை' என்றார்கள்.


"பாப்பம் இண்டைக்கு யாரேன் இப்பிடிச் செய்யினமோ எண்டு. அண்டைக்கு அங்க என்னோட படிச்சவை ஒருத்தரும் இண்டைக்கு இஞ்ச என்னோட வேலை செய்யேல்லை எண்டபடியால் நான் கொண்டு வந்த Sprite அப்பிடியே இருக்கும் எண்டு நினைக்கிறன். இன்னும் பத்து நிமிசம் கிடக்கு."

யாரும் யாழ்ப்பாணம் போய் வவுனியாவுக்கு திரும்பி வந்தால் அவர்களுடன் சில பலகாரப் பார்சல்கள் 'கட்டி வந்த சோத்திலை தொத்தி வந்த நுள்ளானாய்' வந்து சேரும். அப்படி பலகாரங்கள் கொண்டு வந்திருப்பேனோ? கடிதம் வந்திருக்குமா? என்ற எதிர்பார்ப்புடன் எம்மை வழியனுப்ப வந்த நண்பர்களில் ஒருவன் சிரித்தபடியே வந்து 'எப்பிடி மச்சான் பயணம்', கொண்டு போன சோடா எப்பிடி' என்று கேட்டு கிண்டலாக சிரித்தான். ஒரு மாதமாய் தேடிய கேள்விக்கு விடை கிடைத்து விட்டது.

"லஞ்ச் பிரேக்குக்கான பெல் அடிச்சுட்டுது. முதல் வேலையாய் Fridgeஐ திறந்து பாக்கிறன். நான் கொண்டுவந்த அந்த Sprite போத்தல் உடைக்காமல் அப்பியே கிடக்கு. அப்பாடா! இப்ப வடிவாய்ச் சாப்பிடலாம். காரைக்குடி ஸ்ரைலில கோழி சமைச்சதெண்டு மனிசி சொன்னவள். சாப்பாடு கொண்டு வந்த Bagஐ அவிட்டு மைக்கிரோவேவுக்குள்ள வைக்கப்போகேக்க தான் பாக்கிறன். அதுக்குள்ளை எங்கட வீட்டு குப்பை கூளங்கள் கிடக்கு.

வெளிக்கிடும் பொழுது மனைவி சொன்னாள் 'போகேக்கை அந்த garbage bagஐயும் எறிஞ்சு போட்டு போங்கோ' எண்டு. ஒரு Bagஐ எறிஞ்சனான் தான். அவசரத்தில் சாப்பாடு கொண்டு வந்த bagஐ எறிஞ்சுபோட்டு garbage Bagஐ கொண்டு வந்து fridgeக்குள்ள பக்குவமாய் வச்சிருக்கன்.

என்னையே நான் எமாத்தேக்க சோடாவைக் குடிச்சுப் போட்டு தண்ணி ஊத்தி வச்சவனில இருந்த கோபம் இறங்கி விட்டுது. spriteஐ குடிச்சுப்போட்டு
மீண்டும் மிசினைப்
பாத்து நடக்கிறன்."



sekar.thambyrajah@thaiveedu.com

## TTC Red Rocket

TTC புதிய தொடரூந்துகளைசேவைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. ஜூலை 21ம் நாள் Younge - University - Spadina வழித்தடத்தில் Downsview நிலையத்திலிருந்து புதிய தொடரூந்து சேவையைத் தொடங்கியது. முந்தைய தொடரூந்துகளிலும் இது மிகுந்த பாதுகாப்பானது என உணர்வதாகச் சொல்கின்றார் 22 ஆண்டு கால TTC தொடரூந்து செலுத்துநர் Parick Hanson. 6 பெட்டிகள் கொண்ட புதிய தொடரூந்துகளில் முதலாவது பெட்டியிலிருந்து கடைசிப்பெட்டிவரையில் உட்புறமாகவே போகமுடியும். 24 வீடியோ காமெராக்கள் மூலம் தொடருந்தின் அனைத்துப் பகுதிகளையும் செலுத்துநர் கண்காணிக்க முடியும். தொடரூந்து வழித்தட வரைபடம், கடந்து சென்ற நிலையங்களைப் பச்சை நிறத்திலும் வரவிருக்கும் நிலையங்களைச் செம்மஞ்சள் (Orange) நிறத்திலும், தரித்திருக்கும் நிலையத்தை விட்டு விட்டு எரியும் பச்சை விளக்கிலும் குறிக்கின்றது. எந்தப் பக்கக் கதவால் இறங்க வேண்டும் எனவும் பயணிகளுக்கு அறிவித்தல் உண்டு. 10% அதிக பயணிகளை புதிய தொடரூந்துகளில் ஏற்றலாம். ஒன்ராறியோ மாகாண Thunder Bay இல் உள்ள Bombardier Transportation நிறுவனத்தின் தயாரிப்பு இந்தத் தொடரூந்துகள்.



இனிப்பிலும் ஒரு கசப்பு - 2015 வரை Downsview விலிருந்து Union வரையில் மட்டுமே Red Rocket எனச் செல்லப் பெயர் கொண்ட புதிய தொடரூந்துகள் சேவையிலீடுபடும்.

# Buy...sell...Invest...



Excellent Investment Property
Four Commercial Units
Five Apartment Units



Totally Finished -
900Sf Of Office Space
2 Offices; 1 Washroom




Brand New Commercial Retail
Unit 700 Sq Ft
High Traffic Intersection



Very good neighborhood
Open Any Business
Lots of parking



Detached 2 Storey Family Hom
Close To Uoft Campus
5+3 Bedrooms, 2 Washrooms



Acre Treed Lot With Pond& Deck.
Approx 2250 Sq FtBungalow
3+1 Bedrooms, 2 Washrooms



Spacious Corner Suite
2 Bedrooms, 1 Washroom



Great Opportunity
spacious and clean
2+1 Bedrooms, 2 Washrooms



Luxury 3-Level Townhome
With Patio
3+1 Bedrooms, 3 Washrooms




Brand New Luxury Condo
With All Amenities At
401/Kennedy
For Immediate Occupancy




Beautiful Detached Home
High Ceiling
4 Bedrooms, 3 Washrooms



All Brick 4 Bedroom Home
Link 2 Storey
4+2 Bedrooms, 4 Washrooms



Beautiful Home In High
Demand Area
4 Bedrooms, 3 Washrooms




Gorgeous Rosehaven Build,
Open Concept
4 Bedrooms, 3 Washrooms



Semi In A Great Location
Finished Basement
3 Bedrooms, 3 Washrooms

**Great Investment Opportunity Or Owner Occupancy**






**VIP Pricing Early Bird Specials Contact us For More Details**



Uthayn Aiyadurai-Broker
Cell:416-999-3555
aiya14@gmail.com
www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS

Jayanthi Sritharan-Broker
Cell:416-918-5872
jayanthi.sritharan@gmail.com
www.jrealhomes.com
www.sellgtahomes.ca

HOMELIFE HIGHER STANDARDS

Seelan Siva Aiyadurai-Broker
Cell:416-451-0271
seelansiva@gmail.com
www.sivahomes.com

**HomeLife GTA Realty Inc., Brokerage*** 1711 McCowan Road, Scarborough,ON. 416-321-6969

This is not intended to solicit buyers or sellers currently under contract with a broker.
*Each office independently owned and operated

**We Work As A Team To Serve You Better**

# பழுப்பு இனிப்பு

- அ.முத்துலிங்கம் -

எங்கள் வீட்டு குழாயில் நீர் கொட்டியது. அதுதானே அதன் இயல்பு எனச் சிலர் நினைக்கலாம். ஆனால் குழாயை இறுக்கிப் பூட்டிய பின்னரும் அது ஒழுகியது. மணிக்கூடு நேரத்தை அளப்பதுபோல குழாயின் வாயிலிருந்து தண்ணீர் டக் டக்கென்ற ஒலியுடன் விழுந்தது.

ரொறொன்ரோவில் மஞ்சள் பக்க புத்தகத்தை வீடு வீடாக இலவசமாக தந்திருப்பார்கள். நான் அப்படிக் கிடைத்த புத்தகத்தை திறந்து குழாய் திருத்துபவரை அழைப்பதற்காக பெயர்களை தேடினேன். அதிலே இருந்த ஒரு பெயர் என்னை ஆச்சரியப்படுத்தியது. மகிழ்நன். இன்னொருமுறை படித்தேன். மகிழ்நன். என்ன அருமையான பெயர் இது. பெயரிலேயே மகிழ்ச்சி இருந்தது. இவருடைய பெற்றோர் எத்தனை எதிர்பார்ப்புடன் இந்த பெயரை வைத்திருப்பார்கள். மற்றவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் ஒரு பணியை அல்லவா அவர் செய்தார். தொலைபேசியில் அவரை அழைத்து பிரச்சினையை சொன்னதும் இரண்டு மணி நேரத்தில் வருவதாகச் சொன்னார். அப்படியே வந்தார்.

வீட்டு மணியை அடித்தவுடன் கதவை திறந்தேன். அவருக்கு நாற்பது வயதுக்குள்தான் இருக்கும். தலைமயிர் பக்கவாட்டில் வளர்ந்து கொண்டு போனது. உதட்டுக்குள் இருந்து வெளிவந்து உடனேயே மறைந்துபோன ஒரு சின்னச் சிரிப்பு. பலவிதமான ஆயுதங்களை ஒரு பெட்டியில் காவிக்கொண்டு வாசலில் நின்றார். உள்ளே நுழைந்தவுடன் என் பெயர், ஊர், எங்கே படித்தேன், எங்கே வேலை செய்கிறேன், எப்பொழுது கனடாவுக்கு வந்தேன் ஆகிய சகல விருத்தாந்தங்களையும் கேட்டு அறிந்துவிட்டார். தன்னுடைய வேலைச் சப்பாத்துகளை கழற்றி வாசலில் விட முன்னரே என்னுடைய மெய்கீர்த்தியில் பாதியை தெரிந்துகொண்டார். அதன் பின்னர்தான் எந்தக் குழாய், எங்கே, எப்படி ஒழுகுகிறது என்ற கேள்வியை கேட்டு விடையையும் பெற்றார்.

படுத்துக்கிடந்தபடி ஆயுதம் ஒன்றினால் எதையோ திருக முயன்றார். பல நிமிடங்கள் ஆகியிருக்கும்., அப்படியே கிடந்தார். என்ன நினைத்தாரோ உருண்டு எழும்பி இது சரியான ஆயுதம் அல்ல, போய் வேறு எடுத்து வருகிறேன் என்று புறப்பட்டார். நான் சரி என்றேன். வீட்டிலே பாதி அறையை அடைத்து அவருடைய ஆயுதங்கள் ஒடியல் காயப் போட்டதுபோல பரவிக் கிடந்தன. புதிய ஆயுதத்தை கொண்டுவந்து திறக்க வேண்டியதை திறந்தார். குழாயைக் கழற்றி ஆராய்ந்து விட்டு இந்தப் பாகம் உடைந்திருக்கிறது என்று சொல்லி அதை வாங்கி வரப் புறப்பட்டார். நான் சரி என்றேன். புதிய உதிரிப்பாகத்தைக் கொண்டுவந்து பூட்டினால் அது பூட்டுப்படவில்லை. 'இது பழங்காலத்துக் குழாய். சரியான உதிரிப்பாகம் கிடைக்கவில்லை. நான் வேறு இடத்தில் பார்க்கிறேன்' என்று விட்டு கிளம்பினார். நான் சரி என்றேன். அன்றைய காலையிலிருந்து பல சரிகளைச் சொல்லியபடியே நின்றேன். கடைசியாகக் கொண்டுவந்த பாகம் பொருந்திப் போனது என நினைக்கிறேன். மகிழ்நன் வேலை முடிந்ததென மகிழ்ச்சியுடன் பகர்ந்தார். 'எவ்வளவு?' என்று கேட்டேன். தூரத்துச் சத்தத்தை உற்றுக் கேட்க முயல்வதுபோல தலையை சாய்த்து பிடித்து யோசித்துவிட்டு என் வருமானத்தில் பாதியை கேட்டார். பின்னர் இரங்கி என்னுடைய ஊர் அவருடைய ஊரிலிருந்து 17 மைல் தூரம் மட்டுமே என்பதால் ஒரு சின்னக் கழிவு தந்தார். நானும் காசைக் கொடுத்து அவரை அனுப்பிவைத்தேன்.

அவர் சென்ற சிறிது நேரத்தில் ஒரு சின்னப் புயல் அடித்து முடிந்ததுபோல சேதமுற்றுக் கிடந்த அறையை கூட்டி துப்புரவாக்கினேன். ஒரு சிறிய ஆயுதத்தை மறந்துபோய் விட்டு விட்டுப் போனது தெரியவந்தது. அவசரமாக அவருடையப் செல்பேசியை அழைத்தேன். பார்த்தால் மணி வீட்டுக்குள்ளேயே அடித்தது. அவர் செல்பேசியையும் மறந்து வைத்து விட்டுப் போய்விட்டார். வேறு வழியில்லாத படியால் அவர் அழைக்கும்வரை காத்திருந்தேன். அன்றைய நாள் முடிவதற்குள் அவர் திரும்பவும் வந்து செல்பேசியையும் ஆயுதத்தையும் மீட்டுச் சென்றார்.

எடுத்த ஒரு வேலையை உற்சாகத்தோடும் நேர்த்தியோடும் கச்சிதமாகச் செய்துமுடிப்பதற்கு சிலபேரால் மட்டுமே முடியும். இவர்கள் வேலை செய்யும்போது பாடிக்கொண்டு செய்வார்கள். அவர்களுக்கு மகிழ்ச்சிதரும் வேலை அது. பார்ப்பதற்கு ஒரு கலை நிகழ்ச்சியை பார்ப்பது போலவே இருக்கும். ஒரு நேர்த்தியும் கலையம்சமும் நிறைந்திருக்கும்.

பல வருடங்களுக்கு முன்னர் கனடாவில் பிரபலமான நாடக இயக்குநர் டீன் கில்மோரை ஒருமுறை சந்தித்தேன். அவருடைய நாடகத்தில் ஒரு பாத்திரம் செங்கல்லை எடுத்து வீசுவான். அது மேடையில் சரியாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் வந்து விழுந்து நிற்கும். 200 தடவைக்கு குறையாமல் செங்கல்லை எறிந்து ஒத்திகை பார்த்ததாக அந்த இயக்குநர் கூறினார். மேடையில் சற்று தள்ளி அது விழுந்தால் என்ன ஆகும்?' என்று நான் கேட்டேன். அவர் சொன்னார், 'ஒன்றுமே ஆகாது. சபையில் ஒருவருக்குமே அது தெரிய வராது, ஆனால் எனக்கு தெரியுமே' என்றார். எடுத்த எந்த ஒரு காரியத்தையும் உத்தமமாகச் செய்யவேண்டும். மற்றவர்களுக்காக அல்ல. அது உனக்கு திருப்தியையும் மகிழ்ச்சியையும் தரவேண்டும். அதுவே லட்சியம்.


எழுத்தாளர்கள் தாங்கள் எழுதுவதில் உடனே திருப்தி அடைந்துவிடுவதில்லை. ரோல்ஸ்ரோய் தன்னுடைய புகழ்பெற்ற 'போரும் அமைதியும்' நாவலை ஏழு தரம் திருத்தி எழுதினார். அவர் திருத்தங்களைச் செய்து வைக்க அவருடைய மனைவி சோ.்பியா நாவலை மறுபடியும் முதலில் இருந்து எழுதிவைப்பார். மறுபடியும் ரோல்ஸ்ரோய் திருத்துவார். இப்படி 1400 பக்க நாவலை அவர் மனதுக்கு திருப்தி தோன்றும்வரை திருப்பி திருப்பி எழுதினார். சுந்தர ராமசாமி ஒருமுறை அவருடைய 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' நாவல் வெளிவந்த காலத்தில் என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது சொன்னார். ஒரு 500 பக்க நாவல் எழுதுவதற்கு தான் 5000 பக்கங்கள் எழுதுவதாக. ரேமண்ட் கார்வருடைய எழுத்தை 40 வீதம் வெட்டிவிட்டுத் தான் பிரசுரிப்பார்கள். ஹெமிங்வே கூட அப்படித்தான். அவர் சில பக்கங்களை 20, 30 முறை திருப்பி திருப்பி எழுதியிருக்கிறார். பிரபல இயக்குநர் ஸ்டான்லி குப்ரிக் கார் கதவு சாத்துவதை 70 தடவை படம் பிடித்தார் என்று படித்திருக்கிறேன். சாதாரணமாக ஒரு கார் கதவைச் சாத்துவதை எதற்காக 70 தரம் படம்பிடிக்கவேண்டும் என்று கேட்கலாம். அவர் மனதிலே ஏற்கனவே இந்தக் காட்சி உட்கார்ந்திருந்தது. அது கிடைக்கும் வரை அவர் அப்படித்தான் திருப்பி திருப்பி அந்தக் காட்சியை எடுப்பார்.

எஸ்.ராமகிருஷ்ணனின் 'துயில்' நாவலில் ஓர் இடம் வரும். 'என்னை ஞாபகம் வைச்சிருக்கிற ஆளுகூட இருக்காங்களா?' ஒரு முக்கியமான பெண் பாத்திரம் இப்படிக் கேட்கும். நாவலில் அதைத் தொடர்ந்து வந்த வசனம்தான் உச்சமானது. 'அந்த ஆதங்கத்தில் அவளுடைய மொத்த வாழ்வின் சாரமும் அடங்கியிருந்தது.' மனித அவலத்தையும் தோல்வியையும் நிர்க்கதியையும் ஒரேயொரு வசனத்தில் கொண்டு வந்திருப்பார் ஆசிரியர். இந்த இடத்தை எஸ்.ரா எப்படி எழுதியிருப்பார்? எழுதிக்கொண்டு போகும்போது சாதாரணமாக வந்து விழுந்த வார்த்தைகளா? அல்லது திருப்பி திருப்பி செதுக்கி எழுதிய எழுத்தா? எப்படி இவ்வளவு கச்சிதமாக, சொற்ப வார்த்தைகளில் ஒரு பெண்ணின் வாழ்நாள் உணர்ச்சிக் கொந்தளிப்பை அடக்க முடிந்தது?

சில வருடங்களுக்கு முன்னர் ஓர் அமெரிக்க ஆசிரியர் எழுதிய முதல் நாவலுக்கு வாசிங்டன் புத்தகப் பரிசு கிடைத்தது. ஆசிரியருடைய பெயர் ஜொனாதன் எவிசன். பத்திரிகைகள் அவரை overnight success என்று புகழ்ந்து தள்ளின. நிருபர் அவரை பேட்டி கண்டபோது 'உங்களை ஓர் இரவு வெற்றி என்று சொல்கிறார்களே, அது உண்மையா?' என்று கேட்டார். ஆசிரியர் 'ஆமாம், 20 வருட ஓர் இரவு வெற்றி' என்று கூறினார். அவர் ஆறு வயதில் இருந்தே தான் எழுத்தாளராக வர வேண்டும் எனக் கனவு கண்டவர். நாள் கூலியாக வேலைசெய்துகொண்டு இரவுகளில் தொடர்ந்து எழுதியவர். அவருடைய வெற்றி இலகுவாகக் கிடைத்த ஒன்றல்ல. வெற்றிக்கு பின்னால் அத்தனை உழைப்பு இருந்திருக்கிறது. எஸ்.ரா போகிறபோக்கில் அந்த வசனத்தை எழுதியிருந்தால்கூட அதற்கு பின்னர் இருபது, முப்பது வருட பயிற்சி இருப்பது தெரியும். 525 பக்க நாவலில் அந்த வரிகளை மாத்திரம் மறக்க முடியவில்லை என்றால் காரணம் செதுக்கி செதுக்கி அப்படி அழகூட்டப்பட்டிருந்தது. நல்ல படைப்பின் அடையாளம் அது.

குறுந்தொகையில் ஒரு பாடல். தலைவி தோழியிடம் சொல்கிறாள். 'பார் என் நிலைமையை. அவர் பாட்டுக்கு என்னை சுகித்துவிட்டு போய் விட்டார். நான் இப்படி ஆகிவிட்டேன். யானை முறித்த கிளைபோல தொங்கிக்கொண்டு கிடக்கிறேன்.' மரக்கிளை முன்புபோல இல்லை முறிந்து நிலத்திலும் விழவில்லை. அதுபோல தானும் பாதி உயிரோடு இங்குமங்குமாக ஊசலாடிக்கொண்டு இருப்பதாகச் சொல்கிறாள். (குறுந்தொகை 112). புலவர் இந்த உவமையை எப்படி எழுதியிருப்பார். எழுதும் போது அப்படி வந்ததா? அன்றி, நிறைய யோசித்து பின்னர் எழுதினாரா? இத்தனை ஆயிரம் வருடங்களுக்கு பின்னரும் அந்த வரிகள் இன்னொருவரால் நகல் செய்ய முடியாதவாறு இருக்கும் ரகஸ்யம் வியப்பைத் தான் தருகிறது.

சேக்ஸ்பியரின் புகழ் இன்றுகூட ஏறுமுகமாகத்தான் இருக்கிறது. நூற்றுக்கணக்கான புத்தகங்கள் அவரைப் பற்றி ஏற்கனவே வந்துவிட்டன. இனிமேலும் வந்துகொண்டே இருக்கும். சமீபத்தில்கூட என்னுடைய நண்பர்



தொடர்தல் 97ம் பக்கம்

ஒருவர் எழுதிய 'For the Love of Shakespeare' என்ற புத்தகம் வெளிவந்திருக்கிறது. நண்பர் தன்னுடைய 75வது வயதில் எழுதிய முதல் புத்தகம் அது. எப்படியும் சேக்ஸ்பியரைப் பற்றி ஒரு புத்தகம் எழுதவேண்டும் என்பது அவர் வாழ்நாள் கனவு. சேக்ஸ்பியரைப்போல அவருக்கு முந்தி எழுதியவரும் கிடையாது, பிந்தி எழுதியவரும் கிடையாது. அவர் தரும் சொற்சித்திரத்தை படிக்கும்போது இவருக்கு மாத்திரம் எப்படி இப்படி தோன்றுகிறது என்ற வியப்பு நீடித்துக்கொண்டே போகும். Tempest நாடகத்தில் ஓர் இடம். புரஸ்பரோ தன் மகளுக்கு தான் நாட்டை இழந்துவிட்ட ஓர் அரசன் என்ற உண்மையை சொல்கிறான். அவளால் நம்பமுடியவில்லை, அதிர்ச்சியடைகிறாள். 'Your tale, Sir, would cure deafness' என்று சொல்கிறாள். 'உங்களுடைய கதை, ஐயா செவிட்டுத் தன்மையை குணமாக்கும்.' என்ன ஒரு சொல்லாட்சி! இந்தக் கற்பனையையும், கவித்துவத்தையும் முழுமையாக செரித்துக்கொள்ள நீண்ட நேரம் தேவைப்படும்.

'ஒரு குடம் தண்ணீர் ஊற்றி ஒரு பூ பூத்தது. இரண்டு குடம் தண்ணீர் ஊற்றி இரண்டு பூ பூத்தது. மூன்று குடம் தண்ணீர் ஊற்றி மூன்று பூ பூத்தது.' இப்படி ஒரு பாடல் இருக்கிறது. எத்தனை குடம் தண்ணீர் ஊற்றினாலும் ஐந்து இதழ் பூ ஆறு இதழாக மாறுவதில்லை. எட்டு இதழ் பூ ஒன்பது இதழ் பூவாக மாறாது. பூ இதழ்கள்கூட ஒரு கணக்காகத்தான் பூக்கின்றன. இயற்கைகூட ஒரு கணக்குப்படிதான் வேலைசெய்கிறது. ஒரு இதழ், இரண்டு இதழ், மூன்று இதழ், ஐந்து இதழ், எட்டு இதழ், 13 இதழ், 21 இதழ் (அடுத்தது 34, அடுத்தது 55, அடுத்தது 55+34 = 89) என்று அதுவும் ஓர் இயற்கை நெறிப்படி கூடிக்கொண்டு போகிறது. இதை Fibonacci தொடர் என்று சொல்கிறார்கள். ஒன்றிரண்டு விதிவிலக்கு இருக்கலாம். எதற்காக இப்படி என்று கேட்டால் விஞ்ஞானிகளிடம் பதில் இல்லை. 'எல்லாமே ஒரு பிரபஞ்ச நியதியின்படிதான் இயங்குகிறது. பிரபஞ்சம் ஓர் உத்தமத்தை நோக்கிய அமைப்பு. எங்குமே அழகியல் நிறைந்து கிடக்கிறது.' என்று பதில் வருகிறது. பிரபஞ்சமே அழகாய்த்தான் சிருட்டிக்கப்பட்டிருக்கிறது. கிரகங்கள் ஓர் ஒழுங்குடன் கதி மாறாமல் சுற்றி வருகின்றன. கிரகங்களும் சந்திரன்களும் வால்நட்சத்திரங்களும் ஒன்றோடு ஒன்று முட்டிக்கொள்வதில்லை. ஒரு பறவை கூடு கட்டும்போது எவ்வளவு அழகாக இருக்கிறது. அதன் கவனம் எள்ளளவும் பிசகுவதில்லை. எத்தனை சிக்கனம், எத்தனை நேர்த்தி. ஒரு சிறுத்தை வேட்டையாடும்போது அதன் உடல் அசைவுகளில் வெளிப்படும் கலைத்தன்மை வேறு ஒன்றிலும் தென்படுவதில்லை. ஒரு யானை நடக்கும்போதும் அது தான். ஒரு கோலாக்கரடி தூங்கும்போதும் அதுதான். ஆனால் மனிதன் ஒரு வேலை செய்யும்போது அநேகமாக அவன் முழு மனமும் அங்கே இருப்பதில்லை. அதில் நேர்த்தியும் இல்லை கலையும் இல்லை.

குழாய் திருத்தக்காரரை நான் அழைத்த போது நடந்தது அதுதான். நான் அவரிடம் சொன்னதெல்லாம் அவர்மேல் உருண்டு கொண்டு போனது. நேர்த்தியாக வேலை செய்யும் தகுதி அவரிடம் இல்லை. மகிழ்நன் என்ற பெயரைப் பார்த்து நான் ஒரு முடிவு எடுத்தேன். அது தவறானது. நல்ல பெயர் உள்ளவர் நல்ல வேலை செய்வார் என்பது என்ன நிச்சயம்? ஒரு மருத்துவரிடம் போக முன்னர் இவர் நல்ல மருத்துவரா என்பதை எப்படி கண்டுபிடிப்பது. அதற்கு ஏதாவது சோதனை செய்யவேண்டும். ஒரு புத்தகம் வாங்க முன்னரே அது எப்படியான புத்தகம் என்று தெரிந்து வாங்குவது எவ்வளவு அவசியம். புத்தகத்தை வாங்கிய பின்னர் 20 பக்கங்கள் படித்துவிட்டு அதை தூக்கிப்போடுவது சரியாக ஆராய்ச்சி செய்து புத்தகத்தை வாங்காத படியால்தான்.

எண்பதுகளில் அமெரிக்காவில் பிரபலமான ஓர் இசைக்குழு இருந்தது. பெயர் வான் ஹெலன் இசைக்குழு. இவர்களின் இசைத் தட்டுகள் ஒரு கோடி விற்பனை செய்து சாதனை படைத்தவை. இந்தக் குழு அமெரிக்காவின் பிரபல நகரங்களில் எல்லாம் இசை நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறது. இவர்களின் மேடை உபகரணங்கள். மேடை அமைப்பு சாமான்கள், இசை வாத்தியங்கள் போன்றவை 18 ட்ரக் வண்டிகளில் இவர்கள் போகும் இடங்களுக்கு போகும். அப்படியென்றால் இவர்களின் இசை நிகழ்ச்சியின் பிரம்மாண்டத்தை ஓரளவுக்கு ஊகித்துக்கொள்ளலாம்.

ஆனால் ஒப்பந்தம் போட்டவர்களிடமிருந்து இந்தக் குழுவினருக்கு சில வேளைகளில் போதிய ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. அப்படியான சமயங்களில் இசை நிகழ்ச்சிகள் தோல்வியில் முடியும். இவர்கள் எவ்வளவு தான் திறமையாக இசைநிகழ்ச்சியை நடத்தினாலும் இவர்களை அழைத்தவர்களின் முழு ஒத்துழைப்பும் இல்லாமல் போனால் தோல்வி ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே இப்படியான தோல்விகளை தவிர்க்க இந்தக் குழுவின் தலைவர் ஒரு புதுவிதமான ஒப்பந்தத்தை உருவாக்கினார். அந்த ஒப்பந்தம் விழாக்காரர்கள் செய்யவேண்டிய நிபந்தனைகளை நீண்ட பட்டியலாகப் போட்டது. அதில் ஒன்று இப்படி இருந்தது. 'இசைக்குழு தங்கும் ஹொட்டல் அறையில் 5 இறாத்தல் எம் & எம் இனிப்பு வகை எல்லா நிறங்களிலும் (பச்சை சிவப்பு மஞ்சள் நீலம்) இருக்கவேண்டும். ஆனால் பழுப்பு நிறத்தில் இருக்கக்கூடாது.' இதுதான் அந்த நிபந்தனை. இசைக்குழுவுக்கும் இந்த நிபந்தனைக்கும் என்ன தொடர்பு. என்பது ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை.

குழுவின் தலைவர் ஹொட்டலுக்கு வந்ததும் செய்யும் முதல் வேலை ஐந்து இறாத்தல் இனிப்பு எல்லா நிறங்களிலும் இருக்கிறதா என்று பார்ப்பது. பின்னர் பழுப்பு நிற இனிப்பு ஒன்றாவது அகப்படுகிறதா என்பதை கிளறிக் கிளறிப் பார்ப்பார். தப்பித் தவறி ஒரு பழுப்பு நிற இனிப்பு அகப்பட்டால் ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு போய்விடுவார். பலருக்கு இது ஏன் என்று அப்போது புரியவில்லை. இசை நிகழ்ச்சிக்கும், ஒரு பெறுமதி இல்லாத பழுப்பு நிற இனிப்புக்கும் அப்படி என்ன சம்பந்தம். பல வருடங்களுக்கு பிறகு இந்தப் புதிரை இசைத்தலைவர் விடுவித்தார். 'நாங்கள் கொடுக்கும் இசை நிகழ்ச்சி உத்தமமாக இருக்கவேண்டும். எங்களுக்கு திருப்தியாக அமையவேண்டும். ஆனால் அழைப்பவர்களின் மேடை ஒத்துழைப்பு இல்லாமல் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் நிகழ்ச்சி வெற்றிபெறுவதில்லை. ஆகவே இதைத் தவிர்ப்பது எப்படி? அதற்காகத்தான் பழுப்பு இனிப்பு நிபந்தனை. பழுப்பு இனிப்பு தட்டுப்பட்டால் நிகழ்ச்சியை நடத்தமாட்டோம். அவர்கள் ஒப்பந்தத்தை நுணுக்கமாக படிக்கவில்லை என்று அர்த்தம். ஒரு சின்னக் காரியத்தை செய்ய முடியாதவர்கள் ஒரு பெரிய காரியத்தை எப்படி சரியாகச் செய்வார்கள்? இந்த விதியை ஒப்பந்தத்தில் புகுத்திய பிறகு எங்களை அழைப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக செயல்பட ஆரம்பித்தார்கள். எங்கள் நிகழ்ச்சிகளும் வெற்றி பெற்றன.'

'பழுப்பு இனிப்பு பரீட்சை' என்றால் அமெரிக்கர்கள் பலருக்கு இன்றைக்கு அது என்னவென்று தெரியும். எங்களுக்கு தேவை ஒரு பழுப்பு இனிப்பு பரீட்சை. அப்படியான பரீட்சை இருக்குமாயின் நாங்கள் வாங்கும் புத்தகம் திருப்தியானதாக அமையும். பார்க்கப் போகும் நாடகம் மனதுக்கு பிடிக்கும். சினிமாவுக்கு போய் ஏமாற்றமுடன் திரும்பத் தேவை இல்லை. முக்கியமாக குழாய்க்காரரை அழைக்கும் போது அவருடைய திறமையை அவருடைய பெயரின் இனிமையை வைத்து தீர்மானிக்கமாட்டோம்.

இனிமேல் ஒப்பந்தம் செய்வதற்கு ஒரு நல்ல பெயர் மட்டும் போதாது. ஏதாவது பரீட்சையிலும் அவர் தன் தகுதியை நிரூபிக்கவேண்டும். எதிர்வரும் காலங்களில் மகிழ்நன், கபிலர், தமிழ் பற்றாளன், பொற்தாமரைக் கண்ணன், இனியதோழன், அன்புக்கனி போன்ற எந்தப் பெயரை பார்த்தாலும் எச்சரிக்கையாக இருப்பேன். தமிழ் பற்றுக்கும் வேலைத் திறமைக்கும் சம்பந்தமே கிடையாது.

முதலில், மறுபடியும் ஒழுகத் தொடங்கிய குழாயை நிற்பாட்ட ஏதாவது செய்யவேண்டும்.



muththulingam.a@thaiveedu.com


# ஆயுட் காப்புறுதி

• Life Insurance • Critical Illness Insurance • Mortgage Inurance • RESP



*Rate based on 30 year female Elite non smoker
(10 years term insurance)

ஒரு மில்லியன் டொலருக்கு
$ 27.00 மாதாந்தம்

எதிர் காலத்தின் நிம்மதியான வாழ்விற்க்கு
நிகழ்காலத்திலேயே முடிவு எடுங்கள்...

Critical Illness Insurance

25 விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி பணம் பெறமுடியும். நோய் ஏற்படாவிடின் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்.



A PARTNER YOU CAN TRUST

DILIP KUMAR GOVINDASAMY
Insurance Adviser

Cell: 647-227-2683
Office: 416-759-5453
Fax: 416-759-6220
E-mail: dilipg26@gmail.com
759 Warden Ave, Toronto, ON M1L 4B5

IA INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

REFER YOUR FRIENDS & GET REWARDS!!!

"Excellent Rates with Quality Services"

## வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 24

K.S. பாலச்சந்திரன்

# பெயராபத்தும் பேராபத்தும்

எனது தனிநடிப்பு நிகழ்ச்சிகளை ஊர், ஊராக மேடையேற்றிக்கொண்டிருந்த காலம். நான் சில விஷயங்களில் அவதானமாக இருக்க வேண்டியிருந்தது. நகைச் சுவையாக செய்யும் நிகழ்ச்சிகளில் கிராமங்களில் நிறையவே தெரியப்பட்ட நபர்களின் பெயர்களைப் பாவிப்பது பல தடவைகளில் சிக்கலில் முடிந்தது. எங்கள் சமூகத்தில் காலத்துக்குக் காலம் சில குறிப்பிட்ட பெயர்கள் வைப்பது ஒரு நாகரீகமாகவே கருதப் படுவது நீங்கள் அறியாததல்ல. இதனால் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு காலத்தில் நிறையப்பேர் சின்னத் தம்பிகளாக, இளைய தம்பிகளாக, முருகேசுக்களாக, சங்கரப்பிள்ளைகளாக இருந்தார்கள். அடுத்த தலைமுறையில் ஒவ்வொரு ஊரிலும் தடக்கி விழுந்தால் சுப்பிரமணியங்கள், செல்லத்துரைகள், கந்தசாமிகளில்தான் தடக்கி விழுந்தார்கள். அப்படி இருந்தால் அல்லது விழுந்தால் உமக்கு என்ன என்று நீங்கள் கேடகலாம்.

என்னுடைய வில்லங்கம் என்னவென்றால், நான் நகைச்சுவையாக முருகேசப்பாவின் பஸ் பிரயாணத்தைப்பற்றி ஏதாவது சொல்லப் போக, அந்த ஊரில் அந்தப் பெயருடன் ஒருவர் இருந்து, அவருடைய பாசமான பிள்ளைகள், என்னுடைய அப்பாவைப்பற்றி எப்படி இவர் சொல்லலாம் எனறு கம்பு, தடிகளுடன் என்னைச் சுற்றி வளைக்கும் ஆபத்து வந்தாலும் வரும். இந்தச்சோலியே வேண்டாம் என்று இன்னுமொரு ஊரில் நிகழ்ச்சி செய்யும்போது, முருகேசப்பாவை கைவிட்டு, சங்கரப்பிள்ளையண்ணை என்று சொல்லப் போனால், அந்த ஊரில் கட்டைச்சங்கரப் பிள்ளை, நெடுவல் சங்கரப்பிள்ளை, தாடிச் சங்கரப்பிள்ளையென்று மூனறுபேர் இருந்து தொலைப்பார்கள். பிறகென்ன.. குளவிக் கூட்டுக்கு கல்லால் எறிந்த கதையாக ஊரே குழம்பிவிடும்.


போதும், போதாதற்கு அந்த பெயருக்குரியவர்களோ அல்லது பிள்ளைகளோ ஊருக்குள் ‘சண்டியர்’களாக இருக்கப்போனால் மாறுகால், மாறுகை வாங்கிவிடும் உயிராபத்துக்கூட ஏற்படலாம். குருஷேத்திர யுத்த களத்தில் தன் உற்றார், உறவினர், ஆச்சார்யர்களை எப்படிக் கொல்வேன் என்று தன் வில்லான ‘காண்டீபத்தை’யும், அம்பறாத்தூணியையும் கைநழுவவிட்டு அர்ச்சுனன் தன் தேரின் தளத்தில் சோர்ந்து உட்கார்ந்து விட, பார்த்தசாரதியாகிய கண்ணன் கீதா உபதேசம் செய்கிறாரோ அதுமாதிரி எனக்கும் இந்த விஷயத்தில் உபதேசம் செய்ய ஒரு சாரதி இருந்தார். என்னுடைய நிகழ்ச்சிகளுக்கு என்னை அழைத்துப்போகும் வாடகைக்கார் சாரதியைச் சொன்னேன்.

வீட்டிலிருந்து மாலைநேரத்தில் புறப்பட்டு, அவரது காரில் ஏறி உட்கார்ந்து, போகவேண்டிய ஊரின் பெயரைச் சொன்னவுடனேயே, அவர் அந்த ஊரில் தவிர்க்கப்பட வேண்டிய ‘பெரிய’ மனிதர்களின் பெயர் பட்டியலையே சொல்லி முடித்து விடுவார். இங்கே ‘கைவே’யில் சிக்னல் போட்டு மறித்து விட்டு, கார் நம்பரை அடித்து, உங்கள் ஜாதகத்தையே கையில் எடுத்துவிடும் கனடா பொலிஸ்காரர்களைப்போல என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

கணினியின் நிறமே தெரியாத அந்தக்காலத்தில், ஒரு கிராமத்தின் வடகைக்கார் சாரதிக்கு இத்தனை விஷயங்களும் எப்படித் தெரியும் என்று நீங்கள் குறுக்குக்கேள்வி கேட்கலாம். விளக்கம் சொல்கிறேன். யாழ்ப்பாண குடாநாட்டில் எங்கள் தலைமுறையோடு, அதற்கு முன்னும் பின்னும் உள்ள இரண்டு, மூன்று தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் அனேகரின் பிறப்புச் சான்றிதழ்களை எடுத்துப்பாருங்கள். அவர்களின் சொந்த இடம் எதுவாக இருந்தாலும் பிறந்த இடம் இணுவில் என்றிருக்கும். ஆமாம்... இணுவில் ஆஸ்பத்திரிதான்.

எங்கள் ‘பார்த்தசாரதி’ இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்தான் தனது வாடகைக்காரை வைத்திருப்பார். ஏதோ சுகபெலமாக பிறந்து, இந்த உலகத்தை கண்விழித்துப் பார்த்து கதறியழுத எங்கள் முதல் கார் பயணம் (குழந்தையாக) அனேகமாக அவரது ‘மொறிஸ் மைனர்’ காரில்தான் நடந்திருக்கும். இப்பேது தெரிகிறதல்லவா? எங்கள் ஜாதகமே அவரது கையில் இருக்கும் ரகசியம்.

“அவர் புகழ் சொல்லத்தரமோ” என்று இன்னும் நீட்டி முழக்காமல் விஷயத்துக்கு வருகிறேன். இவ்வளவு கவனமாக நான் நடந்தும் ஒரு முறை பிரச்சினை வேறுவடிவத்தில் வந்தது. யாழ்ப்பாணத்தில் ஒரு கிராமத்தில்தான் நிகழ்ச்சி. நாங்கள் போய்ச்சேரும் போது சாமமாகிப் போய்விட்டது. புழுதி



நிறைந்த ஒழுங்கை ஊடாகத்தான் பயணம் செய்து நிகழ்ச்சி நடக்கும் கோயிலுக்கு போய்ச˙சேரவேண்டும். மிகவும் ஒடுக்கமான ஒழுங்கை, போதாதற்கு ஆயிரத்தெட்டு வளைவுகள். ஏதோ நிதானத்தில் வெட்டி,

வெட்டி ஓடிக்கொண்டிருந்தார், கார் டிரைவர்.

இப்படியே பல முடக்குகள் தாண்டி ஒரு முடக்கில் திரும்ப, முன்னால் ஒருத்தர் சைக்கிளில் ஒழுங்கையின் நடுவில் சென்று கொண்டிருப்பது தெரிந்தது. “யாரோ...” என்று நான் சொல்லத்தொடங்கவும், எங்கள் கார் அந்தச் சைக்கிளை இடித்து, ஓடியவருடன் பக்கத்தில் இருந்த அலம்பல்வேலிக்கு மேல் சாய்த்து விட்டது. பாரம் தாங்காமல் அலம்பல்வேலியும் உட்புறமாக சரிந்து விட்டது. ஒரு கணம் தான். சரிந்து கிடந்தவரின் கோபப்பார்வை என் பிடரியில் சில்லிடவைத்தது.

நான் இறங்கி, விழுந்தவரை தூக்கிவிட்டு, நடந்ததுக்கு மன்னிப்பு கேட்கலாம் என்ற பாவனையில் கார்கதவை திறக்கமுற்பட, டிரைவர் பதட்டத்துடன் “தம்பி மோட்டுவேலை பாராதையுங்கோ..” என்று சொல்லிவிட்டு காரை வேகமாக எடுத்து சென்றார். அப்படிப் போகும் போது ஒரு கதை சொன்னார். அதுதான் என்னை கலங்கடித்தது.

“நாங்கள் இண்டைக்கு தப்பி பிழைச்சுப் போறதுதான் கஷ்டமாக இருக்கப்போகுது.. பொல்லாத ஆளோடை பிரச்சினைப்பட்டிட்டம்” என்று சொல்லிக்கொண்டே ஸ்பீடோ மீட்டருக்கு மேல் ஒட்டியிருந்த பிள்ளையார் படத்தில் தொட்டு கும்பிட்டு, வரப்போகும் ஆபத்தை உறுதிப்படுத்தினார். நான் அத்தோடு வெல வெலத்துப்போய் விடடேன்.

எப்படியோ கோயிலடிக்கும் போய் எஞ்சினை நிற்பாட்டாமலே என்னை இறக்கிவிட்டு, “தம்பி.. இங்கை நிண்டால் ஆபத்து.. காரையும் அடிச்சு உடைச்சுப் போடுவான். நான் உங்க கிட்ட ஒரு இடத்திலைபோய் நின்று விட்டு, கணக்காய் உங்களை ஏத்த வாறன்” என்று சொல்லி, எனது பதிலையும் கேட்காமல் பறந்தே விட்டார்.

நான் போய் வியர்த்து, விறுவிறுத்து நிற்க திருவிழாக்காரருக்கு ஆச்சர்மாகிப்போய் விட்டது. என்ன நடந்ததென்று கேட்டார்கள். நான் நடந்ததைச் சொல்லவும், அவர்களும் வியர்த்து, விறுவிறுக்க ஆரம்பித்தது போலப் பட்டது. ஒருவாறு சமாளித்து என்னை மேடையில் ஏற்றினார்கள்.

நிகழ்ச்சி தொடர்ந்தது. யாரோ என்னை உற்றுப்பார்ப்பதுபோல உள்ளுணர்வு என்னை எச்சரித்தது. உண்மைதான். கோயிலுக்கு முன் அலங்காரமாக கட்டப்பட்டிருந்த சிகரத்தில் சாய்ந்து கொண்டு என்னை வெறிப்பார்வை (அந்த வெறியுந்தான்) பார்த்துக் கொண்டு நின்றார், அந்த சைக்கிள்காரச் சண்டியன்.


நிகழ்ச்சி முடியும் தறுவாயில், குடிக்க சோடா தரும் சாக்கில் மேடைக்கு வந்த திருவிழாக்காரர், “அவன்தான் வந்து நிற்கிறான்” என்று காதுக்குள் கிசுகிசுத்தார். அத்தோடு உபரியாக ஒன்றும் சொன்னார் “யோசியாதையுங்கோ... நாங்கள் பத்திரமாக கொண்டு போய் சேர்ப்பம்” அதற்கு பதிலாக “எங்கே ஆஸ்பத்திரியிலா சேர்க்கப்போறீர்கள்?” என்று சொல்ல நினைத்தேன். ஆனால் அதற்கு அவகாசம் இருக்கவில்லை.

கலலொன்னு வந்து மேடையில் விழுந்தது. அடுத்த கல் மேடைக்கு மேல் கட்டியிருந்த பெரிய ‘பல்பை’ உடைத்து, கண்ணாடித் துண்டுகளை என்மீதும் தூவியது. கல் வந்த பக்கமாகப் பாரத்தேன். ஒரே புழுதி மண்டலம். பலபேர் சேர்ந்து அவனை மடக்க முயற்சிப்பது தெரிந்தது. அவனுக்கு ஆதரவாக கத்திக் கொண்டு வேறு சிலரும் ஓடிவருவது தெரிந்தது

என்னை ஒரு திருவிழாக்காரர் இழுத்துக் கொண்டு கோயில் பின்வீதிப்பக்கமாக ஓடினார். நான் கட்டியிருந்த பட்டுவேட்டியின் கீழ் சரிகை கிழிந்து காலில் சிக்குப்படவும் சமாளித்து ஓடினேன். கோயில் பின்வீதியில் எனது ‘சாரதி’’ தேரோடு (மன்னியுங்கள்.. காரோடு) கணக்காக நின்றிருந்தார். நான் ஏறி உட்கார்ந்ததும், கார் எங்கள் ஊரை நோக்கி காற்றாய் பறந்தது.

அரைவாசி தூரம் கழிந்ததும்தான் திருவிழாக்காரரிடம் எனது சன்மானத்தை வாங்காமல் வந்துவிட்டது தெரிந்தது. அதற்காக திரும்பிப் போக முடியுமா? பேசாமல் இருந்து விட்டேன். கிழிந்துபோன எனது கல்யாண படடு வேட்டி ஒருபக்கமிருக்க, வாடகை கார்காரருக்கு கூலியை என் சொந்தப்பணத்தில் கொடுக்க நேர்ந்தது கவலையாகத்தான் இருந்தது.

அங்கு நடந்த கலாட்டாவின் முத்தாய்ப்பாக, எங்கள் காரின் நிறத்தில் இருந்த ‘சப்பரம்’ கொண்டு வந்த காரின் கண்ணாடிகளை அடித்து உடைத்து விட்டார்கள் என்று செய்தி வந்தது. ஆனால் அதற்குபிறகு ஒரு நாளும் நான் அந்த ஊர் எல்லையையே மிதிக்க வில்லை.



ksbala@thaiveedu.com

### மகளிர் உதைபந்து:

அனைத்துலக உதைபந்து சம்மேளனம் (FIFA) மகளிருக்கான உலகக்கோப்பைப் போட்டியையும் நடத்தி வருகின்றது. ஜூலை 17ம் நாள் ஜேர்மனி பிராங்பேர்ட் நகரில் நடைபெற்ற 2011ம் ஆண்டுக்கான இறுதிப்போட்டியில் அமெரிக்காவை 3:1 கணக்கில் Penalty Shoot Out முறையில் வெற்றி கொண்டு ஜப்பான் அணி உலகக்கோப்பையைக் கைப்பற்றியது. ஆசிய அணியொன்று இதற்கு முன் அரை இறுதியைத் தாண்டியதில்லை. 2015ம் ஆண்டுக்கான போட்டி கனடாவில் நடைபெறவுள்ளது. 2014இல் 20 வயதுக்குட்பட்ட மகளிர் உதைபந்து உலகக்கோப்பைப் போட்டியும் கனடாவிலேயே நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# B.V.F
## BRIGHT VISION FINANCIAL CORP.

***Securing your Family's Future***

*Life insurance • Critical Illness • Disability Insurance • RRSP*
*Travel Insurance . Mortgage Insurance • Investments • RESP*

85 வயது வரைக்கும், எந்த வருத்தம் இருந்த போதிலும் மிகக் குறைந்த மாதாந்த கட்டணத்தில்
*Non-Medical & Funeral insurance,* மற்றும் *Medical Insurance*

குடும்ப அல்லது தனி ஆள் ஒருவரின் வருமானத்திற்கேற்ற காப்புறுதி வேண்டுமா?
20க்கும் மேற்பட்ட முன்னணிக் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்களுக்கேற்ற
காப்புறுதியைத் தெரிவு செய்ய எம்மை நாடுங்கள்.



**416 • 844 • 7390**

*Free quote! House calls also available.*

## NOW HIRING!

*Full time / Part time*
*Insurance Agents / RESP Rep's / Staff Employees*
*Free Classes for Agents**

*restrictions may apply

**Varna Kanapathippillai,** *B.Sc.(Eng).*
*President / Insurance Advisor*

**416 • 844 • 7390**

insurance@brightvisionfn.com
vwww.brightvisionfn.com

*Bus* **416-623-4937**
*Fax* **416-321-0413**
**80 Nashdene Road Unit B28**
**Scarborough, ON M1V 5E4**


GTR வழங்கும்
கலாதரன் & கலைஞர்கள் in
ORIGINAL
நட்சத்திரத்திருவிழா
13 AUGUST 14
சனி – ஞாயிறு
MARKHAM FAIR GROUNDSல்
பிரதான அனுசரணையாளர்கள்
AMBIKA JEWELLERY
Yal Market
We carry Sri Lankan, Indian & Canadian Grocery
Fresh vegetables, Fruits, Fish, Meat & Much More
2499 Eglinton Ave E
Scarborough, ON
Tel: 416-267-5551
WHITE PINE INN
1 866 796 7333
NKS DRAPERY & BLINDS
Draperies, Curtains, Blinds
கேதா நடராஜா - 416 321 6420
210, Silverstar Blvd., Unit 825,
Scarborough, ON, M1V 5J9
Tel - 416 321 6420, 905 944 0218
Fax - 416 321 2217
Rajaram
Cash Express Inc.
துரித பணமாற்றுச் சேவை
416 297 4700
3351 Markham Road
(Markham/Steels)
அனுமதி இலவசம்
தொடர்புகளுக்கு: 416 264 4283
நிகழ்ச்சி அனுசரணை
VIJAYAS SILK
27, DUNDAS ST. E.
MISSISSAUGA
905 273 7997
S & S Cash & Carry
416 971 5010
EASY HOME BUY
Buying? Selling? Mortgage?
7 STAR BANQUET HALL
416 877 0959
647 209 0661
416 887 6715

# சகல ரோக நிவாரணி
# பிராண ஜீவ




மூவாயிரமாண்டுகளுக்கு மேலான ஆயுர்வேத பாரம்பரியத்தில் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மூலிகை ஊட்டச்சத்து ஒளடதம்

எமது புதிய அறிமுகம்!!

- 200 ற்கும் மேற்பட்ட மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது
- உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது
- உடலின் நச்சுத்தன்மையை நீக்கி புத்துணர்வை ஊட்டுகிறது
- அமெரிக்க FDA (Food and Drug Administration) இனால் அங்கீகரிக்கப்பட்டது

## பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!




**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

## ஊமைச் சதை பெருகுவதை தடுக்கிறது! வாத வலியை நீக்குகிறது! உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!




**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

## The EVERMATIN HAIR LOTION™




உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமுடி வளரவும் எவமார்டின் மூலிகை ஒளடதம்! உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு இது. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.




## இயற்கை மூலிகையிலான தலைமுடி மை

மருதாணி கொண்டு செய்யப்படும் இவ் முடி மை உங்கள் கேசத்தை நன்கு பராமரிக்கிறது.

Amazon
Health Care

SABONA
& Gift

இப்போது இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா நாடுகளிலும் எமது தயாரிப்புகளை பெற்றுக்கொள்ளலாம்.
www.amazonhealthcare.co.uk



Tel: 416-264-8787
www.amazonhealthcare.ca
2602 Eglinton Ave,. East. (@Midland)

JayaCS • 416-275-0070


Your Dedicated Realtor
For all your Real Estate needs.
416.347.8732
வீடு வாங்கவோ விற்கவோ.....அழையுங்கள்
Easy to approach • Comfortable Service • Free Consulting
Leo Swampillai
Sales Representative
DIR 416.347.8732
leo33@rogers.com
HOMELIFE
HIGHER STANDARDS
Homelife/Future
Realty Inc., Brokerage*
BUS 905.201.9977 FAX 905.201.9229
205-7 Eastvale Drive Markham ON L3S 4N8
*Independently Owned and Operated

# கடவுள் கரந்துறையும் காலம்

யாழ்ப்பாண அரசு - 06

- நிமால் நாகராஜா -

விண்ணைத்தொடும் இராஜகோபுரத்துடன் விரிந்து பரந்திருக்கிறது அந்த ஆலயம். தென்னிந்திய ஆலயங்களுக்கு நிகராக நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்த கோயிலின் மதில்சுவர்கள் மைல்கணக்கில் நீள்கின்றன. நான்கு அடி அகலமாக அமைக்கப்பட்டிருந்த சுற்றுச் சுவர்களில் சர்வசாதாரணமாக இரண்டு பேர் அருகருகே நடந்து செல்லலாம். அந்தளவுக்கு விஸ்தாரணமாக அமைக்கப்பட்டிருந்த கோயிலின் நாற்புற வாசல்களிலும் கோபுரங்கள் மிளிர்கின்றன. தோன்றிய நாள் தொடக்கம் ஈழவரின் சமய, கலாச்சார அடையாளங்களில் மிக முக்கியமாக திகழ்ந்து கொண்டிருக்கும் இந்த ஆலயம் 'நல்லூர் கந்தசுவாமி கோவில்' என பக்திப் பரவசத்துடன் உச்சரிக்கப்படுகின்ற ஒரு மந்திரச்சொல். இந்த மந்திரச் சொல் கட்டிப்போடாத மனிதர்களே இல்லையென்னுமளவுக்கு புகழ் பூத்த ஒரு புனிதத் தலம்.

ஈழத் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி உலகில் பரந்திருக்கும் அத்தனை சைவ சமயத்தவர்களின் இன்றியமையாத அடையாளங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கும் இந்த இறைத் தலத்தினை பற்றி முற்றாக அறிய வேண்டுமானால் வரலாற்றில் பின்னோக்கி நீண்டதூரம் போகவேண்டியிருக்கிறது. அது பறங்கியர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு மிகவும் முற்பட்ட காலம்.

அது 1242ம் ஆண்டு. யாழ்ப்பாண அரசை கீர்த்தியுடன் ஆண்டு போன ஆரியச் சக்ரவர்த்திகளில் முதலாவது ஆரியச் சக்ரவர்த்தி அரண்மனையில் அமர்ந்திருக்கிறான். விசயகாலிங்க சக்ரவர்த்தி என்றும், சிங்கையாரியன் என்றும் அழைக்கப்படுகின்ற இந்த பெரு வீரனின் அரச சபை மந்திரிகளாலும், போர் வீரர்களாலும் நிறைந்து வழிகின்றது. இவனது அழகுமிகு அரண்மனை அமைந்திருப்பது யாழ்ப்பாண குடாநாட்டில் அல்ல. வன்னி பெரு நிலப்பரப்பின் பூநகரிப் பிரதேசத்தில் சிங்கை நகர் என புகழ் பரப்பியிருந்த யாழ்ப்பாண அரசின் தலைநகரில் தான் அந்த அரண்மனை விசாலித்து பரந்திருந்தது.

யாழ்ப்பாண அரசின் முதல் மன்னனான உக்கிரசிங்கன் கி.பி 785ம் ஆண்டில் கதிரமலை என்றழைக்கப்பட்ட கந்தரோடையில் அமைந்திருந்த தனது தலைநகரை பூநகரிக்கு இடம் மாற்றியிருந்தான். அன்றிலிருந்து பெருவளர்ச்சி அடைந்திருந்த பூநகரித் தலைநகரம் மாட மாளிகைகளும், கோட்டை கொத்தளங்களுமாய் நாகரீக உச்சியில் பெரும் பலத்துடன் இருந்தது. ஆயினும் அண்மைக்காலமாக தென்னிலங்கை சிங்களவர்களின் படையெடுப்புகள் அதிகரித்து வருகின்றன.

மன்னன் விசயகாலிங்கன் அமைச்சரை அழைக்கிறான்.

"மந்திரியாரே, தெற்கே வலிமை பெற்றுவரும் சிங்கள மன்னர்களால் எனது இராச்சியத்திற்கு சீக்கிரமே ஆபத்து வரும் என உணர்கிறேன்." மன்னனின் குரலில் மகிழ்ச்சியில்லை.

"முற்றிலும் உண்மை தான் மன்னா!" மூத்த மந்திரி புவனேகபாகு விடையிறுக்கிறான். அனுபவம் முதிர்ந்த அவன் முகத்திலும் கவலை ரேகைகள்.

"தொடர்ச்சியான போர்களால் விவசாயம் செழிப்புறவில்லை. குளங்கள் பழுதடைகின்றன. குடிமக்களும் அத்துனை சேமமாகவில்லை." மன்னன் தொடர்கிறான்.

"அமைச்சரே, எனது தலைநகரை யாழ்ப்பாண குடாநாட்டிற்கு இடம்மாற்றுவதற்கு தீர்மானித்திருக்கிறேன். சிங்களப் படைகள் நீரேரியை கடந்து குடாநாட்டுக்கு வருவது அவ்வளவு எளிதல்ல. பூநகரி ஒரு காவற்கோட்டையாக இருந்து வரட்டும்." சக்ரவர்த்தி தனது திட்டத்தை விபரிக்கிறான்.

"சரியான முடிவு தான்". மிக நீண்டகாலத்திற்கு தலைநகராய் இருந்து வருகின்ற சிங்கை நகரை விட்டு வெளியேறுவது அத்துணை சுலபமல்ல என்பதை புரிந்து கொண்ட போதிலும், வேறு வழி தெரியாத மந்திரியும் ஆமோதித்துப் போகின்றான்.

"நீங்கள் இப்போதே குடாநாட்டிற்கு சென்று தலைநகருக்கு தகுதியான இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். எவ்வளவு சீக்கிரமோ அவ்வளவு விரைவாக நாங்கள் இடம் மாறுவோம்". மன்னனின் உத்தரவு திடமாயிருக்கிறது.

மந்திரி புவனேகபாகு நல்லூரை மையமாக வைத்து யாழ்ப்பாண நகரி எனும் புதிய தலைநகரை மிக அழகாய் கட்டி எழுப்புகிறான். உப்பரிகை கொண்ட மாடங்களும், குடிமனைகளும், அகன்ற சாலைகளும், வலிய கோட்டைகளுமாய் ஒரு புதிய நகரம் உயிர் பெற்று எழுகின்றது. மிக விரைவாக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தலைநகரில் ஒரு கட்டடம் மந்திரி புவனேகபாகுவினால் விசேடமாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்படுகின்றது. அவன் மனதுக்கு மிகவும் பிடித்திருந்ததும், பார்த்து, பார்த்து இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கப்படுவதுமான அந்த மண்டபம் அரண்மனையல்ல, அரசனின் அந்தப்புர மாளிகையும் அல்ல. பிற்காலத்தில் என்றுமே அழியா பெரும்புகழ் பெறப்போகின்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயம் தான் அது. இன்று ஆலயம் அமைந்திருக்கும் 'குருக்கள் வளவு' என்று அழைக்கப்படுகின்ற அதே இடத்தில் தான் நல்லூர் முருகனின் முதலாவது ஆலயம் முத்தாய்ப்பாய் எழுந்தது.

மன்னன் சிங்கையாரியன் புதிய தலைநகரில் புன்சிரிப்புடன் சிம்மாசனம் ஏறுகின்றான். வீர சைவனான மன்னன் நகரை சுற்றி பல பெரிய ஆலயங்களை எழுப்புகிறான். கயிலாதநாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், சட்ட நாதர் கோயில், சாலை விநாயகர் கோயில் என ஆலயங்கள் பலவும் புதிய தலைநகரைச் சுற்றிலும் கம்பீரமாக எழுந்து நகரிற்கு அணிகலன் சேர்கின்றன.

ஆண்டுகள் உருள்கின்றன. ஆரியச் சக்ரவர்த்திகளின் ஆட்சிகள் யாழ்ப்பாண அரசை வலிமையாக்குகின்றன. மன்னார் முத்து குளிப்பு அரசிற்கு அள்ள, அள்ள குறையாத செல்வத்தை வாரி வழங்குகின்றது. செல்வம் மிகுந்த யாழ்ப்பாண அரசு அசுர வேகத்தில் முன்னேறத் தொடங்குகிறது. பாரிய படையெடுப்புகள் தென்னிலங்கை நோக்கி நடைபெறுகின்றன. சிங்கள இராச்சியங்கள் யாழ்ப்பாண அரசிற்கு திறை கட்டி அடங்குகின்றன.

இப்போது காலம் 1450ம் ஆண்டில் நின்று கொண்டிருக்கிறது. யாழ்ப்பாண அரசின் சக்ரவர்த்தியாக கனக சூரிய சிங்கையாரியன் வீற்றிருக்கிறான். றைகம, கம்பளை, கோட்டை இராச்சியங்களை விட இவனது படைபலமும், பொருட்பலமும் பலமடங்கு அதிகம். யாழ் அரசு தனது பொற்காலத்தில் வீரநடை போட்டுக் கொண்டிருந்த காலம் அது.

இந்த நேரத்தில் தான் கோட்டை இராச்சியத்திலே அதிசயமான, அற்புதமான வீரன் ஒருவன் தோன்றுகிறான். பிற்காலத்தில் ஆறாம் பராக்கிரமபாகு என பெரும் புகழ் பெறப் போகின்ற அவன் அடக்குமுறையை முற்றாக வெறுப்பவன். வடக்கே வெகு தொலைவில் இருந்து கொண்டு தென்னிலங்கையின் ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றுக் கொண்டிருக்கும் ஆரியச்சக்ரவர்த்தியின் ஆதிக்கத்தை அவனால் பொறுக்க முடியவில்லை.

ஒப்புவமையற்ற ஆற்றல் கொண்ட பராக்கிரமபாகு சிங்கள தேசத்தை ஒன்றாக்குகிறான். வன்னிச் சிற்றரசுகளும் அவனுக்கு அடிபணிகின்றன. எஞ்சியிருக்கிறது யாழ்ப்பாண பெரும் இராச்சியம். அதனை வெற்றி கொள்வது இலகுவான காரியமல்ல. இலட்சக்கணக்கான படைவீரர்கள் தேவைப்படுவார்கள். அவர்களை வழிநடத்த பெரும்பலம் படைத்த, அச்சம் சிறிதும் இல்லாத அடங்கேறு போன்ற வீரன் ஒருவன் வேண்டும். பராக்கிரமபாகுவின் நெஞ்சிலே இருந்த ஒருவன் நினைவுக்கு வருகிறான். பராக்கிரமபாகு அந்த வீரனை அரண்மனைக்கு வரவழைக்கின்றான்.

தன் எதிரே நின்று கொண்டிருந்த வீரனை ஏறெடுத்துப் பார்க்கிறான் பராக்கிரமபாகு. இராட்சத ஆகிருதி படைத்தவனும், வீரத்தில் ஈடு இணையற்றவன் என கோட்டை இராச்சியத்தில் மட்டுமன்றி எதிரிகளின் கூடாரங்களில் கூட புகழ் பரவியிருந்தவனும், செண்பகப்பெருமாள் எனும் இயற்பெயர் கொண்டவனும், சப்புமல் குமரயா என்று அழைக்கப்படுபவனுமான தன்னுடைய வளர்ப்பு



தொடர்தல் 104ம் பக்கம்

மகனை கண்குளிர நிமிர்ந்து பார்த்த பராக்கிரபாகு, மதம் கொண்ட யானை என திமிறுகின்ற யாழ்ப்பாண இராச்சியத்தை அடக்க பொருத்தமான அங்குசம் இவனே தான் என சந்தேகமின்றி தெரிந்து கொள்கிறான். அவன் நினைவுகள் பழைய காலத்திற்கு தாவுகின்றன.

பராக்கிரமபாகு ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் யானை பழக்குபவன் ஒருவனின் வீரதீரத்தை பற்றிக் கேள்விப்படுகிறான். மலையாள நாட்டிலிருந்து வேலை தேடி கோட்டை இராச்சியத்திற்கு வந்திருந்த அந்த தமிழ் வீரனின் அற்புத போர் ஆற்றலால் கவரப்பட்ட பராக்கிரமபாகு தன்குல பெண்ணொருத்தியையே அவனுக்கு மணமுடித்து வைக்கின்றான். அந்த தமிழ் வீரனிற்கு பிறந்த புதல்வர்களில் ஒருவனே செண்பகப் பெருமாள். அவனை பராக்கிரமபாகு தத்தெடுத்துக் கொண்டான். சப்புமல் குமரயா என செல்லப் பெயரிட்டு பெருவீரனாக அவனை உருவாக்குகிறான்.

தன் வளர்ப்புத் தந்தையின் கண்கள் சொல்லும் கதையின் சவாலை சப்புமல் குமரயா ஏற்றுக் கொள்கிறான். சுத்த வீரன் ஒருவன் போரிட விரும்பும் கடினமான போர்க்களமாய் யாழ் இராச்சியத்தின் மீதான யுத்தம் இருக்கப் போவது அவனுக்கு தெளிவாக தெரிகிறது.

சப்புமல் குமரயாவின் படை புத்தளம் வழியாக பழைய தலைநகரான சிங்கை நகரை அடைகிறது. சிங்கை நகரம் முற்றிலும் தரைமட்டமாக்கப்படுகின்றது. சிங்களப்படை தொடர்ந்து முன்னேறி சாவகக்காடு என்று அழைக்கப்பட்ட சாவகச்சேரியில் தமிழ்ச் சேனையுடன் பெரும்போர் புரிகிறது. சப்புமல் குமரயாவின் ஆக்ரோசத்தை எந்த ஒரு படையாலும் தடுத்து நிறுத்த முடியாது போயிற்று. முன்னேறி, யாழ் இராச்சியத்தின் தலைநகரை வந்தடைந்த சிங்களப்படை நகரை முற்றாக அழித்து முடித்தது. இரத்தம் ஆறாய் ஓடிற்று. அத்தனை கட்டடங்களும் மண்ணோடு மண்ணாக்கப்பட்டன. 200 வருடங்களாக புகழ் பெற்றிருந்த நல்லூர் முருகன் ஆலயம் முற்றாக தகர்த்து எறியப்பட்டது. ஆரியச் சக்ரவர்த்தி தனது குடும்பத்துடன் இந்தியாவிற்கு தப்பியோட வேண்டியதாயிற்று.

யாழ் இராச்சியம் மண்டியிட்ட செய்தி தென்னிலங்கையில் பெரும் வெற்றிக் களிப்பை உருவாக்கியது. சப்புமல் குமரயா கடவுள் ஸ்தானத்தில் போற்றப்படுகிறான். 'கோகில சந்தேஷிய' எனும் குயில்விடு தூது நூலில் 'ஆரிய வேட்டையாடும் பெருமாள்' என அவன் புகழப்படுகிறான்.

யாழ் இராச்சியத்தை வெற்றி கொண்ட சப்புமல் குமரயா, 'சிறிசங்கபோதி புவனேகபாகு' எனும் நாமத்துடன் யாழ் அரச ஆட்சியை ஏற்றுக்கொள்கிறான். போரினால் சிதைந்து போன தலைநகரை மிகுந்த வனப்புடன் மீண்டும் உருவாக்கினான். அழிந்து போன நல்லூர் முருகன் கோவிலை மீண்டும் புதுப் பொலிவுடன் புதிய இடத்தில் நிர்மாணித்தான். தற்போதைய முத்திரைச் சந்தியில் இந்த ஆலயம் மிகப் பிரமாண்டமாக எழுந்தது. இந்த பாரிய ஆலயத்தை அழகுற அமைத்தமையால் இவனது பெயர் இன்றும் கோயில் கட்டியத்தில் நினைவு கூறப்படுகின்றது. பதினேழு வருடங்கள் ஆட்சி புரிந்த இவன் மீண்டும் கோட்டை இராச்சியத்திற்கு திரும்பிய போது விஜயபாகு என்பவனை மன்னனாக்கி விட்டுச் சென்றான். இந்தச் சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டு இந்தியாவில் இருந்த கனக சூரிய சிங்கையாரியன் படையெடுத்து வந்து, தான் இழந்து போன யாழ்ப்பாண இராச்சியத்தினை மீண்டும் கைப்பற்றிக் கொண்டான். மீண்டும் ஆரியச் சக்ரவர்த்திகளின் ஆட்சி யாழ்ப்பாண அரசில் தொடர்ந்து போனது.

இவையெல்லாம் கடந்து போன காலங்கள். இன்றோ பறங்கியர் கால்களில் யாழ்ப்பாண அரசு மண்டியிட்டிருக்கிறது. இது 1621ம் ஆண்டு மாசி மாதம் 02ம் திகதி.

நீண்ட நெடு வரலாறு கொண்ட நல்லூர் முருகன் கோயிலின் முற்றத்திலே பறங்கியர் தளபதி ஒலிவேறா குதிரையின் மீது கர்வத்துடன் அமர்ந்திருக்கிறான். ஆரியச் சக்ரவர்த்திகள் யாழ்ப்பாண அரசை ஆண்ட பொற் காலங்கள் எல்லாம் பழங்கதையாகி போய் விட்டன. யாழ்ப்பாண அரசோ அடிமைச் சங்கிலியை கால்களிலும், கைகளிலும் பூட்டியபடி பெட்டிப்பாம்பாய் அடங்கிக் கிடக்கிறது. தினந்தோறும் ஆறுகாலப்பூசைகள் அமர்க்களமாய் நடந்து போன நாட்கள் இப்போது இல்லை. பக்திப் பரவசத்துடன் கோயில் சுற்றாடலில் வழமையாக திரளும் மக்கள் மனங்களில் இன்று மரணத்தின் சோகம் பரவியிருக்கிறது. எங்கும் ஒரே நிசப்தம்.

"இடியுங்கள் கோயிலை!" தன் மதம் தவிர பிற மதங்கள் அத்தனையும் பிசாசு மதங்கள் என பிடிவாதம் கொண்ட அந்நிய தளபதியின் ஆணையில் ஆணவம், அதிகாரம் எல்லை மீறித் தொனிக்கிறது.

உயிருக்குயிராய் வழிபட்டுப் போன தங்கள் வணக்கத்தலம் இடிபட்டுக் கொண்டிருப்பதை அத்தனை மக்களும் ஆதரவின்றி பார்த்துக் கொண்டிருந்தனர். தங்கள் கண்முன்னாலே கோயிலின் அத்தனை சொத்துக்களும் பறங்கியரால் சூறையாடப்படுவதை கையாலாகத்தனத்துடன் பேதைகளாய் பார்த்தபடி அவர்கள் அங்கே நின்று கொண்டிருந்தனர். ஒரு மதத்தின் பேரால், இன்னோர் மதஆலயம் இடிக்கப்படுவதை, ஒரு சமயத்தின் நம்பிக் கையால் இன்னோர் சமய நம்பிக்கையின் குரல்வளை நெரிக்கப்படுவதை துப்பாக்கி முனைகள் தீர்மானிக்கும் போது அப்பாவியான அந்த மக்கள் மௌன சாட்சிகளாய் பேச்சிழந்து இருப்பதைவிட வேறு என்ன செய்து விடமுடியும்?

சில நாட்களுக்குள் நல்லூர் கோயில் ஒரு பெரும் கற்குவியலாய் மாறிப் போய்விட்டது. இப்போது இராஜகோபுரம் இல்லை. யாகசாலைகள் இல்லை. சுற்றுப்பிரகாரம், மடம், அன்னசாலைகள் அனைத்தும் இல்லை. தேரோடும் வீதி பாழ்பட்டுப் போனது. குரங்கு கிழித்து எறிந்த ஒரு பூமாலையாய் போனது ஈழத்தின் புகழ்பூத்த ஆலயம் ஒன்று. நல்லூர் முருகன் ஆலயம் அமைந்திருந்த இடத்தில் எழுகின்றது கத்தோலிக்க தேவாலயம் ஒன்று.

சைவ, வைணவ மதங்களிற்கு எதிரான பறங்கியரின் போக்கு தீவிரமடைகிறது. ஆலயங்களின் செல்வங்கள் சூறையாடப்பட்டு இடித் தழிக்கப்படுகின்றன. இரண்டாயிரம் சிற்பிகள் தொடர்ச்சியாக இருபது வருடங்கள் வேலை செய்தாலும் முடிக்க முடியாத கோயில் என பிரசித்தி பெற்றிருந்த சீதாவாக்கை வைரவ ஆண்டி கோயில், செல்வம் மிகுந்த முன்னேஸ்வரர் ஆலயம், பொன்தகட்டினால் வேயப் பட்ட விதானங்களை தாங்கியதும், ஆயிரம் விக்கிரகங்களை கொண்டதுமான தெய்வந் துறை விஷ்ணு ஆலயம், திருகோணமலை கோணேசர் கோயில் எல்லாம் முன்னரே பறங்கியரால் சூறையாடப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டிருந்தன. இப்போது யாழ்ப்பாண இராச்சியத்தில் இருந்த அத்தனை கலைநயம் கொண்ட ஆலயங்களும் அழிக்கப்பட்டாயிற்று. தப்பிப் பிழைத்த கோயில் விக்கிரகங்கள் எல்லாம் கிணறுகளுக்குள்ளும், மண்ணுக்கு அடியிலும் மறைக்கப்படுகின்றன. ஈழவரின் கட்டடக்கலையின் உச்சத்தை பறைசாற்றி நின்ற பெரும் ஆலயங்கள் எல்லாம் கண் முன்னே கற்குவியல்களாயின.

யாழ் இராச்சியத்திலே கத்தோலிக்க மதம் முன்னிறுத்தப்படுகிறது. கத்தோலிக்க மதத்தை சார்ந்தவர்களே உயர்பதவிகளில் அமர்த்தப் படுகின்றனர். சைவ சமயத்தை பின்பற்றுவது முற்றாக தடைசெய்யப்படுகின்றது. மக்கள் இரகசியமாக பூசை, விரதங்களை கைக்கொள்வதை அறிந்த பறங்கியர், ஒற்றர்கள் மூலம் கண்காணித்து கடும் தண்டனை வழங்குகின்றனர். பொறுக்க முடியாத அநேகம் பேர் இந்தியாவிற்கு தப்பியோடுகின்றனர். சைவ சமயம் தலைமறைவு வாழ்க்கைக்கு தள்ளப் படுகிறது.

தமிழ் மக்களிடையே தங்களுக்கு வரவேற்பு அதிகமில்லை என்பதை ஒலிவேறா நன்கறிவான். நல்லூரிலே தான் தொடர்ந்து தங்கியிருப்பது பாதுகாப்பில்லை என்பதை அவன் உணர்ந்தேயிருந்தான். பறங்கியரின் பிரசன்னத்தை யாழ்ப்பாண இராச்சியத்திலே நிலை நிறுத்துவதற்கான பெரும் திட்டம் ஒன்று அவன் மனதிலே விரிகின்றது.

கடலை ஒரு புறம் இயற்கை அரணாக கொண்ட பண்ணைக் கரையிலே வலிமையான கோட்டை ஒன்று வடிவமைக்கப்படுகின்றது. பிற் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரும் துன்பங்களை விளைவிக்கப் போகின்ற அந்த கோட்டையின் அடிக்கல்லை நாட்டிவிட்டு நிமிர்கின்ற ஒலிவேறாவின் கண்களில் "இந்த நாடு இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு எங்கள் கைகளுக்குள்" என்ற இறுமாப்பு தெரிகிறது. நல்லூரிலே மலையாய் குவிந்திருந்த நல்லூர் முருக ஆலயத்தின் கற்கள் வண்டிகளில் பண்ணைக்கு வந்திறங்குகின்றன. ஆலயத்தின் புனிதக்கற்கள் அடக்குமுறை கோட்டையின் அத்திவாரக் கற்களாய் உருமாறுகின்றன.

வண்டிகளில் கற்களைக் கொண்டு வருவது நேரவிரயம் என எண்ணுகிறான் ஒலிவேறா. மக்களுக்கு பறையறிவிக்கப்படுகின்றது. நல்லூரிலிருந்து ஒரு மனிதச்சங்கிலி பண்ணைக் கரை வரை நீள்கிறது. கற்கள் வேகமாக கரங்கள் மாறுகின்றன. தாங்கள் நம்பிக்கையுடன் வழிபட்ட ஆலயத்தின் சிதைவுகளை தாங்களே பண்ணைக்கு கொண்டு சேர்ப்பதை எண்ணி நெஞ்சுருகிய மக்கள் கண்ணீரைச் சொரிந்தபடியே கடும் வேலை செய்கின்றனர். இடிக்கப்பட்ட மற்ற ஆலயங்களிலும் இருந்து கற்கள் இவ்விதமே பண்ணைக் கரைக்கு வந்து சேர்கின்றன. எதிரிகளால் வெற்றி கொள்ள முடியாத வலிமையுடன சதுர வடிவிலான கோட்டை ஒன்று எழுந்து நிற்கின்றது.

ஒலிவேறாவின் அடுத்த திட்டம் அரங்கேறத் தொடங்குகிறது. பறங்கித்தெரு என்றும், சீதாரித் தெரு என்றும் அழைக்கப்படுகின்ற பறங்கியரினதும், தமிழ் கத்தோலிக்கரினதும் குடியிருப்பு கோட்டையின் கிழக்கே நிர்மாணிக்கப்படுகின்றது. முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றை தீக்கிரையாக்கி விட்டு அதே இடத்தில் அற்புத மாதா கோயிலை கண்ணாடிப் பாதிரியார் என்பவர் கட்டிமுடிக்கின்றார். சுதேசிகளின் சோகங்களின் மேல் எழுப்பப் பட்ட புதிய நகரம் ஒன்று புத்தெழிலுடன் விதேசிகளை வரவேற்க தயாராகுகின்றது.

1625ம் ஆண்டு இந்த குடியிருப்பு மக்களால் நிறைகின்றது. இருபத்தெட்டு பீரங்கிகளுடனும், இருபதடி அகழியுடனும், முப்பது அடி உயர கருங்கற் சுவர்களுடனும் வலிமை கொண்டிருந்த யாழ்ப்பாணக் கோட்டையில் ஒலிவேறா குடிபுகுகின்றான். நிறைந்த கனவுகளுடனும், இளக்கம் இல்லாத இறுமாப்புடனும், பறங்கியரின் ஆட்சியை நிரந்தரமாக நிலைநிறுத்தி விட்டதான வெற்றி மமதையுடனும் கோட்டையினுள்ளே கால் வைக்கின்ற ஒலிவேறாவுக்கு ஆயுள் இன்னும் அதிகமில்லை. இரண்டே வருடங்களில் தனது 53ம்

தொடர்தல் 110ம் பக்கம்

> **“ 'நீங்கள் இந்த உதவியை செய்தீர்களானால், நீங்கள் விரும்புகின்ற, வேண்டுகின்ற எதனையும் நான் தருவேன்.' தேன் குழைத்த ஆசை வார்த்தைகள். அடிவருடிகளுக்கு ஆக்கிரமிப்பாளர்கள் அன்றும், இன்றும் சொல்கின்ற அதே வார்த்தைகள். ”**



# "Be ready for Job"...

## Diploma Courses
- Diploma in Office Administration
- Diploma in Accounting and payroll

## Engineering Software
- Auto CAD
- SolidWorks
- Revit 2009
- CATIA
- MasterCAM X4
- Pro/Engineer
- MicroStation

## Multimedia & Graphic Design
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress

## Pre-Exam Courses (For Licence)
- Industrial & Construction Electrician (309A, 442A)

## IT Application Development
- Developing Applications using **JAVA**
- Detabase and Design Development using **ORACLE**
- Software Engineering Principles
- Web Programming (HTML, XHTML, XML)

## Special Certificate Programs
- CNC Operation, Setup & Programing
- School students programs
  - Web Design & Flash
  - 3D Animation
  - Video Editng
  - Auto CAD

## Accounting Software
- MS Office
- Quick Book / ACCPAC / Simply Accounting



2006க்குப்பின் EI அல்லது Maternity எடுத்தவர்கள் இதை இலவசமாகக் கற்பதற்கு தகுதி உடையவராகலாம்

வளமானதோர் எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள தொழிற்கல்வி ஒன்றைக் கற்றுக்கொள்ளுங்கள்

**beta College**
of Business & Technology

1200 Markham Road, # 525
(Markham & Ellesmere)
Scarborough, ON
M1H 3C3

Tel: **416.449-BETA**(2382)

**www.betacollege.ca**

info@betacollege.ca

# மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்

## இலக்கிய உறவுகள் - 8

**- வி. கந்தவனம் -**

மலைநாட்டுத் தமிழ் மக்கள் இயல்பாகவே மொழிப்பற்று மிக்கவர்கள். 1956ஆம் ஆண்டின் 'சிங்களம் மட்டும்' சட்டம் ஈழத்துத் தமிழர் ஒவ்வொருவரையும் பார்த்து "தமிழா, தமிழன் என்று சொல், தலை நிமிர்ந்து நில்!" என்று சொன்னது. இதனைத் தொடர்ந்து தூண்டி விடப்பட்ட இனக் கலவரங்கள் தமிழரின் இரத்தத்தைச் சுத்திகரித்தன. தமிழர் உண்மையாகவே விழித்துக் கொண்டனர்.

இந்த விழிப்புணர்வின் காலைப் பொழுது நான் மலைநாட்டை வலம் வந்த பொழுது. 1958ஆம் ஆண்டுக் கலவரத்தில் மாத்தளைத் தமிழர் பாதிக்கப்படவில்லை. மாறாக, சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டனர். சிங்களவரின் கடைப் பெயர்ப் பலகைகளில் இருந்த சிங்களத்தைத் தமிழர் 'தார்' கொண்டு அழித்தனர். எனினும் சிங்கள இனத் துவேசி K.M.P. இராஜரத்தினாவின் ஆதிக்கத்திலிருந்த பதுளையில் தமிழர் தாக்கப்பட்டனர். மலைநாட்டின் வேறு சில பகுதிகளிலும் கலவரங்கள் மூண்டன.

இவற்றைத் தொடர்ந்து தமிழ் உணர்ச்சி பெருகத் தொடங்கியது. இப்பெருக்கம் தமிழ் வளர்க்கும் மன்றங்களை ஆங்காங்கு தோற்றுவித்தன. இலக்கியக் கூட்டங்களும் தமிழ் விழாக்களும் எங்கணும் நடைபெறலாயின. பாடசாலைகள் பாரதி விழா, வள்ளுவர் விழா, கலைமகள் விழா என்ற பெயர்களில் தமிழ் உணர்வை மேலும் வளர்த்தன.

இத்தகைய விழாக்களில் நான் அடிக்கடி சந்தித்த அறிஞர்களும் நண்பர்களும் பலர். விரிவுரையாளர் சு. வித்தியானந்தன், ஆத்மசோதி நா. முத்தையா, திருவாளர்கள் சி.வி. வேலுப்பிள்ளை, இர. சிவலிங்கம், பி.எஸ். திருச்செந்தூரன், கார்மேகம், தெளிவத்தை யோசெப், ஜெயம், ஈழக்குமார், மலைத்தம்பி, வழுத்தூர் ஒளியேந்தி ஆகியோரும் இன்னும் பலருமென இவ்வுறவுப் பட்டியல் மிக நீளவல்லது.

இர. சிவலிங்கமும் P.S. திருச்சொந்தூரனும் அப்பொழுது அட்டன் உயர்நிலைக் கல்லூரியில் ஆசிரியர்களாக இருந்தார்கள். இவர்கள் இருவரையும் நான் முதன்முதலில் சந்தித்தது சென்னைக் கிறித்தவக் கல்லூரியில். நான் இக்கல்லூரியிற் சேர்ந்த காலத்தில் இர. சிவலிங்கம் பி.ஏ. (சிறப்பு) இறுதி நிலையிற் படித்துக் கொண்டிருந்தவர்.

திருச்செந்தூரன் எனக்கு ஒரு வருடம் பின் வந்து சேர்ந்தவர். நான் தங்கியிருந்த சேலையூர் விடுதியிலேயே இவருக்கும் இடம் கிடைத்ததால் இருவருக்கும் இடையில் நெருக்கமான உறவு வளர நேர்ந்தது. அது மட்டுமன்றி என்னைத் தொடர்ந்து புவியியல் படிப்பதற்குக் கோவை கலைக் கல்லூரிக்கும் இவர் வந்து சேர்ந்ததால் எமது உறவு நீடித்து நிலைத்துக் கொண்டது.

திருச்செந்தூரனும் சிவலிங்கமும் எடுப்பான பேச்சாளர்கள், பேச்சில் மட்டுமல்லாது எழுத்திலும் வல்லவர்கள். முக்கியமாக, திருச்செந்துரன் அருமையான ஒரு சிறு கதை, கட்டுரை எழுத்தாளர். கல்கி பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டி ஒன்றிற் பரிசு பெற்றவர்.

இருவருமே நல்ல சமூகத் தொண்டர்கள். தோட்டத் தொழிலாளர் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி வந்தவர்கள். தோட்டத்து மக்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் அயராது உழைத்தவர்கள். மலைநாட்டின் இளந்தமிழ்ச் சந்ததியின் எழுச்சிமிகு தலைவர்களாக அப்பொழுது திகழ்ந்தவர்கள்.

இவர்களது கல்லூரியில் நடைபெறும் இலக்கிய விழாக்களுக்கு என்னைத் தவறாது அழைப்பார்கள். நானும் அவர்களைப் புனித தோமையார் கல்லூரிக்கு அழைத்திருக்கின்றேன். ஒரு சமயம் இவர்கள் நடத்திய வள்ளுவர் விழாவில் கலந்துகொண்டு 'மலைநாடும் மறைநூலும்' என்ற பொருளில் உரை நிகழ்த்தினேன். நண்பர் சிவலிங்கத்துக்குப் பேச்சு நன்கு பிடித்துக்கொண்டது. அதனை எழுதித் தரும்படி வற்புறுத்தினார். கண்டியிலிருந்து வெளிவந்த 'மலை முரசு' என்னும் மாசிகையில் எழுதப்பட்ட பேச்சைத் தொடர்ந்து வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்திருந்தார். ஆயின், முழுக் கட்டுரையும் வெளிவரமுன் பத்திரிகை நின்று விட்டது. நான் எழுதிக் கொடுத்த கட்டுரையும் இடம் மாறிக் கைக்குக் கிடைக்காது போய்விட்டது.

திரு. சிவலிங்கம் எதையும் புதிய கண்ணோட்டத்துடன் பார்க்கும் இயல்பு வாய்ந்தவர். தனது கல்லூரியில் நடந்த தமிழ் விழா ஒன்றில் கவியரங்கத்தைப் புதுவிதமாக நடத்தத் திட்டமிட்டார். ஒரு மணித்தியாலத்துக்கு முன்னர்தான் தலைப்பு அறிவிக்கப்படும் எனச் சவால் விட்டார். ஏற்றுக்கொண்டு கவிஞர்கள் சொக்கநாதன், ஈழவாணன் ஆகியோர் சகிதம் போயிருந்தேன்.

அழகிய மாலை நேரம். அட்டன் உயர்நிலைக் கல்லூரி மண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டம். விழா கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. அறிஞரின் பேச்சுக்கள், மாணவர் நிகழ்ச்சிகள், கருத்தரங்கம், கவியரங்கம், நாடகம் என நிகழ்ச்சி நிரல் நிரம்பி வளிந்தது. கவியரங்கம் ஒன்பது மணிக்கு என்றிருந்தது. சற்றுக் காற்று வாங்க மண்டபத்தை விட்டு வெளியே வந்தோம்.

எங்களுடைய நிகழ்ச்சிதான் இன்றைக்குச் சோடைபோகப் போகின்றது என்று கவலைப்பட்டார் கவிஞர் சொக்கநாதன். அவருடைய கவலைக்குக் காரணம் இருந்தது. ஒரு மணித்தியாலத்துக்குள் நல்ல கவிதை பாட வேண்டுமே என்ற அந்தரம் எல்லோரையும் ஆட்கொண்டிருந்தது. கவிஞர்களை இப்படிக் கட்டி அடிக்கலாமா என்ற ஆராய்ச்சியில் இறங்கினோம்.

இம் என்றால் இருநூறும் அம் என்றால் அறுநூறும் பாட நாம் என்ன கம்பர்களா அல்லது காளமேகங்களா? ஒரு மணித்தியாலத்துள் செய்யுட்கள் ஆக்கலாம், ஆனால் அவை கவித்துவம் மிக்க நல்ல பாடல்களாக அமையும் என்று சொல்ல முடியாது. கவித்துவத்துக்குக் கற்பனை வேண்டும். கற்பனைக்கு அமைதியான மனநிலை வேண்டும். அமைதியான மனநிலை இருந்தாலும் கற்பனை ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் வந்து குதித்துவிடும் என்று சொல்வதற்கில்லை. இப்படி எல்லாம் பேசிக்கொண்டே நாம் தங்கி இருந்த அறைக்குச் சென்றோம். பிரயாணக் களைப்பு. எனக்குச் சற்று ஓய்வு வேண்டும்போல இருந்தது.

தலைப்பு என்னவாக இருக்கும் என்றவாறு மீண்டும் பேச்சை ஆரம்பித்தார் கவிஞர் ஈழவாணன். அவருக்கும் களைப்புக்கும் தொடர்பு கிடையாது. களைப்பு அவரைக் கண்டால் ஓடும். மேலும், இலக்கிய நண்பர் குழாம் என்றால் அவர் எல்லாவற்றையும் மறந்து விடுவார். 'வேறென்ன, ஏதாவது மலைநாடு சம்பத்தப் பட்டதாகத்தான் இருக்கும். பேசாமல் படுத்துத் தூங்கும்' என்றவாறே கட்டிலில் சாய்ந்து கொண்டேன்.

'என்ன சேர், நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது, தூங்கச் சொல்லுறியள்' என்றார். 'என்னைச் சேறு என்று அழைக்க வேண்டாம் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். நீர் பெரிய தாமரை என்ற நினைப்போ' என்று ஒரு போடு போட்டேன். இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். அவர்களது இரசனைச் சிரிப்பொலி எனக்கு இதமான தாலாட்டாகவே கண்ணயர்ந்து விட்டேன்.

எட்டு மணியளவில் தட்டி எழுப்பினார் கவிஞர் ஈழவாணன். தூக்கத்தைக் கலைத்து விட்டாரே என்ற பெருமூச்சுடன் கண்களை விழித்தேன்.

'ஏனிந்தப் பெருமூச்சு? தலைப்புத் தந்துவிட்டார்கள்.'

'என்ன தலைப்பு?'

'அதுதான் சேர், ஏனிந்தப் பெருமூச்சு?'

'பரவாயில்லையே!'

எழுந்து முகங் கழுவி விட்டுக் கவிதை பாடத் தொடங்கினேன். ஏதோ பரீட்சை எழுதுவது போல மூவரும் பேச்சு மூச்சின்றி வந்ததை வரவில் வைத்தோம். கவியரங்க நிகழ்ச்சி தொடங்குமுன் நண்பர் சிவலிங்கம் 'ஒரு மணி நேரத்துக்கு முன்னதாகவே ஏனிந்தப் பெருமூச்சு என்னுந் தலைப்புக் கவிஞர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதற்குள் கவிதைகளைப் பாடி முடித்து அவற்றை உங்கள் முன் சமர்ப்பிக்க இப்பொழுது தயாராக இருக்கின்றார்கள்' என்று சொன்னதும் கூட்டத்தில் ஒரே நிசப்தம்

கவியரங்கம் எதிர்பாராத வெற்றி அளித்தது எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவையோரின் கைதட்டல்கள், மேடையை அலங்கரித்த அறிஞரின் பாராட்டுக்கள், ஒழுங்கு செய்திருந்த நண்பர்களின் முகமலர்ச்சியும் நன்றியுரைகளும் நிகழ்ச்சியின் வெற்றிக்கான அறிகுறிகளாகத் தெரிந்தன. 'இது உங்களுக்கு மட்டுமல்ல எனக்குமொரு வெற்றிதான். இது நிச்சயம் சிறப்பாக அமையும் என்று எனக்கு எற்கனவே தெரியும். அவ்வளவுக்கு உங்களில் எனக்கு நம்பிக்கை இருந்தது' என்று வெகுவாகப் பாராட்டினார் நண்பர் சிவலிங்கம்.

எனது மலைநாட்டு இலக்கிய நாட்களில் மறக்கமுடியாத மற்றொரு நன்னாள் 14.01.1964. இத்தினத்தில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் முதன் முதலாக ஒன்று சேர்ந்து நாவலப்பிட்டியில் உள்ள கதிரேசன் கல்லூரியில் பொங்கல் விழாவைப் பெரு இலக்கிய விழாவாகக் கொண்டாடியது. கவியரங்கத்துக்குத் தலைமை வகிக்கும்படி அழைப்பு விடுத்திருந்தார் நண்பர் கார்மேகம் அவர்கள்.


திருவாளர் கார்மேகம் பிரபல எழுத்தாளர். மலை நாட்டு எழுத்தாளர் மன்றத்தை அமைக்க அயராது உழைத்த பெருமகன். மலைநாட்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. எழுத்தாளரை ஊக்குவிக்கும் உத்தமர். நல்ல பண்பாளர்.

விழாவுக்கு மலைநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் எழுந்தாளர் பெருமக்கள் வருகை தந்திருந்தார்கள். மலைநாட்டு இலக்கிய வளர்ச்சியில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தை அமைத்தமை எல்லோராலும் வரவேற்கப்பெற்ற ஒரு மைல்கல் முயற்சி. அந்த மகிழ்ச்சியில் விழாவில் மன்றத்தை இவ்விதம் வாழ்த்திப் பாடினேன்:


*நிலைநாட்ட நோக்கங்கள் ஒன்றாய் - செய்ய*
*நிலையான ஆக்கங்கள் தமிழ்வாழ நன்றாய்*
*கலையேட்டில் இடம்பெற்ற வல்லார் - உய்யுங்*
*கருத்தாலே உலகத்தைக் காப்பாற்றும் நல்லார்*
*தலைகாட்டிக் கைகோத்து வந்து – தக்க*
*சமயத்தில் இமயத்து மூச்சோடு தந்த*
*மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் - என்றும்*
*வழிகாட்டி உயர்வுற்று நிலைபெற்று வாழ்க!*

மலைநாட்டு இலக்கிய நண்பர்களின் உறவு உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குவது. குறிப்பாக அவர்கள் காட்டிய அன்பையும் மதிப்பையும் என்னால் மறக்கமுடியாது. நான் உறவு பூண்ட மலைநாட்டின் இதயம் அப்பழுக்கற்ற அசல் தமிழ் இதயம்.

> " மலைநாட்டு இலக்கிய வளர்ச்சியில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தை அமைத்தமை எல்லோராலும் வரவேற்கப்பெற்ற ஒரு மைல்கல் முயற்சி. "



kandavanam.v@thaiveedu.com

கனடிய தமிழ் வழக்கறிஞர்

The Law Office of
**Raphael Maharaja**
**Barrister & Solicitor**

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

# வீடு வாங்க விற்க அழையுங்கள்!

## Pat Pushpakanthan

*Real Estate BROKER*
***7 time centurian award***
***Hall of fame award***

Full time Broker 14 years Experience*

email: rpushpakanthan@trebnet.com

**அனுபவம்! திறமை! நேர்மை!**



**Just Listed**

Corner soak bathtub



**Open House**
**Sat & sun 2 – 4 pm**



**Markham/ Steeles 4 Bm/ 3 wm**
**Possible walk-out**

## 416- 490-7653

**Just Sold 110%**


83 Goodwood




24 Jack Monkman





**Scarborough**




**3 bm/ 2 wsrm**
**Basmnt apt**

**OPEN HOUSE..Sun**




Ellesmere/B'mount

**0% Downpayment Available Only pay 1035/- /mo**

**Call Pat 416-894-1187**

**Store Plus Apt**
**2000 s q store plus apt with main rd exposure live and do your business $ 292000**
**Brimly/ Kingston**



**Cafetaria for sale**
**In office Building take home upto 5000/-**
Rent only 889/- (all included)
North York

**Richmond hill/ 4 bm/ 4 wsrm**



**Restaurant for sale $39 000**
**Davis ville /bayview/mountpleasant**

**Mortgage/ Refinance/Loan ..Interest Rate from 2.1%**

**Buy, Sell Homes...Land..Farms ..Cottages..business**

## 87 Power Of Sale Homes for sale IN GTA

**From $ 98 000.00**


**Richmond Hill**



Brand new home in
Granite counter top
Hardwood floor in main floor and 2nd floor hall way ….. And more
occupancy MID 2011

Luxury 4bm/4 wsrm detached brick home with Library on main floor, walkout bsmnt, Oak stairs…..

Start your own business
Loan available




Markham/Denison
…..retail Location for Sale or Lease close to cotsco canadian tire and Home depot busibess depot

# வீடு, வியாபாரம், காணி

# Mortgage 2.1% ..Refinance also.

**Your SOLD AGENT**

***This certificate entitles you to a complementary market analysis of your home's current value***

*some condition applies ** not intended to solicit to the buyers under contract ** not intended to solicit property currently listed for sale

*Thinking of*

# Buying or Selling

Real Estate




2 Bedrooms, 1 Washroom
Walk-Out To Sunny Balcony




3+1 Bedrooms, 3 Washrooms
Ideal For Investment!!!




2+1 Bedrooms, 2 Washrooms
Walking Distance To Ttc, School




3+1 Bedrooms, 3 Washrooms
Close To All Amenities




3 Bedrooms, 3 Washrooms
Finished Basement & Recreation




3 Bedrooms, 2 Washrooms
Steps To Scarborough Town Centre




3+1 Bedrooms, 2 Washrooms
Easily Converible Separate Entrance




4 Bedrooms, 3 Washrooms
Modern Kitchen With Back Splash




5+3 Bedrooms, 5 Washrooms
Approx 3850 Sqft Home



***Need New Listing at***

***Scarborough, Markham, Mississauga***

"List your Home with a Professional & Save Money"

**Hariharan Nadarajah**
*Sales Representative*
**Direct: 416-856-4276**
**Office: 416-298-3200**
E-Mail: harisells@gmail.com


HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today**
**Realty Ltd., Brokerage**
INDEPENDENTLY OWNED AND OPERATED
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

*Call **Hariharan Nadarajah** for information on homes available in area of your choice*



(மாக்குவெஸ் 1927-ஸ்பானிய மொழியில் மாக்கெஸ். கொலம்பிய நாட்டைச் சேர்ந்தவர். நாவல், சிறுகதை, திரைக்கதை ஆசிரியர், ஊடகவியலாளர். 20ம் நூற்றாண்டின் தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். இலக்கியத்திற்காக 1982இல் நோபல் பரிசு பெற்றவர். ஒரு நூற்றாண்டுத் தனிமை, கொலரா நோய்க் காலத்தில் காதல் என்ற நாவல்களின் ஆசிரியர். மாயா யதார்த்தத்தைப் பிரபல்யப்படுத்தியவர். இச்சின்னஞ் சிறுகதையில் வெளிப்படும் சில வாக்கியங்கள், சில சொற்கள், சில நிகழ்வுகள் அந்நகரத்தில் நடைபெறும் கொடுமைகள், ஊழல்கள், அதற்கான எதிர்வினைகள் ஆகியவற்றைப் பூடகமாகக் காட்டி விடுகின்றன. வாசகரின் கற்பனைக்கு பெரும் இடமளிக்கும் இக்கதை ஆழமும் விரிவும் கொண்டது.)



# ஒரு நாள்

## கப்றியேல் கார்சியா மாக்குவெஸ்

### ஆங்கிலம் வழி தமிழில் என்.கே.மகாலிங்கம்

திங்கட்கிழமை சூடாகவும் மழையற்றதாகவும் விடிந்தது. ஒறிலியோ எஸ்கோவர் ஒரு பல் வைத்தியர். பட்டதாரிச் சான்றிதழ் அற்றவர். காலையிலே எழும்பி விடுவார். ஆறு மணிக்கே தன் அலுவலுகத்தைத் திறந்தார். சில பொய்ப் பற்களை கண்ணாடிப் பெட்டியிலிருந்து எடுத்து மேசையில் வைத்தார். அவை இன்னும் பிளாஸ்ரிக் உருவச்சு வார்ப்பிலேயே இருந்தன. கைநிறைந்த கருவிகளை அளவின் அடிப்படையில் காட்சிக்கு வைப்பது போன்று ஒழுங்காக வைத்தார். கழுத்துக் கொலரில்லாத, வரி போட்ட மேற்சட்டை அணிந்திருந்தார். அது கழுத்தை மூடியிருந்தது. அதிலொரு தங்கக் குமிழ் இருந்தது. காற்சட்டைதூக்கிப் பட்டிகளால் மேலே தூக்கி விடப்பட்டிருந்தது. நிமிர்ந்த, மெலிந்த உருவம். அவரின் பார்வை மிக அரிதாகவே அச்சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானது. காது கேட்காதவர்கள் பார்வை போல.

மேசையில் பொருட்களை ஒழுங்காக வைத்த பின், துளைக்கும் கருவியை அவர் தன் நாற்காலிப் பக்கம் இழுத்துப் போட்டு இருந்து கொண்டு, பொய்ப் பல்லை தேய்த்து மினுக்க ஆரம்பித்தார். அவர் தான் செய்வதைப் பற்றி சிந்திக்காமல் அதைச் செய்வதுபோலத் தோன்றியது. தேவையற்றபோதும் துளைக் கருவியை பாதங்களால் இயக்கிக் கொண்டு, சீராக அதைச் செய்து கொண்டிருந்தார்.

எட்டு மணிக்குப் பிறகு, ஜன்னலூடாக ஆகாயத்தைப் பார்ப்பதற்காக, தான் செய்வதைக் கொஞ்ச நேரம் நிறுத்தினார். வாடிய தோற்றத்துடன் இருந்த பெரும் பருந்துகள் அடுத்த வீட்டு கூரை முகட்டு உத்தரத்தில் வெயில் காய்ந்து கொண்டிருந்ததைக் கண்டார். மதிய உணவுக்கு முன் திரும்பவும் மழை வரும் என்ற எண்ணத்துடன் தன் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். அவர் வேலையில் செலுத்திய கவனத்தை அவருடைய பதினொரு வயது மகனின் கீச்சிட்ட குரல் இடை நிறுத்தியது.

“பப்பா.”

“என்ன?”

“நகர பிதா தன்னுடைய பல்லைப் பிடுங்க முடியுமா என்று கேட்கிறார்.”

“நான் இங்கில்லை என்று அவருக்குச் சொல்லு.”

அவர் அப்போது தங்கப் பல்லொன்றை மினுக்கிக் கொண்டிருந்தார். அதைக் கையளவு தூரம் நீட்டி அரைக் கண்ணை மூடிப் பரிசோதித்தார். அவருடைய மகன், இருக்கும் அறையிலிருந்து திரும்பவும் சத்தமிட்டான்.

“நீங்கள் அங்கிருப்பதை உங்கள் குரலிலிருந்து அவர் கேட்டறிந்து விட்டார்.”

பல் வைத்தியர் தொடர்ந்தும் பல்லைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். அவர் அந்த வேலையை முடித்து மேசையில் வைத்த பின் சொன்னார்,

“இப்போ இந்தளவுக்கு மிக நல்லாகவே இருக்கிறது.”

துளை கருவியைத் திரும்பவும் இயக்கினார். பல் இணைப்புத் துண்டுகள் பலவற்றை, இன்னும் செய்யப்பட வேண்டிய வேலைகள் வைத்திருக்கும் கடதாசிப் பெட்டியிலிருந்து எடுத்து தங்கத்தை மினுக்கத் தொடங்கினார்.

‘பப்பா.’

‘என்ன?’

அவர் தன் முகபாவத்தை இன்னும் மாற்றாமலே கேட்டார்.

அவசரப்படாமல், முழு அமைதியான இயக்கத்துடன், துளை கருவியை பாதத்தால் இயக்குவதை நிறுத்தி, துளை கருவியை நாற்காலிக்கு அப்பால் தள்ளி வைத்துவிட்டு, மேசையிலிருந்த கீழ் இழுப்பறையை முற்றாக இழுத்தார். அதில் ஒரு கைத்துப்பாக்கி இருந்தது. ‘ஓகே’ என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

‘அவரை வரச் சொல்லி, என்னைச் சுடச் சொல்.’ என்றார்.

நாற்காலியை கதவுக்கு எதிர்ப்புறம் தள்ளி விட்டார். அவருடைய கை இழுப்பறையின் மேல் விளிம்பில் இருந்தது. நகர பிதா கதவடியில் தோன்றினார். அவர் தன் முகத்தின் இடது பக்கத்தை மழித்திருந்தார். அடுத்த பக்க முகம் வீங்கியும் வலியுடனும் காணப்பட்டது. ஐந்து நாள் மழிக்காத தாடியுடன் காணப்பட்டார். அவருடைய சோர்வுற்ற கண்களில் நம்பிக்கையிழப்பினால் கழிந்த பல இரவுகள் தென்பட்டதை அவர் கண்டார். தன் விரல் நுனியால் இழுப்பறையை மூடிவிட்டு, மென்மையாகச் சொன்னார்,

‘இருங்கள்.’

‘காலை வணக்கம்,’ என்றார் நகர பிதா.

‘வணக்கம்,’ என்றார் பதிலுக்குப் பல் வைத்தியர்.

கருவிகள் உலையில் கொதித்துக் கொண்டிருக்கும்போது, நகர பிதா தன் தலையை நாற்காலியின் தலைசாய்ப்பில் வைத்தார். அது அவருக்குக் கொஞ்சம் ஆசுவாசத்தை அளித்தது. மூச்சும் குளிர்ச்சியாக இருந்தது. அந்த அலுவலகம் ஏழ்மையானது. நாற்காலி பழையது. மரத்தாலானது. உழக்கும் துளை கருவி. வெண்களி மண்ணால் செய்த போத்தல்கள் வைத்த கண்ணாடி அலுமாரி. நாற்காலிக்கு எதிரே ஒரு ஜன்னல். அதற்கு கழுத்தளவு உயர்ந்த திரைச் சேலை. பல் வைத்தியர் தன் அருகே வருவதை உணர்ந்த நகர பிதா, தன் குதிக் கால்களை இறுக்கி ஊன்றிக் கொண்டு, வாயைத் திறந்தார்.

ஒறிலியோ எஸ்கோவர் நகர பிதாவின் தலையை வெளிச்சம் வரும் பக்கம் திருப்பினார். நோய் வாய்ப்பட்ட பல்லைப் பரிசோதித்த பிறகு, நகர பிதாவின் தாடைகளைத் தன் விரல்களால் கவனமாக அழுத்தி மூடினார், வைத்தியர்.

‘மயக்க மருந்து போடாமல் தான் இதைப் பிடுங்க வேண்டும்,’ என்று சொன்னார் வைத்தியர்.

தொடர்தல் 110ம் பக்கம்

# ஒரு நாள்...

109ம் பக்கத் தொடர்ச்சி...

‘ஏன்?’

‘உள்ளேயொரு சீழ்க்கட்டி இருக்கிறது.’

நகர பிதா வைத்தியரின் கண்களை உற்றுப் பார்த்தார். ‘சரி’ என்று சொல்லிவிட்டு, முறு வலிக்க முயன்றார். வைத்தியர் அதற்குப் பதி லாக முறுவலிக்கவில்லை. வைத்தியர் கிருமி களை அழித்துச் சுத்தம் செய்யப்பட்ட கருவிகள் உள்ள பாத்திரத்தை வேலை செய்யும் மேசைக்குக் கொண்டு வந்து, குளிர்ந்த இடுக்கி முள்ளால் நீரிலிருந்து அவசரப்படாமல் ஆறுதலாக கருவிகளை ஒவ்வொன்றாக எடுத்தார். பிறகு, தன் சப்பாத்து நுனியால் எச்சில் படிக்கத்தை தள்ளி வைத்து விட்டு, கைகழுவும் பாத்திரத்திற்கு கை கழுவச் சென்றார். இவற்றை எல்லாம் நகர பிதாவைப் பார்க்காமலே செய்தார். ஆனால் நகர பிதா வோ வைத்தியரை வைத்த கண் வாங்காமலே பார்த்துக் கொண்டிருந்தார்.

அது கீழ்த்தாடையிலிருந்த ஞானப்பல். வைத் தியர் தன் பாதங்களை அகட்டி வைத்துக் கொண்டு, பல்லைச் சூடான இடுக்கிக் குறட் டால் கவ்விப் பிடித்தார். நகர பிதா நாற்காலி-யின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்-டார். அத்துடன், கால்களை முழுப் பலத்துடன் ஊன்றியும் கொண்டார். அப்போது குண்டிக் காய்களில் குளிர்ந்து விறைப்புடன் கூடிய வெற்றிடத்தையும் உணர்ந்தார். ஆனால் எந்த வித சத்தமும் செய்யவில்லை. வைத்தியர் தன் மணிக்கட்டை மட்டுமே அசைத்தார். கடும் வெறுப்பில்லாமல், ஆனால் கசப்பான கனிவுடன் சொன்னார்,

‘இப்போது, எங்களில் இறந்த இருபது பேருக் கான விலையைத் திருப்பிக் கொடுக்கப் போகிறீர்கள்.’

நகர பிதா, தாடையிலுள்ள எலும்புகளின் பல் அரைப்பொலியை உணர்ந்தார். அவருடைய கண்கள் கண்ணீரால் நிரம்பின. ஆனால் பல் வெளியே வரும்வரை மூச்சு விடவில்லை. பின் தன் கண்ணீருக்கூடாகப் பல் வெளியே வருவதைப் பார்த்தார். அவர் அனுபவித்த வலிக்கும் அதற்கும் தொடர்பில்லாத ஒன்று போலவும், கடந்த ஐந்து இரவுகள் அனுப-வித்த சித்திரவதையைப் புரிந்து கொள்ள அவர் தவறி விட்டார் போலவும் இருந்தது.

எச்சில் படிக்கத்தின் மேல் நகர பிதா கவிழ்ந்-திருந்தார். அவருக்கு வியர்த்தது, மூச்சுத் திணறியது. சட்டைப் பொத்தான்களை அவிழ்த்து விட்டார். கைக் குட்டையை காற் சட்டைப் பைக்குள்ளிருந்து எடுக்கக் கையை நீட்டினார். வைத்தியர் சுத்தமான துண்டொன் றைக் கொடுத்தார்.

‘கண்ணீரைத் துடையுங்கள்,’ என்றார்.

நகர பிதா அப்படியே செய்தார். அவர் நடுங்கிக் கொண்டிருந்தார். பல் வைத்தியர் தன் கைகளைக் கழுவிக் கொண்டிருந்த போது, உடைந்து விழும் சீலிங் கூரையை யும், தூசு படிந்த சிலந்தி வலையில் அதன் முட்டைகளையும் இறந்த பூச்சிகளையும் கண் டார். வைத்தியர் கைகளைக் காய வைத்துக் கொண்டு திரும்பி வந்தார்.

‘வீட்டிற்குச் சென்று, படுக்கப் போங்கள். உப்புத் தண்ணீரைக் கொண்டு வாயைக் கொப்புளியுங்கள்’ என்று சொன்னார்.

நகர பிதா எழுந்து நின்று, சாதாரண இராணுவ வணக்கம் ஒன்றைப் போட்டு விட்டு, கால் களை நீட்டி வைத்துக்கொண்டு, சட்டைப் பொத்தான்களைப் போடாமல் போய் வருகி-றேன் என்று சொல்லி விட்டு, கதவண்டை சென்றார்.

‘பில்லை அனுப்பு’ என்று சொன்னார்.

‘உங்களுக்கா நகர சபைக்கா?’

நகர பிதா பல் வைத்தியரைப் பார்க்கவில்லை. கதவைச் சாத்திவிட்டு, தடுப்புத் தட்டிக் கூடாக சொன்னார்,

‘அட, இரண்டும் ஒன்றுதான்.’



mahalingam.k@thaiveedu.com

# கடவுளர் கரந்துறை...

104ம் பக்கத் தொடர்ச்சி...

வயதில் மரணமடைகின்ற ஒலிவேறாவின் உடல் அற்புதமாதா கோவிலின் படிகளுக்கருகில் அடக்கம் செய்யப்படுகின்றது.

1629ம் ஆண்டின் நடுப்பகுதி. பெரும் கனவு களுடன் ஒலிவேறா நிர்மாணித்த யாழ்ப்பா ணக் கோட்டையின் வலிமை சோதித்துப் பார்க்கப்படப் போகின்றது. கண்டி அரசனின் பத்தாயிரம் போர்வீரர் கொண்ட படையணி அத்தபத்து முதலியாரின் தலைமையில் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிடு-கின்றது. உதவிக்கு தஞ்சாவூர் அரசனின் பெரும்படையொன்றும் சேர்ந்து கொள்கிறது. எதிரிப் படையின் வலிமையைக் கண்டு அஞ்சிய பறங்கியர் கோட்டைக்குள்ளே முடங்கி கொண்டனர். கண்டி அரசனின் படைகளினால் எவ்வளவு முயன்றும் கோட்டையை கைப்-பற்ற முடியவில்லை. முற்றுகை பதின்மூன்று நாளாய் தொடர்ந்தது. பறங்கியருக்கு உதவி யாக கொழும்பு பறங்கித் தேசாதிபதி அனுப்பிய படை கடல் மார்க்கமாக பண்ணைக் கரை யிலே வந்திறங்குகிறது. முற்றுகை முறிய-டிக்கப்படுகிறது. சிங்கள தளபதி அத்தபத்து முதலியார் மிகப்பயங்கரமான முறையிலே கொல்லப்படுகின்றார். சிறைபிடிக்கப்பட்டோர் அடிமைகளாக சந்தையிலே விற்கப்படுகின்ற னர். ஒலிவேறாவின் கனவுக்கோட்டை எதுவித சேதமுமின்றி நிமிர்ந்து நிற்கின்றது. பறங்கியர் இன்னும் இறுமாப்புடன் ஆட்சியை தொடர்-கின்றனர். ஆனாலும் இந்த இறுமாப்பு இன்னும் அதிக காலம் நீடிக்கப் போவதில்லை.




அரேபியக் கடலிலும், இந்து சமுத்திரத்தி-லும் எதிர்ப்பார் எவருமின்றி சுதந்திரமாக திரிந்து, பல நாடுகளின் செல்வங்களை சூறை யாடிய பறங்கியர் கப்பல்களுக்கு சிம்ம சொப்பனமாய் ஒல்லாந்த போர்க்கப்பல்கள் உலா வரத் தொடங்குகின்றன. ‘நார்டென்’ என அழைக்கப்படுகின்ற ஒல்லாந்த யுத்தக் கப்பலின் புகழ் எல்லாத் துறைமுகங்களிலும் வேகமாக பரவத் தொடங்குகிறது. கீழைத் தேய நாடுகளின் செல்வங்களை ஏகபோக மாய் சுரண்டிக் கொண்டிருக்கும் பறங்கியரின் ஆதிக்கத்திற்கு சவால் விட புதிய போட்டி-யாளன் அரங்கத்திற்குள் நுழைகின்றான்.

1657ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி. மார்கழி குளிரின் கதகதப்பில் யாழ்ப்பாணக் கோட்டையிலே ஒரு பெரிய விருந்து நடை பெறுகிறது. யாழ்ப்பாண இராச்சியத்தின் அத்தனை முதலிமார்களும் கலந்து கொண் டிருந்த அந்த விருந்தில் மதுவும், மாதுவும் தாராளமாகவே இடம் பிடித்திருந்தன. பறங்-கிப் பெண்கள் மயக்க வைக்கும் ஆடைக ளுடன் சுதேசிகளுடன் நாட்டியம் ஆடுகின்ற-னர். விருந்து முடிகிறது. யாழ்ப்பாண பறங்-கியர் தளபதி அத்தனை அதிகாரிகளையும் அறையொன்றிற்குள் அழைத்துச் செல்கிறான்.

“அதிகாரிகளே! ஒல்லாந்தர் எமக்கெதிராக விரைவில் படையெடுத்து வரக்கூடும். அதனை முறியடிப்பதற்கு நீங்கள் எல்லோரும் எனக்கு ஒத்துழைக்க வேண்டும்.” தளபதியின் பேச்சில் மிகுந்த விநயம்.

சுற்றியிருந்தோர் பதில் ஏதும் சொல்லாமல் தளபதியின் முகத்தையே பார்த்துக் கொண்-டிருக்கின்றனர்.

“நீங்கள் இந்த உதவியை செய்தீர்களா-னால், நீங்கள் விரும்புகின்ற, வேண்டுகின்ற எதனையும் நான் தருவேன்.” தேன் குழைத்த ஆசை வார்த்தைகள். அடிவருடிகளுக்கு ஆக்கிரமிப்பாளர்கள் அன்றும், இன்றும் சொல் கின்ற அதே வார்த்தைகள்.

கூட்டம் சலசலக்கிறது. சற்றுமுன் நடந்த நடனத்தின் போது பறங்கிப் பெண்களின் வெள்ளை நிறத்தாலும், அழகிய தோற்றத்-தாலும் கிளர்ச்சியடைந்திருந்த கச்சாய் வன் னிமை தான் முதலில் வாய் திறக்கின்றான்.

“எனக்கு ஏற்ற துணையாக, ஒரு எழில்மிகு பறங்கிப் பெண் வேண்டும்.” எலும்புத் துண்-டிற்கு வாலாட்டும் எச்சில் நாயாக தன் உடலை பதினாறாய் வளைத்து, குழைந்து வழிகிறான் வன்னிமை.

பறங்கித் தளபதியின் கண்கள் வன்னிமையை சந்திக்கின்றன அதில் தெரிந்தது கோபமா, சம்மதமா என்பது வன்னிமைக்கு புரியவில்லை.

“ஆகட்டும்” பறங்கித் தளபதியின் வாயிலி-ருந்து வார்த்தைகள் வெளிவருகின்றன. வேண்டுகோள்களும், தாராள வழங்கல்களு மாக கூட்டம் இனிதே நிறைவுறுகிறது.

அடுத்த நாள், அடிமைகள் புடை சூழ பல்-லக்கு ஒன்று கோட்டையிலிருந்து கச்சாயை நோக்கி புறப்படுகிறது. மூடிய பல்லக்கினுள் இருப்பது யார் என்பது எவருக்கும் தெரிய வில்லை. பல்லக்கு வருவதை அறிந்த வன்னிமை வானத்துக்கும், பூமிக்கும் துள்ளு கிறான். நகர எல்லைக்கே படைகளை அனுப்பி பல்லக்கை வரவேற்றுப் போகும் அவனுக்கு அளவிலா ஆனந்தம். நாளைக்கு இதே தெருக்களில் வெள்ளைப் பெண்ணுடன் கைகோர்த்து வலம் வரப்போவதை நினைக்கும் போதே பேரானந்தம் தாங்க முடியவில்லை.

அவனுடைய வாசல்தலத்தின் முன் மக்கள் ஏராளமானோர் கூடியிருக்கின்றனர். “என்ன இருந்தாலும் எங்கள் வன்னிமை விசயகாரன் தான்”, சிலபேர் பெருமையாயும், சில பேர் பொறாமையாயும் பேசிக்கொள்கின்றனர்.

பல்லக்கு வன்னிமையின் மாளிகைக்கு முன் னால் வந்து நிற்கின்றது. மேளதாளங்கள் திடீரென ஒலிக்கத் தொடங்குகின்றன. நாதஸ் வரத்தின் இனிய நாதம் எங்கும் பரவுகின்றது. திருவிழா களை கட்டும் அந்த மாலைப் பொழுதில் தன் வருங்கால மனைவியின் முகம் பார்க்கத் துடிக்கும் வன்னிமை பல்லக்கின் திரைகளை விலத்துகிறான். யாழ்ப்பாண இராச்சியத்தின் எதிர்காலத்தை மட்டுமல்ல, முழு இலங்கைத்தீவின் எதிர்காலத்தை மட்டு மல்ல, பறங்கியரின் எதிர்காலத்தையும் தலை கீழாக புரட்டிப் போகப்போகும் அந்தக் கணம், வரலாற்றில் பெண்ணாசையால் விளைந்த விபரீதங்களுக்கு புதியதோர் சாட்சியாய் பதியப்படப் போகின்றது.

*(வரலாறு இன்னும் வரும்)*

**உசாத்துணை:**


- யாழ்ப்பாண வைபபமாலை, மாதகல் மயில்வாகனப் புலவர்(1884), முதலியார் குல. சபாநாதன் (1958)
- யாழ்ப்பாண வைபப கௌமுதி, வசாவிளான் க.வேலுப்பிள்ளை, 1918
- யாழ்ப்பாண வைபப விமர்சனம், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், 1928
- யாழ்ப்பாணச் சரித்திரம், முதலியார் செ. இராசநாயகம், 1933
- யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1992
- யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு, கலாநிதி க. குணராசா, 1995
- தென்னாட்டுப் போர்க்களங்கள், கா. அப்பாத்துரை, 2003
- ஈழத்தவர் வரலாறு, கலாநிதி க. குணராசா, 1996
- A historical relation of the Island Ceylon in the East-Indies, Robert Knox, 1681
- Twentieth Century Impresions of Ceylon, Arnold Wright, Asian Educational Services, 1907
- Fidalgos in the kingdom of Jaffnapatam, O.M. Da Silva Cosme, 1994
- www.ceylontamils.com




nimal.nagaraj@thaiveedu.com

# BUYING OR SELLING

## DO IT SMART! DO IT RIGHT!

## You're Home is the Biggest Investment you are going to make.

**Worden & Finch**




3 Bedrooms, 2 Washrooms

**Keele / Finch**




3 Bedrooms, 2 Washrooms

**Morningside & Sheppard**




4 Bedrooms, 2 Washrooms

**Taunton & Thickson**




3 Bedrooms, 3 Washrooms

**Mccowan & Steeles**




4+1 Bedrooms, 4 Washrooms

**Middlefield & Finch**




3+1 Bedrooms, 4 Washrooms

**Kennedy & Hwy 401**




3 Bedrooms, 2 Washrooms

**Morningside / Sheppard**




4 Bedrooms, 3 Washrooms

**Morningside / Sheppard**




4 Bedrooms, 3 Washrooms

**Oasis Blvd. / Passmore**




3+1 Bedrooms, 4 Washrooms

**Delaney / Church**




4 Bedrooms, 3 Washrooms

**Victoria Park / Lawrence**




3+1 Bedrooms, 2 Washrooms

## Make the Right Choice the very First Time.

## We make your ideal house dream - come true

**FULL TIME REALTOR**

PLATINUM CLUB AWARD - 2010 WINNER

apex:416-297-0707



HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc.,**
**Brokerage***
205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8
**B: 905.201.9977 F: 905.201.9229**

**Raja V.S. Rajagopal**
Sales Representative
**Dir : 416.727.8647**
Email : sinnahrajagopal@gmail.com

*Independently Owned and Operated, REALTOR MLS

Also Contact in Regards to Investing in Newly Built

HOMES - CONDOS - COMMERICAL PROPERTIES

**SERVICE - KNOWLEDGE - INTEGRITY - TRUST**


மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
Wanless/Hurontario
For Sale
$449,900
Detached 2- Storey,
4+1 Bedrooms,
4 Washrooms
Warden/407
SOLD
$299,900
Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms
Veterans/Touchette (Barrie)
Sold
$279,000
Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$699,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$535,000
Detached Bangalow
The Gore/Ebenezer
Sold
$399,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/Ebenezer
Sold
$397,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/ Hwy 7
Sold
$1,100,000
Detached 2- Storey, 4+2 Bed-rooms, 5 Washrooms
Brisdale/Sandalwood
Sold
$370,000
Detached 2-Storey
Bovaird/Worthington
Sold
$428,000
Detached 2-Storey
Cottrelle /Gore
Sold
$469,000
Detached 2-Storey
The Gore/Ebenezer
Sold
$680,000
Detached 2-Storey
Bellamy / Lawrence
Sold
$358,000
Detached Bungalow, 3+2 Bed-rooms, 3 Washrooms
Markham Rd/14th Ave
Sold
$393,000
Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Markham/14th Ave
Sold
$421,000
Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms
Hwy 10/Bovaird
Sold
$272,750
Semi-Detached 2 Storey
Vankirk / Mayfield
Sold
$363,500
Detached 2-Storey
-digi Media-
நல்ல நிலையில் இயங்கிவரும்
Banquet Hall விற்பனைக்குண்டு.
Please call for more details.
Call before you list,
See the Difference!!!
TOP PRODUCER - 2009
Top 5% Sales Person in Canada 2009
HOMELIFE
HIGHER STANDARDS
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

# இன்றைய நோக்கில் பண்டைய தமிழிலக்கியங்கள்

**பகுதி - 09**

- நா. சுப்பிரமணியன் -

> நடத்தை பிறழ்ந்த கணவனை வெறுத்தொதுக்க முடியாமலும் அவனை விரும்பியேற்க முடியாமலும் தவிக்கும் ஒருபண்டைத் தமிழ்ப் பெண்மையின் பரிதாபக் குரல்.

சங்க இலக்கியப் பரப்பு புலப்படுத்தும் குடும்ப உறவுநிலைகள் சார்ந்த உணர்வம்சங்கள் தொடர்பான பார்வையிலே பிரிவுத்துயர் என்ற வகையில் பொருளியல் முதலான குடும்பத் தேவைகள் சார்ந்த பிரிவுகளின் 'துன்ப-துயர'க் காட்சிகள் கடந்த இரு கட்டுரைகளில் நோக்கப்பட்டன. அடுத்ததாக இங்கு 'ஆண்களின் நடத்தைப் பிறழ்வு' சார்ந்த பிரிவுத்துயர் பற்றிய பதிவுகள் கவனத்துக்கு வருகின்றன. மனைவியை வீட்டிலே தவிக்கவிட்டுப் பிற பெண்களை நாடும் கணவர்களின் நடத்தையே இங்கு 'நடத்தைப் பிறழ்வு' என்பதாற் சுட்டப்படுகிறது. சங்ககால வள்ளல்கள்களில் ஒருவரான பேகன் (வையா-விக்கோப்பெரும்பேகன்) என்பவன் வாழ்க்கைத் துணையாகக் கொண்டவளை வீட்டிலே தனிமைத்துயரில் வாடவிட்டுப் பிரிந்து வேறொரு பெண்ணுடன் வாழ்க்கை மேற்கொண்டவன் என்ற செய்தி புறநாநூறு 143 முதல் 147 வரையான பாடல்களில் உளது என்பதை 4ஆவது கட்டுரையில் நோக்கியுள்ளோம். அக்காலக் கணவர்களுள் ஒருசாரார் மேற் சுட்டிய பேகனைப் போலவே பிற பெண்களை நாடியவர்கள் என்பதை சங்கப்பாடற் பரப்பு விரிவாகவே அறியத்தருகிறது. அவ்விலக்கியப் பரப்பிலே குறிப்பாக, அகத்திணை என்ற பிரிவில் 'மருதத்திணை' என்ற வகைப்பாட்டுக்குள் வரும் பாடல்கள் இவ்வாறான 'ஆண்களின் நடத்தைப் பிறழ்வு' தொடர்பான உணர்வம்சங்களின் பதிவுகளேயாகும்.

## யார் இந்தப் பிற பெண்டிர்?

மனைவியரிடமிருந்து கணவருள் ஒருசாராரைப் பிரிப்பவர்களான இப் பிறபெண்டிரை, 'காமக்கிழத்தியர்', 'பதியிலார்', 'பரத்தையர்', 'பொது மடந்தையர், 'பொருட்பெண்டிர்','வரைவின் மகளிர்', 'விலைமகளிர்' முதலான பெயர்களால் அடையாளப்படுத்தும் முறைமை தமிழ் மரபில் நிலவிவருகிறது. பதியிலார், வரைவின் மகளிர் ஆகிய சொற்கள் 'குறித்த ஒரு ஆணுக்கு மனைவியாக வாழாதவர்கள்' என்ற பொருளைத் தருவன. பொருட்பெண்டிர், விலைமகளிர் என்பன 'பொருளுக்கு - அதாவது பணத்துக்கு – தம்மை விற்பவர்கள்' என்பதை உணர்த்துவன. காமக்கிழத்தி என்பது குறித்த ஒரு ஆடவனின் போகப் பொருளாக அமைபவள் என்ற பொருள்தருவதாகும். இவர்களனைவரும் பொதுவாக 'கணவன்-மனைவி - பிள்ளைகள் மற்றும் இரத்த உறவினர்' என்பவர்களை உள்ளடக்கிய உறவுத்தொடர்பு கொண்டதான 'குடும்பக் கட்டமைப்பு'க்குள் வராதவர்கள் என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது. தமிழகப் பெண்கள் சமூகத்தில் ஒரு பிரிவினர் இவ்வாறான வாழ்வியலை மேற்கொண்டவர்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் முதல் கடந்த நூற்றாண்டு வரையான வரலாற்றுத் தரவுகள் தெளிவாகவே உணர்த்தி நிற்கின்றன. இங்கு நாம் சங்க காலத்தை மையப்படுத்தியே நோக்குகிறோம். சங்க இலக்கிய மரபிலே இவர்களைச் சுட்டப் பரத்தையர், காமக்கிழத்தியர் ஆகிய சொற்களே பெருவழக்காகப் பயின்றுள்ளன. பரத்தையர் சமூகமானது இற்பரத்தை, காதற் பரத்தை, சேரிப்பரத்தை எனப் பல உட்பிரிவுகள் கொண்டதாக அமைந்திருந்ததென்பதைச் சங்க இலக்கியம், தொல்காப்பியம் மற்றும் அவற்றின் உரைகள் என்பவற்றின் மூலம் தெரிந்துகொள்ளமுடிகின்றது.

## பரத்தைமையின் உருவாக்கமும் அது தொடர்ந்த முறைமையும்:

இவ்வாறான பரத்தையர் சமூகமானது தமிழகச்சூழலில் உருவாகி வளர்ந்தமைபற்றிய சமூகவியல் பார்வையுடன்கூடிய முழுநிலை வரலாறு இன்னும் கட்டமைக்கப்படவில்லை. இத்தொடர்பில் இலக்கியத் தரவுகளை மையப் படுத்திய சில தொடக்கநிலை ஆய்வுகளே நிகழ்ந்துள்ளன. இவ்வகை ஆய்வுகளூடாக மேற்படி சமூக உருவாக்கத்துக்கான இரு முக்கிய காரணிகளை மட்டும் எம்மால் இனங் கண்டுகொள்ள முடிகின்றது. அவை வருமாறு:

- பண்டைய இனக்குழுநிலைச் சமுதாயமானது குடும்பம் என்ற அமைப்பை நோக்கி வளர்ச்சியெய்திய போது அவ்வளர்ச்சிக்குள் அகப்படாத (அக்கட்டமைப்புக்குள் உட்படமுடியாத) நிலையில் உதிரிகளாக நின்றுவிட்ட பெண்களுள் ஒருசாரார் ஆண்களைச் சார்ந்து அவர்களின் போகப் பொருளாக மட்டுமே வாழவேண்டியிருந்த சூழ்நிலை.
- அக்காலப்பகுதியில் அடிக்கடி நிகழ்ந்த போர்களில் கணவர்களையும் பெற்றோரையும் இழந்தவர்களும் வென்றவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டவர்களுமான பெண்களுட் பலரும் பரத்தைநிலை வாழ்வுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலை.

மருதத்திணைப் பாடல்கள் காட்டும் 'ஆண்களின் நடத்தைப் பிறழ்'வுக்குக் காரணராக அமையும் பிற பெண்டிரின் சமூகவரலாற்றுப் பின்புலத்தை இவ்வாறுதான் நாம் ஊகிக்கவேண்டியுளது.

மேற்குறித்தவாறாக ஆடவர் பரத்தையரை நாடும் செயன்முறைக்கு 'மருதம்' எனப்படும் வயலும் வயல்சார்ந்த பகுதிகளையும் கொண்டதான வளம் நிறைந்த நிலப்பரப்பே அக்காலப்பகுதியில் வாய்ப்பானதொன்றாக அமைந்திருக்கவேண்டும். விவசாய வாழ்வியல் மூலம் ஆண்டின் சில மாதங்களிற் கிடைக்கும் ஓய்வும் அது சார்ந்த பொழுது போக்குக்கான வாய்ப்புகளும் இவ்வாறான பிரிவுக்கான துணைநிலைக் கூறுகளாக திகழ்ந்திருக்க வேண்டும் என்பது உய்த்துணரக் கூடியது. மருதத்திணைப் பாடல்களில் மேற்படி பிரிவு சார்ந்த உணர்வம்சம் பொருளாக அமைந்தமையின் பின்புலத்தை இவ்வாறு நாம் தெளிந்துகொள்ளலாம்.

இவ்வாறான சூழலில், கணவர்கள் மனைவியரை வீட்டில் தவிக்கவிட்டு வெளியே சென்று பிற பெண்டிரை நாடுவதான நிகழ்வானது ஆரம்பத்தில் மாலைப் பொழுதிலிருந்து முன்னிரவு வரையான காலப்பகுதிக்குள் நிகழ்ந்திருக்கவேண்டும். பின்னர் இப்பிரிவு நள்ளிரவு தாண்டியும் நீடித்திருக்கலாம். இதன்பின்னர், இரவு முழுவதும் பரத்தையுடன் வாழ்ந்து விட்டு மறுநாள் வைகறையிலேயே கணவன் மனைவியிடம் மீண்டிருப்பான். இதனைத் தொடர்ந்து இப்பிரிவானது நாள்கள், வாரங்கள் மற்றும் மாதங்கள் என நீடிக்கலாயிற்று என்பதை மேற்படி மருதத் திணைப் பாடல்கள் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. இவ்வகைப் பிரிவுகள் பல ஆண்டுகள் நீடித்ததான ஒரு சமூக நிலையை, சங்க இலக்கியங்களை அடுத்து எழுந்ததான சிலப்பதிகாரம் அறியத்தருகிறது. அதன் கதைத் தலைவனாகிய கோவலன் தனது மனைவியாகிய கண்ணகியைப் பிரிந்து ஆடல்மகளான மாதவியுடன் பல ஆண்டுகள் - 12 ஆண்டுகள் வரை - கூடிவாழ்ந்தான் என்ற செய்தி உளது.

## வெறுத்தொதுக்கப் படவேண்டிய நடைமுறை:

கணவர்மாருள் ஒருசாரார் இவ்வாறாகப் பரத்தையரை நாடும் நடைமுறையானது அருவருக்கத்தக்கதும் வெறுத்தொதுக்கப்பட வேண்டியதுமான ஒரு ஒழுக்கக்குறைபாடு என்பதை இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகிறது. குடும்பம் என்ற கட்டமைப்பு சார்ந்த வாழ்வியலிலே 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதும் 'ஒருத்திக்கு ஒருவன்' என்பதுமே பண்பாட்டு நிலையில் நிறுவப்பட்ட நியமமாகும். கணவன் பிறபெண்டிரை நாடுவதோ அல்லது மனைவி பிற ஆடவரை நாடுவதோ ஆகிய இருநிலைகளும் உளவியல், உயிரியல், உடலியல் முதலான அறிவியல் பார்வைகளில் ஆரோக்கியமானவையல்ல. அதேபோல அன்பு, அறம், ஒழுக்கம் ஆகிய மனிதநேய நெறிகளுக்கும் அவை முரணானவை என்பது வெளிப்படை. ஆயினும் தமிழர் உட்பட உலகின் பல்வேறு சமூகத்தினரிடையிலும் இந்த வெறுக்கத்தக்க நடைமுறை வெவ்வேறு விகிதாசாரங்களில் வழக்கிலிருந்து வந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அவ்வகையிலேயே சங்ககாலச் சமூக வாழ்வியல் அம்சங்களிலொன்றாக இந் நடைமுறை நமது தரிசனத்துக்கு வருகிறது.

சங்க காலத்துக்குப் பின்னர் எழுந்ததம் 'உலகப்பொதுமறை' என்ற போற்றப்படுவதுமான திருக்குறளானது, 'தனக்கு முற்பட்டகால முதலே வழக்கிலிருந்துவருவதான மேற்படி - ஆடவர் பரத்தையரை நாடுவதான- நடைமுறை'யின் அருவருக்கத்தக்கதான இழிநிலையை 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்தில் மிகக்கடுமையான சொற்களில் கண்டித்துள்ளது. அதன்'

*பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்*
*இருட்டறையில்*
*ஏதில் பிணந்தழீஇ அற்று*

என்ற குறட்பா(913) இதற்குத் தக்கதொரு சான்றாகும்.

'இவ்வாறு திருக்குறளால் பின்னாளில் விமர்சிக்கப்பட்டதான இந்த வெறுக்கத்தக்க நடைமுறையானது சங்க இலக்கியத்திற் பதிவாகியுள்ள முறைமை எத்தகையது?' என்பதை இனங்காணும் நோக்கிலேயே சங்க -மருதத் திணைப் பாடற்பரப்பு இங்கு நமது கவனத்துக்கு இட்டுவரப்படுகின்றது.

## சங்க - மருதத்திணைப் பாடல்களில் மனைவியரின் மனக்கொதிப்பு நிலை:

பரத்தையிற் பிரிவு என்ற செயற்பாடானது கணவன், மனைவி மற்றும் பரத்தை ஆகிய மூவரையும் வெவ்வேறு வகைகளிற் பாதிப்பதான ஒரு செயற்பாடாகும். இவர்களுள் மனைவியே பெரிதும் பாதிப்புறுபவள் என்பதும் அவளுடைய பாதிப்பே ஓங்கிய குரலில் வெளிப்படக்கூடியது என்பதுமே மருதத்திணைப் பாடல்கள் தரும் செய்தியாகும். தனக்கேயுரியவனும் தனக்குப் பாதுகாப்பாக அமைபவனுமாகிய வாழ்க்கைத் துணைவனைப் பிறபெண்ணிடம் இழந்துவிட்டமை தொடர்பாக எழும் மனக்கொதிப்புநிலை இது.

இம் மனக்கொதிப்பானது மூன்று முக்கிய உணர்வுத் தளங்களில் ஊற்றெடுப்பது. அவற்றுள் ஒன்று, 'கணவனின் நடத்தைப் பிறழ்வு தொடர்பான வெறுப்புணர்வும் அதேவேளை பிரிவைத் தாங்கமுடியாத விரக தாபமும் ஒன்றோடொன்று முட்டிமோதும் நிலைசார்ந்த 'ஆற்றாமை' ஆகும். இன்னொன்று, 'தன்னுடைய அழகாலும் உபசரிப்பாலும் கணவனை முழுநிலையில் தனது கட்டுக்குள் வைத்திருக்க முடியாது போய்விட்டதே' என்பதான 'தாழ்வுச் சிக்கல்' ஆகும். மற்றொன்று, 'கணவனது இச்செயற்பாடானது குடும்பத்தின் மதிப்பைக் குறைப்பதாக உள்ளதே' என்பதான மன வெதுப்பம் ஆகும். இவ்வகையில் முதலாவதான வெறுப்பும் விரகதாபமும் முட்டிமோதும் ஆற்றாமையின் குரலை இங்கு முதலில் தரிசிக்கலாம்.

நற்றிணை என்ற தொகைநூலின் 350ஆம் பாடலின் இறுதிப்பகுதியில் இவ்வாற்றாமையுணர்வு தெளிவாகப் பதிவாகியுள்ளது.

*"... ....என்*
*தொல்கவின் தொலைவ தாயினும் தொலைக சார*
*விடேஎன். விடுக்குவன் ஆயின் கடைஇக்*
*கவவுக்கை தாங்கும் மதுகைய குவவு முலை*
*சாடிய சாந்தினை, வாடிய கோதையை,*
*ஆசு இல் கலம் தழீஇ அற்று.*
*வாரல் வாழிய ,கவைஇ நின்றாளே"*

"எனது பழைய அழகெல்லாம் நீங்குவதாயினும் நீங்கட்டும். நீ என்னருகில் வராதே!

என்னைத் தீண்ட உன்னை அநுமதிக்க மாட்டேன். நீ என்னைத் தீண்ட அநுமதிப்பேனாயின் எனது சொற்கள் உன்னை விலக்கினாலும் எனதுவிருப்பத்துக்கு மாறாக எனது கைகள் தாமே வந்து உன்னைத் தழுவிவிடும் என அஞ்சுகிறேன். வலிமை மிக்க பரத்தையின் குவிந்த மார்பகத்தால் மோதப்பட்ட சந்தனம் உன்மீது பரவியுள்ளது. அவளாலே தழுவப்பட்டமையால் உனது மாலையும் துவண்டு அழகிழந்துள்ளது. ஆகவே உன்னைத் தொடுதல் கலம் கழித்தெறிந்த தாழி முதலியவற்றைத் தீண்டுதல் போலாகும். ஆகவே நீ இங்கு வரவேண்டாம். உன்னைத் தழுவிநின்ற அப் பரத்தை வாழ்வாளாக"

பரத்தையுடன் இன்பம் நுகர்ந்து மீண்டபின் தன்னைத் தீண்ட முற்பட்ட கணவனை அருவருத்து வெறுத்தொதுக்கும் மனைவியின் கோப வார்த்தைகள் இவை. இப்பாடலடிகளில் இரு முக்கிய அம்சங்கள் கவனத்துக்குரியன. ஒன்று, அவளது வெறுப்புணர்வு. மற்றது, அவளது மனதுக்கும் உடலுக்குமிடையிலான 'போராட்டநிலை' ஆகும். 'தூய்மையிழந்த பொருளொன்று தூக்கியெறியப்படுவது போல அவன் தூக்கியெறிப்பட வேண்டியவன்' என்ற அளவுக்கு அவன் மீது அவளுள் வெறுப்புணர்வு ஏற்பட்டுளது. இதனை 'ஆசு இல் கலம் தழீஇ அற்று' என்ற தொடர் உணர்த்துகிறது. அவ்வாறு மனம் அவனை வெறுத்தாலும் உடல் அவனது நெருக்கத்தை விரும்புகிறது. 'விடுக்குவன் ஆயின் கடைஇக் கவவுக்கை தாங்கும் மதுகைய' எனவரும் அடிகள் உணர்த்தும் செய்தி இதுவே.

'உடல் விரும்பியபடி அவனை நெருங்கவிட்டால் அவனுடைய குற்றத்தை - ஒழுக்கக் குறைபாட்டை - மன்னித்துவிட்டதாக ஆகிவிடுமே என்பது அவளது அச்சம். சுருங்கக் கூறுவதானால், நடத்தை பிறழ்ந்த கணவனை வெறுத்தொதுக்கமுடியாமலும் அதேவேளை அவனை விரும்பியேற்க முடியாமலும் தவிக்கும் ஒருபண்டைத் தமிழ்ப் பெண்மையின் பரிதாபக் குரலையே இப்பாடலில் நாம் செவிமடுக்கிறோம்.

*(தொடரும்)*



subramanian.n@thaiveedu.com

MasterCard

VISA

# NEW LIFE FRESH START

**உங்கள் கடன் அட்டை, வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு**

**We will reduce your debts upto 80%**

**(Visa, Master Card, AMEX, Personal Loans, Line of Credit, Income Tax, HST, GST Owing, Car or House Repossessed, Student Loan outstanding for 7 years )**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
**We will stop all interest on your debts immediately**

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
**We will stop collection calls, court action & wage garnishments immediately**

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
**We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)**

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப் பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
**We will make one monthly payment to all your creditors**

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
**No need to file for Bankruptcy**

**Suren Sornalingam** BBA
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation



**CREDIT RECOVERY CANADA**
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON.
M1P 4X4

Tel: 416-264-1272
Fax: 416-332-0914
Web: www.creditrecoverycanada.com

நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும். இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

# கலைஞன் ந. கிருஷ்ணசிங்கம்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

1952இல் அரியாலை சனசமூக நிலைய ஆண்டு விழாவுக்காக 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தை அண்ணாவியார் சபாபதி அவர்கள் நெறியாள்கை செய்து மேடையேற்றினார். அந்த நாடகத்துக்கான நடிகர்கள் தேர்வு 30 நாட்கள் நடைபெற்றது என்பது ஓர் ஆச்சரியமான விடயம்தான். உச்ச ஸ்தாயியில் பாடிக்கொண்டு நடித்துக் காட்டவேண்டும். அதில் சத்தியவான் என்ற கதாநாயகன் பாத்திரத்துக்குத் தெரிவானவர் தான் எங்கள் கலைஞர் ந.கிருஷ்ணசிங்கம் அவர்கள். அப்போது அவருக்கு வயது 14 மட்டுமே.

இந்நாடகத்தில் அறிவிப்பாளர் லோகேஷ் சாவித்திரியாக வேடமேற்றுப் பாடி நடித்திருந்தார். பல இடங்களில் மேடையேற்றப்பட்ட இந்நாடகம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக நிதிக்காக ஸ்ரான்லிக் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ந.கிருஷ்ணசிங்கம் அவர்கள் கொழும்புத்துறை மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், பரமேஸ்வராக் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றார். பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த வித்துவான் வேந்தனாரின் உந்துதல் காரணமாக பின்னாளில் தான் கவிதை எழுதியதாக கூறும் இவர் யாழ் சிறைச்சாலையில் பணியாற்றி இளைப்பாறியவர்.

அடுத்து இவர் நடித்த நாடகம் ராஜா தேசிங்கு. த.புவனநாதன் எழுதிய அந்த நாடகத்தில் மகேஸ்வரன், லோகேஷ் ஆகியோர் இவரோடு நடித்திருந்தனர்.

இதன்பின்னர் இராஜராஜ சோழனில் பாலதேவராக, சாணக்கிய சபதத்தில் சந்திரகுப்தனாக, ராட்சசன் நாடகத்தில் முனிவராக, யூலியஸ்சீசரில் மார்க் அன்ரனியாக, பரசுராமரில் ஜமதக்னி முனிவராக, கண்டி அரசனில் வெள்ளைத்துரையாக, கட்டப்பொம்மனில் பார்னமின் துரையாக, ஒதெல்லோவில் ஒதெல்லோவாக, சீர்திருந்திய கைதியில் கைதியாக என்று இவர் ஏற்று நடித்த கதாபாத்திரங்கள் பல.

இவற்றில் ராஜராஜசோழன் நாடகம் கொழும்பு டவர் மண்டபம், வவுனியா நகர மண்டபம் மற்றும் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டது.

சித்தூர் ராணி பத்மினி நாடகத்தைப்பற்றி சிலாகித்துச் சொல்லும் கிருஷ்ணசிங்கம் அவர்கள், நடிப்போடு மட்டுமல்லாமல் வேறு பல விடயங்களிலும் இந்நாடகத்தில் கவனம் செலுத்தப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். அதாவது முதன் முறையாக பின்னணி இசை நாடகம் முழுவதும் வழங்கப்பட்டது. குருவிச் சத்தங்கள், கோயில் மணியோசை, கடல் அலைகளின் சத்தம் போன்ற பல இயற்கை ஒலிகள் பதிவுசெய்யப்பட்டன. சிறந்த பாட்டுக்காரரும் எக்கோடியன் வாத்தியத்தை வாசிப்பதில் திறமை பெற்றிருந்தவருமான சிங்கராஜா புறூடி இந்த இசை அமைப்புக்குப் பொறுப்பாக இருந்தார். சிங்கராஜா தனது 24வது வயதில் உயிர்க்கொல்லி நோயினால் இறந்து போனது பேரிழப்பாகும். மேலும் இந்நாடகத்துக்காக வழமையான அரச உடுப்புகளை வாடகைக்கு எடுக்காமல் திரைப்படத்தில் உபயோகித்த அதே போன்ற உடைகளை அதே நிறத்தில் தைப்பித்திருந்தனர். இதற்காக



புதிய முகஅலங்காரம் (மேக்கப்) செய்பவர் வரவழைக்கப்பட்டிருந்ததோடு எல்லோர் தலைமுடிகளும் சுருள் சுருளாக்கப்பட்டன. இந்நாடகத்திலேயே நடிக மன்னன் சண்முகலிங்கம் மற்றும் குஞ்சுராசா போன்ற பல கலைஞர்கள் அறிமுகமானார்கள். இதில் இவர் பீமசிங்காக நடித்திருந்தார்.

கிருஷ்ணசிங்கம் அவர்கள் நடித்த 'வீரமைந்தன்' நாடகம் அரியாலை சனசமூக நிலையம் சார்பாக மேடையேற்றப்பட்டு சன சமூக நிலைய சமாஜம் நடாத்திய நாடகப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றது. இதன் போது கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் இவருக்கு மாலையணிவித்ததை தன் வாழ் நாள் கௌரவ நிகழ்வாகக் குறிப்பிடுகிறார்.

பேர்மனஸ் அவர்கள் எழுதிய 'சீர்திருந்திய கைதி' என்ற நாடகம் சிறைச்சாலையில் கைதிகளுக்கு முன்பாக மேடையேற்றப்பட்டது. இவர் நடித்த திருமறைக் கலாமன்றத்தின் அசோகன் என்ற நாடகம் வீரசிங்கம் மண்டபத்தில் லயன்ஸ் கிளப் நிதிக்காக மேடையேறியது.

இவர் நாடகங்களில் நடித்ததோடு பல நாடகங்களை எழுதியும் உள்ளார். அதில் 'மலையகம் வெளிக்கின்றது' என்ற நாடகத்தை த.கணநாதன் அவர்களும், 'வீடுகள் விழிக்கின்றன' என்ற சமகாலத் தேவையைக் கருவாகக் கொண்டு இவர் எழுதிய நாடகத்தை ச. உருத்திரேஸ்வரன் அவர்களும் நெறியாள்கை செய்திருந்தனர். பல இடங்களில் மேடையேற்றப்பட்ட இந்நாடகத்திற்கு கண்ணன் இசையமைத்திருந்தார்.

கிருஷ்ணசிங்கம் அவர்கள் எழுதிய 'சீதனம்' என்ற நாட்டிய நாடகம் 200 தடவைகளுக்கு மேல் தாயக மண்ணில் மேடையேற்றப்பட்டது. கண்ணன் இசையமைத்த இந்நாட்டிய நாடகத்தை வீரமணி ஐயர் நெறியாள்கை செய்திருந்தார்.

இவ்வாறு நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், வானொலி நாடகங்கள், கவிதைகள் எழுதியுள்ள இவர் 100க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் மூன்று நாவல்களையும் எழுதியுள்ளார். ஈழத்து இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட ந.கிருஷ்ணசிங்கம் அவர்களது செவ்வரத்தம் பூ, செவ்வரளிப் பூக்கள், முள்முருங்கைப் பூக்கள் என்ற மூன்று சிறுகதைத் தொகுப்புகள் இதுவரை வெளிவந்துள்ளன.

1961இல் தினகரன் விழா நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது பிரளயம் என்ற சிறுகதை இரண்டாவது பரிசைப் பெற்றது. அப்போட்டியில் அ.முத்துலிங்கம் எழுதிய பக்குவம் என்ற சிறகதைக்கு முதற்பரிசு கிடைத்தது. 1994இல் ஈழநாதம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் செவ்வரத்தம் பூ என்ற சிறுகதைக்காக இவருக்கு முதற் பரிசு கிடைத்தது. இவை தவிர மறக்க முடியாத பல பரிசுகள் தாயகத்தில் இவருக்குக் கிடைத்திருந்தன.

'சுதந்திரத்தைத் தேடி' என்ற இவரது முதல் நாவல் அன்றைய யாழ்ப்பாணச் சூழல் காரணமாக அச்சேற்ற முடியாமற்போனது.

'ஈரமண்' என்ற இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் அக்கிரமங்களை மையமாக வைத்து எழுதப்பட்ட நாவலுக்கான பிரதி யாழ்ப்பாண இடப்பெயர்வின்போது தொலைந்துபோனது. பூவரசம்பூக்கள் என்ற இவரது மூன்றாவது நாவல் அண்மையில் வெளிவந்துள்ளது.

கிருஷ்ணசிங்கம் அவர்கள் நடிப்பு மற்றும் எழுத்துத்துறையுடன் மட்டும் நின்றுவிடாமல் 6 குறும் திரைப்படங்களையும் எழுதி, இயக்கியுள்ளார். சுனாமி அனர்த்தத்தைக் கருவாகக் கொண்ட 'யாரிடம் சொல்வது', புலம்பெயர்ந்த மண்ணில் வயோதிபத் தாய் தந்தைக்கான உறவைக் குறித்த 'நிழல்', முதியவர்கள் பனிக்காலத்தில் படும் கஷ்டங்களை விளக்கும் 'பட்டமரம் பூக்கும்', மற்றும் 'மறுவாழ்வு', 'திருந்தும்', 'எங்கட பிள்ளைகள்' போன்ற குறும்படங்களை எழுதி இயக்கியுள்ளார்.

**ஆழத்து முத்துக்கள் 53**

இவ்வாறு சிறந்த நாடகக் கலைஞனாக, நாடக ஆக்குனராக, கவிஞனாக, சிறுகதை, நாவல் எழுத்தாளனாக, குறும் திரைப்பட இயக்குனராக பல கலைமுகங்களைக் கொண்டு மண் பற்றியும், மண்ணின் மைந்தர் பற்றியும் சமுதாய அக்கறையோடு தன் ஆற்றலைப் பதிவுசெய்யும் எமது கலைஞன் ந.கிருஷ்ணசிங்கம் அவர்களை 'ஆழத்து முத்துக்களில்' பதிவுசெய்வது மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது.



sriskandan@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■




உலக அரசியல்
சமூக
பொருளாதார
சினிமா
நிலவரங்களை
உடனுக்குடன்
அறிய...

நிலவரம்
www.nilavaram.com
e mail : nilavaram2010@gmail.com

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

*K.S. பாலச்சந்திரன்*

## ஆழத்து முத்துக்கள் 54

# மூத்த ஒலிபரப்பாளர் விவியன் நமசிவாயம்

**- அ. கனகசூரியர் -**

இலங்கையின் ஒலிபரப்புத்துறை வரலாற்றில் 84 வருடங்களை நிறைவு செய்ததன் மூலம் மூத்த வானொலியாகப் பெருமைபெறும் இலங் கை வானொலியில் கடமையாற்றி நேயர்க ளது நெஞ்சில் நிறைந்துள்ள ஒலிபரப்பாளர் களுள் ஒருவராகத் திகழ்பவர் விவியன் எஸ். நமசிவாயம். இவர் இலங்கை வானொ-லியில் இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலா கப் பணிபுரிந்து வெள்ளிவிழாக் கண்டவர்.

யாழ்ப்பாணம் காரைநகரின் ஒரு பகுதியான வலந்தலை என்ற ஊரில் 1921 மார்ச் மாதம் முதலாந் திகதி பிறந்தவர். திருசெல்வேலி காவியப் பாடசாலையில் கல்வி கற்று பின்னர் ஆசிரியப் பயிற்சி பெற்றவர். யாழ்ப்பாணத்-திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஈழ-கேசரி பத்திரிகையில் துணையாசிரியராக சிறிது காலம் பணியாற்றியவர்.

விவியன் நமசிவாயம் உள்ளிட்ட இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர்கள் எவ்வாறு இலக்கிய உலகில் பிரவேசித்தார்கள் என்பதையும் 'மறுமலர்ச்சி' சஞ்சிகையை எதற்காக ஆரம் பித்தார்கள் என்பதையும் பற்றி பேராசிரியர் கைலாசபதி, தனது கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"1938-ம் வருடமளவில், இளைஞர் சிலரின் ஆர்வத்திற்கும் துடிப்பிற்கும் ஈழகேசரிப் பத்திரிகை இடம் தரலாயிற்று. மணிக்கொடி, ஊழியன் ஆகிய இரு பத்திரிகைகளும் இவ் விளம் உள்ளங்களுக்குப் பொறாமைப்படத் தக்க முன் மாதிரியாக விளங்கின. இவ்விரு பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்த இலக் கிய சர்ச்சைகளை இவர்கள் கவனித்தனர். சிறுகதை, (வசன) கவிதை ஆகிய இரு துறைகளுந்தான் முன்னணியில் அடிபட்டன. இவற்றில் ஈடுபட்டவர்களின் பெயர்களும் அடிபடலாயின.

தி.ச.வரதராசன், அ.ந.கந்தசாமி, அ.செ. முருகானந்தம், விவியன் நமசிவாயம், ராஜ அரியரத்தினம், நாவற்குழியூர் நடராஜன் ஆகி யோர் 'இலக்கிய' உலகில் பிரவேசித்தனர்.

ஈழகேசரி இவர்களது கன்னிப் படைப்புகளுக்கு இடம் தந்து வந்ததாயினும், வாலிபத் துடிப்-பின் அவதியுடனும், இலட்சியக் கனவுகளு-டனும் தமிழிலக்கிய உலகையே கலக்கிவிட வேண்டுமென முனைந்து நின்ற இவ்விளை ஞர்களுக்கு, தமக்கென ஒரு இலக்கியப் பத்திரிகை அத்தியாவசியம் எனத்தெரிந்தது.

இக்காலத்தில்தான் திருச்சிப் பக்கமிருந்து 'கிராம ஊழியன்' வெளிவரத் தொடங்கி-யிருந்தது. ஈழத்திலிருந்து இவ்விளைஞரிற் சிலர் அதில் தம் முயற்சிகளை வெளியிட வாய்ப்புக் கிடைத்தது.



1946-ம் வருடம் யாழ்ப்பாணத்திலிருந்து 'மறுமலர்ச்சி' என்ற மாத சஞ்சிகை வெளி-வரத் தொடங்கியது.''

ஈழகேசரி அனுபவத்தோடு விவியன் கொழும்பு வந்து சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியக் குழுவில் இணைந்து கொண்டார். பின்னர் இந்தியா சென்று பம்பாய், நாக்பூர் போன்ற இடங்களில் ஆசிரியராகப் பணி புரிந்து. நாடு திரும்பிய பின்னர் நுவரேலியாவில் உள்ள புனித திருத்துவக்கல்லூரியல் ஆசிரியப்பணி யைத் தொடர்ந்தார்.

விவியன் நமசிவாயம் ஒலிபரப்புத்துறையில் இருந்த நாட்டம் காரணமாக 1951ம் ஆண்-டில் பிரதி எழுத்தாளராக இலங்கை வானொலி தேசிய சேவையில் இணைந்தார். பின்னர் கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளராகி வானொலியில் கிராமிய நிகழ்ச்சிகளின் வளர்ச்சிக்கு பெரும்பணி ஆற்றினார். அந்நா ளில் அவர் தொகுத்து வழங்கிய 'கிராம சஞ்சிகை' என்ற நிகழ்ச்சி விவசாய நேயர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுத் திகழ்ந்தது. 'விவேகச் சக்கரம்' என்ற பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சியையும் அவர் நீண்டகாலம் நடத்தி வந்ததுடன், பல விவர ணச் சித்திரங்களையும் எழுதி வழங்கியி-ருக்கிறார்.

தனது அயராத உழைப்பினாலும் பெரு முயற் சியினாலும் உயர்ந்த விவியன் நமசிவாயம், 1967ம் ஆண்டில் வர்த்தக சேவையின் தமிழ் நிகழ்ச்சி முகாமையாளராகப் பதவியேற்ற பின்னர் கட்டுப்பாட்டாளராகினார். நேயர்களின் ரசனையையும் தேவையையும் அறிந்து சேவை-யாற்றி தன் மூலம் நேயர்களின் பெருமதிப்-பைப் பெற்றார்.

வர்த்தக சேவையில் இணைந்து கொண்ட தும் 'கடிதமும் பதிலும்' என்ற பெயரில் நிகழ்ச்சியொன்றை முதன் முதலாக அறிமுகம் செய்தார். வர்த்தக சேவை தொடர்பாகக் கருத்துக்களை எழுதியனுப்பும் நேயர்களது கடிதங்களை அந்த நிகழ்ச்சியில் அவரே வாசித்தும், பொருத்தமான வகையில் பதில-ளித்தும் வந்தார். அவரது பதில்கள் ஒவ்-வொன்றும் கருத்துச் செறிவும், அர்த்தம் உள்ளவாகத் திகழ்ந்தன.

வர்த்தக சேவையில் வெறுமனே திரைப்படப் பாடல்களை ஒலிபரப்பும் ஒரு சேவையாக அல்லாமல் அதை ஆரோக்கியமான வகை யில் மாற்றியமைத்த பெருமை அவருக்கு உண்டு. நம்நாட்டு மெல்லிசைப் பாடல்களை-யும், துள்ளிசைப் பாடல்களையும் வளர்த் தெடுக்க வேண்டும் என்ற நன்னோக்கு அடிப் படையிலும், இலைமறை காயாக விளங்கும் உள்ளூர் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலும் ஈழத்துப் பாடல்கள், பொப் இசைப் பாடல்கள், அரங் கேற்றம், இலைமறைந்த இசை போன்ற புதிய நிகழ்ச்சிகளை ஆரம்பித்தார். இலங்கைப் பாடகர்களின் தனித்துவமான 'பொப் இசை' என்பதான பெயரைச் சூட்டியதோடு அந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தவரே இவர் தான் என்று அறிவிப்பாளர் பி.எச்அப்துல் ஹமீட் குறிப்பிடுகிறார்.

வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகிவரும் நீண்டகால நிகழ்ச்சிகளான பொங்கும் பூம் புனல், இன்றைய நேயர், விடுமுறை விருப்பம், குடும்ப விருப்பம், பிறந்தநாள் வாழ்த்து, ஆடவர் அரங்கு, வாலிப வட்டம் போன்ற பல நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தவர் விவியனே.

விவியன் நமசிவாயம் வர்த்தக சேவைக்கு பொறுப்பாக இருந்த காலத்தில் அங்கு கடமையாற்றிய - ஒலிபரப்பாளர்கள் அனை வரும் இவர் மீது வைத்திருந்த பெருமதிப்பும், ஒலிபரப்பாளர்களுடன் இவர் கொண்டிருந்த நெருங்கிய உறவும் வானொலிக் குடும்பம் என்ற ஒரு உயர் நிலையில் ஒலிபரப்பாளர்கள் அனைவரும் இணைந்து செயலாற்றுவதற்கு துணை புரிந்தது.

விவியனின் ஒரு தசாப்த கால வர்த்தக சேவைப் பணியின் போது அமைக்கப்பட்ட அத்திவாரமே இன்றைய வர்த்தக சேவை-யின் பெரும் வளர்ச்சிக்கு காரணம் என்று சொல்வதில் தவறில்லை.

இவர் 1977ம் ஆண்டில் ஓய்வு பெற்றதன் பின்னரும் 'இளஞ்சுடர்' என்ற பெயரில் தேசிய சேவையில் கிராமிய இளம் நேயர்களுக்கான வாராந்த தொடர் சஞ்சிகை நிகழ்ச்சியொன்றை தொகுத்து வழங்கி வந்தார்.

விவியன் நமசிவாயம் 1998 ஜனவரி 30ந் திகதி காலமானார். இவர் மறைந்த பதின் மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் வானொலி நேயர்களாலும், ஒலிபரப்பாளர்க ளாலும் என்றுமே இதயங்களில் வைத்து மதித்துப் போற்றப்படும் ஒருவராகத் திகழ்ந்து வருகிறார்.

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்-களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்-வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com
Team Leadership • Expert Testimony • Municipal Planning • Project Management • Development Planning • Specifications Review • Contract Administration • Construction Technology • Industrial Reuse Strategies • Zoning Changes • Building Permits • Plan Review • Public Relations

# Vasuki Devadas Law Office

For all your legal needs..............



**Specializing in real estate litigation including claims on new home warranty**

**Real Estate -** வீடு வர்த்தக நிலையம் வாங்குதல்-விற்றல்
**Immigration-** குடிவரவுச்சட்டம்
**Personal Injury / Accident Benefit**
தனிநபர் விபத்து, விபத்து நலன் சம்பந்தப்பட்டவை
**Insurance-** காப்புறுதி கோரிக்கைகள்
**Business Law-** வியாபார வர்த்தகச்சட்டம்
**Family Law-** குடும்பச்சட்டம்
**Last Wills & Estate Planning-** உயில் சம்பந்தமான விடயம், இறுதிவிருப்ப ஆவணங்கள் தயாரித்தல்
**Power of attorney, affidavits, statutory declaration -** சத்தியப்பத்திரங்கள், தத்துவப்பத்திரம்
**Notarization & Commissioning -** அத்தாட்சிப்படுத்துதல்

## Vasuki Devadas Law Office

2466 Eglinton Avenue East, Unit 10,(Midland & Eglinton)
Toronto, Ontario, M1K 5J8


**416-266-1234**

Vasuki@vdlaw.ca

## Vasuki Devadas

Barrister, Solicitor & Notary Public









# Mississauga Property

## Doverwood Drive 401/Winston Churchill

**$399,000**

- Fully Fenced, large treed deep lot with private backyard (36'x142')
- Detached Home in a wonderful, well-established quiet family neighbourhood
- New Hardwood at upper Floors and Stairs & Wood floors thru out.
- Mostly New Paint thru out
- Basement is Professionally Finished with Wet Bar and Large Ceramic Jacuzzi Tub Bathroom.
- Very Convenient Location, Close to Shopping, Schools, Go Train and Major Highways.
- Walk to 'Go' Train
- Detached home at Semi's Price
- Move in 30 to 60 days/Flexible
- New vinyl windows at front, recently changed at back
- Roof changed 2008



COLDWELL BANKER

**Contact:**

**V. Logan,** Broker

**Direct: 416-410-1620**

**Coldwell Banker Exceptional R.E. Services,** Brokerage
Office: 416-497-9794

# காப்புறுதி! அத்தியாவசிய தேவையா? பணவிரயமா?



**சிறீதரன் துரைராஜா**

- ஆயுட் காப்புறுதி முகவர் -

மரணங்கள் ஒருவருக்கு ஏற்படும் போது அதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் இழப்புகள் எப்படி கொடூரமாக இருக்கும் என்பதை அவரவர்களின் குடும்ப அங்கந்தவர்களால் மட்டுமே முழுமையாக உணர முடியும். அதேபோல் பிறரும் உணர்வார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது. மற்றவர்களைப் பொறுத்தவரையில் மரண வீட்டுக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு கவலையை தெரிவித்ததுடன் முடிந்து விடுகின்றது. அதற்கும் மேலும் உறவினர்கள் நண்பர்கள் உணவுகள் பரிமாறுவதுடன் முடிந்து விடுகின்றது.

குடும்பமொன்றில் ஒருவரை இழந்தவர்களுக்கு ஏற்படப்போகும் பொருளாதாரப் பாதிப்புகள், அவர்களின் ஏதிர்காலக் கனவுகளின் பாதிப்புகள், மனநிம்பதி இன்மை போன்ற பாதிப்புகளை எல்லோரும் புரிந்து கொள்வதோ அல்லது அதற்கான தீர்வுகளை வழங்குவதோ மிகவும் கடினமனதொரு விடயமாகும்.

ஒருவரின் இழப்பால் அந்தக் குடும்பத்துக்கு ஏற்படும் எல்லா இழப்புகளையும் வேறு ஒருவராலும் மீளப் பெறமுடியாது. அதேவேளை சரியான முற்பாதுகாப்புத் திட்டங்களை தெரிவு செய்வதன் மூலம் ஒருவரின் இழப்பால் ஏற்படும் பாதிப்புகளை ஓரளவுக்கு குறைத்துக் கொள்ள முடியும். ஒருவரின் எதிர்பாரத மரணத்தால் ஏற்படும் மிகப்பெரிய பாதிப்பு பொருளாதார இழப்பு அல்லது வருமான இழப்பு அதாவது போதிய பணமின்மை என்று கூறலாம். எவ்வளவு பணமிருந்தாலும் இறந்தவரை மீளப்பெற முடியாது மாறாக அவரின் அன்புக்குரியவர்கள் பொருளாதாரப் பிரச்சினைகள் எதுவும் இன்றி அவர்களின் வாழ்க்கையைத் தொடர்வதற்கு காப்புறுதித் திட்டம் மிகவும் அவசியமானதாகும்.

ஆயுட்காப்புறுதி என்றவுடன் எங்களுக்கு உடனடியாக மனதில் தெரிவது மாதாந்தக் கட்டணம் அல்லது மரணம். மரணம், மாதாந்த கட்டணம், காப்புறுதி முகவர் போன்ற இப்படியான வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு பலருக்கும் பிடிக்காதவொரு விடயமாக இருக்கும். காப்புறுதி பற்றி நாங்கள் சிந்திக்கும் விதத்தை மாற்றி அதனால் கிடைக்கும் பலன் எப்படி இருக்கும் என்று சிந்திக்கத் தொடங்கினால் ஆயுட் காப்புறுதியை எல்லாரும் உடனடியாக பெற்றுக் கொள்ள ஆசைப்படுவர்கள்.

போதிய தொகைக்கு காப்புறுதி இருந்தால் நான் இறந்தவுடன் எனது குடும்பத்திற்கு பொருளாதரப் பாதிப்பு எதுவும் இருக்காது. அத்துடன் அவர்கள் தற்போது இருக்கும் அதே வசதிகளுடன் அல்லது அதற்கு மேலான வசதிகளுடன் வாழ்வைத் தொடர முடியும். நான் இல்லாவிட்டாலும் நான் எதிர்பார்த்தபடி அவர்கள் தொடர்ந்து வாழமுடியும். இப்படியாச் சிந்திப்பதன் மூலம் ஆயுட் காப்புறுதியின் பலாபலன்களையும் அவசியத்தையும் உணரமுடியும். இதற்கு மாறாக ஆயுட் காப்புறுதி வாங்கினால் மாதந்தம் பணம் கட்ட வேண்டும், இதற்கு செலுத்தும் பணம் வீணாய் போய்விடும், நானே மரணமடைந்த பின்பு பணம் எதற்கு என்று சிந்திப்பவர்கள் ஆயுட் காப்புறுதி எடுக்காமலே இறந்து விடுகிறார்கள். இதனால் அவரின் குடும்பம் பாதிக்கப்படுகின்றது. அவரின் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள்.

> “ *காப்புறுதி பெற்றுக்கொள்வதால் ஏற்படும்*
> *பணச் செலவைவிட*
> *காப்புறுதி பெறாமல் இருந்து*
> *ஓர் இழப்பின் பின்னர்*
> *ஏற்படும் பணத்தட்டுப்பாடு*
> *பன்மடங்கு அதிகமாக இருக்கும்.* ”

இப்படியான பாதிப்புகளில் இருந்து இலகுவாக மீள்வதற்கு ஆயுட் காப்புறுதி அவசியமாகின்றது. ஒருவர் ஆயுட்காப்புறுதித் திட்டம் அல்லது கொடிய நோய்களுக்கான காப்புறுதித்திட்டம் போன்ற திட்டங்களை பெற்றுக் கொள்ளும் போது காப்புறுதி பெற்றுக் கொண்டவரும் அவரின் அன்புக்குரியவர்களும் பலன் பெறுகிறார்கள். அத்துடன் அவர்களுக்கு ஆயுட்காப்புறுதியினை விற்பனை செய்த முகவரும் பயனடைகின்றர். காப்புறுதி நிறுவனமும் காப்புறுதி திட்டங்களை வழங்குவதை ஒரு வியாபார நோக்குடன் செய்வதால் காப்புறுதி நிறுவனமும் பயனடைகின்றது. எனவே ஒருவர் காப்புறுதியினை பெற்றுக் கொள்ளும் போது பலரும் பயனடைந்தாலும் அதிகம் பயன் பெறுபவர்களாக காப்புறுதி பெற்றவரும் அவரின் அன்புக்குரியவர்களும் காணப்படுகின்றார்கள். காப்புறுதி முகவர் ஒரு சிறியளவு தொகையையே ஊதியமாகப் பெறும் போது காப்புறுதி நிறுவனம் அதிகளவு பணம் சம்பாதிக்கின்றது. இது எவ்வாறெனில் காப்புறுதி நிறுவனங்கள், எல்லோரும் செலுத்தும் மாதாந்தக் கட்டுப்பணத்தை வேறு முதலீடுகளில் முதலீடு செய்வதன் மூலம் பணம் சம்பாதிக்கின்றது.

காப்புறுதி பெற்றுக் கொள்வதால் ஏற்படும் பணச் செலவைவிட காப்புறுதி வாங்காமல் இருந்தால் ஏற்படும் பணத்தட்டுப்பாடு பன்மடங்கு அதிகமாக இருக்கும் ஒருவர் காப்புறுதிக்காக மாதாந்தம் கட்டும் பணத்தையும் அவருக்கு அல்லது அவரின் குடும்பத்துக்கு கிடைக்கும் காப்புறுதித் தொகையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் காப்புறுதியால் கிடைக்கும் பணம் கட்டிய பணத்தை விட பண் மடங்கு அதிகமாகவே இருக்கும்

## காப்புறுதி பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கான சில காரணங்கள்:

- மாதாந்தம் பணம் கட்ட இயலாமை.
- நோய்களால் பாதிக்கப் பட்டிருந்தால் அதிகளவு தொகைக்கு காப்புறுதி பெற முடியாமை
- காப்புறுதி நிறுவனங்களில், காப்புறுதி முகவர்களில் நம்பிக்கை இல்லாமை.

எம்மில் பெரும்பாலானவர்கள் காப்புறுதி பெறுவதில் தாமாதம் செய்வதற்கு இப்படியான காரணங்களைக் கூறுவதை காணக் கூடியதாக இருக்கும். மாதாந்தக் கட்டணம் என்பது ஒரு முக்கியமான காரணம். எனவே, ஒருவர் எப்படி காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப் பணத்தை ஒதுக்க முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நாங்கள் எல்லாரும் எங்கள் அத்தியாவசியத் தேவைகளுக்கு முதலில் பணத்தை ஒதுக்கிவிட்டு பின்பு ஆடம்பரத் தோவைகளுக்கு செலவு செய்வது அவசியம்.

உணவு, உடை, வதிவிடம் குழந்தைகளின் கல்வி, மருத்துவச் செலவுகள் போன்ற செலவுகள் தவிர்க்க முடியாதவை. அதன் பின்பு போக்குவரத்து வாகனத்துக்கான செலவு, வாகனக் காப்புறுதி, வீட்டுக்கான காப்புறுதி, தொலைபேசி, இணையம், தொலைக்காட்சி போன்ற மாதாந்தச் செலவுகள் முக்கியமானவையாக இருக்கும் இப்படியான முக்கியமானதும் அத்தியாவசியமனதுமான மாதாந்தச் செலவுகள் எல்லாம் ஒருவரின் அல்லது ஒரு குடும்பத்தில் இருவரின் உழைப்பில்தான் பெரும்பாலும் தங்கியிருக்கும்.

உதாரணமாக, குடும்பமொன்றின் அவசியத் தேவைகளுக்கான பணம் இருவரின் உழைப்பில் தங்கி இருந்தால் அந்த இருவரில் ஒருவருக்கு உழைக்க முடியாத நிலை ஏற்பட்டால் குடும்பத்தின் வருமானம் பாதிக்கப்படும்.

## ஒருவரின் உழைக்கும் ஆற்றல் பாதிக்கப்படுவதற்கான முக்கிய காரணிகள்:

- எதிர்பாராத மரணம்
- கொடிய நோய்களால் தாக்கப்படுதல்
- வேலை செய்ய முடியாத நிலை விபத்துக்களால் அல்லது நோய்களால்

இந்த மூன்று பாதிப்புகளை காப்புறுதித் திட்டங்களால் பாதுகாக்க முடியும். விபத்துக்களால் அல்லது நோய் வாய்பட்டு வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டல் அரசாங்கத்தில் உதவி திட்டங்கள் மூலம் ஓரளவு பணம் பெறமுடியும். ஒருவருக்கு ஏதிர்பாரத விதமாக மரணம் ஏற்படும் போது ஒருவரும் பணம் கொடுக்க மாட்டர்கள்.

எனவே ஒருவரின் உழைக்கும் ஆற்றலையும் ஒருவரின் மரணத்தால் ஏற்படும் வருமான இழப்பையும் பாதுக்காப்பதற்கு ஆயுட் காப்புறுதி அவசியமாகின்றது. ஆயுட் காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணத்தை நீங்கள் ஒரு அவசியமான தேவையாகக் கருதிக் கொள்ளவேண்டும். எப்படி குறைந்த மாதாந்தக் கட்டணத்தில் கூடிய அளவு காப்புறுதி பெறமுடியும். உங்கள் வயது குறைவாக இருக்கும்போதும், நோய்கள் ஏதும் வராமல் இருக்கும் போதும் நீங்கள் காப்புறுதி பெற்றுக் கொண்டால் குறைந்த செலவில் அதிகளவு காப்புறுதி பெற முடியும்.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய பழைய மாணவர்

**ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்**

ஆகஸ்ட் 14

மு.ப. 10.00 மணி முதல்

இடம்: நீல்சன் பூங்கா / Neilson Park

N.ரவிராஜா: 416 476-7417, திருமதி. கோமதி ஜெகதீஸ்வரன்: 905 837 0643

**இறுக்கமான சூழலில் இ ல கு வா ன தீர்வு**

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி
- RRSP • RESP

**சிறீதரன் துரைராஜா**

காப்புறுதி முகவர்

Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

info@life100.ca

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. Unity Life of Canada Canada Life™



உங்களுக்காகவும், உங்கள் அன்புக்கு உரியவர்களுக்காகவும்...



கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

வயோதிபர்களுக்கான காப்புறுதி

- மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

- digi Media -

TOPGUN AWARD WINNER 2008, 2009, 2010, MDRT QUALIFIER 2007, 2008, 2009, 2010

சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

Direct: 416.918.9771

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-830-0386, 416-300-5496



Life100.ca

Are you getting Million Dollar advice?




















இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**அவினாஸ் ராஜேந்திரா**

ரொறன்ரோ Brimwood Boulevard Junior Public Schoolஇல் கல்விகற்கும் 11 வயது மாணவன் இவர்.

**உங்களிடம், நீங்கள் எடுத்த அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

